


# மறக்கவியலா யாழ்ப்பாணத்து மண்ணின் நினைவுகள்

- வண்ணை தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்கவியலா யாழ்ப்பாணத்து

# மண்ணின் நினைவுகள்



ஆசிரியர்

## வண்ணை தெய்வம்

பதிப்பாசிரியர்

முனைவர் லேனா தமிழ்வாணன், எம்.ஏ.,
டிப்ளமோ இன் ஜர்னலிசம்


**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண்: 1447,
7 [ப.எண்: 4], தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலைபேசி: 24342926, 24346082
மின் அஞ்சல்: manimekalai1@dataone.in
manimekalaiprasuram@gmail.com
இணைய தளம்: www.tamilvanan.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | மறக்கவியலா யாழ்ப்பாணத்து மண்ணின் நினைவுகள் |
| ஆசிரியர் | : | வண்ணை தெய்வம் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2018 |
| பதிப்பு விவரம் | : | முதற் பதிப்பு |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : | 18.6 கி.கி. மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | டெம்மி சைஸ் (14 X 21 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | : | 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : | Lii + 360 = 412 |
| **நூலின் விலை** | : | **₹ 260/–** |
| அட்டைப்பட ஓவியம் | : | சான்சன் மீடியா |
| லேசர் வடிவமைப்பு | : | ஸ்ரீ விக்னேஸ்வரா கிராஃபிக்ஸ், அலைபேசி : 98845 13164 |
| அச்சிட்டோர் | : | ஆதிலஷ்மி ஆஃப்செட், சென்னை – 24. |
| நூல் கட்டுமானம் | : | தையல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



கலைத் துறையில்

என்னை மயங்க வைத்த...


**அமரர் கே.எஸ்.இரத்தினம்**



எழுத்துத் துறையை

என்னை நேசிக்க வைத்த...

**அமரர் கே.டானியல்**



சோசலிசத்தை

எனக்குச் சொல்லித் தந்த...

**கம்யூனிஸ்ட்**

**கார்த்திகேசன் மாஸ்டர்**

**ஆகிய மூவருக்கும்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் வண்ணை தெய்வம்

## எழுதி வெளிவந்த ஏனைய நூல்கள்

1. **விடிவை நோக்கி**
   கவிதைத் தொகுதி
   ரஜினி பதிப்பகம் (பாரிஸ்) 1992

2. **கலைப்பாதையில் இவர்**
   நடிப்பிசைக் காவலர் கிறெகரி தங்கராசா
   அவர்களின் கலைத்துறை வரலாறு.
   ரஜினி பதிப்பகம் (பாரிஸ்) 1993

3. **கதாநாயகன்**
   கலைமாமணி பெஞ்சமின் - இமானுவேல்
   அவர்களின் கலைத்துறை வரலாறு
   நந்தினி பதிப்பகம (பாரிஸ்) 1994

4. **கலைத்துறையில் இரு மலர்கள்**
   திருமதி நீலாட்சி மற்றும்
   திருமதி வளர்மதி துரைஸ் ஆகிய இருவரினதும்
   கலைச்சேவையைப் பாராட்டி
   நந்தினி பதிப்பகம் (பாரிஸ்) 1995

5. **விடிவை நோக்கி**
   கவிதைத் தொகுப்பு (இரண்டாம் பதிப்பு)
   (நந்தினி பதிப்பகம் (பாரிஸ்) 1997

6. **கொந்தல் மாங்காய்**
   உருவகக் கதைகள்
   மணிமேகலைப் பிரசுரம் - சென்னை 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **கலைப்பாதையில் இவர்**
நடிப்பிசைக் காவலர் கிறெகரி தங்கராசா
அவர்களின் கலைத்துறை வரலாறு
(இரண்டாம் பதிப்பு)
ரஜினி பதிப்பகம் (பாரிஸ்) 2000

8. **பொல்லாத மனிதர்கள்**
சிறுகதைத் தொகுப்பு
மணிமேகலைப் பிரசுரம் - சென்னை 2000

9. **வானலையில் எங்கள் கவிதைகள் (பாகம் -1)**
பாரிஸ் A.B.C. தமிழ் ஒலி வானொலியில்
கவிஞர்கள் சங்கமத்தில் கவிஞர்கள்
பாடிய கவிதைகளின் தொகுப்பு
மணிமேகலைப் பிரசுரம் - சென்னை 2001

10. **வானலையில் எங்கள் கவிதைகள் (பாகம் - 2)**
பாரிஸ் A.B.C. தமிழ் ஒலி வானொலியில்
கவிஞர்கள் சங்கமத்தில் கவிஞர்கள் பாடிய
கவிதைகளின் தொகுப்பு
நந்தினி பதிப்பகம் - பாரிஸ் 2001

11. **எடுத்துக்காட்டாக விளங்கிய
நாகேந்திரம் குடும்பம்
வண்ணை தெய்வம் அவர்களின்
குடும்ப வரலாறு**
மணிமேகலைப் பிரசுரம், சென்னை. 2002

12. **யாழ்ப்பாணத்து மண் வாசனை
யாழ்ப்பாணத்து மண்ணின் சிறப்புகள்
பற்றிய ஒரு தொகுப்பு**
மணிமேகலைப் பிரசுரம், சென்னை. 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. தாயக தரிசனம்
சிறுவயதில் பாரிஸ் வந்து இருபது வயதில் தாயகம் சென்று வந்த இருவர்களின் அனுபவங்களின் தொகுப்பு
தமிழ் நெஞ்சம் பதிப்பகம், பாரிஸ். 2003

14. கொந்தல் மாங்காய்
இரண்டாம் பதிப்பு
மணிமேகலைப் பிரசுரம், சென்னை. 2005

15. காலங்கள் வாழ்த்தும் 300 ஈழத்துக் கலைஞர்கள் - எமது தாய் மண்ணில் பிறந்த 300 கலைஞர்களின் தொகுப்பு
மணிமேகலைப் பிரசுரம், சென்னை. 2005

16. ஒரு வெளிநாட்டுத் தாயின் வாழ்க்கை!
மணிமேகலைப் பிரசுரம், சென்னை. 2018

■■■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம்* வெளியீடு - 2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



## S.K.Kasilingam

Journalist

மண்ணின் மணத்தை உயிர்ப்புடன் தருவதாகவும். அதே மண்ணின் மாந்தர்களின் ஊடாட்டத்தையும், மண்ணுக்கே உரிய பண்பாட்டுக் கூறுகளையும், எடுத்துக் காட்டுவதாகவும், மண்ணோடும் மக்களோடும் இரண்டறக் கலந்த வாழ்க்கையை யதார்த்த பூர்வமாக நகமும் சதையுமாக உணர்ச்சியும், உணர்வும் விரவியதாகச் சித்தரிப்பதாகவும் விளங்குவது மண்வாசனை இலக்கிய வடிவமாகும்.

வண்ணை தெய்வம் எழுதுகின்ற சிறுகதைகளும் பண்பு களிலிருந்து வழுவாமல் வாசகர்களின் உள்ளங்களைக் கவருமாறு அமைந்திருப்பதை நாம் பார்த்திருக்கின்றோம். தான் பிறந்து வளர்ந்த யாழ்ப்பாணத்துப் பிரதேசத்தின் வாசனையையும் புலம் பெயர்ந்து நான்கு சகாப்தங்களாக கடந்து வாழ்விடமாகிவிட்ட பிரான்ஸ் நாட்டையும் மனதில் நிறுத்தி தனது அனுபவ தரிசனங்களை ஆக்கவிலக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கி வருபவர் வண்ணை தெய்வம். இநத நூலையும் அந்த வரிசையிலேயே படைத்துள்ளார்.

தவறவிட்ட ஆட்டுக்குட்டியை தேடித் தவிப்புறும் இடையனைப் போல இவரது மனமும் புரிதல்களும் ஏக்கங்களும் ஆசைகளும் இவருடைய தேடலின் பயனாக இந்த நூலினூடாகப் பிரிதிபலிக்கின்றன.

வண்ணை தெய்வத்தின் இயற்பெயர் தெய்வேந்திரம். சுருக்கமாகவும், துலக்கமாகவும், வரித்துக்கொண்ட புனைபெயர் இலக்கிய உலகில் அவரை வெளிச்சம் பாய்ச்சிக் காட்டுகின்றது.

ஒரு எழுத்தாளனின் படைப்புக்களை சமூகத்தின் முன்னே கொண்டுவருவதற்கு ஊடகங்களின் ஒத்துழைப்பு மிக அவசியமானது. அந்த வகையில் ஜெர்மனியில் இருந்து வெளிவரும் ‘அகரம்’ சஞ்சிகையினை நடாத்தும் திரு.ரவி மாஸ்ற்றர் (இயக்குனர் I.T.R. தமிழ் வானொலி) அவர்களின் அனுசரணை இவருக்குக் கிடைத்தது இந்த நூல் வெளிவருவதற்கு முக்கியக் காரணமாகும்.

சோசலிசம் சமத்துவம் என்ற கொள்கைகளை வெறும் வாய்ப் பேச்சோடு மட்டும் கொண்டிராமல் தனது வாழ்க்கையிலும் அதனைக் கடைசிவரை கடைப்பிடித்த கொள்கைக் கோமான் கம்யூனிஸ்ற் கார்த்திகேசன் அவர்களின் பாசறையில் வளர்ந்த இந் நூலாசிரியரான வண்ணை தெய்வம்தான் அன்றைய யாழ்ப்பாண மேயராக இருந்த விஸ்வநாதன் அவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட தைரியசாலியாவார்.

இவர் புகழ்பெற்ற கவிஞர் இளவாலை அமுது ஐயா, எழுத்தாளர் டாக்டர் க. இந்திரகுமார், எழுத்தாளர் அகஸ்த்தியர், இலங்கை வானொலியில் மண்வாசனைப் படைப்புக்களைத் தந்த கலைஞர் முகத்தார் யேசுறட்ணம், எழுத்தாளர் “மல்லிகை” டோமினிக் ஜீவா ஆகியோருடனெல்லாம் தொடர்பு வைத்திருந்தவர். இவர்களில் பலர் இவரது இல்லத்தில் தங்கிச் செல்லுமளவிற்கு நீடித்த நட்பு அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் நாட்டில் தங்கள் நூல்களை அறிமுகம் செய்யவிரும்பும் லண்டன், ஜெர்மனி, டென்மார்க், சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளில் வாழ்கின்ற ப்டைப்பாளிகள் இவரது உதவியை நாடுவதும் வழமை. இவரும் சலிப்பின்றி திறம்பட நடாத்திக் கொடுப்பார். இவரால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்படியான பல நூல் வெளியீட்டு விழாக்களுக்கு நான் தலைமை தாங்கியிருக்கின்றேன்.

இவ்விதமாக ஈழத்துப் படைப்பாளிகளின் படைப்புக்களை அறிமுகப்படுத்தி சென்னை மணிமேகலைப் பிரசுரத்தின் புத்தகக் கண்காட்சி ஒன்றை வண்ணை தெய்வம் பாரிஸில் ஒழுங்கு செய்து நடாத்தியபோது அந்த நிகழ்விற்கும் நான் தலைமைதாங்கியதையும் இங்கு பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவரது பல நூல்களுக்கு அணிந்துரை எழுதியிருக்கின்றேன். இந்த நூலுக்கும் அணிந்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலக்கிய வாழ்வையும் தனி மனித வாழ்வையும் வேறுபடுத்தி யறியாத வண்ணை தெய்வத்தை நல்ல மனிதாபிதவாதியாகப் பார்க்கின்றேன்.

இவரது இலக்கியப் பயணம் தொடர மனதார வாழ்த்துகின்றேன்.

**எஸ்.கே. காசிலிங்கம்**
பத்திரிகையாளர்

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## ஐரோப்பியத் தமிழ் வானொலி | அகரம்

“மண்ணின் நினைவுகள்” - இது அகரத்தின் மூன்றாவது வெளியீடு. தாம் இல்லாத காலத்திலும், தமது பெயரை வாழ வைத்துக் கொண்டிருப்பவன் கலைஞனும், எழுத்தாளனும் மட்டுமே! அப்படியான எழுத்தாளர்கள் வரிசையில் இன்று வண்ணை தெய்வமும் இணைந்து கொள்கின்றார்.

இந்த “மண்ணின் நினைவுகள்” என்ற நூல் எனது மண்ணைப் பற்றிய ஆவணம் என்ற வகையில் மட்டுமல்ல! எமது அடுத்த தலைமுறையினரும் எம் மண்ணைப் பற்றியும், மண்ணின் வளங்களைப் பற்றியும் அறிந்துகொள்வதற்காகவும் நம்மால் பாதுகாக்கப்பட வேண்டியதொரு பொக்கிஷமாகும்.

இந்தத் தொகுப்பில் அகரத்தில் வெளியான இன்னும் பல ஊர்களைப் பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை. வண்ணை அவர்களின் சேகரிப்பில் தொலைந்துபோன அந்த நினைவுகளைத் தேடி எடுத்துக் கொடுப்பதற்கு எங்களுக்கும் நேரமும் காலமும் ஒத்துழையாமையுமே காரணம்! இருப்பினும், இந்நூலில் பதியப்பட்டிருக்கும் அனைத்தும் நாங்கள் வாழ்ந்த மண்ணின் பெருமைகளைப் பறைசாற்றிக்கொண்டே இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பெயரோடு தான் பிறந்த மண்ணின் பெயரை இணைத்து வண்ணை தெய்வம் என இணைத்துக்கொண்ட இவரை இன்று நாமெல்லாம் இவர் பிறந்த ஊரின் பெயரையே இவர் பெயராகக் கொண்டு 'வண்ணை' என்றே அழைக்கிறோம். இவரால் இவர் பிறந்த ஊரும் பெருமையடைகின்றது.

'மண்' மாதாவிற்கு சமம் என்று சொல்வார்கள். அதனால்தான் தாய் மண், தாய்நாடு என்றெல்லாம் தாம் பிறந்த மண்ணைப் பற்றி சொல்லிக் கொள்கின்றார்கள். தன் தாய் நாட்டின் பெருமைகளைச் சொல்லி நிற்கும் வண்ணை தெய்வம் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்காய் பணியாற்ற வேண்டி அகரம் குழுமத்தின் சார்பாக வாழ்த்துகின்றேன்.

**த. இரவீந்திரன்**
நிர்வாக இயக்குநர்

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## படைப்பாளிகளை மறந்துவிடாத படைப்பாளி
## வண்ணை தெய்வம்



எமது கலைகளை ஓரளவிற்கு ஞாபகப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்கிற கரிசனை இன்றைய தலைமுறைக்கும் கடத்தப்பட்டே வருகிறது. அவை இயல், இசை, நாடகம் மாத்திரமல்ல... நமது கலைப் பொக்கிஷங்களை, அவைகளின் பயன்பாட்டைப் பேணுவதனூடாக அழியாமல் காத்துக்கொள்ளமுடியும். நமது மூத்த தலைமுறைகள் பேணிப் பாதுக்காத்த மரபுகளை, பண்பாட்டு விழுமியங்களை, அதனுடன் ஒத்த கலைப் பொருட்களை இன்றைய தலைமுறை மெல்ல மெல்ல மறந்து வருகிறதோ என்கிற அச்சமும் எழாமல் இல்லை. நவீன நாகரிகம், இடப்பெயர்வு, யுத்தம், அழிவு, புலப்பெயர்வு, உறவு நிலைகளின் விரிசல், சமூக ஏற்றத்தாழ்வுகள், முதியோர் இல்லங்களின் வருகை, அகதி முகாம் வாழ்க்கை முறைகள், அரச ஏகாதிபத்தியங்களினால் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வரும் எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலங்கள், அவை சார்ந்த விழுமியங்களின் தொலைதல்... இப்படி நிறையச் சொல்லலாம்.... நமது மொழியும் அழிந்துவிடுமோ அல்லது மருவி விடுமோ என்கிற அச்சமும் நம்மிடம் உண்டு. இனக்கலப்பும் முக்கியமாகவே தெரிகிறது. பிறமொழிக் கலாச்சாரங்களை உள்வாங்கியபடி நகருகின்ற இளைய தலைமுறைகளுடன் விரும்பியோ, விரும்பாமலோ ஒத்துப்போகும் நிலை உருவாக நமதுமொழி, கலாச்சாரம், நமது பாவனைப் பொருட்களின் சொல்லாடல்கள் மறந்தே போகும் அபாயமும் ஏற்பட்டுவருவதை உணரக் கூடியதாக இருக்கிறது. நாமே மறந்துவிடும் சூழ்நிலையில் இருக்கையில் எப்படி எம் சந்ததியினர்க்கு எடுத்துரைக்க முடியும் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இதனை முன்னெடுத்துச் செல்லும் வகையில் தனது படைப்புக்களை முன்னிறுத்திச் செல்வதில் வண்ணை தெய்வமும் ஒருவர்.

நாடகம், சிறுகதை, கவிதை, கட்டுரை, இதழியல் எனப் பலதுறைகளில் தன் தடங்களைப் பதித்தவர். வானொலி, தொலைக்காட்சிகளில் கவிதை அரங்குகளையும் நடத்தியவர்.

மொழியைப் பேணுவதில், அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்கிற கரிசனை ஒவ்வொரு படைப்பாளிக்கும் இருக்கவேண்டும். அதன் உந்துதலே அவரை எழுதவைத்துக் கொண்டிருகிறது எனலாம்.

அவ்வப்போது எழுதியவற்றின் தொகுப்பே இது என்றாலும் காலத்தின் தேவை கருதி நூலாக வெளிவருவதில் பெருமகிழ்வே ஏற்படுகிறது. ஊரில் இருந்தபோதும் சரி; புலம்பெயர்ந்த பின்பும் தொடர்ச்சியாக எழுதி வருபவர். தினக்குரல், வீரகேசரி, அகரம், வண்ணை, முற்றம், உதயன்(கனடா) ஈழநாடு (யாழ், பாரிஸ்), லண்டன் புதினம், சாட்டை, ஏழைதாசன், இனிய நந்தவனம், சிரித்திரு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுவெளி என அச்சு ஊடகங்களிலும், ரி.ஆர்.ரி, ஏ.பி.சி. ஐரோப்பிய தமிழ்வானொலி, ரி.ரி. என் என வானொலி, தொலைக்காட்சிகளிலும், தமிழ் விசை, வாகுல் எனும் இணையத் தளங்களிலும் எழுதிவந்தவர். இன்னும் தொடர்கிறார் என்பதே வியப்பாய் பார்க்க வைக்கிறது. உருவகக் கதை எனும்போது ஞாபகத்துள் வரும் பலருள் வண்ணை தெய்வமும் நினைவிற்கு வருகிறார்.

தமிழை இலகுவாக யாவரும் வாசிக்கும் வண்ணம் எழுதுவதில் அவரின் எழுத்துக்கள் நம்முள் தங்கிவிடுகின்றன. மண் வாசனையுடன் எழுதவேண்டும் என்பதில் உள்ள ஆர்வம் அவரின் எழுத்தில் காணலாம். அதனால்தான் மறந்த சொற்களை, மறந்தேவிட்ட சொல்லாடல்களை அல்லது வழக்குச் சொற்களை, பாவனையற்றுப் போன பழைய பொருட்களை மீள நம்மை ஞாபகப்படுத்தி அசை போட வைத்திருக்கிறார். நாம் பல இடங்களில் நாகரிகம் கருதி அல்லது பழக்கப்படுத்தி விட்ட ஆங்கிலம் கலந்த சொற்களை, உரையாடல்களை, கிராமிய வழக்குச் சொற்களினை மீள நினைக்கையில் நமக்குள்ளே ஏற்படும் வெட்க உணர்வு, அச்சஉணர்வும் கூட மீளக் கட்டியெழுப்ப முடியுமா என்கிற சோகம் அல்லது நோவு இல்லாமலும் இல்லை. அதற்கெல்லாம் முத்தாய்ப்பாக வண்ணை தெய்வம் அவர்களின் நூல் சரிவரத் தன் கடமையைச் செய்யும் என்கிற நம்பிக்கை ஏற்படுகிறது. இதுபோன்ற பல நூல்கள் வரவேண்டும். ஒவ்வொரு படைப்பாளியும் சிந்திக்கவேண்டும்.

நூல் அச்சிடுதல் அல்லது பதிப்பித்தல் என்பது இலகுவான விடயமல்ல. ஒவ்வொரு நூலையும் வெளியிடும்போது ஏற்படுகின்ற வலி நமக்குத் தெரிந்தவையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகள், கலைஞர்கள் சங்கமிக்கும் பிரான்ஸ் தேசத்தில் வாழ்ந்துகொண்டு அதிக நூல்களை வெளியிட்டு சாதனை படைத்துள்ள வண்ணைதெய்வம் அவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

பலரையும் போலவே வாழ்வியல் வலிகள், புலம் பெயர் சூழல், குடும்பம், பிரிவு, அந்நியமான உறவுகள், வேர் விட்ட இடத்திலிருந்து பிரித்தெடுத்து எறியப்பட்ட வாழ்க்கை எல்லாம் எழுத்தாகி உணர்வுகளுக்கு ஒத்தடம் கொடுத்தது போல நூல்களாய் கைகளை அடையும் போதும், அவை வாசகர்களைச் சென்றடையும் போதும் சற்று ஆறுதலடையவே செய்யும்.

வண்ணை தெய்வம் எல்லாவற்றிற்கும் விதிவிலக்கல்ல.

தொடர்கிறார்.

எழுத்து ஒரு தவம். காலம் இட்ட கட்டளையை செவ்வனே செய்ய உழைக்கும் படைப்பாளிகளை மறந்து விடமாட்டார்கள். அதனைச் செவ்வனே செய்துவரும் வண்ணை தெய்வம் தொடரவே செய்வார்.

வாழ்த்துக்களுடன்..

**முல்லை அமுதன்**

08/05/2018

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்னுரை

வண்ண வரிகள்

## மண்ணின் நினைவுகள் மலர்ந்த கதை...




எங்கள் தாய் மண்ணில் போர் முழக்கங்கள் ஓய்ந்து மக்கள் மனங்களெல்லாம் புகையில்லாத நெருப்பைப்போல வெளித் தோற்றத்திற்கு வெறுமையாக இருந்த காலம்.

தாய் மண்ணிற்கு வெளியே புலம் பெயர்ந்து எம் மக்கள் வாழ்கின்ற நாடுகளிலெல்லாம் தாயகத்தில் முட்கம்பி வேலிக்குள் இருந்து கதறிய எம் மக்களின் கண்ணீர்க் கதைகளை சுமந்துகொண்டு அவர்களுக்கு நீதி வேண்டி உலகத்தின் கண்களைத் திறப்பதற்காக இவர்கள் இங்கு போராடிக்கொண்டிருந்த காலம்!

நான் அப்பொழுது ஜெர்மனியில் இருந்து ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த 'ஐரோப்பியத் தமிழ் வானொலி'யில் 'ஏடும் எழுத்தாணியும்' என்றொரு நூல்களை அறிமுகம் செய்யும் இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சியை சனிக்கிழமை மாலைகளில் அரை மணி நேரம் வழங்கிக்கொண்டிருந்தேன். ஒருநாள் இரவு அதன் நிர்வாக இயக்குநரும் எனது நண்பருமாகிய திரு.ரவீந்திரன் அவர்கள் (இவரை நாங்கள் ரவி மாஸ்ற்ரர் என்றுதான் அழைப்போம்) தொலைபேசியில் தொடர்பு கொண்டு "வண்ணை அண்ணை! நாங்கள் ஒரு சஞ்சிகை ஆரம்பிப்போமா?" என்று கேட்டார். ஏதோ ஆலோசனை கேட்பது போலத்தான் கேட்டார். ஆனால் அவர் சஞ்சிகை நடாத்துவதென முன்னரே முடிவெடுத்துவிட்டுத்தான் என்னுடன் கதைத்திருந்தார்.

ஐரோப்பாவில் பத்திரிகை நடாத்துவது எவ்வளவு சிரமமானது என்பதை நான் கொஞ்சம் தெரிந்து வைத்திருந்ததன் காரணமாக அதனால் ஏற்படக்கூடிய கஸ்ற்றங்களை அவருக்குக் கூறி, 'இது விஷப்பரிட்சை! வேண்டாம்' என்று என் கருத்தைச் சொன்னேன். அத்துடன் அன்றைய சம்பாசணை முடிந்துவிட்டது.

அடுத்த வாரம் தொலைபேசியில் தொடர்பு கொண்டவர் "அடுத்த மாதம் முதல் புத்தகம் வெளி வருகின்றது. புத்தகத்திற்குப் பெயர் 'அகரம்' பிரான்ஸிற்கு நீங்கள்தான் பொறுப்பு" என்றதோடு புத்தகத்தில் மண்வாசனை என்றொரு பகுதி வருகின்றது. எம் தாய் மண்ணின் சிறப்புக்களைப்பற்றி நீங்கள்தான் தொடராக எழுதவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

2011ம் ஆண்டு வைகாசி மாதம் அகரம் முதலாவது இதழ் வெளியானது. அதில் மண்வாசனை என்ற பகுதியில் காங்கேசன்துறை பற்றி எழுதியிருந்ததோடு சிறுகதை எழுதும் பொறுப்பையும் நானே ஏற்றுக்கொண்டேன். இன்று எட்டு வருடங்கள் நிறைந்து விட்டன! இன்றுவரை அது தொடர்ந்து கொண்டே இருக்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்வாசனையில் ஊர்களின் சிறப்புக்கள், ஊருக்குச் சிறப்புச் சேர்த்த கலைஞர்கள்... எங்கள் மண்ணிற்குப் பெருமை சேர்த்த மரங்கள் மற்றும் மறக்கமுடியாத சில உயிரினங்களான நாய், காகம், இப்படி இப்படியாக இப்பொழுது 'நம் மண்ணில் தமிழ் வளர்த்த அறிஞர்கள்' என்ற பகுதி தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

இது எப்படிச் சாத்தியமாயிற்று என்று எனக்குள்ளேயே ஒரு வியப்பு! நான் என் தாய் மண்ணை விட்டுப் புலம் பெயர்ந்து நாற்பது வருடங்கள் ஆகின்றன! மீண்டுமொருமுறை நான் வாழ்ந்த மண்ணைப் பார்க்கவில்லை! அன்று நான் வாழ்ந்த மண்ணுக்கும் இப்பொழுது இருக்கும் மண்ணுக்கும் நிறைய மாற்றங்கள்! வளர்ந்து வரும் நாடுகளில் என்றால் புதிய புதிய கட்டிடங்களாலும் தொழிற்சாலை களாலும் நாடு அழகு பெற்றிருக்கும். ஆனால் எம் நாட்டில் யுத்தம் காரணமாக முன்னர் இருந்த கட்டிடங்களும் இடிந்து அழிந்துபோயிருக்கின்றது எம் மண்!. நான் என் மண்ணை விட்டுப் பிரியும்போது எனது கண்ணுக்குள் நின்றவைகளோடு இணையத் தளமும் தாயகத்தில் இருந்து ஒரு சில நண்பர்களும் எனக்கு உதவியாக இருந்ததனால் (குறிப்பாக உடுவிலில் இருந்து திரு.சிவானந்தராஜா, கனடாவில் இருந்து கலாநிதி அலெக்சாண்டர் மாஸ்ற்றர்) சரியான தகவல்களை என்னால் நிறைவாகப் பதிவு செய்ய முடிந்தது. இருந்தும் கோப்பாய், சுன்னாகம், அரியாலை போன்ற ஒரு சில ஊர்களை எழுதும்போது சில முக்கிய தகவல்களைத் தவற விட்டபொழுது வாசகர் கள் சுட்டிக்காட்ட.. அடுத்த இதழ்களில் அதனைத் திருத்தியுள்ளேன். ஒன்றை மட்டும் கவனத்தில் கொள்ளுங்கள். சில தகவல்களைத் தவறவிட்டிருப்பேனே தவிர தவறான தகவல்களை எந்த இடத்திலும் பதிவு செய்யவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒரு பக்கம் இது நடந்து கொண்டிருக்கும்போதே அகரம் தனது சகோதர பத்திரிகையாக 'அகரதீபம்' என்றொரு காலாண்டுக்கான பக்திப் பத்திரிகையை ஆரம்பித்தது. அதில் மண்ணில் உள்ள ஆலயங்களைப்பற்றி எழுதும் பொறுப்பையும் ஆசிரியர் அவர்கள் என்னிடமே ஒப்படைத்தார். காலாண்டுப் பத்திரிகையான அகரதீபத்தில் சுமார் பதினைந்து ஆலயங்களைப்பற்றி எழுதியுள்ளேன். ஆனால் புத்தகமாக்குவதற்காக இவை எல்லாம் தொகுக்க முயன்றபோது இத்தனை பதிவுகளையும் தாங்கி வைத்திருந்த மின்தட்டுக்கள் இயங்க மறுத்துவிட்டன! இதனைத் திரும்பப் பெறுவதற்காக இருந்த மாற்றுவழி இதுவரை வெளிவந்த தொண்ணூறுக்கும் மேற்பட்ட அகரத்தின் மூலப் பதிவுகளை மீண்டும் திறந்து ஒவ்வொன்றாக எடுக்கவேண்டும்! ரவிமாஸ்றருக்கு இருந்த வேலைப்பளு காரணமாக அதுவும் முடியவில்லை. பின்னர் அவர் சொன்ன ஆலோசனையின்படி எட்டு வருடங்களாக அவருக்கு நான் அனுப்பிய சகல மின் அஞ்சல்களையும் திறந்து அதில் எனக்குத் தேவையானவற்றை மீள் பதிவு செய்யவேண்டும்!

இவைகளைத் தேடி எடுப்பதற்கு எனக்கு சுமார் இரண்டு வாரங்கள் தேவைப்பட்டன! அப்படித் தேடியும் நான் எழுதியவை முழுவதும் கிடைக்கவில்லை. குறிப்பாக அகரம் முதலாவது புத்தகத்தில் எழுதிய காங்கேசன்துறை மண்ணின் வாசம் கிடைக்கவே இல்லை! இப்படி நிறையக் கிடைத்தவைகளைக் கொண்டு என் நினைவுகளை மூன்று பகுதிகளாகப் பிரித்திருக்கின்றேன். முதலாவது, ஊர் நினைவுகள். இரண்டாவது, ஆலயங்கள். மூன்றாவதாக எம் மண்ணோடு கலந்து எம்மைவிட்டுப் பிரிக்க முடியாதவைகளான நாய், காகம், மரங்கள், மற்றும் அழிக்கமுடியாத நினைவுகள் ஆகியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதெல்லாம் இன்று காலை நடந்த சம்பவத்தை மாலையில் சரியாக நினைவுபடுத்த முடியவில்லை! சில வேளைகளில் அரை மணிநேரத்திற்கு முன்னர் பாவித்த மருந்தை மறந்து விடுகின்றேன். இந்த மறதியால் இரண்டு தரம் சாப்பிட்டதும் உண்டு! சாப்பிடாமல் விட்டதும் உண்டு!! ஆனால் நான் புலம் பெயர்ந்து முப்பத்தைந்து வருடங்கள் ஆனாலும் என் பழைய நினைவுகளும் உணர்வுகளும் இன்னமும் என் மண்ணிலேயே வாழ்வதனால்தான் என்னால் இது சாத்தியமாயிற்று என்பதுதான் நிதர்சனமான உண்மை. ஆம்! புலம் பெயர்ந்த பின்னரும் தாயகத்தின் நினைவுகளை மனதில் சுமந்து வாழ்ந்து கொண்டிருக்கும் படைப்பாளியின் உணர்வுச் சித்திரம் இது.

அகரதீபத்திற்காக ஆலயங்களைப்பற்றி எழுத ஆரம்பித்ததும் இணையத்தளங்களில் இருந்து ஆலய வரலாறுகளை எடுத்துத்தந்து உதவியவர் என் வெற்றிகளைப் பார்த்து சந்தோசப்படும் முதல் ஆளான தம்பி பிரியாலயம் துரைஸ் அவர்கட்கும்.

எப்பொழுதும் ஒரு பதிவை நூலாக்குவதற்கு முன்னர் அந்தப் பதிவை பத்திரிகை சஞ்சிகைகளில் பதிய வைத்து புத்தகமாக்கும்போது சிறு சிறு தவறுகளைக்கூட திருத்திக்கொள்வதற்கு வாசகர்களின் விமர்சனங்கள் பேருதவியாக இருக்கின்றன. அந்த வகையில் இந்த நூலில் இடம்பெற்றுள்ள மண்ணின் நினைவுகள் முழுவதையும் அகரத்தில் வெளியிட்டதோடு, வந்த விமர்சனங்களை உடனுக்குடன் தந்து நான் அடுத்த புத்தகத்தில் திருத்தம் வெளியிடுவதற்கு உதவியாகவும், இதனைப் புத்தகமாக்குவதற்கு எனக்கு பக்கபலமாக இருந்த என் இனிய நண்பரும் 'அகரம்' 'அகரதீபம்' ஆகியனவற்றின் ஆசிரியருமான திரு.ரவி மாஸ்ற்ரர் அவர்களோடு, எப்பொழுதும் எனது எழுத்துக்கள் நூலாகும்போது எனக்கு அருகில் இருந்து அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுபடுத்தித் தரும் மூத்த பத்திரிகையாளரான திரு எஸ்.கே. காசிலிங்கம், அண்ணன் அவர்கள் 'இந்த நூலையும் பதிவாக்கப் போகின்றேன்' எனச் சொன்னதும் ஒடோடி வந்து தொகுப்பதில் உதவி யாக இருந்ததோடு சிறந்ததொரு முன்னுரையையும் வழங்கியிருந்தார். அவருக்கும்.

நான் கேட்டவுடன் தனது அன்றாடப் பணிகளை ஒதுக்கி வைத்து விட்டு குறுகிய நாட்களில் வாழ்த்துரை வழங்கிய 'காற்றுவெளி' சஞ்சிகையின் ஆசிரியரான நண்பர் முல்லை அமுதன் அவர்கட்கும். எனது மனம் உவர்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*வையகம் போற்றிட வாழ்க எம் மண்ணே!*
*தாயகம் சிறப்புற காத்திடும் எம் தமிழே!*
*மெய்யக உணர்வோடு படைத்திட்டேன் உன்னை! - என்*
*தாயினும் மேலாகத் தாங்குவேன் உன்னை.*

அன்புடன்

**வண்ணை தெய்வம்**

**Vannai Theivam**
**(N.Thaiventhiram)**
22 - Avenue Jean Magnet
91170 - Viri Chàtillon
France
Tele :- (house) 01 69 39 44 85 / 01 69 39 43 68...
Hand :- 06 65 92 37 11

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணையை வாழ்த்திய நெஞ்சங்கள்...

**மல்லிகைப் பாமாலை....**

*உள்ளம் கவருகின்ற உயர்ந்த நடிப்புக்களால்*
*வெள்ளமாய் கற்கண்டாய் விரிந்த கவிதைகளால்*
*ஏழிசையால் பாட்டால் இனிய குரல் வளத்தால்*
*வாழுகின்ற நூல்களால் வரியின் உரைநடையால்*
*நேசத் தமிழ்த்தாயின் நெஞ்சில் இடம்பெற்ற*
*பாசக் கலைஞர்களைப் பல ஆண்டாய் ஆராய்ந்து*
*முத்தமிழில் தேர்ந்த முன்னூறு கலைஞர்களை*
*இத்தலத்தில் நூலாய் எழுதிவைத்த வால்மீகி*
*மண்ணில் பிறந்த பயன் கண்ணிலே கண்டு விட்டான்*
*எண்ணத்தில் நாவினிலே என்றும் மிதக்கின்ற*
*வண்ணை தெய்வம் என்ற வரலாற்று நாயகனார்.*

அமரர் புலவர்மணி அமுது ஐயா

*(25-01-2009ல் நடைபெற்ற வண்ணை தெய்வம் அவர்களின் புதல்வர் சண் அவர்களின் திருமணத்தை வாழ்த்தி அமுது ஐயா அவர்கள் எழுதிய வாழ்த்துப்பாவில் இருந்து ஒரு பகுதி)*

■■■

**உம்மை நினைத்து கர்வத்தோடு பொறாமைப்பட்டுக்கொண்டேன்!**

உங்களின் "கொந்தல் மாங்காய்" படித்தபோது... நாங்கள் பக்கம் பக்கமாய் எழுதிக் குவிக்கின்றோமே! ஆனால் தம்பி வண்ணை அவர்கள் ஒரு சில பக்கங்களில் எழுதி ஒரு நொடியில் படிப்பவர்களின் மனங்களில் இடம்பிடித்துவிடுகின்றாரே என ஆச்சரியப்பட்டதுண்டு.

"யாழ்ப்பாணத்து மண் வாசனை" படித்தபோது தமிழின் முற்றத்தில் தங்க நிலாப்போல பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் அங்கிருந்தபடியே தாய் மண்ணின் சிறப்புக்களை வாசம் குறையாமல் வர்ணித்திருந்தீர்களே! அதைப் பார்த்து அதிசயித்துப் போனேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காலங்கள் வாழ்த்தும் முன்னூறு கலைஞர்கள்'' என்னும் புத்தகத்தைப் படித்த பின்பு எத்தனையோ எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள் அவர்களுக்கெல்லாம் வராத சிந்தனை தம்பி வண்ணையின் சிந்தனையில் மட்டும் எப்படி உதிர்த்தது? என்று எண்ணி பூரிப்படைந்து போனேன். என் தம்பியை நினைத்து கர்வத்தோடு பொறாமைப்பட்டுக்கொண்டேன்!

'காலங்கள் வாழ்த்தும் 300 கலைஞர்கள்'' என்னும் பொக்கிஷத்தைத் தந்த தம்பி தெய்வமே! காலம் உம்மை வாழ்த்திக்கொண்டே இருக்கும்.

''முதுகலைஞர்'' ''கலாபூஷணம்''
**அமரர் நவாலியூர். நா. செல்லத்துரை**
**(நவாலியூரான்)**

■■■

**என் இதயத்தில் வாழ்பவன் வண்ணை**

*ஆண்டுக் கொருமுறை ஆண்டவர் பிறந்த நாளில்*
*வாழ்த்துக்கள் அனுப்புவேன் என் நண்பர்களுக்கெல்லாம்*
*ஆண்டுகள் தவறாமல் ஒவ்வொரு ஆண்டும்*
*வாழ்த்துக் கவிதை ஆக்கித் தருபவன் தம்பி வண்ணை!*
*என் வாழ்க்கை வரலாற்றையும் இவன் வரையவேண்டும்*

(பாரிஸில் நடைபெற்ற ''யாழ்ப்பாணத்து மண் வாசனை'' நூல் வெளியீட்டு விழாவில்.)

''ஈழத்தமிழ்விழி'' ''கலைமாமணி''
**அமரர் முகத்தார் யேசுறட்ணம்**

■■■

**வண்ணையின் படைப்புக்கள் வாழட்டும் பல நூறாண்டு...**

*சூத்திரம் தெரிந்தவன்... சுதந்திரப் பிரியன்*
*சொல்ல நினைப்பதை சொல்லியே முடிப்பவன்*
*உவகை பொங்கிட உண்மை உரைப்பவன்*
*உள்ளத்தில் என்றுமே உயர்வு கொண்டவன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிங்கத் தமிழுக்கு சீரான பாட்டெழுதும்*
*தங்கத் தமிழன் தம்பி கவிவண்ணை*
*மாண்புற்றுஞ் மதிப்புற்றுஞ் மற்றும் விருந்தேற்று*
*வண்ணையின் பேர் பெற்ற படைப்புகள்*
*சீர் கொண்டு சிறப்புற்று வெளிவர வாழ்த்துகின்றேன்.*

**அமரர் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா**
டென்மார்க்

■■■

## நற்றமிழின் நற்சுவைபோல் வண்ணை

*வாழ்வியலை வாழ்வாங்கு வாழக் கதையெழுதும்*
*ஆழ்ந்த கலைஞன் அன்பு வண்ணை வாழ்கவே*
*சுற்றமும் ஊற்றவரும் சுதந்திரமாய் என்றென்றும்*
*நற்றமிழின் நற்சுவைபோல் நன்கு.*

**அமரர். பொ.கனகசபாபதி**
தெல்லிப்பளை மகஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர்
கனடா

■■■

## வாழ்த்துவதற்கு வயது முக்கியமல்ல! மனசுதான் முக்கியம்

நான் முனிவனல்ல வரம் கொடுக்க!
நேசம்தான் கொடுக்க முடியும் மனிதனாக...

பூமிப்பந்தில் பலர் வாழ்கின்றார்கள். சிலர் மட்டுமே பேசப் படுகின்றார்கள். அந்த சிலரில் நீங்களும் ஒருவர்.

பாரிசில் எது நடந்தாலும் அங்கு முகப்பில் நிக்கின்றீர்! சிரித்த முகத்துடன்.

பத்திரிகை நடத்தினீர். பல கலைஞர்களைப் பரிந்துரைத்தீர்.

புத்தகங்கள் போடுவீர். பாரிசில் தமிழர்களுக்கு நன்கு தெரிந்தவர் நீர்.

நாடகங்கள் திரைப்படங்களில் நடித்தீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பலகாலம் நீர் மன இளமையுடனும், உடல் நலத்துடனும் வாழ்ந்து பல சாதிக்க மனதார வாழ்த்துகின்றேன்.

என்றும் அன்பன், தமிழ் ஆர்வலன்
**A.ரகுநாதன்**
(தமிழாள் கூத்தவை - பாரிஸ்)

■■■

## மனதோடு வாழும் வண்ணை

பல ஆண்டுகளுக்கு முன் பாரிசில் நடந்த நாடக போட்டி விழா ஒன்றிற்கு ''தமிழ் அவைக்காற்றுகலைக்கழக" பாலேந்திராவுடன் நானும் மத்தியஸ்தராகக் கலந்து கொண்டேன். வண்ணையும் நாடகம் ஒன்றில் ஒரு பாத்திரத்தில் சில காட்சிகளில் மட்டும் நடித்திருந்தார். அவரது நடிப்பு எனக்குப் பிடித்தது. நான் நினைத்தது பாலேந்திராவுக்கும் சரியெனப் பட்டிருப்பதை அவரது புள்ளிகளில் இருந்து தெரிந்து கொண்டேன். சிறந்த நடிகராக இவர் தெரிந்தெடுக்கப்பட்டார்.

நட்பிற்கு இனிய நண்பர், பாசத்திற்குரிய தந்தை, பரிவிற்குரிய கணவர், பொறுப்பு மிக்க குடும்பத் தலைவர்,குடும்ப வாழ்விலும் பொது வாழ்விலும் வெற்றிகரமாக வாழ்ந்து கொண்டிருக்கும் வண்ணை ஒரு நல்ல மனிதர்.

**ஈ.கே.ராஜகோபால்**
மூத்த பத்திரிகையாளர், ஆசிரியர் புதினம் (லண்டன்)

■■■

## வரலாறு வாழ்த்தும்.

*வண்ணை தெய்வமே*
*வரலாறு உன்னை உன்றென்றும் வாழ்த்தும்.*
*காலங்கள் மறந்துவிட்ட கலைஞர்களை வாழும் வரலாறாகவே பதிவு செய்தாயே*
*அதற்காகவே காலம் உன்னை வாழும் வரலாறாகவே வாழ்த்தும்.*

**அந்தனி ஜீவா**
ஆசிரியர் - கொழுந்து, கொழும்பு

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண்வாசனையும் கண்ட வண்ணை...**

சிரித்த முகம், சாந்தமான தோற்றம், பொறுமையான பேச்சு, மரியாதையுடன் பழகும் பண்பு, பல்கலை ஈடுபாடு, மண் பற்று, இவை அனைத்தும் நல்ல நண்பர் வண்ணை தெய்வம் பற்றி என் மனக்கண்ணில் விழும் படம்! இவர் இலக்கியக் கூட்டங்களில் பேசியதைக் கேட்டிருக்கின்றேன். வானொலிகளில், தொலைக்காட்சியில் இலக்கிய நிகழ்ச்சி, கவியரங்குகள் நடாத்தியதைக் கேட்டிருக்கின்றேன்... பார்த்திருக்கின்றேன். யாழ்ப்பாணத்து மண் வாசனையை அன்பளிப்பாகக் கொடுத்தார். அதைப் படித்து நிறையத் தகவல்களைப் பெற்றிருக்கின்றேன்.

இவரின் முயற்சிகளுக்கு பாராட்டுக்கள். நல்வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் சச்சிதானந்தம்** M.A. D.S. PHD

■■■

**என் பார்வையில் வண்ணை அண்ணன்**

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயற்கையாக ஒரு திறமை அமைந்திருப்பது நியதி. அந்தத் திறமைகளைத் தான் சார்ந்த சமுதாயத்தின் நல்வாழ்விற்குத் தீங்கிழைக்காதவனாக இருக்க வேண்டும் என்பதை இவர் கடைப்பிடித்து வாழ்வதே உண்மையான கலைப் பணியாகும். இவர் அதை தன் செயலில் கடைப்பிடிப்பவராக இருந்தார்.

எனது குடும்பம் சார்பாகவும், கிறின் கிங்ஸ் கழகம் சார்பாகவும் வண்ணை அண்ணனுக்கு அன்பான வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நிடூழி வாழ இறைவனை பிரார்த்தித்துக் கொள்கின்றோம்

**டேவிட் ராஜ்குமார்**
கிறீன் கிங்ஸ் கழகம் - பிரான்ஸ்

■■■

**வண்ணை அண்ணருடன் நான்...**

இவர் தோழர் சண்முகதாசன் அவர்களின் வழிக்காட்டலின் கீழான இலங்கை கம்யூனிஸ்ற் கட்சியின் யாழ் கிளையில் ஒரு தோழராக இயங்கியிருக்கின்றார். நானும் அதே கட்சியின் ஒரு ஆதரவாளனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக நாடகத்துறையில் இயங்கி வந்திருந்ததால் அத் தோழமை உணர்வு எம்மைப் பிணைத்தது. சுயநலங்களுக்கு இடமளிக்காத புனிதமான அந்த மக்கள் இயக்கத்தின் ஒரு தோழராக வண்ணை அண்ணர் இயங்கியிருக்கின்றார் என்பது எனக்கு மகிழ்வான செய்தியாக இருந்தது. இருக்கின்றது.

பாரிசில் ரி.ரி.என் தொலைக்காட்சியில் தனது இலக்கிய நண்பர்களுடன் செய்த நிகழ்ச்சி ஒரு அற்புதமான கவிதைக் கச்சேரியாகும். ஒரு கருத்துச் சமா!

இவர் ஒரு சிறந்த எழுத்தாளராக, கவிஞராக, இலக்கியவாதியாக, எல்லாவற்றிற்கும் மேலாக அத்தகையோரை ஊக்குவிப்பவராக இயங்கி வருவது எல்லோருக்கும் வயப்பட்ட வலிமையல்ல! ஒரு உன்னத உளச்செழிப்பு மிக்க சமூகப் பயிர் இவர்.

**அன்பன் பரா**
நாடக ஆசிரியர்
(மேடை வானொலி தொலைக்காட்சி திரைப்படக் கலைஞர்)
பிரான்ஸ்

■■■

**பல பரிமாணங்களைக் கொண்டவர் வண்ணை.**

"இன்பம் விழைவான் வினைவிழைவான் தன்கேளீர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்"

தன்னலம் கருதாது, பிறர் நலம் கருதி தான் மேற்கொண்ட செயலில் கருத்தாய் இருந்து அதில் வெற்றி பெறுபவன் நண்பர்கள், சமூகம், மக்கள் அனைவரையும் தாங்குகின்ற தூணுக்கு ஒப்பாவான்.

நாட்டைவிட்டு வெளியேறி புலம்பெயர் மண்ணில் வாழ்ந்தாலும், தான் தனது குடும்பம் என்று வாழாது தன் சமூகம், மொழி, மக்கள் முன்னேற தன் திறன் சார்ந்த துறைகளினூடாக பணிபுரிந்து வரும் திரு.வண்ணை தெய்வம் அவர்கள் நல் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தமிழ் வளர பணியாற்றிட வாழ்த்துகின்றேன்.

**திரு.அ.வ.டேமியன் சூரி**
இணைப்பாளர் "திருமறைக் கலா மன்றம்" பிரான்ஸ்

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிலத்துத் தமிழை புலத்தில் விதைத்த*
*ஈழத்துக் கரைஞர் காவலரே வாழ்க*
*புலத்தில் விதை தூவும் புதியதோர் படைப்புகளின்*
*அணிந்துரையே நீ வாழ்க*

*நல்லோர் வாழ்வின் அரணே!நல்லதை எண்ணும் மனமே*
*நன்னிலம் உள்ள வரையில் உன் புகழ் வாழ்க*

**ஸ்ரீபாஸ்க்கரன்**
(ஆசி பூஷரி)

■■■

## இனிமை தவழும் இளம் குமரனே!

*ஆங்கிலத்தில் All in one என்பார்களே!*
*அதுபோல் எல்லாம் ஒன்றாகியுள்ள வண்ணை!*
*இலக்கியமா? இதிகாசமா? கவிதையா? கட்டுரையா?*
*இவையெல்லாம் ஒன்றாக அமைந்த காவலனே!*

*பத்து வயது குறைந்த உமக்கு பப்பாவானேன்*
*பலராலும் போற்றப்படும் உமக்கு உறவானேன்*
*பால் வடியும் முகம் கொண்ட உம்மை*
*பாரெல்லாம் போற்றவேண்டும்*

**பப்பா**
நோர்வே

■■■

## வாழ்த்துகின்றோம்... வணங்குகின்றோம்...

*இந்துக்களுக்கு வேதம் தேவைப்படடது*
*வியாசரை அழைத்தார்கள் வேதம் பிறந்தது!*
*இந்துக்களுக்கு இதிகாசம் தேவைப்பட்டது*
*வால்மீகியை அழைத்தார்கள் இராமாயணம் பிறந்தது!*
*நம் பந்துக்களுக்கு கலைஞானம் தேவைப்பட்டது*
*உன்னை அழைத்தார்கள் கலை ஞானம் பிறந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புஜபலம் கொண்டவனே! கலைக்களம் கண்டவனே!*
*காலத்தை வென்றவனே! தீண்டாமையைக் கொன்றவனே!*
*கொற்றவனும் நீ! ஆயகலைகள் கற்றவனும் நீ!*
*வான்மதியின் திருவுருவம் நீ... முக்கலையின் திருவுருவம் நீ...*

**திரு.திருமதி. தங்கராஜா**
ஜேர்மனி

■■■

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்ஸ்

புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் ஒரு கலைஞனாக.. ஒரு படைப்பாளியாக.. கலை இலக்கியத் துறையில் வண்ணைத் தெய்வம் ஆற்றிவரும் பங்களிப்பு மிகச்சிறப்பானது. பாரிஸ் மாநகரில் நடைபெறும் கலை இலக்கிய நாடக விழாக்களில் வண்ணை தெய்வம் கலந்து கொள்ளாமல் விழா இல்லையென்ற அளவிற்கு முத்தமிழ்மீது திராத காதல். அந்த வகையில் எமது இனம் தனது அடையாளங்களை இழந்துவிடாமல் தேசப்பற்றும் மொழிப்பற்றும் கொண்டவர்களாக சமூக வழிப்புணர்வுடன் தாயக உறவுகளின் இடர் களைந்து அவர்கள் உரிமையுடன் வாழ எடுத்துரைக்கும் படைப்புகளை வழங்கி தமிழுக்கும் தமழ் மக்களுக்கும் தொடர்ந்தும் பணியாற்ற எமது வாழ்த்துக்கள்.

**செ.சுந்தரமூர்த்தி**
பணிப்பாளர்

■■■

## வண்ணை அண்ணரின் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

பல்துறைக் கலைஞனாக விளங்கும் வண்ணை அண்ணா தான் சாா்ந்த சமூகம் மட்டில் தீவிர அக்கறை கொண்டவர். தன்மட்டில் தனக்குரிய சமூகப் பொறுப்புக்களை தன் வசதிகளுக்கும் வாய்ப்புகளுக்கும் அப்பால் நின்று நிகழ்த்தி வருபவர். இவர் தன்னுடைய பல்துறை ஆற்றல்களைக் கொண்டு பலவற்றை வெளிப்படுத்தியிருக்கின்றார். ''காலங்கள் வாழ்த்தும் 300 ஈழத்துக் கலைஞர்கள்" என்ற நூல் இத்துறையிலே சென்று வரலாறுகளையும் எம் இன மக்களின் தனித்துவங்களையும் அடையாளங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் பதியப்போகும் வரலாற்று ஆசிரியர்களுக்கு ஒரு பாதையாகவே அமையும்.

**மன்னார் (குழந்தை) செபமாலை ஆனந்தன்**
கூத்துக் கலைஞர்

■■■

**வண்ணை பற்றிய எண்ண அலைகள்.**

நான் கண்ட நாள் முதல் இன்றுவரை தனக்காக கொடுக்கப்படும் எந்தப் பணியையும் ஆரம்பம் முதல் இறுதிவரை எந்த சலிப்போ களைப்போ இன்றி வெற்றிகரமாக செய்து முடிக்கும் ஓர் கடமை வீரனாக பவனி வரும் வண்ணை தெய்வம் அவர்களின் தமிழ்ப்பணி குறித்து நான் மிகவும் பெருமை அடைகின்றேன்.

**இலங்கையர் கனகசபை அரியரத்தினம்**
பங்குடுதீவு

■■■

**கலைஞர் வண்ணை... எனது நினைவலைகள்...**

''வானலைகளில் எங்கள் கவிதைகள்" என்ற இவரது இரண்டு கவிதைத் தொகுப்பிலும் T.R.T. தமிழ் வானொலியில் கவிஞர்கள் சங்கமம் என்ற இவரது நிகழ்ச்சித் தொகுப்பில் இடம்பெற்ற கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்தமை அவரது உயர்ந்த பண்பாக என்னால் எண்ணத் தோன்றுகின்றது. தான் தனது எழுத்துக்களைப் பிரபல்யமாக்கப் போகின்ற இன்றைய காலகட்டத்தில் இவர் வளர்ந்துவரும் கவிஞர்களுக்கு களம் அமைத்து வளர்த்த பாங்கை என் மனம் பாராட்டிக்கொள்ள விரும்புகின்றது.

**நவஜோதி யோகரட்நம்** (லண்டன்)
(அகஸ்த்தியர் குடும்பத்தினர்)

■■■

**நெஞ்சில் இருந்து நீங்கமுடியாதவர்...**

புலம் பெயர் நாட்டிலே முதல் தமிழ் சினிமாப்படம் எடுத்தவர் என்ற புகழ்மாலை எனது கழுத்திலே வீழ்ந்தாலும் அது தனிப்பூவால் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல! பல பூக்கள் இணைக்கப்பட்டதுதான் அந்தத் ''தனிப்புறா". அதன் வெற்றிக்குக் காரணம் எங்கள் வண்ணை தெய்வம்தான். இவரின் அன்பையும் ஆர்வத்தையும் அறிந்த நான் ''தனிப்புறா" படத்தின் இணை இயக்குனராக இணைத்து வெற்றியும் கண்டேன்.

**ஞானம் பீரிஸ்**
G.P.பிலிம்ஸ்

■■■

**நானும் எனது நண்பனும்...**

நானும் எனது நண்பன் வண்ணையும் சாதித்தவைகள் அதிகம்! அதிலும் எனது நண்பன் சாதித்தவை மேலதிகம்!! மிதியம் உள்ள நாட்களில் இன்னும் அதிகம் சாதிக்கவேண்டுமென கலைவாணியை கரம் கூப்பி கனிவோடு வேண்டுகின்றேன்.

நம் இருவரையும் நன்றாக மதித்தவர்கள் நம் அயல் மக்கள். எங்களை ஒரே அரங்கில் இணைப்பதற்காக வண்ணை தெய்வத்தின் ''பதிலுக்குப் பதில்" என்னும் நாடகத்தை என்னை இயக்கவைத்து அரங்கேற்றிய அந்த நாடகம் பெரு வெற்றியைப் பெற்றது. நானும் வண்ணையும் முதலில் இணைந்து நடித்த நாடகம் ''சாவுக்குச் சவால்" ஆகும். இந்த நாடகத்தில் குருநகரைச் சேர்ந்த ஜெயந்தி என்னும் நடிகையும்,அவருடைய சகோதரி கெங்காவும் நடித்திருந்தார்கள். நிகழ்ச்சி அறிவிப்பாளர் வேறு யாருமல்ல எங்கள் பிரியாலயம் துரைஸ் அவர்கள்தான். அந்த நடகமும் மிகப்பெரிய வெற்றியடைந்த நாடகமாகும்.

**திருநெல் புலேந்திரன்**
நடிகர் - நாடக இயக்குனர்

■■■

**வண்ணமயமான எண்ணங்களைக் கொண்ட வண்ணை தெய்வம்.**

தன்னுடைய நூல்களை எங்கள் பதிப்பகம் மூலமாக வெளியிடுவதற்கு இவர் காட்டும் ஆர்வத்தைப்போல தனது நட்பு வட்டத்தில் உள்ளவர்களின் நூல்களும் வெளிவரவேண்டும் என்பதில் ஆர்வம் எடுத்துக்கொள்பவர். திரு முகத்தார் யேசுறட்ணம் அவர்களின் ''முகத்தார் வீட்டுப் பொங்கல்" நூல் உட்பட பல்வேறு நூல்கள் வெளிவருவதற்குக் காரணமாக இருந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமுறை பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றிருக்கின்றேன். திரு பாரிஸ் ஜமால், திரு.பாரிஸ் பார்த்தசாரதி ஆகியோரின் விருந்தினராகத் தங்கியிருந்ததைப்போல திரு. வண்ணை தெய்வம் அவர்களின் இல்லத்திலும் இருமுறை தங்கியிருக்கின்றேன். உடன்பிறந்த ஒரு சகோதரனைப்போல உபசரித்து உணவளித்து மகிழும் இவரது மனைவி மற்றும் பிள்ளைகள் இவரைப்போலவே அன்பாகப் பழகுபவர்கள்.

**ரவி - தமிழ்வாணன்**
நிர்வாக இயக்குனர், மணிமேகலைப் பிரசுரம் (சென்னை)

■■■

**மறக்காத மனவியல்பின் மதிப்புறு விழா...**

தேடல் கொண்ட வண்ணை அண்ணன் தேடியதெல்லாம் மனிதம் கொண்ட மனிதர்களை மட்டுமே. மணிவிழா வருமேன்றோ, தனக்கொரு விழா கொண்டாடப்படுமென்றோ வண்ணை அண்ணை கற்பனைகூடச் செய்து பார்த்திருக்கமாட்டார்! மனித வாழ்வில் பிற மனிதனைச் சபியாமல் வாழ்வதும் சக மனிதனை மதித்து வாழ்தலும் சமூகம் சார்ந்து பணி செய்து கிடத்தலும் என்ன விளைவைத் தருமென்பதனை வண்ணை அண்ணனுக்கு எடுக்கப்படும் விழா மகுடமிட்டு விளக்குகின்றது.

வண்ணை அண்ணனுக்கு செவேலியே டாக்டர் அமுதுப்புலவர் அவர்களால் வழங்கப்பட்ட ''கலைஞர் காவலர்" பட்டமும், 05-06-2010 அன்று சுவிற்சிலாந்திலே வழங்கப்பட்ட ''மனிதருள்" என்னும் பட்டமும் அவர்தம் வாழ்விற்குக் கிடைத்த மகிழ்ச்சியான அங்கீகாரங்கள் என்றால் இப்பொழுது அவருக்காகவே எடுக்கப்படும் மணிவிழா என்பது மனிதம் சொரியும் பூக்களின் தோட்டமாகவே பார்க்கப்படுகின்றது.

**''கலாநிதி" கல்லாறு சதீஸ்**
இயக்குனர், மக்கள் மேம்பாட்டு சமூக வளர்ச்சி நிறுவனம்

■■■

**"மனிதருள்" வண்ணை ஐயா**

மாலைகள் தோளிலே வீழ்கின்ற போதெல்லாம்
தலைக்கனம் இல்லாத நற்குணம் கொண்டவர்.
பொன்னாடை தோள் வந்து சேர்கின்ற போதெல்லாம் - பிறர்
கண்ணிலே மின்னாத கலை வண்ணம் கொண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உன் பாடல் கேட்டு உனைப்பாடும் வரம் பெற்றவன்.
நீ நலம்வாழ உனை வாழ்த்திக் கரம் கூப்பி நிற்பவன்.

**கி.தீபன்**
கவிஞர், வானொலி அறிவிப்பாளர்,
குறும்பட தயாரிப்பாளர் - இயக்குனர்

■■■

## எடுத்துகாட்டாக விளங்கும் வண்ணை தெய்வம்

திரு வண்ணை தெய்வம் அவர்கள் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பிரான்சில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார். தாயகத்தை மூடிய போரென்னும் புயற் காற்றினால் அள்ளுண்டு அகதிகளாகப் புறப்பட்ட தமிழர்கள் வெறும் கையுடன் வெளியேறியதாகத் தெரிந்த போதிலும் உண்மை நிலை அதுவல்ல என்பதற்கு எடுத்துக்காட்டாக அவர் தாயகத்தை விட்டு வெளியேறும்போது தன்னுடன் சுமக்கமுடியாத அளவு தமிழ்ப் பற்றையும், அதன் கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்களையும், தங்களுடன் சுமந்து வந்தார்கள் என்பதற்கு வண்ணை தெய்வம் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார் என்றால் அது மிகையாகாது.

**திரு.நாகலிங்கம் பாலச்சந்திரன்**
நாடுகடந்த தமிழீழ அரசவை உறுப்பினர்.

■■■

## “வண்ணை”யின் நாயகன்...

பிரான்சில் முதல் முதல் உருவான T.R.T. தமிழ் ஒளி, T.R.T. தமிழ் ஒலி வானொலி ஈழநாடு பத்திரிகை, சிரித்திரு சஞ்சிகை ஆகிய முதல் முதல் தோன்றிய ஊடகங்களில் எம்மோடு இணைந்து பணியாற்றிய பெருமைக்குரியவர்.

அதைவிட வாழும்போதே கலைஞர்களைக் கௌரவிக்கவேண்டும் மறைந்தவர்களுக்கு அஞ்சலி செய்யவேண்டும் என்பதற்காக தனது சொந்தப் பணத்தில் ‘‘வண்ணை” என்னும் பத்திரிகையை உருவாக்கி அதன் மூலமாக அவர் ஆற்றிய பணியையும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

**பிலிப் தேவா**
வானொலி மேடை தொலைக்காட்சி அறிவிப்பாளர்

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காலம் தந்த கலைஞன்.**

எண்ணக் குவியல்களை தன் வண்ண வரிகளால் வரைந்து கவிதையாய், கட்டுரையாய் இன்னும் சிறு கதையாய், உருவகக் கதையாய் உருவாக்கித்தந்த தீரர்.

காலம் தந்த கலைஞனை வாழ்த்தும் காலம் எனக்கு பொற்காலம் எனக் கூறிக்கொள்வதில் எனக்கே பெருமை! வாழ்க கலைஞர் காவலர்.

**கலைஞர் மா.பரமநாதன் (நாதன்)**
வானொலி மேடை தொலைக்காட்சி நடிகர்

■■■

**சோர்வில்லா இலக்கிய உழைப்பாளி வண்ணை...**

கவிஞனாய், எழுத்தாளனாய், நடிகனாய், ஊடகவியலாளனாய்த் திகழ்கின்ற வண்ணை தெய்வம் அவர்களின் மற்றைய கலைஞர்களையும் படைப்பாளிகளையும் ஊக்குவிக்கும் பண்பும், அதற்கான உழைப்பும் மதிக்கப்படவேண்டியதொன்று. கள உழைப்பு எல்லோருக்கும் பொருந்திவராது. ஆனால் வண்ணைக்கு சாலப் பொருந்தும்.

தளர்வில்லா கலை இயக்கம், சோர்வடையா இலக்கிய உழைப்பு, தமக்குள் இருக்கும் ஆற்றல்களை சரியான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தும் சாதுூர்யம். எந்தக் காரியத்தையும் ஆறப்போடாத சுறுசுறுப்பு இவைகளை வண்ணை தெய்வத்திடமிருந்து கலை இலக்கியத் தளத்தில் இயங்குபவர்கள் கற்கவேண்டியவை.

**சு.கருணாநிதி**
எழுத்தாளர், கவிஞர், விமர்சகர்

■■■

**வண்ணை அவர்கள் தமிழ்ப் பண்ணை.**

நான் பார்த்த மட்டில் (ஆரம்பத்தில்) சாதரணமாகத்தான் நினைத்தேன்! ஆனால் கொஞ்ச நாட்கள் நகர நகரத்தான் தெரிந்தது வண்ணை ஓர் தமிழ்ப் பண்ணை என்று. அதன் பின்பு வானொலியில் அவரோடு சேர்ந்து பணியாற்றிய நாட்கள் மனதிற்கு இனிமையாக அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபது வயதைக் கொண்டாடும் இவர் இன்னும் இளமைத் துடிப்புடன் உலா வருகின்றார். அதே நேரத்தில் எப்படிக் கலையோடும் விளையாட முடிகின்றது? என என் மனதில் ஆதங்கம் எழுகின்றது.

**அருள்மொழித்தேவன்**
மேடை, வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர்
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்

■■■

## அமைதிக் கலைஞன் வண்ணை தெய்வம்

ஈழத்தில் தொடங்கிய இவரின் கலைப்பணி இன்றுவரை தொடர்கின்றது. எல்லோரும் விரும்புகின்ற ஒரு கலைஞனாக வலம் வருபவர் மட்டுமல்ல தன்னடக்கம் உள்ள தன்னம்பிக்கைக்காரர். நடிகராக, கவிஞராக, நூலாசிரியராக, தன்னை இனம்காட்டி வானொலி, தொலைக்காட்சி, மேடையென தொடராக இயங்கிக்கொண்டிருப்பவர். நினைத்த நேரத்தில் வெளிவரும் என்னும் அடைமொழியோடு அவரின் 'வண்ணை' பத்திரிகை முக்கியமான காலகட்டங்களில் வலம் வரத் தவறுவதில்லை.

**நண்பன் இரா குணபாலன்**
தமிழ் தொலைக்காட்சி மேடை வானொலி திரைப்பட நடிகர்,
அறிவிப்பாளர் - பாடகர்

■■■

## மனிதநேயமிக்க தமிழ் தென்றல் நண்பர் வண்ணை தெய்வம்

தான் பிறந்த மண்ணான தாய் மண்ணுக்கு, எங்கள் இனத்திற்கு, எங்கள் மொழிக்கு இவர் ஆற்றிக்கொண்டிருக்கும் தொண்டு அளப்பரியது. இவர் ஒரு முற்போக்குச் சிந்தனையாளர் மட்டுமல்ல பல்வேறு பரிமாணங்களை கொண்டிருப்பதுடன் மனிதநேயம்மிக்க சிறந்த நண்பனாகவும் விளங்குகின்றார்.

**குரு அரவிந்தன்** (கனடா)
எழுத்தாளர் விமர்சகர்

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பால் ஆற்ப்பரித்துக்கொள்ளும் ஆளுமைக்காரர்

பத்துக்கை பலம் இவர் படைப்பில், இதை ஒத்துக்கொள்ள மாட்டடார் சிலர்! ஏற்பவர் ஏற்கட்டும், ஏற்காதவர் ஏதும். என்னைவிட திறம்படச் செய்யட்டும் இந்தச் சமூகத்திற்கு என்னும் பணிவான பக்குவம் இவர் வாழ்வின் பொக்கிசம்.

*ஆளைப்பார்த்தால் அரேபிய சகோதரனைப்போல...!*
*அரேபிய அழகிகளைப்போல அவர் படைப்பின் அழகிய நடை...!*
*இவர் படைப்புப்பற்றி ஆய்வு செய்வதைவிட*
*இவர் நடைமுறை வாழ்வைப் படிப்பது அதைவிட சுவாரசியம்*

அன்பிற்கினியவன் **கே.பி.லோகதாஸ்**
ஊடகவியலாளர் - பல்துறை ஆர்வலர்

■■■

## வண்ணை தெய்வத்தை வாழ்த்துகின்றேன்.

எந்தவொரு பணியையும் இவரிடம் ஒப்படைத்தால் முகச்சுழிப்பு இல்லாமல் அர்ப்பணிப்புடன் செயற்படுத்துகின்ற திறமை இவரை கலை இலக்கியப் பணிகளில் தனித்துவமாக இனங்காட்டியுள்ளது.

பிறந்த மண்ணை தீவிரமாக நேசிப்பதின் காரணமாகத் தனது பெயருடன் தான் பிறந்த ஊரின் பெயரையும் சேர்த்துக்கொண்டிருப்பது சிறப்பாகும். வண்ணையின் வண்ண வரிகளில் கவரப்பட்டவர்கள் பலர்.

''கல்விச் சேவையாளர்" **சி.காராளபிள்ளை**
பாரிஸ் தமிழர் கல்வி நிலையக் காப்பாளர்

■■■

## வண்ணையின் தெய்வம்

தனிப்பட்ட முறையில் இவருக்கு நான் மிகவும் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். 94ம் ஆண்டு எனக்கு பாரிஸில் ''கலைமாமணி" விருது வழங்கினார்கள். அந்த விருது எனக்குக் கிடைப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் திரு.வண்ணை தெய்வம் அவர்களே! அத்தோடு எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துறை நிகழ்வுகளை உள்ளடக்கி 'கதாநாயகன்" என்னும் நூலை எழுதி அதன் வெளியீட்டு விழாவை மிகச் சிறப்பாக நடாத்தி முடித்தவர்.

அன்புடன்
**''கலைமாமணி" பெஞ்சமின் இமானுவல்**

■■■

**மணிவிழா பயனுள்ளதாக விளங்கட்டும்.**

வண்ணை தெய்வம் அவர்கள் தனியாளாக நின்று ஒரு நிறுவனம் சாதிக்கவேண்டிய காரியங்களை சாதித்துள்ளார். தலைமுறைக்கு நாம் எதைக் கொடுக்கின்றோம் என்பதில் கலை இலக்கிய பண்பாட்டு நிலைப்பாடுகள், வேர்கள் பற்றிய தகவல்களை சீராக நேராக நேர்தியாகத் தெரிந்து கொள்வது அவசியம்! என்பதை ஆர்வத்துடன் வண்ணை தெய்வம் தந்துள்ள நூல்களில் காண்கின்றோம்.

மணிவிழாக்காணும் வண்ணை தெய்வம் பற்றி வாழ்த்தில் பூத்தென்றல் தழுவும் போற்றுதலாக எனது வாழ்த்தினைத் தவழ விடுகின்றேன்.

''அக்கினிக் கவிஞர்" **மா.கி. கிறிஸ்ற்றியன**
கவிஞர் - எழுத்தாளர் - விமர்சகர்;

■■■

**மணிவிழாவிற்கே மகுடம் வண்ணை அண்ணன்.**

சக கலைஞர்களை ஊக்குவிப்பதும், உதவுவதும் இவரது அன்றாட செயற்பாடு. இவரது விமர்சனங்கள் படைப்பாளிகட்கு நிறைவான ஊட்டச்சத்து என்பதனைப் பலர் அறிவர் இவருடன் நான் பல பட்டி மன்றங்கள், கவிதை நிகழ்வுகளில் இணைந்து பணியாற்றி இருப்பதனை எண்ணி இன்றும் பெருமை கொள்கின்றேன்.

**திருமதி. லீனா ஜெயக்குமார்**
மேடை, வானொலி, தொலைக்காட்சி திரைப்பட நடிகை

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் சொல்லுங்கள்... வாழச் சொல்லுங்கள்...

பிரான்ஸ் நாட்டு எந்திரமயமான வாழ்க்கையோடு இவரை நாம் ஒப்பிட்டுப் பார்க்கையிலே தமது குடும்பப் பழுவை ஒருபுறமாகச் சுமந்த வண்ணமும் மறுபுறத்தில் ஒய்வு ஒழிச்சலின்றி இலை மறை காயாய் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வந்த கலைஞர்கள் பலரையும் தேடிப்பிடித்து அவர்களது படைப்புகளையெல்லாம் புத்தக வடிவில் பதிப்பித்து அவர்களை வெளிச்சம் போட்டுக் காண்பிப்பதென்றால் லேசுப்பட்ட காரியமல்ல...

இவரின் சமூகசேவை மேலும் வளர வாழ்த்துக்கள்

*என் பிரியத்திற்குரியவர்*

*பிரியாலயம் கலையகத்தின்பிதா மகன்!*
*பிரியாலயம் துரைஸின் பிரியத்திற்குரிய மனிதர்!*
*பிரியாலயம் குடும்பத்தின் பெருமைக்குரிய உறவாளர்!*
*பிரியமான எனது தாயாரின் மண்வாசனை மைந்தர்!*

*மாலைகள், மலர்ச்செண்டுகள், பொன்னாடைகள், பாராட்டுக்கள்*
*இன்நாளில் மட்டுமல்ல உங்கள் வாழ்நாள் முழுவதும்*
*வலம் வந்து வாழ்த்திடுமே! வாழ்க வண்ணை அண்ணா!*

உங்கள் ஆசியில் வளரும்
**பிரியாலயம் துரைஸ் குடும்பம்**
பலதுறை செயற்பாட்டாளர்

■■■

## மணிவிழா வாழ்த்துக்கள்

*அல்லிப்பூ ஆயிரம் பூக்கள் பூக்கலாம்!*
*செந்தாமரையும் ஆயிரம் பூக்கள் பூக்கலாம்!*
*ஆறு பத்தில் பலநூறு பூக்கள் உனைச்சுற்றி நிற்க*
*இருவர் நெஞ்சங்களின் நினைவுகள் நீள்நதியாக*
*வாழ்விலும் வைகறை பூக்கத் தொடங்கி*
*நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகமாக*
*வாழ்த்தி மகிழ்கின்றேன்*

மண்வாசனைக் கவிஞன்
**விக்கி நவரட்ணம்** (சுவீஸ்)
கவிஞர் - எழுத்தாளர்

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் பல வண்ணை தெய்வங்கள் உருவாகவேண்டும்.

கடல் கடந்து வாழ்ந்தாலும் நமது கலைஞர்களின் திறமைகளையும் செயற்பாடுகளையும் உலகிற்கு எடுத்துச் சொல்லும் முயற்சியில் வண்ணை தெய்வம் அவர்கள் காட்டிவரும் நல்லார்வத்தைப் பாராட்டுகின்றேன்

இந்தக் கலைஞனின் கலைப்பணி நாளும் சிறந்திட இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன். வாழ்த்து மலர்களால்.

**அன்ரன் டேவிற்**
பல்துறைக் கலைஞர் - ஒஸ்லோ நோர்வே.

■■■

## என் தங்கை சொன்ன குட்டிக்கதை!

இவருக்குக் கிடைத்த அருமையான நண்பர்களை நினைக்கும்போது நான் சின்ன வயதில் படித்த குட்டிக்கதை ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

ஒரு நரி ஒட்டகச்சிவிங்கியைப் பார்த்துக் கேட்டதாம் ''நீ ஏன் உயரமாக இருக்கின்றாய்" என்று. பதில் தெரியாத ஒட்டகச் சிவிங்கி பேந்தப் பேந்த முழுசியபடி பேசாமல் நின்றதாம். பின்பு நரியே பதிலையும் சொல்லியதாம்.

''ஒட்டகச்சிவிங்கியே! மனிதன் பசு மாட்டிற்குப் புல்லை வைக்கின்றான் அது பால் தரும் என்பதற்காக! காளை மாட்டிற்கு வைக்கோலும் புண்ணாக்கும் வைக்கின்றான். அது வயல் உழுது தரும் என்பதற்காக! குதிரைக்கு கொள்ளு வைக்கின்றான் அது வண்டி இழுக்கும் என்பதற்காக! நாய்க்குச் சோறு போடுகின்றான் அது வீட்டைக் காவல் செய்யும் என்பதற்காக! ஒட்டகச்சிவிய்கியே நீ என்ன செய்வாய்? பால் தருவாயா? வண்டி இழுப்பாயா? வயல் உழுவாயா? அல்லது வீட்டைத்தான் காவல் செய்வாயா? இப்படி மனிதனுக்கு எதற்குமே உதவாத உனக்கு மனிதன் எப்படி உணவு தருவான்?. மனிதர்கள் இன்னொரு உயிர்மீது அன்பு செலுத்துவதும், உணவு கொடுத்து பராபரிப்பதும் அவைகளால் தனக்கு பயன் கிடைக்கும் என்பதால்த்தான். மனிதனுக்கு எந்தவிதத்திலும் உதவமுடியாத உனக்கு மனிதன் உணவு தரமாட்டான் என்பதை உணர்ந்த கடவுள் மரங்களில் இருக்கின்ற இலை குழைகளை நீயே பறித்து உண்ணவேண்டும் என்பதற்காகவே உனது கழுத்தை உயரமாகப் படைத்திருக்கின்றார்" என்றது நரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கதையை நான் இங்கு ஏன் சொல்கின்றேன் என்றால் எங்கள் ஆசை அண்ணரால் அவரின் நண்பர்களுக்கு என்ன பயன் கிடைத்துவிடப் போகின்றது? என்ற கேள்விக்கு விடை தெரியாததால்த்தான்.

**சகோதரி - பாய்க்கியம் - ஜெயராணி**
பிரான்ஸ்

■■■

**வண்ணையின் பெயர் வைரமாய் மின்னும்...**

ஈழத்து நாடகத்துறையோடு வாழ்ந்து வருபவர் இவர். 35 ஆண்டுகளுக்கு முன்னர் ''சாவுக்குச் சவால்'' என்ற நாடகத்தின் மூலம் இவர் எடுத்த முயற்சியும் அதன் தாக்கமும் வண்ணை அவர்கள் ஈழத்து நாடகத்துறையில் ஒரு திருப்பம் கொண்டுவர எத்தனித்தவராக இவரை அடையாளம் காணவைத்தது.

**நடராசு - கண்ணப்பு**
அன்னை கலைக் கழகம் (லண்டன்)

■■■

**பன்முகக் கலைஞர்...**

எனக்குள் கிடந்த கவிதை எழுதும் திறனை வெளிக்கொணர்ந்தவர் என்றால் அது வண்ணை தெய்வம் அவர்கள்தான். T.R.T. என்னும் தொலைக்காட்சியில் சித்திரம் பேசுதடி என்னும் நிகழ்வுக்காக பலவாறான சித்திரங்களைத் தரும்போது அதற்கேற்ப கவிதைகளை எழுதி வாசிக்க வேண்டும். ஆரம்ப காலத்தில் கடினமாக இருந்தாலும் காலப்போக்கில் தேறிவிட்டேன் என்றே கூறலாம்.

**எழில் துஷியந்தி**
வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர். கவிஞர், நடிகர்

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குடும்ப விழாவாக எண்ணி மகிழ்வோம்.**

நண்பர் திரு வண்ணை தெய்வம் அவர்களுடன் எப்பொழுதும் சிலரேனும் சூழ்ந்து இருக்கும் தன்மை கொண்டவர். இதையே வள்ளுவர் கூறுவார்...

*உவப்பத் தலை கூடி உள்ளப் பிரிதல்*
*அனைத்தே புலவர் தொழில்*

இதன் விளக்கமே நண்வர் ஆவார்

**அலன் ஆனந்தன்**
டிரான்சி நகரசபை உறுப்பினர், பிரான்ஸ்

■■■

**ஒசை மனோவோடு சந்தித்த வேளை...**

மனோ :- 1977ல் வடக்கு கிழக்கு எங்கும் தமிழர் கூட்டணியின் மிகப் பெரும் ஆதிக்கம் இருந்தவேளை யாழ் மேயர் விஸ்வநாதனை எதிர்த்து போட்டியிடும் துணிச்சல் உங்களுக்கு எப்படி வந்தது?

வண்ணை :- ஒரு அசட்டுத் துணிச்சல்தான்! தேர்தலில் நிற்கும்போதே நான் வெல்லமாட்டேன் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்து நான் தேர்தலில் நின்றதற்குக் காரணம் அந்தக் காலகட்டத்தில் கூட்டணியினர் மக்களை மிகப்ஸீரிய முட்டாளாக்கும் விதமாக 'நீங்கள் எங்களுக்கு வாக்களியுங்கள் நாங்கள் தமிழீழத்தைப் பெற்றுத் தருகின்றோம்" என்ற பொய் மூட்டையை அவிழ்த்துவிட்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் இந்த முகமூடியைகிழிப்பதற்கு முயன்ற பலரில் நானும் ஒருவனாக அந்த் தேர்தலில் போட்டியிட்டேன் அவ்வளவுதான்.

*(மணிவிழா மலருக்காக ஒசை - மனோ அவர்கள் வண்ணையை எடுத்த செவ்வியிலிருந்து)*

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இனிய நந்தவனம்**

ஒரு நல்ல நட்பைத் தேர்ந்தெடுப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல! அதிலும் அதனைப் பாதுகாப்பது அதைவிடப் பெரியது. அப்ப்டியான நல்ல நட்பைப் பாதுகாத்து வைப்பதில் வண்ணை தெய்வம் அவர்கள் எனக்கு வியப்பானவராகத் தெரிகின்றார்.

**நந்தவனம் சந்திரசேகரன்**
ஆசிரியர் இனிய நந்தவனம்

■■■

**நானும் வண்ணையும்...**

யாழ்ப்பாணத்தில் நான் இசைக்குழுக்களில் பணியாற்றியபோது இவர் மேடைகளில் அசத்தியபோது... ஒருவருக்கொருவர் ரசிகர்களாக இருந்தோம்.

''பூமியை விலத்திவிட்டு நதி நகரமுடியாது" என்பதைப்போல... தான் பிறந்த மண்ணைவிட்டு விலகி நிற்காமல் தான் பிறந்த மண்ணின் பெயரில் ஒரு பாதியும், தனது பெயரில் ஒரு பாதியுமாக வண்ணை தெய்வம் என்னும் பெயரோடு இவரது நாடக விளம்பரங்களைப் பார்த்து நான் வியந்து நிற்பேன்.

**எம்.குருநாதன்**
(இயக்குனர் இளையநிலா இசைக்குழு)

■■■

**கலைத்தாயின் ஆசீர்வாதமும் அரவணைப்பும் நிறைவாய்க் கிடைக்கட்டும்.**

''நாங்கள் ஒரு படம் எடுத்திருக்கின்றோம் நீங்கள் ஒருமுறை பார்க்கவேண்டும்" அழைப்பு விடுத்தவர் பிரியாலயம் துரைஸ் அவர்கள். படம் பார்க்கச் சென்ற வேளை அந்த இடத்தில் சந்தித்த கலைஞர்களில் எனக்கு நன்கு தெரிந்தவர்கள் அறிமுகமானவர்களில் ஒருவராக இந்தக் கலைஞரைப் பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தேசத்தில் சந்தித்தபோது எப்படியோ அப்படியே இவரைப் பாரிசில் பார்த்ததில் எனக்கு மகிழ்ச்சி. அந்த நாட்களில் நாங்கள் முதலில் வந்தவர்கள் என்ற தகுதிநிலையை பாரிஸ் வந்தவர்கள் பேணி வந்ததும் அதில் பெற்ற அனுபவங்களுக்குமிடையில் இந்தக் கலைஞரின் பேச்சும் வரவேற்பும் என்னை மகிழ்ச்சிப் படுத்தியது. இன்றும் அது என் மனதில் பதிவாகியிருக்கின்றது என்றால் அந்தச் சந்திப்பின் மகத்துவத்தை உணர்ந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன்

**எஸ்.கே.ராஜன்**
ஒலிபரப்பாளர், மேடை, வானொலி, தொலைக்காட்சி

■■■

## GIFT International

சமூக அக்கறையோடு கையில் பேனாவும், உயர்வான நோக்கமும் கொண்டு வாழ்பவர் வண்ணை!

எறும்புகளுக்கு சுறுசுறுப்புக் கற்றுத்தருபவர் வண்ணை!

எனது "சொந்தமண்" அரங்க நாடகத்தில் தந்தையின் பாததிரமேற்று பார்வையாளர்களை உருகவைத்தவர் வண்ணை!

பத்துக்கும் மேற்பட்ட எனது வானொலி நாடகங்களில் தனது வண்ணக் குரல் வளத்தால் நவரசங்களைக் கொட்டியவர் வண்ணை

**எம்.அரியநாயகம்**
நாடகாசிரியர் - இயக்குனர்

■■■

## அகவை அறுபதை ஆழும் கவிஞன்

*வண்ணை மண்தனிலே வனப்போடு பிறந்து*
*வளமோடு வாழ்வை பிரான்ஸில் வாழ்ந்து*
*வண்ணக் கவிஞன் என பெருமைதனைச் சேர்த்து*
*கலைஞர்கள் மத்தியிலே கவித்துவமாய்த் திகழ்ந்து*
*கதைகள் பல எழுதிஞ் கவிதைகள் நூறு வடித்து*
*கலைஞர்கள் கட்டுரைத் தொகுதியைக் கரம் தந்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தொலைக்காட்சி நிகழ்வுகளைத் தொகையதாய்த் தந்து*
*வானொலி நிகழ்ச்சிகளை வகை வகையாய் தந்த*
*எங்கள் இனிய கவிஞனவர்*
*அகவை அறுபதை ஆட்சி செய்கின்றார்*

இலக்கிய நேசத்துடன்
**தமிழ்ப்பிரியா இளங்கோவன்**
கவிஞர் - எழுத்தாளர்

■■■

## கலைஞர் மீது காதல் கொண்டவர்

கலை இலக்கிய நண்பர்கள்மீது இவருக்கு தீராத காதல்! அவர்களைப் பாராட்டவேண்டிய நேரத்தில் பாராட்டுவதும்! கௌரவிக்க வேண்டிய நேரத்தில் கௌரவிப்பதும்! அவர்கள் பற்றிய விபரங்களைச் சேகரித்து ஆவணப் படுத்துவதும்! பத்திரிகைகளில் எழுதுவது என கலைஞர்கள்மீது அப்படியானதொரு மரியாதை கொண்டவர்.

அன்புடன்
**''ஈழநிலா" தில்லைச்சிவம்**
இயக்குனர் பாரிஸ் ஈழநிலா இசைக்குழு

■■■

## நெஞ்சக் கவிதனை திறந்து பேசும் வஞ்சமில்லா வண்ணை...

*இளவேனிற் காலத்துப் பூக்கள்போல..*
*இவன் கவிதை வரிகள் உயர்சித்தாந்த*
*வளமான சிந்தனை எழுத்துக்கள் வற்றாத நதியாகட்டும்!*
*சமூக விடுதலைக் களங்கள் கண்டவன்!*
*வண்ணை தந்த கலைஞன்! கவிஞன்! நல்ல மனிதர்!*

**பல்கலை வேந்தன் வி.ரி.இளங்கோவன்**

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூறு பத்தாண்டு காலம் வாழ்க**

*வாழும் தமிழ் மகளும் வளர்கின்ற கலைஞர்களும்*
*சூழும் மன்றத்துச் சுடரொளியே வண்ணையண்ணா!*
*நீளப் பெருங்கடலும் நிலம் வானும் உள்ள மட்டும் - தமிழ்*
*ஆளப்பிறந்தவுந்தன் அன்பிதயம் வாழியவே!*

**லினோதினி சண்முகநாதன்**
கவிஞர் - எழுத்தாளர் - அறிவிப்பாளர்

■■■

**அண்ணனுக்கு மணிவிழா! தம்பிகளுக்கு குதூகல விழா!**

*தெய்வங்கள் பக்தர்களை மறப்பதில்லை!*
*வண்ணை தெய்வம்*
*எழுத்தாளர் கவிஞர்களை மறப்பதில்லை*
*முன்னூறு ஈழத்துக் கலைஞர்களைப் பதிந்து*
*ஆயிரத்தில் ஒருவனாக எங்கள்*
*இதயங்களில் பதிவானவர் நீங்கள்*

அன்புடன்
**வீ.பாஸ்க்கரன்**
தமிழ்ச்சோலை ஆசிரியர்

■■■

**வண்ணையை வாழ்த்தும் அரும் வாய்ப்பு...**

உன் பண்ணையில் விளைந்த தமிழ்ப் பயிர் அறுவடையால்
பயன் அடைந்த பலரில் இவனும் ஒருவன் என்பது மிகையல்ல!

திசை மாறிய இனம் காக்க வகை வகையாய் உன் படையல்
சொரியட்டும் புலவானில்
வாழ்த்தும் வாய்ப்பு எனக்கு வாய்த்த வரப்பிரசாதம்.

**தம்பி ரி.தயாநிதி**
நாடக ஆசிரியர் - இயக்குனர்

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீடூழி வாழ்க அண்ணா...

பிரான்ஸில் பிரியாலயம் துரைஸ் அவர்களின் இயக்கத்தில் உருவான "நீதியின் சோதனை" திரைப்படத்தில் தாளவாத்தியக் கலைஞனாக பங்குபற்ற எனக்கோர் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்படத்தில் கிறிஸ்த்தவ மதகுருவாக இவர் நடித்திருந்தார். இவரின் நடிப்பைப் பார்த்து நான் வியந்து போனேன்! காரணம் உண்மையான ஒரு மதகுருவிற்குரிய அம்சங்களோடு நடித்திருந்தார்

**எம்.எஸ். நாதன்**
பாரிஸ் "சப்தஸ்வரங்கள்" இசைக்குழு இயக்குனர், பாடகர், நடிகர்

■■■

## வாழியவே பல்லாண்டு...

*வண்ணை... இவரொரு தமிழ்ப் பண்ணை!*
*என் நண்பர் இவரென்பதில் எனக்குள் பேராண்மை!*
*ஈழத்துப் புழுதியில்க்கூட இனிய தமிழ் விதைத்தவர்!*
*ஈபிள் நகர் பாரிஸில் தன் எழுத்தால் அதை வளர்த்தவர்...*

**கவிஞர் பாரிஸ் பார்த்தசாரதி**
தலைவர், பிரான்ஸ் தமிழ்ப் பேரவை

■■■

***(இங்கு பதியப்பட்டிருக்கும் வாழ்த்துக்கள் அனைத்தும் வண்ணை தெய்வம் அவர்களின் மணிவிழா மலரில் இருந்து தொகுக்கப்பட்டவை)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை*

திரு. வண்ணை தெய்வத்துடன் எங்களின் அறிமுகமும் நட்பும் இருபதாண்டுகளாகத் தொடர்கிறது. பார்ப்பதற்குத் திரைப்பட நடிகரைப் போன்ற தோற்றம் கொண்ட இவருடைய ஆளுமை, பாராட்டிற்குரியது. 'காலங்கள் போற்றும் 300 ஈழத்துக் கலைஞர்கள்' எனும் இவர் எழுதி நாங்கள் வெளியிட்ட நூல் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. இப்போது 'காலங்கள் போற்றும் 500 ஈழத்துக் கலைஞர்கள்' நூலை எழுதிக் கொண்டிருக்கிறார்.

நவீன உலகத்தில் எந்த ஒரு மனிதரும் தான் பிறந்த மண்ணிலேயே நிரந்தரமாக வாழ்ந்து விடுவதில்லை. இடப்பெயர்ச்சி பலவாறு நிகழ்ந்து விடுகிறது. வாழ்க்கைக்கான பொருளீட்டுதலாகட்டும்; சொந்த நாட்டுப் போர் நெருக்கடியாகட்டும்; பெற்று வளர்த்த தாய் மண்ணிலிருந்து வேரோடு பிடுங்கப்பட்டு வேறு வேறு நிலப்பகுதிகளை நோக்கி ஓடவேண்டியிருக்கிறது.

உணர்வுகளால் பின்னப்பட்ட சமூகம் தமிழ்ச் சமூகம். உறவு முறை, சுற்று வட்டாரம் போன்றவை தமிழனின் வாழ்வியலோடு ஒன்றிவிட்டவை. அத்தகைய ஒரு தமிழர்தான் ஈழ தேசத்தில் யாழ்ப்பாணம் மண்ணில் விளைந்த வண்ணை தெய்வம் அவர்கள்.

இந்நூலாசிரியரான வண்ணை தெய்வம், யாழ் மண்ணை விட்டுப் பிரிந்து பிரான்சில் வாழ நேர்ந்து சுமார் நாற்பதாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. புலம் பெயர்ந்து அய்ரோப்பியக் கண்டத்து அவசர உலகத்தில், நிர்ணயிக்கப்பட்ட வாழ்க்கை ஒழுங்குகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்குமாடெனச் சிக்கி சொந்த மண்ணின் இழப்புகளை தன் மூளைச் சுரப்பிகளுக்குள்ளே எடுத்துப் பதியம் போடுகிறார்.

இந்த நூலை நாம் வாசிக்கையில், அவரது கரம்கோத்து யாழ் மண்ணிலும், அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலும் அவருடன் தோளோடு தோள் சேர்த்துப் பேசிச்செல்வது மாதிரி உள்ளது. மேலும், இன்றைய கூகுள் உலகு தாக்காத இயல்பான நாட்டுப்புறப் பண்பாடுகள், மரபு மாறா ஊர் வடிவங்கள், இயற்கை எழில், வெள்ளந்தியான மனிதர்கள், திருவிழாக்கள், கோவில்கள், புரவலர்கள் மற்றும் யாழ் மண்ணின் புழங்கு வெளிகள் என ஒவ்வொரு அங்குலமாய் 'டைம்' மிஷினில் ஏற்றிக் கொண்டு நம்மை அழைத்துச் செல்கிறார் ஆசிரியர்.

இது ஒரு சொந்த மண்ணை நேசிக்கிற ஒருவரின் ஈரம் கசிகிற பதிவு... தன்னைப் பெற்றெடுத்த யாழ் மண்ணுக்கு அவர் வழங்கும் அறிவுக் கவுரவம் இந்த நூல். இன்னும் சொல்லப்போனால் இது ஒரு அற்புத ஆவணம். 'மறக்கவியலா யாழப்பாணத்து மண்ணின் நினைவுகள்' என்ற இந்நூலை எங்களது மணிமேகலைப் பிரசுரம் வாயிலாக பிரசுரம் செய்வதில் மிகப் பெருமிதம் கொள்கிறோம். சற்றே உடல்நலக் குறைவு ஏற்பட்டபோதும் உற்சாகம் குறையாத இவர் செயல்பாடு, இன்னும் சாதனைகளைப் படைக்க வழிவகுக்கும். இவருக்கு நம் வாழத்துகள்.

**- ரவி தமிழ்வாணன்,**
பதிப்பாளர்,
மணிமேகலைப் பிரசுரம்.

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே

## மண்வாசனை:- பகுதி - 1 (ஊர் மணம்)


01. வல்வெட்டித்துறை 1

02. நயினா தீவு 9

03. குரும்பசிட்டி 15

04. மீசாலை 21

05. கோப்பாய் - 1 25

06. கோப்பாய் - 2 30

07. குப்பிளான் 36

08. திருநெல்வேலி 42

09. சங்கானை 47

10. சுன்னாகம் 54

11. மட்டுவில் 59

12. அச்சுவேலி 66

13. மானிப்பாய் 72

14. அளவெட்டி 78

15. மாதகல் 86

16. நல்லூர் 91

17. நுணாவில் 98

18. பூநகரி 102

19. அரியாலை 107


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. பரந்தன் 115
21. உருத்திரபுரம் 120
22. முள்ளியவளை 124
23. எழுவைதீவு 130
24. தெல்லிப்பளை 135
25. காலி 139
26. நுவரெலியா 145
27. மட்டக்களப்பு 149
28. வேலணை 154
29. புங்குடுதீவு 161
30. சாவகச்சேரி 172
31. கொழும்புத்துறை 176
32. நெடுந்தீவு 182


**மண்வாசனை:- பகுதி - 2 (ஆலய தரிசனங்கள்)**


01. யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் குடியிருக்கும் பரமேஸ்வரன் 187
02. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் 194
03. வல்லிபுரம் ஸ்ரீ ஆழ்வார் ஆலயம் 202
04. வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம் 208
05. மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் 215
06. கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் 220
07. சிலாபம் முன்னேஸ்வரம் 228
08. அவிசாவளை சிவன் கோவில் 234


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கொழும்பு கொச்சிக்கடை
பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் 239

10. செல்வச் சன்னதி ஆலயம் 245

11. இடைக்காடு காசி விஸ்வநாதர் ஆலயம் 254

12. மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரம் ஆலயம் 258

13. மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம் 262

14. வட்டுக்கோட்டை வீரபத்திரர் ஆலயம் 269


## மண்வாசனை:- பகுதி - 3 (ஊர் மணம்)


01. நாய் எங்கள் தோழன் 275

02. நன்றியின் மறு பெயர் உப்பு 283

03. மாம்பழங்களின் இளவரசி
யாழ்ப்பாணத்துக் கறுத்தக் கொழும்பான் 287

04. மரங்கள் 294

கறி முருங்கை 297

05. வாழையடி வாழை 309

06. ஒற்றைக்காலில் உச்சித் தவம் செய்யும் மரம் 316

07. நாவல் மரம் 320

08. தொலைந்து போன சந்தோஷங்கள் 324

09. கூத்து... நாடகம்... சினிமா... 327

10. யாழ்ப்பாணத்துப் (பெருங்)குடி மக்கள் 335

11. சொக்கன் கடையும் மொக்கன் கடையும் 345

12. காகம் 351

13. பழஞ்சோறு 356


■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் 1

## ஊர் மணம்

1

## வல்வெட்டித் துறை

நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமமும், நகரமும் தங்களுக்கென தனியானதொரு பாரம்பரியத்தை, கலாச்சாரத்தை, பண்பாடுகளை, அரசியல் வரலாறுகளை தாங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் வல்வெட்டித்துறை என்னும் நகரத்தின் வரலாற்றை நாம் தேடியபோது பெரும் புதையலே அந்த நகரத்தினுள் அடங்கியிருந்ததை நம்மால் அறிய முடிந்தது!

வல்வெட்டித்துறை யாழ்ப்பாணத்தில் இருந்து வடக்கே பதினாறு மைல் தூரத்திலும், காங்கேசன்துறையிலிருந்து கிழக்கே ஒன்பது மைல் தூரத்திலும், பருத்தித்துறையிலிருந்து மேற்கே ஐந்து மைல் தூரத்திலும், தென் இந்தியாவில் இருந்து தெற்கே கடல்மார்க்கமாக முப்பது மைல் தூரத்திலுமான ஒரு துறைமுகப் பட்டினமாகும். 1947ம் ஆண்டு முதல் பட்டினசபையாக இயங்கி வந்த ஆதி வல்வை இன்று நகரசபையாக இயங்குகின்றது.

“கோவில் இல்லாத ஊரில் குடியிருக்காதே” என தமிழ் மூதாட்டியான அவ்வைப் பாட்டியின் முதுமொழி ஒன்று உண்டு. வல்வெட்டித்துறையில் திரும்பிய பக்கமெல்லாம் ஆலயங்களைக் காணலாம்! அவ்வளவு கடவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி நிறைந்தவர்கள் வல்வை மக்கள். வல்வையில் புகழ் பெற்ற ஆலயங்களாக ''வல்வை வைத்திஸ்வரன் கோவில்'' ''வல்வை முத்துமாரி அம்மன் ஆலயம்'' ''நெடியகாடு சிற்றம்பலம் பிள்ளையார் கோவில்'' ''பொலிகண்டி கந்தவனக்கடவை கந்தசாமி கோவில்'' ''வேவில் வீரகத்தி விக்கினேஸ்வரர் ஆலயம்'' ''தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்'' இவைகளுடன் ''புனித செபஸ்தியார் றோமன் கத்தோலிக்க தேவாலயமும்'' பிரசித்தி பெற்ற ஆலயங்களாகும். இதில் செல்வச் சந்நிதி ஆலயத்தின் அருகே ஓடிக்கொண்டிருக்கின்ற தொண்டமானாறு முன்பு ''வல்லி நதி'' என்னும் பெயருடனேயே அழைக்கப்பட்டதாகவும் இந்நதியின் தொடுவாயிலை தொண்டமான் என்னும் அரசன் வெட்டி கடலுடன் சங்கமிக்க விட்டதால் அதற்கு தொண்டமானாறு எனப் பெயர் வந்ததாகவும் ஒரு வரலாற்றுப் பதிவும் உண்டு.

இலங்கை என்றொரு நாடு இருப்பதை அறியாதிருந்த எத்தனையோ உலக நாடுகள் இருந்த காலம் ஒரு காலத்தில் இருந்ததுண்டு! தமிழ் மக்களின் உரிமைகளை மீட்டெடுக்கவென விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் போராட்டமாக வெடிக்கத் தொடங்கிய பொழுதுதான் இலங்கையை உலகம் திரும்பிப்பார்க்கத் தொடங்கியது! அப்பேர்ப்பட்ட விடுதலை இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை - பிரபாகரன் அவர்கள் பிறந்த மண் என்னும் சிறப்பை வல்வெட்டித்துறை பெறுகின்றது.

பிரபாகரனைப்போலவே பிற போராளிகளான குட்டிமணி, தங்கத்துரை, நடேசதாசன் போன்ற விடுதலைப்போராளிகளோடு சதாசிவம் கிருஸ்ணகுமார் என்ற கிட்டுவைத் தந்த மண்ணும் வல்வெட்டித்துறைதான் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய - ஸ்ரீலங்கா அரசுகளின் கூட்டுச் சதியால் பலாலியில் சைனட் உட்கொண்டு வீரச்சாவை அணைத்துக்கொண்ட குமரப்பா, புலேந்திரன், அப்துல்லா, ரகு, நளன், பழனி, மிரேஸ், கரன், அன்பழகன், தவக்குமார், ரெஜீனோல்ட், ஆனந்தகுமார் ஆகிய பன்னிரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகிகளுக்கும் வல்வெட்டித்துறையில் நினைவாலயம் அமைக்கப்பட்டு அவ் வீதிக்கு மாவீரர் வீதி எனவும் பெயரிடப்பட்டது. இப்பொழுது அந்த நினைவாலயம் ஸ்ரீலங்கா இராணுவத்தால் அழிக்கப்பட்டுவிட்டது. இதே போலவே தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களது இல்லமும் இராணுவத்தால் அழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கப்பலோட்டிய தமிழன் என்றால் அது தமிழ்நாட்டைச் சேர்ந்த சுதந்திரப் போராட்டத் தியாகி வ.உ.சிதம்பரப்பிள்ளை தான் என தமிழ்ச் சினிமா நமக்குச் சொல்லி வைத்திருக்கின்றது. ஆனால் சிதம்பரம்பிள்ளை அவர்கள் பணம் கொடுத்து கப்பல் வாங்கி கப்பல் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரே வல்வெட்டித்துறையில் இருந்து திரு.கே. தம்பிப்பிள்ளை என்னும் கப்பலோட்டியின் தலைமையில் 'அன்னபூரணி" என்ற பாய்மரக் கப்பலை வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்காவிற்கு செலுத்திச் சென்று கப்பலோட்டிய தமிழர்கள் என்னும் பெருமையைப் பெற்றவர்கள் வல்வெட்டித்துறைத் தமிழர்கள்! 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் ஊர்திகள் பவனியில் இந்த அன்னபூரணி கப்பலின் மாதிரி உருவொன்றை அமைத்து வல்வைத் தமிழர்களின் சிறப்பை உலகறியச் செய்திருந்தார்கள்!

கப்பல் கட்டும் தொழிலில் கரையோரப் பட்டினங்களான பருத்தித் துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, ஊர்காவற்துறை, மாதகல் ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்கள் பிரபல்யமானவர்களாக இருந்தாலும் வல்வெட்டித்துறையிலேயே அதிகமான கப்பல் முதலாளிகளும், திறமையான தண்டல்களும் (கப்ரன்கள்) இருந்திருக்கின்றார்கள். வல்வெட்டித்துறையில் இருந்து மட்டும் ஐம்பதிற்கும் மேற்பட்ட கப்பல்கள் கட்டப்பட்டிருப்பதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

இரண்டு பெரும் நீச்சல்வீரர்களான திரு. மு.நவரத்தினசாமி, ஆழிக்குமரன் ஆனந்தன் ஆகிய இருவரையும் நமக்குத் தந்த பெருமையும் வல்வெட்டித்துறைக்கே உண்டு! அமரர் திரு.நவரத்தினசாமி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1954ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் இருந்து தென் இந்தியாவின் கோடியக்கரையிலான 32 மைல் நீளமான பாக்கு நீரிணையை 26 மணி 30 நிமிடத்தில் முதல் முதலாக நீந்திக் கடந்து சாதனை புரிந்தவராவார். அப்பொழுது அவருக்கு வயது 45 ஆகும்.

1945ல் வல்வெட்டித்துறையில் பிறந்த திரு.ஆழிக்குமரன் ஆனந்தன் அவர்கள் ஒரு வழக்கறிஞர் ஆவார்! ஆனால் சட்டத்துறையைவிட சமூகத் துறையிலேயே அவரது நாட்டம் அதிகமாக இருந்தது. நவரத்தினசாமி நீந்திக் கடந்த அதே பாக் நீரிணையை 1963ம் ஆண்டு இவர் நீந்திக் கடந்து சாதனை புரிந்தபோது ஆனந்தனுக்கு வயது 18 ஆகும்!. மேலும் இவர் 1979ம் ஆண்டு கொழும்பில் 187 மணிநேரம் இடைவிடாது 1487 மைல்கள் சைக்கிள் ஓட்டி உலகசாதனை புரிந்து கின்னஸ் புத்தகத்தில் தனது பெயரைப் பதிவு செய்துள்ளார்! இவைதவிர 136 மணிநேரம் போல் பஞ்சிங் செய்து உலக சாதனை நிகழ்த்தியமை! இரண்டு நிமிடங்களில் 165 தடவைகள் இருந்து எழும்பி உலகசாதனை நிகழ்த்தியமை, 33 மணிநேரம் ஒற்றைக்காலில் நின்று உலக சாதனை நிகழ்த்தியமையுடன், சென்னை அண்ணா நீச்சல் தடாகத்தில் தொடர்ந்து 80 மணிநேரம் தவளை போல வாழ்ந்து தமிழக மண்ணிலும் சாதனை புரிந்துள்ளார். இந்த அனைத்து நிகழ்வுகளும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றவையும் குறிப்பிடத் தக்கவையாகும்.

யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்ற சில விளையாட்டுக் கழகங்களில் வல்வெட்டித்துறையில் உள்ள உதயசூரியன் விளையாட்டுக்கழகம், வல்வை றெயின் போஸ் விளையாட்டுக் கழகம், வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவை முக்கியமானவை இக் கழகங்கள் வட மாகாண ரீதியாக கலை, விளையாட்டு, நாடகப் போட்டிகளை நடாத்தி மதிப்பு மிக்க பரிசில்களை வழங்கி கலைஞர்களை ஊக்குவித்து வந்தமை குறிப்படத்தக்கமையாகும்.

வல்வெட்டித்துறை பருத்தித்துறை பாராளுமன்றத் தொகுதிக் குள்ளேயே அடங்குகின்றது. 1960ம் ஆண்டுவரை உடுப்பிடடித் தொகுதியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறைத் தொகுதியுடனேயே இணைந்திருந்தது. இது மிகவும் பெரிய தொகுதியாக இருந்த காரணத்தால் 1960ல் உடுப்பிட்டி என்ற தனியானதொரு தொகுதி உருவாக்கப்பட்டது. பருத்தித்துறை தொகுதியில் ஆரம்பத்தில் திரு.சி.பாலசிங்கம் என்பவரே பாராளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். (ஆண்டு தெரியவில்லை) அதன் பின்னர் அமரர் திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் தமிழ்க் காங்கிஸ் கட்சியின் சார்பில் வெற்றி பெற்று இந்தத் தொகுதியின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருந்தார். 1956ல் நடந்த தேர்தலில் இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சியைச் சேர்ந்த தோழர் பொன் - கந்தையா அவர்கள் இத் தொகுதியில் வெற்றி பெற்றிருந்தார். தொடர்ந்து 1960ல் இருந்து1983ம் ஆண்டுவரை இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாகவும் திரு.க.துரைரத்தினம் அவர்களே பருத்தித்துறைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கின்றார். பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பாக திரு.சிவாஜிலிங்கம் அவர்களும் இதே தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்திருக்கின்றார்கள்.

இதில் இன்னொரு சிறப்பு என்னவென்றால் வடபகுதியில் இருந்து பாராளுமன்றம் சென்ற ஒரேயொரு கம்யுனிஸ்ற் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமை தோழர் பொன் -கந்தையாவிற்கு மட்டுமே உண்டு. இதே காலத்தில் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த வல்வைப் பிரமுகர்களையும் நாம் மறந்துவிட முடியாது. அவர்களில் முக்கியமானவர்கள் திரு.எஸ்.எஸ்.சுந்தரலிங்கம், திரு.கு.மோதிலால் நேரு, திரு.ம.ஞானச்சந்திரன், திரு.பொ.கனகராசா போன்றவர்களாவார்கள்.

தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகிய இடமும் வல்வெட்டித்துறைதான்! ஈழத் தமிழர்கள் மத்தியில் தமிழ் என்னும் வார்த்தையை மையமாகக் கொண்டு பல அரசியல் கட்சிகள் இருந்தன. ஆரம்பத்தில் தமிழ் இளைஞர் காங்கிரஸ், அதன் பின்னர் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக் கட்சி, அடங்காத் தமிழன் திரு.செ.சுந்தரலிங்கத்தின் ஈழத்தமிழர் ஒற்றுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னணி, காவலூர் திரு.க.நவரத்தினம் அவர்களின் தமிழர் சுயாட்சிக் கழகம், மலைநாட்டுத் தமிழருக்காக இலங்கை இந்திய காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இருந்தன. 1956ல் தனிச் சிங்களச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட வேளையில் இந்தக் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் அன்று பிரதம நீதியரசராகவும், இடைக்கால மகாதேசாதிபதியாகவும் பதவி வகித்த திரு.செ. நாகலிங்கம் அவர்கள் பெரும் முயற்சி எடுத்தார். ஆனால் அவரது முயற்சி அன்று பலனளிக்கவில்லை.

1972ம் ஆண்டில் தமிழர்களின் மேலும் சில அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் புதிய குடியரசு யாப்பு அமுலுக்கு வர இருந்த வேளையில் முன்னணித் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பதற்காக 07-02-1971 அன்று வல்வெட்டித்துறையில் உள்ள பிரபல வர்த்தகர் திரு.செல்லத்துரை - தங்கவடிவேல் அவர்களது இல்லத்தில் ஒரு ஒருங்கிணைப்புக் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது அந்தக் கூட்டத்தில் திரு.எஸ்ஜே.வி.செல்வநாயகம், திரு.அ.அமிர்தலிங்கம், திரு.மு.சிவ சிதம்பரம், அடங்காத் தமிழர் திரு.செ.சுந்தரலிங்கம், சாவகச்சேரி திரு.வ. நவரத்தினம், யாழ் மேயர் சி.நாகராசா உட்பட பல பிரபலமான அரசியல் தலைவர்கள் பலர் கலந்திருந்தார்கள். அன்றுதான் தமிழர் கூட்டணி உருவான நாள். (பின்னர்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றம் பெற்றது) இந்த ஒற்றுமை முயற்சிக்கு வித்திட்டவர்கள் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு.ச.ஞானமூர்த்தி, திரு.அரு.சபாரத்தினம், திரு.வேற்பிள்ளை ஆகியோராகும்.

அதன் பின்னர்1977ம் அண்டு நடைபெற்ற பொதுத் தொ்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி 18 தொகுதிகளில் மாபெரும் வெற்றியடைந்ததும் அதன் முதலாவது வெற்றிவிழாக் கூட்டம் 30-07-1977ல் திரு.ஞானமூர்த்தி தலைமையில் வல்வெட்டித்துறை தேரடி மைதானத்திலேயே நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய வரலாற்றுப் பதிவுகளோடு வல்வையில் பிறந்த கல்விமான்களைப்பற்றி இனிப் பார்ப்போம். திரு. அரு.சபாரத்தினம் அவர்களின் புதல்வர் திரு அரு.சபா.ராஜேந்திரன் அவர்கள் வல்வை நகருக்குப் புகழ் சேர்த்வர்களில் ஒருவராவார். தனது ஆரம்பக் கல்வியை வல்வை அமெரிக்கன் மிசன் கல்லூரியில் ஆரம்பித்து பருத்தித்துறை காட்லிக் கல்லூரி, பேராதனை பல்கலைக் கழகம், லண்டன் கேம்பிரிச் பல்கலை கழகமும் வரை சென்று கல்விகற்று சிங்கப்பூர், சென்னை போன்ற நகரங்களில் பேராசிரியராகக் கடமையாற்றியிருக்கின்றார்.

வல்வையில் பிறந்த புகழ்பெற்ற கல்விமான்களில் திரு பொன் ஸ்ரீஸ்க்காந்தராஜாவும் ஒருவராவார். இவர் தனது பட்டப் படிப்புக்களை முடித்த பின்னர் 1931ம் ஆண்டு சட்டதரணியாக பதவியேற்றவர் பின்னர் படிப்படியாக முன்னேறி 1938ல் நீதிபதியாகவும், பின்னர் சுப்பிரிம்கோர்ட் நீதிபதியாகவும் பதவி வகித்தவராவார். இதேபோல வல்வையில் பிறந்த திரு.பாலவடிவேல் அவர்கள் 1959ல் உயர் நீதிமன்ற சட்டதரணியாகி 1990ல் உயர் நீதிமன்ற நீதிபதியாகியவர். மேலும் சட்டதரணி மோதிலால் நேரு உட்பட பதிநான்கு ஆண் சட்டதரணிகளும், நான்கு பெண் சட்டதரணிகளும் வல்வை மண்ணுக்குரியவர்களாக இருந்திருக்கின்றார்கள்.

இலக்கியவாதிகளைப் பார்க்கும்போது பலகாலமாக 'தமிழ்த் தொண்டன்' என்னும் பத்திரிகையை நடாத்திவந்த வித்துவான் வ.மு.கனகசுந்தரம், "வல்வெட்டித்துறை ஊரின்னிசை" என்னும் இலக்கிய நூலைத் தந்த செ.வைத்திலிங்கம்பிள்ளை, மற்றும் பண்டிதர் சங்கர வைத்திலிங்கம் அவர்களும் வல்வையின் புதல்வர்களே.

பத்திரிகையாளர் ஈ.கே..ராஜகோபால் அவர்களைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது! 'விவேகி' என்னும் மாத சஞ்சிகையின் ஆசிரியராக பத்திரிகைத் துறைக்குள் நுழைந்து, பின்னர் பாமா - ராஜகோபால் என்னும் பெயருடன் ஈழநாடு ஆசிரியர் பீடத்தை அலங்கரித்து, தொடர்ந்து கொழும்பு ஏரிக்கரை பத்திரிகை நிறுவனமான தினகரன் பத்திரிகையில் திரு. சிவகுருநாதன் அவர்களுக்குக் கீழ் துணை ஆசிரியராகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றியவர். தற்பொழுது லண்டனில் வாழ்ந்துவரும் இவர் அங்கும் புதினம் என்னும் பத்திரிகையை நடாத்தி வருகின்றார். இவர் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றிய காலத்தில் தொடராக எழுதிய 'ஆழிக்குமரன்' மற்றும் 'கப்பலோட்டிய தமிழர்கள்' ஆகிய இரு வரலாற்றுப் பதிவுகளையும் நூலாக வெளியிட்டு தான் பிறந்த மண்ணின் பாசத்தை வெளிப்படுத்திய துடன், வல்வெட்டித்துறையின் புகழையும் உலகறியச் செய்துள்ளார்.

இதுபோல இன்னும் பல வரலாற்றுப் பதிவுகளும், சிறப்புக்களும் வல்வை மண்ணுக்கு உண்டு. நான் தேடிய இவ் வரலாற்றுச் சிறப்புகளில் மிக முக்கியமாக தெரிந்துகொண்டது வல்வை மக்களின் ஒற்றுமை பற்றியது! இந்த ஒற்றுமை மேலும் வலுவடைந்து தமிழ் இனத்திற்குப் பெருமை சேர்க்கவேண்டும். தமிழர் பெருமை உலகெங்கும் பரவவேண்டும்.

ೞ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# நயினா தீவு

நாற்புறமும் கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவின் வடபாகத்தில் குட்டிக் குட்டித் தீவுகளாக ஏழு தீவுகள் இருக்கின்றன. இந்த சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்குவது நயினாதீவாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப்பெருமையையும் கொண்ட இக் குட்டித்தீவைப்பற்றி பலரும் அறிந்து வைத்திருப்பது அங்குள்ள நாகபூசணி அம்பாள் ஆலயத்தையும், அருகில் இருக்கும் பௌத்த விகாரையைப் பற்றியும்தான். ஆனால் எட்டு வட்டாரங்களைக் கொண்ட இந்தக் குட்டித் தீவில் எட்டாம் வட்டாரத்தில் இஸ்லாமிய மக்களின் வழிபாட்டுத் தலமான மசூதியும், ஐந்தாம் வட்டாரத்தில் கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டுத்தலமான சர்ச்சும் இருப்பது இந்தத் தீவிற்குரிய சிறப்பாகும்

தீவுப்பகுதி மக்களைத் தவிர பிற ஊர்களில் வாழ்கின்ற மக்களுக்கெல்லாம் நயினாதீவு என்றால் நாகபூசணி அம்மன் ஆலயம் மட்டும்தான் இந்து ஆலயம் என்ற எண்ணம் இருக்கின்றது. ஆனால் நயினாதீவின் தென் மூலையில் கத்தியாக்குடா பிடாரி அம்மன் கோவில், தீர்த்தக்கேணி காட்டுக் கந்தசாமி கோவில், (இங்குதான் நல்ல தண்ணீர்க் கிணறு இருக்கின்றது) செம்மணத்தம்புலம் பிள்ளையார் கோவில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்குளம் வீரகத்தி விநாயகர் கோவில், அம்மன் கோவிலென பல சிறிய சிறிய காவல்தெய்வங்களெல்லாம் இருக்கின்றன.

சுமார் நூறு வருடங்களுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் நயினாதீவு செல்லவேண்டுமானால் யாழ்ப்பாணம் பண்ணையில் இருந்து முதலில் ஒரு வள்ளம் மூலமாக வங்களாவடி சென்று பின்பு வாகனம் மூலமாக வேலணையைக் கடந்து பின்பு புங்குடுதீவிலும் ஒரு பெரும் கடற்பயணம் செய்து பின்பும் வாகனம் மூலமாக புங்குடுதீவின் எல்லைவரை வந்து அங்கிருந்து மீண்டும் வள்ளங்கள் மூலமாகத்தான் நயினாதீவிற்குச் செல்லவேண்டும்.

இப்படியாக மூன்று தடவைகள் கடற்பயணம் செய்துதான் நயினாதீவை அடைய முடிந்தது அன்றைய நாட்களில். அதன் பின்னர் தற்பொழுது சுமார் அறுபது அறுபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் புங்குடுதீவு பெருங்கடலை ஊடறுத்து பெரு வீதியும், சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பண்ணைக் கடலில் பாலம் கட்டப்பட்டு கடலூடாக வீதியும் அமைக்கப்ட்டதால் தற்பொழுது புங்குடுதீவு துறைமுகம்வரை வாகனங்களிலேயே செல்லக்கூடியதாக இருக்கின்றது. புங்குடுதீவில் இருந்து நயினாதீவு செல்வதற்காக கழுதைப்பிட்டி, (இறுப்பிட்டி) குறிகட்டுவான் என இரண்டு துறைமுகங்கள் புங்குடுதீவில் இருக்கின்றன. இதேபோல நயினாதீவிலும் இரண்டு துறைமுகங்கள் இருக்கின்றன கழுதைப்பிட்டி துறைகத்தில் இருந்து நயினை அம்மன கோவில் வாசலில் உள்ள இறங்கு துறையிலும், குறிகட்டுவான் துறைமுகத்தில் இருந்து நயினை தெற்குப் பகுதியில் உள்ள வங்களாவடி இறங்குதுறையிலுமாக மக்கள் பாவனையில் இருக்கின்றன.

நாகபூசணி அம்மனின் திருவிழாக் காலங்களில் இந்த இரண்டு துறைமுகங்களும் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழியும்! இவ் ஆலயத்தின் தேர்த் திருவிழாவினைப் பார்ப்பதற்காக அனேகமான மக்கள் முதல்நாள் இரவே இங்கு வந்து வீதி ஓரங்களிலும், மர நிழல்களிலும் தங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் அங்குள்ள வயல் கிணறுகளில் குளித்து முழுகி அம்மாளின் தேர் ஊர்வலத்தைத் தரிசிப்பார்கள்.

இவ் ஆலயத்தின் மற்றுமொரு சிறப்பு தேர்த்திருவிழாவிற்கு மறுநாள் நடைபெறும் தெப்பத்திருவிழா! இத் திருவிழா அன்று அம்பாள் கடலுக்குள் உலா வரும் காட்சியைக் காண்பதற்காக ஏராளமான பக்தர்கள் கடற்கரையெங்கும் நிறைந்திருப்பார்கள்.

இவ் ஆலயத்திற்கு அருகினில் 'அமுதசுரபி அன்னதான சபை' என்னும் பெயரில் ஒரு ஆச்சிரமம் இருக்கின்றது. திருவிழாக் காலங்களில் அங்கு வரும் பக்தர்களுக்கு காலை எட்டுமணியில் இருந்து இரவு பன்னிரண்டு மணிவரை அன்னதானம் வழங்கப்பட்டுக்கொண்டே இருக்கும்.

இதேபோல சிங்கள மக்களின் வடபகுதி யாத்திரைத் தலமாக விளங்குவதும் நயினாதீவுதான். இங்குள்ள பௌத்த விகாரையில் யாத்திரிகர்களாக வரும் சிங்கள மக்கள் தங்கிச் செல்வதற்கென்றே பெரிய வரவேற்பு மண்டபம் ஒன்றைக் கட்டி வைத்திருக்கின்றார்கள்.

இந்தத் தீவின் தொன்மை பற்றிய வரலாற்றில் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கிய நூல்களில் மணிபல்லவம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில்தான் இன்றைய விகாரை அமைந்திருக்கும் இடமெனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இன்று பௌத்த சமய மக்கள் இத்தீவினை நாகதீபம் என்றே அழைக்கின்றார்கள்.

வடபகுதியில் போர்ச்சூழல் இடம்பெற்ற காலங்களில் யாழ்ப்பாணத் தில் உள்ள விகாரைகூட இடிக்கப்பட்டு விகாராதிபதிகள் தங்கள் ஊர்களுக்குச் சென்றிருந்தபோதும்கூட நயினாதீவில் உள்ள விகாரை மட்டும் எந்தவிதமான அசம்பாவிதத்திற்கும் உட்படாது வழமைபோல இயங்கி வந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதலாவது வரலாற்று ஆசிரியரான சைமன் காசிச்செட்டி என்னும் அறிஞர் 1834ம் ஆண்டு எழுதிய நூல் ஒன்றில் குறிப்பிடும்போது மகோதரன், குலோதரன் என்ற அரசர்களுக்கிடையே இங்குள்ள மணிபீடம் ஒன்றிற்காக ஏற்பட்ட தகராறைத் தீர்த்து வைப்பதற்காக கௌதம புத்தர் இத் தீவிற்கு வந்து அந்த இரத்தினங்கள் பதித்த மணியாசனத்தில் அமர்ந்து இந்த ஆசனம் தனக்குரியதே என கூறியதாக விபரித்திருக்கின்றார் என தற்போதைய ஆய்வாளர்கள் குறிப்பிடு கின்றார்கள். மேலும் அந்த நூலில் இத்தீவின் விபரங்களைக் குறிப்பிடும்போது பனந்தோப்புகள், வயல்கள், பாம்புகள் உள்ள இத்தீவில் அறுபது குடும்பங்களே வாழ்ந்திருந்ததாக குறிப்பிட்டிருந்தாகவும் தற்போதைய ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆனால் தற்பொழுது நானூறுக்கும் மேற்பட்ட குடும்பகள் வாழ்ந்து வருகின்றார்கள்.

இதே நேரத்தில் இலங்கையின் சரித்திரத்தை நோக்கினால் வடபகுதியில் நாகர் என்னும் ஓர் இனத்தவர்கள் வாழ்ந்ததாகவும், இந்த நாகர் இன மக்களின் வழிபாடு நாக பாம்பே என்றும், அந்த நாகப்பாம்புகள் இத்தீவில் அதிகமாக வாழ்ந்ததால் இத் தீவிற்கு நாகத்தீவு, நாக நயினாதீவு எனப் பெயர்கள் வந்ததாகவும் கூறப்பட்டிருக்கின்றது.

சரித்திர ஆராய்ச்சிகள் எவ்வாறு இருப்பினும் ஆண்டுதோறும் இங்கு வரும் பௌத்த, சைவ யாத்திரிகர்களை நோக்கும்போது அவர்களையெல்லாம் தன்பால் ஈர்க்கும் பெருமை இந்த நயினாதீவிற்கு இருக்கின்றது என்பதை உணர முடிகின்றது.

தற்பொழுது புளியந்தீவு என்னும் இடத்தில் நாகதம்பிரான் ஆலயம் என்னும் பெயரில் ஒரு ஆலயம் இருக்கின்றது. இது போத்துக்கீசர் இலங்கைக்கு வந்த காலத்தில் நயினாதீவிலும் அவர்களுடைய அதிகார மையம் இருந்ததாகவும் அவர்கள் அங்கிருந்த நாகதம்பிரான் ஆலயத்தை இடித்தபோது அனலைதீவு மக்களால் அங்கிருந்த விக்கிரகம் எடுத்துச்செல்லப்பட்டு புளியந்தீவில் அந்த ஆலயத்தை உருவாக்கியதாகவும் வரலாறுகளில் கூறப்பட்டிருக்கின்றது. பின்னர் போத்துக்கீசர் இலங்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வெளியேறிய பின்னரே மீண்டும் நாகபூசணி அம்மன் ஆலயம் புதிதாகக் கட்டப்பட்டு நயினாப்பட்டர் என்னும் பூசகர் இவ் ஆலயத்தின் பிரதான பூசகராக இருந்ததாகவும் வரலாறுகள் சொல்கின்றன.

இதே காலத்தில் நயினை நாகபூசணி அம்மனின் மரகதத் தேரை போர்த்துகீசர் கடலுக்குள் இறக்கி மூழ்கடித்ததாகவும், அதன் பின்னர் புதிதாகக் கட்டப்பட்ட நயினை அம்மனின் தேர் வீதிவலம் புறப்படும்போது கடல் நீர் ஆழம் குறைந்து மூழ்கடிக்கப்பட்ட அந்தத் தேரின் முடி மக்களுக்குத் தெரிவதாக ஒரு ஐதீகம் இப்பொழுதும் சிலரால் பேசப்படுகின்றது!

'ஈழத்துப் புலவர்கள்' என்னும் சரித்திரப் புத்தகத்தில் குறிப்பிடப்படும் 'வரகவி நாகமணிப் புலவர்' நயினாதீவிலேயே பிறந்தவராவார். இப்புலவர் எழுதிய 'நயினை நீரோட்டயமக அந்தாதி' என்னும் நூல் பலரின் பாராட்டுதல்களைப் பெற்ற நூலாகும்.

பெரிய வைத்தியமனையோ, நிர்வாக அலுவலகங்களோ இல்லாத இத்தீவில் அன்றாட உணவுப் பொருட்கள்கூட யாழ்ப்பாணத்தில் இருந்தே கொண்டு செல்லப்படும். அதே நேரத்தில் அங்கு நயினை மகா வித்தியாலயம், நயினை கணேச வித்தியாலயம், நயினை நாகபூசணி வித்தியாலயம் என மூன்று வித்தியாலயங்கள் இருந்தபோதும் அங்குள்ள கல்விமான்கள் அன்று தங்களது உயர் கல்வியை தொடர்வதற்காக தினமும் கடல்பயணமும், தரைப்பயணமுமாக நீண்டதூரம் பயணம் செய்தும் யாழ்ப்பாணத்துப் பாடசாலைகளின் விடுதிகளில் தங்கியிருந்துமே கல்வி கற்றார்கள்.

நயினாதீவை பிறப்பிடமாகக் கொண்டு யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலுமாக வர்த்தகத்தில் புகழ்பெற்றவர்கள் ஏராளம்பேர்! யாழ்ப்பாணத்தில் உள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையின் உரிமையாளர் ஆர்.ஆர்.பூபாலசிங்கம் அவர்களின் பூர்வீகம் நயினாதீவுதான்! இதேபோல யாழ்ப்பாணம் பொலிஸ் எஸ்.பி.யாக இருந்து பின்னர் இண்டர்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலி); திணைக்களத்தில் பணியாற்றிய திருவாளர் சுந்தரலிங்கம் அவர்களின் பூர்விகமும் நயினாதீவுதான். இவர்களுடன் வித்துவான் ப.க.காமாட்சிசுந்தரம், வித்துவான் குமாரசாமி, பண்டிதர் நா.கந்தசாமி, பண்டிதர் ப.க.குகதாசன், பண்டிதை திருமதி.பாலசுந்தரம், வித்துவான் நா.க.சண்முகநாதம்பிள்ளை, வித்துவான் இ.ச. செல்லத்துரை ஆகியோர் களுடன் ஆயுர்வேத வைத்தியர் தம்பையா - சோமசேகரமும், இன்னொரு ஆயுர்வேத வைத்தியரான கஸ்த்தூரி ஆ.இராமுப்பிள்ளை ஆகியோருமாக நயினாதீவின் பேர் சொல்வதற்கென இன்னும் நிறையவே கனவான்கள் இருக்கின்றார்கள்.

இந்த சின்னஞ் சிறிய தீவு விவசாயம் செய்வதற்குரிய சிறந்த நிலமாக விளங்காத போதும் மக்களின் உழைப்பாலும், விடாமுயற்சி யாலும் இயற்கை வளங்களான பசளைப் பொருட்களைப் பயன்படுத்தி விளை நிலங்களாக மாற்றி புகையிலை, மிளகாய், வெங்காயம் போன்ற வர்த்தகப் பொருட்களையும், சிறு தோட்டப் பயிர்களாக கத்தரி, வெண்டி, தக்காளி போன்ற ஏனைய மரக்கறி வகைகளையும் பயிரிட்டுத் தங்களது சுய தேவைகளைப் பூர்த்தி செய்து வந்துள்ளனர்.

நயினாதீவு என்னும் இந்தச் சின்னஞ்சிறிய தீவில் இத்தனை பெரிய வரலாற்றுப் பொக்கிசங்கள் புதைந்திருப்பது நம்மையெல்லாம் ஆச்சரியப்பட வைக்கின்றது.

*நன்றி :-*

*இக் கட்டுரையை முழுமைப்படுத்துவதற்காக பல தரவுகளைத் தந்துதவிய நயினை மண்ணின் மைந்தரும், பிரான்ஸ் நயினை அபிவிருத்திக் கழகத்தின் செயலாளரும், பாரிஸ் எம்.ஜி.ஆர் வீடியோக் கழக உரிமையாளருமான திரு. கோபாலபிள்ளை - இரத்தினசபாபதி அவர்கட்கு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# குரும்பசிட்டி

யாழ் மாவட்டத்தில் ஒரு காலத்தில் கலை, இலக்கியம், ஊடகத் துறை என பல விடயங்களில் முன்னோடியாக இருந்த ஒரு கிராமம் குரும்பசிட்டியாகும். யாழ் மாவட்டத்தில் இருந்து வெளியான முதல் தமிழ்ப் பத்திரிகையான 'ஈழகேசரி' வெளியானது குரும்பசிட்டியைச் சேர்ந்த திருமிகு. பொன்னையா என்னும் பெருமகனால்தான் என்பது குரும்ப சிட்டிக்கு உள்ள பெருமைகளில் ஒன்றாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள சிறிய கிராமம்தான் குரும்பசிட்டி. யாழ்ப்பாண நகரில் இருந்து ஏறத்தாழ பத்து மைல் தொலைவில் வடக்கே அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் கல்வியாளர்கள், கலைவல்லுநர்கள், கமத்தொழில் செய்வோர், கைத்தொழில் செய்வோர் என பல தரப்பினரையும் உள்ளடக்கியதாகும்.

ஏறத்தாழ 1.5 சதுரமைல் நிலப்பரப்பைக் கொண்ட செம்பாட்டு மண் நிறைந்த கிராமமாகும். வடக்கே அச்சுவேலி - தெல்லிப்பளை வீதியிலிருந்தும், கிழக்கே யாழ்ப்பாணம் - பலாலி வீதியிலிருந்தும், தெற்கே குப்பிழான் சந்தியிலிருந்தும், மேற்கே மல்லாகம் - கட்டுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியிலிருந்தும் ஏறத்தாழ ஒரு மைல் தூரத்திலேயே குரும்பசிட்டி கிராமத்தின் பிரதான சந்தி அமைந்திருக்கின்றது.

கிராமத்தின் வட எல்லையில் பலாலி இராணுவத்தளமும், கிழக்கே வயாவிழான் மத்திய மகா வித்தியாலயமும் அமைந்திருக்கின்றன. கிழக்கு மேற்காக ஊடறுத்துச் செல்லும் வீதி ஈழகேசரி பொன்னையா வீதியாகும். இது யாழ் பலாலி வீதியையும், மல்லாகம் கட்டுவன் வீதியையும் இணைக்கின்றது. பிரதான சந்தியிலிருந்து தெற்குப்புறமாயுள்ள வீதி குப்பிளான் சந்தியைத் தொட்டு நிற்கின்றது. ஈழகேசரி பொன்னையா வீதியிலிருந்து வடக்கு நோக்கி அமைந்துள்ள வீதிகளில் ஒன்று மாயெழு வீதி. மற்றயது வவுணத்தம்பை வீதி. இவ்விரு வீதிகளும் தெல்லிப்பளை அச்சுவேலி வீதியை இணைக்கின்றன.

விவசாயமே முக்கியத் தொழிலாக உள்ள இக்கிராமத்தில் 1869ல் இலங்கையில் அரச கல்விமுறை அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்னர் திண்ணைப் பள்ளிகளிலேயே மாணவர்கள் கல்வி கற்று வந்திருக்கின்றார்கள். இத் திண்ணைப் பள்ளிகளில் வாசுதேவ முதலியாரின் புதல்வரான பரமானந்தச் சட்டம்பியார், பூதத்தம்பிச் சட்டம்பியார் ஆகியோர் மாணவர்களுக்கான கல்வியைப் புகட்டியதில் முதன்மையானவர்களாக மக்களால் மதிக்கப்பட்டவர்கள் ஆகும்.

அன்றைய காலத்தில்கூட சிறுவர்கள் பள்ளிக்குச் செல்லாது பெற்றோர்களால் வயல் வேலைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது கிராமத் தலைவர், அல்லது கிராமக்கோர்ட்டு மூலமாக பெற்றோர்கள் எச்சரிக்கப்படுவதும் இரண்டாம்முறை அப்படி நடந்தால் அபராதம் விதிக்கப் பட்டு பிள்ளைகளின் கல்வி தடையில்லாமல் தொடர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அங்கு சித்திவிநாயகர் ஆலயம் அமைந்துள்ள இடத்திற்கு அருகில் உள்ள இலுப்பையடி என அழைக்கப்படும் திறந்தவெளி மைதானத்தில் பெரிய அளவிலான நாட்டுக்கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு வாழ்ந்த பரமானந்தர் - வைத்திலிங்கம் என்பவர் 'உக்கிரசேனர்" நாடகத்தில் உக்கிரசேனர் பாத்திரத்தில் நடித்துப் புகழ் பெற்றதால் பிற்காலத்தில் உக்கிரசேனர் - வைத்திலிங்கம் என்றே அழைக்கப்பட்டாராம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் 'Mary School' என்னும் பெயருடைய ஒரு பள்ளிக்கூடம் இருந்திருக்கின்றது (இப்பொழுது இல்லை) இப் பள்ளிக்கூடம் மிசனரி அமைப்பினாலேயே ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டிருக்கின்றது. இப்பள்ளிக்கூடத்தில் இக் கிராமத்தவர்கள் மட்டுமின்றி அயல் கிராமத்தவர்களும் வந்து கல்வி கற்றிருக்கின்றார்களாம். இது இடையன்புலம் என்று அழைக்கப்படும் அம்பாள் ஆலயத்தின் பின்புறத்திலேயே இருந்ததாகச் சொல்லப்படுகின்றது.

இங்கே இரண்டு பெரிய ஆலயங்களும் பல சிறிய ஆலயங்களும் அமைந்திருந்தன. இரு பெரிய ஆலயங்களில் ஒன்று சித்தி விநாயகர் ஆலயம், மற்றயது அம்பாள் ஆலயம். சட்டம்பி - சின்னத்தம்பி என்பவர் தமது சொந்தச் செலவில் இச்சித்தி விநாயகர் ஆலயத்தை அமைப்பித்து அதன் மூல விக்கிரகமான சித்தி விநாயகர் சொரூபத்தை இந்தியாவில் இருந்து வருவித்து பிரதிஸ்ட்டை செய்வித்து அக்கிராம மக்களுக்கு ஒரு வழிபாட்டுத் தலத்தை ஏற்படுத்திக்கொடுத்த பெருந்தகை ஆவார்.

அம்பாள் ஆலயம் தோன்றிய விதம் மிகவும் விந்தையானது! அருகில் உள்ள ஊரான குப்பிளானைச் சேர்ந்த விவசாயப் பெருமக்கள் மன்னார் மாந்தைப் பகுதியில் நெல் அறுவடை செய்து நெற்கதிர்களை மாட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு வரும்போதே இம்மூல விக்கிரகமான மாரி அம்மன் சொரூபமும் வந்து சேர்ந்ததாம்! இது அங்கு நிலத்தில் புதையுண்டிருந்ததாக ஒரு சாரரும், மாதோட்டத்தில் ஆலயங்கள் வேற்று மதத்தினரால் அழிக்கப்பட்டபோது ஆலய அர்ச்சகர்களால் மரப்பொந்துகளில் மறைத்து வைக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டிருந்த வேளையில் கண்டெடுக்கப்பட்டதாக இன்னொரு சாரரும் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்துச் சிறுவர்கள் மத மாற்றங்களுக்கு உள்ளாகாமல் ஒழுங்கான முறையில் கல்வி கற்பதற்காகவென 1990ல் தனது செலவிலேயே ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து அதற்கு மகாதேவ வித்தியாசாலை எனப் பெயரிட்டு நடாத்தி வந்தவர் பொன் - பரமானந்தன் என்பவர். எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான் என்பது முதுமொழியாகும். பொன்-பரமானந்தன் அவர்களையும் இக்கிராம மக்கள் இறைவனாகவே கருதுகின்றார்கள்.

திரு பொன் - பரமானந்தர் தொடங்கிவைத்த பணியை அவருக்குப் பின்னால் தொடர்வதற்காக இன்னொரு பெருமகனையும் இயற்கை அன்னை குரும்பசிட்டிக்கு வழங்கியிருந்தாள். அப்பெரியவர்தான் 'ஈழகேசரி" நா.பொன்னையா அவர்கள். இலங்கையின் மூத்த தமிழ் பத்திரிகைகளில் ஒன்றான 'ஈழகேசரி'யை ஆரம்பித்து அதற்கு ஆசிரியராகவும் இருந்து பதிப்பித்து வெளியீடு செய்த துணிச்சல்காரர்.

இதே பொன்னையா அவர்கள் 1934ம் ஆண்டில் குரும்பசிட்டியில் சன்மார்க்கசபை என்னும் ஸ்தாபனத்தை உருவாக்கினார். இச்சபை குரும்பசிட்டியின் வளர்ச்சியில் ஏற்படுத்திய தாக்கங்கள் போற்றத்தக்கவை யாகும். சன்மார்க்கசபையின் நூலகப்பிரிவில் அவ்வப்போது வெளிவந்த சகல பத்திரிகைகள், சஞ்சிகைகளும் கிராம மக்களின் தேவைக்காக வைக்கப்பட்டிருக்கும். அன்றைய காலகட்டத்தில் மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டியதில் சன்மார்க்க சபையின் பணி மிகப் பெரியதாகும். அத்தோடு நில்லாமல் இலக்கியக் கருத்துப் பரிமாறல்களுக்கும், சமய விழாக்கள் நடைபெறுவதற்கும் இச்சபையே தளமாக விளங்கியதாகும்.

சன்மார்க்க சபையின் நூலகப் பிரிவில் பல அருமையான நூல்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. குரும்பசிட்டியை அறிந்திராத அயல் கிராமத்தவர்களுக்குகூட சன்மார்க்கசபை பற்றித் தெரிந்திருந்தது வியப்பிற்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ஈழகேசரி பொன்னையா அவர்கள் 1926ல் ஆரம்பித்த தனலக்சுமி புத்தகசாலையும், 1929ல் ஆரம்பித்த திருமகள் அழுத்தகமும் சன்மார்க்கசபை பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட பெரும் உதவியாக இருந்தன.

இங்கு ஒரு விளையாட்டு மைதானம் இல்லாத குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு காசிப்பிள்ளை - தம்பி ஐயா அவர்கள் அதற்கான நிலத்தை சன்மார்க்க சபைக்குக் கையளித்தார். அதுபோல அங்குள்ள மயானம், அதில் அமைந்திருக்கும் மண்டபம் ஆகியவற்றை அமைத்துக்கொடுத்தவர் திரு.வேலுப்பிள்ளை - தம்பிநாதர் அவர்களாவார்.

அன்னமார் கோவிலுக்கு முன்பாக ஒரு வாசகசாலையும், ஈழகேசரி பொன்னையா வீதியின் கிழக்குப்புறமாக கலைவாணி நாடக மன்றமும் இயங்கி வந்திருக்கின்றது. ஏறத்தாழ 700 குடும்பங்கள் வாழ்ந்த குரும்பசிட்டி கிராமத்தில் ஒரு காலகட்டத்தில் ஐந்து வாசிகசாலைகள் இயங்கிவந்திருக்கின்றன.

வேம்படி என்று அழைக்கப்பட்ட இடத்தில் முன்னர் சந்தை அமைந்திருந்தது. இது பின்னாளில் கைவிடப்பட்டு குப்பிளானில் ஒன்றும், ஈழகேசரி பொன்னையா வீதியில் ஒன்றுமாக இரு சந்தைகள் அமைக்கப்பட்டன.

இக்கிராமத்தில் அமைந்துள்ள பேய்க்கிணறு என அழைக்கப்படும் வற்றாத கிணறு ஓர் அதிசயக் கிணறாகும்! இக் கிணற்றை இலங்கை நீர்ப்பாசனத் துறையினர் பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வந்தமை குறிப்பிடத்தக்கமையாகும்.

யாழ்ப்பாணத்தில் ஆடு, கோழிகளைப் பலியிடும் (வேள்வி) இரண்டு பிரபல ஆலயங்கள் குரும்பசிட்டியில் அமைந்திருந்தன. ஒன்று ஆறாத்தை வயிரவர் கோவில். மற்றயது அன்னமார் கோவிலாகும். இப்பொழுது இவ் ஆலயங்களில் வேள்வி நடைபெறுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரும்பசிட்டி கிராமத்தைப்பற்றி எழுத ஆரம்பிக்கும்போது ஈழகேசரி பொன்னையா அவர்களைக் குறிப்பட்டே ஆரம்பித்தேன். நிறைவு செய்யும்போதும் அவரைப்பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. சன்மார்க்க சபையை ஆரம்பித்துவைத்த ஈழகேசரி பொன்னையா அவர்கள் அமரத்துவம் அடைந்த பிற்பாடு சன்மார்க்கசபை நிர்வாகிகள் ஆண்டுதோறும் ஈழகேசரி பொன்னையா ஞாபகார்த்த நாடகப்போட்டி நடாத்தி கலைஞர்களைக் கௌரவித்து பரிசில்கள் வழங்கி வந்தார்கள்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அமரர் பொன்னையா அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இந்தக் கௌரவம் ஈழ விடுதலைப்போர் ஆரம்பிக்கப்பட்ட சிலகாலங்களில் நிறுத்தப்பட்டு விட்டது. (சுமார் இருபத்தைந்து வருடங்கள் இருக்கலாம்)

இத்தனை சிறப்புகள் மிக்க குரும்பசிட்டி கிராமம் காலா காலத்திற்கும் இத்தகைய பழைய பெருமைகளை மட்டுமே பேசிக்கொண்டிருக்க முடியும்! ஆம் இன்று குரும்பசிட்டி கிராமம் ஒரு மயானம் போலவே காட்சி அழிக்கின்றது. பலாலி இராணுவத்தளம் அருகில் அமைந்திருந்ததால் கிராம மக்களெல்லாம் இடம்பெயர்ந்து விட்டனர் வடமாகாணத்தில் இல்லாமல்போன கிராமங்களில் குரும்பசிட்டியும் ஒன்றாகும்.

காணாமல்போனதொரு ஊர்!
சுடு காடாகிப்போனதொரு ஊர்!
கரும்பான ஊர் என்று பெயர் கொண்ட
குரும்பசிட்டி கிராமம் இனி உயிர்க்குமா?
உயிர்க்கவேண்டும்! - அதற்கு
பல ஈழகேசரி பொன்னையாக்கள்
மீண்டும் பிறக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# மீசாலை

யாழ்ப்பாணத்திற்குக் கிழக்கே உள்ள வடமராட்சிப் பிரதேசத்தில் வடக்கில் கொடிகாமம், திருவாரம், மந்துவில் ஆகியனவற்றையும் கிழக்கில் அல்லாரை, தெற்கில் சாவகச்சேரி, மேற்கில் மட்டுவில், சரசாலை ஆகிய ஊர்கள் சுற்றியிருக்க நடுநாயகமாக இருக்கின்றது மீசாலை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தெற்கு, வடக்காகப் பிரிக்கப்பட்டிருந்த இவ்வூர் பின்னர் வடக்கு, கிழக்கு, மேற்காகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

மீசாலை என பெயர் எப்படி வந்தது என கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் தனது 'ஈழத்து இடப்பெயர் ஆய்வு' என்னும் நூலில் பல காரணங்களைக் கூறியிருக்கின்றார். அவையாவன.. இங்கு உயரமான, அடர்த்தியான மரங்கள் நிறைய இருந்தாகவும் அதனால் "மாசாலை" என்றே அழைக்கப்பட்டதாகவும் காலப்போக்கில் ம, ணாவிற்கு அருகில் உள்ள அரவு மேலேறி மீசாலை என அழைக்கப்பட்டதாகவும், மேலும் மீ, என்பதற்கு இலுப்பை என்றொரு அர்த்தம் இருப்பதாகவும் இங்கு இலுப்பை மரங்கள் அதிகமாக இருப்பதால் முன்பு இலுப்பெண்ணெய் தயாரிக்கும் ஆலைகள் பல இருந்ததாகவும் ஆதலால் மீ + ஆலை = மீயாலை பின்னாளில் அதுவே மீசாலை என அழைக்கப்பட்டிருக்காலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், மீன் சாலை என்பது குறுகி மீசாலை ஆனதென்றும், இதுபோல இன்னும் சில காரணங்களையும் சொல்லியிருக்கின்றார்.

மீசாலை வடக்கில் 'தெருவாரம்' என்னும் பெயரில் ஒரு குறிச்சி இருக்கின்றது. இந்தப் பெயர் வரக் காரணம் டச்சுக்காரர் காலத்தில் சாவகச்சேரியில் இருந்து மந்துவிலுக்கு ஊடாக ஒரு பெரிய தெரு அமைக்கப்பட்டபோது அதன் அருகோரமாக வாழ்ந்த மக்களை தெருவோரத்தினர் என்று அழைப்பார்களாம். பின்னர் அந்தக் குறிச்சிக்கு தெருவாரம் என்றே பெயராகிவிட்டதாம். இதுபோல இதற்கு அருகே 'கட்டைப்பறிச்சான்' என்னும் ஒரு ஊர் இருக்கின்றது. மாரி காலத்தில் இங்குள்ள குளங்கள் நிரம்பி கட்டுக்களை உடைத்துக்கொண்டு பாயும் நிலை ஏற்படுவதால் இந்தப் பெயர் வந்தாகக் கூறப்படுகின்றது.

'வேம்பிராய்' என ஒரு கிராமம் இருக்கின்றது. இப்பகுதியில் வேம்புகள் அதிகமாகக் காணப்படுவதால் இந்தப் பெயர் வந்ததாகவும், அருகில் கற்பாறைகள் அதிகமாக உள்ள ஒரு குறிச்சிக்கு கல்வெட்டை என பெயர் வந்தாகவும் ஆய்வாளர்கள் சொல்கின்றார்கள். மேலும் மீசாலைக்குள் கொட்டியங்காடு, சோனகப்புலம், மருதடி, கண்டைச்சாடி, நழுராவரங்கேணி, பாலையடி, வலைக்காடு எனப் பெயர்களைக்கொண்ட குறிச்சிகளும் உள்ளன.

மீசாலை ஊடாக யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி வீதி, வரணி - சாவகச்சேரி உடாக டச்சு வீதி, ஆகிய பெருந் தெருக்களுடன் புத்தூர் - மீசாலை வீதி மற்றும் கச்சாய் வீதிகள் ஆகியவன பெருந் தெருக்களாகும்.

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னரும் இங்கு வாழ்ந்த மக்களில் ஏராளமானவர்கள் படிப்பறிவு குறைந்தவர்களாக இருந்தபோதும் கடுமையான உழைப்பாளிகளாகவே இருந்தார்களாம். விவசாயம் இங்குள்ளவர்களின் பிரதான தொழிலானபோதும் தச்சுவேலை, மேசன்வேலை செய்பவர்களுடன் மீன்பிடித் தொழில் செய்பவர்கள் அதிகமாக உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரியின் பெயர் சொல்லும் மொட்டைக்கறுப்பன் குத்தரிசியைப்போல மீசாலையில் 'நாலு மொழிக் கறுப்பன்' 'பச்சைப் பெருமாள்' ஆகிய இன நெல்வகைகள் அதிகமாக பயிரிடப்படுகின்றது. மீசாலை மண்ணில் விளையும் நாலு மொழிக் கறுப்பன் அரிசி அதிக சுவையானதாக இருக்குமாம்.

அனேகமாக இங்கு ஒவ்வொரு வீட்டு வளவிலும் மா மரம் இல்லாமல் இருக்காது! மாம்பழச் சீசன் காலத்தில் மாம்பழ வியாபாரி களை மீசாலையில் அதிகமாகக் காணலாம். கறுத்தக் கொழும்பான், வெள்ளைக் கொழும்பான், அம்பலவி, விலாட், செம்பாட்டான் என அனைத்துரக மாம்பழங்களும் மீசாலையில் கிடைக்கும்

தென்னை மரங்கள் இங்கு அதிகமாக உள்ளதால் இங்குள்ள பெண்கள் வீட்டுக் கைத்தொழிலாக கிடுகு பின்னி விற்பனை செய்வார்கள். யாழ்ப்பாணத்து ஓலை வீட்டுக்காரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது மீசாலை, கொடிகாமம், சாவகச்சேரியைச் சார்ந்த தென்னங் கிடுகுகள்தான். இதுபோல பனை மரங்களும் மீசாலையில் நிறைய இருப்பதனால் பதநீர் இறக்கப்பட்டு பனங்கட்டி காய்ச்சுபவர்களும், பனை ஓலையில் பாய், கடகம், பெட்டி போன்றவற்றை இழைத்தலும் குடிசைத் தொழில்களாக பலரும் செய்வார்கள்.

1970-க்குப் பிற்பாடே இங்கு விவசாயக் கழகம், விளையாட்டுக் கழகங்கள், நாடக மன்றங்கள் ஆகியன உருவாக்கப்படன என்பது ஆச்சரியமான செய்தியாகும்!

பூதத்தம்பி வாத்தியார் என்பவரின் முயற்சியால்தான் இன்றைய சந்ததியினர் கல்வியில் முன்னேற்றம் கண்டதாக மூத்த தலைமுறையினர் அவரை நினைவுகூர்கின்றார்கள். இங்கு விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம், வீரசிங்கம் மகா வித்தியாலயம் என இரண்டு கல்லூரிகள் இருக்கின்றன். இதில் வீரசிங்கம் என்பவர் தனது சொந்தக் காணியில் சொந்தப் பணத்தில் உருவாக்கியதால் அக் கல்லூரிக்கு வீரசிங்கம் மகா வித்தியாலயம் என பெயர் சூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரின் பெயரைச் சொல்லக்கூடிய வகையில் புகழ்பெற்ற பெரிய கோவில்கள் எதுவும் இல்லையென்ற போதும் மாவடிப்பிள்ளையார் கோவில் மீசாலைக்குள் பெரிய கோவிலாகும். அத்துடன் வேறு ஊர்களில் இல்லாதவையான இராமர் கோவில், நரசிங்க வைரவர் கோவில், சோலையம்மன் கோவில் ஆகியவனவும் ஊர் மக்கள் பலரும் வழிபடுகின்ற கோவில்களாகும்.

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்கள் பொங்கல் திருநாளை வித்தியாசமான முறையில் சிறப்பாக கொண்டாடுவார்களாம்! அன்றைய தினம் மாட்டுவண்டி ஊர்வலங்களுடன் கரகம், காவடி போன்றவற்றுடன் இரவில் நாடகங்களும் அரங்கேற்றுவார்களாம். இப்பொழுதெல்லாம் அந்த முறை மறைந்துவிட்டது.

மீசாலை என்பது சாவகச்சேரி பாராளுமன்றத் தொகுதிக்குட்பட ஒரு சிற்றூர்தான் ஆனாலும் தனக்கென ஒரு தனித்தன்மை கொண்ட ஊராகும்.

முத்தான மூன்றெழுத்தில் ஊர்ப்பெயர்
முக்கனிகள் நிரம்பியது
ஊரைப்போல இனிப்பான மக்கள் வாழ்கின்ற ஊர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# கோப்பாய் - 1

கோப்பாய் பாராளுமன்றத் தொகுதி பெரியதாயினும் கோப்பாய் சிறியதொரு ஊர்தான்! வடக்கே அச்செழு நீர்வேலியையும், கிழக்கே கைதடி செம்மணியையும், தெற்கே நல்லூர், மேற்கே இராசவீதிக்கு அப்பால் உரும்பிராய், அன்னங்கை, கோண்டாவிலையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

யாழ் நகரில் இருந்து பருத்தித்துறை செல்லும் பெருஞ்சாலையில் சுமார் ஆறு மைல் தொலைவில் இவ்வூர் அமைந்திருக்கின்றது. நல்லூரில் இருந்து கோப்பாயினூடாக இராசவீதி செல்கின்றது. படைகளும், அரச சுற்றத்தினரும் புடை சூழ மன்னன் உலா வரும் சாலை இராசவீதி என அழைக்கப்படலாயிற்று.

கோப்பாய் என இடப்பெயர் வந்தமைக்கு பல காரணங்கள் கூறப்படு கின்றன! கோ + பாய் = கோப்பாய். கோ என்பது அரசனைக் குறிப்பிடும். பாய் என்பது இருப்பிடத்தைக் குறிப்பிடும். எனவே கோப்பாய் என்பது அரசர்களின் இருப்பிடம் என்ற பொருளில் தோற்றம் பெற்றதாக கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் தனது இடப்பெயர் ஆய்வு நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் யாழ்ப்பாணத்துத் தமிழ் மன்னன் முதலாம் சங்கிலி (கி.பி 1519 - 1564) கோப்பாயில் தற்பாதுகாப்புக்காக சிறிய கோட்டை ஒன்றினை அமைத்திருந்தான் என்பது வரலாற்றுச் செய்தியாகும்! அங்கு அரசனது கோட்டை அமைந்திருந்தமையால் (கோ + பாய்) அரசிருக்கை என்னும் பொருளில் கோப்பாய் என அழைக்கப்படலாயிற்று என்ற செய்தியும் உண்டு. இதே நேரத்தில் தமிழ்நாட்டில் கோவை என்னும் நகரத்தில் வாழ்ந்த மக்கள் இங்கு வந்து குடியேறியதால் ஆரம்பத்தில் இது கோவை என்றே அழைக்கப்பட்டு காலப்போக்கில் அது கோப்பாய் என மருவியதாகவும் ஒரு கதை உண்டு.

கி.பி 1560ல் போர்த்துக்கேயத் தளபதி கொன்ஸரன்ரைன் டீ பிரகன்ஸா படையெடுத்து நல்லூர் அரசிருக்கையை முற்றுகையிட்டபோது சங்கிலிய மன்னன் அங்கிருந்து கோப்பாய்க்குத்தான் தப்பியோடியதாகவும் சுவாமி ஞானப்பிரகாசர் தனது நூலொன்றில் குறிப்பிட்டிருப்பதாகவும் கலாநிதி பாலசுந்தரம் அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

கோப்பாயில் சங்கிலியன் அரண்மனை அமைந்திருந்த கோட்டை அழிக்கப்பட்டு அதே இடத்தில் Lady Of Guadalupe என்னும் தேவாலயம் கட்டப்பட்டதால் இவ்வூர் மக்கள் தேவாலயம் அமைந்துள்ள அந்த இடத்தை பழைய கோட்டை என்றே அழைத்து வருகின்றனர். இங்குள்ள பனை மரங்களைக்கூட கோடைப் பனை என்றே அழைக்கின்றார்கள்!

பருத்தித்துறை வீதிக்கு கிழக்கே சமாந்தரமாக தக தகவென்று அமைந்திருக்கும் கடல் நீரேரி கோப்பாய் நகரத்திற்கு அழகினையும், நற்சுவாசத்தையும் தந்துதவுகின்றது. வீதிக்கும் கடல் நீரேரிக்கும் இடையில் பச்சைப் பசேலென விளைந்திருக்கும் நெல்வயல்கள் பார்ப்பதற்கு கண்ணுக்கு குளிர்ச்சியாக இருக்கும். மேலும் தென்னை, பனை, வாழை, மா, பலா, என கோப்பாய் நகர் முழுவதும் சோலையாகவே இருக்கும்.

கோப்பாயில் வயற்காணிகளும், தோட்டக் காணிகளும் நிறையவே உண்டு. தோட்டக் காணிகளில் வாழை மற்றும் காய்கறிப் பயிர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பார்கள். யாழ்ப்பாணத்தில் வாழைப்பழத்திற்கு பெயர்பெற்ற ஊர்களில் கோப்பாயும் ஒன்றாகும். அதேபோல் கோப்பாய்க்கு மிக அருகில் உள்ள செம்மணி உப்பளமும் கோப்பாய்க்கு சிறப்பைச் சேர்க்கின்றது.

நாவலர் தொடங்கிய எழுத்துப்பணியை அவருக்குப் பின்னர் தோன்றிய பல பெரியோர்கள் தொடர்ந்து செய்துகொண்டு வந்தார்கள். அவர்களில் ஒருவர் சுப்பிரமணியம் இராசரத்திரனம். இவர் கோப்பாயை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் முக்கியஸ்தவராக ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து கல்விக்கும், சைவ சமயத்திற்கும் ஆற்றிய தொண்டுகள் மிகப் பெரியவை.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சபாபதி நாவலர் என்பவர் சைவ சமயத்தை வளர்க்க அரும்பெரும் தொண்டுகள் செய்தவராவார். இவர் எழுதிய 'திராவிடப் பிரகாசிகை' என்னும் நூல் தமிழ் இலக்கியம் பற்றிய முதல் விமர்சன நூலாகும்! இந்நூல் இலண்டனில் உள்ள பல்கலைக் கழகம் ஒன்றில் பாட நூலாக இருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் திருவாடுதுறை ஆதீன மகா வித்துவானாக இருந்த காலத்தில் 'ஞானமிர்தம்' என்ற தமிழ்ப் பத்திரிகையையும் நடாத்தியதாக வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மருத்துவத் துறையில் கோப்பாயைச் சேர்ந்த டாக்டர் பீ.சுப்பிரமணியம், டாக்டர் எஸ்.ஆனந்தராசா, டாக்டர் ஈஸ்வரி குமாரசாமி, டாக்டர் காவேரி கந்தையா போன்றவர்கள் இலங்கையளவில் புகழ்பெற்ற டாக்டர்களாக இருந்திருக்கின்றார்கள்.

இதேபோல கோப்பாய் சைமன் கதிரவேற்பிள்ளை அவர்கள் பொலீஸ் மா அதிபராகவும், ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிவானாகவும் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக கடமையாற்றியிருக்கின்றார். இவரது மகனான திருவாளர் பாலசிங்கம் அவர்கள் சட்ட நிர்வாக, சட்ட நிருவணசபை அங்கத்தவராக இருந்ததோடல்லாது கொழும்பு வட்டார நீதிபதியாகவும் இருந்து பல சட்ட நூல்களையும் எழுதியுள்ளார். இந்நூல்கள் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டக் கல்லூரியில் தற்பொழுதும் பயன்பட்டு வருகின்றன. அது மாத்திரமல்ல! விவசாயிகளின் பயன்பாட்டிற்காக தொண்டமானாறு உப்பாற்றினை நன்னீராக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்குத் தூண்டுகோலாக இருந்தவரும் இவரே ஆவார்.

கோப்பாயின் மைந்தனான இந்துப்போட் இராசரத்தினம் அவர்கள் பல பாடசாலைகளை யாழ்ப்பாணத்தில் அமைத்து கல்விப்பணி ஆற்றியவர். அத்துடன் சீரமைக்கப்பட்ட சட்ட நிருபணசபை அங்கத்தவராக 1924ல் இருந்து 1930 வரை கடமையாற்றியதுடன் தனது அனுபவங்களை 'இராசரத்தினம் வழக்குகள் கோவை' என்னும் பெயரில் நூலாகவும் வெளியிட்டிருக்கின்றார்.

கோப்பாய்க் கோமான் என அழைக்கப்பட்ட அமரர் சட்டதரணி வன்னியசிங்கம் அவர்கள் கோப்பாய் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக1947ம் ஆண்டு தொடக்கம் இறக்கும்வரை உறுப்பினராக இருந்து தமிழுக்கும், கோப்பாயின் முன்னேற்றத்திற்கும் உழைத்த பெருமகனாராவார். தொடர்ந்து கோப்பாய் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் அமரர் எஸ். கதிரவேற்பிள்ளை அவர்கள். பிரபலமான வழக்கறிஞர்களான அமரர் மு.பாலசுந்தரம். அமரர் மு.ஆலால சுந்தரம் போன்றவர்களும் கோப்பாய் மண்ணின் மைந்தர்களாவார்கள்.

கோப்பாயில் உள்ள கண்ணகி அம்மன் கோவிலைக் குறிப்பிடா விட்டால் கோப்பாய் பற்றிய வரலாற்றினை எழுதியதில் அர்த்தமே இல்லாமல் போய்விடும்! இக்கோவில் ஒரு சரித்திரப் புகழ்பெற்ற கோவிலாகும். போர்த்துக்கீசர்கள் யாழ்ப்பாணம் வரும் முன்னர் இந்திய மன்னர்களும் யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்திருந்ததாகவும் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் இருந்து கண்ணகி அம்மன் சிலை கொண்டுவரப்பட்டு கோப்பாயில் வைத்து அதற்கு ஆலயம் கட்டி வணங்கியதாகவும் தங்கள் ஆட்சி முடிந்து அவர்கள் இந்தியா செல்லும்போது அச்சிலையையும் தங்களுடன் எடுத்துச் செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயன்றவர்கள் எவ்வளவோ முயன்றும் சிலையை நகர்த்த முடியாமல் போனதாகவும் பின்னர் கண்ணகி அம்மன் அவர்களின் கனவில் தோன்றி தன்னை எடுத்துப் போகவேண்டாம் என்று சொன்னதாகவும் வரலாறுகள் சொல்லுகின்றன. இப்படியாக பல சிறப்புக்களைத் தாங்கி நிற்கின்றது கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# கோப்பாய் - 2

அப்பு

*கடந்த வைகாசி மாத அகரம் இதழின் மண் வாசனைப் பகுதியில் கோப்பாய் பற்றிய தகவல்களை வாசகர்களோடு பகிர்ந்திருந்தோம். நாம் தந்த தகவல்களில் இன்னும் சேர்க்கப்படாத பல விடயங்கள் இருப்பதாக சுட்டிக்காட்டிய அகரம் வாசகரும், கோப்பாய் மண்ணின் மைந்தருமாகிய திரு. அப்பு என்பவர் அந்த விபரங்களை எமக்கு அனுப்பியிருந்தார். அதனை 'கோப்பாய் - 2' என்னும் தலைப்போடு இங்கு பிரசுரம் செய்கின்றோம். - வண்ணை தெய்வம்*

கோப்பாய் வட கோப்பாய், தென் கோப்பாய் என அழைக்கப் படுகின்றது. இந்த இரு கோப்பாய்களையும் ஊடறுத்துச் செல்லும் வீதிகளில் ஒன்று யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி. மற்றது நல்லூர் கந்தன் ஆலயத்தில் தொடங்கி அச்சுவேலிவரை செல்லும் இராச வீதி.

கோப்பாய் மக்களின் முக்கிய தொழில் விவசாயம். பருத்தித்துறை வீதியின் கிழக்குப் பக்கமாக நரை நிற மண்ணும், மேற்குப் பக்கமாக செம் மண்ணும் காணப்படும். நரை மண் பிரதேசத்தில் அதிகமாக நெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல்களையே காணலாம். ஆடி, ஆவணி மாதங்களில் வயல்களில் நெல்லை விதைத்து மாசி, பங்குனி மாதங்களில் அறுவடை செய்வார்கள். அதன் பின்னர் குரக்கன், பயறு போன்ற சிறு தானியங்களைப் பயிரிடுவார்கள். சிலர் மரவள்ளி, வாழை, தக்காளி போன்றவற்றையும் பயிரிடுவார்கள்.

பருத்தித்துறை வீதியில் 150க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுடன் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை இயங்கி வந்தது. தற்பொழுது இதன் உரிமையாளர் புலம் பெயர்ந்து வெளிநாடு சென்றுவிட்டதால் தொழிற்சாலையும் மூடப்பட்டுவிட்டது. இதுபோல கோப்பாய்க்கு உட்பட்ட இருபாலை என்னும் இடத்தில் மண் பாண்டங்கள் செய்யும் தொழில் நடைபெற்று வந்தது. தற்போது இதன் நிலைமை என்னவென்று சரிவரத் தெரியவில்லை.

கோப்பாயில் 5ம் தரம் வரையிலான 5 சிறிய பாடசாலைகள் இருக்கின்றன. G.C.E / O/L வரையிலான நாவலர் மகா வித்தியாலயம், சரவணபவானந்தா மகா வித்தியாலயம், கோப்பாய் மகா வித்தியாலயம், என மூன்று கல்லூரிகள் உள்ளன. இது தவிர யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கல்லூரிகளில் ஒன்றான கோப்பாய் கிறிஸ்ற்றியன் கல்லூரியும் கோப்பாய் மண்ணுக்குப் பெருமை சேர்க்கின்றது. இங்கு கலை, வர்த்தகம், விஞ்ஞானப் பிரிவுகள் G.C.E / O/L வரை கற்பிக்கப்படுகின்றன. இக் கல்லூரியில் நல்லூர், கைதடி, உரும்பிராய், கோண்டாவில், நீர்வேலி என பல பாகங்களில் இருந்தும் மாணவ மாணவிகள் வந்து கல்வி பயில்வார்கள். பல கல்விமான்களை (பெயர்கள் வைகாசி இதழில் குறிப்பிடப்பட்டிருந்தது) உருவாக்கிய பெருமை இக் கல்லூரிக்கு உண்டு.

அடுத்து இருபாலைச் சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாக கோண்டாவில் செல்லும் வீதியில் 1000 யார் தொலைவில் கோப்பாய் மகா வித்தியாலயம் இருக்கின்றது. இதற்கு முன்புறமாகத்தான் கோப்பாய் அரசினர் ஆசிரியர் (மகளிர்) பயிற்சிக் கலாசாலை இருக்கின்றது. இதனை (Training College றெயினிங் கொலிஜ் என்று பொதுவாக அழைப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், இப்படியாக பல ஊர்களிலிருந்து ஆசிரியைகள் வந்து தங்கியிருந்து (தங்குமிட வசதி உண்டு) பயிற்சி பெற்றுச் செல்வார்கள். (1985-க்குப் பிற்பாடு பலாலி பாதுகாப்பு வலையமாக்கப்பட்டதை அடுத்து அங்கு பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த ஆசிரியர்களும் இங்குதான் பயிற்சி பெற்று வந்தார்கள்)

இக் கலாசாலைக்குப் பக்கத்தில் அமைந்திருந்த மாடி வீடு பிரபல வர்த்தகர் சோமசுந்தரத்தினுடையது. மோட்டார் வாகனப் பாகங்களை விற்பனை செய்யும் இவரை பாட்ஸ் கடை சோமு என்றே அழைப்பார்கள். இவ் வீதியால் செல்பவர்கள் வீட்டின் முன் சில நிமிடங்கள் நின்று அதன் அழகை ரசித்துவிட்டுத்தான் செல்வார்கள். 40 வருடங்களுக்கு முன்னர் பல லட்சங்கள் செலவில் கட்டப்பட்ட இவ் வீட்டின் முன்பாக வானுயர்ந்த அசோகா மரங்களுடன் பூந்தோட்டங்களென பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

1983-க்குப் பின்னர் சோமசுந்தரம் குடும்பம் இந்தியாவிற்கு புலம் பெயர, இவ் இல்லம் E.P.R.L.Fஇன் முகாமாக மாறியது. தொடர்ந்து 1986ல் இருந்து விடுதலைப் புலிகளின் முகாமாகவும், பின்பு 1987ல் இந்திய அமைதிப் படையின் முகாமாகவும், அவர்கள் நாட்டை விட்டு வெளியேற மீண்டும் விடுதலைப் புலிகளின் முகாமாகவும், 1995-க்குப் பின்னர் இலங்கை ராணுவத்தின் முகாமாகவுமாக அல்லோலப்பட்டது இவ் இல்லம்!

2000-ஆம் ஆண்டளவில் இந்தியாவில் இருந்த வீட்டின் உரிமை யாளர்கள் அங்கு வந்து வீட்டை மீட்டு கத்தோலிக்கப் பாதிரிமார்களிடம் ஒப்படைத்துவிட்டு லண்டன் சென்றுவிட்டார். தற்போது இவ் இல்லம் புனரமைக்கப்பட்டு 'அன்னை திரேசா திருக்குடும்பக் கன்னியர் மடம்' என்னும் பெயரில் அருட் சகோதரிகள் இல்லமாகத் திகழ்கின்றது. அங்கு வசிக்கின்ற அருட் சகோதரிகள் அனைவரும் அன்னை திரேசா அணியும் உடையைப் போலவே உடை அணிந்திருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இராச வீதியில் இருந்த 100 பரப்பிற்குமேல் அமைந்திருந்த பண்ணை (Farm) பிரபல தொழிலதிபரான சினிமா குணரெட்ணம் என்பவருக்கு சொந்தமானதாகும். இதனை வெலிங்டன் பாம் என்றுதான் அழைப்பார்கள். இங்கு திராட்சை, மா, பலா, வாழை என பலவகையான பழவகைகள் பயிரிடப்பட்டிருந்தன. 1983க்குப் பின்னர் இப்பண்ணை விடுதலைப் புலிகளால் பொறுப்பேற்கப்பட்டு சிறுவர் செஞ்சோலையாக இயங்கியது. அத்தோடு பாலர் பாடசாலையும் இயங்கியது. தற்போது இதன் நிலைமை என்வென்று சரிவரத் தெரியவில்லை.

இதேபோல இராச வீதியில் இருந்த வேறு இரண்டு பண்ணைகள் லைடன் காமென்ஸ் பெனியன் கம்பெனி தொழிலதிபருடையதாகும். இப் பண்ணைகளில் விவசாயப் பயிர்களுடன் 50க்கும் மேற்பட்ட மாடுகளைக் கொண்ட பால் பண்ணையும், 1000க்கும் மேற்பட்ட கோழிகளுடனான கோழிப் பண்ணையும் இயங்கி வந்தது. இவையும் 1983க்குப் பிற்பாடு விடுதலைப் புலிகளால் பொறுப்பேற்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வந்தது. 1995ற்குப் பின்னர் இலங்கை ராணுவத்தினர் இதனைத் தங்களது முகாமாக்கிக் கொண்டார்கள்.

2000-ஆம் ஆண்டளவில் லைடன் முதலாளியின் மகன் (லைடன் உயிருடன் இல்லை) அங்கு சென்று பண்ணையை மீட்டு யாழ் ஆயரிடம் ஒப்படைத்துவிட்டு லண்டன் சென்றுவிட்டார்.

இராச வீதியில் அமைந்திருந்த முக்கியமானதொன்று திறந்த வெளிச் சிறைச்சாலையாகும் (Open Prison) இலங்கையில் குண்டகசாலையிலும், கோப்பாயிலுமாக இரண்டு திறந்தவெளிச் சிறைச்சாலைகள் மட்டுமே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இங்குள்ள கைதிகள் விவசாயம், கைத்தொழில் எனபன செய்வார்கள்.

இந்த சிறைச்சாலைதான் பின்னாட்களில் மாவீரர் துயிலும் இல்லமாக மாற்றப்பட்டது. வடக்கில் இருந்த மாவீரர் துயிலும் இல்லங்களில் மிகவும் பெரியதும், பிரதானதுமான இவ் இல்லத்தை சிங்கள இராணுவம் முற்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்துவிட்டுத் தங்களது முகாமாக மாற்றிக்கொண்டார்கள்! இதிலிருந்து கால் மைல் தொலைவில்தான் கல்வியியல் கல்லூரி இருக்கின்றது. 15 ஆண்டுகளுக்கு முன்னர் மூன்று மாடிகளைக் கொண்டு கட்டப்பட்ட இக் கல்லூரியில் வெளி மாவட்டங்களில் இருந்தும் மாணவர்கள் வந்து தங்கியிருந்து படிக்கின்றார்கள்.

ராணுவக் கெடுபிடிகளினால் பலாலி, வசாவிழான் போன்ற இடங்களில் இருந்து வெளியேறிய 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பதினைந்து இருபது வருடங்களுக்கு மேலாக கோப்பாயில்தான் குடியேறி வாழ்ந்து வருகின்றார்கள்.

1985க்கு முன்னர் இராச வீதியால் பயணம் செய்பவர்கட்கு வீதியின் இரு பகுதியிலும் இருக்கும் வயல்களும், தோட்டங்களும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்! வெங்காயம், மிளகாய், புகையிலை, கத்தரி, வாழை, தக்காளி இப்படியாக பயிர்களெல்லாம் பச்சைப் பசேலென மனோரஞ்சிதமாக இருந்த பகுதியில் தற்போது அந்த வீதியால் பயணம் செய்யும்போது பழையனவற்றை நினைந்து கவலைப்படாமல் இருக்க முடியாது.

தற்போது வீதியின் இருபுறமும் வீடுகள், கடைகளென உருவாகியுள்ளன. பெரும்பாலான தோட்டங்கள் நெருஞ்சி முட் காடுகளாக மாறிவிட்டன! காரணம் தற்போது அங்குள்ள இளைஞர்கள் விவசாயத்தைத் திரும்பியே பார்ப்பதில்லை. நான் உட்பட அன்றுள்ள இளைஞர்கள் பாடசாலை முடிந்ததும் பின்னேரங்களிலும், லீவு நாட்களிலும் தோட்ட வேலை செய்த நினைவுகள் கண்முன்னே வந்து செல்கின்றன.

மதங்களைப் பொறுத்தவரையில் கோப்பாயில் பல இந்து ஆலயங்கள் இருக்கின்றன. இரண்டு கத்தோலிக்க ஆலயமும், கோப்பாய் கிறிஸ்துவக் கல்லூரி வளாகத்தில் ஒரு புரட்டஸ்க்காத்து ஆலயமும் உள்ளன. இந்து ஆலயங்களில் மகா சிவராத்திரியைத் தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெறும். கண்ணகி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் திருவிழாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலத்தில் (83க்கு முன்னர்) பிரசித்தமானவை. பல ஊர்களில் இருந்தும் மக்கள் வெள்ளம்போல் திரண்டு வருவார்கள்.

யாழ் பஸ் தரிப்பு நிலையத்தில் கோப்பாய் செல்லும் 750 இலக்கத்தில் நிற்கும் பயணிகளை இவ் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் 'இதுதானே அம்மன் கோவில் திருவிழாவிற்கு செல்லும் பஸ்?' என விசாரித்துப் பயணிப்பார்கள்.

இப்படியாக பல சிறப்புகளைக் கொண்ட கோப்பாயின் பழைய தோற்றம் இன்று எங்களது நினைவுகளில் மட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# குப்பிளான்

யாழ்ப்பாண நகரில் இருந்து வடக்குப்பக்கமாகச் சுமார் எட்டு மைல்களுக்கு அப்பால் குடாநாட்டின் பிரதான வீதிகளான பலாலி வீதியில் புன்னாலைக்கட்டுவன் (வடக்கு) சந்தியினையும், காங்கேசன்துறை வீதியில் மல்லாகம் சந்தியினையும் இணைக்கும் வீதியில் (மத்திய ரேகை போன்று கிராமத்தினை ஊடறுத்துச் செல்லும் வீதி) கடும் சிவப்பு நிறமான செம்மண் வளம் கொழிக்கும் கிராமம்தான் குப்பிழான்.

சுமார் இரண்டு சதுர மைல்களைப் பரப்பளவாகக் கொண்ட இக் கிராமத்திற்கு குப்பிழான் என்னும் பெயர் எப்படி உருவாகியது என்பதற்கு வரலாற்று ரீதியான ஆதாரங்கள் உறுதியாகக் கிடைக்காவிட்டாலும் 1964ம் ஆண்டு ஏழாலைக் கிராமத்தின் ஒரு பகுதியாக இருந்து பிரிந்து தனிக்கிராமம் உருவாக்கப்பட்டபோது கிராமோதய மலர் சஞ்சிகையில் "குப்பிளாய்" என்னும் ஒரு புல் பூண்டுவகை இந்தப் பகுதியில் அதிகமாகக் காணப்பட்டதால் குப்பிழான் என்னும் பெயர் உருவாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இக் கிராமத்தை அற்பை, விளுவளை, ஆனந்தக் குப்பிளான் எனவும் அழைக்கப்பட்டதாக குப்பிளானைச் சேர்ந்த இராச சோதிடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர் தமக்குத் தகவல் தந்தாக கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் தனது ஈழத்து இடப்பெயர் ஆய்வு நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

கிராமத்தின் புவியியல் நிலைமையினை ஆய்வு செய்து பார்த்தால் வடக்கே குரும்பசிட்டி, தெற்கே மயிலங்காடு, மேற்கே ஏழாலை, கிழக்கே புன்னாலைக்கட்டுவன் ஆகிய கிராமங்கள் அமைந்துள்ளன. குப்பிளானின் அரைவாசி நிலம் பயிர்ச்செய்கை நிலமாகவே முன்னர் காலங்களில் இருந்து வந்தது. கிராமத்தின் மையமாக உள்ள குப்பிளான் சந்தியில் இருந்து தெற்குப்பக்கமாக உள்ள மயிலங்காடுவரை உள்ள எண்பது சதவீதமான நிலங்கள் பயிர்செய்கை நிலங்களாகவே இருந்துவந்தன.

தினமும் மாலை நேரங்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமிகளென அனைவரும் ஒற்றுமையாக தங்கள் தங்கள் சொந்த விளை நிலங்களில் உற்சாகமாக வேலை செய்வதைப் பார்த்தால் அதுவே கிராம மக்களின் விடாமுயற்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

மக்கள் குடியிருக்கும் கிராமத்தின் ஏனைய பகுதிகளில் அனேகமான வீடுகள் கிடுகு வேலிகளால் சுற்றி அடைக்கப்பட்டிருக்கும். ஓலைவீடுகளாக இருந்தாலும் சரி, ஓட்டு வீடுகளாக இருந்தாலும் சரி; அனேகமாக எல்லா வீடுகளிலும் தனிக்கிணறு உண்டு. ஒன்றிரண்டு இடங்களில் பொதுக் கிணறுகள் காணப்படுகின்றன. குப்பிளானில் பயிர் நிலங்கள் மட்டுமல்ல; குடியிருப்பு நிலங்களும் தென்னை, மா, பலா, தோடை, எலுமிச்சை என அனைத்து வளவுகளும் சோலையாகவே இருக்கும்.

விவசாயத்தையே தங்கள் பரம்பரைத் தொழிலாகக்கொண்ட இக்கிராமத்தின் மூதாதையர்களின் முன்னைய காலங்களில் துலா மிதித்து தங்கள் கைகளினால் நீர் பாய்ச்சியே பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டி ருந்தனர். சிலர் எருது மாடுகளை உபயோகித்து சூத்திரக் கிணறுகள் மூலமாகவும் தங்கள் விளை நிலங்களுக்கு நீர் பாய்ச்சியதுண்டு. 1960ம் ஆண்டளவுவரை இந்த முறையே நடைமுறையில் இருந்து வந்தது. அதன் பின்னர்தான் நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரங்கள் பாவனைக்கு வரத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்ச் செய்கையில் புகையிலை உற்பத்தியே இங்கு அதிகமானதாக இருந்தது. காரணம் மூன்று மாதத்திலேயே இதன் பயனை அடைந்து விடுவது மட்டுமல்ல; இங்கு சுருட்டுத் தொழிலாளர்களும் அதிகமாக இருந்ததனால் உள்ளூர்த் தேவைகளை அவர்களுக்குள்ளேயே பூர்த்தி செய்ய வசதியாகவும் இருந்தது

சில தனியார் சுருட்டுக்கொட்டில்கள் மூலமாக உள்ளூர் சுருட்டுத் தொழிலாளர்களுக்கு உள்ளூரிலேயே வேலைவாய்ப்பு கிடைத்தது. சிலர் தங்கள் வீடுகளில் இருந்தே சுருட்டுத் தொழிலைச் செய்து வந்தார்கள். இவர்களிடம் பெரிய வர்த்தகர்கள் கொள்முதல் செய்து தென்னிலங்கை வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்பனை செய்வார்கள். தென்னிலங்கையில் யாழ்ப்பாணத்துச் சுருட்டிற்கு அதிகக் கிராக்கி இருந்த காலமது.

இங்கு சில இடங்களில் பனை மரங்களும் அனேகமாக எல்லா வீடுகளிலும் செழுமையான தென்னை மரங்களும் இருந்தன. இவை உள்ளூரில் வசிக்கும் கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு சீவனோபாயத் தொழிலாகவும் இருந்தது. பரம்பரை பரம்பரையாக இத் தொழிலைச் செய்துவரும் தொழிலாளர்களுக்கு நல்ல வருமானத்தைத் தரும் தொழிலாகவே முன்னர் இருந்தது. பின்னர் ஈழப்போராட்ட காலங்களிலும், அதற்கு சிறிது முற்பட்ட காலங்களிலும் பல்வேறு தேவைகளுக்காக ஏராளமான பனை மரங்கள் தறிக்கப்பட்டதனால் இத் தொழிலாளர்கள் வேறு தொழில்களை நாடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

எழுபதாம் ஆண்டு காலப்பகுதியில் நான்கு தனியார் அரிசி ஆலைகள் இயங்கி வந்தன. நெற்களை வேகவைத்து அரிசியாக்கும் இந்த ஆலைகள் மூலம் பல தொழிலாளர்கள் வேலை வாய்ப்புக்களைப் பெறக்கூடியதாகவும் இருந்தது. பின்பு நடைபெற்ற கால மாற்றங்களால் இத் தொழிற்சாலைகள் அனைத்தும் செயலிழந்துவிட்டன

ஈழப்போர் தொடங்குவதற்கு முன்பு இங்கு இந்து சமயத்தினரைத் தவிர ஏனைய வேறு எந்த மதங்களும் இங்கு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அயற்கிராமங்களில் ஏனைய மதங்களின் ஊடுருவல்கள் இருந்தபோதும் குப்பிழானில் மட்டும் அது வெற்றியளிக்கவில்லை.

குப்பிழானில் சைவக் குருக்களும், அந்தணர்களும் வாழையடி வாழையாக வாழ்ந்து வந்தனர் என்பதற்கு சாட்சியாக இங்குள்ள குருக்கள் வளவு, குருக்கள் கேணி, ஐயர் கிணற்றடி என்பன சான்றாகின்றன. இங்குள்ள பள்ளிமால் என்ற இடம் திண்ணைப்பள்ளி செல்வாக்குப் பெற்றிருந்தமையைக் காட்டுகின்றது.

இங்கு கற்கரை கற்பக விநாயகர் ஆலயம், சொக்கர் வளவு சோதி விநாயகர் ஆலயம், கன்னிமார் அம்பாள் ஆலயம், கேணியடி ஞான வைரவர் ஆலயம், காளி கோவில், வீரபத்திரர் கோவில், பூங்கொடி ஞான வைரவர் கோவில் (இது குரும்பசிட்டி வீதியில் உள்ளது) மூத்தவளவு பிள்ளையார் கோவில், தைலங்கடவை ஞான வைரவர் ஆலயம், சமாதி அம்மன் (கௌரி அம்மன்) கோவில் (18-ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் சரவணை சாமியார் என்னும் ஒரு துறவிதான் இக் கோவிலை ஆரம்பித்துப் பூசித்து வந்ததாகவும், அவர் இங்கேயே சமாதி அடைந்ததால் கௌரி அம்மன் என்னும் பெயர் மாறி சமாதி அம்மன் என அழைக்கப்படுவதாக கூறப்படுகின்றது) மற்றும் சுந்தர் வளவு ஞான வைரவர் ஆலயம், எறும்புக்கடவை அம்மன் ஆலயம் போன்ற பிரசித்தியான ஆலயங்களாகும். இவை தவிர சின்னச்சின்ன ஆலயங்களும் உண்டு.

தினமும் அதிகாலை வேளையில் சூரிய உதயத்திற்கு முன்பு சேவல் கூவி மக்களைத் துயில் எழுப்பும் வேளையில் இவ் ஆலயங்களில் இருந்து ஒலிக்கும் மணியோசைகள் குப்பிழான் கிராமத்தையே குதூகலிக்க வைக்கும். திருவெம்பாவைக் காலங்களில் வீதிவீதியாகவும் இம் மணியோசைச் சத்தத்தையும், பஜனைச் சத்தத்தையும் கேட்கப் பரவசமாக இருக்கும். இவையெல்லாம் 1980க்குப் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பித்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் தவிர பொது நிறுவனங்களில் கிராம அபிவிருத்திச் சங்கம் என்னும் அமைப்பு சில தசாப்தங்களுக்கு முன்னர் இக் கிராமம் அமைந்திருக்கும் உடுவில் உதவி அரசாங்கப் பிரிவின்கீழ் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு வகையான சேவைகளை ஆற்றி வந்தது. இதில் ஐந்து பேர் கொண்ட கிராம பஞ்சாயத்து சபையை உருவாக்கி கிராம மக்களின் பல எல்லை காணி வழக்குகள் உட்பட்ட பல வழக்குகள் பொலிஸ் நிலையம், நீதிமன்றம் எனச் செல்லவிடாது சமாதானமாக தீர்க்கப்பட்டு வரும் மரபுமுறையில் செயல்பட்டு வந்தது.

விக்கினேஸ்வரப் பெருமானின் திருநாமத்தை இக்கிராம மக்கள் அதிக அளவு நேசித்திருக்கவேண்டும் என ஊகிக்கப்படுகின்றது. காரணம் அங்கு நீண்ட பல தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட பொது நிறுவனங்களுக்கு வைக்கப்பட்ட பெயர்கள் சான்று கூறுகின்றன. விக்கினேஸ்வரா வித்தியாசாலை (1973ல் விக்கினேஷ்வரா மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது) விக்கினேஸ்வரா சனசமூக நிலையம், விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் ஆகியவையே அவை.

1925ல் விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு சில வருடங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டதுதான் விக்கினேஸ்வரா சனசமூக நலையமாகும். அன்றைய காலத்தில் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரியில் பிரபல ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவரும் குப்பிழான் கிராமத்தைச் சேர்ந்தவருமான சுந்தர சர்மா அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு பல சமூகப்பணிகளை இந் நிறுவனம் ஆற்றி வந்தது. பின்னாளில் சமூக சேவையில் அவரது சீடர்களாக இருந்த திரு.வைத்திய லிங்கம் பண்டிதர், திரு.தம்பு - தர்மலிங்கம், திரு.க.வைரவநாதன் ஆகியோரின் முயற்சியினால் வளர்க்கப்பட்டு தற்பொழுது கிராமத்து இளம் தலைமுறையினரால் தொடரப்பட்டு வருகின்றது.

விளையாட்டுத்துறையில் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டத்தில் யாழ்ப்பாணத்தில் தமக்கென ஒரு நல்ல பெயரைப் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பிழான் கிராமத்தில் பிறந்து ஏதோ ஒரு வகையில் இறைப்பணி, மக்கள் பணியினைப் புரிந்து வரலாற்றில் இடம்பெற்ற சிலரை இங்கு குறிப்பிடவேண்டும். அவர்களாவது மகான் காசிவாசி செந்திநாதையர், இசைமேதை குப்பிழான் செல்லத்துரை, நாடகக் கலைஞர் பீதாம்பரம், சைவபூஷணம் கா.நல்லையா போன்றவர்களைத்தவிர இன்னும் சில அறிஞர்களும் உண்டு.

மேலே குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் ஈழப்போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு இருந்த நிலமைகள் ஆகும். ஈழப்போரட்டக் காலங் களில் இக் கிராமம் பலாலி இராணுவ முகாமுக்கு அருகே உள்ள கிராமமானதால் பெரிதும் பாதிப்புகளையும் இடப் பெயர்வுகளையும் மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

போராட்ட காலத்தில் கிராமத்தில் எவருமே இல்லாமல் அம்மண்ணின் நீர்வளம், சோலைவளங்கள் யாவும் பராமரிப்பார் இல்லாமல் வெறிச்சோடிக் காணப்பட்ட நிலைமையே காணப்பட்டது. தற்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் குடியேறி வந்தாலும் அன்று காணப்பட்ட செழுமையான குப்பிழான் கிராமத்தைக் காணவில்லை என்பதுதான் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# திருநெல்வேலி

யாழ்ப்பாணம் மாநகருக்கு கிழக்கே இரண்டு மைல் தொலைவில் திருநெல்வேலி என்னும் இந்த அழகிய நகரம் அமைந்திருக்கின்றது. இந்தப் பெயர்கூட மிகவும் பிரசித்தி பெற்ற பெயராகும். காரணம் இந்தியாவின் தமிழ் நாட்டிலும் திருநெல்வேலி என்னும் பிரபலமான ஒரு ஊர் இருக்கின்றது.

பிரபல ஆய்வாளர் கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் எழுதிய ஈழத்து இடப்பெயர் ஆய்வு என்ற நூலில் 'தமிழகத்தில் உள்ள திருநெல்வேலி என்னும் இடத்தில் இருந்து வந்த மக்கள் இங்கு குடியேறியபோது இங்கும் இப்பெயரை இட்டு வழங்கியுள்ளார்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார்

திருநெல்வேலி யாழ்ப்பாணம் மாநகரசபையின் சில பகுதிகளையும், நல்லூர் கிராமசபையின் சில பகுதிகளையும் உள்ளடக்கியது. இதன் எல்லைகளாக நல்லூர், கல்வியங்காடு, கொக்குவில், கோண்டாவில் ஆகிய ஊர்கள் உள்ளன. தமிழகத்து திருநெல்வேலியின் சூழல் போன்றே இங்கும் புவி அமைப்பும் வளம் செறிந்த காணிகளும் உள்ளன. பச்சைப் பசேல் என்ற வயல்கள், தோட்டங்கள், உயர்ந்த பனை மரங்கள் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள இந்த ஊர் யாழ் மாநகரசபையை அண்டி இருப்பதோடு பிரபலமான பலாலி வீதி, திருநெல்வேலியை ஊடறுத்துச் செல்வதுடன் கலாசாலை வீதி, ஆடியபாதம் வீதி போன்றவையுடன் இங்கு அனைத்து வளங்களும் இருப்பதனால் திருநெல்வேலியை கிராமமா, பட்டணமா, நகரமா என தரம் பிரித்துக் கூறமுடியாது!.

திருநெல்வேலி பல புகழ்பெற்ற கல்விச் சாலைகளும், கல்வி மான்களும் நிறைந்த ஊராகும்!. அன்று அமரர் சேர் பொன்.இராமநாதன் அவர்களால் தொடங்கி நடத்தப்பட்ட பிரபலமான பரமேஸ்வராக் கல்லூரிதான் 1974ம் ஆண்டில் அரசினால் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டது. மேலும் இங்கு வடபகுதிக்கான அரச பாற் பண்ணையுடன், அரச விவசாயப் பயிற்சி நிலையமும் அமைந்திருந்தது. சுமார் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் வட இலங்கைக்கான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் திருநெல்வேலியில்தான் இயங்கியது. பின்பு அது பலாலிக்கும், கோப்பாய்க்குமாக மாற்றப்பட்டு விட்டாலும் அந்தக் கலாசாலையை நினைவூட்டும் விதமாக கலாசாலை வீதி என்ற பெயர் இன்றும் மாறாமல் இருக்கின்றது.

திருநெல்வேலியில் வாழ்ந்து அவ் ஊருக்குப் பெருமை சேர்த்தவர் களில் ஞானப்பிரகாச முனிவர் அவர்கள் முக்கியமானவராவார். இவர் போர்த்துக்கேசர் மேற்கொண்ட பசுவதைகளை எதிர்த்ததனால் அங்கு வாழமுடியாமல் தமிழ்நாடு சென்று சிதம்பரத்தில் வாழ்ந்தார். அங்கு ஞானாசிரியராகத் திகழ்ந்து வடமொழியிலும், தமிழிலும் ஒன்பது நூல்களை எழுதி வெளியிட்டதுடன் அவரியற்றிய 129 வடமொழிச் சுலோகங்கள் Sivayoga Ratna Denana Prakasa என்ற தலைப்பில் 1976ம் ஆண்டு பிரெஞ்சு மொழியில் வெளிவந்திருக்கின்றது. அமரர் ஞானப்பிரகாசர் அவர்களின் பெயரில் சிதம்பரத்தில் தற்பொழுதும் 'ஞானப்பிரகாசர் குளம்' 'ஞானப்பிரகாசர் மடம்' என்பன இருப்பவை எங்கள் திருநெல்வேலிக்குப் பெருமை சேர்ப்பவையாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட மிகப்பெரும் தமிழ் அறிஞரான பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் தனது வாழ் நாளில் முக்கால் வாசிப் பகுதியினை திருநெல்வேலியிலேயே வாழ்ந்து கழித்திருக்கின்றார் என்பதும் திருநெல்வேலிக்குச் சிறப்பாகும்.

ஆலயங்கள் பல நிறைந்த திருநெல்வேலியில் மிகவும் பழமை வாய்ந்த சிவன் கோவிலும் அதன் அருகே அம்மன் கோவிலும் இருக்கின்றன. இவ் இரு ஆலயங்களையும் முறையே வயல்வெளிச் சிவன் கோவில், வயல்வெளி அம்மன கோவில் என்றே மக்கள் சொல்வார்கள். இந்த இரண்டு ஆலயங்களும் அருகருகே ஒரே நிர்வாகத்தில் ஒன்றாக இருந்தாலும் வருடத்தில் இரண்டுமுறை கொடியேற்றத்துடன் திருவிழாக்கள் நடைபெறும் புதுமை இந்த ஆலயத்தில் மட்டும்தான் உண்டு!

சுமார் இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சைவ சமயத்தைச் சாராதவர்களால் உருவாக்கப்பட்ட பத்திரகாளி அம்மன் ஆலயம் ஒன்றும் திருநெல்வேலியில் இருக்கின்றது. இக்கோவிலின் விசேட திருவிழா ஆடு, கோழி போன்ற உயிரினங்களைப் பலியிடுவதுதான்! இத் திருவிழாவை வேள்வித் திருவிழா என்று அழைப்பார்கள். ஆனாலும் இலங்கையில் மிருகவதை தடைச்சட்டம் கொண்டு வருவதற்கு முன்பாகவே (சுமார் எண்பது வருடங்களுக்கு முன்பாக) மிருகபலியை முதன் முதலாக நிறுத்திக்கொண்ட ஆலயமும் இந்த ஆலயம்தான்!.

திருநெல்வேலியில் அரசடி ஆலயம் என்னும் பெயரில் ஒரு ஆலயம் இருக்கின்றது. இந்த ஆலயத்தில் உள்ள தேர் விசித்திரமானது! எல்லா ஆலயங்களில் உள்ள தேர்களும் எண்கோண வடிவில்தான் அமைக்கப் பட்டிருக்கும். ஆனால் இந்த ஆலயத்தில் உள்ள சித்திரத்தேர் மட்டும் நவகோண வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. சேர்.பொன். இராமநாதன் அவர்களால் பரமேஸ்வராக் கல்லூரி கட்டப்பட்ட காலத்திலேயே அதன் அருகிலேயே பரமேஸ்வரன் ஆலயம் ஒன்றும் கட்டப்பட்டது. பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டாலும் பரமேஸ்வரன் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் சகல வழிபாட்டு வைபவங்களுடன் சிறப்பாகவே இயங்குகின்றது. இவை தவிர ஐயனார் கோவில், துர்க்கை அம்மன் கோவில் ஆகியன வற்றுடன் பல வைரவர் கோவில்களும் திருநெல்வேலியில் இருக்கின்றன.

வடமாகாணத்தில் உள்ள இரண்டு விவசாயப் பாடசாலைகளில் ஒன்று திருநெல்வேலி எல்லைக்குள் அடங்கிய பலாலி வீதியில் இருக்கின்றது. இதனைச் சுற்றியுள்ள வயல்ச் சொந்தக்காரர்கள் தங்கள் வயல்களுக்கு நூதனமான முறையில் மாடுகளைக் கொண்டு நீர் இறைத்தமையினால் இப் பகுதி சூத்திரக் கிணத்தடி என்றும் சொல்வார்கள்.

சுமைத் தொழிலாளர்கள் திருநெல்வேலியில் அதிகம் உள்ளாதால் அந் நாட்களிலேயே அவர்களின் வசதிக்காக அங்கேயே ஒரு சந்தையும் உருவாக்கப்பட்டது. அந்த திருநெல்வேலி சந்தையும் சுண்ணாகம், மருதனாமடச் சந்தைகளைப்போல மிகப் பழமை வாய்ந்த சந்தையாகும்! ஆனாலும் மற்றய சந்தைகளைவிட இங்கு வித்தியாசம் என்னவென்றால் இங்கு ஒவ்வொரு நாளும் சந்தை கூடிவிடும்.

கமத் தொழிலுக்கு அடுத்தபடியாக இங்கு முக்கியமான தொழில் சுருட்டுத் தொழிலாகும். முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னர் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சுருட்டுத் தொழிற்சாலைகள் இருந்தன. இப்பொழுது எங்காவது ஒன்றைத்தான் காணமுடிகின்றது! ஆனால் வீடுகளில் கைத்தொழிலாக பீடி சுற்றும் தொழிலை பெண் பிள்ளைகள் செய்து வருகின்றார்கள்.

இவை அனைத்தையும்விட திருநெல்வேலிக்குச் சிறப்புச் சேர்ப்பது மிகச் சிறந்த சிற்பாச்சாரியார்கள் நிறைந்த ஊர் திருநெல்வேலியாகும்! இலங்கையில் உள்ள அனேகமான ஆலயங்களில் உள்ள வாகனங்கள், மஞ்சம், தேர் போன்றவற்றில் தொண்ணூறு சதவீதமானவை திருநெல்வேலி யில் வாழ்ந்த சிற்பாச்சாரியார்களால் உருவாக்கப்பட்டவையே! இவை மாத்திரமல்ல! உழவர்களுக்குத் தேவையான கலப்பைகள் அதிக அளவில் திருநெல்வேலியிலேயே செய்யப்படுகின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளோடு சேர்ந்து திருநெல்வேலிக்கு சிறப்புச் சேர்க்கும் மற்றுமொன்று இலங்கையிலேயே முதன் முதலாக இந்து வாலிபர் சங்கம் (**YMHA**) அமைக்கப்பட்டதும் திருநெல்வேலியில்தான்!

இப்படியாக பல சிறப்புக்களைக்கொண்ட திருநெல்வேலி பற்றி சொல்வதற்கு இன்னும் நிறையவே இருந்தாலும் இரத்தினச் சுருக்கமாக இத்துடன் நிறைவு செய்து கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# சங்கானை

'சங்கானை' என்னும் ஊரைப்பற்றிக் கூறும்போது ஆயிரக்கணக்கான யானைகள் சங்கமித்த ஊர் அதனாலேயே சங்கானை எனப் பெயர் வரக் காரணமாயிற்று என்று பலர் கூறினாலும் சங்கானை என்னும் ஊர்ப்பெயர் எப்படி வந்தது என ஆராய்வதற்காக சில நூல்களை ஆராய்ந்தபோது சுவாரசியமான சில தகவல்கள் கிடைத்தன. போர்த்துக்கேயர் ஆட்சிக்குப் பின்னர் இலங்கையை ஒல்லாந்தர் கைப்பற்றியிருந்தார்கள். இவர்களும் வியாபார நோக்கிலேயே இலங்கைக்குள் நுழைந்தவர்கள்.

இலங்கையில் இருந்து இந்திய மன்னர்களுக்குத் தேவையான யானை, சங்கு, குதிரை, போன்றவற்றை போர்த்துக்கீசர் அங்கு அமைத்திருந்து கோட்டைக்குள் சேமித்து வைத்திருந்த காலத்தில் இந்த யானையும் சங்கும் சேர்ந்த அந்தக் கோட்டையை சங்கானை என அழைக்கப்பட்டதாக ஒரு தகவலும், சங்கானை, சங்கத்தானை, சங்கரத்தை ஆகிய ஊர்கள் அருகருகே இருப்பதனால் இங்கு சங்கு முதலிடம் வகிக்கின்றது. காரணம் ஒல்லாந்தர் இங்கு மலை மலையாக சங்குகளைக் குவித்திருந்தார்களாம்! அவை பார்ப்பதற்கு யானை போன்று காட்சி யளித்ததால் சங்கானை என அழைக்கப்பட்டதாகவும் குலசபாபநாதன் அவர்கள் எழுதிய 'ஊர்க்குறிப்புகள்' என்னும் நூலில் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து பண்டைய நகரமான தொல்புரத்திற்கு அண்மையில் இவ்வூர் அமைந்திருப்பதால் தொல்புரக் கோட்டைக்குரிய யானைப்படை இங்கே தரித்திருந்ததாகவும் சங்கை என்பது முதன்மையைக் குறிப்பதால் யானைப்படையே முதன்மைப் படையானதால் சங்கை + யானை என்பன இணைந்து சங்கானை ஆனதாகவும் ஒரு தகவல் சொல்லுகின்றது. எப்படியோ ஒரு அழகான பெயர் அந்த ஊருக்குக் கிடைத்திருக்கின்றது.

சங்கானையில், கமத்தொழில், மரவேலை, நகைவேலை, இரும்பு வேலை, கயிறு திரிக்கும் வேலை, மண் பாண்டகள் உருவாக்கும் வேலை, கள் இறக்கும் தொழில் என பலதரப்பட்ட தொழில்களைச் செய்யும் மக்கள் நிறைந்து வாழ்ந்த போதிலும் சமூக ஏற்றத் தாழ்வுகளும் இங்கு நிறையவே இருந்தன.

வட்டுக்கோட்டை பாராளுமன்றத் தொகுதிக்குட்பட்ட இப்பட்டினம் யாழ்ப்பாணம் காரைநகர் பிரதான வீதியில் சண்டிலிப்பாய்க்கும் சித்தம் கேணிக்கும் இடையே அமைந்துள்ளது. வடக்கே பண்டத்தரிப்பையும், தெற்கே நவாலி, சங்கரத்தை போன்ற ஊர்களையும் எல்லைகளாகவும் கொண்டது.

சங்கானை மக்களின் முன்னேற்றத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்ததுதான் 'வலிகாமம் மேற்கு கூட்டுறவு சமாசம்.' 1944ம் ஆண்டு ஆடி மாதம் ஆரம்பித்த இந் நிறுவனத்தால் அதிகம் பயன் அடைந்தவர்கள் விவசாயிகளே. 25க்கும் அதிகமான கிளைகளைக் கொண்ட இச் சமாசம் 1964ல் அராலியில் ஓர் உப்பளத்தை ஆரம்பித்தது. அரச சார்பில்லாமல் கூட்டுறவு முறையில் நடாத்தப்பட்ட ஒரேயொரு உப்பளம் இதுவேயாகும். இதேபோல் ஒரு பாரிய மின் நெசவுச்சாலையையும் இச்சமாசம் சங்கானையில் நிறுவியது. இங்கு தயாரிக்கப்படும் உடுபிடவைகள் தரத்தில் மிகவும் உயர்ந்தவையாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு போத்துக்கீசர் ஆண்ட காலத்தில் கட்டப்பட்ட கோட்டையை அதன் பின்னர் ஆண்ட டச்சுக்காரர்களும் பாவித்தார்கள். சுமார் முப்பது

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னரும் அந்தக் கோட்டை நிலை குலையாமல் இருந்தது. இப்பொழுது அப்படி ஒரு கோட்டை இருந்த இடமே இல்லையென அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேபோல சங்கானை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் சங்கானை பட்டினசபையும் பக்கபலமாக இருந்தது. 1957ல் ஆரம்பிக்கப்பட்ட இச்சபையானது அரசாங்கத்தின் உதவியுடன் குடியிருப்பு வீடுகளைக் கட்டி 1961ம் ஆண்டில் வீடற்ற மக்களுக்கு குறைந்த வாடகையில் கொடுத்ததுடன் ஏழை மாணவர்களுக்கு வருடா வருடம் இலவச பாடப்புத்தகங்கள் வழங்குதல், இலவச வைத்தியமனை கட்டியது என பல நன்மைகளை சங்கானை பட்டினசபை செய்து கொடுத்தது.

வயல் நிலங்கள் சங்கானையில் தொடங்கி நவாலி, சங்கரத்தை, அராலி, சண்டிலிப்பாய் வரையும். உப உணவுவகைகள் உற்பத்தி செய்யும் தோட்ட நிலங்கள் சித்தன்கேணி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு வரையும் வியாபித்திருக்கின்றது.

விவசாயமும் வியாபாரமும் ஒரு தாய்ப் பிள்ளைகள் என முதியோர்கள் சொல்வார்கள். இங்கு முன்னணி வகிக்கும் மற்றொரு தொழில் வியாபார மாகும். 'சங்கானைச் சந்தையிலே சுங்கானைத் தொலைத்துவிட்டேன்' என்றோர் பழைய பாடல் உண்டு. 'சுங்கான்' பாவிப்போர் காலத்திலேயே சங்கானைச் சந்தை பிரசித்தி பெற்று இருந்தது என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. அயல் கிராமங்களான வட்டுக்கோட்டை, மூளாய், சுழிபுரம், காரைநகர், அராலி, சித்தங்கேணி போன்ற இடங்களில் இருந்து வர்த்தகர்களும் பொதுமக்களும் அதிகாலையிலேயே இங்கு கூடி விடுவார்கள். பொருட்களும் மிக விரைவாகவே விற்பனையாகிவிடும்.

பெண்களினால் 1956ம் ஆரம்பிக்கப்பட்ட 'மாதர் சங்க நிலையம்' ஒரு தொழில் நுட்பக் கல்லூரியைப்போல செயல்பட்டு வருகின்றது. இங்கு இளம் பெண்களுக்கு நெசவுப் பயிற்சி அளித்து பின்னர் ஊதியத்துடன் வேலையும் வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மண்ணில் பிறந்து சமயப்பணிக்கே தன்னை அர்ப்பணித்த நாகலிங்க சுவாமிகளின் பெயர் சங்கானை மக்கள் ஒவ்வொருவரது மனங்களிலும் பதிந்த பெயராகும்! இவர் தென் இந்தியாவில் திருவாவடுதுறை ஆதீனத்தில் சமய சங்கீத திருமுறைகளை முறைப்படி கற்று பின் அங்கேயே பல திருத்தலங்களுக்குச் சென்று கதாப் பிரசங்கங்கள், பண்ணிசைகள் என பாடி சமயத் தொண்டுகளைத் செய்து வந்தவர். இவர் தனது பிற்காலத்தில் இலங்கை திரும்பி சங்கானை நிகரவைரவர் ஆலயத்திலும், இலுப்பைத்தூர் முருகமூர்த்தி கோவிலிலும் சமயத் தொண்டாற்றி வந்தார். இன்று இறைவனுடன் கலந்துவிட்ட இவரது பெயரில் ஓர் நூல் நிலையம் இப்பொழுதும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்கூறிய ஆலயங்களைப்போல பிரம்பரத்தை வீதியில் இருக்கும் அமெரிக்கன் மிசன் தேவாலயமும், மற்றும் சிவன் கோவில், அரசடி வயிரவர், மாவடி வயிரவர், குருபனை வயிரவர், சிலம்புப்புள்ளி வயிரவர், காளி கோயில், முருகன் கோவில், கூடத்தம்மன் கோவில் என பல ஆலயங்களும் இருக்கின்றன.

இதேபோன்று கல்வியிலும் தரமான சேவையை வழங்கிவரும் சிவப்பிரகாச மகா வித்தியாலயம், அமெரிக்கன் மிசன் பாடசாலை, விக்கினேஸ்வரா வித்தியாசாலை போன்றவை தரத்தில் முன்நிற்கும் பாடசாலைகளாகத் திகழ்கின்றன.

1966ம் ஆண்டு சங்கானைக்கு மின் வினியோகம் கிடைத்த பின்னர் பல மின் அரிசி ஆலைகளும், மின் நெசவுத் தறிகள், கைத் தொழில் நிலையங்கள் என பல உருவாயிருந்தன. இதுபோல அரசாங்க உதவியுடன் இயங்கிவரும் கால்நடைப் பராமரிப்பு நிலையம் சங்கானை மக்களுக்கு முக்கிய சேவையாற்றி வருகின்றது. இங்கு கால்நடைகளுக்கு சினைப்படுத்தல், அவற்றின் நோய்களுக்கு மருந்து கொடுத்தல், பராமரிப்பு பற்றிய அறிவுரைகளைக் கொடுத்தல் போன்ற பல சேவைகளை இந் நிலையம் செய்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை படைத்த கலைஞர்கள் பலர் சங்கானையில் வாழ்ந்திருக்கின்றார்கள் தென்இந்தியத் திரைப்படங்களுக்கு திரைக்கதை வசனம் எழுதி புகழ் பெற்று பின்னர் தயாரிப்பாளர், இயக்குநரெனப் புகழ்பெற்ற திரு.வி.சி.குகநாதனைத் தெரியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். இவர் பிறந்தது சங்கானையில்தான். மேற்படிப்பிற்காக இந்தியா சென்ற இவர் திரைத்துறைக்குள் நுழைந்து இன்றும் திரையுலகில் முன்னணிக் கலைஞர்கள் வரிசையில் இருக்கின்றார். இத்தனை சிறப்புக்களுக்கும் மத்தியில்தான் சங்கானை நகருக்கு ஒரு கறுப்புப் புள்ளி ஏற்பட்டது.

**கறுப்புப் புள்ளிகள் பதிந்த சங்கானையைப் பற்றிய ஒரு குறிப்பு**

இவ்வளவு சிறப்புகள் இருந்தபோதும் சங்கானை மண்ணுக்கு வரலாற்று ரீதியாக ஏற்பட்ட ஒரு கறுப்புப்புள்ளி அம் மண்ணில் நடைபெற்ற சாதிக்கலவரப் போராட்டம்! 1966ஆம் ஆண்டு தொடக்கம் 1969 வரையிலான காலப்பகுதிவரை வடபகுதியில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் முன்னெடுத்த ஆலய, தேநீர்கடைப் பிரவேசப் போராட்டங்களில் மாவிட்டபுரம், அச்சுவேலி போன்ற ஊர்களோடு இங்கும் சாதி அடுக்குமுறைக்கெதிரான மிகப்பெரிய போராட்டம் நடைபெற்றது. நிற்சாமம் என்ற கிராமத்தில் ஒரு தேநீர்க்கடைப் பிரவேசத்துடன் ஆரம்பமாகிய போராட்டம் உயர்சாதி மக்களால் பெரிதாக்கப்பட்டு பெரும் போராட்டமாக மாறியது.

தாழ்த்தப்பட்ட மக்களில் இருந்து சின்னன். கார்த்திகேசு, வன்னியன் குமரேசு ஆகிய இரண்டு உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டன! மேலும் 31 பேர்கள் படுகாயம் அடைந்தார்கள்! இரண்டுபேர் கால், கைகளை இழந்து அங்கவீனர்கள் ஆக்கப்பட்டார்கள். மற்றும் பசுபதி, நாகலிங்கம் போன்றவர்களோடு இன்னும் பலர் நீண்டகாலம் சிறை வாசங்களை அனுபவித்தார்கள். இவ்வளவு இன்னல்கள் இழப்புக்கள் ஏற்பட்ட போதும் யாழ்ப்பாணத்து அரசியல்த் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வாய்மூடி மௌனிகளாகவே இருந்தார்கள். அதே நேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தோழர் சண்முகதாஸன் தலைமையிலான சீனக் கம்யூனிஸ்ற் கட்சி பின்புலமாக இருந்து சகல உதவிகளையும் செய்து கொடுத்தது.

இலங்கை பாராளுமன்றத்தில் சீனக் கம்யூனிஸ்ற் கட்சிக்கு ஆதரவாக இருந்த கம்பஹா தொகுதி பாரளமன்ற உறுப்பினர் தோழர். எஸ்.டி.பண்டாரநாயக்கா அவர்கள் இதுபற்றி ஒரு கவன ஈர்ப்பு தீர்மானத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்தபோது சங்கானையை உள்ளடக்கிய வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.அமிர்த லிங்கம் அவர்கள் 'அது இரண்டு குழுக்களுக்கிடையே நடக்கும் கலவரம்' என்று கூறி மழுப்பிவிட்டார். ஆனாலும் கொழும்பில் உள்ள முற்போக்குச் சிந்தனை கொண்ட இளைஞர்களும், புத்தபிக்குகளும் புகைப்படக் கண்காட்சிகளும் போராட்டங்களும் நடாத்தி சிங்கள மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்கள். இலங்கை வானொலியில் கடுகளவும் பேசப்படாத இந்தச் செய்தி சீனாவில் இருந்து ஒலிபரப்பப்படும் ஆசியாவிற்கான தமிழ் ஒலிபரப்பு சேவையில் தொடர்ந்து பலமுறை இப் போராட்டம் பற்றிய செய்தியை அறிவித்து உலகளவில் தமிழ் மக்களைச் சென்றடைய வைத்தது ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

இப்போராட்டத்தைப்பற்றி மறைந்த கவிஞர் சுபத்திரன் அவர்கள் எழுதிய ஒரு கவிதை இங்கு நினைவிற்கு வருகின்றது. அதிலிருந்து சில வரிகள்...

(இராகம்:- நாதஸ்வர ஓசையிலே தேவன் வந்து பாடுகின்றான்)

சங்கானைக்கென் வணக்கம்.
சரித்திரத்தில் உன் நாமம் - மங்காது
யாழகத்து மண்ணழில் பல காலம்....
...............
எச்சாமக் கணைகளிலும்
எதிர் நுழைந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்சாமக் கண்களதை
நெருப்பெறிந்து நீறாக்கும்.

சங்கையிலே நீயானை
சங்கானை உன் பெயராம் - அந்தச்
சங்கானைக்கென் வணக்கம்
சரித்திரத்தில் உன் நாமம்...

................

குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகின்றேன்! சங்கானை
மண்ணுள் மலர்ந்த மற்ற வியட்நாமே
................ ................
சிறுமையை உடைத்தெறியும்
சிங்கத்தின் நெஞ்சே!
செய்தேனே உனக்கென் வணக்கம்
சங்கானைக்கென் வணக்கம்
சரித்திரத்தில் உன் நாமம்....

*குறிப்பு :- இக்கட்டுரை முழுமையடைய சங்கானைப் போராட்டம் பற்றிய தகவல்களைத் தந்துதவியர் கவிஞர். V.T. இளங்கோவன் அவர்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

# சுன்னாகம்

சுன்னாகம் பட்டினப் பிரதேசமாக இருந்தாலும் ஒரு நகரத்திற்குரிய சகல வளங்களும் நிறைந்த பிரதேசமாகும். சுன்னாகம் பகுதியில் வெள்ளைக் கற்பாறைகள் நிறைந்து காணப்பட்டதால் பண்டைய தமிழர்கள் இவ்விடத்திற்கு சுன்னாகம் என பெயரிட்டிருக்கலாம் என கலாநிதி. இ. பாலசுந்தரம் அவர்கள் தனது 'இடப்பெயர் ஆய்வு' என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கின்றார். சுன்னாகத்தை சுண்ணாகம் என அழைப்பவர்களும் உண்டு. அதற்குக் காரணமாக சுண்ணக் கற்கள் (சுண்ணாம்பு) விளையும் பிரதேசமாகவும் விளங்கியதால் சுண்ணாகம் என்றும் அழைக்கப்படலாயிற்று.

யாழ்ப்பாணத்தில் இருந்து வடக்கே ஆறு மைல் தொலைவில் சுன்னாகம் அமைந்துள்ளது. வடக்கே மல்லாகத்தையும், மேற்கே மருதனாமடத்தையும், கிழக்கே ஊரெழுவையும், தெற்கே கந்தரோடையையும் எல்லைகளாகக் கொண்டது. யாழ்ப்பாணம் + காங்கேசன்துறை மற்றும் சுன்னாகம் + அளவெட்டி ஆகிய பெரும் தெருக்களை ஒன்றிணைக்கும் நடு மையமாக சுன்னாகம் விளங்குகின்றது.

சுன்னாகம் நகருக்குள் சிறு சிறு குறிச்சிகளாக சூழானை, மயிலணி, கோட்டைக்காடு, அம்பனை, கொத்தியாவத்தை, பருத்திக்கலட்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாக்கட்டுவன் என்பனவுள்ளன. இதில் செங்கற் சூளைகள் நிறைந்த இடத்தை சூளனை என்றும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிற்குரிய மயில்கள் வளர்க்கப்பட்ட இடத்தை மயிலணி என்றும், ஒல்லாந்தரின் கோட்டை இருந்த இடத்தை (தற்பொழுது அந்தக் கோட்டை அழிந்துவிட்டது) கோட்டைக்காடு எனவும், பழங்காலத்து மக்களால் கழிப்புச் சடங்குகள் கொத்திவால் பேயின் பெயரில் நடைபெறுவது வழக்கமாகும். அப்படியாக கழிப்புச் சடங்கு நடாத்தப்பட்ட இடம் கொத்தியாவத்தை எனவும் அழைக்கப்பட்டதாக இடப்பெயர் ஆய்வு நூல்களில் இருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது

யாழ் மாவட்டத்தில் திருநெல்வேலியைப்போல மிகச்சிறந்த குடிநீர் சுன்னாகத்தில் கிடைக்கின்றது. சுன்னாகத்தின் கிழக்கெல்லையான பொக்கணை என்னும் இடத்தில் என்றும் வற்றாத ஆழக்கிணறும் (Tidal Well) உள்ளது. சுன்னாகம் சந்தை வடமாகாணத்திலேயே புகழ்பெற்ற பழமையான மிகப்பெரிய சந்தையாகும். இச் சந்தை ஒல்லாந்தர் காலத்திலிருந்தே நடைபெற்றிருக்க வேண்டும் என்பதற்கு கீழ்க்காணும் நாட்டார் பாடல் ஆதாரமாகத் தெரிவிக்கின்றது.

சுன்னாகம் சந்தையிலே - பறங்கி
சுங்கானைப் போட்டுவிட்டான்
பார்த்தெடுத்துக் கொடுப்பவர்க்கு - பறங்கி
பாதிச் சுங்கான் கொடுப்பானாம்.

இப்பொழுது இச் சந்தை வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் வசதியாக விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன் சந்தையைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளிலும் பல்வகைப்பட்ட வியாபார நிலையங்கள் அமைந்து யாழ் நகருக்கு நிகரான ஒரு வர்த்தக மையமாகக் காணப்படுகின்றது. இதேபோல சுன்னாகத்தின் பெயர் பலராலும் பேசப்படுவதற்குக் காரணமாயிருந்த இன்னொரு நிலையம் சுன்னாகம் மின்சார நிலையம் ஆகும். வடமாகாணம் முழுவதற்கும் இங்கிருந்துதான் மின்சாரம் வினியோகிக்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடித் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை, மரத்தளபாடத் தொழிற்சாலை போன்ற பெரிய தொழில் உற்பத்தி நிலையங்கள் இப்பகுதியில் அமைந்திருப்பதால் நூற்றுக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்றது. இத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தென் இலங்கைக்கும் ஏனைய பிற நகரங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுபவை குறிப்பிடத்தக்கதாகும். உள்நாட்டுப் போர் காரணமாக இடம்பெற்ற குண்டுவீச்சுக்களால் சில வருடங்கள் மின்சாரநிலையம் செயலிழந்திருந்தாலும் இப்பொழுது புனரமைக்கப்பட்டு மீண்டும் வழமைபோல செயற்பட்டு வருகின்றது.

தமிழ் வளர்த்த பெரியார்களில் ஒருவரான குமாரசாமிப் புலவர் பிறந்த பெருமைக்குரிய மண் சுன்னாகம் ஆகும்! இவரைப்போலவே தமிழ் வளர்த்த பெரியவர்களான திருமிகு. அம்பலவாணர், திருமிகு.முத்துக் குமாரசுவாமி ஆகியோரையும் பெற்றெடுத்த பெருமை சுன்னாகம் மண்ணுக்கு உண்டு. குமாரசுவாமிப் புலவர் அவர்களுடன் இணைந்து நவாலியூர் சோமசுந்தரப் புலவர், புன்னாலைக்கட்டுவன் கணேசையா போன்றவர்கள் இணைந்து சுன்னாகம் மயிலணியில் ஆரம்பிக்கப்பட்ட சைவ வித்தியாசாலை இன்று பெரு விருட்சமாக வளர்ந்து பல ஆயிரக் கணக்கான மாணவர்கள் பல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்று உயர் கல்விக்காக ஆண்கள் ஸ்கந்தவரோதயா கல்லூரியிலும், பெண்கள் இராமனாதன் கல்லூரியிலும் கல்வி கற்க வழி அமைத்துக் கொடுத்துக்கொண்டிருக்கின்றது.

சுன்னாகம் சந்தைப்பகுதியை சுற்றிய சிறிதளவு நிலப்பரப்பிலேயே பேருந்து நிலையம், வர்த்தக நிலையங்கள், பொலீஸ் நிலையம், மின்சார நிலையம் என பலவும் அமைந்திருந்தாலும் கொஞ்சம் நகர்ந்து உள்ளே சென்றால் பச்சைப் பசேல் என்ற பயிர் வகை நிலங்களே நிறைய இருக்கின்றன. மேற்குப் பக்கம் கருமண் நிறைந்த நெல் வயல்களாகவும், கிழக்குப் பக்கம் செம்மண் நிறைந்த தோட்ட நிலங்களாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. இங்கு புகையிலைப் பயிர்ச்செய்கை விவசாயிகளின் முக்கியத் தொழிலாக இருக்கின்றன. இவற்றைவிட வாழைத்தோட்டங்களும் நிறையவே உண்டு.

சுன்னாகம் புகையிரத நிலையம் சந்தைப்பகுதியில் இருந்து சற்றே தூரமாகவே இருந்தாலும் காங்கேசன்துறை, தெல்லிப்பளை, மற்றும் இணுவில், மருதனாமடம் போன்ற ஊர்களில் வசிக்கின்ற விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களை சுன்னாகம் சந்தைக்குக் கொண்டு வருவதற்கு வசதியாக வாகனப் போக்குவரத்து வசதிகள் நிறையவே உண்டு. இன்று வெளிநாடுகளில் வாழ்கின்ற இளைய சந்ததியினர் நம்பமுடியாத ஒரு காட்சியை அங்கு காணலாம்! அது ஒரு 'ஏபோட்டி" அல்லது ''சோமசற்" (அன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் அதிகமானவர்களிடம் உள்ள மோட்டார் வாகனம் இதுதான்) வாகனத்தில் ஒரு லாரியில் ஏற்றக்கூடிய அளவு மூட்டைகளையும் வாழைக்குலைகளையும் எற்றிவருவார்கள்! அதேபோல இதே வாகனங்களில் பதினைந்து பேர்களுக்கு குறையாமல் சுன்னாகத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து சேவையும் இடம்பெறும். உண்மையிலேயே வெளிநாடுகளில் வாழ்கின்ற இன்றைய இளவயதினர்க்கு இது அதிசயமான காட்சிதான்!

ஆலயங்களுக்கும் இங்கு குறைவின்மை என்றாலும் வயல்வெளியில் அமைந்திருக்கும் ஜயனார்கோவில் (ஐயப்பன்) மிகவும் பிரபல்யமானதாகும். அதேபோல கிறிஸ்தவ மக்களின் வணக்கத்தலமாக பழமை வாய்ந்த அந்தோணியார் கோவிலில் பல மதங்களைச் சார்ந்த மக்களும் வந்து வழிபடுவதுண்டு.

சுன்னாகம் ஒரு சிறிய பிரதேசமாக இருப்பதனால் சொல்வதற்கு நிறைய இல்லாவிட்டாலும் சுன்னாகம் என்றதும் நினைவிற்கு வரும் இன்னொன்றைக் கண்டிப்பாக இங்கு சொல்லவேண்டும் அது யாழ்ப்பாணத்தின் பிரபலமான வழக்கறிஞரும், சுன்னாகத்தில் வாழ்ந்தாலும் யாழ்ப்பாணம் முழுவதுமாகப் பேசப்பட்ட சண்டியர்களில் ஒருவருமான திரு.ஐயக்கோன் என்பவர் வாழ்ந்ததும் சுன்னாகத்தில்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குறிப்பு :

மேற்படி கட்டுரையின் முடிவில் யாழ்ப்பாணத்தின் பிரபலமான சண்டியர்களில் ஒருவரான அமரர் ஐயக்கோன் அவர்கள் வாழ்ந்த ஊரும் சுன்னாகம்தான் என்றும் குறிப்பிட்டிருந்தேன். அகரம் வாசகரான திரு.உதயன் அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு ஐயக்கோன் அவர்களை ஒரு சண்டியனாக மட்டும் சித்தரித்திருக்கின்றீர்கள்; அவர் ஒரு சிறந்த வழக்கறிஞர் என்பதை மறைத்துவிட்டீர்கள் என்று சுட்டிக்காட்டியிருந்தார். வேண்டுமென்று அந்தத் தகவல் மறைக்கப்படவில்லை. அந்தத் தகவல் எனக்குத் தெரியாமல் போனதே அதற்குக் காரணமாகும். தவறினைத் திருத்தியுள்ளோம். தவறினை சுட்டிக்காட்டிய திரு. உதயன் அவர்களுக்கு நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# மட்டுவில்

மட்டுவில் என்ற பெயரின் விளக்கத்தை முதலில் அறிவோம். மட்டு + வில் மட்டுவில் ஆகும். இதில் மட்டு என்பதற்கு நீர் நிலையங்கள் மட்டமாக, அல்லது மட்டுமட்டாக (சிறதளவாக) உள்ள குளங்களைக் குறிக்கும் பெயராகவும் எடுத்துக்கொள்ளலாம். (இப்படியான சிறு சிறு குளங்கள் பல இங்கு உள்ளன) இதுதவிர மட்டு என்பதற்கு தேன் என்னும் மறுபெயரும் இருக்கின்றது (மட்டக்களப்பைப்பற்றி எழுதும்போது இதுபற்றி விரிவாக எழுதியிருக்கின்றோம்) மட்டுவில் முன்பு காட்டுப்பிரதேசமாக இருந்த வேளையில் இங்கு பெரிய அளவில் தேன் சேகரிக்கப்பட்டதென்றும், அதனால் தேன் நிறைந்த இடம் என்ற பொருளில் மட்டுவில் எனப் பெயர் வந்தாகவும், அங்கு பல தடாகங்கள் இருந்ததாகவும் அத் தடாகங்களில் வளர்ந்திருந்த தாமரைகளில் தேன் சேகரிக்கப்பட்டதாகவும், அந்த வகையிலும் தேன் என்னும் சொல்லின் மறுபெயராக மட்டு எடுக்கப்பட்டதாகவும் இடப்பெயர் ஆராய்ச்சியாளர்கள் எழுதிவைத்திருக்கின்றார்கள்.

அடுத்து வில் என்ற சொல்லுக்கு தமிழ் அகராதிகள் பல்வேறு விளக்கங்களைத் தந்திருக்கின்றன! ஆனாலும் வில் என்பது அம்பில்

இருந்து புறப்படும் வில்லைத்தான் பிரதானமாகக் குறிப்பிடுகின்றது. ஆனாலும் வானவில் எனக் குறிப்பிடும்போது அங்கு அம்பு வடிவாகமாகவே வானவில் சித்தரிக்கப்படுகின்றது! தமிழர்களுடைய பேச்சு வழக்கில் வளைவான இடங்களையே வில் என குறிப்பிடுவார்கள். பல வளைந்த குளங்கள் இப்பிரதேசத்தில் இருந்ததால் முன்னர் குறிப்பிட்ட மட்டுவோடு இந்த வில் இணைந்து மட்டுவில் என்ற பெயர் வந்தாகவும் இடப் பெயர் ஆராட்சியாளர் எஸ்.சபாரத்தின முதலியார் எழுதிய நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

தமிழ் மொழியில் இருந்து சிங்கள மொழி பல்வேறு சொற்களைக் கடன் வாங்கியிருப்பது தமிழையும் சிங்களத்தையும் கற்றறிந்தவர்களுக்கு நன்கு தெரியும். இந்த வில் என்ற சொல் சிங்களத்தில் 'வில' என குளத்தைக் குறிக்கும் சொல்லாகப் பேசப்படுகின்றது!

இந்த வில் என்னும் சொல்லை முடிவாகக் கொண்ட பல ஊர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் இருக்கின்றன! அவையாவன: இத்தாவில், இணுவில், உடுவில், கெருடாவில், கொக்குவில், கோண்டாவில், நுணாவில், மந்துவில், மல்வில், மிருசுவில், கூவில், நந்தாவில், கெருடாவில், கெல்லாவில், கணுவில், சுருவில், பெரிய மந்துவில், முளங்காவில், ராமாவில், வேருவில், இப்படியான வில் கொண்ட பெர்கள் இன்னும் நிறைய இருக்கின்றன! அவைகளோடு இந்த மட்டுவிலும் சேர்ந்து கொள்கின்றது.

சோழர் காலத்தில் மட்டுவான் என்னும் பெயரால் இவ்வூர் அழைக்கப் பட்டதாக மூன்றாம் ராஜராஜசோழனின் கல்வெட்டொன்றில் காணப்படுவதாக இடப்பெயர் ஆய்வு என்னும் நூலில் கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஒவ்வொரு ஊர்களையும் நினைவில் வைத்திருப்பதற்கு ஒவ்வொரு சிறப்பு இருப்பதுபோல மட்டுவில் என்றதும் முதலில் நினைவிற்கு வருவது பன்றித்தலைச்சி அம்மன் ஆலயமாகும்! யாழ் மாவட்ட அளவில் மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசித்திபெற்ற ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். அடுத்து மட்டுவில் கத்தரிக்காய்! இது இலங்கை அளவில் பிரசித்தமானதாகும்! இதன் வடிவம் ஏனைய கத்தரிக்காய்களில் இருந்து மாறுபட்டு முட்டி போன்ற வடிவமைப்பைக் கொண்டது. அதன் ருசியும் தனியானதாகும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சுமார் பதினாறு கி.மீற்றர் தொலைவில் சாவகச்சேரியை அடுத்து நுணாவில், மந்துவில், சரசாலை, கைதடி, ஆகிய ஊர்களுக்கு மத்தியிலேதான் மட்டுவில் இருக்கின்றது. இவ்வூரின் கிழக்கெல்லையில் ஐஞ்சந்தி ஒன்று உள்ளது. இதனை கனகம்புளியடிச் சந்தி என்று சொல்வார்கள். அச்சந்தியிலிருந்து சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை, சுன்னாகம், நுணாவில் ஆகிய ஊர்களுக்குச் செல்வதற்கான பெருந்தெருக்கள் அமைந்திருக்கின்றன.

மட்டுவிலின் எல்லைகளாக வடக்கே புத்தூர் வீதியும், தெற்கே பிரதான கண்டி வீதியும் கிழக்கே பருத்தித்துறை வீதியும், மேற்கே கைதடி கடநீரேரியும் அமைந்திருக்கின்றன. கைதடி, நுணாவில், வாகையடி, இலுப்பையடி, மருதன்குளம், வேரற்கேணி, வேவில், தம்புளு, முசுறி மானாவளை, செட்டியாக்குறிச்சி, போன்ற பல குக்கிராமங்கள் மட்டுவில் பிரதேசத்துக்குள் அடங்குகின்றது.

இவை மாத்திரமல்ல! இங்கு குட்டிச் சிதம்பரம், கப்பல்த்தோட்டம் ஆகிய குறிஞ்சிகளும் உள்ளன. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் போர் வான் ஊர்தி ஒன்று பழுதடைந்து இவ்வூரில் வீழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. அவ் வான் ஊர்தி வீழ்ந்த இடத்தை கப்பல்த் தோட்டம் என மக்கள் அழைக்கலானார்கள். தமிழகத்தில் உள்ள சிதம்பரம் கோயிலுக்குக் கொடையாக வழங்கப்பட்ட கோயிற் காணிகள் இவ்வூரில் இருக்கின்றன! அக்காணிகள் உள்ள பகுதியைத்தான் குட்டிச் சிதம்பரம் என அழைக்கின்றார்கள்.

இங்கு வாழும் மக்களின் புராதன தொழில் விவசாயமாக இருந்தாலும் பல்வேறு பட்ட தொழில்களைச் செய்யும் மக்கள் இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றார்கள். மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் கைத்தொழில் என்ற நிலையில் குடிசைத்தொழில்கள் பல காணப்பட்டன. இப் பிரதேசத்தில் பனை மரங்கள் நிறையவே இருந்ததால் பெட்டி, பாய் இளைத்தல், சுளகு பின்னுதல், பனாட்டு, ஒடியல், புழுக்கொடியல் தயாரித்தல், பனங்கட்டி தயாரித்தல் போன்ற சிறு கைத்தொழில்களுடன் வீடுகளில் இருந்தே அப்பளம் தயாரித்தல், நெசவு வேலை செய்தல் போன்ற தொழில்களில் ஆண்களுடன் இணைந்து பெண்களும் வேலை செய்வார்கள்.

மட்டுவிலுக்கு பெயரும், பெருமையும் தேடித்தந்த ஒரு நிறுவனம் "திருக்கணித நிலையம்" ஆகும்! இலங்கை முழுவதும் மக்களால் வரவேற்புப் பெற்ற திருக்கணிதப் பஞ்சாங்கத்தை வருடா வருடம் வெளியிட்டு வருவது இந்த திருக்கணித நிலையமே. அது மாத்திரமல்ல! இந் நிலையத்தால் 'சோதிட மலர்' என்னும் மாத சஞ்சிகையையும் வெளியிட்டு வந்தார்கள். இவற்றுக்கெல்லாம் இயக்குநர் நாயகமாக விளங்கியவர் 'தேவசிவாகம சோதிட பூசணம்' 'சிதம்பரநாதக் குருக்கள்' அவர்களாகும்.

அறிஞர் பெருமக்களுக்கும் மட்டுவிலில் பஞ்சம் இருக்கவில்லை. 'இலக்கியக் கலாநிதி' 'பண்டிதமணி' சி.கணபதிப்பிள்ளை அவர்கள் பிறந்தது மட்டுவிலில்தான். மற்றும் உரையாசிரியர் ம.கதிரவேற்பிள்ளை, வித்துவான் இராமலிங்கம், (மட்டுவில் கமலாசினி வித்தியாலய ஸ்தாபகர்) சபாபதி மகாலிங்கம் (சாந்தநாயகி வித்தியாலய ஸ்தாபகர்) திருமதி. முத்துத்தம்பி வாத்தியார் (சரஸ்வதி கனிஸ்ற்ர வித்தியாலய ஸ்தாபகர்) 'நொத்தாரிசு" கந்தர் (தென்மராட்சிப் பகுதியிலேயே முதன் முதலாக நொத்தாரிசுப் பட்டம் பெற்றவர்) இப்படியாக இன்னும் பலர் இருக்கின்றார்கள்.

நொத்தாரிசு கந்தர் அவர்களால் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்திற்கு அருகில் ஒரு பெரிய வீடு கட்டி அதை பொதுமக்கள் தங்கி இளைப்பாறிச் செல்லவும் சமைத்து உண்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியாகவும் ஒரு மடம் போல பயன்பாட்டிற்கு விட்டிருந்தார். அன்றிலிருந்து இன்றுவரை அந்த இடம் மடத்தடி என்றே அழைக்கப்பட்டு வருகின்றது.

இப்படியான சிறப்புக்களையெல்லாம் வரிசைப்படுத்தி வருகின்றபோது யாழ் மாவட்டமெங்கும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் ஆதரவுடன் ஆலய, தேநீர்க்கடைப் பிரவேசங்கள் நடந்துகொண்டிருந்த 1969,1970 ஆண்டு காலப்பகுதியில் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திலும் அப்பிரதேசத்தில் வாழும் சிறுபான்மை இன மக்கள் ஆலயப் பிரவேசம் செய்ய முயன்ற போராட்டம் பற்றியும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

பங்குனி மாதத்தில் வருகின்ற ஒவ்வொரு திங்கட் கிழமையும் நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் மக்கள் இவ் ஆலயத்தில் ஒன்றுகூடி பொங்கிப் படைத்து தங்கள் நேர்த்திக்கடன்களை தீர்த்துக் கொள்வார்கள். அந்த ஆண்டு ஆலயப்பிரவேசம் நடைபெற இருப்பதாக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் அறிவித்ததை அடுத்து மட்டுவில் பிரதேசம் பரபரப்பானது!

அன்று பொங்கல் வைக்கச் சென்ற மக்களுக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து கோவிலுக்குச் செல்லும் பாதையெங்கும் பொலிசார் நிறுத்தப்பட்டு அவர்கள் பொங்கலுக்காக எடுத்துச்சென்ற பாத்திரங்கள் முதல் அனைவரும் சோதனை செய்யப்பட்ட பின்னரே கோவிலடிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அப்படியாக சோதனைகளை முடித்துவிட்டு உள்ளே சென்ற மக்களுக்கு மற்றொரு அதிர்ச்சி காத்திருந்தது. அது பொங்கல் தேவைக்கு தண்ணீர் எடுக்க முடியாதபடி கோவில் கேணியைச் சுற்றி முட்கம்பி வேலியால் அடைக்கப்பட்டிருந்தது! 2009ல் முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற யுத்தத்திற்குப் பின்னர் எமது மக்களை இலங்கை ராணுவத்தினர் முட்கம்பி வேலிகளுக்குள் சிறை வைத்திருந்ததற்கு வழிகாட்டியாக இருந்தவர்கள் மட்டுவில் பிரதேச உயர்சாதித் தமிழர்களாகத்தான் இருக்கவேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமாத்திரமல்ல! கோவில் வாசலிலும் தொண்டர்கள் என்னும் போர்வையில் குண்டர்களும், போலிசாரும் குவிக்கப்பட்டு தொண்டர்களால் அடையாளம் காட்டப்படும் உயர்சாதி மக்கள் மட்டுமே கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

பொலிசார் இப்படியாக கெடுபிடிகளை நடாத்திக்கொண்டிருக்க அப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு பெரும் தெருக்களால் வந்து பொலிசாரைச் சந்திக்காமலேயே குறுக்கு ஒழுங்கைகளால் கோவிலடிக்கு வருவதற்கு பல வழிகள் இருந்தன. அப்படியான ஒரு வழியினூடாக ஆலயப்பிரவேசத்தை மேற்கொள்ளவிருந்த பலர் கோவிலடிக்கு வந்துவிட்டார்கள்.

பொலீசாரும் குண்டர்களும் மிகக் கடுமையான கண்காணிப்பில் ஈடுபட்டிருந்ததால் போராட்டக்காரர்களால் அவர்களின் தடைகளை உடைக்கமுடியவில்லை. நேரம் மதியத்தைத் தொட்டுக்கொண்டிருக்கும்போது கோவிலடியில் பெரும் குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது! மக்களெல்லாம் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள் பொலீசாரும் குண்டர்களும் செய்வதறியாது திகைத்து நின்ற வேளையில் போராட்டக்காரர்களில் ஒரு பகுதியினர் முட்கம்பி வேலிகளை அறுத்தெறிந்து கேணிக்குள் சென்று தண்ணீர் அள்ள, இன்னொரு பகுதியினர் கோவிலுக்குள் சென்று வந்தனர்! ஆனாலும் சொற்ப நேரத்தில் கோவிலுக்குள் இருந்த அனைவரும் வெளியேற்றப்பட்டு கோவில் உடனடியாக மூடப்பட்டது.

வெடித்த குண்டு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நாட்டு வெடிகுண்டு (அன்றைய காலகட்டத்தில் போராளிகளிடமிருந்த மிகப்பயங்கரமான ஆயுதம் இதுதான்!) இச்சம்பவத்தின் மூலமாக ஒருவர் காலொன்றை இழந்தார். இன்னும் சிலர் சிறு சிறு காயங்களுக்கு உள்ளானார்கள். குண்டை எறிந்தவர் யாரென்று உடனடியாகத் தெரியவரவில்லை.

மறுநாள் வெளிவந்த வீரகேசரி பத்திரிகையில் செல்லக்கிளி என்ற இளம் பெண்ணே பொங்கல் பானைக்குள் வெடிகுண்டை மறைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து கொண்டு வந்ததாகவும், இவர் ஒரு பல்கலைக்கழக மாணவி என்றும் பொலீசார் சந்தேகப்படுவதாக முன்பக்கச் செய்தியாக வெளியாகியிருந்தது. ஆக, பெண் போராளி ஒருவர் அன்றே உருவாகிவிட்டதாகவே அறிய முடிகின்றது.

சில வருடங்களுக்குப் பின்னர் நாட்டின் ஏனைய ஆலயங்களைப் போல பன்றித்தலைச்சி அம்மன் ஆலயமும் சகலரினது வழிபாட்டிற்காகத் திறந்து விடப்பட்டபோதும் அந்தக் கரும்புள்ளி இன்றும் வரலாற்றுப் பதிவாகவே இருக்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

# அச்சுவேலி

அச்சுவேலி என்னும் ஊர்ப் பெயருக்குரிய காரணமே பலராலும் விசித்திரமாகக் கூறப்படுகின்றது. கலாநிதி இ.பாலசிங்கம் அவர்கள் தனது 'ஈழத்து இடப்பெயர் ஆய்வு' என்னும் நூலில் அச்சு என்பது தேரச்சு, அடையாள முத்திரை, அச்சுப்பதிப்பு என பல அடையாளங்களைக் குறிப்பதாலும். வேலி என்பதற்கு அரண், காவல், பாதுகாப்பு என கூறப்படுவதாலும், மேலும் அச்சுக்கட்டு என்பதற்கு நெல் பயிரிடத்தக்க நிலம் என பொருள் வருவதாலும் நெல் விளைச்சலுக்குப் பெயர் பெற்ற அந்த மண்ணிற்கு அச்சுவேலி எனப் பெயர் வந்திருக்க வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

இதே நேரம் அச்சுவேலியைச் சேர்ந்த ஒரு நண்பர் சொல்கின்றார் 'யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் பெருந்தெரு அச்சுவேலியை மையமாகக் கொண்டே செல்கின்றது. இதனால் யாழ்ப்பாணத்தையும் பருத்தித்துறையையும் இணைக்கும் வண்டிச்சக்கர அச்சுப்போல இக்கிராமம் இருப்பதனால் அச்சுவேலி எனப் பெயர் வந்ததாக.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலியின் பிரதான சந்தியில் இருந்து ஒன்று புத்தூர், நீர்வேலி, கோப்பாய் ஊடாக யாழ்ப்பாணத்திற்குச் செல்கின்றது. இன்னொன்று தோப்பு ஊடாகச் சென்று யாழ்ப்பாணத்தை அடையும் இராசவீதி. மற்றும் வல்வெட்டித்துறைக்குச் செல்வதற்கும், பருத்தித்துறைக்குச் செல்வதற்குமான இணைப்பை ஏற்படுத்தும் பிரதான சந்தியாக அது விளங்குகின்றது. இதில் வல்வெட்டித்துறை வழியாக பருத்தித்துறை செல்லும் வீதிக்கு தனிச் சிறப்பு உண்டு! இவ் வீதியால் செல்லும்போது தொண்டைமானாறு செல்வச்சன்நிதி ஆலயத்தையும், அழகான கடற்கரையையும் அதனை அண்டியுள்ள தென்னந்தோப்புக்களையும் ரசித்துக்கொண்டே செல்லலாம்.

அச்சுவேலியைச் சுற்றியுள்ள அயற்கிராமங்களாக கிழக்குத் திசையில் பரந்த வல்லை வெளியும் ஊர்மனைகளும் அடங்கியிருக்கின்றன. வடக்குத் திசையில் தம்பாலை, இடைக்காடு, வளலாய் என்பனவும். மேற்கே ஒட்டகப்புலம், வசாவிளான், தோலைகட்டி, பலாலி ஆகியனவும். தேற்கே தோப்பு, நவக்கிரி, ஆவரங்கால் ஆகிய ஊர்களும் அமைந் திருக்கின்றன.

அச்சுவேலியில் இருந்து ஒட்டகப்புலம் நோக்கிச் செல்லும் பெருவீதியில்தான் அன்பில்லம் என அழைக்கப்படும் 'அன்பகம்" அமைந்திருக்கின்றது. இது கல்வியில் பின் தங்கிய பெண்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் போன்று விளங்கியது. பலவிதமான பயிற்சிகளையும் பெற்ற பெண்கள் ஒவ்வொரு வருடமும் சான்றிதழ்களுடன் வெளியேறும் போதும் பல்கலைக் கழகத்தில் இருந்து பட்டதாரி மாணவர்கள் பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் காட்சியைப்போலவே இருக்கும். இந்த அன்பகத்திற்கு முன்னால் பார்ப்பவர்களை மயங்கவைக்கும் அழகிய மலர்த்தோட்டம் ஒன்று இருக்கின்றது. அதனை உருவாக்கியவர் செல்லர் என்னும் ஓவசியர் ஆவார். இந்த அன்பகத்திற்கு அருகினிலேயே சிறுவர் நன்நடத்தைப் பாடசாலையும் இருக்கின்றது. நாட்டின் பலபாகங்களிலும் இருந்தும் சிறு வயதில் குற்றம் இழைத்த சிறுவர்கள் இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரப்பட்டு இப்பாடசாலையில் சமூக சீர்திருத்தக் கல்வி கற்பிக்கப்படுகின்றது.

அச்சுவேலிச் சந்தியில் இருந்து யாழ்நகர் செல்லும் பெரு வீதியில் வைத்தியசாலை ஒன்று உண்டு. 1947ம் ஆண்டு இதை அமைத்துக் கொடுத்தவர் சேர்.சிற்றம்பலம் காடினர் அவர்கள். அது மாத்திரமல்ல! தனக்குச் சொந்தமான பனைமரங்கள் நிறைந்த பெரும் தேசப்பரப்பு ஒன்றை தோலகட்டி ஆச்சிரமத்திற்கு நன்கொடையாக வழங்கியிருந்தார். பனைமரங்களின் தோப்பாக விளங்கிய அந்த நிலம் அங்கிருந்த துறவிகளால் விளைநிலமாகி அருதோன்றிச் செடிகள் அரணமைத்து மலர்ச்செடிகளும், கனிமரங்களும் பயிர் செய்யப்பட்டு பின்னர் அது பெண் துறவிகளின் இடமாக மாறியதெல்லாம் தனிக் கதை! அமரர் சிற்றம்பலம் காடினர் அவர்களின் அரிய தொண்டை மறவாத அம் மக்கள் அவரின் உருவப்படத்தை அங்கு வைத்திருப்பதுடன் ஆண்டு தோறும் அவரின் நினைவு நாளைக் கொண்டாடி வருகின்றார்கள்.

அச்சுவேலியை செம்மண் பூமி என்றுதான் சொல்வார்கள். அச்சுவேலியைச் சேர்ந்த அனேகமான மக்கள் இந்த செம்மண்ணையே தெய்வமாகக் கருதி விவசாயம் செய்பவர்கள். அத்துடன் உப உணவு வகைகளான குரக்கன், சாமை, இராசவெள்ளி, மரவெள்ளி, வெங்காயம் போன்றவை அதிகமாக பயிரிடப்பட்டாலும் இந்த மண்ணில் வயல் நிலங்களே அதிகம். காலப்போக்கில் வெளிநாட்டுப் பழவகையான கொடி முந்திரி வளர்ப்பால் தோட்ட வெளியெங்கும் குலை குலையாக முந்திப்பழங்கள் தொங்கும் அழகான காட்சியையும் அச்சுவேலியில் காணக்கூடியதாக இருந்தது. அதுமாத்திரமல்ல, நீர்வளமும் நிறைந்த மண அச்சுவேலி! அச்சுவேலியில் உள்ள கிணறுகள் அனைத்தும் ஆழமற்றவையே!

கால முன்னேற்றத்தில் தானிங்கி இயந்திரங்களால் தோட்டங்களுக்கு நீர் இறைத்தாலும் அன்றைய காலத்தில் தோட்டக் கிணறுகளில் துலாக்கள் அமைத்து இருவர் துலாவில் முன்பின் செல்ல மற்றொருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலாக்கொடியில் பெரிய பட்டை கட்டி தண்ணீரை இறைக்க, இன்னுமொருவர் வரப்புகளில் வரும் நீரை பாத்திகளுக்குள் வழிமறித்துவிட, இப்படியாக நாலுபேர் சேர்ந்து தண்ணீர் இறைத்துப் பயிர் செய்வார்கள். அதன் பின்னர் சூத்திரம் (சூத்திரக்கிணறு) என்னும் இயந்திரத்தினால் தண்ணீர் இறைத்தார்கள். இது எப்படியாதென்றால் சங்கிலித் தொடராக கிணற்றில் இருந்து வாளிகளுடன் தண்ணீர் மேலே வரும் முறையில் சூத்திரத்தை அடைத்திருப்பார்கள். இரண்டு மாடுகள் அந்த சூத்திரத்தின் இணைப்புடன் கிணற்றைச் சுற்றிச் சுற்றிவர அந்த மாடுகளின் பின்னே ஒருவர் சென்றுகொண்டே இருப்பார்.இன்னொருவர் வரப்பில் நின்று பாத்தி கட்டுவார். இந்த சூத்திரக்கிணறு முறையால் இரண்டு பேருடனேயே அவர்களால் நீர் இறைக்க்கூடியதாக இருந்தது. இவையெல்லாம் படிப்பதன் மூலமே தெரிந்து கொள்ளலாம். பார்ப்பதற்கு அருங்காட்சியகத்தில்கூட இருக்குமோ தெரியாது. இப்படியான சிறப்புக்களையெல்லாம் கொண்டது அச்சுவேலி நகரம்.

அச்சுவேலிக்கு இன்னுமோர் சிறப்புண்டு! அது 1974ம் ஆண்டள வில் ஆரம்பிக்கப்பட்ட 'கைத்தொழில்பேட்டை.' யாழ் மாவட்டத்தில் அமைந்த ஒரேயொரு கைத்தொழில்பேட்டை அதுவேயாகும். 26 தொழில் கூடத்துடனும், இராட்சத தண்ணீர்தாங்கியுடனும் ஆரம்பிக்கப்பட்ட அந்த தொழிற்பேட்டையை அப்பொழுது தமிழரசுக்கட்சியின் சார்பாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலம்சென்ற திரு. கதிரவேலுப்பிள்ளை அவர்களின் முயற்சியால் கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுபோல தனிநபருக்குச் சொந்தமான 'லாசோப்' என்ற சவர்க்காரத் தொழிற்சாலையும் அச்சுவேலியிலேயே அமைந்திருந்தது.

அச்சுவேலியில் இருந்து ஒண்டரைக் கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு அதிசயக் கிணறு இருக்கின்றது அதன் பெயர் 'நிலாவரை.' எத்தனையோ வெளிநாட்டவர்கள் வந்து ஆராட்சி செய்தும் இந்தக் கிணற்றின் ஆழத்தை எவராலும் அறிய முடியவில்லை என்பது பெரும் ஆச்சரியமான விடயமாகும். அதுமாத்திரமல்ல, அந்தக் கிணற்றுக்குள் போடும் பொருட்கள் கீரிமலைக் கடலுக்குள் மிதப்பதாகவும் பலரும் பேசிக்கொள்கின்றார்கள்! நிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைக்கும் கீரிமலைக் கடலுக்கும் உள்ள இடைவெளித்தூரம் எட்டு மைல்தான்.

இறைக்க இறைக்க வற்றாத இந்த நிலாவரைக் கிணற்றில் பலர் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களும் உண்டு. இதனால் இந்தக் கிணற்றில் ஒரு குறிப்பிட்ட ஆழத்தின் கீழே சங்கிலி வலை அமைக்கப் பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

அச்சுவேலி மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்த பெரியோர்களையும் நாம் மறந்துவிட முடியாது. அவர்களில் முக்கியமானவர்கள் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், சேர். சிற்றம்பலம் ஏப்பரகாம் காடினர், அந்தக் காலத்திலேயே செவாலியர் பட்டம்பெற்ற அருளானந்தம், புலவர் தம்பிமுத்து, (இவர் ஆங்கிலக் கவிதை எழுதுவதில் தங்கப்பதக்கம் பெற்றவர்) ஆகியோர். இன்று வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் கணபதிப்பிள்ளை இயற்பெயர்கொண்ட வில்லிசை மன்னன் சின்னமணி அவர்களும் அச்சுவேலி மண்ணின் மைந்தரே.

அச்சுவேலி மக்கள் தெய்வ வழிபாட்டில் அதிக நம்பிக்கை உடையவர் கள். அங்குள்ள ஆலயங்களில் மரி மரி ஒலிக்கும் அந்த மணி ஓசைகளின் இன்ப நாதம் இயற்கையாகவே தெய்வ பக்தியை ஏற்படுத்தும்! அச்சுவேலியின் வட திசையில் உயர்ந்த கோபுரத்துடன் அமைந்திருக்கின்றது உலவிக்குளம் பிள்ளையார் கோவில். அந்தக் கோவிலுக்கு அண்மையில் சிவசக்தி கோவிலும் உண்டு. இது ஒரு சிறிய கோவிலாகும். உலவிக்களம் பிள்ளையார் கோவிலின் குருக்கள் பலராலும் மதிக்கப்பட்ட குமாரசாமிக் குருக்கள் ஆவார். அவரது மறைவிற்குப் பின்னர் அவ் ஆலயம் அலரது பிள்ளைகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

அச்சுவேலி - தொண்டைமானாறு வீதியில் மகிழ மரங்கள் சூழ வயிரவர் கோவில் ஒன்று உண்டு. இதை மகிழடி வயிரவர் கோவில் என்று சொல்வார்கள். அச்சுவேலியிலுள்ள பத்தமேனியிலும் பல கோவில்கள் இருக்கின்றன. 1960க்கு முன்னர் பத்தமேனியில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களில் சின்னமேள நடனங்களாலும், வாண வேடிக்கைகளாலும் ஊரே களைகட்டும்.

கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டிற்காக புரட்ஸ் சார்ந்த தேவாலயம் ஒன்று அச்சுவேலிச் சந்திக்கு அருகாமையிலும், மற்றும் இஸ்பிரித்துசாந்து தேவாலயம், அமெரிக்கன் மிசன் தேவாலயம், சூசையப்பர் தேவாலயம் என கிறிஸ்தவ தேவாலயங்களும் நிறைவே இருக்கின்றன.

இப்படியாக அளவற்ற சிறப்புகள் நிறைந்த அச்சுவேலியில் இன்று நான் இக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது போல அழகுடனும் செழிப்புடனும் இல்லை! காரணம் அச்சுவேலிக்கு அண்மையில் உள்ள பலாலி ராணுவ முகாமே! இன்று அச்சுவேலிக்குச் செல்பவர்கள் இக்கட்டுரையில் குறிப்பிட்ட பல கட்டிடங்களையும், தோப்புக்களையும் தேடி அலையவேண்டியிருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

# மானிப்பாய்

மானிப்பாய்! இந்தப் பெயர் வந்ததற்கு பலரும் பல காரணங்களைச் சொல்கின்றார்கள்! 'இடப்பெயர் ஆய்வு' என்னும் நூலில் ஆசிரியர் கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் எழுதுகையில் மானி + பாய் = மானிப்பாய். மானி என்பதற்கு மானமுள்ளவர், மானியம், என்னு சொற்களைக் குறிப்பதாகவும் இந்த மானியம் என்பது பரம்பரை பரம்பரையாக ஏராளமான வயல் நிலங்களை வைத்திருப்பவர்கள் அதை அந்தந்தக் கிராமத்தில் உள்ளவர்களுக்கு குத்தகை முறையில் கமம் செய்வதற்கு கொடுப்பார்கள். அந்த நிலத்தில் விளையும் பொருட்களின் ஒரு பகுதி அந்த நிலத்துக்குச் சொந்தமானவருக்குச் செல்லவேண்டும். அதை மானியம் என்பார்கள். அதை வசூல் செய்பவரை மானியக்காரர் என்பார்கள். அந்த மானியக்காரர்கள் பலர் இந்த ஊரில் வாழ்ந்திருந்ததால் மானிப்பாய் எனப் பெயர் வந்திருக்கலாம் என்கின்றார்

பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் எழுதிய ஒரு நூலில் மானி என்பது பிராமணர்களைக் குறிப்பதாகவும் இங்கு பிராமணர்கள் அதிகம் வாழ்ந்ததாகவும் அதனாலேயே இப் பெயர் வந்ததாகவும் குறிப் பிட்டிருக்கின்றார். இதையே பேராசிரியர் நாகசாமி அவர்கள் இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று விளக்கமாக மானி என்றால் பிராமணர்களை மட்டுமல்ல பிரமச்சாரி, கோயிற் கொண்டோர் என்னும் பொருள் தந்து நிற்கின்றது. அந் நிலையில் அத்தகையோர் வாழ்ந்த இடம் மானிப்பாய் எனப் பெயர் பெற்றதாக சொல்லியிருக்கின்றார்.

மானி+பாய் என்னும் இரு திராவிடச் சொற்களின் இணைவால் வந்த இவ் இடப்பெயர்

மானிப்பாய் என வந்ததாகவும் சில அறிஞர்கள் கூறியிருக்கின்றார் கள். நான் மானிப்பாயைப் பிறப்பிடமாகக்கொண்ட ஒரு பெரியவரிடம் இதற்கான விளக்கத்தைக் கேட்க, அவர் கூறிய விளக்கம் மிக வித்தியாசமாக இருந்ததால் அந்தப் பெரியாரின் கருத்தையும் உங்கள் கவனத்திற்குத் தருகின்றோம்.

இராமாயணத்தில் ஒரு முக்கியமான காட்சி! இராமர் வனவாசம் செய்துகொண்டிருந்த காலத்தில் சீதையின் அருகில் அழகிய மான் ஒன்று உலவ, அந்த மான்மீது மையல் கொண்ட சீதை அதைப் பிடித்துத் தரும்படி ராமரிடம் வேண்டுகின்றாள். தன் மனைவியின்மேல் கொண்ட காதலினால் இராமர் மானைத் துரத்திச் சென்றார். அந்த மாயமானும் இராமருக்கு போக்குக் காட்டியபடி ஏமாற்றிக்கொண்டே பாய்ந்து ஓடுகின்றது. களைப்படைந்த ராமபிரான் கெஞ்சும் குரலில் மானிடம் ஒரு வேண்டுகோள் விடுகின்றார் 'மானே! நிற்பாய்' என்பதுதான் அந்த வேண்டுகோள்! அன்று மானே நிற்பாய் என ராமபிரான் நின்று சொன்ன அந்த இடம்தான் மானிப்பாய் என்ற ஊர் என்றார். இந்தக் கதைக்கு உண்மை சேர்ப்பதுபோல மானிப்பாயிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தொலைவில் மாரிசன் கூடல் என்ற இடம் இருக்கின்றது. மாரீசன் என்பவன்தான் மானாக வந்தவன் என்பது இராமாயணக் கதை. பார் போற்றும் இராமபிரானின் கால்பட்ட பூமிதான் மானிப்பாய் என்பது அந்தப் பெரியவரின் வாதம். ஆக மானிப்பாய் என்னும் பெயர் வந்ததற்கு பல காரணங்களை அறிகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அழகிய கிராமங்களை உள்ளடக்கிய படடணம்தான் மானிப்பாய். ஆனைக்கோட்டை, சுதுமலை, சண்டிலிப்பாய், உடுவில், நவாலி போன்ற சிறிய சிறிய ஊர்கள் முக்கியமானவையாகும். இங்கு பல இந்து ஆலயங்களும், கிறிஸ்தவ ஆலயங்களும் தெய்வ மணங்கமழச் செய்கின்றன.

மருதடி விநாயகர் ஆலயம் மானிப்பாயில் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். செழுமை நிறைந்த மருத நிலத்தில், மருதமரத்தடி நிழலில் விநாயகர் வீற்றிருந்து மக்களுக்கு அருள்பாலிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். தமிழ் மக்களின் தனிப்பெருநாளான சித்திரைப் புத்தாண்டும், மருதடி விநாயகரின் தேரும் ஒரே நாளில் வருவது இவ் ஆலயத்தின் தனிச் சிறப்பாகும்.

இவ் ஆலயம் மட்டுமல்ல; ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலயம், சுதுமலை அம்மன் கோவில் போன்ற பிரசித்தி பெற்ற ஆலயங்களும் மானிப்பாய் நகருக்குள்ளேயே அடங்குகின்றது. இன்னும் மானிப்பாய் அன்னம்மாள் ஆலயம், ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயங்களும் இவைகளுக்குள் அடக்கம்.

கிறிஸ்தவ ஆலயங்களில் அர்ச் அந்தோணியார் ஆலயம் மானிப்பாயில் பிரசித்தி பெற்ற ஆலயமாகும். செவ்வாய்க் கிழமைகளில் யாழ் நகரில் பல பாகங்களிலும் வாழ்கின்ற மக்கள் மத வேறுபாடின்றி இவ் ஆலயத்தில் ஒன்றுகூடி ஆசிபெற்றுச் செல்வார்கள். மேலும் சுவாரசியம் என்னவென்றால் இந்த ஆலயத்தைச் சுற்றி இந்து மக்களே அதிகம் வாழ்கின்றார்கள்!

இதுபோல நவாலியிலுள்ள சென் பீற்றர் தேவாலயமும் புகழ்பெற்ற ஆலயமாகும். இவ் ஆலயம் உலகம் முழுவதும் புகழ்பெறக் காரணமாக இருந்தது. 1995ம் ஆண்டு இலங்கை ராணுவம் முன்னேறிப் பாய்தல் என்னும் இராணுவ நடவடிக்கையின்போது அங்கு இடம்பெயர்ந்த மக்கள் இவ் ஆலயத்தில்தான் தஞ்சமடைந்திருக்க, இலங்கை அரசின் குண்டுவீச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானங்களின் மூர்க்கத்தனமான குண்டு வீச்சினால் குழந்தைகள், தாய்மார்கள், முதியவர்களென நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் உயிர்களைப் பலிவாங்கியதனால்தான்!

மானிப்பாயிலுள்ள கிறீன் வைத்தியசாலை (Green Hospital) யாழ்ப்பாணம் முழுவதும் பிரசித்தி பெற்ற வைத்தியசாலை ஆகும்! சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் Mr.கிறீன் என்னும் அமெரிக்க வைத்திய மேதையால் இவ் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு குறைந்த செலவுடன் தரமான சேவையை மக்கள் பெறக்கூடியதாக இருந்ததனால் இவ் வைத்தியசாலை புகழ்பெறக் காரணமாக இருந்தது.

மிகச் சிறிய அளவிலேயே ஆரம்பிக்கப்பட்ட இவ்வைத்தியசாலை காலப்போக்கில் நோயாளிகள் தங்கியிருந்து வைத்தியம் செய்யக் கூடியதாகவும், பின்னர் கதிர்ப்பகுதி, சத்திரசிகிச்சைக்கூடம், பற்சிகிச்சைப்பிரிவு போன்ற நவீன வசதிகளுடன் மிகவும் புகழ்பெற்ற வைத்திய நிபுணர்களுடன் செயல்ப்பட்டு வருகின்றது. இங்கு ஏழைகளுக்கென இலவசமாக வைத்தியம் பார்க்கும் தர்மவாட் என்னும் பகுதியும் உண்டு!

காங்கேசன்துறை, தெல்லிப்பளை போன்ற பகுதிகள் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்தபோது தெல்லிப்பளையில் இயங்கிவந்த மனநோய் வைத்தியசாலை மூடப்பட்டு அங்கிருந்த நோயாளிகள் அனைவரும் இதே கிறீன் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு அதற்கென ஒரு பிரிவு அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். பின்னர் அதுவே நிரந்தரமாக்கப்பட்டு வடமாகாணம் முழுவதும் உள்ள மனநோயாளிகள் இங்கு வைத்தியம் பார்க்கின்றார்கள்.

இதுபோல யாழ் போதனா வைத்தியசாலையில் இந்திய ராணுவம் அட்டூழியம் நடத்தி சில வாரங்கள் வைத்தியசாலை ஸ்தம்பிதம் அடைந் திருந்த காலத்தில் அங்குள்ள பல நோயாளிகளில் ஏராளமானவர்களுக்கு மறு வாழ்வு கொடுத்ததும் இதே கிறின் வைத்தியசாலைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாயின் பெயர் புகழடைவதற்கு இவ் வைத்திசாலையும் ஒரு காரணம் எனச் சொல்லலாம். அனேகமானவர்கள் கிறீன் வைத்தியசாலை எனச் சொல்வதில்லை! மானிப்பாய் வைத்தியசாலை என்றே சொல்வார்கள்.

மானிப்பாய் என்னும் பெயர் துலங்கவைத்ததில் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் மிகப்பெரிய பங்கு இருக்கின்றது. வடமாகாணத்தில் பிரபலமான கல்லூரிகளில் இதுவும் ஒன்றாகும்! சைவபரிபாலன சபையால் நிர்வாகிக்கப்பட்ட இக் கல்லூரி கலவன் பாடசாலையாகவே தொடங்கப் பட்டாலும் பின்னர் அரசாங்கம் பொறுப்பேற்றவுடன் இருபாலருக்குமென இரண்டாகப் பிரிக்கப்பட்டு பெண்களுக்கென இந்து மகளிர் கல்லூரியும் உருவாக்கப்பட்டது.

மிசனறிமார்களாலேயே உருவாக்கப்பட்டது மானிப்பாய் மெமோரியல் கல்லூரி! இக்கல்லூரி ஆங்கிலக் கல்லூரியாக விளங்கியதுடன் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதிலும் குறிக்கோளாக இருந்தது. இவற்றைவிட மானிப்பாயில் வேறுபல இந்துமதப் பாடசாலைகளும் கிறிஸ்தவப் பாடசாலைகளும் இயங்குகின்றன.

மானிப்பாய் நகருக்கு இருக்கும் மிகப்பெரிய சிறப்பு என்னவென்றால் இலங்கையிலிருந்து இங்கிலாந்துவரை புகழ்பெற்ற சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன் அருணாசலம் ஆகிய ஆரசியல் ஞானிகளையும். முதலியார் தியாகராசா, திருவாளர்கள் சங்கரப்பிள்ளை, வீரசிங்கம் (இவர் பெயரிலேயே யாழ் - வீரசிங்கம் மண்டபம் இருக்கின்றது) போன்ற இன்னும்பல பெரியார்களையும் பெற்றெடுத்த மண் மானிப்பாயாகும்!.

புலவர் சோமசுந்தரப் புலவர் பிறந்த மண்ணும் மானிப்பாயில் உள்ள நவாலியில்தான்.

ஈழத்துக் கலைத்துறையின் தந்தை என கௌரவிக்கப்படும் கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்கள் பிறந்ததும் இந்த மானிப்பாயிலேயே! இது மாத்திரமல்ல! இலங்கையிலேயே ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞனைக் கௌரவித்து அவர் பெயரில் ஒரு கலையரங்கம் உருவாக்கப்பட்டதென்றால், அதுவும் நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாபூஷணம் திருமிகு. நவாலியூர் நா செல்லத்துரை அவர்களுக்குத்தான் (கலையரசு ஐயா அவர்களின் பெயரில்கூட இதுவரை ஒரு கலையரங்கம் கட்டப்படவில்லை) இந்தப் பெருமகனார் தற்பொழுது தான் திருமணம் செய்த ஊரான யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் வாழ்ந்து வருகின்றார்.

மானிப்பாயின் மண்வளத்தைப்பற்றிச் சொல்லவே தேவையில்லை! ஆம்! விவசாயத்திற்கு ஏற்ற செம்மண் வளம் கொண்டது மானிப்பாய்! இந்த மண் நீரை உறிஞ்சி வைத்திருக்கும் தன்மை கொண்டதனால் வயல்கள் தோட்டங்கள் அனைத்தும் எப்பொழுதும் பசுமையாகவே இருக்கும். புகையிலை உற்பத்தியாளர்கள் இங்கு அதிகம். இங்குள்ள கிணறுகளும் மிகவும் ஆழம் குறைந்தவைகளாகவே காணப்படுகின்றன. திருநெல்வேலிக்குப் பின்னர் மானிப்பாய் தண்ணீர்தான் சுவையான தண்ணீரென ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

அரசியலைப்பற்றி அதிகம் சொல்வதற்கு இல்லை. மானிப்பாய் உடுவில்தொகுதிக்குள் அடங்குவதால் இங்கு தொடர்ச்சியாக பலமுறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் தமிழரசுக்கட்சி, பின்னர் தமிழர் கூட்டணியைச் சேர்ந்த அமரர் தர்மலிங்கம் அவர்கள்தான். அவருடைய மகன் சித்தார்த்தன் தற்பொழுது புளட் இயக்கத்தின் தலைவராக இருப்பவர். அன்று சில காலங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்டப் பொறுப்பாளராக இருந்த அமரர் சிவநேசன் அவர்கள் பிறந்ததும் மானிப்பாய்க்குள் உட்பட்ட உடுவிலாகும்

இப்படியாக பல சிறப்புகள் இந்த சின்ன ஊரான மானிப்பாய்க்குள் அடங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14

# அளவெட்டி

நமது ஈழமணித் திருநாட்டின் ஒவ்வொரு ஊர்களையும் தனித்தனியாகப் பிரித்துப் பிரித்து அதன் வாசங்களை முகர்ந்து பார்க்கும்போது ஒரு ஊரைவிட இன்னொரு ஊர் சிறப்பானதாகவே இருக்கின்றது! இந்தச் சிறப்புகளெல்லாம் காலம் காலமாக இருந்து வந்தாலும் ஒரு ஊரில் வசிப்பவர்கள் மற்ற ஊர்களின் சிறப்புக்களை அறிந்திருப்பவர்கள் மிகக் குறைந்தவர்களாகவே இருக்கின்றார்கள். அந்த வகையில் அளவெட்டி கிராமத்தின் சிறப்புக்களை நாம் தேடியபோது அது சிறிய கிராமமாக இருந்தாலும் ஒரு நகரத்திற்குரிய அனைத்து அம்சங்களும் அமையப்பெற்றிருந்தது. அந்தக் கிராமத்தில் கலைஞர்களைப் பற்றியதொரு பெரும் புதையலே நமக்குக் கிடைத்தது! கல்விமான்கள், இலக்கியவாதிகள், நாதஸ்வரக் கலைஞர்களோடு பிரபலமான கல்லூரிகளும் புகழ்பெற்ற ஆலயங்களும் நிறைந்த ஒரு அழகிய பூங்காவாகவே திகழ்கின்றது அளவெட்டி.

அளவெட்டி கிராமமானது யாழ்ப்பாணத்திலிருந்து நேர் வடக்கே அமைந்துள்ள பாரிய துறைமுக நகரமாகிய காங்கேசன்துறை செல்லுகின்ற சாலையில் ஆறாம் கட்டையடியில் வரும் சுன்னாகம் சந்தியில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கேயுள்ள ஸ்கந்தவரோதயா கல்லூரியைத் தாண்டியதும் அளவெட்டிக்குச் செல்லும் ஒரு பாதையும், ஏழாம் கட்டையடியில் வரும் மல்லாகம் சந்தி யில் இருந்து மேற்கு நோக்கிச் சென்றால் இன்னொரு பாதையும், ஒன்பதாம் கட்டையடியில் வரும் தெல்லிபளைச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி மற்றொரு பாதையுமாக அளவெட்டியைச் சென்றடைவதற்கு பல வழிப்பாதைகள் இருக்கின்றன.

சுமார் ஒன்பது சதுரமைல் பரப்பளவு கொண்ட அளவெட்டியில் உள்ள சிற்றூர்களுக்கு அங்கு வாழ்கின்ற மக்கள் செய்கின்ற தொழில் களின் அடிப்படையைக் கொண்டு கொல்லர் தோட்டம், தச்சம்புரம், வண்ணாவளவு, தட்டாகடவை, அம்பட்டாவத்தை என ஊர்ப்பெயர்கள் இருப்பதும் ஆச்சரியமானது!.

ஈழமணித் திருநாட்டைப் பொறுத்தவரையிலும் யாழ்ப்பாணம் ஆலயங்கள் பொலிந்த பகுதியாகவே விளங்குகின்றது. அதில் அளவெட்டியும் சைவ ஆலயங்கள் அதிகம் நிறைந்த ஒரு பகுதியாகும்.

மாருதப்புரவீக வல்லியால் வடபகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயங்களில் மூன்றினைத் தன்னகத்தே கொண்டது அளவெட்டி. அவை மூன்றும் வினாயகர் ஆலயங்கள். அவை தெற்கில் அமைந்துள்ள பெருமாக்கடவை வினாயகர் ஆலயம், மத்தியிலே அளவெட்டியில் புகழ் பெற்ற கும்பளாவளை விநாயகர் ஆலயம் மற்றும் அழகொல்லை விநாயகர் ஆலயமாகும்.

மேலும் அளவெட்டியில் உள்ள ஆலயங்களாவன: குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயம், தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலயம், கேல்வத்தை மாரியம்மன் ஆலயம், தம்மளையிற் சிவாலயம், பலாவடிப் பிள்ளையார் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், ஐயனார் ஆலயம், இவை தவிர இராவத்தை வயிரவர், கொட்டாஞ்சீமா வைரவர், இந்தையிட்டி வைரவர், நரசிங்க வைரவர் என பல வைரவர் ஆலயங்களும் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் முத்துமாரி அம்மன், மற்றும் கேல்வத்தை மாரியம்மன் ஆலயத்திலும்; வேறு சில சிறிய ஆலயங்களிலும் ஆடு, கோழிகளை வெட்டிப் பலியிடும் வழக்கம் முன்பு இருந்தது! பின்பு சமய, சமூக, சீர்திருத்தவாதிகளின் பெரு முயற்சியால் இவ்வழக்கம் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே நிறுத்தப்பட்டுவிட்டது.

அளவெட்டியில் இரண்டு கிறிஸ்தவ ஆலயங்கள் இருக்கின்றன. அவற்றுள் புனித சூசையப்பர் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்ததாகும். மற்றது மாகியப்பிட்டி வீதியில் அமைந்துள்ள தென்னிந்தியத் திருச்சபை தேவாலயமாகும்.

அளவெட்டியை யாழ்ப்பாணம் முழுவதற்குமாக தெரியவைத்ததில் அருணோதயாக் கல்லூரிக்குப் பெரும் பங்கு உண்டு. கல்வித் தரத்தில் மட்டுமல்ல; விளையாட்டுக்களிலும், குறிப்பாக ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் கால்பந்தாட்டத்தில் முன்னணியில் திகழ்ந்த கல்லூரிகளில் அருணோதயாக் கல்லூரியும் ஒன்றாகும். இது தவிர இன்னும் ஆறு சிறிய பாடசாலைகளும் இருக்கின்றன.

கல்விக்கூடங்களின் சிறப்புகளைக் கூறும்போது அளவெட்டியில் பிறந்த கல்விமான்களைப்பற்றியும் கூறாதிருந்துவிட முடியாது. இவர்களில் முக்கியமானவர்களில் ஒருவர் வைத்தியநாத முனிவர். இவர் தமிழில் செய்யுள் ரூபமாக 'வியாக்கிரபாத புராணம்' பாடியவர். இவர் பாடிய புராணம் மதுரைப் பேரகராதியில் பதியப்பட்டிருக்கின்றது.

மற்றொருவர் சுவாமி சிவசத்தா என்பவர்! இவர் தனது இருபத்து ஏழாவது வயதில் 'கைலைப் புராணம்' என்னும் நூலை இயற்றி தெற்காசிய நாடுகளில் தமிழைப் பரப்பியவர். இவர்போல மற்றுமொருவர் தவளக்கிரி முத்துமாரி அம்மாள் ஆலயக் குருக்களாக இருந்த வீரசைவப் பெரியார் சிவத்திரு சி.மாணிக்கத் தியாகராச பண்டிதர். சிலேடை வெண்பா உட்படப் பல இலக்கியங்களைப் படைத்த இவர் சேர்.பொன் இராமநாதன் அவர்களின் இலக்கியச் சகபாடி ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொருவர். திரு.பொ.கனகசபாபதி என்னும் கல்விமான். இவரை அளவெட்டி ஈன்ற சோக்கிரட்டீஸ் எனச் சொல்வார்கள்! இவர் அளவெட்டி சீனன் கலட்டி தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்று திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உப அதிபராக இருந்து, பின்னர் புத்தூர் சோமஸ்க்கந்தா கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றில் அதிபராகக் கடமையாற்றி தற்பொழுது கனடாவில் உள்ள ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபையின் பல்கலாச்சார ஆலோசகராகக் கடமையாற்றுகின்றார். சமூகவியல், உளவியல், இலக்கியம், கல்வியியல் போன்ற துறைகளில் ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ள இவரது கட்டுரைகளின் தொகுதியொன்று 'அதிபரின் கூரிய பார்வையில்' என்னும் பெயரில் 1998ல் நூலாக வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

அளவெட்டி பெற்ற அறிவுச் செல்வங்களில் மற்றுமொருவர் திருநெல்வேலியில் பிறந்து அங்குள்ள சைவாசிரியர் கலாசாலையில் இருபத்தெட்டு வருடங்கள் உப அதிபராகக் கடமை புரிந்த திரு.பொ.கைலாசபதி அவர்கள். யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற கல்லூரிகளில் ஒன்றான அளவெட்டி மகாஜனக் கல்லூரிக்கு அதிபராக பதவியேற்று தனது ஓய்வுக் காலம்வரை அங்கு அதிபராகக் கடமையாற்றியவர். பலரும் இவரை அளவெட்டியின் மைந்தர் என்றே கூறும் அளவிற்கு அளவெட்டியோடு ஐக்கியமாக வாழ்ந்தவர். திருநெல்வேலியில் பிறந்த இவர் ஓய்விற்குப் பின்னர் புலம்பெயர்ந்து கனடா சென்று அங்கும் கல்வித்துறையில் பணியாற்றி தனது அனுபவங்களை நூல்களாகவும் வெளியிட்டிருந்தார். கனடாவிலேயே அமரத்துவமும் அடைந்தார்.

இலக்கியத்துறையில் இன்றும் அழியாப் புகழுடன் வாழும் இலக்கியங்களைப் படைத்தவர்களின் சிலரை அளவெட்டியும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் அ.ந.கந்தசாமி என்னும் படைப்பாளி காலத்தை வென்றவர்! கவிதை, சிறுகதை, நாடகம், நாவல், விமர்சனம் என இலக்கியத்தின் பல பகுதிகளையும் தொட்டவர்! இவர் பிரான்ஸின் புகழ்பெற்ற எழுத்தாளரான எமிலி சோலாவின் 'நாநா' என்னும் நாவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் மொழிபெயர்த்து இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தவர். தீவிர முற்போக்குச் சிந்தனையுடைய இவர் கம்யூனிஸ்ட் கட்சின் உத்தியோக பூர்வமான பத்திரிகையான தேசாபிமானி, பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தவர். ஈழத்து மறுமலர்ச்சி எழுத்தாளர்களில் முக்கியமானவர் அ.ந.க. அவர்கள்

அடுத்தவர் நாற்பதுகளில் பூத்த 'மறுமலர்ச்சி" என்னும் பத்திரிகை யின் ஸ்தாபக உறுபபினரான அ.செ.முருகானந்தம் அவர்கள். இவர் ஈழகேசரி, வீரகேசரி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவர். அந்தக்காலத்தில் தமிழ்நாட்டில் வெளிவந்த சிறுகதைத் தொகுப்பொன்றில் இடம்பெற்ற இவரது 'மனித மாடு' என்னும் சிறுகதை அனைத்து இலக்கியவாதிகளாலும் அதிசயமாகப் பார்க்கப்பட்ட ஒன்றாகும்!.

தொடர்ந்து நாம் சந்திக்கப்போவது 'மகாகவி' என்ற உருத்திரமூர்த்தி அவர்களை. தமிழ்க் கவிதைத்துறையில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொண்ட இவர் தமிழ்க் கவிதையை எளிமையாகவும், அழகாகவும் நகர்த்தியதில் இவரது பங்கு முக்கியமானது. இவரின் 'கோடை' 'புதியதொரு வீடு' என்னும் கவிதை நாடகங்களும் 'கண்மணியாள் காதை' என்ற வில்லுப்பாட்டும் தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் பலமுறை மேடையேற்றப்பட்டிருக்கின்றன. இன்றும் மேடையேற்றப்பட்டு வருகின்றன.

அமரர் மகாகவி அவர்களுடைய புதல்வர் திரு சேரன் அவர்களும் சிறந்த முற்போக்குச் சிந்தனையுடைய இலக்கியவாதி. இவருடைய எழுத்துக்கள் பல 'இரண்டாவது சூரிய உதயம்' 'யமன்' 'கானல் வரி' 'எலும்புக்கூடுகளின் ஊர்வலம்' 'எரிந்கொண்டிருக்கும் நேரம்' போன்ற பெயர்களில் நூல் உருவாக வெளிவந்திருக்கின்றன. தற்பொழுது கனடாவில் ஜோர்க் பல்கலைக் கழகத்தின் அகதிகள் ஆய்வுக்கான நிலையத்தில் முதுநிலை ஆய்வாளராகவும், அதே பல்கலைக் கழகத்தில் சமூகவியல் விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைவாழ் தமிழ் மக்களின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் போது மறக்கமுடியாத அரசியல் தலைவர்களில் ஒருவரான அமரர் திரு.வி.பொன்னம்பலம் அவர்கள் பிறந்த மண்ணும் அளவெட்டிதான். சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் தனது கல்விச் சேவையை ஆரம்பித்து பின்னர் முள்ளியவளை மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி பாட்டாளி மக்களின் உயர்விற்காகப் பாடுபட்டவர்.

யாழ் மண்ணில் இடதுசாரி இயக்கத்தின் ஆரம்பகாலம் திரு.வி.பொன்னம்பலம் அவர்களோடு பின்னிப் பிணைந்ததாகும். யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு இயக்கத்தை விரிவுபடுத்துவதில் கடுமையாக உழைத்த இவரைத் தலைவராகக் கொண்ட அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ் மாவட்டத்தில் முன்னணியில் நின்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்களில் ஒன்றாகும். இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியில் பலமுறை போட்டியிட்டும் பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பு இவருக்கு. கிடைக்கவேயில்லை!.

அளவெட்டியை சரஸ்வதி குடியிருக்கும் கிராமம் என்று சொல்வார்கள்! காரணம் கலைகளிலே தெய்வீகக் கலை எனப் போற்றப்படும் நாதஸ்வரக் கலையில் புகழ்பெற்ற ஜாம்பவான்களெல்லாம் பிறந்த மண் அளவெட்டிதான்!

தவில் நாதஸ்வர இசையில் நாடறிந்த சிங்கமாக விளங்கிய தவிலரசன் தட்சணாமூர்த்தி அவர்களை யாரும் எளிதில் மறந்துவிடமுடியாது! இவர் இலங்கையில் மட்டுமல்ல; சிங்கப்பூர், மலேசியா, தமிழ்நாடு என தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளில் எல்லாம் தனது தவில் ஓசையால் மக்களின் மனங்களை வென்றவர்!

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே தவில் வாசிப்பதற்கு ஆயிரத்து ஐநூறு ரூபா சன்மானம் வாங்கிய முதல் தவில் கலைஞர் தட்சணாமூர்த்தி அவர்களே! இவரின் தவில் வாசிப்பைக் கேட்டுவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உலகத்தின் எட்டாவது அதிசயம்' என்று மணிஐயர் அவர்களும், 'இவன் கடவுளின் அவதாரம்' என்று நாஸ்வரக் கலைஞர் திருத்துறைப்பூண்டி சொக்கலிங்கம் அவர்களும் புகழாரம் சூட்டியிருக்கின்றார்கள். இத்தனை சிறப்புகளும் உடைய அந்தத் தெய்வீகக் கலைஞன் 13-05-75ல் தனது நாற்பத்திரண்டாவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

தட்சணாமூர்த்தி அவர்களுக்கு நிகரான நாதஸ்வரக் கலைஞர் அளவெட்டி என்.கே. பத்மநாதன் அவர்களாவார். இவரின் தந்தையார் என்.கந்தசாமிப்பிள்ளை அவர்கள் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் ஆஸ்தான நாதஸ்வரக் கலைஞராவார். அதேபோல் அமரர் பத்மநாதன் அவர்களும் பல ஆண்டுகளாக நல்லூர் கந்தாசாமி கோவிலின் ஆஸ்தான நாதஸ்வரக் கலைஞராக இருந்துள்ளார். இலங்கை அரசின் மிக உயர்ந்த கௌரவ விருதான 'ஸ்ரீ கலாசூரியர்" விருதினைப் பெற்ற இவர் தனக்கு நிலையானதொரு வாரிசு வேண்டுமெனக் கருதி தனது மகன் முரளிக்கு நாதஸ்வரம் பயிற்றுவித்து பின்னர் வித்துவான் பட்டப்படிப்பை இந்தியாவில் படிப்பித்து நாடு திரும்பிய முரளியை 1987ல் இந்திய அமைதிப் படை ஒருவனின் இலக்கற்ற குண்டு உயிரைப் பறித்தெடுத்தது.

அளவெட்டியில் பிறந்து அம்மண்ணுக்குப் புகழ் சேர்த்த மற்றும் சில தவில் கலைஞர்களை இங்கு பார்ப்போம். இவர்களில் மூத்த தவிலாசிரியர் திரு.கணேசரத்தினம். இவரது மகன் கணேசரத்தினம் அவர்களும் சிறந்த தவிற்கலைஞராவார். மற்றும் தவில் மேதை குமரகுரு, நாஸ்வர மேதைகள் பாலகிருஷ்ணன், சிதம்பரநாதன், சிவகுருநாதன் போன்றவர்களுடன் இன்று முன்னணி தவிற் கலைஞராக விளங்குபவர் அமரர் தட்சணாமூர்த்தி அவர்களின் புதல்வர் உதயசங்கராவார். இவர் யாழ் பல்கலைக்கழக இசைப்பீடத்தால் 'கலாநிதி" பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அளவெட்டியின் சிறப்புமிக்க மனிதர்களையெல்லாம் வரலாற்றில் பதிந்து கொண்ட நாங்கள் அளவெட்டியில் பிறந்த மறக்கமுடியாத இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களை இறுதியில் நினைத்துக் கொள்கின்றோம்! அவர்கள் இலங்கையில் அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்ட மறுநாள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட இறைகுமாரன், உமைகுமாரன் ஆகிய இணைபிரியாத இரண்டு நண்பர்களாவார்கள். (இயக்கங்களுக்குள் ஏற்பட்ட கருத்து மோதல்களில் ஒரு இயக்கத்தால் கொல்லப்பட்டதாகவும் மக்கள் பேசிக்கொள்கின்றார்கள்.)

தங்களின் உழைப்பையும், உயிரையும் தமிழ் மக்களின் விடிவிற்காகவும், விடுதலைக்காகவும் முழுமையாக அர்ப்பணித்த இந்த இரண்டு இளைஞர்களின் உயிர்களைக் கொலைஞர்கள் சூறையாடியதால் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் வீறுகொண்டெழுந்தது ஒரு வரலாறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

# மாதகல்

சங்க காலத்தில் நிலங்களை ஐந்து வகையாகப் பிரித்து வைத்திருந்தார்கள். அவையாவன: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவனவாகும். மருதமும் நெய்தலும் ஒருங்கே சேர்ந்த இடம்தான் மாதகல் ஆகும்! இது யாழ் மாவட்டத்தில் உள்ள காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதியில் வடமேற்குக் கரையோரமாக அமைந்துள்ளது.

மாதகல் நகரமும் அல்ல! அதேநேரம் கிராமம் என்றும் சொல்லிவிட முடியாது! ஆனாலும் பொதுவாக அனைவராலும் கிராமம் என்றே சொல்லப்படுகின்றது. இது சரித்திரப் பிரசித்தி பெற்றதொரு கிராமமாகும். இலங்கையின் சரித்திர நூல்களில் மாதகலை யம்புக்கோணப்பட்டினம் என்றே சொல்லப்பட்டிருக்கின்றது. தற்பொழுது மாதகலில் சம்பில்துறை என்னும் ஒரு இடம் இருக்கின்றது. இதுதான் அன்றைய யம்புக்கோணப் பட்டினம் என்று இடப்பெயர் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

மாதகல் என்னும் இடப்பெயருக்குக் கூறப்படும் இன்னுமொரு காரணம்... மாதகல் என்றால் மாது + அகல் அதாவது மாது வந்து அகன்றபடியால் மாதகல் என்றாயிற்று. இந்தியாவில் அசோகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரவர்த்தியின் ஆட்சிக்காலத்தில் அசோகச் சக்கரவர்த்தியின் மகளான சங்கமித்திரை இலங்கையில் புத்த சமயத்தைப் பரப்பும் நோக்குடன் வெள்ளரசு மரக்கிளையைக் கொண்டு வந்து இறங்கிய இடமே சம்பில்துறையாகும்! அந்த வெள்ளரசுதான் இன்று அனுராதபுரத்தில் இருக்கும் புனித விருட்சமாகிய வெள்ளரசு என்று மகாவம்சம் சொல்லுகின்றது.

சங்கமித்திரை சம்பில்துறையில் இருந்து கந்தரோடை ஊடாக அனுராதபுரம் சென்றதாக மகாவம்சம் சொல்லுகின்றது. ஆக மாது வந்து இறங்கி அகன்ற இடம் மாதகல் என அழைக்கப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகின்றார்கள்.

மாதகல் வடக்கும் மேற்கும் பாக்கு நீரிணையையும், கிழக்கே மாரீசன்கூடல், இளவாலை, விளான் ஆகிய கிராமங்களையும், தெற்கே பண்டத்தரிப்பு, சில்லாலை ஆகிய ஊர்களையும் எல்லைகளாகக் கொண்டது. இக்கிராமம் அண்ணளவாக ஐந்து சதுரமைல் பரப்பளவைக் கொண்டது. நிலத்தின் அமைப்போ கடல் மட்டத்தில் இருந்து சற்று உயரமானதாகும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பிரதான வீதி மானிப்பாய் சங்கானை ஊடாக மாதகலை வந்தடைகின்றது. இவ்வீதி மாதகல் மேற்குச் சந்திவரை செல்கின்றது. இன்னொரு பிரதான வீதி சம்பில்துறையில் இருந்து கடற்கரையோரமாக கீரிமலையைச் சென்றடைகின்றது. மாதகலில் இருந்து யாழ்ப்பாணம், கீரிமலை, காங்கேசன்துறை ஆகிய இடங்களுக்கு நேரடிப் பேருந்து வசதிகளும் இருக்கின்றன.

மாதகல் கடல் எல்லையைக் கொண்டதாலும், கடல் அடித்தள மேடைகள் யாழ் குடாநாட்டைச் சுற்றி அமைந்துள்ளமையாலும் (கடல் அடித்தள மேடை என்பது கடலுக்கு அடியே ஆழம் குறைந்த பகுதி மேடைபோல் காணப்படும்.) இப்பகுதிகளில் மீன்களுக்குத் தேவையான உணவு வகைகள் நிறைய கிடைப்பதனாலும் ஆழமான பகுதிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள மீன்களெல்லாம் உணவு உண்பதற்காக இம்மேடையை நாடி வருவதனால் மாதகல் கடற்பரப்பில் மீன் பிடிக்கும் மீனவர்கள் தினமும் நிறைய மீன்களுடன்தான் கரை திரும்புவார்கள்!

இக்கிராம மக்களின் பிரதான தொழில் விவசாயமும், மீன் பிடித்தலும் தான். அத்துடன் மின்தறி ஆலை, நெசவு சாலை, ஆகியனவற்றுடன் குடிசைக் கைத்தொழிலாக பனங்கட்டி காய்ச்சுதல், தும்புத்தடி செய்தல், ஊதுபத்தி செய்தல், மற்றும் தையல், கால்நடை வளர்ப்பு போன்றவையும் உண்டு.

விவசாயிகள் வெங்காயம், மிளகாய் போன்றவற்றுடன் புகையிலையும் பயிரிட்டு விளைச்சல் முடிவில் தோட்டக் காணிகளிலேயே வைத்து பெரிய வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்பனை செய்துவிடுவார்கள். தங்களுக்குத் தேவையான சிறுதானியங்கள், மரக்கறி வகைகளை வீடுகளில், அல்லது தோட்டங்களின் ஒரு ஓரமாகப் பயிரிட்டுக் கொள்வார்கள்.

இங்கு பனை மரங்கள் அதிகமாக உள்ளதால் கருப்பநீர் அதிகமாக இறக்கப்பட்டு அதனைப் பாணியாகக் காய்ச்சி பனை ஓலைகளில் பின்னப்பட்ட சிறு சிறு குட்டான்களில் ஊற்றி பனங்கட்டியாக விற்பதுடன், போதி, மற்றும் சம்பில்துறை துறைமுகங்களூடாக பனங்கட்டியுடன் பனாட்டு, ஒடியல்மா போன்றவையும் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக வரலாற்று நூல்கள் மூலமாக அறிய முடிகின்றது. அதுமாத்திரமல்ல! பிறந்த குழந்தைகளுக்கு பருக்கப்படும்; நாட்டு மருந்துகளில் ஒன்றான 'கல்லாக்காரம்' என்று சொல்லப்படும் பதநீரில் தயாரிக்கப்படும் அந்த மருந்தை வாங்குவதற்கு குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஏராள மானவர்கள் மாகலுக்கு வந்து செல்வார்களாம்!

ஆரம்பத்தில் கைத்தறி ஆலைகள் மூன்று நான்கு இருந்தன. இவ் ஆலைகளில் வேட்டி, சேலை, துவாய், சாரம் போன்ற நூல் ஆடைகளே உற்பத்தி செய்யப்பட்டன. மின்தறி ஆலைகள் வந்ததன் பின்னர் நைலக்ஸ் சேலைகள், காற்சட்டைத் துணிகள் என்பனவும் உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டன. இவ் ஆலைகளில் அனேகமாகப் பெண்களே வேலை செய்தார்கள். இதனால் அங்கு வாழ்ந்த பெண்களும் உழைப்பாளிகளாகவே காணப்பட்டார்கள்.

மாதகலில் இரண்டு மகாவித்தியாலயங்களும், இரண்டு கனிஸ்ட்ட பாடசாலைகளும் இருக்கின்றன. உயர் கல்வி கற்பதற்கு அயலூர்களில் உள்ள உயர் கல்லூரிகளுக்கே செல்கின்றார்கள்.

இங்கு பெரிய அரச மருத்துவமனை ஒன்றுள்ளது. அயல் கிராமங் களான பண்டத்தரிப்பு, சில்லாலை, விளான், பிரான்பற்று போன்ற கிராமங்களில் வாழ்பவர்களும் தங்கள் வைத்தியத் தேவைகளுக்கு இங்கு வந்துதான் சிகிச்சை பெற்றுக்கொள்வார்கள். இதைவிட வேறு சில ஆயள்வேத வைத்தியர்களும் இருந்தார்கள் (இப்பொழுது இருக்கின்றார்களோ தெரியாது) இவர்களை பரியாரியார் என்று அழைப்பார்கள்.

இங்கு இந்துக்களும் கிறிஸ்தவர்களுமே வாழ்கின்றார்கள். தேவாலயங்களைவிட இந்துக் கோவில்களே அதிகம் உள்ளன. அவைகளில் கண்ணகி அம்மன் ஆலயம் பிரசித்தம் ஆனது. இந்த ஆலயம் உருவானதற்குப்பின் பெரிய வரலாறே இருக்கின்றது.

கஜபாகு மன்னன் தாங்கள் தங்கிய இடங்களில் எல்லாம் கண்ணகி சிலையையே வைத்து வணங்கினானாம். இதற்காக பல கண்ணகி சிலைகள் சம்பில் துறையில்தான் கொண்டுவந்து இறக்கப்பட்டதாம்! சுளிபுரம், பறாளை, பிரான்பற்று, சண்டிலிப்பாய், மட்டுவில், சுட்டிபுரம், புளியம்பொக்கணை ஆகிய ஊர்களில் இருக்கின்ற கண்ணகி அம்மன் ஆலயங்களெல்லாம் கஜபாகு மன்னன் காலத்திலேயே கட்டப்பட்டவை யென்றும் இறுதியாக கண்டிக்கு கண்ணகி சிலையைக் கொண்டு சென்றும் கோவில் கட்டியதாகவும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

1914ம் ஆண்டு நடைபெற்ற உலக யுத்தத்தின்போது மாதகலில் வசித்த சரவணமுத்து பரம்பரையைச் சேர்ந்த ஒருவர் கப்பல் மூலமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வந்தபோது தான் உயிர்தப்ப வேண்டுமென நேர்த்தி செய்து கொண்டுவந்த ஆறுமுக சுவாமியே கண்ணகி அம்மன் ஆலய சித்திரத்தேரில் வீதி உலா வருகின்றார்.

மாதகலைப்பற்றிய இன்னுமொரு வரலாற்றுச் செய்தி - ஒல்லாந்தர் காலத்தில் 'போதி' துறைமுகமாக இருந்தபோது இவ்வூரின் கிழக்கே உள்ள 'கோட்டகிரி' என சொல்லப்படும் உப்புத்தரவைப் பகுதியில் ஒல்லாந்தர் கோட்டை கட்டியிருந்ததாகவும் அது இன்று முற்றாக அழிந்து ஒரு திடலாக இருந்தாலும் கோட்டை இருந்த காரணத்தால்தான் அவ் இடத்தை 'கோட்டகிரி' என அழைக்கப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான தாச்சிமறித்தல், கிட்டி அடித்தல், கெந்திப் பிடித்தல் ஆகியவன இங்கு பிரசித்தி பெற்ற விளையாட்டுகளாகும். இவர்கள் சுற்றியுள்ள அயல் கிராமங்களுக்குச் சென்று தாச்சிப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளையும் பெற்றிருக் கின்றார்கள். இங்கு பிரசித்தி பெற்ற மற்றுமொரு விளையாட்டு மாட்டுவண்டிச் சவாரி நடாத்துவது. அதுபோல சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் போர்த்தேங்காய் அடிக்கும் போட்டியும் மாதகலில் பிரதான விளையாட்டுகளாகும்.

இப்பொழுதெல்லாம் இப்படியான விளையாட்டுக்கள் எங்காவது சில ஊர்களில் எப்போதாவது நடைபெறுகின்றன. போர்த்தேங்காய் அடித்தல் முற்றாகவே இல்லாமல் போய்விட்டது.

மாதகலில் வாழ்ந்த மக்களில் ஐம்பது வீதமான மக்கள் வெளிநாடு களிலும், வேறு ஊர்களில் வாழ்ந்து வந்தாலும் மாதகல் கிராமத்தின் இந்தச் சிறப்புக்கள் வரலாறுப் பதிவுகளாக என்றென்றும் நிலைத்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

# நல்லூர்

இந்துமா சமுத்திரத்தில் எழில் மிளிரும் முத்தாய்
இலங்குகின்ற தமிழ் ஈழத்தில் கொள்ளை அழகாய் மிளிருகின்ற
செழிப்புறு திருநகராம் யாழ்ப்பாணத்தில் உள்ள
நல்லூர் நகருக்கு வரலாறுகள் பலவுண்டு.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே ஈழத்தின் வடபாகம் தமிழ் வேந்தர்களால் ஆளப்பட்டு வந்திருக்கின்றது. 1044ம் ஆண்டில் இலங்கை முழுவதும் தமிழ் வேந்தராகிய சோழரின் ஆட்சிக்குட்பட்ட காலமது. அக்காலத்தில் பொலநறுவையே ராசதானியாக்கப்பட்டது.

1216 தொடக்கம் இலங்கையில் தனி அரசு நிறுவலாயிற்று. பாண்டிய மன்னனின் சேனைக்குத் தலைவணங்கிய ஆரியச்சக்கரவர்த்தி என்பவன் 1284ல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றித் தனியரசை அமைத்தான். அப்போதைய தலைநகரம் சிங்கை நகராகும்.

ஆரியச்சக்கரவர்த்தியான கனகசூரியன் சிங்கை நகரில் இருந்து ஆட்சிபுரிந்த காலத்தில் கோட்டை அரசினை ஆண்டுகொண்டிருந்த ஆறாம் பராக்கிமபாகு தனது வளர்ப்பு மகனான சப்புமால் குமரையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் செண்பகப்பெருமாளை கனகசூரியனோடு போரிட்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுமாறு அனுப்பிவைத்தான். செண்பகப் பெருமாளின் படை வலிமைக்கும், போர்த்திறமைக்கும் எதிர்நிற்க முடியாத கனகசூரியன் தனது குடும்பத்தோடு இந்தியாவிற்குத் தப்பியோடினான். செண்பகப்பெருமாள் சிங்கைநகரை அழித்து நிர்மூலமாக்கி கோட்டை திரும்பினான்.

தன் மகள்வழிப் பேரனின் ஆட்சி உரிமைக்கு செண்பகப்பெருமாள் தடையாக ஆகலாம் என அஞ்சிய ஆறாம் பராக்கிரமபாகு பசப்புமொழிகள் பல கூறி செண்பகப்பெருமாளை யாழ்ப்பாண அரசின் மன்னனாக்கி அனுப்பி வைக்கின்றான்.

செண்பகப்பெருமாள் மீண்டும் யாழ்ப்பாணம் வந்த காலத்தில் தன்னால் அழிக்கப்பட்ட சிங்கைநகரைப் புனரமைப்பு செய்யாது பற்பல வளங்கள் நிறைந்திருந்த நல்லூரைத் தலைநகராக்கி இசங்கபோதி புவனேகபாகு என்னும் பட்டப்பெயரைத் தாங்கி யாழ்ப்பாண ராச்சியத்தை ஆளலானான். இவனுடைய காலத்திலேயே நல்லூர் கந்தசாமி கோவில் கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது.

('இலக்கிய சகாப்தம் எண்ணூற்று எழுபது' என்னும் கைலாயமாலைக் கூற்றின்படி கி.பி.பத்தாம் நூற்றாண்டில் புவனேகபாகுவால் நல்லூர் கந்தசாமி கோவில் கட்டப்பட்டது என்ற தகவலும் உண்டு. இது தவிர நாம் மண்வாசனைப் புகுதியில் பூநகரி பற்றி எழுதிய கட்டுரையில் தெற்கத்தைய படையெடுப்பு ஒன்றைத் தொடர்ந்து பூநகரியில் உள்ள நல்லூர் என்னும் இராசதானியில் வசித்த மக்களில் கணிசமானவர்கள் இடம்பெயர்ந்தபோது அங்கிருந்த நல்லூர் முருகனையும் தங்களுடன் எடுத்துவந்துள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கின்றோம். இவையெல்லாம் வரலாற்று நூல்களில் இருந்து எடுக்கப்பட்டவையே.)

1621ல் யாழ்ப்பாணம் போர்த்துக்கீசர் வசமாகும்வரை ஏறக்குறைய 400 ஆண்டுகள் வட இலங்கையிலே தமிழரசே நிலவியிருந்தது. 1450

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் 1621 வரையும் நல்லூரே அதற்குத் தலைநகராக விளங்கியது. இக்காலத்தில் தமிழ் இலக்கியங்கள் சிறப்புற வளர்ந்துள்ளன.

1450ம் ஆண்டில் தமிழரசு நிறுவப்படுவதற்கு முன்னரே சோழப்பெருமன்னர் காலத்தில் (கி.பி.11ம் நூற்றாண்டு)வட இலங்கையில் நல்லூர் ஓர் உப தலைநகராக விளங்கியிருக்கலாம் என்றும், இதற்கு ஒரு சான்றாக யாழ்ப்பாணக் கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட இராசேந்திர மன்னனின் தமிழ்க் கல்வெட்டைக் குறிப்பிடலாம் என்று பேராசிரியர் வி.சிவசாமி அவர்கள் எழுதிய 'நல்லைக்குமரன் மலர்' என்னும் நூலில் நல்லூர் அன்றும் இன்றும் என்னும் கட்டுரையில் (பக்கம்38) குறிப்பிட்டிருக்கின்றார்.

போத்துக்கீசர் 1621ல் நல்லூரைக் கைப்பற்றி 1658 வரை ஆண்டுள்ளனர். அக்காலத்தில் கத்தோலிக்க நூல்கள் பல எழுதப்பட்டிருந்தன. ஈழத்திருநாட்டில் இனித்த கவிதைகள் பாடி வரலாற்றில் இடம்பெற்ற புலவர்கள் பலருண்டு. அவர்களுள் முதன்மையானவர் பரராசசேகரன் பரம்பரையில் வந்த வில்வராய முதலியாரின் மகனான நல்லூர் சின்னத்தம்பிப் புலவராவார்.

நல்லூர் இராசதானி அமைந்திருந்த இடம்தான் இன்றை சங்கிலித்தோப்பு என அழைக்கப்படுகின்றது. அப்படி அழைப்பதற்கான காரணம், யாழ்ப்பாண அரசும் மக்களும் அடிமைத்தளையில் இருந்து விடுபடுவதற்காக வீரப்போர் புரிந்து வீழ்ந்த சங்கிலி என்னும் செகராசசேகரனின் (1519-1561) பெயரை நிலைபெறச் செய்த முயற்சி இதுவாகும்.

இவனின் பாட்டனும் யாழ்ப்பாண அரசை சிங்கள ஆதிக்கத்தில் இருந்து விடுவித்தவனுமாகிய கனகசூரியன் ஜமுனை நதியின் நீர் கொண்டு ஏரி ஒன்றைப் புனிதமாக்கிய இடம் இன்று ஜமுனா என அழைக்கப்படுகின்றது. இது சங்கிலித்தோப்பிற்கு உள்ளேயே இருக்கின்றது. இந்தத் தோப்பின் மேற்குத் திசையிலே பருத்தித்துறை வீதியிலே தோரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில் ஒன்று ஓரளவு சிதைந்த நிலையில் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது. இது சங்கிலி மன்னனின் மாளிகையின் முகப்பு வாசலாகும்.

போத்துக்கீசத் தளபதி 'ஒலிவேரா' என்பவனால் நல்லூர்க் கந்தசாமி கோவில் உட்பட பல சைவக் கோவில்கள் சூறையாடப்பட்டு அழியுண்டும் போயின. இந்நிலை ஒல்லாந்தர் காலம்வரை நீடித்தது. 1734ல் கந்தசாமி கோவில் இன்றுள்ள இடத்தில் (இன்று கிறிஸ்தவ தேவாலயம் இருக்கும் இடத்தில் முன்பு அமைந்திருந்தது என கூறப்படுகின்றது) 'பின்பு இரகுநாத மாப்பாண முதலியாரால் புனரமைப்பு செய்யப்பட்டது.

அன்றில் இருந்து கட்டட விரிவாக்கம், வீதி விரிவாக்கம், சிற்ப சித்திரம் உருவாக்கம் என்பனவற்றோடு தெய்வீகமும் ஒழுங்கும் பொலிந்திட இவ்வாலயம் ஈழத் தமிழ் சைவ மக்களின் உயிர்நாடியாக விளங்குவதை யாவரும் அறிவர். இவ் ஆலயத்தை நடுவணாகக் கொண்டு கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் கோவிலும், மேற்கே வீரமாகாளி அம்மன் கோவிலும், தெற்கே கைலாயநாதர் கோவிலும், வடக்கே சட்டநாதர் கோவிலும் அமைந்திருக்கின்றன.

நல்லூரின் பெயரை என்றும் நிலைத்திடச் செய்தவர் ஆறுமுக நாவலராகும். சைவத்திற்கும் தமிழுக்கும் இவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. பழந்தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்தவர். இதற்கென யாழ்ப்பாணத்திலும், தமிழகத்திலும் அச்சகங்களை நிறுவி நூல்களை வெளியிட்டார். சைவ சமயத்திற்கென ஒழுக்க நெறிகளை வகுத்து இலகு தமிழில் வெளியிட்டார். அத்துடன் இலக்கண, இலக்கிய நூல்கள் பலவற்றிற்கு உரை எழுதி வெளியிட்ட பதிப்புத்துறை முன்னோடியுமாவார்.

இவரது பணிகளை என்றும் நினைவு கூறும் வகையில் நல்லூர் ஆலயத்திற்கு முன்பாக இவருக்கு மணிமண்டபமும் கட்டி அதற்குள் சிலை நிறுவப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல! ஆண்டுதோறும் நாவலர் குருபூசை பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர்கால இறுதிப்பகுதியில் வாழ்ந்தவர் சின்னத்தம்பிப் புலவராவார். (1716-1780) இவர் பத்து வயதிலேயே கவித்துவங்கள் வாய்ந்த மறையசையந்தாதி, கல்வளையந்தாதி, பறாளை விநாயகர் பள்ளு, முதலிய பிரபந்தங்களை இயற்றிய இப்பெரும் புலவர் (1716-1780) பத்து வயதிலேயே கவித்துவம் வாய்ந்து மறையசைந்தாதி, கல்வளையந்தாதி, பறாளை விநாயகர் பள்ளு முதலிய பிரபந்தங்களை இயற்றிய இப்பெரும் புலவர் நல்லூரை வாழ்விடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. நாவலரின் மருமகரான வித்துவசிரோமணி ந.ச.பொன்னம்பலபிள்ளை, நாவலரின் சகோதரர் சதானந்தப்புலவர் முதலானோரும் நல்லூரை அணிசெய்த நல் அறிஞர்களே.

முத்தியானந்தர் எனப் போற்றப்பட்ட கடையிற் சுவாமிகள், அவரின் சீடர் செல்லப்பா சுவாமிகள், அவர்தம் சீடர் யோகர் சுவாமிகள் ஆகியோரெல்லாம் நல்லூர் கந்தசாமி கோவிலின் தேரடியிலேயே ஞான ஒளிபரப்பி விளங்கியமையும் நல்லூருக்கு சிறப்புச் சேர்க்கும் கொடைகளாகும்.

பிற்காலத்தில் நல்லூருக்குச் சிறப்புச் சேர்த்தவர் திருமிகு மணிஐயர் அவர்கள். தமிழ்நாடு திருமுருக கிருபானந்த சுவாமிகளைப்போல இவரும் யாழ்ப்பாணத்தில் மதிக்கப்படுபவர். திருவிழா நடைபெறும் இருபத்தைந்து நாட்களும் இரவில் இவருடைய கதாப்பிரசங்க நிகழ்வு இடம்பெறும். இவரின் பிரசங்கத்தைக் கேட்பதற்காகவே ஏராளமான பக்தர்கள் கோவில் வாசலில் கூடியிருப்பார்கள். சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாக இவர் அமரத்துவம் அடையும்வரை இது இடம்பெற்றது.

நல்லூர் அரசு சுமார் இரண்டு மைல் சுற்றளவை உள்ளடக்கியது எனலாம். ஆனால் இன்று நல்லூரைச் சூழ்ந்த கல்விங்காடு, திருநெல்வேலி, நாயன் மார்க்கட்டு, அரியாலை ஆகிய ஊர்களின் பெரும்பகுதியை உள்ளடக்கிய பிரதேசம் எனக் கொள்ளப்பட்டு அதற்கென பிரதேசப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை பாராளுமன்றத்தில் நல்லூர் ஒரு தேர்தல் தொகுதியாகும். இத் தொகுதில் நீண்ட பல காலமாக தமிழரசுக் கட்சியின் இரும்பு மனிதர் என வர்ணிக்கப்பட்ட டாக்டர் இ.எம்.பி. நாகநாதன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். ஒருமுறை மட்டும் காங்கிரஸ் கட்சி சார்பில் திரு.சி.அருளம்பலம் அவர்கள் இத்தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். விடுதலைக்கூட்டணி உருவாகிய முதலாவது தேர்தலில் இங்கு போட்டியிட்ட திரு.மு.சிவசிதம்பரம் அவர்கள் இலங்கையிலேயே அதிக வாக்குகளால் வெற்றி பெற்றவர் என்ற பெருமையை நல்லூர் தொகுதி பெற்றுக்கொடுத்தது.

நல்லூர் கந்தசாமி கோவிலின் மேற்கு வீதி கோவிலின் வீதியாக யாழ்ப்பாணம் - கண்டி வீதியைத் தொடுகின்றது. இதிலிருந்து யாழ்நகர் செல்லும் வீதியில் கருங்கல்லினால் கட்டப்பட்ட சிவன் கோவிலும், அதன் அருகில் திருஞானசம்பந்தர் மடமும், கல்யாண மண்டபமும் இருக்கின்றன.

மேற்கு வீதியில் மங்கையற்கரசி மகாவித்தியாலயமும், பெரும் செலவில் அமைக்கப்பட்ட துர்க்கா மண்டபமும் இருக்கின்றது. மேலும் பண்டாரக்குளம், ஆரியகுளம், ஆனைப்பந்தி, இராசாவின்தோட்டம் முதலான பழம்பெரும் யாழ்ப்பாண அரசின் நினைவுச் சின்னங்களும் நல்லூரை அண்டியே உள்ளன.

நல்லூரில் தென்னிந்திய கிறிஸ்தவத் திருச்சபையின் நிர்வாகத்தால் பல்லாண்டுகள் செயற்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று இலங்கை எங்கும் பணியாற்றி உள்ளார்கள்.

பழையன களையப்பட்டு புதியன பல புகுத்தப்பட்டு நாளுக்கு நாள் நாகரிகமயமாகிவரும் இன்றைய காலகட்டத்திலும் நல்லூரில் இன்றும் பழைய ராச வாசலையும், (சங்கிலியன் தோப்பு) ஜமுனா ஏரியையும் காணலாம். நாற்திசையும் மணியோசை எழுப்பும் ஆலயங்கள், அறிவூட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சாலைகளும் சோலைகளும் நிறைந்த புனித பூமியான நல்லூர் யுத்த காலத்தில்கூட அருளொளி வீசிய வண்ணமே இருந்தது.

ஆம்!

தமிழ் மன்னன் சங்கிலியன் வாழ்ந்த மண் நல்லூர்.

தமிழ்க் கடவுள் முருகன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மண் நல்லூர்.

தமிழ் வீரன் திலீபன் தனது தியாகப் போராட்டத்தை ஆரம்பித்த மண் நல்லூர்.

இலங்கையில் பல பாகங்களில் வாழ்கின்ற சகல இன மக்களும் யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா வருகின்றபோது கண்டிப்பாக நல்லூர் ஆலயத்திற்கும் வருகை தருவது முக்கிய நிகழ்வாகவே இருக்கும்.

ஆம்! யாழ் மாவட்டத்தில் நல்லூர் இருப்பது யாழ்ப்பாணத்திற்குப் பெருமையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

# நுணாவில்

'நுணாவில்' இப்படியாக வில் என்னும் முடிவில் வரும் பல ஊர்கள் இருக்கின்றன! ஆனாலும் இந்த வில் என்னும் சொல்லுக்கும் ஊர்ப் பெயர்களுக்கும் சம்மந்தம் எதுவும் இல்லையென சில ஆராய்ச்சி நூல்கள் கூறுகின்றன. ஆனாலும் வில் என்னும் சொல் அம்பு எய்யும் கருவியைக் குறிப்பிடுகின்றது. அதாவது வளைந்த ஒரு அரை வட்டத்தை வில் எனக் குறிப்பிடுவார்கள். வுானவில் என்பதையும் ஒரு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

இன்னொரு வகையில் வில் என்பது பெரும் குளங்களைக் குறிக்கும் சொல்லாகவும் அகராதிகள் சொல்கின்றன. வளைந்த இடம், அல்லது வளைவாக நீர் தேங்கி நிற்கும் இடங்களை வில் என சொல்லப்படுகின்றது. சிங்களத்தில் 'வில" என்னும் சொல்லுக்கு தமிழில் குளம் என்பதே பொருளாகும். இப்படியாகப் பார்க்கும்போது இது ஆராய்ச்சிக்குரிய ஒரு சொல்லாகவே இன்னமும் இருக்கின்றது!

இனி நுணாவிலுக்கு வருவோம். சாவகச்சேரி நகரில் இருந்து மேற்குப்புறமாக அமைந்திருக்கின்ற ஒரு சிறு ஊர்தான் நுணாவில். இதே நேரம் கரவெட்டி கிழக்கில் "நுணுவில்" என்னும் பெயரில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமம் இருக்கின்றது! ஒரு அரவுதான் இந்த இரண்டு ஊர்களையும் வித்தியாசப் படுத்துகின்றது. நுணா என்னும் மரங்கள் இங்கு அதிகமாக இருந்ததால் இந்தப் பெயர் வந்ததாகவும் சொல்லப்படுகின்றது. நுணா என்பது எள் என்னும் தானியத்தைக் குறிக்கும் சொல்லாகவும் கருதப் படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுத்தமான நல்லெண்ணைக்கான எள் நுணாவிலிலிருந்துதான் பெறப்பட்டதாக போர்துக்கேயர் காலத்துக் குறிப்பேடுகளில் இருந்தாக கலாநிதி இ.பாலசிங்கம் அவர்கள் எழுதிய 'இடப்பெயர் ஆய்வு' என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

வடக்கிலும், மேற்கிலும் தமிழறிஞர் பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை அவர்கள் பிறந்த மட்டுவிலையும், கிழக்கே யாழ்ப்பாணத்தில் இரண்டாவது பெரிய நகராகக் கருதப்படும் சாவகச்சேரியும், தெற்கில் வீரர் குடியிருப்பாகிய மறவன் புலமும் அமைந்திருக்க நடுவினில் இருக்கின்றது நுணாவில்.

கொல்லாங்கிராய், (கொல்லாபுரி) நுணாவிற்குளம், மணங்குளாய், தாளையடி, கல்வயல், மணற்பிட்டி என பல குறிச்சிகளைக் கொண்டு விளங்குவது நுணாவில். எனினும் நுணாவில் கிழக்கு, நுணாவில் மேற்கு என்னும் திசைவாரிப் பெயர்களே பிரபலமானவையாகும். சாவகச்சேரி நகரசபையின் ஐந்தாம் வட்டாரம் நுணாவில் கிழக்கிலும், ஆறாம் வட்டாரம் நுணாவில் மேற்கிலும் அமைந்திருக்கின்றன!

நகர நாகரிக மாற்றங்களால் மாசுபடாத ஒரு ஊராக நுணாவிலைக் குறிப்பிடலாம். அதற்கு உதாரணம் நுணாவிலில் உள்ளடங்கிய குழைக்காடு கிராமத்தைச் சொல்லலாம். ஆம்! பனங்கூடல்களும், பற்றைக் காடுகளும், தென்னந் தோப்புக்களோடு புன்னை, பூவரசு, கொன்றை, அத்தி, அரசு, ஆல், புளி, இலுப்பை, இலந்தை, வேம்பு, மருது போன்ற மரங்களின் வானளாவிய வளர்ச்சியும், 'நுணா' என்றும், 'நுணாவை' என்றும் சொல்லப்படும் 'மஞ்சணாி' மரங்களின் அடர்த்தியும், நாவல், பலா, விளாத்தி, கொய்யா ஆகிய மரங்களின் செழிப்பும் தரும் கிராமம்தான் குழைக்காடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழைக்காடு பற்றிச் சொல்வதற்கு இன்னமும் நிறையவே இருக்கின்றது. குளக்கரைகளை அண்டி அடர்த்தியாக வளர்ந்திருக்கும் சம்புப் புற்களும், குளங்களில் துள்ளி விளையாடும் மீன்களைக் கொத்திக் கொண்டு போவதற்கென்றே மௌனமாகக் காத்திருக்கும் கொக்குகளும்.. இப்படியாக இயற்கையை அள்ளி வழங்கிக்கொண்டிருக்கும் அழகிய கிராமம்தான் குழைக்காடு! நுணாவிலுக்கு குழைக்காடு ஒரு கொடை என்றே சொல்லவேண்டும்.

அவ்வூர் மக்களின் பெரும் தொழிலே நெற் செய்கைதான். ஆனாலும் சிறுதானிய வகைகளும், காய்கறி வகைகளும் பருவம் பார்த்துப் பயிரிட்டுக் கொள்வார்கள். முருங்கைக்காய்க்குப் பெயர் பெற்ற இடம் சாவகச்சேரி என்றுதான் சொல்வார்கள். ஆனால் சாவகச்சேரியில் வசிக்கின்ற மக்கள் நுணாவிலுக்கு வந்து முருங்கைக்காய் வாங்கிச் செல்வார்கள்! காரணம் அதிகம் களித்தன்மையுடன் சுவையும் அதிகம் என்று சாவகச்சேரி மக்கள் சொல்லிக் கொள்வார்களாம்!

யாழ்ப்பாணத்து மாம்பழம் என்றால் கருத்தக் கொழும்பான்தான் முதலிடம்! அதற்கு அடுத்தது அம்பலவி மாம்பழம்தான்! அந்த அம்பலவி மாம்பழத்தின் விளைநிலமே நுணாவில்தான்! நுணாவிலை, நுணாவிலம்பதி என்றும் அழைப்பதுண்டு. அதில் வரும் 'அம்" என்னும் சொல்லுக்கு 'அழகு' என்ற பொருளும் உண்டு. நுணாவிலம்பதி என்று அழைக்கும்போது அழகான நகரம் என்பதைக் குறிப்பதற்கும், அதுபோல அம் +பழம் = அம்பழம்., இதுவே காலப்போக்கில் மருவி அம்பலவியாக வழக்கத்தில் வந்ததாகவும், அம்பலவி மாம்பழங்கள் அதிகமாக விளையும் நகரம் என்பதைக் குறிப்பதற்கும் இந்த ‘அம்’ வருவதாகவும் இடப்பெயர் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

காலம் காற்றைப்போல வேகமாக கடந்து சென்றாலும் நுணாவிலைப் பொறுத்தமட்டில் காலத்தால் மறக்கப்படாத மனிதர் அமரர் முத்துத் தம்பிப்பிள்ளை அவர்கள்! முத்து உபாத்தியார் என அனைவராலும் மரியாதையாக அழைக்கப்பட்ட அமரர் முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபிக்கப்பட்ட சரஸ்வதி வித்தியாலயம் மட்டுவில், நுணாவில் மக்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்ததனால் முத்துத் தம்பிப் பிள்ளை அவர்கள் இன்றளவும் அப்பகுதி மக்களால் மதிக்கப்படுபவராகவே விளங்குகின்றார்.

பலமுறை சாவகச்சேரி தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் வ.ந.நவரத்தினம், பேராசிரியர் வித்தியானந்தன், கவிஞர் கல்வயல் முருகையன், கவிஞர்.வி.கந்தவனம் போன்றவர்களையெல்லாம் பெற்றெடுத்த பெருமை நுணாவில் மண்ணுக்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18

# பூநகரி

பூமி தோன்றிய பின்னர் பூமியில் சில மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன! நீர் இருந்த இடங்கள் நிலங்களாக மரியிருக்கின்றன! வீடுகள் இருந்த இடங்கள் காடுகளாகவும் காட்டுக்குள் வீடுகளும் போய்விட்டன! அவ்வாறே மனித இனத்திலும் மாற்றங்கள்! நகர்வுகள், பல முன்னேற்றங்கள், தொடர்கின்றன! மனிதனுடைய செயற்பாட்டுத் தடயங்கள் அவனின் வாழ்தலுக்கு ஆதாரமாக அமைகின்றன! இறந்தவனுக்கு இருந்தவன் நினைவுக்கல், கல்லறைகள் கட்டினான். அவை இன்று வரலாற்றுச் சான்றுகளாகின்றன. பூநகரியின் வரலாறும்; அப்படித்தான்! பூநகரியைப்பற்றியே இந்த சிறு கட்டுரைக்குள் அதன் மாற்றத்தையும் ஓரளவு தர முயன்றிருக்கின்றேன்.

யாழ் குடாநாட்டிற்குத் தெற்கே யாழ்ப்பாணக் கடலேரியை அடுத்து பூநகரிப் பிரதேசம் அமைந்துள்ளது. கறுக்காய்த்தீவ ஆனைகட்டி முனையிலிருந்து மேற்காக கௌதாரி முனையை அடுத்துக் காணப்படும் பூநகரி கல்முனை வரையிலான கடலோரமே இதன் வட எல்லையாகும்.

ஆனகட்டி முனையானது ஆனையிறவிற்குத் தென்மேற்காக ஒரு சில கிலோ மீற்றர்கள் தொலைவில் கடலேரியை அடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. இவ்வாறே கல்முனையும், மண்டைத்தீவும், யாழ்ப்பாணம் ஆகியவற்றிற்கு தென்கிழக்கே சில கிலோ மீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ளது. பூநகரி வாடியை மையமாகக் கொண்டால் வாடியடிக்கும் கல்முனைக்கும் இடையிலான தூரம் 24 கிலோ மீற்றர்கள் ஆகும்.

வாடியில் இருந்து கிழக்காகப் பரந்தன் வீதியில் 16 கிலோ மீற்றர்கள் வரை இப்பிரதேசம் பரந்துள்ளது. வாடியடியில் இருந்து தெற்காக மன்னார் வீதியில் சுமார் 35 கிலோ மீற்றர்கள் வரை இப் பிரதேசம் பரந்துள்ளது.

பூநகரி வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மிகத் தொன்மையான ஒரு பழம்பெரும் இராச்சியமாகும்! யாழ்-குடாநாட்டிற்கு வெளியே யாழ்-இராச்சியத்திற்கும் முன்னோடியாக ஈழத்தின் வடபுலத்தே இருந்த ராட்சியம் பூநகரியாகும். வரலாற்றுத் திரிபுகள், மறைப்புகளுக்கு மத்தியிலும் அண்மைக்காலத்தில் பூநகரியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பூநகரி பற்றிய பல எண்மைகளை உறுதி செய்துள்ளன!

கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) அவர்கள் எழுதிய 'முதல் நல்லூர் ஆலயம் பூநகரியில்தான் அமைந்திருந்ததா?' என்னும் கட்டுரையில் (வீரகேசரி 27-08-95) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்

'ப.புஸ்பரத்தினத்தின் ஆய்வுகளின்படி பூநகரிப் பிரதேசம் ஒரு பண்டைய இராச்சியத்தின் வளமான பிரதேசமாக விளங்கி இருக்கின்றது. பூநகரிப் பிரதேசத்தில் கிடைத்த அகழ்வாராய்ச்சிப் பொருட்கள் இதனை நிரூபிக்கின்றன. அங்கு கிடைத்த மட் பாண்டங்கள், சோழ நாணயங்கள், இடங்களின் பெயர்கள் மட்டுமின்றி பூநகரியில் உள்ள "ஈழ ஊர்" என்ற காட்டுப்பகுதியில் காணப்படும் அழிவுகளும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

பூநகரிப் பிரதேசம் இன்றுள்ளதைப்போல குறுகிய எல்லைக்குள் அடங்காது கிழக்கே முல்லைத்தீவில் இருந்து மேற்கே கிராஞ்சிவரை பரந்திருந்தது. இதனுடைய வடக்கு எல்லை யாழ்ப்பாணக் கடல்நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரியிலிருந்து தெற்கே அருவியாறுவரை பரந்திருந்தது. இப்பிரதேசம் காலத்திற்குக் காலம் உத்திரதேசம் என்றும் நாகதீபம் என்றும் வழங்கப்பட்ட போதிலும் ஈழம் என்ற சிறப்புப் பெயரிலும் அழைக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கு பூநகரியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மட்பாண்ட ஓடு ஒன்றில் உள்ள ஈழம் என்ற வாசகம் ஆதாரமாகின்றது என்று புஸ்பரத்தினம் கூறுவது கவனிக்கத்தக்கது.' எனவே தமிழ் இராட்சியம் ஒன்று இப்பிரதேசத்தில் நிலைகொண்டிருந்தது என்பது உறுதியாகின்றது.

'பூநகரி பிராமிச் சாசனம் கி.மு.3ம், கி.மு.2ம் நூற்றாண்டில் சங்ககாலத்தை ஒத்த தமிழ்வேந்தரின் ஆட்சி வட இலங்கையில் இருந்ததை உறுதிப்படுத்துகின்றது என்கின்றார் தமிழ்நாட்டின் முதன்மைச் சாசனவியலாளர் ஐராவதம் மகாதேவன். யாழ்பாடியின் ஐதீகக் கதையின்படியும்கூட தமிழ் மன்னன் ஒருவன் தனது இராச்சியத்திற்கு வடபுறத்தில் அன்று மக்கட் செறிவின்றி மணற் திடராக இருந்த பகுதியை யாழ்பாடிக்குப் பரிசாக அளித்தான் என்பதில் இருந்தும் யாழ்ப்பாணம் ஆட்புலம் மிக்க பகுதியாக மாறுவதற்கு முன்னரே அதற்குத் தெற்கே ஒரு குட்டி இராச்சியமாக பூநகரி இருந்திருக்கின்றது என்பது உறுதியாகின்றது.

**பூநகரம் பூப்பொறுக்கியானது!**

பூநகரி பல்துறை வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. பூநகரி என்ற பெயர் பூ+ + நகர் + ஏரி பூநகரி என்ற அடிப்படையில் உருவானதாகும். பூநகரியில் குடியிருப்புக்கள் அதிகமாக இருந்தன. இன்றுவரை இங்கு காணப்படும் குளங்களும், வாய்க்கால்களும் ஒரு வரப்பிரசாதமான இயற்கையான நன்நீர் வளமாக விளங்குகின்றது. எந்தக் காலத்திலும் வற்றாத நீர்வளமாக இருந்ததனால் வயல்களில் பெரு விளைச்சல்! மரம் செடி கொடிகளின் பசுமையோடு பூஞ்செடிகளும் அதிகமாக இருந்தனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனை, அரசவிடுதி, மற்றும் ஆலயங்களுக்கான பூக்களை இந்நகரமே வழங்கியதால் பூநகரம், பூப்பொறுக்கி போன்ற பெயர்களும் வழக்கத்தில் இருந்து வந்துள்ளன. அன்று அன்னியர் ஆட்சிக்காலத்தில் 'பூநெறின்' (Poonerin) என்றே குறிப்பிட்டார்களாம்.

ஒரு ஆச்சரியமான செய்தி! யாழ் நல்லூர் கந்தசாமி கோவிலின் தாய்க்கோவில் பூநகரியில்தான் அமைந்திருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன! தெற்கத்தியப் படையெடுப்பு ஒன்றினைத் தொடர்ந்து பூநகரியின் நல்லூர் ராசதானியும், மக்களில் கணிசமானோரும் யாழ் குடா நாட்டிற்கு இடம்பெயர்ந்ததாகவும், இந்த நகர்வுடன் பூநகரி நல்லூர் முருகன் ஆலயமும் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் முத்திரைச்சந்தியில் (இன்று கிறிஸ்தவ தேவாலயம் உள்ள இடத்தில்) நிறுவப்பட்டதாம்! பின்பு 1621ல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கீசத் தளபதி பிலிப்தே ஒலிவேறாவினால் அங்கிருந்த நல்லூர் கந்தசாமி ஆலயம் அத்திவாரத்துடன் கிளறி எறியப்பட்டு அவ்விடத்தில் தேவாலயம் கட்டப்பட்டதாம்!

பின்பு 1734ம் ஆண்டளவில் கிருஸ்ணையர் - சுப்பையா என்ற அந்தணரால் முத்திரைச் சந்திக்கு அருகே கந்தசாமி கோவில் கட்டப்பட்டதாகவும், அந்தக் கோவில் நிறுவப்பட்ட வளவில் சிக்கந்தர் என்ற சர்வமதத் துறவி இருந்து அங்கேயே அவர் காலமாகியதால் சர்வ மதத்தையும் கௌரவிக்கும் வகையில் அதற்கு அருகினிலேயே முஸ்லீம் மசூதி ஒன்றும் கட்டப்பட்டதாகவும் பின்பு 1749-ஆம் ஆண்டளவில் அரச அனுசரணையுடன் மசூதி அகற்றப்பட்டு இன்றைய ஆலயம் கட்டப்பட்டதாக 'யாழ்ப்பாண மானியம்' என்னும் நூலில் நல்லூரைப்பற்றிய கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது

பூநகரி என்றதும் ஞாபகத்திற்கு வருவது பூநகரி அரிசி! பூநகரியின் மொட்டைக் கறுப்பன், பச்சைப்பெருமாள், முத்துச்சம்பா, சீரகச்சம்பா, இப்படி பலவகையான நெல் இனங்கள் காலம் காலமாக பூநகரியிலேயே விளைவிக்கப்பட்டன (பின்னாளில் இந்த இன நெல்வகைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் விளைவிக்கப்பட்டாலும் பூநகரி மண்ணில் விளையும் நெல்லரிசியின் சுவையை அவை பெறவில்லையாம்!)

நெல்லினங்கள் யாவும் கூடுதலாக பூநகரியில் உள்ள வெட்டுக்காடு, பரம்பன்கிராய், சித்தன் குறிச்சி, செட்டிக்குறிச்சி, ஞானிமடம், கறுக்காய்த் தீவு, செல்லையாதீவு, ஆரியம்பொந்து, மட்டுவில்நாடு, ஆலங்கேணி, நல்லூர் ஆகிய இடங்களில் காலம் காலமாக பெருமளவில் விளைவிக்கப்பட்டன. அன்று இயந்திர வாகனங்கள் இல்லாதிருந்தமையால் பூநகரியில் விளையும் நெல் ஞானிமடம் நாகன்தேவன் துறையில் இருந்து தோணிகள் மூலமாக யாழ்ப்பாணத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும்.

இன்று பூநகரி முன்னேற்றமடைந்து பலவிதமான வசதிகளைப் பெற்றிருக்கின்ற போதிலும் அன்று போத்துக்கேயர்களின் சொகுசு பங்களாதான் இன்றும் வாடிவீடு என்னும் பெயரில் அரச அதிகாரிகள் பலரும் தங்கிச்செல்லும் விடுதியாக இருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திற்குள் அடங்கும் பூநகரி நகரத்தில் கிளிநொச்சியைப்போல பெயர் சொல்லக்கூடிய அளவு அரசகரும செயலகங்கள் அதிகம் இல்லாவிட்டாலும் சிறந்த கல்விமான்கள், அரச உத்தியோகங்களில் இருக்கின்றார்கள். இதில் அனேகமானவர்கள் பூநகரிக்கு வெளியேயே பணிபுரிகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19

# அரியாலை

'சிரித்திரன்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த அமரர் சிவஞான சுந்தரம் அவர்கள் தனது சிரித்திரன் பத்திரிகையின் ஒரு இதழில் அரியாலையைப் பற்றிக் குறிப்பிடும்போது எழுதுகின்றார் 'அரிய கலைகளைக் கொண்ட ஊர்தான் அரியாலை' என்று! ஆம்! அரியாலை கல்வி, சமயம், வரலாற்றுப் பதிவுகள் என பல சிறப்புக்கள் இருந்தாலும் அரிய கலைகளின் அழியாத இருப்பிடம் அரியாலை எனக் கூறினால் மிகையாகாது! இதற்கு ஒரு உதாரணம், அரியாலையின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் காசிப்பிள்ளை கலை அரங்கம்! வருடம் பன்னிரண்டு மாதங்களும் இந்த அரங்கில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றுக்கோண்டே இருப்பது அரியாலை நகரின் தனிச் சிறப்பாகும்!

யாழ் மாநகரசபையின் கிழக்கு எல்லையாகத் திகழும் இச் சிறிய நகரம் யாழ்ப்பாண மாநகரசபையின் பெரும் பாகத்தையும், நல்லூர் பிரதேச சபையின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியதாகும். ஏறக்குறைய பத்து சதுர கிலோமீற்றர் பரப்பளவாகவும், சுமார் முப்பதினாயிரம் மக்கள் வாழும் வசிப்பிடமாகவும் அமைந்த நிலப்பரப்பில் சைவமும் தமிழும் கொஞ்சி விளையாடுவதோடு, பல சைவப் பேராலயங்களும், சில கிறிஸ்தவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாலயங்களும், பிரசித்தி பெற்ற பாடசாலைகளும், சமூகத்தின் பெருமை தனை எடுத்தியம்பும் சனசமூக நிலையங்களும் அதிகமாகவே இருக்கின்றன.

அரியாலையின் வட திசையில் உப்பு விளைகின்ற கடல் நிலமும், கிழக்கில் பெரு மழையை நம்பி நெல் விளையும் கழனித் தரைகளும், இவை தவிர நகரின் பல பாகங்களிலும் இதோ வானத்தை எட்டிப் பிடிக்கப்போகின்றோம் என சொல்லாமல் சொல்லியபடி உயர்ந்து வளர்ந்து நண்பர்களைப்போல அக்கம் பக்கமாக நிற்கும் பனை மரங்களும், தென்னை மரங்களும், கடற்கரையை ஒட்டி உயர்ந்து சிறு சிறு புட்டிகளாக இருக்கும் வெண் மணற் திட்டுகளும், (அரியாலை மண் பால் போன்ற வெண்மையாக இருக்கும்) இவற்றோடு தென் திசையில் பாண்டியன்தாழ்வு கொழும்புத்துறையைச் சென்றடையும் வீதியும், மேற்கே கச்சேரி-நல்லூர் வீதியும், வடக்கே செம்மணி வீதியும் அரியாலை மண்ணின் அடையாளங்களாகும்.

யாழ்ப்பாணத் தமிழ் இராச்சியத்தின் இராசதானியாக அக்காலத்தில் விளங்கிய நல்லூரில், ஒன்பதாம் நூற்றாண்டின் காலப்பகுதியில் ஆட்சி செய்த உக்கிரசிங்கனின் மகன் வாலசிங்கனின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் சோழ சாம்ராச்சியத்திலிருந்து இரண்டு கண்களும் குருடான பாணன் என்னும் கலைஞன் தான் இயற்றிய பாடல்களுக்கு தானே யாழ் இசைத்துப்பாடி மன்னனை மகிழ்விக்கவென இந்தியாவில் இருந்து வருகை தந்து மன்னனின் அரச சபையில் பாடி தானே யாழ் இசைத்து மன்னனை மகிழ்வித்திருந்தான்.

இரு கண்களும் இல்லாத பாணனின் நின் புலனையும், யாழ் இசையின் வல்லமையையும் கௌரவித்து மன்னன் பாணனுக்குப் பல பெறுமதியான பரிசில்களுடன் தென்கிழக்கே பரந்து விரிந்த பெரு நிலப்பரப்பாக இருந்த வெண்மணல் திடலினை அன்பளிப்பாக வழங்கியதாகவும், யாழ்பாடி பாணன் பரிசு பெற்ற அந்த நிலமே யாழ்ப்பாணம் என்று பெயர் பெற்றதாகவும், அதன் ஒரு பகுதியில்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை இருந்ததாகவும் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்கு சான்றாக பாணன் குடும்பத்தினரால் உருவாக்கப்பட்ட குளம் (கச்சேரி - நல்லூர் வீதிக்கு அண்மையில்) பாணாங்குளம் என்றே அழைக்கப்படுகின்றது. (தற்பொழுது அந்தக் குளம் தற்பொழுது மூடப்பட்டுவிட்டது)

அரியாலை கோயில்களும் குளங்களும் நிறையவே பெற்றது. சில கோவில்களுக்கு அருகே உள்ள குளங்கள் குடியிருப்புகளால் அழிந்துபோனாலும் அக் குளங்களுக்கு அருகில் இருந்த கோவில்களுக்கு அருகில் உள்ள குடியிருப்புக்கள் அந்தக் குளங்களின் பெயர்களைக் கொண்டே அழைக்கப்படுகின்றன. இப்பொழுது அழியாமல் இருக்கும் குளங்களையும் கோவில்களும் பின்வருமாறு..

கிழக்கு அரியாலையில் அண்ணமார் கோவிலும், அதன் அருகில் உள்ள அண்ணமார் குளமும். அதே இடத்திற்கு முன்பாக உள்ள மட்டை விரிச்சான் அம்மன் கோவிலும், அதன் அருகில் உள்ள நெடுங்குளமும். அரியாலை மத்தியில் காணப்படும் ஆதி வைரவர் ஆலயமும் அதன் அருகில் காணப்படும் பிரப்பங்குளமும். அரியாலை மேற்குப் பகுதியில் காணப்படும் அரசடி விநாயகர் கோவிலும் அதன் அருகினில் காணப்படும் நாயன்மார்க்கட்டு குளமும் பிரசித்தி பெற்றவைகளாகும்.

இதில் நாயன்மார்கட்டு குளம் சங்கிலியன் மன்னன் நல்லூரை ஆண்ட காலத்தில் அரசகேசரிப் புலவர் அவர்களும், நாயன்மார்களும் வாழ்ந்த மனைகளை அண்டி அமைந்திருந்ததால் நாயன்மார்க்கட்டு குளம் என அழைக்கப்படுவதாக வரலாறுகள் கூறுகின்றன.

அரியாலை மேற்குப் பகுதியில் புவனேசுரி அம்மாள் கோவில் இருக்கின்றது. இதனை நாச்சமார் கோவில் என்றும் அழைப்பார்கள். இதன் அருகே இருந்ததாகச் சொல்லப்படும் வெட்டுக்குளம் இப்பொழுது குடியிருப்புக்களால் குளம் இருந்த இடமே இல்லாமல் போய்விட்டது. இருந்தபோதும் இக்குளம் இருந்தமை பற்றி இன்றும் உயிருடன் இருக்கும் அக்காலத்தில் வாழ்ந்தவர்களால் வியந்து பேசப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிராமத்தின் கிழக்கு எல்லை சங்கமிக்கும் இடத்தில் வேரம்பரை பெரிய நாச்சியார் கோவில் இருக்கின்றது. இதன் அருகில்தான் பாணன் குளம் இருந்தது. காலப்போக்கில் இது பாணாங்குளம் என்றும் அழைக்கப்படலாயிற்று. கோவிலின் தெற்குப் பகுதியில் இருந்த இக்குளத்தைக் கோவிலின் வீதி வசதிக்காக ஆலய நிர்வாகிகளாலேயே மூடப்பட்டது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் குளத்தினை இதன் பெருமை அறியாமல் இருந்த சுவடுகளே தெரியாமல் அழிக்கப்பட்டமை வருத்தத்திற்குரிய நிகழ்வாகும்.

சைவ மக்கள் வாழ்கின்ற உலகில் எந்த நாட்டிலும் சரஸ்வதி அம்பாளுக்கு ஆலயம் இருப்பதை நாம் காணமுடியாது! ஆனால் அரியாலை மேற்குப் பகுதியில் நாம் அனைவரும் அதிசயக்கத்தக்க வகையில் சரஸ்வதி அம்பாளுக்கு கோவில் இருக்கின்றது! இக் கோவில் எழுபத்தைந்து வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்தது எனச் சொல்லப்படுகின்றது. இக் கோவிலை அரியாலையூர் கவிஞர் என போற்றப்படும் அமரர் கவிஞர் வி.கே.ஐயாத்துரை அவர்களின் குடும்பத்தினரே பராமரித்து பூசைகள் செய்து வருகின்றார்கள்.

கிறிஸ்தவ மக்கள் அரியாலையில் மிகக் குறைவாகவே வாழ்ந்தாலும் அரியாலை கிழக்கில் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள அன்னை வேளாங்கன்னி மாதா ஆலயம், அரியாலை யாழ் மாநகர சபையின் கிழக்கு எல்லையோரம் உள்ள யூதாதையர் ஆலயம், அரியாலை மேற்கு எல்லையில் இருக்கும் ஆசீர்வாதிப்பர் ஆலயமென மூன்று தேவாலயங்கள் இருக்கின்றன. இவ் ஆலயங்களின் வருடாந்தர உற்சவத்தின்போது அயலூர்களில் இருந்து கிறிஸ்தவ மக்கள் திரளாக வருகை தந்து சிறப்பிப்பார்கள்.

அரியாலையில் உள்ள புகழ்பெற்ற கல்லூரிகளுள் ஒன்று கனகரத்தினம் மகாவித்தியாலயம். இதற்கு ஸ்ரான்லிக் கொலிஜ் என இன்னுமொரு பெயரும் உண்டு. இந்த இரண்டு பெயர்களுக்குப் பின்னால் அந்தப் பெயர் வந்ததற்கான வரலாறுகளும் உண்டு. அரியாலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த கல்விமான் கனகரத்தினம் அவர்களின் அயராத முயற்சியின் பலனாக அரசாங்கத்தினால் கட்டப்பட்டதுதான் இவ் வித்தியாலயம்!. திரு கனகரத்தினத்தின் பணியைக் கௌரவிக்குமுகமாக இதற்கு கனகரத்தினம் மகாவித்தியாலயம் எனப் பெயர் வரக் காரணமாயிற்று.

அன்றைய காலத்தில் பெரும்பாலான கல்லூரிகள், பாடசாலை களெல்லாம் தனியாரின் நிர்வாகத்தில் இருந்தபோது யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் முழுச் செலவில் கட்டப்பட்ட முதலாவது அரசாங்கப் பாடசாலை இதுவேயாகும். இங்கு விஞ்ஞான மாணவர்களுக்கான ஆய்வுகூட வசதிகளுடன் வர்த்தக மாணவர்கள், மற்றும் கலைப்பிரிவு மாணவர்களுக்கான தட்டச்சு வசதிகளும் அந்தக் காலத்திலேயே அரசாங்கத்தினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது.

இக்கல்லூரியை அப்பொழுது அரசாங்க அதிபராக இருந்த திரு.ஸ்ரான்லி அவர்கள் திறந்து வைத்ததால் மக்களால் ஸ்ரான்லி மகாவித்தியாலயம் என்றும் அழைக்கப்பட்டாலும் கனகரத்தினம் மகாவித்தியாலயம் என்பதே அரசாங்கப் பதிவுப் பெயராகும். ஆனாலும் அங்கு கல்வி கற்ற அனேகமான மாணவர்கள் நாகரிகமாக தாங்கள் ஸ்ரான்லிக் கொலிஜீல் படிப்பதாகவே சொல்லிக் கொள்வார்கள். அரியாலையில் மேலும் ஆனந்த வித்தியாலயம், சென்-பெனடிக்ற் வித்தியாலயம், பார்வதி வித்தியாலயம் என தரமான கல்லூரிகளும் இருக்கின்றன.

ஒரு ஊரின் முன்னேற்றத்திற்கு அவ் ஊரில் அமைக்கப்படும் சன சமூக நிலையங்களே காரணமாகின்றன. அரியாலையைப் பொறுத்த வரையில் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகவே சன சமூக நிலையங்கள் அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகின்றது. அங்கு வாழ்கின்ற ஒவ்வொரு சமூகங்களும் தங்களது சமூக மக்களின் முன்னேற்றம் கருதி இந்நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. மொத்தமாக பன்னிரண்டு சன சமூக நிலையங்கள் இருக்கின்றன. அனைத்து சில சமூகத்தினர் தங்களுக்காக இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனசமூக நிலையங்களையும் உருவாக்கியிருக்கின்றனர். மொத்தமாக பன்னிரண்டு நிலையங்கள் அரியாலையில் இருக்கின்றன!. இச் சன சமூக நிலையங்களில்; கல்வி வளர்ச்சி, விளையாட்டுத்துறை, கலைத்துறை இம்மூன்றினையும் ஊக்குவிப்பதற்கான போட்டி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறும். இதற்கும் மேலாக சித்திரைப் புதுவருட தினத்தில் அரியாலையில் உள்ள அனைத்து சன சமூக நிலையங்களும் ஒன்றாக இணைந்து சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா என்னும் பெயரில் கொண்டாட்டம் ஒன்றினைக் கொண்டாடுவார்கள். யாழ் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் இப்படியாகச் சனசமூக நிலையங்கள் ஒன்றாக இணைந்து நடாத்தும் பெருவிழா அரியாலையில் மட்டுமே நடைபெறுகின்றது என்பதனைப் பெருமையாகக் கூறலாம்.

அமரர் சிரித்திரன் சிவஞானசுந்தரம் அவர்கள் அரியாலையை 'அரிய கலையூர்" என்று சொன்னதில் ஆச்சரியம் எதுவுமில்லை! காரணம் நாடகத்துறை, நாட்டுக்கூத்து, கர்நாடக சங்கீதம், வாத்திய இசை, கவிதை எழுதல் ஆகிய பல்வேறு கலைகளிலும் வல்லவர்கள் இம் மண்ணில் வாழ்ந்திருக்கின்றார்கள்! கவிதையில் அமரர் வி.ஐயாத்துரை, கர்நாடக சங்கீதத்தில் அரியாலையூர் இரட்டையர்கள் என அழைக்கப்பட்ட எஸ்.பாலசிங்கம், வி.பாலசிங்கம் ஆகியோருடன் நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களின் இசை நாடகங்களில் பெண் பாத்திரம் ஏற்று நடித்த வி.கே.இரத்தினம் அவர்கள் அரியாலை மண்ணின் தனித்துவமான கலைஞராவார். இவரை எல்லோரும் ஈழத்துக் கண்ணாம்பாள் என்றே பட்டப்பெயர் வைத்து அழைப்பார்கள். இவர்களோடு இலங்கையில் தயாரிக்கப் பட்ட தமிழ் சினிமாப் படங்களான 'நிர்மலா"வில் நடித்த வி.செல்வரட்ணம், வெண்சங்கு திரைப்படத்தில் நடித்த சி.சிவனேசன் போன்றவர்களும் அரியாலை மண்ணின் மைந்தர்களே! இவர்களோடு அரியாலையூர் விஸ்வா என்ற நாடகக் கலைஞனை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது! அது போல ஓவியக் கலையிலும் இசை நாடகக் கலையிலும் புகழ் பெற்ற பக்மா ஆவர்கள் (இவரின் மறைவிற்குப் பின்னர் இவருடன் கலைப்பணி ஆற்றிய நண்பர்கள் 'பத்மகலா மன்றம்' என்னும் பெரிலேயே பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களை அரங்கேற்றினார்கள்) இப்படியாக கலைஞர்களின் இந்தப் பெயர் வரிசை இன்னும் நீளமானதாகும்!

அரியாலையின் கலை வளர்ச்சிக்கு உரமிட்டவரான அமரர் விசுவநாதர் - காசிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாகவே காசிப் பிள்ளை கலை அரங்கம் அரியாலையில் நிமிர்ந்து நிற்கின்றது. அப்புக்காத்துவாகக் கடமை புரிந்த இவர் கலைத்துறையோடு மட்டும் நின்றுவிடவில்லை! சில கல்லூரிகளை உருவாக்கி அதன் முகாமை யாளராகவும் இருந்து திறம்படச் செயலாற்றியவராவார். இவர் தோற்றுவித்த கல்லூரிகளில் ஒன்றுதான் ஸ்ரீ - பார்வதி வித்தியாலயமாகும்.

யாழ் - மாநகரசபையின் வரலாற்றில் பி.காசிப்பிள்ளை, சு.செ.மகாதேவா, க.பொன்னம்பலம் என்ற மூன்று முதல்வர்களை மாநகரசபைக்கு வழங்கிய பெருமை அரியாலை மண்ணுக்கே உண்டு!. அரசியலில் பல தலைவர்கள் இருந்தபோதும் குறிப்பாக ஒருசிலரை இங்கு குறிப்பிடலாம்! காலம்சென்ற க.சிற்றம்பலம் என்பவர் டி.எஸ்.சேனநாயக்கா அமைத்த மந்திரிசபையில் தபால் மந்திரியாக இருந்தவர். இலங்கை சமஸ்தானக் கட்சியின் மூத்த உறுப்பினரான அ.விசுவநாதன் அவர்களின் ஊரும் அரியாலைதான். பலதரப்பட்ட மக்களும் ஒன்றிணைந்து வாழவேண்டும் என்பதற்காக அயராது உழைத்த இவர் பலமுறை பாராளுமன்றத் தேர்தலுக்கு போட்டியிட்டும் ஒருமுறைகூட வெற்றி பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆனாலும் யாழ்ப்பாண மாநகரசபையில் அங்கத்தவராக இருந்து மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுட்டவராவார். இவர் ஒரு சட்டதரணியாக இருந்தபோதும் தனது ஆரம்பகாலத்தில் ஆசிரியராகவும் பணியாற்றியவர். ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் 'குடியியல்" என்னும் புத்தகத்தினை சகல தர வகுப்பு மாணவர்களுக்குமான முறையில் கல்வித் திணைக் களத்தின் அனுமதியோடு வெளியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் மட்டுமல்ல; கனகரத்தினம் மகா வித்தியாலயத்தின் அதிபராக இருந்த அமரர் சோமசுந்தரம் அவர்களும் கல்வித் திணைக்களத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதியோடு பாடி கணிதம், அட்சர கணிதம், கேந்திர கணிதம், ஆகிய மூன்று நூல்களை வெளியிட்டு அரியாலைக்குப் பெருமை சேர்த்திருக்கின்றார். இவர்களோடு அமரர் சி.பொன்னம்பலம் அவர்களும் கல்வித்திணைக்களத்தின் அனுமதியோடு பூமிசாத்திரம் என்னும் புத்தகத்தினை சகல வகுப்பு மாணவர்களுக்குமாக தனித்தனியாக வெளியிட்டு தான் பிறந்த அரியாலை மண்ணுக்குப் பெருமை சேர்த்திருக்கின்றார்.

மேற்படி இவர்களோடு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதலாவது விஞ்ஞான பீடாதிபதி ரி.கந்தையா, விவசாய பீடாதிபதியாக இருந்த கலாநிதி எஸ்.மோகனதாஸ், (இவர் தென்னை வளம் பற்றி ஆராய்ச்சி செய்து கலாநிதி பட்டம் பெற்றவர்) மனோதத்துவ நிபுணராக இருந்த ஆ.சிற்றம்பலம், சாத்திர சிகிச்சை நிபுணர் கலாநிதி கணேசரத்தினம் போன்ற அறிஞர்களெல்லாம் அரியாலை மண்ணின் மைந்தர்களே!.

இப்படியான அரிய சிறப்புக்களையும், பெரிய மனிதர்களையும் உயர்ந்த கல்விக்கூடங்களையும் சிறந்த ஆலயங்களையும், மக்கள்போற்றும் கலைஞர்களையும் உள்ளடக்கிய அரியாலை மண்ணின் சிறப்புக்களைப் பதியவைத்ததில் நாமும் பெருமைப்படுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

# பரந்தன்

பரந்தன் நிலப்பரப்பளவில் இது சிறிய ஒரு கிராமம்தான்! ஆனால் இதன் முக்கியத்துவம் விசாலமானது. பரந்தன் சந்தியிலிருந்து கிழக்கே சென்றால் மாபெரும் வன்னிப் பெருநிலப்பரப்பான முல்லைத்தீவினைத் தொடும் பெருஞ்சாலையினூடாக அண்டைய கிராமமான முரசு மோட்டையையும் சென்றடையலாம். 50 கி.மீற்றர் வடக்கு நோக்கிச் சென்று பின் மேற்கு நோக்கிச் செல்லும் பாதையில் பயணித்தால் பூநகரியைத் தொடுக்கும் பாதையை சென்றடைகின்றது. இவ்வளவு முக்கியத்துவம் பரந்தன் சந்திக்கு இருக்கின்றது.

இது மாத்திரமல்ல! பரந்தனின் வடபுலத்தே தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசமான யாழ்ப்பாணத்தையும், தெற்கே இலங்கையின் தலைநகரான கொழும்பையும், பண்டாரவன்னியனின் கோட்டையான முல்லைத்தீவையும், மேற்கே பூநகரி - மன்னார் பிரதேசத்தை இணைக்கும் ஒரு முக்கிய மையமாக பரந்தன் சந்தி அமைந்திருந்தது.

பரந்தனுக்குப் பெருமை சேர்த்து என்று சொன்னால் அது 'பரந்தன் இரசாயனத் தொழிற் கூட்டுத்தாபனம்' ஆகும்! வடமாகாணத்தில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு அடுத்ததாக இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப்பெரிய தொழிற்சாலை இந்த இரசாயனத் தொழிற்சாலைதான். இத் தொழிற்சாலை இங்கு அமைந்ததன் மூலம் பரந்தன் புகையிரத நிலையம் முக்கியமான மையமாக விளங்கியது. நாட்டின் பல்வேறு பாகங்களுடனான தொடர்பும், பல்வேறு பகுதியில் இருந்து வந்த பல நூற்றுக்கணக்கான வர்களுக்கு வேலை வாய்ப்புக்களும் கிடைக்கலாயிற்று.

தூர இடங்களில் இருந்து இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்த தொழிலாளர்கள் அவர்கள் குடும்பத்தாருடன் சேர்ந்து வாழ்வதற்கு வசதியாக தொழிற்சாலைக்கு அருகினிலேயே நாகரிக வசதிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு மாதிரிக் கிராமம் அமைக்கப்பட்டு ஏராளமான குடும்பங்கள் அமர்த்தப்பட்டதால் பரந்தன் கிராமமாக இருந்தாலும் அது ஒரு நகரம் போலவே கருதப்பட்டது. இவ்வளவு சிறப்பு மிக்க அந்த இரசாயனத் தொழிற்சாலையில் இன்று கறள் பிடித்த இரும்புக் கேடர்களை மட்டுமே காணக்கூடியதாக இருக்கின்றது. நடந்துமுடிந்த போர்ச்சூழலில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பரந்தனும் ஒன்றாகும்.

அன்றைய பரந்தனைப்பற்றி நாம் குறிப்பிடுவதானால், பரந்தனின் சிறப்பும், வளர்ச்சியும் குமரபுரம் கிராமத்திலேயே தங்கியிருந்தது. அங்கு ஒரு குமரன் (கந்தன்) ஆலயம் தொன்றுதொட்டே இருந்ததனால் அதற்கு குமரபுரம் எனப் பெயர் வந்ததாக முன்னோர்கள் சொல்லி வருகின்றார்கள். ஆனால் பரந்தனின் பழம்பெரும் தொன்மைகளைப் பறைசாற்றும் விதமாக பரந்தன் சந்தியில் இருந்து பூநகரி செல்லும் பாதையில் பூநகரி என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக பூநகரியன் என்று ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்ட வழிக்கல்லும், பூல் வீதி, கெனடி வீதி, வில்சன் றோட் போன்ற ஆங்கிலப் பிரபுகளின் பெயர்கள் பொரித்த வீதிகளும் இன்றும் வழக்கத்தில் இருக்கின்றதைப் பார்க்கும்போது பரந்தன் பகுதியின் தொன்மையை நாம் அறிந்துகொள்ள முடிகின்றது.

1948ம் ஆண்டில் இருந்து 1955ம் ஆண்டுவரை இங்கு குடிப்பரம்பல் குறைந்த பிரதேசமாகவே இருந்தாகக் கருதப்படுகின்றது. அனேகமான இடங்கள் காடுகளும், பற்றைகளும், முட்புதர்களுமாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டதாகவும், 1955ம் ஆண்டில் கிராம விஸ்தரிப்புத் திட்டம் ஒன்றினை அரசாங்கம் தோற்றுவித்தபோது அத்திட்டத்தால் கவரப்பட்டு யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்த நிலமற்ற மக்கள் அங்கு வந்து தமக்குத் தமக்கென காணிகளாகப் பிரித்து தாமாகவே அந்த நிலங்களைத் துப்பரவு செய்து அங்கு குடிமனைகளை உருவாக்கினார்கள். அப்படி அமைந்ததுதான் குமரபுரம் என்னும் அழகிய கிராமமாகும்.

பொருளாதார ரீதியாக பரந்தன் ஒரு விவசாயக் கிராமம் ஆகும். அங்கு வாழும் அனேகமான குடும்பங்கள் விவசாயக் குடும்பங்கள்தான். நெல் பயிர் செய்கை அவர்களது பிரதான தொழிலாகும். இக் கிராமத்தின் மூத்த குடிமக்கள் கல்வியில் பின்தங்கி இருந்தாலும் தங்கள் பிள்ளைகளின் கல்விப்படிப்பில் அக்கறை செலுத்தியதால் பிற்காலத்தில் பலர் அரச பதவிகளில் பணி புரிந்தார்கள்.

பரந்தன் கிராமம் கிளிநொச்சி பாராளுமன்றத் தொகுதிக்குள் அடங்கியிருந்தாலும் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த எவரும் பரந்தன் மக்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களாக இருந்ததில்லை! காரணம் கிளிநொச்சியிலேயே ஏராளமான கிராமங்கள் தீவுப்பகுதி மக்களாலும், மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து குடியேறிய மக்களாலும் விஸ்தரித்துக்கொண்டிருந்த காலமானதால் வாக்காளர்கள் மிகக் குறைவாக இருந்த பரந்தன் கிராமம் கவனிப்பாரற்றே இருந்தது.

குமரபுரம் உருவான ஆரம்பகாலத்தில் பல்வேறு பாகங்களில் இருந்து வந்து குடியேறிய மக்களின் ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் பாடுபட்ட ஊர்ப் பெரியவர்களில் முக்கியமானவர்களாகக் கருதப்பட்டவர்களில் 'றங்கூன் மணியத்தார்' என அழைக்கப்பட்ட திருவாளர். சுப்பிரமணியம் அவர்களும், 'மாணிக்க வாத்தியார்' என்று அழைக்கப்பட்ட திருவாளர். மாணிக்கவாசகர் போன்றோர்களே இந்த மக்களுக்குத் தலைவர்கள் போல இருந்து அவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்களாவார்கள். இவர்களின் முயற்சியால்தான் பரந்தனில் பாடசாலையே வந்ததாக அறியப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின்னர் அங்கு ஆரம்பிக்கப்பட்ட பரந்தன் இந்து மகா வித்தியாலயம் டாக்டர்கள், பொறியியலாளர்கள், சட்ட வல்லுநர்கள் போன்ற சிறந்த பல மாணவர்களை உருவாவதற்குக் காரணமாக இருந்திருக்கின்றது.

இத்தனை சிறப்புக்களும் இன்று இல்லை. எவற்றையெல்லாம் பரந்தன் கிராமம் பெருமையாகக் கொண்டிருந்ததோ, எதில் எல்லாம் பெரு வளர்ச்சி கண்டிருந்ததோ, இன்று அத்தனையும் அழிந்தொழிந்து போய்விட்டன! பரந்தன் பிரதான வீதியைப் பெருமைப்படுத்திய தபால் நிலையம், வங்கிக் கட்டிடம், அரச கூட்டுத்தாபனம், மற்றும் கட்டடங்கள் அத்தனையும் தரைமட்டமாகிவிட்டன! இரசாயனத் தொழிற்சாலையோ பாழடைந்த மண்டபமாகக் காட்சியளிக்கின்றது! இந்து மகாவித்தியாலயம் இருந்த சுவடே இல்லை! சொல்லப்போனால் 1955ம் ஆண்டிற்கு முன்பு இருந்ததைப்போல புதர்களும், பற்றைகளும், காடுகளுமாக மாறிக் கிடக்கின்றது! ஆனாலும் மிகக் குறைவான குடும்பங்கள் இன்னமும் தாங்கள் வாழ்ந்த மண்ணைவிட்டுப் புலம்பெயராமல் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனால் அந்த மக்களின் தொகையைவிட அங்கு நிலை நிறுத்தப்பட்டிருக்கின்ற இராணுவத்தினரின் தொகை மிக அதிகம்!.

பரந்தனைப்பற்றி ஒருசில வரிகளில் சொல்லவேண்டுமானால் எப்பொழுதோ படித்து மறந்துபோகாமல் எனது மனதில் பதிந்திருக்கும் கவிதை ஒன்றை இங்கு நினைவுபடுத்துகின்றேன்.

எங்கள் கிராமத்துப் பாடசாலைக்கு
தாங்கள் நினைத்த நேரத்திற்குத்தான்
ஆசிரியர்கள் வருகின்றார்கள்!
தாங்கள் நினைத்தநேரத்திற்குத்தான்
பிள்ளைகளும் படிக்கப்போகின்றார்கள்!
எங்கள் கிராமத்திற்கு
எப்போதாவதுதான் தபாற்காரரே வருகின்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கிராமத்துச் சங்கக்கடை
எப்போதாவதுதான் திறக்கப்படுகின்றது.
எங்கள் கிராமத்திற்கு
இராணுவம் மட்டும் தினமும் வருகின்றது!

இந்தக் கவிதையை எழுதியவர் பெயர் தெரியவில்லை! ஆனால் இவர் பரந்தனைப்பற்றி நன்கு அறிந்திருப்பாரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

# உருத்திரபுரம்

தமிழர்களின் பூர்விக மண்ணான வட மாகாணத்தில் யாழ் மாவட்டத்திற்கும், வவுனியா மாவட்டத்திற்கும் இடையே அமைந்துள்ளது கிளிநொச்சி மாவட்டம். இம் மாவட்டத்திற்குள் அடங்கிய ஒரு பகுதிதான் உருத்திரபுரம்.

இயற்கை அன்னை உவந்தளித்த நீர்வளமும், விவசாயத்திற்கான நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்றதுதான் உருத்திரபுரம். இலங்கையின் பாரிய குளங்களில் ஒன்றான இரணைமடுக்குளம் உருத்திரபுரத்திற்கு மட்டுமல்ல.. கிளிநொச்சி மாவட்டத்திற்கே பெரும் வரப்பிரசாதமாகும். இக்குளத்தின் மூலமாக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள் பயனடைகின்றன. இலங்கை முழுவதையும் எடுத்துப்பார்க்கும்போது நெற்பயிர்ச்செய்கையில் முன்னணியில் நிற்கும் மாவட்டம் கிளிநொச்சிதான்!

1930களில் கிளிநொச்சி மாவட்டத்தில் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது உருவான கிராமங்களில் ஒன்றுதான் உருத்திரபுரம். குடியேற்றத்திட்டத்திற்கு முன்பு உருத்திரபுரத்தில் மக்கள் தொகை குறைவாக இருந்தாலும் செழிப்பான வளம் மிக்க கிராமமாகவே உருத்திரபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கின்றது. இங்கு மிகவும் பழமை வாய்த த ஒரு சிவாலயம் இருக்கின்றது. இச்சிவாலயத்தில் காணப்படும் சதுர வடிவான ஆவுடையார் எனச் சொல்லப்படும் கல் சோழப்பெருமன்னர் காலத்திற்கு முற்பட்டது என சொல்லப்படுகின்றது.

சதுர வடிவமான இவ் ஆவுடையார் கல் பிரம்மா, விஸ்ணு, உருத்திரன் ஆகிய மூன்று பாகங்களாக அமைந்துள்ளதாக சொல்லப் படுகின்றது. இதுபோன்ற சதுரவடிவான ஆவுடையப்பர் உருவங்கள் இராச ராஜேஸ்வரன் காலத்திற்கு முன்புதான் சிவாலயங்களில் வைத்து வழிபட்டு வந்துள்ளதாகவும், பின்னைய காலங்களில் வட்ட வடிவமான ஆவுடையாரே பிரதிட்சை செய்யப்பட்டு வந்ததாகவும் ஆராட்சியாளர்கள் கூறுகின்றனர்.

உருத்திரபுரம் பழமையான ஒரு கிராமமாக இருந்தபோதும் மிகப்பழமையான இச்சிவாலயம் இங்கு அமைந்திருப்பது இக் கிராமத்திற்குரிய சிறப்பாகும். இங்கு வாழும் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்வதால் விவசாயக் காணிகள் தவிர ஏனைய நிலங்கள் பற்றை களாகவும், காடுகளாகவுமே இருப்பதனால் நுளம்புகள் விசப்பூச்சிகளின் வாழ்விடங்களும் இங்குதான் அதிகம். இதனால் இங்கு வாழ்கின்ற மக்கள் மலேரியா நோயினால் அடிக்கடி பாதிக்கப்படுவதுண்டு. (இப்பொழுது உருத்திரபுரத்தில் ஒரு சிறிய வைத்தியசாலையும், ஒரு மகப்பேறு நிலையமும் உள்ளது.)

1930களிலேயே கிளிநொச்சி மாவட்டத்தில் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும் இக்குடியேற்றத் திட்டத்தின் முழு வடிவம் 1949-ல்தான் உருத்திரபுரத்தில் பயன்படத் தொடங்கியது. தீவுப்பகுதிகளைச் சேர்ந்த மக்களே இங்கு அதிகமாகக் குடியேறி விவசாயத்தில் ஈடுபட்டார்கள். இன்று சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இங்கு வாழ்கின்றார்கள்.

இக்கிராமத்திற்கு அருகே உள்ள சிவநகர், புதுமுறிப்பு, நீவில், இரத்தினபுரம், ஆனந்தபுரம், சக்திபுரம் போன்ற கிராமங்களும் இக்குடியேற்றத்திட்டத்தினால் வளர்ச்சியடைந்த கிராமங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கெல்லாம் மக்கள் விருப்பமுடன் குடியேறியமைக்கு முக்கியக் காரணம் விவசாயத்திற்கு ஏற்ற தரைமட்டமான நிலப்பரப்பு அமைந்திருந்ததுடன் இரணைமடுக்குளம், புதுமுறிப்புக்குளம், சிவன்கோவில்குளம் ஆகிய குளங்களில் இருந்து வருடம் பன்னிரண்டு மாதங்களும் தடையின்றி நீர் கிடைப்பதனால் வருடத்தில் இரண்டு போகம் விவசாயம் செய்யக்கூடிய வாய்ப்பு இருப்பதுமே முக்கியமானதாகும்.

குடியேற்றத்திட்டங்கள் வந்தபின்னர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அங்கு விளைவிக்கப்படும் நெல்லினை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்திருந்தமையால் முன்னர் தனியார் வியாபாரிகளிடம்

குறைந்த விலைக்கு நெல்லை விற்பனை செய்த விவசாயிகள் தங்கள் உழைப்பிற்கேற்ற பலனை இலகுவாகப் பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தமையும் மற்றுமொரு காரணமுமாகும்.

விவசாயம் மட்டுமல்ல; உப உணவுப் பயிர்களான எள்ளு கச்சான் போன்றவற்றுடன் தங்கள் வீட்டுத்தேவைகளுக்கான காய்கறிப் பயிரினங்களோடு, சிலர் அந்நாட்களில் அதிகப் பணம் கொடுக்கும் பயிரான புகையிலையையும் விளைவித்தார்கள். (இப்பொழுது கொழும்பிற்கு புகையிலை ஏற்றுமதி மந்தமாகிப் போய்விட்டதால் இங்கு புகையிலை விளைச்சலும் அருமையாகிவிட்டது) காய்கறிகளைத் தங்களது தேவைக்குப் போக மீதியை உள்ளூரில் உள்ள சந்தையிலும் சிலர் கிளிநொச்சியிலுள்ள பெரிய சந்தைக்கும் கொண்டு சென்று விற்று வருவார்கள்.

இவைகளுக்கு மத்தியில் அந்த நாட்களிலேயே தென்னை வளர்ப்பில் ஈடுபட்டவர்கள் அத்தோடு கால்நடைகளையும் வளர்த்ததனால் அங்கு பாற்பொருட் கூட்டுஸ்தாபனம் ஒன்றும் உருவானது. இத்தோடு பல வீடுகளில் குடிசைத் தொழிலாக கோழி வளர்த்தல், பனையோலைப் பொருட்கள் தயாரித்தல் எனவும் இடம்பெற்றதால் நகரத்துவாசிகளைவிட உருத்திரபுரம் உட்பட கிளிநொச்சி மாவட்டத்து மக்கள் செழிப்பாகவே வாழ்ந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டதற்குப் பின்னரே இங்கு பள்ளிக்கூட வசதிகள் அதிகமாக ஏற்படுத்தப்பட்டது. இங்கு மூன்று வித்தியாலயங்களும் விஞ்ஞான விவசாயக்கூடமமைந்த ஒரு மகாவித்தியாலயமும் இருக்கின்றது. இதன் காரணமாக இங்கு தொண்ணூறு வீதமான மக்கள் கல்வியறிவு நிறைந்தவர்களாகவே காணப்படுகின்றார்கள். இப்பொழுது இருபது வீதத்திற்கு மேற்பட்டவர்கள் அரசாங்க ஊழியர்களாக இருக்கின்றார்கள்.

இக்குடியேற்றத்திட்டங்களும், இங்கு குடியேறிய (தீவுப்பகுதி) மக்களின் தேவைகட்காகவும் பாடசாலைகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட ஏனைய வசதிகளைச் செய்து கொடுத்ததில் முக்கியப் பங்காளராக இருப்பவர் அன்றைய காலத்தில் அங்கு பாராளமன்ற உறுப்பினராக இருந்த தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த அமரர் க.பொ. இரத்தினம் அவர்களே. இதன்காரணமாக அடுத்தடுத்து வந்த தேர்தல் களில் இவர் அதிகப்படியான வாக்குகளால் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கு வாழ்கின்ற மக்களில் தொண்ணூறு வீதமானவர்கள் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களே. மீதி பத்து சதவீதமானவர்களும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களாவார்கள். இங்கு பழமையான ஒரு சிவாலயமும், மூன்று பெரிய வினாயகர் ஆலயமும், ஒரு முருகன் ஆலயமும் இன்னும் சில சிறிய ஆலயங்களும் இருக்கின்றன. இதேநேரம் கிறிஸ்தவ மதத்தினரின் இரண்டு அனாதை மாணவ விடுதிகளும், ஒரு மிசனறியும் உண்டு. இவைகளுக்கு மத்தியில் உருத்திரபுரத்தில் மூன்று நூல் நிலையங்கள் இருப்பது அங்கு வாழ்கின்ற மக்களின் முன்னேற்றத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22

# முள்ளியவளை

இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம், முல்லைத்தீவு சாலையில் சுமார் 40 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளதுதான் முள்ளியவளை என்னும் கிராமம். இக்கிராமம் பதினேழு சிறு கிராமங்களை உள்ளடக்கி இருந்ததாக பழைய வரலாற்று ஏடுகள் கூறுகின்றன. ஆனால் தற்பொழுது வற்றாப்பளை, நடுக்குடியிருப்பு, மட்டுவில் குடியிருப்பு, வெளிக்குடியிருப்பு, தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி, கணுக்கேணி, மாமூலை ஆகிய கிராமங்கள் மட்டுமே முள்ளியவளைக் கிராமத்தில் உள்ளடக்கி இருக்கின்றது.

பொதுவாக வன்னிப் பிரதேசத்தில் உள்ள ஊர்களின் பெயர்கள் நீர் நிலைகளுடன் தொடர்புடையனவாகவே இருக்கின்றன. ஊதாரணத்திற்கு கணுக்கேணி, தண்ணீரூற்று, சம்மளங்குளம், காஞ்சூரமோட்டை என்பனவற்றைக் கூறலாம். முள்ளியவளை என்னும் பெயர் வந்ததற்கு பல்வேறு காரணங்கள் கூறுப்படுகின்றது. ஆதிக்குடியிருப்பு என்னும் பெயரில் 'முன்னையவளை' என்னும் பெயரில்தான் இவ் ஊர் இருந்த தாகவும் பின்னர் அது திரிந்து முள்ளியவளை என மாறியதாகவும் ஒரு கதை உண்டு. ஆனால் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த 'வையாபாடல்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் நூலில் 'முள்ளிமாநகர்' என்னும் பெயரால் இவ் ஊர் அழைக்கப் பட்டிருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இவ் ஊர் முட்காடாகவே இருந்ததால் இவ் ஊர் 'முள்ளிவளை' என்றே அழைக்கப்பட்டதாகவும், அதுவே காலப்போக்கில் முள்ளியவளை அன அழைக்கப்பட்டதாகவும் அங்கு வாழ்கின்ற மூத்த குடிமக்கள் சொல்லிக் கொள்கின்றார்கள். எது எப்படி இருந்தபோதும் தற்பொழுது அரசாங்கப் பதிவுகளில் முள்ளியவளை என்றே இவ் ஊரின் பதிவு இருக்கின்றது.

முள்ளியவளையின் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது அங்கு வாழ்ந்த வன்னிய மக்களில் நாராயண முதலியார் வம்சமே முக்கிய இடத்தைப் பெறுகின்றார்கள். 1697ம் ஆண்டளவில் ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் வன்னியப் பிரதிநிதிகளை ஒரு கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு ஒல்லாந்த நிர்வாகத்தால் பணிக்கப்பட்டபோது வன்னியப் பிரதிநிகளின் மற்றொரு பகுதியினரான நல்லமாப்பாணர், புவி நல்லமாப்பாணர், அம்பலவாணர் ஆகிய இனத்தவர்களுடன் சேர்ந்து நாராயணர் இனத்தவரும் அக்கூட்டத்திற்குச் செல்லவில்லையாம்! அதுமாத்திரமல்ல! ஒல்லாந்தருக்கு திறையாகக் (கப்பமாக) கொடுக்கவேண்டிய யானைகளைக் கொடுப்பதிலும் ஆர்வம் காட்டவில்லையாம்! மாறாக ஒல்லாந்தரை ஏமாற்றுவதிலேயே ஆர்வம் காட்டினார்களாம்.

அனைத்து வன்னிய மக்களையும் ஒருங்கிணைத்தது பண்டார வன்னியன்தான் என ஒரு குறிப்பு கூறுகின்றது. வன்னி நாட்டின் இறுதி மன்னனாகத் திகழ்ந்த குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் அவர்கள் மேற்பற்று, முள்ளியவளை, வன்னிமைகளுக்கு அதிபதியாக இருந்ததாகவும் மேற்பற்றில் உள்ள பண்டாரக்குளம்தான் பண்டாரவன்னியனின் இராசதானியாக இருந்தாகவும் வரலாற்று நூல்கள் சொல்கின்றன.

புகழ் பூத்த வன்னி மன்னர்கள் பலரது ஆட்சியில் முள்ளியவளை வீரத்தின் விளைநிலமாக இருந்திருக்கின்றது. ஒல்லாந்தர் காலத்தில்

மிகவும் வளம் செழித்த பிரதேசமாக முள்ளியவளை திகழ்ந்ததற்கு வரலாற்றுச் சான்றுகளுமுண்டு. முல்லையும், மருதமும் இணைந்திருக்கும் இப் பிரதேசத்தில் காடுபடு திரவியங்களாக யானைத்தந்தம், மான்,மரைத் தோல்கள், சாதி மரங்கள் என்பவையும், வயல்படு செல்வமான செந்நெல்லும், கருநெல்லும் மலிந்து காணப்பட்டனவையாகும்.

அத்துடன் தென்னை, பனை, மா, பலா போன்ற தாவரங்களும் முள்ளியவளைக்கு பெருமை சேர்த்திருக்கின்றன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிதேசத்திற்கு நிகராாக முள்ளியவளையிலும் பனை மரங்கள் நிறையவே இருந்திருக்கின்றன. இவைதவிர முள்ளியவளைக் காடுகளில் விளையும் முரளிப்பழம் முக்கனிகளின் சுவைக்கு நிகராதென அதனை உண்டவர்கள் கூறுவார்கள்.

ஊர் கிராமமாக இருப்பதனால் அண்ணாவிமரபு இசை நாடகங் களுடன் மகுடிக்கூத்து, வேதாள ஆட்டம் போன்ற கலை வடிவங்கள் இங்கு பிரபலம் ஆனவை! ஆனாலும் இன்றைய தலைமுறையினரில் இக் கலைகளைப் பேணுவோர் மிகக் குறைவாகவே இருந்தாலும் வற்றாபளை கண்ணகை அம்மன், காட்டுவிநாயகர், கல்யாணவேலர் போன்ற பிரபலமான ஆலயத் திருவிழாக்களில் இப்பொழுதும் கோவலன் கூத்து மட்டும் தவறாமல் இடம்பெறுவதாக அறிய முடிகின்றது. இக்கூத்து கண்ணகை அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடையதால் நடிகர்கள் விரதமிருந்து பக்தி சிரத்தையுடன் ஆடி நடிப்பார்களாம்!.

கூத்துவகைகளில் வடமோடி, தென்மோடி, மா தோட்டப்பாங்கு, யாழ்ப்பாணப்பாங்கு என ஆய்வாளர்கள் வகைப்படுத்தியிருந்தாலும் இந்தப் பாங்குகள் எதிலும்சேராத தனி மோடியாக இவர்கள் முல்லைமோடிக் கூத்து என்றே இன்றளவும் கோவலன் கூத்தை நடித்து வருகின்றார்கள். இடையிடையே காத்தவராயன் கூத்தை நடிப்பதும் உண்டு. அதற்குக் காரணம் மாரியம்மனுடைய ஆணையுடனும், அனுமதியுடனுமே உலக நிகழ்ச்சிகள் அனைத்தும் நடைபெறுகின்றன என்பது காத்தவராயன் கதையின் உட்பொருள் என்பதனாலேயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோல நாட்டார் பாடல்களும் முள்ளியவளையில் பிரபல்யம் ஆனவை. பெரும்பாலும் விவசாயத்துடன் தொடர்புடையதாகவே இப்பாடல்கள் அமைந்திருக்கும். அருவி வெட்டும்போது நாட்டார் மெட்டுக்களில் கதிரையப்பர் பள்ளு, பண்டிப்பள்ளு, குருவிப்பள்ளு, பரமசிவன் சிந்து, முருகையன் சிந்து முதலிய பாடல்கள் படிக்கப்படுவதை இன்றும் சில இடங்களில் காணக்கூடியதாக இருப்பதாக அங்கு வாழ்பவர்கள் கூறுகின்றார்கள்.

'கமுகஞ்சண்டை' என்னும் நாட்டார் பாடல் தண்ணீரூற்றுப் பிரதேசத் தில் பாடப்பட்டு வருகின்றது. அதுபோல ஒப்பாரிப் பாடல் என்னும் நாட்டுப்புறப் பாடலும் தண்ணிரூற்றுப் பிரதேசத்தில் பிரபலமானது. இந்த ஒப்பாரிப் பாடலின் கதை ஆண்கள் எவராலும் அடக்கமுடியாமல்போன மதயானை ஒன்றை அடக்கிப்பிடித்த அரியாத்தையின் கதையாகும்! கதையின் இறுதியில் எதிரிகளின் சூழ்ச்சியால் அரியாத்தை மரணத்தை தழுவிக்கொள்ள கணவன் வேலப்பணிக்கனும் உடன்கட்டை ஏறுகின்றான். இந்தக் கதை சிறுகதை, மற்றும் நாவலாகவும் வெளிவந்திருக்கின்றது.

முள்ளியவளையைச் சேர்ந்த அரியான் பொய்கை க.செல்லத்துரை என்ற கலைஞர் இந்த அரியாத்தை கதையை நாட்டுக்கூத்தாக, இசை நாடகமாக, ஒப்பாரி நாடகமாகவெல்லாம் அரங்கேற்றியதுடன் நூலாகவும் எழுதி வெளியிட்டிருக்கின்றார். இவருக்கு இலங்கை கலாச்சாரப்பேரவை 'தமிழ்மணி' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த நந்தி உடையார் என்பவரைப்பற்றி இன்றும் அங்கு வாழுகின்ற மக்கள் பேசிக் கொள்கின்றார்கள். அதற்குக் காரணம் 1909க்குப் பின்னரே நம்மவர்களில் பலர் அறிந்த நந்திக் கடலைப்போல இன்றும் ஏராளமானவர்கள் அறியாத பெயர் நந்தி வயல்வெளி என்பதாகும். மிகப்பெரும் வயல் நிலமான இந்த நந்தி வெளி இந்த உடையாருக்கே சொந்தமானதால் இவர் நந்தி உடையார் என்றே அழைக்கப்பட்டார். இவர் அரச உத்தியோகத்தராக

இருந்தபோதும் விவசாயம் செய்து பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கியதுடன் தனது வயலில் வேலை செய்த பல குடும்பங்களின் பிள்ளைகளின் படிப்பு, திருமணம் போன்றவற்றிற்கு உதவிகள் புரிந்திருந்தமையால் அவரிடம் பலன் பெற்றவர்களின் வழித் தோன்றல்கள்கூட இன்றளவும் அவரின் பெயரை உச்சரித்துக் கொள்கின்றார்கள்.

முள்ளிவாய்க்கால் மக்களைப்பற்றி இன்றளவும் ஒரு பேச்சு உண்டு. அது கடன் வாங்க வருபவர்களுக்கும் கட்டித்தயிருடன் சோறும் கொடுத்து விருந்தளிப்பார்களாம்! விருந்தோம்பல் என்பது வன்னி கிராம மக்களின் சிறந்த பண்பாகும். வேற்றூரில் இருந்து கடனுக்கு நெல் வாங்க வருபவர்களுக்குக்கூட உணவு கொடுத்துத்தான் பின்பு பேச்சுக்களையே ஆரம்பிப்பார்களாம்! இந்த உணவில் தயிர் கண்டிப்பாக இருக்குமாம். அதற்குக் காரணம் அனேகமாக ஒவ்வொரு வீடுகளிலும் வயல் உழுவதற்காக காளைமாடு வளர்ப்பவர்கள் தங்களது பால் தேவைகளுக்காக பசு மாடும் வளர்ப்பார்களாம். இதில் தங்கள் தேவைக்கு மிஞ்சிய பாலைத் தயிராக்கி சோற்றுடன் சாப்பிடுவதும், தயிரை மோராக்கி வயலில் வேலை செய்பவர்களின் தாகம் தணித்துக்கொள்ளவும் எடுத்துக் கொள்வார்கள்.

முள்ளியவளையில் வாழ்கின்ற பெரும்பாலான மக்கள் சைவ சமயத்தவர்களாகவே இருக்கின்றார்கள். இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் மிக மிகக் குறைவானவர்களே! இருந்தும் நீராவிப்பிட்டியில் இஸ்லாமியருக்கென ஒரு பள்ளி வாசலும், தண்ணீரூற்று, மாமூலை அகிய இடங்களில் இரண்டு கத்தோலிக்க ஆலயங்களும் இருக்கின்றன. சைவ மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு கண்ணகை அம்மன், முள்ளியவளைக் காட்டு விநாயகர், தண்ணீரூற்று ஊற்றங்கரைச் சித்தி விநாயகர், கணுக்கேணிக் கற்பகப் பிள்ளையார் என்பவை பிரசித்த மானவையாகும். இவை தவிர சின்னச்சின்ன ஆலயங்கள் பல இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பொழுது முள்ளியவளை நகரமாகிக்கொண்டு வருகின்றது. அனேகமான வயல் நிலங்களில் சீமெந்தால் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் நிமிர்ந்து நிற்கின்றன! இவற்றின் தேவைகளுக்காக ஏராளமான பனை மரங்கள் தறிக்கப்பட்டுவிட்டன! ஆங்கு வாழ்கின்ற மக்கள் திருமணப் பந்தங்கள் மூலமாக யாழ்ப்பாணத்துடனும், ஏனைய அயல் பிரதேசங் களுடனும் எற்பட்ட நெருங்கிய தொடர்புகளினால் கிராமப் பண்பாட்டு வாழ்க்கை முறைகளில் மாற்றங்களைக் காணக்கூடியதாகவே இருக்கின்றது.

எது எப்படி இருந்த போதிலும் முள்ளியவளை என்று சொல்லும்போது எமக்கு ஏற்படுகின்ற அந்த கிராமத்து வாசனையை முள்ளியவளை மக்களின் பேச்சுத் தமிழில் இருந்து மாறிவிடவில்லை!.

23

# எழுவை தீவு

இலங்கையே ஒரு தீவாக இருந்தாலும் இலங்கையின் முடியாக விளங்கும் யாழ் குடா நாட்டின் உச்சியில் குட்டிக் குட்டித் தீவுகளாக சப்த தீவுகள் என கூறப்படும் ஏழு தீவுகள் இருப்பதாக சொல்லப்படு கின்றன! அவையாவன: அனலைதீவு, எழுவைதீவு, வேலணைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, ஆகியவன என்று கூறப்பட்டாலும் இலங்கையில் தீவுகளின் எண்ணிக்கை இன்னும் பல இருக்கின்றன!

அவைகளாவன... இரணைதீவு, காரைதீவு, காட்டுத்தீவு (இதை பறவைத்தீவு என்றும் சொல்வார்கள்) பாலைதீவு, கச்சைதீவு, கற்கடதீவு, கறுக்காதீவு, காக்கைதீவு, குறுஞ்சாத்தீவு, கோரதீவு, சிறுத்தீவு, செல்லையா தீவு, இப்படியாக பல தீவுகள் இலங்கையின் பல பகுதிகளிலும் இருக்கின்றது. இதில் எழுவைதீவு மட்டுமே இந்த அத்தனை தீவுகளிலும் மிகச் சிறிய தீவாகும். இத்தீவின் பரப்பளவானது வடக்குத் தெற்காக ஒன்றரைமைல் நீளத்தையும், கிழக்கு மேற்காக அரைமைல் அகலத்தையுமே கொண்டதாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நகரின் தென்மேற்குத் திசையில் அலைகடலின் நடுவினில் அமைந்துள்ள இத்தீவு ஊர்காவற்துறை துறைமுகத்திற்கு வடமேற்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது. ஆரம்பகாலத்தில் எழு என்னும் பெயர் கொண்ட ஒருவகை முட்செடி இங்கு நிறைந்து காணப்பட்டதால் எழு + தீவு = எழுவை தீவு என்னும் காரணப்பெயர் கொண்டதாக சொல்லப்படுகின்றது. இவைதவிர பண்டைய நாட்களில் தென்னிந்தியாவில் இருந்து ஈழக்கரைக்கு சங்கு குளிக்க வந்தோர் முதன் முதலில் கண்ட தீவு (முதலில் காட்சிக்கு எழுந்த தீவு) என்றபடியால் எழுவைதீவு எனப் பெயர் வந்தாகவும், அப்படி வந்தவர்களுக்கு சூரியன் எழும் திசையில் இத்தீவு அமைந்திருந்தபடியால் (கிழக்கை எழுவான் என்றும் மேற்கை படுவான் என்றும் அழைப்பது வழக்கம்) இப்பெயர் வந்ததாகவும் பல தகவல்கள் சொல்கின்றன. இத்தீவில் கிழக்குக் கடற்கரைப்பகுதி மணல் செறிந்ததாகவும், மேற்குக் கடற்கரைப்பகுதி கற்பாறைகள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றன.

இங்கு குடியேற்றம் எப்பொழுது ஆரம்பமானது என்பதனை அறிய முடியவில்லை. எனினும் ஒல்லாந்தர் காலத்தில் அனலைதீவு மக்களே இங்கு குடியேறியதாக சொல்லப்படுகின்றது. அக்காலத்தில் முதலில் குடியேறியவர்கள் இந்து மதத்தினராகவும், அவர்களைத் தொடர்ந்து இரண்டு கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மீன்பிடிக்கும் தொழில் செய்யும் குடும்பங்கள் குடியேறியதாகவும் கதைகள் உண்டு. ஆனால் அவர்கள் எங்கிருந்து வந்து குடியேறினார்கள் என்னும் விபரங்களை அறிய முடியவில்லை. இவர்களைத் தொடர்ந்து மண்டைதீவு, மாதகல், மற்றும் கரையோர ஊர்களில் இருந்தும் மக்கள் குடியேறியதாகச் சொல்லப்படுகின்றது. காரணம், மீன்பிடித் தொழிலிற்கு நல்ல வசதியான இடமாக இத்தீவு அமைந்திருந்ததே.

குடிசன மதிப்பீட்டின் விபரங்களின்படி 1941ம் ஆண்டில் இங்கு 480 குடும்பங்களும் 2000 வாக்காளர்களும் இருந்திருக்கின்றார்கள்! பின்னர் அரசினால் எற்படுத்திக் கொடுக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களினால் அனேகக் குடும்பங்கள் கிளிநொச்சிப் பகுதிக்குச்

சென்றுவிட்டார்கள். 2000-வது ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி 88 குடும்பங்களே வசிப்பதாகவும் இவர்களில் இருபத்தைந்து குடும்பத்தினரே இந்துக் குடும்பங்கள் எனவும், ஏனைய குடும்பங்கள் கத்தோலிக்கக் குடும்பங்கள் எனவும் சொல்லப்படுகின்றது.

எழுவைதீவின் தென்பகுதியில் இறங்கு துறையும், தொம்பை அப்பர் என்னும் தேவாலயமும் இருக்கின்றன. 1925ல் இத்தேவாலயத்தில் கத்தோலிக்கப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரியை ஆரம்பித்த புரட்டஸ்த்தாந்து மதத்தினரே இப்பாடசாலையையும் ஆரம்பித்தார்கள். அதே ஆண்டில் யாழ்ப்பாணம் சைவ விருத்திச் சங்கமும் ஒரு பாடசாலையை ஆரம்பித்தது. அதன் பெயர் முருகவேள் வித்தியாசாலை. இங்கு படித்த அறுபது பிள்ளைகளுக்கு மூன்று ஆசிரியர்கள் கடமையாற்றி இருக்கின்றார்கள்.

நாற்புறமும் கடல் சூழ்ந்த மணல் செறிந்த தீவானபடியால் இங்கு வான்பயிரான கற்பகத்தருவாம் பனை மரமே அதிகம் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. பனைமரங்கள் நீரின்றி வளரக்கூடியதாக இருந்தமையால் இன்று இத்தீவு ஒரு பனங்காடாக காட்சி அளிக்கின்றது. ஆரம்பத்தில் இருந்தே இங்கு வாழ்ந்த தென்பகுதி மக்கள் மீன்பிடித் தொழிலையும், வடபகுதி மக்கள் பனம்பொருள் உற்பத்தியிலும் ஈடுபட்டிருந்தனர். நடுப்பகுதியில் வாழ்ந்த மக்கள் சிறு அளவில் தோட்டப் பயிர்களும் செய்தார்கள். அனேகமான குடும்பங்கள் ஆடு, மாடு, கோழி போன்றவற்றையும் வளர்த்த தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டார்கள்.

தீவு சிறிதாக இருந்தாலும் இங்கு உற்பத்தி செய்யப்படும் பலவகையான ஓலைப்பாய்கள், நார்க்கடகங்கள், மற்றும் பெட்டி பனையோலை விசிறி போன்றவையும், மீன், கருவாடு, சங்கு, இறால், சிங்க இறால் போன்றவையும் தினமும் யாழ்ப்பாணச் சந்தைக்கு வந்து சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள தேவாலயத்திற்கு வடக்கே துறைமுகத்தில் இருந்து சொற்ப தூரத்தில் முத்தன்காடு என்னும் ஓர் இடம் இருக்கின்றது. அங்கு ஒரு முருகன் ஆலயம் இருக்கின்றது. இவ்வாலயம் ஈழத்திருச்செந்தூர் என அழைக்கப்படுகின்றது.

இங்கு வாழும் மக்கள் இன்றுவரை சிறு தோணிகள், படகுகள் மூலமாகவே பயணம் செய்து ஊர்காவற்துறை, மற்றும் காரைநகர் போன்ற ஊர்களுக்கு வந்து தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றார்கள். வைத்திய வசதிகளையும் அவ்விதமே தேடிக்கொள்கின்றார்கள். ஏனைய தீவு மக்கள் கல்வியால் வளர்ந்தும் தொழில் வளத்தால் உயர்ந்தும் தங்கள் ஊரை முன்னேற்றம் அடைய வைத்ததுபோல இத்தீவில் எந்த முன்னேற்றமும் இல்லை! பெயர் சொல்லும்படியான கல்விமான்கள், தொழிலதிபர்கள்கூட இல்லாதது பெரும் குறையே!

தேர்தல் காலங்களில் மட்டும் வாக்குக்காக இவர்களை தேடிச் செல்லும் அரசியல்வாதிகள் பல வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டுச் செல்வார்கள்! தேர்தல் முடிந்ததும் இப்படி ஒரு தீவு இருக்கின்றது என்பதையே மறந்து விடுகின்றார்கள்.

எழுவைதீவு மக்கள் கல்வியிலும் ,தொழில் வளத்திலும் எழுந்து நிற்க அரசாங்கம் தனது பார்வையை அங்கும் செலுத்த வேண்டும்.

இத்தீவைப்பற்றி ஒரு கவிஞர் எழுதிவைத்த பாடல் இது. (கவிஞரின் பெயர் தெரியவில்லை)

சின்னஞ்சிறிய தீவிதாம் எழுவை
செந்திருவேலன் கோயிலும் - கிறிஸ்து
மன்னவன் ஆலய மாட்சியும் - தாங்கும்
மலர்ந்து எழுவை மண்ணிலும் - போதாது
தன்னிலை உயரும் வகையிலான - கமமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானிருந்திடினும் குடிசனக்குறைவால்
முன்னிருந்தது போலில்லையால் - வளர்ச்சி
முற்றும் நிறைந்திடக் காண்பதோ அரிது!
இந்நிலை நீங்கிட மார்க்கமும் கண்டால்
எழுவையும் சிறந்து எழுந்திடும் காண்பீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24

# தெல்லிப்பளை

ஈழத் திருநாட்டின் புகழ்பூத்த ஊர்களில் தெல்லிப்பளையும் ஒன்றாகும்! அதற்கு முக்கியக் காரணம் அங்கு அமைந்திருக்கும் துர்க்கை அம்மன் ஆலயமாகும். 'சிவத்தமிழ்ச் செல்வி' 'துர்க்காதுரங்கா' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயத்தின் சிறப்புகளில் ஒன்று செவ்வாய் தோசம் காரணமாக திருமணத்தில் தாமதம் ஏற்பட்டிருக்கும் கன்னிப் பெண்கள் ஏழு வாரங்கள் தொடர்ந்து இவ் ஆலயத்திற்கு வந்து வழிபட்டால் அவர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும் என்பது ஒரு நம்பிக்கை! இதன் காரணமாகவே நாட்டின் பலபக்கங்களில் இருந்தும் செவ்வாய்க்கிழமை தோறும் ஏராளமான பெண்கள் இவ் ஆலயத்திற்கு வந்து வழிபட்டுச் செல்வார்கள்.

மேற்கொண்டு தெல்லிப்பளையின் சிறப்புக்களைத் தெரிந்து கொள்வதற்கு முன்பாக தெல்லிப்பளை என்னும் பெயர் எப்படி வந்தது என்னும் காரணத்தைத் தெரிந்து கொள்வோம்.

தெல்லி + பளை = தெல்லிப்பளை. தெல்லி என்னும் தலைவன் ஒருவனின் ஆணைக்குட்பட்ட பளைப்பகுதி தெல்லிப்பளை என சிறப்புப்

பெயர் பெற்றதாகவும், தெல்லிப்பளையிலே தெல்லிவளவு, தெல்லியம்பறை என்ற காணிப் பெயர்களும் வழக்கத்தில் உள்ளதாகவும், மேலும் தல்லிப்பள்ளி என்றும் அழைக்கப்பட்டதாகவும் பேராசிரியர் இ.பாலசுந்தரம் அலர்கள் எழுதிய இடப்பெயர்வு ஆய்வு நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

அந்நூலில் தல்லிப்பள்ளி என்ற பெயருக்கான காரணத்தை விளக்கும்போது 'மாவிட்டபுரத்தின் அயல்பகுதியே தெல்லிப்பளையாகும். மாருதப்பிரவீகவல்லி தனது குதிரை முகம் நீங்கி இளமையும் வனப்பும் பொருந்தப்பெற்று இவ்விடத்திலேயே தங்கியிருந்தாள் என்பதும், அதன் காரணமாகவே இவ் ஊருக்கு தல்லிப்பளை என பெயர் வந்ததாகவும் காலப்போக்கில் அது தெல்லிப்பளையாக மாறியிருக்கலாம் எனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.'

இது மாத்திரமல்ல! பளை என்னும் பெயர் கொடிகாமத்திற்கு தெற்கே பத்து மைல் தொலைவிலும், மாவிட்டபுரம் பகுதியிலும் இருக்கின்றது. இந்த பளை என்னும் சொல் பண்டைய வரலாற்றுத் தளமாக இருப்பதாகவும் பாலசுந்தரம் அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த பளை என்னும் பெயரை ஒட்டி புலோப்பளை, பெரியபளை, வராத்துப்பளை, விடத்தற்பளை என்னும் ஊர்களும் இருக்கின்றன.

வடக்கே மாவிட்டபுரம், கிழக்கே விளான், தெற்கே மல்லாகம், மேற்கே அம்பை என்பனவற்றை எல்லைகளாகக் கொண்டது தெல்லிப் பளை. சமயம், கல்வி, அரசியல், விவசாயம் ஆகிய துறைகளில் இங்கு வாழ்ந்தவர்கள் ஆற்றிய பங்கு அளப்பரியது!.

கிறிஸ்தவ, இந்து மதங்களின் ஆலயங்களை அருகருகே கொண்டு எந்தவிதமான வேறுபாடுகளும் இல்லாமல் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்கின்ற பெருமையைப் பெற்றது தெல்லிப்பளை. பிள்ளையார் கோவில், மாரியம்மன் ஆலயம், துர்க்கையம்மன் ஆலயம் என இந்துமத ஆலயங்கள் நிறையவே ஊண்டு. இதில் துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தில் அனாதை இல்லம், கல்யாண மண்டபம், அன்னதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடம் ஆகியனவை இயங்கி வருகின்றது. இப்படியான இந்து ஆலயங்களுக்கு மத்தியில் 1816ஆம் ஆண்டில் அமெரிக்க மிசனரியால் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று யூனியன் கல்லூரிக்கு அருகே அமைந்திருக்கின்றது.

1816ம் ஆண்டு இலங்கைக்கு வந்த அமெரிக்க மிசனெரிமார்கள் முதன்முதலில் தெல்லிப்பளையில்தான் தங்கள் பணியை ஆரம்பித்தார்களாம்! ஆரம்பத்தில் இலவசப் பொது பாடசாலையாக ஆரம்பித்து தற்போது நகரின் மத்தியில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் யூனியன் கல்லூரிதான் இந்தச் சரித்திரப் புகழ் பெற்ற கல்விக்கூடம் ஆகும்.

இங்கு ஆசிரியராக இருந்த பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் சைவ மக்களுக்கு தனிப்பள்ளிக்கூடம் வேண்டும் என்று தமது முயற்சியில் ஆரம்பித்த திண்ணைப் பள்ளிதான் இன்று வடமாகாணத்தில் பிரசித்தி பெற்ற கல்லூரிகளில் ஒன்றாக விளங்கும் மகாஜனாக் கல்லூரி ஆகும்.

இந்த இரண்டு கல்லூரிகளும் கல்வித்தரத்தில் மட்டுமல்ல விளையாட்டுத் துறையிலும் முன்னிலையிலேயே இருந்தன! வடமாகாண ரீதியாக பாடசாலைகளுக்கிடையே நடந்துவந்த உதைபந்தாட்டப் போட்டியில் தொடர்ந்து ஒன்பது வருடங்களாக சம்பயன் கிண்ணத்தைப் பெற்ற பெருமை யூனியன் கல்லூரிக்கு உண்டு.

கல்விமான்களில் காலம் சென்ற தமிழ்ப் பேராசிரியர் துணைவேந்தர் சு.வித்தியானந்தன், அமரர்கள் தெ.து.ஜெயரத்தினம், ஐ.கு.துரைரத்தினம், ஆகியோர்கள் பிறந்த மண் என்னும் பெருமையும் தெல்லிப்பளைக்கு உண்டு. 1886ம் ஆண்டில் தமது 18வது வயதில் இலங்கை தேசாதியதிபதியின் நன்கொடையைப் பெற்று இரண்டு வருடகால உயர் கல்வியைக் கற்பதற்காக புகைக் கப்பல் மூலமாக அமெரிக்காவிற்குச் சென்ற முதலாவது இலங்கையரான சின்னத்தம்பி. கார்த்திகேசு. யேசுதாசன் என்பவர் பிறந்த மண்ணும் தெல்லிப்பளைதான் என்பதில் அவ் ஊர் மக்களுக்குத் தனிப்பெருமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பளை காங்கேசன்துறை பாராளுமன்றத் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தது. அத் தொகுதியில் நீண்ட காலங்களாக பாராளு மன்ற உறுப்பினராக செயல்பட்ட தந்தை அமரர் ஏ. செல்வநாயகம் அவர்கள் பிறந்த மண்ணும் தெல்லிப்பளைதான்

இலங்கையில் வெளியான முதல் தமிழ்ப் பத்திரிகையான 'உதய தாரகை' உதயமான இடம் தெல்லிப்பளையாகும்! அதுபோல இலங்கையில் இரண்டாவதாக வெளிவந்த ஆங்கிலப் பத்திரிகையான Morning Star (Weekly) ஆரம்பமானதும் தெல்லிப்பளையில்தான்!

நகரமாக இருந்தாலும் விவசாயத்திலும் தெல்லிப்பளை முன்னணி யிலேயே இருந்தது. விவசாயக் குடும்பங்களில் பிறந்து பிற்காலத்தில் கல்வி, வர்த்தகத்துறைகளில் ஈடுபட்டவர்கள்கூட தொடர்ந்து விவசாயத்தை செய்தே வந்தனர். இங்கு வெங்காயம், மிளகாய், புகையிலை ஆகியவன பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. இவர்களின் செயற்பாடுகளுக்கு வசதியாக வலி வடக்கு பிரதேச அபிவிருத்தி அதிகாரியின் தலைமைக் காரியாலயம், வலி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைமைக் காரியாலயம் ஆகியவன தெல்லிப்பளையிலேயே அமைந்திருந்தது.

அவ்வூர் மக்களின் வைத்திய சேவைக்காக உருவாக்கப்பட்ட கூட்டுறவு வைத்தியசாலை இன்று பக்கத்து ஊர் மக்களின் நோய்களையும் தீர்த்துவைக்கும் பெரும் சேவையை செய்து வருகின்றது.

பரப்பளவில் தெல்லிப்பளை சிறியதாக இருந்தாலும் வரலாற்றில் மிகப் பெரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25

## பழமையைப் பாதுகாக்கும்
# காலி - கோட்டை நகரம்

இலங்கையின் தென்மேற்கு முனையில் அமைந்திருக்கும் காலி நகரம் 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன்றா் கிம்கதித்த என்றே அழைக்கப்பட்டது. அப்போது காலிதான் இலங்கையின் பிரதான துறைமுகமாக விளங்கியது. டச்சு காலனித்துவ ஆட்சியின்போதுதான் காலி உச்ச அபிவிருத்தியைக் கண்டது.

இங்குள்ள பிரதான நதி ஜின் கங்கையாகும். இது ஜின்தோட்ட வில் கடலுடன் கலக்கின்றது. 2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் இருபத்தாறாம் திகதி ஏற்பட்ட கடற்கோளினால் (சுனாமி) காலி நகரில் பல ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர். ஜின்தோட்டக் கடலில் எழுந்த அலைகளே அதிக அழிவை ஏற்படுத்தியிருந்தன.

கடலுக்குள் பாறைகள் இயற்கை அரணாக அமைய ஐரோப்பியர் கட்டிய கோட்டை காலிக்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இதில் ஐரோப்பியக் கட்டிடக்கலையும், தெற்காசிய மரபுகளும் இணைந்துள்ளன. காலி கோட்டை பாதுகாக்கப்பட வேண்டிய உலக புராதன இடமாக அமையவேண்டுமென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988ம் ஆண்டு யுனெஸ்கோ அங்கீகரித்திருந்தது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இக்கோட்டை இலங்கையில் உள்ள பெரும்பாலான கோட்டைகள் போன்று கடலும் நிலமும் உள்ள சிறிய குடாப் பகுதியில் கட்டப்பட்டிருக் கின்றது. கோட்டைக்கு அரணாக அருகில் பெரிய பெரிய கற்பாறைகள் இருக்கின்றன.

காலியில் உள்ள வேறு முக்கிய இடங்களாக புனித மரியாள் பேராலயத்துடன் தமிழ் மக்கள் வணங்கும் சிவன் கோவிலும் ஒன்றுள்ளது. அத்துடன் 'அம்மன்கல்ல' என்னும் வரலாற்று ரீதியான உல்லாச ஹோட்டல் ஆகியவனவும் விளங்குகின்றன.

தென்னிலங்கையின் பிரதான நகராக விளங்கும் இந்,நகரில் தற்பொழுது சுமார் ஒரு இலட்சம் மக்கள் வாழ்வதாக அறியமுடிகின்றது. இவர்களில் சிங்கள மக்கள் பெருபான்மையாகவும், முஸ்லீம் மக்கள் சிறுபான்மையாகவும், மிகச் சிறிய எண்ணிக்கையிலேயே தமிழ் மக்களும் வாழ்கின்றார்கள். இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிலர் பெரும் வர்த்தகர்களாக வாழ்ந்திருக்கின்றார்கள். இவர்களில் சிலர் மிகப்பெரிய செல்வாக்குடன் அதாவது ஒரு மந்திரிக்கு கொடுக்கும் மரியாதையை அங்குள்ள சிங்கள மக்களும், முஸ்லீம் மக்களும் கொடுத்த காலம் ஒன்றுண்டு! அது 1983ல் நடைபெற்ற இனக்கலவரத்திற்கு முன்பாக! அந்த இனக் கலவரத்தோடு இவர்களில் பலர் காலியை காலிசெய்துவிட்டு யாழ்ப்பாணத்திற்கு ஓடிவந்தவர்களும், காணாமல் போனவர்களும், கொல்லப்பட்டவர்களுமாக போக.. இப்பொழுது மிக சொற்பமான தமிழர்களே வாழ்கின்றார்கள்.

கொழும்பிலிருந்து இந்நகரை இணைத்து மாத்தறை,வரை கடலோரப் புகையிரதப்பாதை காணப்படுகின்றது. சர்வதேச கிரிக்கெட் மைதானம் நகரின் மத்தியில் இருக்கின்றது. காலி நகரம் பழமையைப் பேணிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றும் அதே வேளையில் உல்லாசப் பயணிகளின் சொர்க்க பூமியாகவும் சர்வதேச ரீதியில் புகழ்பெற்று விழங்குகின்றது.

காலிக் கோட்டைக்கு கிழக்குப் பக்கத்தில் 'றுமஸ்ஸல்லகந்த" என்னும் மிகப்பெரிய மலை காணப்படுகின்றது. இராமாயணத்தில் இடம்பெற்ற சில சம்பவங்களுடன் இம்மலை தொடர்புடையது என உள்ளூர் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

கி.பி. 1400ம் ஆண்டிற்கு முன்னரே இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டது. வாசனைத் திரவியங்களை ஏற்றுமதி செய்த பிரதான துறைமுகமாக காலி விளங்கியிருக்கின்றது.

மேற்கு நாட்டவர்கள் ஆட்சி செய்வதற்கு முன்னரே காலி பிரபலமான துறைமுகமாக விளங்கியுள்ளது. இத்துறைமுகம் ஊடாக பாரசீகர்கள், அராபியர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்கள், மலாயர்கள், இந்தியர்கள், சீனர்களென பல நாட்டவர்களும் வியாபாரத்தை மேற்கோண்டு வந்துள்ளனர்.

சீன அட்மிரல் செங்கி இரண்டாவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்ததைக் குறிக்குமுகமாக 1411ம் ஆண்டில் காலியில் மூன்று மொழிகளிலான ஒரு கல்வெட்டு உருவாக்கப்பட்டிருந்தது. இதில் சீன, தமிழ், பாரசிக மொழிகள் இடம்பெற்றுள்ளன.

காலியின் நவீன சரித்திரம் 1505ம் ஆண்டு ஆரம்பிக்கின்றது. அவ்வேளை ஒரு புயலின் காரணமாக லொறன்கோ மெய்டாலின் தலமையின் கீழ் போத்துக்கேயரின் கப்பல் ஒன்று காலியை வந்து சேர்ந்தது. ஆனால் காலி மக்கள் போர்த்துக்கேயரை அங்கு பிரவேசிக்க விடாமல் தடுத்தார்கள். ஆனால் போர்த்துக்கேயர் பலாத்காரமாக அங்கு உட்பிரவேசித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1640ல் போர்த்துக்கேயர் டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியரிடம் சரணடைய வேண்டியதாயிற்று. டச்சுக்காரர்கள் தற்போதைய கோட்டையை 1663ல் திருத்திக் கட்டினார்கள். அவர்கள் அரண் போன்ற சுவரைக் கட்டுவதற்கு கிரனைட் கற்களைப் பாவித்தார்கள். அத்துடன் மூன்று புற அரண்களையும் கட்டினார்கள். அவைகள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் என அழைக்கப்படுகின்றன.

1796ல் டச்சுக்காரர்களிடம் இருந்து பிரிட்டிஷர் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் அவர்கள் கோட்டையில் மாற்றங்கள் எதுவும் செய்யவில்லை. அத்துடன் அந்தக் கோட்டையையே காலியின் நிர்வாக மையமாக வைத்துக்கொண்டார்கள். காலி நகரம் பல் சமய, பல் கலாச்சார, பல்லின மக்கள் வாழ்கின்ற இடமாக விளங்குகின்றது. இங்குதான் றுகுணு பல்கலைகழகத்தின் இரு பீடங்கள் இயங்குகின்றன.

காலிக் கோட்டை முதலில் போர்த்துக்கேயராலேயே கட்டப்பட்டது. பின்னர் 17ம் நூற்றாண்டில் டச்சுகாரர்களால் திருத்திக் கட்டப்பட்டது. 400 ஆண்டுகளுக்குப் பின்பு இலங்கை அரசு மீள் கட்டுமான வேலைகளை மேற்கொள்ளப்பட்டதை அடுத்து அது புதியதைப்போன்று தோற்றமளிக்கின்றது. இன்று இலங்கை அரசும், கோட்டையின் உள்ளே சொத்துக்களை வைத்திருக்கும் பல டச்சுக்காரர்களும் இதனை சுதந்திரத் துறைமுகமாகவும், சுதந்திர வர்த்தக வலயமாகவும் ஆக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

போர்த்துக்கேயர்களிடமிருந்து டச்சுக்காரர்கள் கொழும்பைக் கைப்பற்றுவதற்கு முன்னர் காலிதான் அவர்களது தலைமையகமாக இருந்தது. கொழும்புக் கோட்டையைப் போலல்லாது காலிக் கோட்டை அழிக்கப்படாமல் இருந்தது மட்டுமல்ல; உலகில் 17ம் நூற்றாண்டின் காலனித்துவக் கோட்டை அமைப்பின் மிகச்சிறந்த பராமரிப்பிற்கு காலிக் கோட்டை உதாரணமாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை உண்மையில் ஒரு சுவர் அமைக்கப்பட்ட நகரமாகும்!. நீண்ட சதுர பாணியிலான வீதிகளும், டச்சுக் காலனித்துவப் பாணியிலான முக்கோண வடிவமைக்கொண்ட சுவர்கள், மற்றும் விறாந்தைகள் கொண்ட தாழ்ந்த வீடுகளும் உள்ளன. பழைய காலி நகரில் வசிப்பவர்களில் பெரும்பாலோனோர் முஸ்லீம் வியாபாரிகளின் வழித்தோன்றல்கள் ஆவார்கள். இவர்கள் டச்சுக்காரர்களின் வீடுகளில்தான் வசிக்கின்றார்கள். ஆனால் அக்காலத்தில் டச்சுக்காரர்களின் வர்த்தக ஏகபோகத்தினை மீறி சிறுசிறு வியாபாரங்களை இந்த முஸ்லீம்கள் மேற்கொண்டதனால் அவர்களால் ஒதுக்கப்பட்டவர்கள் என்பது வரலாறாகும்.

இந்த முஸ்லீம்கள் அவர்களது வீடுகளை தமது விருப்பம் போல மாற்றி வெளியில் இருந்து யாராவது பார்த்தால் தமது பெண்களைப் பார்க்கமுடியாதவாறு அமைத்துக்கொண்டார்கள். ஆனாலும் சமீபத்தில் இவ் வீடுகளில் மேலும் மாற்றங்கள் செய்ய அனுமதிக்கப்படவில்லையென அறிய முடிகின்றது. ஆரம்பகால பிரிட்டிஸார் காலத்திலான சில கட்டிடங்களில் 20ம் நூற்றாண்டு காலத்தை நினைவு கூரும் வெளிச்ச வீடுகளும் இருக்கின்றன. இவைகள் பழமையைப் பறைசாற்றி நிற்பதோடு அழகாகவும் இருக்கின்றன.

1588ம் ஆண்டு போர்த்துக்கேயரால் கோட்டை அமைக்கப்பட்ட தற்கான ஆதாரங்கள் அங்கு காணப்பட்டாலும் ஆனால் அவர்கள் கோட்டையை விட்டுச் சென்றதற்கான ஆதாரங்கள் எவையும் அங்கில்லை! 1640ம் ஆண்டு டச்சுக்காரர் கொஸ்ரர் என்பவரின் தலமையின் கீழ் 2500 பேர் கொண்ட படையுடன் வந்து போத்துக்கேயரிடம் இருந்து கோட்டையைக் கைப்பற்றியுள்ளார்கள். ஆகவே இந்தக் காலமே போர்த்துக்கேயர் காலியை விட்டு வெளியேறிய காலமாகக் கருதமுடிகின்றது.

காலிக்குடாவின் மறு பகுதியில் ஒரு மலை இருக்கின்றது. மலையின் உச்சியில் இருந்து காலி நகரின் அழகைப் பார்க்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இங்குதான் இலங்கையின் அழகான காலனித்துவ இல்லங்களில் ஒன்றான 'குளோ சென் பேர்க் ஹேட்டல்' உள்ளது. சிவப்பு ஓட்டினால் வேயப்பட்ட கூரையுடனாக இக் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது.

குடாவைப் பார்த்தவாறு றோஸ் மலர்த் தோட்டம் ஒன்றும் உள்ளது. அவற்றின் பின்னால் கோட்டை நகரிலுள்ள பழமை வாய்ந்த முக்கிய கட்டிடங்கள் நிமிர்ந்து நிற்கின்றன. காலியில் உள்ள கோட்டையும் பழமையிலும் வலிமையாக உள்ள இந்தக் கட்டிடங்களுமே காலி நகரத்தின் முதிசமாக இருக்கின்றது.

2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் வீசிய சுனாமியால் இலங்கை உட்பட பல நாடுகள் ஏராளமான அழிவுகளைச் சந்தித்திருந்த போதும் காலியின் பாதுகாப்பு அரண் என்று சொல்லப்படுகின்ற இந்த காலி கோட்டை மட்டும் எந்தவிதமான பாதிப்புக்கும் உள்ளாகவில்லை. இந்தக் கோட்டையின் வரலாறு தொடர்பாக மேலதிகமான தகவல்களை கோட்டைக்குள் உள்ளேயுள்ள டச்சுக்கலை நூதனசாலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

# நுவரெலியா

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கையின் எழில் கொஞ்சும் மத்திய மாகாணத்தில்தான் இந்த அழகுமிகு நகரான நுவரெலியா என்னும் அழகான நகரம் அமைந்திருக்கின்றது.

ஐயன் வள்ளுவன் எழுதிவைத்த 'இரு புனலும் வாய்ந்த மலையும், வரு புனலும் வல்லரனும் நாட்டிற்கு உறுப்பு' என்னும் குறளுக்கு ஏற்ப... அதாவது ஊற்று, மழை ஆகிய இருவகை நீர் வளமும், தக்கவாறு அமைந்த மலையும், அந்த மலையில் இருந்து ஆறாக வரும் நீர் வளமும், வலிமையான அரணும், நாட்டுக்கு உறுப்புக்கள் ஆகும் என்னும் கருத்துக்கு முற்றிலும் பொருத்தமானதொரு ஊர்தான் நுவரெலியா.

இலங்கையைப்பற்றிய வரலாற்று நிகழ்வு ஒன்றினை நினைவு கூருகையில் நுவரெலியா முக்கிய இடத்தினைப் பெறுகின்றது!. பாரதக் கதைகளில் ஒன்றான இராமாயணத்தில் சீதையின் சிறப்புக்களை கூறும்போது நுவரெலியா முக்கிய இடத்தினைப் பெறுகின்றது.

நுவரெலியா என்னும் பெயர் பெற்றதற்குப் பல காரணங்கள் கூறப் பட்டிருக்கின்ற போதும் சீதையை மீட்பதற்காக தூது வந்த அனுமானின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலை அரக்கர்கள் ஒன்றிணைந்து தீ மூட்ட தீயுடன் உள்ள வாலுடன் அனுமான் ஊர் முழுவதும் சுத்தியபோது ஊரே எரியத் தொடங்கியது. அப்பொழுது அங்கு வந்த இராமன் 'நீறு அணையவில்லையா?' எனக் கேட்டான். அச்சொல்லே காலப்போக்கில் மருவி நுவரெலியா எனப் பெயர் பெற்றதாகவும் ஒரு கதை உண்டு!.

இன்னுமொரு காரணமும் சொல்லப்படுகின்றது! அதாவது ''கண்டி" என்னும் ஊருக்கு சிங்கள மொழியில் 'நுவர" என்பதே பொருளாகும். கண்டியைச் சேர்ந்த சிங்களவர் ஒருவர் மலைமீது ஏறிநின்று பார்த்தபோது 'எலிய தெரிந்ததாகக் கூறினாராம்! (எலிய என்னும் சிங்களச் சொல்லுக்கு தமிழ்ப் பெயர் ஒளி ஆகும்) 'நுவர' என்னும் சொல்லுடன் 'எலிய' என்னும் சொல் இணைந்து 'நுவரெலியா' என்னும் பெயர் வந்ததாகவும் கூறப்படுகின்றது.

நுவரெலியா நகரத்தின் மண் வளம், அத்துடன் வருடம் பன்னிரண்டு மாதங்களும் கிடைக்கும் நீர் வளம், அகிய இரண்டும் ஒருங்கே அமைந்ததனால் விவசாயம், மற்றும் தோட்டப் பயிர்ச் செய்கைகள் இங்கு பிரதான தொழிலாக இருந்தன. நுவரெலியாவில் இருந்துதான் கொழும்பு போன்ற பெரிய நகரங்களுக்கெல்லாம் மரக்கறி கொண்டு செல்லப்படும் அளவிற்கு விவசாயத்திலும், சிறு தானிய உற்பத்தியிலும் முன்னணியில் இருந்தது நுவரெலியா.

நுவரெலியாவில் உள்ள ஹக்கலை என்னும் இடத்தில் அமைந் திருக்கும் இயற்கை நீரூற்று பார்ப்பதற்கு மிக அழகாகவும், அதே நேரத்தில் நுவரெலியா நகருக்கே தேவையான நீரினையும் கொடுக்கின்றது. இந்த நீரூற்றைப் பார்ப்பதற்கென்றே பிற ஊர்களில் இருந்து மக்கள் வருவதுண்டு.

நுவரெலியாவிற்கு அழகூட்டுவது அங்குள்ள மலர்ச் செடிகள்! ஏனைய ஊர்களில் புற்செடிகள் முளைப்பதுபோல நுவரெலியா நகரமெங்கும் பூஞ்செடிகளால் நிறைந்திருக்கும்! மூன்று மாதங்கள்வரை வாடாமல் இருக்கக்கூடிய சில அரிய வகையான பூக்கள் நுவரெலியாவில் இருந்து வெளிநாடுகளுக்குக்கூட ஏற்றுமதியாகின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த பால்பண்ணையின் கிளை ஒன்று நுவரெலியாவில் உள்ள 'அம்பேவலை' என்னும் இடத்தில் உள்ளது. இலங்கை முழுவதற்குமான மால்மா தேவையை இப்பண்ணை பூர்த்தி செய்கின்றது.

யாழ்ப்பாணத்துப் பனைமரங்களைப்போல் நுவரெலியாவில் பிரசித்தமானது தித்தில் மரம்! பனங்கள்ளில் இருந்து தயாரிக்கப்படும் பனங்கட்டிகளைப்போல தித்தில் வெல்லம் மிகவும் பிரசித்தமானது. நுவரெலியா, கண்டி போன்ற ஊர்களுக்குச் செல்பவர்கள் தித்தில் பனங்கட்டி வாங்காமல் வரமாட்டார்கள்.

சாதாரணமாகவே நுவரெலியா குளிர் பிரதேசமாக இருந்தாலும் ஐரோப்பிய நாடுகளைப்போல சித்திரை மாதம் தொடங்கியதும் இயற்கை எழிலை ரசிப்பதற்காக உல்லாசப் பயணிகளின் வருகை ஆரம்பமாகிவிடும்! இதில் வெளிநாட்டவரும் அடங்குவார்கள். அந்தக் காலங்களில் பாதை ஓரங்களில் பல குட்டிக் கடைகளெல்லாம் உருவாகிவிடும்! இங்கு தித்தில் வெல்லம், மரக்கறிகளில் இருந்து பலவிதமான பதியம் வைக்கப்பட்ட பூங்கன்றுகளெல்லாம் மலிவு விலையில் விற்கப்படுவது வழமையாகும்.

நுவரெலியாவிற்குப் பக்கத்து நகரான கண்டியில் இந்திய வம்சாவழியினைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக இருந்தாலும் நுவரெலியாவிலும் இந்திய வம்சாவழி மக்கள் வாழ்கின்றார்கள். நீண்ட காலமாக அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த இந்த மக்களின் அரசியல், குடியுரிமைகளுக்காக போராடிய தலைவர்களில் முக்கியமானவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானும் ஒருவராகும். மூன்று அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் பாராளுமன்றத் தொகுதியான நுவரெலியாத் தொகுதியில் தொண்டமான் அவர்கள் தனது இறுதிக் காலம்வரை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளை எடுத்துக் கொண்டால் தேசியப் பாடசாலைகள், பெருந்தோட்டப் பாடசாலைகள் என்பனவும் அமைந்துள்ளன. தோட்டப் பாடசாலைகளில் அனேகமாக தோட்டவேலைகள் செய்யும் இந்திய வம்சாவழியினரின் பிள்ளைகளே படித்து வந்தாலும் தேசியப்பாடசாலை, தோட்டப் பாடசாலை என்ற பேதங்கள் இல்லாமல் அனைத்துப் பாடசாலைகளிலும் ஒரேவிதமான கல்வியே கற்பிக்கப்படுகின்றது.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை மிகவும் பரிதாபகரமானது! காலையில் சூரியன் உதயமாகும் நேரத்தில் குடும்பத் தலைவனுடன், குடும்பத்தலைவியும் கண் விழித்து வீட்டு வேலைகளை செய்து முடித்து பாடசாலைகளுக்கு பிள்ளைகளைப் அனுப்பிவிட்டு, சிறு குழந்தைகளை வேறு வழியின்றி பிள்ளைகளை பராமரிக்கும் மடுவத்தில் ஒப்படைத்துவிட்டு கணவனும் மனைவியுமாக கொழுந்து பறிக்கும் வேலைக்காக தோட்டத்திற்குச் சென்றுவிடுவார்கள். பின்பு சூரியன் மறைந்த பிற்பாடே கணவனும் மனைவியும் வீடு திரும்புவார்கள். அப்பொழுதுதான் தங்கள் குழந்தைகளை திரும்பவும் தங்களுடன் எடுத்துக்கொள்வார்கள். அதன் பின்பு சமைத்துச் சாப்பிட்டுத் தூங்கச் செல்ல சாமம் ஆகிவிடும்! மீண்டும் மறுநாள் அதேமாதிரித்தான்! இது தோட்டப்பகுதி மக்களின் நாளாந்த வாழ்க்கையாகும்.

இவை தவிர இந்த மக்களின் லயன் வாழ்க்கை (ஒரு கொட்டகைக் குள் ஒரு குடும்பமே வாழ்வது) இன்றுவரை முற்றாகத் தீர்ந்த பாடில்லை!

இப்படியாக இந்த மக்களின் கண்ணீரிலும், வியர்வையிலும் நுவரெலியா என்னும் நகரம் செழிப்பாக இருக்கின்றது என்பதுதான் உண்மை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27

# மட்டக் களப்பு

'மீன்பாடும் தேன்நாடு' என்றுதான் மட்டக்களப்பை வர்ணிப்பார்கள். ஆனால் மட்டக்களப்பை ஒரு பொன் விளையும் பூமி என்று சொன்னால் அது மிகைப்படுத்தல் அல்ல! ஆம்; விவசாயத்திலும் பெரும் அபிவிருத்தியை அடைந்த பிரதேசம் மட்டக்களப்பாகும்!

மருதம், நெய்தல், முல்லை ஆகிய நிலப்பரப்புக்களை ஒருங்கே கொண்டு 2632 கி. மீற்றர் நிலப்பரப்புக்களை உள்ளடக்கியுள்ள மட்டக்களப்பு மாவட்டம் வாகரை முதல் துறை நிலாவணை வரை பரந்துள்ளது. பூர்வீக காலத்தில் வடக்கே வெருகலையையும், தெற்கே குமணையையும் கொண்டு நீண்டு பரந்திருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

மட்டக்களப்பு என்னும் பெயர் வந்ததற்குக்கூட வரலாற்று ரீதியான கூறப்படும் தகவல்கள் எம்மை ஆச்சரியப்பட வைக்கின்றது. "களப்பு" என்ற சொல் கடல்நீர் உள் நுழைந்து நிற்கும் ஆழமில்லாத பகுதி. கடல்நீரும் ஆற்றுநீரும் கலந்து நிற்கும் பகுதியையும் களப்பு என்றே கூறுவார்கள். இந்த வரிசையில் தனங்களப்பு, கோரக்களப்பு என்னும் பெயரிலும் ஊர்கள் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் அயோத்தி என்னும் நகரில் வாழ்ந்த முற்குகர் என்னும் இனத்து மக்கள் இலங்கையின் கீழ்ப்பாகம் வந்தபோது ஒரு சதுப்பேரி காணப்பட்டதாகவும், அச்சதுப்பேரியின் ஊடே தமது ஓடத்தைச் செலுத்திச் செல்லும் வழியில் மண் செறிந்த ஒரு முனை குறுகலாக இருந்ததனால் அதற்கு மண்முனை என பெயர் வைத்தார்களாம்! மேலும் தென்திசை நோக்கிச் செல்லும் வழியில் வாவி எல்லைக்கு அப்பால் ஓடத்தை செலுத்த முடியாதபடி மண் திட்டிகள் இருந்தமையினால் ஓடத்தில் இருந்தவர்கள் 'மண் மட்டு மட்டா இருக்கின்றதே' எனப் பேசி... பின்னர் சற்று நீண்டு 'மட்டக்களப்படா' என்று பேசிக்கொள்ள அந்த வார்த்தை களின் அடிப்படையிலேயே பின்னர் அந்த இடத்திற்கு மட்டக்களப்பு என பெயர் வந்ததாக இடப்பெயர் ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ஒரு நாட்டில் உள்ள ஊர்களின் பெயர்களை அறிந்துகொள்வதின் மூலமாகவே அந்த ஊர்களின் வரலாறுகளை அறிந்துகொள்ள முடியும்! 'மட்டக்களப்பு மான்மியம்' என்னும் நூலில் மட்டக்களப்பில் உள்ள ஊர்களின் பெயர்கள் எப்படி வரப்பெற்றது என்னும் காரணங்களைச் சிறப்பாக எழுதியிருக்கின்றார்கள். அதிலிருந்து பெறப்பெற்ற சில தகவல்களை கீழே தருகின்றேன்.

மட்டக்களப்பில் 'புளியந்தீவு' என்னும் அழகான தீவு ஒன்று இருக்கின்றது. இத்தீவு முப்பது மைல் நீளமான வாவி ஒன்றினால் சூழப்பட்டு அழகும், அமைதியும் நிறைந்த மண்மேட்டையும் அதனோடு இணைந்த வயல் நிலங்களையும் கொண்டுள்ளது. இத்தீவிற்கு புளியந்தீவு எனப் பெயர் வந்ததற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றது. ஒன்று இங்கு புளியமரங்கள் அதிகமாகக் காணப்படுவதால் அப்பெயர் வந்ததாகவும், மற்றொன்று அதிகாலத்தில் இப்பகுதி 'புளியன்' என்னும் மன்னனால் ஆளப்பட்டு வந்தமையால் புளியன்தீவு எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

மட்டக்களப்பில் உள்ள மற்றொரு தீவு 'திமிலைதீவு' ஆகும். பண்டைக்காலம் தொட்டே பாரதநாட்டிற்கும் இலங்கைக்கும் மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கமான தொடர்புகள் இருந்திருக்கின்றது! தென்னிந்தியாவில் மீன்பிடிப்பதையே தொழிலாகக் கொண்ட 'திமிலர்' என்னும் பெயருடைய ஒரு இன மக்கள் தொழில் நிமித்தமாக இத்தீவில் மாதக்கணக்காக தங்கியிருப்பது வழக்கமாம். ஒரு பகுதி மக்கள் தொழிலை முடித்துக் கொண்டு செல்ல இன்னொரு பகுதி மக்கள் அங்கு வந்து தங்குவார்களாம்! இப்படியாக அந்த இன மக்களே அங்கு நீண்ட காலம் வசித்து வந்ததனால் அதற்கு திமிலைதீவு என்னும் பெயர் வரப்பெற்றதாம். மேலும் இங்கு எல்லாக் காலங்களிலும் அதிகமான அளவு வலைகள் கட்டியே மீன் பிடிப்பதனால் இதற்கு 'வலைத்தீவு' என்னும் மற்றொரு பெயரும் உண்டு.

இங்கு 'செட்டிப்பாளையம்' என்னும் ஒரு ஊர் இருக்கின்றது. இந்தியாவில் இருந்து வியாபாரம் செய்வதற்காக மட்டக்களப்பிற்கு வந்த செட்டிக்குல வணிகர் ஒருவர் வந்த ஓடம் வரும் வழியில் கடலின் ஆழம் போதாமையால் தரைதட்டி நிற்க அவர் இறங்கி நின்ற இடம்தான் செட்டிப்பாளையம் எனப் பெயர் பெற்றதாம்! அதுபோல மட்டக்களப்பில் உள்ள 'வந்தாறு மூலை' என்ற ஊருக்கு அப்பெயர் வரக்காரணம், கண்ணகி மதுரையை எரித்துவிட்டு வந்து ஒரு மூலையில் இருந்து இளைப்பாறியது அங்குதானாம்! அதனாலேயே அந்த ஊருக்கு 'வந்தாறு மூலை' எனப் பெயர் வந்ததாக கூறப்படுகின்றது!

மட்டக்களப்பின் தெற்கே மண்முனைத்துறையினூடாக ஒன்பது மைல் தொலைவில் 'கொக்கட்டிச்சோலை' என்னும் கிராமம் இருக்கின்றது. அந்தக்காலத்தில் கொக்கட்டி என்னும் மரங்கள் நிறைய இருந்தமையால் இக்கிராமத்திற்கு கொக்கட்டிச்சோலை எனப் பெயர் வரக் காரணமாயிற்றாம்.

மட்டக்களப்பு மாவட்டம் முழுக்க முழுக்க விவசாயம் செய்யும் பகுதியாகும். அன்றுதொட்டு இன்றுவரை இங்கு வாழ்கின்ற மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றார்கள். இடைக்காலத்தில் மக்களிடத்திலே அரசாங்க உத்தியோகம் பார்க்கவேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டதால் இளைஞர்களின் கவனம் அந்தப் பக்கம் திரும்ப விவசாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியின் பெருக்கம் குறைந்தாலும் இன்றும் வாவிக்கு மேற்கே வாழ்கின்ற மக்கள் நெல், சோளம், மரவெள்ளி முதலிய பயிர்களையும் கீழ்ப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் கத்தரி, மிளகாய், வெண்டி போன்ற சிறு பயிர்களையும் பயிரிட்டு வருமானத்தைப் பெறுகின்றனர்.

மட்டக்களப்பில் சைவம், கிறிஸ்தவம், முஸ்லீம், பௌத்தம் என நான்கு இனத்தவர்களுக்கான ஆலயங்களும் இருக்கின்றன! கொக்கட்டிச்சோலை, மாமாங்கம், மண்டூர், சித்தாண்டி போன்ற ஊர்களில் அமைந்திருக்கின்ற சைவ ஆலயங்கள் மிகவும் பழமை வாய்ந்தவை ஆகும். மாமாங்கர் கோவில் சிவன் கோவில் ஆனாலும் மாமாங்கப் பிள்ளையார் கோவில் என்றே மக்களால் அழைக்கப்படுகின்றது. இங்கு மூலமூர்த்தியாக சிவலிங்கம் இருந்தபோதும் விநாயகர் அங்கியுடன் காணப்படுவதால் விநாயகரே மூலஸ்தானத்தில் எழுந்தருளி இருக்கின்றார் என்பது பக்தர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

ஐரோப்பியர்களால் பரப்பப்பட்ட கிறிஸ்தவ மதம் இன்றும் இங்கு நிலைத்துக் காணப்படுகின்றது. கிறிஸ்தவ தேவாலயங்கள் பல இருந்தாலும் தாண்டவெளி பிரதேசத்தில் அமைந்திருக்கும் தேவாலயமே மிகப் பெரியதாகும். நத்தார் பண்டிகைக் காலங்களில் இப்பிரதேசம் களைகட்டி நிற்கும்.

முஸ்லீம்கள் இங்கு பரந்துபட்டு வாழ்கின்றார்கள். இவர்கள் வாழ்கின்ற பகுதிகளில் கண்டிப்பாக ஒரு பள்ளிவாசல் இருக்கும். ஏழ்மை நிலையில் வாழ்கின்ற முஸ்லீம்கள்கூட மத சம்பிரதாயச் சடங்குகளை செவ்வனே செய்து முடிப்பார்கள். நகரின் மத்தியில் பௌத்த விகாரை ஒன்று இருக்கின்றது. பௌத்தமத மக்கள் மிகக் குறைவாகவே இருந்தாலும் பௌத்த குருமார்களின் போதனைகள் தினமும் இடம்பெறுகின்றன. வெசாக் பண்டிகை இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வேந்தனான இராவணனின் கோட்டை, கொத்தணி, மாளிகை, அரன் என்பன மட்டுமாநகரில் அமைந்திருந்ததாகவும் கடல் அரிப்பின் காரமாக அவை அழிந்துவிட்டதாகவும் ஆய்வாளர்கள் கூறினாலும் ஆங்கிலேயரால் கட்டப்பட்ட கோட்டையும், கலங்கரை விளக்கும் இன்றும் நிமிர்ந்து நிற்கின்றன. இக்கலங்கரை விளக்கு யுத்தகாலத்திலும் அழிக்கப்படாமல் பாதுகாப்பாகவே இருக்கின்றது. ஆங்கிலேயரின் பாதுகாப்பிற்காகக் கட்டப்பட்ட கோட்டை இன்று கச்சேரியாக இயங்கி வருகின்றது.

இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த மட்டக்களப்பு பாராளு மன்றத்தொகுதியின் உறுப்பினராக நீண்ட காலமாக தமிழரசுக்கட்சியைச் சார்ந்த திரு. இராசதுரை அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கின்றார். தமிழர் விடுதலைக்கூட்டணி உருவாக்கப்பட்டபின்னர் நடைபெற்ற முதல் தேர்தலில் கூட்டணியின் சார்பில் இராசதுரையும் தமிழரசுக் கட்சியின் சார்பில் காசி ஆனந்தன் அவர்களும் போட்டியிட்டு இராசதுரை அவர்களே வெற்றிபெற்றிருந்தார்.

மேலும் மட்டக்களப்பின் வளர்ச்சியில் தங்களை இணைத்துக் கொண்ட அறிஞர்கள், சமயப் பெரியவர்கள், அரசியல் தலைவர்களைப் பற்றிய விபரங்களை என்னால் சேகரிக்க முடியாமைக்காக வருந்து கின்றேன். இருந்தபோதும் இந்த மீன்பாடும் தேன்நாட்டைப் பற்றி ஓரளவேனும் உங்களோடு பகிர்ந்துகொண்டதில் மகிழ்ச்சியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28

# வேலணை

உலக வரைபடத்தில் இலங்கை நாடே ஒரு குட்டித்தீவுதான்! மாங்காய் வடிவமாகத் திகழும் இத்தீவு நாட்டின் தலைமுடியாக அமைந் திருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குத் திசையிலும் சில குட்டித்தீவுகள் இருக்கின்றன! இவற்றில் லைடன்தீவு முதன்மையானது.

ஒல்லாந்தரால் லைடன் தீவு என அழைக்கப்பட்ட வேலணைதீவு, வடக்கே 'சரவணை' என்னும் ஊருக்கும், கிழக்கே மண்கும்பான் என்ற ஊருக்கும் இடைப்பட்டதாகும்.

நாற்திசையும் கடலால் சூழப்பட்டாலும் தென்திசையில் உள்ள கடல் நீரேரி அருகில் உள்ள இன்னொரு தீவான புங்குடுதீவிடம் இருந்து வேலணையைப் பிரித்து நிற்கின்றது.

இலங்கைக்கு கொழும்பு தலைநகரமாக இருப்பதுபோல வேலணைக்கு வங்களாவடியே தலைநகராக இருக்கின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்துறை, புங்குடுதீவு ஆகிய நகரங்களுக்குச் செல்பவர்கள் இந்த வங்களாவடிச் சந்தியை சந்திக்காமல் செல்லமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தின் கற்பகத்தரு என வர்ணிக்கப்படும் பனை மரங்கள் வேலணையில் அதிகம். அத்துடன் வயல் நிலங்களும் அதிகமாக உள்ள வேலணையில் உவர் நீரே அதிகமான பிரதேசங்களில் காணப்படுகின்றது. தாழ்வான பகுதிகளில் மட்டுமே நன்நீர் கிடைக்கின்றது.

## ஆலயங்கள்

பிரான்ஸ் நாட்டில் புகழ்பெற்ற சாட் மாதா ஆலயம் இருப்பதுபோல வேலணையில் சாட்டி மாதா என்னும் தேவாலயம் இருக்கின்றது. பிரான்ஸ் சாட்மாதா ஆலயத்தில் கூடு சுத்தல் நடைபெறும் அதே நாளிலேயே வேலணை சாட்டிமாதா ஆலயத்திலும் கூடுசுத்தல் திருவிழா நடைபெறுவது வழமையாகும்.

இதேபோல புகழ்பெற்ற பல சைவ ஆலயங்களும் இருக்கின்றன. இவற்றில் 'பெருங்குளத்து ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்' 'பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம்' 'இலந்தைவனம் சித்திவிநாயகர் ஆலயம்' 'பள்ளம்புலம் முருகமூர்த்தி கோவில்' 'செட்டிபுலம் காளாவாய்த்துறை ஐயனார் ஆலயம்' 'அம்பிகைநகர் ஸ்ரீ மகேஸ்வரி ஆலயம்' இப்படி இன்னும் சில ஆலயங்களும் இருக்கின்றன.

சாட்டி தொடக்கம், அல்லைப்பிட்டிவரை பளிங்குபோன்ற வெள்ளை மணல்கள் நிரம்பி வழியும். அதனால் அதனை வெள்ளைக்கடற்கரை என்றே அழைக்கப்படுகின்றது. இந்த வெள்ளைக்கடற்கரையை ஒட்டி மிகப்பெரிய பள்ளிவாசல் ஒன்றும் இருக்கின்றது.

## கல்விக்கூடங்கள்

ஐரோப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே வேலணை கிராமம் கல்வி, பண்பாடு, கலாச்சாரம் ஆகிய துறைகளில் வளர்ச்சி பெற்றிருந்ததாக பல சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் விகிதாசார அடிப்படையில் பார்க்கும்போது தீவுப்பகுதி மக்களே கல்வியில் முன்னணியில் உள்ளார்கள். வேலணைவாழ் மக்களின் இந்த முன்னேற்றத்திற்கு முக்கிய பங்காற்றியது 'வேலணை மத்திய மகா வித்தியாலயம்' ஆகும். 1945ம் ஆண்டு நவம்பர் 1ம் திகதி இக் கல்லாரியின் தோற்றம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் வேலணையில் வசதி படைத்தவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரிகளிலேயே தங்களது பிள்ளைகளைப் படிப்பித்திருந்தார்கள். (1980ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையே பின்பு மத்திய மகாவித்தியாலயமாக மாற்றம் பெற்றது.)

இவைதவிர 'சரஸ்வதி வித்தியாசாலை' 'வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்' 'சேர் வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயம்' 'வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்' 'வேலணை தெற்கு ஐயனார் வித்தியாசாலை' 'வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலை'' என இன்னும் பல புகழ்பெற்ற கல்விச்சாலைகளும் இருக்கின்றன.

## கல்விமான்கள்

வேலணைக்குப் பெருமை சேர்க்கும் பல கல்விமான்கள் இருக்கின் றார்கள். மண்வாசனை கமகமக்கும் இந்தப் பெரியார்களையும் இங்கு நினைவுபடுத்திக்கொள்வோம்.

பேராசிரியர் - பொன்.பாலசுந்தரம்பிள்ளை. இங்கிலாந்தில் கலாநிதிப்பட்டத்துக்கான படிப்பினைப் படித்த இவர் பேராதனைப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பேராசிரியராகப் பணிபுரிந்து பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராகவும் பணியாற்றியவர். இவருடைய தந்தையார் பொன்னுத்துரை ஒரு பண்டிதர் என்பதும், தாயார் நாகரத்தினம் ஒரு ஆசிரியை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பேராசிரியர் செல்லத்துரை.பாலச்சந்திரன். இவர் தீவுப்பகுதியில் உள்ள பாடசாலைகளிலேயே கல்வி கற்று நேரடியாகப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று அதியுயர் பதவிகளை வகித்தவர். புவியியல் சம்மந்தமான நூல்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியிருப்பதுடன் யாழ் பல்கலைக்கழகத்தின் புவியியல் பீடாதிபதியாகவும் பணியாற்றியிருக்கின்றார்.

இவர்களோடு வேலணையில் பிறந்த சிறந்த மொழிப்பற்றாளரும் பண்டிதருமான வித்துவான் க.வேந்தனார் அவர்களையும் நாம் மறந்துவிட முடியாது. வேலணையில் பிறந்து யாழ்.பரமேஸ்வராக் கல்லூரியில் தமிழாசிரியராக பணியாற்றிய இவர் பல குழந்தைப் பாடல் நூல்களையும், மொழியுணர்வு கட்டுரைத் தொகுப்புக்களையும் எழுதி நூலாக்கி வெளியிட்டிருக்கின்றார். 'நான் இவரிடமும் தமிழ் படித்தேன்" என அமரர் இளவாலை அமுதுப்புலவர் அவர்கள் சொல்லிப் பெருமைப்பட்டதுண்டு. இப்படியாக இந்த கல்விமான்கள் வரிசையில் இன்னும் பலர் இருக்கின்றார்கள்.

## அரசியல் பிரமுகர்கள்

பாராளுமன்றத் தொகுதி அடிப்படையில் ஊர்காவற்துறை தொகுதிக்குள்ளேயே வேலணையும் அடங்குகின்றது வேலணையில் பிறந்த சேர்.வைத்திலிங்கம் துரைசாமி அவர்கள் 1936ம் ஆண்டு முதல் 1947ம் ஆண்டுவரை பதினொரு ஆண்டுகள் இலங்கை அரசின் சபாநாயகராக விளங்கியவர். லண்டன் ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவிற்கு மன்னரால் லண்டனுக்கு அழைக்கப்பட்டு சேர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பெருமைக்குரியவராவார்

வேலணையில் பிறந்து தீவுப்பகுதி மக்களால் மட்டுமல்ல யாழ்ப்பாணத்து மக்களாலும் பெரிதும் நேசிக்கப்பட்டவர் அமரர் வீ.ஏ.கந்தையா அவர்கள் 1956ம் ஆண்டுமுதல் 1963ம் ஆண்டுவரை நடைபெற்ற மூன்று பொதுத்தேர்தல்களிலும் ஊர்காவற்துறை பாராளு மன்றப்பிரதிநிதியாக பெருவாரியான வாக்கு வித்தியாசத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணைக்குப் பெருமை தேடித்தந்த இன்னொரு பெரியவர் உயர்திரு. க.பொ. இரத்தினம் அவர்களாகும். சிறந்த தமிழ் மொழிப் பற்றாளரும் சமய பக்தரும் ஆன க.பொ.இரத்தினம் அவர்கள் தமிழரசுக் கட்சியில் இணைந்து 1965ம் ஆண்டு கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். பின்னர் 1970லும், 1977லும் ஊர்காவற்துறை தொகுதியிலேயே போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றி தீவுப்பகுதியின் பல முன்னேற்றங்களுக்குப் பக்கபலமாக விளங்கியவராவார்.

வேலணையில் பிறந்து லண்டன்வரை சென்று கல்வி கற்று மலேசியாவில் பணியாற்றி வேலணை மக்களின் கல்வியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் பெரிதும் பங்காற்றியவர் திரு. வைத்திலிங்கம் விஜயரட்ணம் அவர்கள். வேலணையில் இயங்கிவரும் சரஸ்வதி வித்தியாலயத்திற்காக தனது சொந்தக் காணியையே நன்கொடையாகக் கொடுத்தவர். அதுமாத்திரமல்ல! தீவுப்பகுதியில் வாழ்ந்த சுமார் 700பேருக்கு மேல் மலாயாவிலும் சிங்கப்பூரிலும் வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுத்திருக்கின்றார். வங்களாவடியில் இருந்து வெள்ளைக்கடற்கரை பள்ளிவாசல்வரை தார் வீதி அமைவதற்கு இவர் பெரும் பங்காற்றி யிருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## தொழிலதிபர்கள்

இலங்கையில் அனேகமான சிங்கள நாடுகளில் பெரும் வர்த்தகர்களாகவும், தொழிலதிபர்களாகவும் தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்களே அதிகமானவர்களாக இருக்கின்றார்கள்! அவர்களில் முக்கியமான சிலரை இங்கு குறிப்பிடவேண்டும்.

கொழும்பு, கழுத்துறை ஆகிய பகுதிகளில் இரு பெரும் வர்த்தகநிலையங்களை நடாத்தியவரும், வேலணையில் இருந்து முதன் முதலில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவர் திரு.கணபதிப்பிள்ளை அம்பலவாணர் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிலங்கையிலுள்ள இரத்தினபுரியை அண்டிய சிறு நகரங்களாகிய டால, நிவத்திகலை, ஆகிய நகரங்களில் தனது இளமைக்காலத்தில் இருந்தே வர்த்தகத்தில் ஈடுபட்டு வேலணையின் வளர்ச்சிக்கும் பங்காற்றிய கதிரேசு.சண்முகம்பிள்ளை.

விவசாயம், வர்த்தகம், கால்நடை வளர்ப்பு, போக்குவரத்து என பல துறைகளிலும் தன்னை ஈடுபடுத்தி பெரும் தொழிலதிபராக விளங்கியவர் திரு.மு. சிற்றம்பலம் அவர்கள். மாட்டுவண்டிகளே பிரதான போக்குவரத்து வாகனங்களாக இருந்த வேலணையில் யப்பான் லொரிகளை அறிமுகப்படுத்தி 'ஓம் முருகா' என்னும் பெயருடன் வலம்வரவிட்ட பெருமைக்குரியவர்.

இந்த வர்த்தகர்கள் வரிசையிலே யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தகராக விளங்கிய திரு.முருகேசு.குமாரசாமிப்பிள்ளை, திருத்தொண்டர் சேதுபதி.பொன்னையா, திரு.பசுபதிப்பிள்ளை.இராசையா. இப்படியாக இந்தப் பட்டியல் இன்னும் நீள்கின்றது

## கலை, இலக்கியவாதிகள்

சித்திரக்கலைஞர் பா. சண்முகநாதன். யாழ்ப்பாணம் ராணி திரையரங்கிற்கு அருகினில் இருந்த நாதன் ஸ்டுடியோவின் உரிமையாளர்தான் இந்த சண்முகநாதன். எந்தக் குருவிடமும் இக் கலையைக் கற்றவரல்ல இவர்! இயற்கையாகவே சித்திரம் வரையும் ஆற்றலைப் பெற்ற இவர் பின்னர் தமிழ்நாடு சென்று அங்கு பிரபலமான ஏ.வி.எம். ஸ்டுடியோவில் இணைந்து புகைப்படக் கலையையும் கற்று சிறந்த புகைப்படக் கலைஞராகவும் திகழ்ந்து வேலணைக்குப் பெருமை தேடியவர்களில் இவரும் ஒருவராவார்.

இலங்கையில் முறையாக வில்லிசையைக் கற்று அந்தக் கலையை மக்கள் மத்தியில் படைத்தவர்களில் வேலணையைச் சேர்ந்த திரு சபா. சதாசிவம் அவர்களும் ஒருவராவார். தமிழ்நாட்டில் உள்ள பிரபலமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லிசைக் கலைஞரான திரு. பிச்சைக்குட்டி அவர்களிடம் வில்லிசை கற்ற இவர் தனது இள வயதில் சிறந்த நாடகக் கலைஞராகவும் விளங்கி யிருந்தார்.

இவர்களுக்கு மத்தியில் வேலணை வீரசிங்கம் என்ற நாடகக் கலைஞர் இலங்கை வானொலியிலும், கொழும்பு மேடைகளிலும் தனது எழுத்தாலும், நடிப்பாலும் புகழ்பெற்றவராவார்.

வேலணையில் பிறந்து இன்று டென்மார்க்கில் வாழ்ந்துவரும் சிறந்த இலக்கியவாதி திரு. பொன். தியாகராஜா அவர்கள் வேலணையூர் பொன்னண்ணா என்னும் பெயரில் இலக்கியங்கள் படைத்து வருகின்றார். இதுவரை பத்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கும் திரு.பொன்னண்ணா அவர்களும் வேலணை மண் மறவாத மைந்தராவார். இலக்கியத்தால் மட்டுமல்ல தனது இனிய பண்பான குணத்தால் ஐரோப்பாவில் மட்டுமல்ல தமிழகத்திலும் நண்பர்களைச் சேர்த்து வைத்திருந்த ஆழுமை மிக்க இந்த இனிய மனிதர் கடந்த 26.08.2018ல் இயற்கையெய்தியுள்ளார்.

வாசகர்களே! வேலணையின் மண் வாசனையில் முக்கியமானவற்றை மட்டுமே இங்கு பதிய வைத்திருக்கின்றேன். இன்னமும் சொல்லப்பட வேண்டியவையும், சொல்லப்படவேண்டியவர்களும் நிறையவே இருக்கின்றன.

உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29

# புங்குடு தீவு

- இலங்கையர் கனகசபை அரியரெத்தினம்

நாற்புறமும் கடலலைகள் நாலுவகை கொண்டதென நலமாக சப்தமிடும் நல்லதொரு இயற்கைவளம் கொண்ட கிராமம் அது. கிழக்கே ஆழம் குறைந்த கண்டமேடை கொண்ட - பாதுகாப்பற்ற பரவக்கடல். தெற்கே கப்பல்கள் கூட கனதியாகப் பயணிக்கும் கனகாத்திரமான பாதுகாப்பற்ற ஆழமான சமுத்திரக்கடல், மேற்கே அதேவகையான பாதுகாப்புகள் நிறைந்த சமுத்திரக்கடல், வடக்கே ஆழம் குறைந்த பாதுகாப்புக்கள் நிறைந்த அழகான இயற்கை வனப்புமிக்க கடல் என்னும் வகையில் நான்கு வகையான கடற்பிரதேசங்களைத் தன் எல்லைகளாகக் கொண்ட திருப்பூங்குடி என்றும், புங்கையூர் என்றும் வரலாற்றுப் பதிவுகளைத் தன்னகத்தே கொண்டது எங்கள் இனிய கிராமம்.

இலங்கையின் பிற இடங்களைப் போலவே தீவகத்திலும் வரலாற்றுத் தெளிவு பெருங்கற் பண்பாட்டுடன் தொடங்குகிறது. பெருங்கற் பண்பாடு தீபகற்ப இந்தியாவில் கி.மு. 1500 முதல் கி.பி. 500 வரை நிலவுகிறது. இப்பண்பாடு இலங்கையிலும் நிலவியிருக்கிறது. 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி பொ. ரகுபதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகரிலுள்ள களபூமியில் பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்ததைப்போன்று இத்தகைய சின்னங்கள் புங்குடுதீவின் வடபகுதியில் உள்ள ஊரைதீவிலும் காணப்படுகின்றன. இங்கு வட்டக்கற்களாலான சிறு கிணறுகள் தென்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஊரைதீவிலுள்ள ஐயனார் ஆலயம் பழமை வாய்ந்தது. இது இப்பொழுது சிவாலயமாக மாறிவிட்டது. இவ்வாலயத்திலுள்ள கருங்கற் தூண், லிங்கம் என்பன வளர்வதாக கூறப்படுகிறது. இவ்வாலயத்துக்கு வடக்கே உள்ள கடற்கரையில் வட்டக்கற்களிலான இரண்டு கிணறுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சேர சோழ பாண்டிய மண்டலங்களோடு ஈழமண்டலமும் ஒன்றாகும். என்று யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலில் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதியுள்ளார். புங்குடுதீவு உட்பட ஏனைய தீவுகள் சர்வதேச வர்த்தக மையமாக இருந்தமைக்குப் பல சான்றுகள் உள்ளன. நெடுந்தீவில் பெருக்கு மரங்கள் காணப்படுகின்றன. புங்குடுதீவின் பழைய துறைமுகமான புளியடித்துறைக்கு அருகிலும் பெருக்கு மரங்கள் காணப்பட்டன. இம்மரங்கள் அரேபியரால் அறிமுகப்படுத்தப்பட்டன. எனவே அரேபியர் இத்தீவுகளுக்கு வந்து வர்த்தகத்தில் ஈடுபட்டனர் எனலாம். தென் னிந்தியாவுடன் நெருங்கிய வர்த்தகம் மற்றும் கலை, கலாச்சாரப் பண்பாட்டியல் தொடர்பு காணப்படுவதால் புங்குடுதீவில் சோழகனோடை, சோழன்புலம், பல்லதீவு போன்ற இடப்பெயர்கள் அவர்களால் வருகைகளின் போது ஞாபகார்த்தப் பெயர்களாக இடப்பட்டிருப்பதாக ஊர் ஐதீகம் இன்றும் கர்ணபரம்பரைக் கதையாக நிலவி வருகின்றது.

தமிழகத்திலே (கி.பி. 9 ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை) மேலாதிக்கம் பெற்ற சோழர் பெருமன்னர்கள் சுமார் ஒரு நூற்றாண்டிற்கு இலங்கையின் பெரும்பகுதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். இக்கால கட்டத்தில் இந்து சமயம் இங்கு மேலோங்கியிருந்தது எனலாம். தமிழ்நாட்டிலே ஆதிக்கம் பெற்ற இரண்டாவது பாண்டியப் பேரரசு காலத்திலே அவர்களின் ஆதரவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் தளபதிகளில் ஒருவன் ஆரியச்சக்கரவத்தி தலைமையில் யாழ்ப்பாணத்தில் தமிழரசு ஒன்றை உருவாக்கி கி.பி. 1250 முதல் பல ஆண்டுகள் ஆட்சி செய்தான். இக்காலப் பகுதியில் இந்துச் சமயச் செல்வாக்கு புங்குடுதீவிலும், ஏனைய தீவுப்பகுதிகளிலும் மேலோங்கியது எனலாம். இதன் பின்பு போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆட்சி இலங்கையில் ஏற்பட்டது. முன்னைய அரசரின் ஆட்சிக்காலங்களிலும் இந்து சமயம் நலிவுற்றது.

ஐரோப்பியர்களில் இறுதிக் காலத்தில் ஆட்சிபுரிந்த பிரித்தானியர் காலத்தில், சமய சுதந்திரம் நிலவியது எனலாம். ஆதி காலம் தொடக்கம் கிரேக்க உரோம, அராபிய, சீனத் தொடர்புகள் இலங்கையுடன் ஏற்பட்டது. இந்தியாவின் தமிழகம், கேரளம், ஆந்திரம், கன்னடம், கலிங்கம் மற்றும் வட இந்தியத் தொடர்புகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான தொடர்புகள் ஏதோ வகையில் தீவகத்திலும் ஓரளவாவது நிலவி வந்தமைக்கு சில இடப்பெயர்கள் சான்று பகர்கின்றன.

புங்குடுதீவில் 90 சதவீதம் இந்துக்களே வாழுகின்றனர். தீவின் நடுப்பகுதியில் குறிப்பிட்டளவு கிறிஸ்தவர்களும் வாழுகின்றனர். பண்டைக்காலம் தொட்டு இந்தியாவின் தென்கோடியில் நெய்தல் நிலத்தில் வாழ்ந்து வந்த மக்கள் 1534 ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த போர்த்துகேய ஆட்சியாளர்களால் மதம் மாற்றப்பட்டு கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்யப்பட்டனர். எனினும் கிறிஸ்தவ அறிவைப் போதியளவு கொண்டிராத நிலையில் வாழ்ந்து வந்தனர். இக்கால கட்டத்தில் புனித பிரான்ஸிஸ் சவேரியாரின் வருகையானது, கிராமத்தின் தென்பகுதிக் கரையோரப்பகுதி மக்களில் ஓர் பகுதியினரிடையே மிகப் பெரிய மாறுதலை மத்தியில் ஏற்படுத்தியது. சில காலம் செல்லத் தீவின் மத்திய பகுதியில் ஆல மரங்களும், பனை மரங்களும் நிறைந்த கதிராமத்தின் மத்தியப் பகுதியான ஓர் இடத்தில் புனித சவேரியாரின் ஆலயத்தை அமைத்தனர். பின்பு அதன் சூழலில் வாழத் தொடங்கினர். இவ்வாறே புங்குடுதீவின் வேறு சில பகுதிகளிலும் கிறிஸ்தவர்கள் வாழத் தொடங்கினர். அதனை புங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உடுதீவு எனப் பிரித்து புங்கமரம் நிறைந்த தீவு எனப்பொருள் கூறலாம். புங்கமரம் நெய்தல் நிலத்துக் கருப்பொருள்களுள் ஒன்று எனப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை கூறியிருக்கிறார். இத்தகு வரலாற்றுத் தொன்மை மிக்க புங்குடுதீவு கிராமத்திற்கென ஓர் சரித்திர வரலாறும் உள்ளதென்பதை இங்குக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

குருகுமணல், செம்பாட்டுமண், களிமண், இருவாட்டிமண், வண்டல்மண், உவர்மண் எனும் வகையில் ஆறு வகையான மண்ணை அகத்தே கொண்டு கன்னலும், செந்நெலும் கதித்தோங்கி வளர்ந்து, நவதானியங்களும் உற்பத்தியாக்கப்பட்டு உணவுக்களஞ்சியத்தின் ஒப்பற்ற கிராமமென வானம் பொய்க்காத காலத்தின் வனப்புமிக்க வளமான எம் கிராமத்தின் வாழ்வியல், இன்றும் வரலாறு சொல்லி நிற்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. சைவமும் தமிழும் சரித்திரம் கண்ட காலம்தொட்டு வாழ்வியலாக அங்கு வாழ்ந்த மக்களோடு பின்னிப் பிணைந்து நிற்பதோடு, வந்தாரை வரவேற்று வாழ்வளித்து, அவர்கள் தங்கள் சொந்த மதத்தையும் தாங்கள் வந்த மண்ணில் பரப்புவதற்கு வகைசெய்து, சொந்த மக்களே அதனைப் பின்பற்றத் தடையும் விதிக்காத தன்னலமற்ற தனித்துவம் கொண்ட பெருமக்களைத் தன்னகத்தே கொண்ட தாளாண்மை கொண்ட கிராமம் எங்கள் கிராமம். அதனால்தான் சைவத்தின் மத்தியிலே கிறிஸ்தவமும் சமரசமாய் வளர்ந்து, தேவஸ்தானங் களோடு தேவாலயங்களும் எமது கிராமத்தில் என்றும் புதுப்பொலிவுடன் விளங்குகின்றது.

புங்குடுதீவு சுமார்ஆறு மைல்நீளமும் ஐந்து மைல் அகலமும் கொண்ட நாற் புறமும் கடலால் சூழப்பட்டு அழகான நேரிய பெரு வீதியினாற் கடலினூடே இணைக்கப்பட்ட ஒரு பிரதேசமாகும். ஓரளவு சதுர வடிவில் இருந்தாலும் கேரதீவு ஓடான நீரேரியின் பிரிப்பினால் ப எழுத்து வடிவிலும் தோன்றும். வட கிழக்கே வேலனைத்தீவினையும் மேற்கே நயினாதீவினையும் தென்மேற்கே தூரத்திலே நெடுந்தீவினையும் கொண்டு மத்தியிலே இத்தீவு சீராக அமைந்துள்ளது. கிராமத்தின் தெற்குப் பகுதி உயர்வாகவும் வடக்குப் பகுதி தாழ்வாகவும் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவில் பலவகையான தரை அமைப்புகளும் காணப் படுகின்றன. மடத்துவெளி கரைப் பகுதிகள் சீனி போன்ற தூய வெள்ளை பளிங்கு மணல் பகுதியாகவும் ஊரதீவு மட்டும் தீவின் தெற்குப் பகுதி கரைகள் இளமஞ்சள் குருகு மணல்பகுதியாகவும் இருக்கின்றன. மடத்துவெளி ஊரதீவு பகுதிகள் சமதரைகளாக அமைந்துள்ளன. மேல் பகுதி மணல் தன்மையாகவும் சற்றுக் கீழே நரை நிற மக்கியாகவும் இன்னும் கீழே நல்ல தரமான களிமண்ணாகவும் அமைந்துள்ளது.வல்லன் பகுதி மற்றும் வீராமலைப் பகுதிகள் விவசாயத்திற்கு சிறந்த சிறிய இருவாட்டி மண் கலந்த கருநிற நிலமாக உள்ளன.குறிச்சிக்காடு போக்கதை பகுதிக்கு மேற்கே மிக அசாதாரணமான வகையில் செம்மண் பகுதியாக உள்ளது. பெருங்காடு, இருபிட்டி தெற்கு போன்ற பகுதிகள் மேலே குறைந்தளவு களிமண்ணும், இருவாட்டி மண்ணும், கற் பாங்கான கீழ் பகுதியாகவும் காணப்படுகின்றன.

இந்தத் தரை தோற்ற அடிப்படையில் புங்குடுதீவில் மடத்துவெளி, ஊரதீவு, இருபிட்டி, வடக்கு வல்லன் பகுதிகளில் நெல் பயிர் செய்கைக்கு உட்படுத்தப்படுகின்றன. வல்லன் வீரமலை, நடுவுத்துருதி பகுதிகளில் மிளகாய், புகையிலை வெங்காயம் போன்றன தரமான முறையில் பயிரிடப்பட்டன. சுமார் நாற்பது ஆண்டுகளின் முன்பு வரை பெரும்பாலான மேட்டுப் பகுதிகளில் சிறுதானியங்களான வரகு, சாமை, குரக்கன், பயறு, உளுந்து பயிர்கள் பயிரிடப்பட்டன. இவற்றை விட நிறைந்த பனை தென்னை வளம் மிக்க கிராமமாக புங்குடுதீவு கிராமம் திகழ்கின்றது. விருட்சங்களாக வேம்பு, பூவரசு, ஆள், அரசு, இத்தி, கதியால், முருங்கை, சீமைக்கதியால் போன்றனவும் கடல்கரை ஓரங்களில் ஆவாரை, கற்றாளை, கள்ளி, ஈச்சமரம், கொட்டணை, மற்றும் தூத்துமக்கொத்தான், பொன்னாங்காணி, சாறணை, கீழ்காய்நெல்லி, குப்பைமேனி போன்ற மருத்துவச்செடிகளும் இயற்கையாகக் காணப்படுகின்றன.

அன்னைத் தமிழின் கல்வி, கலை, கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே கொண்ட தயாள குணமுள்ள மக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாகக் கொண்ட பூமி. வர்த்தகத்தின் வளமும், அறிவியலும், ஆன்மிகமும் ஆழமாக வேரூன்றி விழுதெறிந்த வாழ்வியல் தன்மையோடு, அனைத்துத் தொழில் வளத்தையும் அழுத்தமாகப் பின்பற்றி, அதற்கான தொழில்களில் மேம்பட்டு நின்ற தனித்துவத்தைத் தன்னகத்தே கொண்டிருந்தது. அதனால் வேற்றுக் கிராமத்தின் வியர்வைக்காற்றுகூட அங்கு வீசும் வாடைக்கே இடமில்லாத நிலையில் உயர்ந்து நின்றது. முற்காலத்திலே மன்னராட்சியே மக்களாட்சி என்றும் கூறும் வகையில், ஆட்சி முறையானது மங்களமாய் விளங்கியதற்கான சாட்சியாய், மன்னன் ஓடை என்னும் கால்வாயும் அங்கு உண்டு. சோழ மன்னன் புதல்வியை அந்நாட்டுக் குடியானவன் மகனொருவன் காதலித்துக் கடத்தி வந்து காப்பாற்றும்படி வேண்டியதால், அந்தக் காதல் ஜோடிகளுக்காக கிராமத்தின் நடுப்பகுதியில் ஒரு காட்டுப் பிரதேசத்தை உருவாக்கி, அதன் நடுவில் கோட்டைகட்டி, அதற்கு வீரமல்லர்களைக் காவல் வைத்து பாதுகாப் பளித்ததால், கோட்டைக்காடு என்னும் பெயர்கொண்ட பிரதேசமும், எதிர்த்து வந்த சோழப் படையே அதன் இயலாமையால், சமாதானம் பேசிச் சமரசம் செய்து கொண்டு, ஊருக்குப் புறத்தே ஒதுங்கி இருந்துவிட்டு, விருந்துண்டு புறம்போன வரலாற்றுப் பதிவுக்கென ஊரவர்தீவெனும் ஊரதீவும் - சோழன் ஓடை எனும் பெயர்கொண்ட குடாக்கடலும் கொண்ட கிராமம்.

படையெடுத்து வந்த பல்லவன்கூட குடைவிரித்துக் குந்தியிருந்து விட்டு, நட்புறவுடன் தன் நாட்டிற்குத் திரும்பிய நல்லதோர் இடம்தான் பல்லவர்தீவு எனும் பாங்கான பகுதி. ஆழம் குறைந்த வடகடலின் பகுதியில் ஆழமாய் அழகாய் பாய்க் கப்பல்கள் வந்துபோன அடையாளமாய் அங்கு அழியாத பதிவுகள் இன்னமும் புதையுண்டு போயுள்ளன. வர்த்தகத்தின் செழிப்பு அன்று வளமாக இருந்ததன் அடையாளமாய், கடலுக்கு அகழிவெட்டி அதனைக் கால்வாயை வழி சமைத்து, பாய்க் கப்பல்கள் மட்டுமன்றி பண்டமாற்று வர்த்தகம் முதல் பணமாற்று வர்த்தகம் வரை வளரும் வகையில் கடலதனையும் ஊருக்குள் கொண்டு வந்து வாணிபத்தை வளம்பெறச்செய்யும் வகையில் களியாறு எனும் ஓடைக் கடலை உள்ளே உற்பத்தியாக்கிய உயர்ந்த தனித்துவம் உள்வாங்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமம். இறந்தவர்களை எரிப்பதற்கென தனித்துவமாக ஊருக்கு ஒதுக்குப் புறத்தே அழகிய சிறு வனம் ஒன்று அமைத்து, அதற்கு இறந்துபோன உடல்களின் பெயரால் (கேரம் என்றால் பிணம் என்று பொருள்) கேரதீவு எனும் பெயர்சூட்டி செத்தவர்களுக்கும் சிறப்புச்செய்யும் செம்மை நிறைந்த கிராமம் அது.

புங்குடுதீவின் நாற்புறங்களிலும் துறைமுகங்கள் இயற்கையும், பாதுகாப்பும் கொண்ட துறைமுகங்கள் பல உள்ளதைக் காணக்கூடியதாக இன்றும் உள்ளது. இருப்பிட்டித் துறைமுகம், புளியடித்துறைமுகம், குறிகாட்டுவான் துறைமுகம், சிப்பியேத்தந் துறைமுகம், பல்லதீவத் துறைமுகம் என பல பெயர்களுடன் அவை விளங்கி வருகின்றன. அதனால் பண்டைக் காலத்தில் பலநாடுகளிலும் இருந்தும் வர்த்தக நோக்கத்துடன் கிராமத்திற்கு பல்லின மக்கள் வருகை தந்தமைக்கும், அவர்கள் வந்து தங்கியிருந்து வர்த்தகத்தில் ஈடுபட்டதற்கும் சான்றுகளாகப் பல இடங்களின் பெயர்கள் இன்றும் சான்று பகர்கின்றன. பல்லதீவு, பல்லவன்புலம் போன்ற இடப்பெயர்கள் பல்லவத் தொடர்பையும் சோழன்புலம், சோழகனோடை போன்றவை சோழத் தொடர்புகளையும் மாறன்புலம், பாண்டியன் வளவு போன்றவை பாண்டியத் தொடர்பையும், கலிங்கன்புலம், கலிங்கராயன் வளவு போன்றன கலிங்கத் தொடர்பையும் செட்டிவளவு, செட்டியர் தோட்டம் என்பவை செட்டிகளின் தொடர்புகளையும் பணிக்கன்புலம், போன்றவை கேரளத் தொடர்பையும் சீனன்புலம், சாவகன் வளவு போன்றவை முறையே சீனத் தொடர்பையும் சாவகத் தொடர்பையும் காட்டுகின்றன.

அண்ணன் இருக்கத் தம்பி முடிசூடினான் என்னும் அவப்பெயர் தனக்கு வந்துவிடக் கூடாது என்னும் அழுத்தமான பிடிப்பால், இள வயதிலேயே துறவுகொண்ட இளங்கோவடிகளின் தமிழுக்கு அழியாத பெருஞ்செல்வமான சிலப்பதிகாரம் என்னும் செம்மைமிகு காப்பியத்தின் கதாநாயகியாம் கண்ணகியின் சிலையானது கடலிலே மிதந்துவர, அதனைக் கருணை யோடும், மிகுந்த கவனத்தோடும், ஆன்மிக ஆளுமையோடும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு ஆலயம் அமைத்து அதனைப் பிரதிஸ்டா செய்து, வானளாவும் இராஜகோபுரமும், வனப்புமிக்க சித்திரத்தேரும் செய்து சிறப்புடன் விழா வெடுத்து விடிய விடியத் தேரிழுத்துத் திருவிழாக் கொண்டாடிக் கொண்டிருக்கும் வீரமறவர்களின் விண்ணுயர் செயற்பாடுகள் நிறைந்த புகழ்மிக்க பூமிதான் புங்குடுதீவு கிராமம். அத்தகைய கண்ணகை அம்மன் ஆலய வரலாற்றை எண்ணிப் பார்ப்போமானால் இலங்கை போர்த்துக் கேயர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தபோது புங்குடுதீவு நிர்வாகத்தினரில் குறிப்பிடத் தக்கவராக விளங்கிய கதிரவேலு ஆறுமுகம் உடையார் என்பவரால் இக்கோயில் கட்டப்பட்டது. இவருக்கு புங்குடுதீவு கிழக்கில் இருந்து தெற்குக் கடற்கரை வரை காணிகள் இருந்தன. இந்து சமுத்திரத்தின் தென்கிழக்குக் கடற்கரையில் வெளிச்சவீடு (கலங்கரை விளக்கம்) அமைந்துள்ள கோரியா என்னும் இடத்தின் ஒருபகுதியில் அழகிய பேழை ஒன்று கடலில் மிதந்துவரக் கண்டெடுக்கப்பட்டது. அதனுள் கண்ணகியின் உருவச்சிலை ஒன்று காணப்பட்டது. அந்தக் கற்புக்கரசியான தமிழ்ப் பெண்ணைத் தெய்வமாகத் தொழும் வகையில் அவ்வூர் பெரியவரான ஆறுமுக உடையார் கிராம மக்களுடன் சேர்ந்து கண்ணகி அம்மனுக்குக் கோயில் அமைக்கும் பணியில் இறங்கினார். கண்ணகி அம்மனை அங்கு பிரதிஷ்டை செய்து நித்திய பூஜைகள் செய்து வழிபட்டனர். மேலும் இவ்வாலயத்தின் வடக்குப் பக்கமாக காவல் தெய்வமாகிய பத்திரகாளி அம்மனுக்கும் சிறிய ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டது. வரலாற்றுச் சிறப்பு மிக்க சிலப்பதிகாரப் பெருவிழா இக்கோயிலில் நடத்தப்பட்டது.

மன்னராட்சியின் மறையத் தொடங்கிய காலத்தில் மக்களாட்சி மலர்ந்த நேரத்தில் மக்கள் மகிழ்ச்சிவெள்ளத்தில் வாழ்ந்த நாட்கள். தங்கள் தங்கைக்கும், அவளது வாரிசுகளுக்குமென கிராமத்தின் பாதியைப் பகிர்ந்து கொடுத்துவிட்டு பெரியமருது, சின்னமருது சகோதரர்கள் மிகுதியை தாங்கள் பாதி, பாதியாகப் பகிர்ந்துகொண்டு தங்கள் வாரிசுகளுடன் சந்தோசமாக வாழ்ந்த கிராமத்தில் பெரியமருது வாழ்ந்த பகுதி பெரியவர்பிட்டி என்றும் (பிட்டி என்றால் நிலம் என்ற கருத்துப்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னமருது வாழ்ந்த பகுதி சின்னவர் பிட்டி எனவும் வழங்கலாயிற்று. அதுவே காலப்போக்கில், பெரிய இரு(று)பிட்டி, சின்ன இரு(று)பிட்டி என மருவலாயிற்று. பெரியமருது வாணிபத்தில் வல்லவனாய் பாய்க்கப்பலில் கடலோடி வாணிபத்தில் கைகண்டவனாய் முன்னிலை கண்டான். சின்னமருது பாரதத்தின் கேரள மாநிலத்திற்குச் சென்று, அங்கு சித்த - ஆயுர்வேத வைத்தியத்தில் கைகண்டவனாய்த் தேறித் தாயகம் திரும்பிவந்து மக்களுக்குத் தான் கற்றதைப் போதித்ததுடன் பெரும் சேவையும் ஆற்றியதாக வரலாறு கூறி நிற்கின்றது. சின்னமருது கேரளாவில் இருந்து வரும்போது, ஓர் ஆஞ்சநேய லிங்கத்தையும், அதனோடு கூடிய பிரதிஸ்டைசெய்யும் பொருட்களையும் கொண்டு வந்தான். அதன்படி 19ம் நூற்றாண்டில் பிரதிஸ்டை செய்து உருவான ஆஞ்சநேயர் ஆலயமே இலங்கையின் முதன்முதலில் ஆஞ்சநேயருக்காகத் தோன்றிய தனித்துவமான ஆஞ்சநேயர் ஆலயம் என்னும் பெருமை பெற்றது.

ஆலயங்கள் என்று கூறும்பொழுது கிராமத்தின் நாற்புறங்களிலும் காவல்தெய்வங்களின் ஆலயமும், நடுவே ஒவ்வொரு பகுதிகளிலும் இராஜகோபுரங்களுடன் கூடிய பெரும் தேவஸ்தானங்களும் கலையழகுடன் மிளிர்வதைக் காணக்கூடியதாக உள்ளது. அது மட்டுமல்லாது, அன்று முதல் இன்று வரை கல்விக்கு கோயில்களைப் போல் பாடசாலைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, ஆங்காங்கே பாடசாலைகள் அமைப்பதில் கிராமத்துப் பெருமக்கள் தனித்துவம் கொண்டவர்களாக விளங்கியமை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அந்த வகையில் அந்நியராட்சிக் காலத்தில், சமயம் பரப்பும் நோக்கில் கிறிஸ்தவப் பாடசாலைகளை நிறுவிய ஆட்சியாளர்கள் தமது சமயத்தையும் உள்நாட்டில் அழுத்தமாகப் பரப்பத் தொடங்கிய வேளையில், கண்மூடித்தனமான மதமாற்றத்தைத் தடுக்கும் வகையில், சொந்தக் கிராமத்தில் மாத்திரமன்றி அனைத்துக் கிராமங்களிலும் சைவப் பாடசாலைகளை நிறுவுவதில் தனித்துவமாக முன்னின்று உழைத்த பெருமக்களில், முதலில் அதிபர் சிவகுரு இலங்கையர், பின்னாளில் விதானை பசுபதிப்பிள்ளை, திருவாளர் வைத்திலிங்கம், ஆசிரியர் குமரேசு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியர் சின்னத்தம்பு ஆகியோருடன், அவர்களின் வழிவந்த பல பெருமக்களைப் பெற்ற கிராமம் புங்குடுதீவு என்னும் பெருமையுடைத்தது.

வர்த்தகத்திலும், கல்வியிலும், ஏனைய தொழில் வளங்களிலும் தனித்துவம் பெற்ற மக்களைக்கொண்ட கிராமத்தினின்றும் தொழில் வாய்ப்பினைத் தேடி இலங்கையின் பல பாகங்களிலும் எமது மக்கள் சென்றதுபோல அயல்நாடுகளுக்கும் சென்று பணியாற்றிப் பொருளீட்டியமை குறிப்பிடத் தக்கதாகும். அந்த வகையில் ஆரம்ப காலத்தில் சிங்கப்பூருக்குச் சென்ற பொறியியலாளர்களான வாணர் சகோதரர்கள் (பெரிய வாணர், சின்னவாணர்) தாயத்திற்குத் திரும்பியதும், வேலணையையும், புங்குடுதீவு கிராமத்தையும் இணைக்கும் அழகியதும், அதி நீளமானதுமான பாலத்தைக் கட்டி போக்குவரத்தின் பாங்கில் பெரும் மறுமலர்ச்சியை உண்டுபண்ணினர். இன்றும் இது வாணர் தாம்போதி என்னும் நாமத்துடன் அவர்கள் பெயர் சொல்லிப் புகழ் சமைத்து நிற்கின்றது.

வர்த்தகப் பெருமக்கள் மட்டுமல்லாது, கல்விமான்கள், பொறியிய லார்கள், வைத்திய கலாநிதிகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர் பெருமக்கள், ஆன்மீகப் பெரியார்கள், தத்துவ மேதைகள் எனக் கிராமத்தின் புகழை உயரவைத்துப் பெருமைப்படுத்திய பெருமக்கள் நிறைந்த கிராமத்தில் அன்று முதல் இன்று வரை அழுத்தமான தமிழ்ப்பற்றுக் கொண்ட மக்கள் நிறைந்துள்ளனர். அன்னியராட்சிக் காலத்திலும் சரி, 1980ம் ஆண்டிற்குப் பின்னரான தமிழர்களின் சுதந்திரத்திற்கான போராட்ட காலத்திலும் சரி; தனக்கென ஒரு தனித்துவமான ஈடுபாடும், பங்களிப்பும் கொண்ட உணர்வுபூர்வமான மக்கள் புங்குடுதீவு மக்கள் என்பதில் முத்திரை பதித்து நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

அதுமட்டுமல்லாது, இத்தகைய பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட புங்குடுதீவு கிராமத்தின் வளர்ச்சிப் பாதையில் முக்கிய பங்கினை வகித்து நின்றவை, இன்றும் நிற்பவை அங்கு உருவாகிப் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியையும், கிராமத்தின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றியவையுமான 38க்கும் அதிக்மான ஆன்மீக பீடங்கள், 35க்கும் அதிகமான சங்கங்கள், 16க்கும் அதிகமான கல்வி நிலையங்கள் ஆகும். இத்தகைய நிறுவனங்கள் உருவாகக் காரணமாக இருந்தவர்கள், அன்று அந்தக் கிராமத்தில் வாழ்ந்த தன்னலமற்ற பொதுசேவையாளர்களின் அரும்பெரும் சேவையென்று சொன்னால் மிகையாகாது எனலாம். அதனால் தான் இன்று புலம்பெயர் தேசங்களில் உருவாக்கப்பட்டுள்ள கிராமத்து ஒன்றியங்கள், அவர்களை நினைவுகூரும் வகையில் அவர்கள் பெயர்சொல்லிக் கௌரவிக்கின்றார்கள். இத்தகைய ஒரு செயற்பாடானது, ஒரு நன்றிகூறும் நாகரிக வடிவம் ஆகும்.

இன்றும்கூட இலங்கையின் இனப் பிரச்சினை காரணமாகப் பூமிப்பந்தின் பல பாகங்களிலும் ஈழத்தமிழ் மக்கள் சிதறிப் போய் வாழும் நிலையில் உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும், புங்குடுதீவு கிராமத்தின் பெயரால், புலம்பெயர்ந்து வாழும் அந்தக் கிராமத்தின் மக்கள் சங்கங்களை அமைத்து, தமது கிராம முன்னேற்றத்திற்காகவும், அங்கு வாழும் மக்களினது உயர்விற்காகவும், இலங்கையில் கஸ்ரப்படும் ஏனைய கிராமத்து மக்களுக்காகவும் தம்மாலான பங்களிப்புக்களை நல்கி வருவதை அனைவரும் காணக்கூடியதாக உள்ளது.

புங்குடுதீவு பற்றி நான் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். ஆனால் அதனை விட கூடிய தகவல்கள் அடங்கியிருந்ததால் அகரத்தின் மண் வாசனைப் பகுதியில் புங்குடுதீவின் மைந்தன் திரு.இலங்கையர்.கனகசபை அவர்கள் எழுதிய இக் கட்டுரையையே பிரசுரித்தோம். அதனையே இங்கும் தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30

# சாவகச்சேரி

சாவகச்சேரியை, தென்மராட்சி என்றும் குறிப்பிடுவார்கள். சங்கிலியன் ஆண்ட காலத்தில் தென் பகுதியில் வாழ்ந்த மக்களை தென் + மறவர் + ஆட்சி என்பது கால ஓட்டத்தில் தென்மராட்சி என அழைக்கப்பட்டதாகவும்! அதேபோல யாவகர்கள் என்னும் வணிகர்கள் அங்கு வந்து குடியேறிமையினால் யாவகர் + சேரி என்பது பிற்காலத்தில் சாவகச்சேரியாக மாறியது என்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

கிழக்கே எழுதுமட்டுவாள் கிளாலி வீதியும், மேற்கே நாவற்குளி கடலேரியும், தெற்கே சரசாலை வயல்வெளி அந்தணர் திடல் ஈறாகவும், இன்றைய சாவகச்சேரி தொகுதியை வரையறுக்கலாம்.

இந்த சாவகச்சேரி தொகுதிக்குள்தான் கொடிகாமம், மீசாலை, மறவன்புலம், கோயிற் குடியிருப்பு ஆகிய ஊர்களும் அடங்குகின்றன. இந்த ஊர்களுக்கான காரணப் பெயர்களாக கொடிகாமம் என்பது அங்குள்ள மக்களின் பூர்வீகத் தொழில் கமமாக இருந்ததால் அந்த இடத்தை கோடி + கமம் என்று ஈற்றில் கொடிகாமமாக அழைக்கப் பட்டதாகவும். மீசாலை என்பது கச்சாய் கடலில் இருந்து மீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்து அங்கு சந்தைப்படுத்தப்பட்டதால் மீன் + சாலை மீசாலை என்றும். அங்கு மாமரங்கள் அதிகமாக நிற்பதால் மா + சாலை என்பது மருவி மீசாலை என அழைக்கப்பட்டதாகவும். மறவர்கள் அதிகம் வாழ்ந்த இடம் மறவர் + புலம் என்பதாகவும். அதேபோல் சோழர் காலத்து வாரிவனநாத ஈஸ்வரன் கோவிலைப் பரிபாலனம் செய்தவர்கள் வாழ்ந்த இடம் கோயிற் குடியிருப்பு என அழைக்கப்படுவதாகவும் ஆராய்ச்சி நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.இதேபோல குடத்தனை, எழுதுமட்டுவாள் ஆகிய ஊர்களும் சாவகச்சேரித் தொகுதிக்குள்ளேயே அடங்குகின்றன.

சாவகச்சேரித் தொகுதிக்குள் அடங்கும் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்கும் ஒரு வரலாறு இருக்கின்றது!. அந்தக் காலத்தில் மட்டுவிலில் அமைந்திருந்த அந்த அம்மன் கோவிலில் மாடு வெட்டக் கூடாது என்பது ஒரு பொது விதியாக இருந்தது. ஆனால் யாரோ ஒரு தீவிர பக்தன் அந்தக் கோவிலில் மாட்டை வெட்டிவிட்டானாம்! இதனை அறிந்த கோவில் நிர்வாகத்தினர் அதனை உறுதிப்படுத்தி மாடு வெட்டிய அந்தப் பக்தனுக்கு தண்டனை வழங்குவதற்காக அந்த இடத்திற்கு வந்தபோது அந்தப் பக்தனின் பக்தியால் மாட்டுத்தலை பன்றித் தலையாக மாறி இருந்ததாகவும் அதன் பின்னரே அந்தக் கோவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் என பெயர் பெற்றதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

இதே மட்டுவில் மண்ணில்தான் தான் தோன்றிய ஈஸ்வரனைக் கொண்ட கல்வத்தை சிவன்கோவில் என்னும் புராதனக் கோவிலும், அத்தோடு மருதன் குளம் பிள்ளையார் கோவில், சுட்டிபுரம் அம்மன் கோவில், மீசாலை சோலை அம்மன் கோவில், விழுவளை அம்மன் கோவில், தாளையடி அம்மன் கோவில், நுணாவில்குளம் கண்ணகை அம்மன் கோவில் என பல புகழ் பெற்ற கோவில்களும் சாவகச்சேரித் தொகுதியில் இருக்கின்றன.

சுட்டிபுரம் அம்மன் கோவிலிற்கு தமிழ்நாட்டின் புகழ்பெற்ற பாடகர் அமரர். சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் வருகை தந்ததோடு அந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலைப்பற்றி பாடல்களும் பாடியிருக்கின்றார். இதைவிட சாவகச்சேரி நகரின் மத்தியில் கிறிஸ்தவ தேவாலயமும், (கண்டி வீதியில்) முஸ்லீம் மக்களுக்காக ஒரு பள்ளி வாசலும் (தனக்களப்பு வீதியில்) அமைந்துள்ளது. சிங்கள மக்களுக்கென எந்த விகாரையும் இல்லாத போதிலும் 1976ம் ஆண்டு காலப்பகுதியில் டிறிபேக் கல்லூரி வளவினுள் கல்லூரி நிர்வாகத்தின் கீழ் சிங்களப் பள்ளிக்கூடம் ஒன்று இயங்கி வந்தது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லாரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம், மகளிர் கல்லூரி என சாவகச்சேரித் தொகுதியில் அறுபத்தி நான்கு கல்லூரிகளை வரிசைப்படுத்தலாம்!. இதில் குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால் பழைய வாரி வனநாதர் கோவில் அழிக்கப்பட்டு அந்த இடத்தில் போத்துக்கேயரினால் கட்டப்பட்ட தேவாலயக் கட்டிடம்தான் பிற்காலத்தில் டிறிபேக் கல்லூரியாக மாற்றப்பட்டதாம்!. இந்தக் கல்லூரி ஆரம்ப காலத்தில் சந்தையடிப் பள்ளிக்கூடம் என்றே அழைக்கப்பட்டதாம்!. இது யாழ்ப்பாணம் Jaffna College இன் கீழ் அமெரிக்கன் மிசனறியால் நடத்தப்பட்டது. இப்போதும் கல்லூரிக் கீதத்தில் 'அமெரிக்கன் மிசனெறி தந்திடும் நிலையம்' என்றே பாடப்படுகின்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வள்ளல் தாமோதரம் என்பவரால் நிறுவப்பட்டது. அதேபோல் கல்விமான் வீரசிங்கம் அவர்களால் உருவாக்கப்பட்டதே மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம். நொத்தாரிசு சுந்தரால் ஆரம்பிக்கப்பட்டதுதான் சந்திரபுர ஸ்கந்வரோதயா மகா வித்தியாலயம். இதனை மட்டுவில் மகாவித்தியாலயம் என்றும் சொல்வார்கள். மீசாலை ஆசிரியர் கார்த்திகேசு அவர்களின் அயராத உழைப்பினாலும், அல்லாரை எஸ்.கே.செல்லையா போன்றவர்களின் வள்ளல் தன்மையாலும் உருவானதே மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயமாகும்.

சாவகச்சேரியைப்பற்றிச் சொல்லும்போது பூநகரியைப்பற்றி சொல்லாமல் இருக்க முடியாது! காரணம் இலங்கை சுதந்திரம் அடைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948ம் ஆண்டு காலப்பகுதியில் சாவகச்சேரித் தொகுதிக்குள்தான் அடங்கி யிருந்தது பூநகரியும்.

முக்கனிகள் என்று சொல்லப்படும் மா, பலா, வாழை ஆகியவன வற்றிற்கு சாவகச்சேரி மண் பெயர் போனது! இதனாலோ என்னவோ சாவகச்சேரியை 'குழைக்காடு' என்று சொல்பவர்களும் இருக்கின்றார்கள். இன்று விஞ்ஞானத்தின் உதவியுடன் கத்தரிக்காய் சிறியதாகவும், பெரியதாகவும் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனால் முன்பு மட்டுவில் கத்தரிக்காயினை அறியாதவர்கள் இருக்கமுடியாது. அவை முட்டி போன்ற வடிவமைப்பில் இருந்ததனால் அதனை முட்டிக்கத்தரிக்காய் என்றும் சொல்வார்கள். இன்று ஐரோப்பாவில் உள்ள தமிழ்க் கடைகளில் நாவல் பழத்தில் இருந்து இன்னும் பலவகையான தின் பண்டங்கள் எல்லாம் கிடைக்கின்றபோதும் ஏனோ மட்டுவில் கத்தரிக்காய் மட்டும் மருந்துக்குக்கூட கிடைப்பதில்லை.

சாவகச்சேரியின் மண்ணில் வாழ்ந்த அறிஞர்கள், கலைஞர்கள், அரசியல் தலைவர்கள் என அந்த வரிசையும் நீளமானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31

# கொழும்புத் துறை

'கொழும்புத்துறை' என்றால் அது கொழும்பில் உள்ள துறைமுகத்தைச் சேர்ந்தது என எண்ணியிருந்த கிராமவாசிகள் பலர் இருந்திருக்கின்றார்கள்! ஆனால் பெரும்பாலான மக்களுக்கு கொழும்புத் துறை என்றதும் ஞாபகத்திற்கு வருவது சைவப்பெரியார் யோகர் சுவாமிகளும், இலந்தைக்குளம் மன்று வாழும் பெருமான் விநாயகமூர்த்தி ஆலயமும்தான்! இந்த ஆலயத்தின் தெற்கு வாசலில்தான் யோகர் சுவாமி அவர்களின் ஆசிரமம் அமைந்திருந்ததால் அந்த ஆலயமும் பிரபலமானதே.

கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள கிராமம் என்று சொல்லப்படும் ஒரு நகரமாகும்! இப்படிச் சொல்வதற்கான காரணம் ஒரு கிராமத்திற்குரிய எழில் வனப்புக்களையும், அதே நேரத்தில் ஒரு நகரத்திற்குரிய சகல வசதிகளையும் கொண்டிருந்தது.

யாழ்ப்பாண மாநகரசபையின் எட்டாம் வட்டாரமான இதன் எல்லைப் பகுதிகளாக மேற்கில் பாண்டியன்தாழ்வும், கிழக்கே அரியாலையும், வடக்கே நல்லூரும், தெற்கே பாசையூர் - ஈச்சைமோட்டை ஆகியனவும் அமைந்திருந்தன. யாழ்ப்பாணத்திற்கு மிக அண்மையில் அமைந்திருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேயொரு துறைமுகம் இந்தத் துறைமுகம்தான். முன்பு கொழும்பிற்குச் செல்லும் பாய்மரக் கப்பல்கள் இந்தத் துறைமுகத்திலிருந்தே சென்றதனால் இதற்கு கொழும்புத்துறை என பெயர் வந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

இவ் ஊர் கொழும்புத்துறை கிழக்கு, கொழும்புத்துறை மேற்கு என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கொழும்புத்துறை மேற்கு ஆனந்தன் வடலி வீதி, மற்றும் துண்டி வீதியுடன் முடிவடைகின்றது. அதிலிருந்துதான் கொழும்புத்துறை கிழக்கு ஆரம்பமாகின்றது. ஊரின் மத்தியில் இருந்து ஆரம்பமான பிரதான வீதி சின்னக்கடை, கன்னியாஸ்த்திரி மடம், சுண்டுக்குழி, பாண்டியன்தாழ்வு ஆகிய இடங்களின் ஊடாக கொழும்புத்துறை கிழக்கையும், மேற்கையும் இணைத்துச் செல்லும் பிரதான வீதியாகும். இவ் வீதியின் நீளம் சுமார் பத்து கிலோமீற்றர் இருக்கும்.

பூநகரி, கௌதாரிமுனை, வெட்டுக்காடு போன்ற ஊர்களில் கொழும்புத்துறையைச் சேர்ந்த பலருக்குத் தென்னந்தோப்புக்களும், வயல்களும் இருந்ததனால் இவற்றின் விளைபொருட்களை ஏற்றி இறக்குவதற்கும், கொழும்புத்துறையைச் சேர்ந்த பலர் இவ் ஊர்களில் விதானையார், உடையார் போன்ற பதவிகளை வகித்ததனாலும் அன்றைய காலங்களில் கொழும்புத்துறை துறைமுகத்தில் இருந்தே பாய்மரக் கப்பல்களின் மூலமாக பயணங்கள் நடைபெற்றன. அத்தோடு கொழும்பிற்கான பயணசேவையும், வர்த்தகசேவையும் இத் துறைமுகத்திலிருந்தே இடம்பெற்றாலும் பிற்காலங்களில் கார், பஸ், புகையிரதம் போன்றவை பாவனைக்கு வந்தபின்னர் இல்லாமல் போய்விட்டது. கொழும்புத்துறை கிழக்கு கடலும் கடல் சார்ந்த நெய்தல் பிரதேசமுமாக இருப்பதனால் இங்கு பெரும்பாலும் தென்னந் தோப்புக்களும், கற்றாழைகளும் நிறையவே காணப்படுகின்றது. இவற்றைத்தவிர இராவணன் மீசை, அடம்பன்னொடி, தாழை போன்ற மரங்களும் செடிகளும் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை மண்ணைப்போல கொழும்புத்துறை மண்ணும் வெள்ளை வெளேரென பார்ப்பதற்கு அழகாக இருக்கும். யாழ்மாவட்டத்தில் உள்ளவர்கள் கல்வீடு கட்டும் தேவைகளுக்கு மண்கும்பான் மண்ணுக்கு அடுத்து இம்மண்ணையும் பாவிப்பார்கள். இவ் ஊரில் வாழும் மக்கள் பெரும்பாலும் வயலையும், கடலையும் நம்பியே வாழ்க்கை நடாத்து கின்றார்கள். தென்னம் பொச்சில் இருந்து கயிறு திரித்தல், துடைப்பம் தயாரித்தல், பாய் கடகம் பின்னுதல் போன்ற சிறு கைத்தொழில்கள் குடிசைக் கைத்தொழில்களாக இருந்தன.

கொழும்புத்துறை கிழக்கில் ஐயனார் கோவில், முத்துமாரி அம்மன் கோவில், வினாயகர் கோவில் ஆகியவன இருக்கின்றன. இவற்றில் முத்துமாரி அம்மன்கோவில் மிகவும் பிரசித்திபெற்ற ஆலயமாகும். காரணம் தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இவ் அம்மனுக்குப் பொங்கல் படையல் வைத்தால் நோய் தீரும் என்பது பெரும்பாலான மக்களின் நம்பிக்கை. இதனால் யாழ் குடாநாட்டு மக்கள் மத்தியில் இவ் ஆலயம் பிரசித்தி பெற்றிருந்தது.

கொழும்புத்துறை வடக்கில் வயல்களுக்கு மத்தியில் இயற்கையான நீச்சல்குளமான 'நெடுங்குளம்' இருக்கின்றது. இக்குளத்தில் குளிப்பதற்காகவும் நீச்சல் பழகுவதற்காகவும் யாழ்ப்பாணத்தில் இருந்துகூட இளைஞர்கள் வருவதுண்டு. இப்படி நீச்சல் பழகவந்து சிலர் உயிரைவிட்ட சம்பவங்களும் உண்டு. மழைக்காலங்களில் இக் குளத்தைச்சுற்றி அல்லியும், ஆம்பலும் பூத்துக் குலுங்குகின்ற காட்சி மிக அழகாக இருக்கும்.

கொழும்புத்துறை மேற்கில் சுமார் 700 வருடங்களுக்கு முன்னர் நல்லூரை அரசாட்சி செய்து வந்த 'விசய கூளங்கைச் சக்கரவர்த்தி' தென்மதுரையில் உள்ள 'திருங்கூர்' என்ற கிராமத்தில் இருந்து கந்தச்செட்டி, கதிர்காமச்செட்டி, வேலுச்செட்டி என்பவர்களுடன் பல குடும்பங்களை அழைத்து வந்து கொழும்புத்துறையில் குடியமர்த்தியதாக கர்ண பரம்பரைக் கதையில் கூறப்படுகின்றது. இவர்களின் பரம்பரைதான் இன்று அங்கு வாழும் மக்கள் என பலராலும் நம்பப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள விநாயகமூர்த்திப் பிள்ளையார் ஆலயமும் மிகவும் பிரசித்திபெற்ற பழமையான ஆலயமாகும். அங்கு வாழ்ந்து 1901 சிவபதமடைந்த சுப்பிரமணியம் என்னும் சைவப் பெரியார் எழுதிய 'சமரகவி' என்னும் நூலில் உள்ள ஆதாரங்களின்படி இவ் ஆலயம் 400 வருடங்களுக்கு முந்தையது என்றும், நல்லூரின் அரசகுமாரராக இருந்த எதிர்மன்னசிங்கன் என்பவனை போர்த்துக்கேயத் தளபதி பிலிப்டீ ஒலிவீரா என்பவன் இக் கோவிலில் வைத்தே சிரச்சேதம் செய்தான் என்றும், அச்சமயம் அக் கோவிலின் குருக்களும் அரசகுமாரரைக் காப்பாற்றப் போராடியபோது அவருடன் சேர்ந்து வீரச்சாவை அடைந்ததாகவும். அறியத்தருகின்றது. அதுமாத்திரமல்ல! போத்துக்கீயர்கள் அவ் ஆலயத்தை அப்பொழுதே தரைமட்டமாக்கி அழித்ததாகவும் அந் நூல் கூறுகின்றது.

தியாகரத்தின முதலியார் எழுதியுள்ள 'சிறுபுலம்' என்னும் நூலிலும் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி ஆலயக் கட்டிடம் இல்லாமலேயே அந்த இடத்தில் மக்கள் வழிபட்டு வந்ததாகவும் பின்னர் சுமார் 125 வருடங்களுக்கு முன்னர் இவ் ஆலயம் ''கணக்கர்'' தில்லையம்பலம்- குமாரசாமி, 'சக்கடத்தார்' கந்தர் - ஆறுமுகம், 'நொத்தாரிசு' அரியர் - தில்லைநாதர் ஆகியோரின் முயற்சியால் புதுப்பிக்கப்பட்டு நிர்வாகிக்கப்பட்டு வந்ததாகவும், பிற்பாடு 1945ம் ஆண்டிற்குப் பின்னர் படிப்படியாக பல முன்னேற்றங்களை அடைந்து தற்போது புதுப்பொலிவுடன் கம்பீரமாக காட்சியளிக்கின்றது என்பதையும் அறியமுடிகின்றது.

கொழும்புத்துறை பற்றிய இந்த வரலாற்றுக் குறிப்புக்களையெல்லாம் பார்த்து வியப்படையும் நாம் இலங்கையின் தாயுமானவர் என பலராலும் அழைக்கப்பட்ட யோகர் சுவாமிகளைப் பற்றிப் பார்ப்போம். மாவிட்டபுரத்தில் பிறந்த சுவாமி அவர்கள் கொழும்புத்துறையில் தனது வாழ்நாளின் பெரும் பகுதிகளைக் கழித்திருக்கின்றார். ஞானசக்தி நிறைந்த சுவாமி அவர்கள் வியக்கத்தக்க பல அதிசயங்களைச் செய்திருக்கின்றார். உள்ளூர் மக்கள் மட்டுமல்ல; வெளிநாட்டவர்கள் பலரும் இவரைத் தெய்வப்பிறவியாக எண்ணித் தரிசித்துச் செல்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் கடைசிக் கவர்னராக இருந்த ஆங்கிலேயப் பிரபுவின் மகனும், மற்றும் அமெரிக்கரான சற்குரு சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் ஆகியோரும் யோகர் சுவாமிகளின் பிரதான பக்தர்களாவார்கள்! இதில் சற்குரு சிவாய சுவாமிகள் ஏழு ஆண்டுகள்வரை இவரின் ஆச்சிரமத்தில் தங்கியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு கொழும்புத்துறைக்கு பெயரையும் புகழையும் ஈட்டித்தந்த யோகர் சுவாமிகள் தனது 92-ஆம் வயதில் 1964-ஆம் ஆண்டு இப்பூவுலகைவிட்டு சமாதியடைந்தார்.

கொழும்புத்துறை விநாயகர் ஆலயத்திற்கு தெற்கே கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் அமைந்திருக்கின்றது. இக் கல்லூரி 1874ம் ஆண்டளவில் புனகரி மணியகாரராக விளங்கிய வெற்றிவேலு முதலியாரின் மகன் சிவகுருநாதபிள்ளையால் ஆரம்பிக்கப்பட்டது. இவர் இந்தியாவில் கும்பகோணத்தில் வன பரிபாலன இலாக்காவில் உயர் பதவி வகித்தவர். இப்பாடசாலையின் முதல் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர் திரு.சுப்பையா வாத்தியார். இதன் கடைசித் தலமை ஆசிரியராக இருந்தவர் பொலிகண்டியைச் சேர்ந்த திரு.அம்பலவாணர் வாத்தியார் ஆவார். அதன் பின்னர் இப்பாடசாலை மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டு அதன் முதல் அதிபராகக் கடமையாற்றியவர் பரம்-தில்லைராசா அவர்கள் தற்போது இக் கல்லூரியில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

கொழும்புத்துறை மேற்கில் 'துண்டி' என்ற பெரிய விளையாட்டு மைதானம் இருந்தது. பின்னர் அல்பிறட் துரையப்பா அவர்கள் யாழ் மாநகரசபையின் முதல்வராக இருந்த காலத்தில் அரசின் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் சிறிய சிறிய வீடுகள் கட்டப்பட்டு நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கப்பட்டது. இவ்வீடுகளுக்கு மேற்குப் பக்கத்தில் கடற்கரையை அண்டி ஒரு இந்து மயானமும் இருக்கின்றது.

தற்போது கொழும்புத்துறையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக யோகர் சுவாமிகளின் அஸ்தி வைக்கப்பட்டுள்ள ஒரு சிறிய கோவிலும், புங்கற்குளம். வீதியில் அமைந்துள்ள மகளிர் ஆசிரமத்தையும் சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைதவிர 1934ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு ஐக்கிய நாணயச் சங்கம் இன்றும் மக்களுக்கு சிறந்த பணியாற்றிக்கொண்டே இருக்கின்றது.

இவ்வளவு சிறப்புக்களையும் கொண்ட கொழும்புத்துறையின் மண்ணின் மைந்தர்களாக ஊருக்கும், மக்களுக்கு சேவையாற்றிய வர்களையும் நாம் மறந்துவிடக்கூடாது. அமரர்களான டாக்டர் வெற்றிவேலு, பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அவரது மகன் யோகேஸ்வரன் ஆகியோர் பிறந்தது கொழும்புத்துறையில்தான். அடுத்து மாநகரசபை உறுப்பினராக இருந்த டாக்டர் மனோகரன், எந்திரவியலாளர் தெய்வகுமாரன், கல்வித்துறைப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி.இந்திரா-நவரத்தினம், மாவட்டக் கல்வி அதிகாரிகளாக இருந்த அ.தங்கராசா, கனகசபை, மாநகரசபை உறுப்பினராக இருந்த தம்பு-கந்தையா ஆகியோருடன் பிரபல நாவலாசிரியர் செ.யோகநாதன், தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த திரு.சிவகுருநாதன் இப்படியாக இன்னும் பலர் கொழும்புத்துறை மண்ணுக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளார்கள்.

அந்த மண்ணை வாழவைத்த பெரியவர்கள் பலர் அமரராகி விட்டார்கள்! சிலர் மண்ணைவிட்டு இடம்பெயர்ந்தும், புலம் பெயர்ந்தும் சென்றுவிட்டார்கள்! ஆனால் கொழும்புத்துறை என்னும் மண் இன்னமும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

# 32

# நெடுந்தீவு

இலங்கையின் வடபகுதியாம் யாழ்ப்பாணத்தின் தரைமுடியைச் சுற்றி அமைந்துள்ள தீவுக்கூட்டங்கள் ஏழாகும். அவை நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு, லைடன்தீவு, (வேலணை) புங்குடுதீவு என்பனவாகும். இந்த ஏழு தீவுகளிலும் நீளமானதும், பெரியதும் நெடுந்தீவுதான்.

இவையனைத்தும் கடலால் சூழப்பட்ட பெரிய நிலப்பரப்புகள். இவைதவிர இன்னும் பல சிறு தீவுகளும் இருக்கின்றன! அவை அனலைதீவு, இரணதீவு, மண்டைதீவு, பாலைதீவு, காக்கைதீவு, கச்சைதவு (இத்தீவு தற்பொழுது இலங்கைச் சொந்தமில்லாவிட்டாலும் பழைய கல்வெட்டுக்களில் இத்தீவும் இலங்கைக்குச் சொந்தமானதாகவே குறிப்பிடப்பட்டிருக்கின்றது) இப்படிப் பல தீவுகள் இருக்கின்றன.

யாழ் குடாநாட்டின் தென்மேற்குத் திசையிலே யாழ்ப்பாணத்தில் இருந்து ஏறக்குறைய இருபது மைல்களுக்கு அப்பால் உள்ளது நெடுந்தீவு. கிழக்கு மேற்காக 5 மைல் நீளத்தையும், வடக்குத் தெற்காக 5 மைல் அகலத்தையும் கொண்டது. இத் தீவினை தலைத்தீவு, பசுத்தீவு, பால்த்தீவு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயிர்த்தீவு, அபிஷேகத்தீவு என்றும் முன்னோர்கள் அழைத்திருப்பதாக வரலாறுகள் சொல்கின்றன.

பசுத்தீவு என்னும்பெயர் இப்பகுதியின் தரைத்தன்மையானது கிழக்குப்பகுதியும், தென்பகுதியும் பரந்த புல் நிலங்களாக அமைந் தமையாலும், மந்தைகள் மேய்ப்பதற்கு பெரிதும் பயன்பட்டதாலும் பசுத்தீவு எனப் பெயர் ஏற்பட்டதாம். இங்கிருந்து தமிழகத்து தனுஸ்க்கோடி, இராமேஸ்வரம் முதலான இடங்களில் உள்ள ஆலயங்களுக்கு பால், தயிர், நெய் ஆகிய பொருட்கள் அனுப்பப்பட்டு வந்தமையால் இத்தீவு பால்த்தீவு, தயிர்த்தீவு என்ற பெயர்களையும் பெற்றுக்கொண்டதாம்.

ஆலய அபிஷேகப் பொருட்களான தேங்காய், இளநீர், பழவகைகள், பூக்கள் போன்றவையும் அக்கோவில்களுக்கு இங்கிருந்து அனுப்பப் பட்டமையால் இத்தீவை அபிஷேகத்தீவு என்ற பெயரைப் பெற்றதாகவும் சொல்வார்கள்.

சிங்கள இலக்கியங்களில் இத் தீவினை 'அவுசதலோகய" (சஞ்சீவி உலகம்) என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்! வைத்திய ராஜசிங்கன் என்ற விருதப்பெயர் கொண்ட யாழ்ப்பாண மன்னன் செகராசசேகரன் நெடுந்தீவை "மருத்துவ மாமலைவனம்" என்று போற்றியுள்ளான். இத்தீவெங்கும் மருந்து மூலிகைகள் காணப்பட்டமையால் இப்பெயர் தோற்றம் பெற்றதாக "யாழ்ப்பாண வைபவ மாலை!" என்ற நூலில் சொல்லப்பட்டிருக்கின்றது.

நெடியதீவு என்பதனாலேயே நெடுந்தீவு எனவும், நெடுந்தூரத்தில் இருப்பதனால் நெடுந்தீவு எனவும் பெயர் வந்ததாக முன்னோர்கள் கூறுகின்றார்கள். வரலாற்றுக்காலம் முதலாக நடைபெற்று வந்த இந்து சமுத்திர நடவடிக்கைகளில் நெடுந்தீவு சிறப்பிடம் வகித்ததாகத் தெரியவருகின்றது.

இத்தீவை வெடி அரசன் என்ற குறுநில மன்னனே ஆட்சி செய்துள்ளான். வெடியரசனின் தம்பி வீரநாராயணன் புங்குடுதீவையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குதேவன் நயினாதீவையும், ஏரிளங்குரவன் வேலணை தீவையும் ஆட்சி புரிந்ததாக நாட்டார் இலக்கியச் செய்திகள் கூறுகின்றன. இவைபற்றிய விரிவான செய்திகளை "வெடியரசன் வரலாறு" என்ற நூலிலும் காணலாம்.

அவர்களின் ஆட்சியின் சின்னங்களாக இன்றும் இடிந்தும், இடியாமலுமாக உள்ள கோட்டைகள் சாட்சியாக உள்ளன. இக் கோட்டைகளில் ஒன்று நெடுந்தீவின் மத்திய பகுதியில் உள்ள அரசினர் வைத்தியசாலைக்கும், கடற்கரைக்கும் நடுநாயகமாக காட்சியளிக்கின்றது. இன்னொன்று நெடுந்தீவு மேற்குப் பெரிய துறையை அண்டிய பிரதேசத்தில் மண் மேடாகக் காட்சியளிக்கின்றது.

நெடுந்தீவை போர்த்துக்கேசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரும் ஆட்சி செய்துள்ளனர். ஒல்லாந்தர் தமது ஆட்சிக்காலத்தில் இத்தீவை 'டெல்வ்ற்' (Delft) எனப் பெயரிட்டு அழைத்துள்ளனர். காரணம் அவர்களுடைய நாடான நெதர்லாந்தில் நெடுந்தீவைப் போன்ற தீவொன்று டெல்வ்ற் என்ற பெயரோடு இருந்ததனால் அப்பெயரையே நெடுந்தீவிற்கும் வைத்து மகிழ்ந்தார்களாம். ஒல்லாந்தார் நெடுந்தீவை விட்டு வெளியேறியபோது தங்களால் கொண்டு செல்ல முடியாமல் விட்டுவிட்டுச் சென்ற ஏராளமான குதிரைகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து இன்று அற்ப சொற்பமாக சில குதிரைகளே அங்கு வாழ்கின்றன.

நெடுந்தீவின் மண்வள அமைப்பு ஏனைய தீவுகளில் இல்லாதவாறு முருகைக் கற்கள், சுண்ணாம்புக் கற்களைக் கொண்டவையாகும். அந்தக்காலத்தில் அங்கு கட்டப்பட்ட கட்டிடங்கள் அனைத்தும் இந்தவகைக் கற்களாலேயே கட்டப்பட்டன. தீவின் கிழக்கு நடுப்பகுதியில் முருகைக் கற்களும், மேற்குப்பகுதியில் கோளான் எனப்படும் கற்களும், தென் பகுதியில் களி மண்ணும் கொண்ட தீவாகும்.

இங்கு நெற்பயிர்ச் செய்கைக்கு ஏற்ற மண்வளம் இல்லாவிட்டாலும், புரதச்சத்து நிறைந்த சிறு தானியங்களான வரகு, மொண்டி, சாமி ஆகியவை விளைவிக்கப்பட்டு கப்பல் கப்பலாக ஏற்றுமதி செய்யப்பட்ட தாகவும் வரலாற்று நூல்கள் சொல்கின்றன. மேற்கு, தெற்குப் பகுதிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்காயம், புகையிலை ஆகியவன சிறிதளவே செய்யப்பட்டாலும் பணம் பொருளின் பயன்பாடு நிறையவே கிடைத்திருக்கின்றன.

இங்கு இரண்டு துறைமுகங்கள் இருக்கின்றன. ஒன்று பெரியதுறை என அழைக்கப்படுகின்றது. இத்துறைமுகம் மூலமாகவே பண்டைய நெடுந்தீவ மக்கள் இந்தியாவுடன் தொடர்பு கொண்டிருந்த காலத்தில் இராமேஸ்வரத்தில் உள்ள ஆலயங்களுக்கு பால், தயிர், நெய், பூக்கள் எடுத்துச் செல்வார்களாம். இங்குள்ள மற்றொரு துறைமுகத்தின் பெயர் மாவிலித்துறை ஆகும். இங்கிருந்துதான் யாழ்ப்பாணம், புங்குடுதீவு, குறிகட்டுவான், நயினாதீவு ஆகிய பகுதிகளுக்குப் படகுகள் புறப்பட்டுச் செல்கின்றன.

நெடுந்தீவில் எல்லா இடங்களிலும் நன்நீர் கிடைப்பதில்லை. சாறாப்பிட்டி என்ற இடத்தில் மட்டும்தான் நன்நீர் கிடைக்கின்றது. இக்கிணறுகள் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னம் தோண்டப்பட்டவை எனக் கருதப்படுகின்றது. நிலமட்டத்தில் இருந்து நீர்நிலை காணும் ஆழம்வரை பலமான கோளாண் கற்களே பரவலாக உள்ளன. அதைக் காரணமாக வைத்து முதியோர்கள் சொல்வார்கள், இக்கிணறுகளை பூதங்கள்தான் வெட்டியதாக! ஆனால் மிகவும் பலசாலியான மக்கள்தான் இக்கிணறுகளை வெட்டியிருக்கவேண்டும் என்பது அறிவுசார்ந்தவர்களின் கருத்தாகும்.

நெடுந்தீவில் மருத்துவ மூலிகைகள் உள்ள செடிகள் ஏராளமாக இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. அனுமான் சஞ்சீவி மலையைத் தூக்கி வரும்போது மலையின் சிறுபகுதி உடைந்து நெடுந்தீவில் விழுந்ததாக அறிவியலுக்கு ஏற்கமுடியாததொரு கருத்தை முன்னோர்கள் கூறி வைத்திருந்தாலும் அங்கு ஏராளமான மூலிகைச் செடிகள் இருப்பது உண்மையே.

சுற்றுலா வருபவர்களுக்கு நெடுந்தீவில் பார்ப்பதற்குப் பெரிதாக ஒன்றும் இல்லாவிட்டாலும் அந்த மண்ணின் பெருமையைச் சொல்வதற்குரிய சிறந்த இடங்கள் பல இருக்கின்றன. பண்டைய மன்னர்களின் கோட்டை, குதிரைகள், குதிரை இலாயங்கள், மணற்கிணறுகள், சாறாம்பிட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணறுகள் (இக் கிணறுகளிலிருந்துதான் குடிப்பதற்கான நல்ல தண்ணீர் கிடைக்கின்றது) என்பனவாகும். அனேகமான வேலிகள் முருகம் கற்களால் அழகாக அடுக்கப்பட்டு அமைக்கப்பட்டிருக்கும். சில் நூற்றாண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இந்த மதில்கள் அழிந்தும், அழியாததுமாக இன்றும் இருப்பது ஆச்சரியமான ஒன்றாகும். இத்தோடு வெட்டுக்களி, பெரியகளி, இராமப்புகளி அன்று அழைக்கப்படும் சிறு சிறு ஏரிகளும் இருக்கின்றன.

நெடுந்தீவு ஊர்காவற்துறைத் தேர்தல் தொகுதிகுள்ளேயே அடங்குகின்றது. இங்கு உதவி அரசாங்க அதிபரின் கீழ் கிழக்கு, நடுக்குறிச்சி, மேற்கு என மூன்று கிராமசேவகர்கள் பிரிவு இருக்கின்றன. தபால் நிலையம், கிராமசபை, வைத்தியசாலை, கிராமக்கோடு போன்றவையும் உண்டு. அத்தோடு சைவக் கோவில்களும் கிறிஸ்தவ தேவாலயமும், பாடசாலைகள், மகாவித்தியாலயம், கொன்வென்ற் போன்றவையும் இத் தீவில் உண்டு.

உலகத்தமிழ் ஆராட்சி மையத்தின் பிதாமகன் தனிநாயகம் அடிகளார் பிறந்தது நெடுந்தீவில்தான்! நெடுந்தீவின் ஆதிக்குடிமக்களாக தனிநாயக முதலியும், அவரது பரிவாரங்களுமே ஆவார்கள். அனலைதீவு, புங்குடுதீவு போன்ற தீவுகளில் அனேகமாக இங்கிருந்து குடியேறியவர்களின் வழித்தோன்றல்கள்தான் வாழ்கின்றார்கள் என்றும் கூறப்படுகின்றது.

நெடுந்தீவின் மக்கள் தொகை இப்பொழுது குறைவாக இருப்பதற்குக் காரணம் பெரும்பாலான மக்கள் தொழில் வசதிக்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் என வன்னி மாநிலத்திலும், இன்னொரு பகுதியினர் புலம்பெயர்ந்து ஐரோப்பா, கனடா, அமெரிக்கா எனச் சென்று வாழ்வதாலுமே. ஆனாலும் தாங்கள் வாழ்ந்த மண்ணைவிட்டு இடம்பெயராத நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இன்றும் நெடுந்தீவின் பெருமையைப் பறைசாற்றிக்கொண்டே இருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் 2

## ஆலய தரிசனங்கள்

1

## யாழ் - பல்கலைக் கழக வளாகத்தில் குடியிருக்கும் பரமேஸ்வரன் ஆலயம்

பரம், பரஞ்சோதி, பரனே போற்றி இப்படியாக சிவனே போற்றி என சிவனுக்கு இறுதிவரை மிக நெருக்கமாக இருந்து தன்னுடைய உடல், பொருள், ஆவி அனைத்தும் பரமேஸ்வரனுடையதே என ஆணித் தரமாக நம்பியவரான பிரபல அரசியல் அறிஞரும், சட்ட வல்லுநரும், சைவப்பெரு வள்ளலுமாகிய அமரர் சேர்.பொன்.இராமநாதன் அவர்களால் 1921ம் ஆண்டில் யாழ் - திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஆரம்பத்தில் பரமேஸ்வரன் வித்தியாலயம் என்றே அழைக்கப்பட்டது. பின்னர்தான் அது பரமேஸ்வராக் கல்லூரியாக மாறி இன்று யாழ் பல்கலைக் கழகமாக கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது.

மாணவர்களுக்கு ஒழுக்கம், கல்வி இவைகளுடன் சமய அறிவும் முக்கியம் எனக் கருதிய இராமநாதன் அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரி தொடங்கிய ஆரம்பகாலத்திலேயே ஆசிரியர்கள் கல்வியைப் போதிக்க ஆரம்பிப்பதற்கு முன்னரும், மாணவர்கள் கல்வியைக் கற்க ஆரம்பிப்பதற்கு முன்னரும் இறைவழிபாடு செய்வதற்காக இக்கல்லூரியின் பிரதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடத்தில் உள்ள மேல் மாடியில் பிரார்த்தனை மண்டபம் அமைக்கப் பட்டது. (அதுதான் இன்றைய இராமநாதன் மண்டபம்) அப்பொழுது சிவபெருமான், உமையம்மை, வினாயகர், முருகன், ஆகியோரை உள்ளடக்கிய சோமஸ்கந்த மூர்த்தியின் திருவுருவம் பதித்த ஒரு கேடகமொன்று வழிபாட்டிற்காக இம்மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது.

1913ல் மருதனா மடத்தில் பெண்களுக்கென் ஸ்தாபிக்கப்பட்ட இராமனாதன் கல்லூரியிலும் அங்குள்ள பிரார்த்தனை மண்டபத்திலும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் என்னும் ஐந்தொழிலையும் சிவபெருமான் ஒருங்கே புரியும் விதமாக ஆனந்த தாண்டவ மூர்த்தியாக நடராஜப் பெருமானை அங்கு எழுந்தருளச் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ராமநாதன் அவர்கள் பரமேஸ்வரனுக்கு தனியாகத் திருக்கோவில் அமைக்க விரும்பி இதற்காக கல்லூரி வளாகத்திலேயே 1926ம் ஆண்டு ஆலயக் கட்டிடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 1928ம் ஆண்டளவில் திருக்கோவில் பணிகள் பெருமளவில் நிறைவு பெற்றது. ஆனால் ஆலயத்தின் கோபுர வேலைகள் மட்டும் நிறைவு பெறாமலேயே இருந்தது.

கோபுரம் அமைக்கப்படாத நிலையில் இராமநாதன் அவர்கள். தனது 78வது வயதில் மந்திரலோபம், கிரியாலோபம், திரவியலோபம் எனும் வழிபாட்டு முறைகளில் எந்தவிதமான குறைபாடுகளும் வையாது சிறப்பான முறையில் கும்பாபிஷேகத்தினை விமர்சையாக நடத்தி வைத்தார் என வரலாற்றுக் குறிப்புகளில் இருந்து அறிய முடிகின்றது.

இக்கோவிலின் அமைப்பு அபூர்வமானதாகும். புராதன கருவூல மண்டபம் வியாங்கொடையில் இருந்து கொண்டுவரப்பட்ட கருங்கற்களால் தெற்கு வாசல் கொண்டதாக அமைக்கப்பட்டது. அதேபோல தென்திசையில் உள்ள கோபுர வாசலுக்கான தளங்களும், தூண்களும்கூட கருங்கற் களாலேயே அமைக்கப்பட்டுள்ளது. கோவிலின் மூலஸ்தானம் சிறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவேயாயினும் அழகாகக் கட்டப்பட்டதுடன் மூலஸ்தானத்தைச் சுற்றி உள்வீதியுடன் அமைக்கப்பட்ட கோவிலின் கட்டடம் பிரமாண்டமானதாகும்.

மூலஸ்தான மண்டபத்தில் சிவலிங்கமும், அம்மன் சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. கோவிலின் முற்பக்கத்தின் வலது புறத்தில் வினாயகருக்கான சிறு கோவிலும், இடது புறத்தில் முருகனுக்கான சிறு கோவிலும் அமைந்துள்ளன. மூலஸ்தானத்திற்கு நேரே வழமைபோல நந்தியும் பலிபீடமும் இடம்பெற்றுள்ளன. கோவிலின் தென்கிழக்குப் பகுதியை அண்டி மடப்பள்ளியும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவை அனைத்தும் இராமநாதன் அவர்கள் தம்முடைய மதிப்பிற்குரிய ஆலோசகரும் சிவாச்சாரியாருமான சிவஸ்ரீ கார்த்திகேய குருக்கள் அவர்களின் ஆலோசனைகளைப் பெருமளவு பெற்றே மேற்கொண்டார்.

வழக்கமாக தெற்கு வாசல்களை உடைய கோவில்கள் மிக அரிதாகவே இருக்கின்றன. தமிழகத்திலே மாணிக்கவாசகப் பெருமானை சிவபெருமான் குருமூர்த்தியாக எழுந்தருளி ஆட்கொண்ட திருப்பெருந் துறையிலே சுவாமி தெற்கு நோக்கியே எழுந்தருளியிருக்கின்றார்.

இவ் ஆலய வாசல் தெற்கு நோக்கி அமைந்திருப்பதன் காரணம் சிவபிரான் தெற்கு நோக்கி தட்ஷணாமூர்த்தியாக எழுந்தருளி சனகர் போன்ற முனிவர்களுக்கு ஞான உபதேசம் செய்தவர் என்பதனால் மாணவர்கள் கல்வியறிவு மூலமாக உண்மையான அறிவைப் பெறுவதற்காகவே தென் திசையை நோக்கி எழுந்தருளியுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

அதுமாத்திரமல்ல! தென்திசை யமனுக்குரிய திசையாகும். எனவே யம பயத்தினை நீக்குவதற்காகவே இறைவன் இவ்வாறு எழுந்தருளி யிருக்கின்றார் எனவும் கூறப்படுகின்றது. அதுமாத்திரமல்ல! சைவர்களின் கோவிலாகிய சிதம்பரத்தை நோக்கி ஒருவர் இங்கிருந்து வணங்கும்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கியே இறைவனை வணங்க வேண்டும். எனவே தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பரமேஸ்வரனை வணங்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரத்தில் உள்ள நடராஜப் பெருமானையும் அதே நேரத்தில் வணங்குவ தாகின்றது!

இன்னும் ஆகமங்களைக் கூர்ந்து நோக்கும்போது 'சிவபெருமான் எங்கும் நிறைந்துள்ளவர். அவருடைய திருமுகங்கள் ஐந்தினிலே நான்கும் நான்கு திசைகளை நோக்கியும் ஐந்தாவது முகம் மேல் நோக்கியும் உள்ளன. எனவே எத்திசையில் இருந்தும் இறைவனை வழிபடலாம்' எனவும் சொல்லப்படுகின்றது.

இதுபற்றிய சான்றுகள் ஏதாவது சைவசமய மூல நூல்களில் இருக்கின்றதா என்பதை அறிய சமீபத்தில் சில சைவ முன்னோடிகள் ஆராய்ந்தனர். இதில் யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிகப் பேராசிரியரான கலாநிதி ப.கோபாலகிருஷ்ணன் அவர்கள் தனது ஆராய்ச்சியின் மூலமாக இதற்கான சான்று காமிகாமம், காரணகாமம் ஆகியவற்றில் உள்ளதாக எடுத்துக்காட்டியுள்ளார்.

காமிகாமம் 26வது படலம். கிராமாதி தேவஸ்தாபன படலமாகும். இதிலுள்ள 37-41 வரையிலுள்ள செய்யுட்களிலே சாந்தமூர்த்தி பிரதிஷ்டை பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. இதனை செய்வதனால் ஆயள் விருத்தி, வாழ்நாள் அதிகரிப்பு ஏற்படும் எனக் கூறப்பட்டிருக்கின்றது கவனத் திற்குரியது.

இக்கோவிலுக்கு லிங்கமும் அம்மன், பிள்ளையார், நவக்கிரகங்கள், நந்தி முதலியவற்றுக்கான கற்சிலைகளும் இந்தியாவில் இருந்தே கொண்டுவரப்பட்டன. காலப்போக்கில் தாமிரத்திலான அழகிய நடராஜர், சிவகாமியம்மன் (நவராத்திரி, ஆடிப்பூர விழாக்களின்போது பயன் படுத்துவது) அம்மன் ஆகியவற்றுக்கான விக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. 1991ம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்திற்கு சற்று முன்னர் தாமிரத்தினால் செய்யப்பட்ட பிள்ளையார் விக்கிரகமும் கொண்டுவரப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோவிலில் எருது, குதிரை வாகனங்கள் உள்ளன. சுவாமி எழுந்தருளி வீதிவலம் வருதற்கான ஒரு பெரிய பீடமும் உள்ளது. இவை 1974ல் பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக் கழகமாக மாறுவதற்கு முன்னதாகத்தான் இங்கு பயன்பாட்டுக்கு வந்ததாகும்.

பரமேஸ்வராக் கல்லூரி காலத்தில் (1921 - 1974) இக்கோவில் கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்கள், மாணவர்களின் சமய பண்பாட்டுச் செயல்களின் மையமாக விளங்கியது. நவராத்திரி, திருவெம்பாவை மட்டுமன்றி நடேசர் அபிஷேகங்கள், தைப்பூசம், மகாசிவராத்திரி ஆகிய வனவற்றுடன் இராமநாதன் குருபூசையும் சிறப்பாக நடைபெற்று வந்தன.

சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் இவ் ஆலயத்தை நிறுவியது மட்டுமன்றி இதனைத் தொடர்ந்து நடாத்தும் வகையிலாக 'தான்யலக்ஷ்மி" என்ற பெயரில் சுமார் முன்னூற்று ஐம்பது ஏக்கர் பரப்புள்ள சிறந்த நெற்காணியை கிளிநொச்சியிலே விலைக்கு வாங்கி மானியமாக வழங்கியுள்ளார். இதைவிட கொழும்பிலும், வேறுசில இடங்களிலும் இக்கோவிலுக்காக சொத்துக்களை விட்டுச் சென்றுள்ளார்.

சேர்.பொன்.இராமநாதனுக்குப் பின்னர் அவரின் மனைவி திருமதி லீலாவதியும், அவரைத் தொடர்ந்து அவரது மருமகர் சு.நடேசபிள்ளையும் பரமேஸ்வரன் ஆலயம், மற்றும் பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றின் அறங்காவலர்களாக விளங்கியுள்ளார்கள். இவர்களின் காலத்தில் பரமேஸ்வராக் கல்லூரிக்கு வந்த பல அரசியல், கல்வி, சமய பண்பாட்டுப் பிரமுகர்கள், கலைஞர்கள் முதலியோர் பரமேஸ்வரன் ஆலயத்தையும் தரிசித்தே செல்வது வழமையாகும்.

1974ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆறாம் திகதி பரமேஸ்வராக் கல்லூரி இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக முறைப்படி வைபவ ரீதியாகத் தொடங்குவதற்கு முன்னர் இவ் ஆலயத்தில் சிறப்பான அபிசேகம், மற்றும் ஆராதனைகள் செய்தபோது பல்கலைக் கழகத்தை ஆரம்பித்து வைப்பதற்காக அங்கு வருகை தந்திருந்த அன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களும் இவ்வைபவத்தில் பங்குபற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பரமேஸ்வராக் கல்லூரிக்கான கோவில் பல்கலைக் கழகத்துக்கான கோவிலாக மாறியபோது கோவில் நிர்வாகமும் அதற்குரிய சொத்துக்களும் சட்டபூர்வமாக பல்கலைக் கழக இயக்குநர் சபையிடம் கையளிக்கப்பட்டது. இச்சபையில் இராமநாதன் அவர்களின் உறவுக்காரர்களான ப.மகாதேவா, எஸ். பத்மநாதன் ஆகியோருடன் வளாகத் தலைவர், துணைவேந்தர், அப்போது தலைவராக இருந்த பேராசிரியர் க.கைலாசபதி, பரமேஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபர் ஞானப்பிரகாசம், அரசாங்க அதிபர் ஸ்ரீகாந்தா, பிரபல வழக்கறிஞர் எஸ்.ஆர்.கனகநாயகம், பிரபல தமிழ் அரசியல்வாதி குமார் பொன்னம்பலம் முதலியோர் அடங்கிய பதினைந்து உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர்.

பல்கலைக் கழகம் தொடங்கப்பட்ட பின்னர் ஆலயம் அமைந்துள்ள நிலப்பகுதி வரையறை செய்யப்பட்டு முதலிலே முட்கம்பி வேலியும் பின்னர் சுற்று மதிலும் கட்டப்பட்டது. இருந்தபோதும் 1991வரை மேற்குறிப்பிட்ட இயக்குநர் சபையால் ஆலய சமய வழிபாட்டு முறைகள் மந்தமாகவே நடைபெறுவதை உணர்ந்த சிலர் இவை பற்றி சிந்தித்தனர். இவர்களிலே வரலாற்றுப் பேராசிரியராக இருந்த சி.க.சிற்றம்பலமும், கணித விரிவுரையாளராக இருந்த திரு.கணேசலிங்கமும் (தற்போது நியூசிலாந்தில் பேராசிரியராக உள்ளார்) இயக்குநர் சபையுடன் தொடர்புகொண்டு ஆலயத்தைப் புனருத்தானம் செய்யுமாறு வலியுறுத்தினர்.

அதன்பின்னர்தான் வசந்தமண்டபம், நவக்கிரகங்களுக்கான கோவில், வைரவர் ஆலயம், நந்தீஸ்வரர் ஆலயம் ஆகியனவற்றுடன் ஆலயத்திற்கான ராஜகோபுரமும் கோபுரத்தின் உட்பகுதியில் சமய குருவர் நால்வரின் சிலைகளும் புதிதாக அமைக்கப்பட்டு மகா கும்பாபிகேசம் 02-06-1991ல் கோலாகலமாக நடைபெற்றது.

கோவிலின் மேற்கு, வடமேற்கு சுவர்களில் சிவபெருமானுடைய 108 தாண்டவ ஓவியங்கள் பிரபல ஓவியர் சிவப்பிரகாசம் குழுவினரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள சிவாலயங்களிலேயே 108 கரண சிற்பங்களோ, ஓவியங்களோ மிக அரிதாகவே உள்ளன. இத்தோடு சைவ சமய குரவர் நால்வருடன், ஆறுமுக நாவலர், சேர். போன். இராமநாதன் (தியான நிலையில்) ஆகியோர்களது படங்களுடன் லக்ஷ்மி, சரஸ்வதி படங்களும் கோவிலில் உள்ள தூண்கள் சிலவற்றின் முற்பகுதி யில் அலங்கரிக்கின்றன.

இக்காலப் பகுதியிலேயே ஆலய வளாகத்தில் நந்தவனம் ஒன்று உருவாக்கப்பட்டது. அங்கு பலவிதமான பூமரங்கள், பல இன வாழை மரங்கள், தென்னை மரங்கள், பலா, மா, எலுமிச்சை போன்ற பயனுள்ள மரங்களுடன் சிவலிங்கப் பூமரம், வள்ளி, பலாசு, ருத்திராட்ச மரம் முதலியவனமும் நடப்பட்டுள்ளன.

மேலும் கோவிலுக்கு மஞ்சம் ஒன்று அவசியம் என உணரப் பட்டதால் பரிபால சபையினரால் புதிய மஞ்சம் ஒன்று அமைக்கப்பட்டது. இது 1995ம் ஆண்டு இடப்பெயர்வுக்கு சற்று முன்னதாகத்தான் நிறைவு பெற்றது. பரமேஸ்வரப் பெருமானின் திருவருளால் போர்க்காலங்களில் ஆலயத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் அடையவில்லை.

இவ் ஆலயத்தைப்பற்றி கல்லூரியில் தமிழ் ஆசானாக இருந்த அமரர் வித்துவான் க.வேந்தனார் பாடல் ஒன்று பாடியுள்ளார். அமரத்துவமடைந்த இயல் இசைவாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள் எம்பிரானுக்கு ஊஞ்சல் பாக்கள் இயற்றியுள்ளார். பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் சில கீர்த்தனைகளை இயற்றியுள்ளமையும் இவ் ஆலயத்திற்குரிய சிறப்பாகும்.

இவ் ஆலயம் இன்னமும் சைவப்பெரு வள்ளலார் சேர்.பொன் இராமநாதன் அவர்களின் தீர்க்க தரிசனமான கல்வி, சமய, பண்பாட்டு இலட்சியங்களை நினைவூட்டிக்கொண்டே இருக்கின்றது. அதே வேளையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முக்கியமான சமயப் பண்பாட்டு நிலையமாகவும் மிளிர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௨

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்

ஒவ்வொரு ஊருக்கும் வரலாற்றுச் சிறப்புக்கள் ஏதாவது இருக்கத் தான் செய்கின்றன. அவை பற்றி அனேகமானவர்கள் அறிந்திருப்பதில்லை. முல்லைத்தீவு என்னும் பெயரைப் பொதுவாக அறிந்திருக்கும் நாங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிறப்புக்களை, அறிந்தவர்கள் நம்மில் மிக மிக குறைவானவர்களே!.

முல்லைத்தீவில் நந்திக்கடல் என்னும் பெயரில் ஒரு கடற்பரப்பு இருக்கின்றது என்பதையே நம்மில் ஏராளமானவர்கள் 2009ம் ஆண்டில் இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப் போருக்குப் பிற்பாடே தெரிந்திருக்கின்றார்கள்.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் முல்லைத்தீவு மாவட்டம் தமிழர்களின் வரலாற்றில் இன்றளவும் வீர வரலாற்றையே தனதாக்கிக் கொண்டிருக்கின்றது. தமிழ் மண் காக்க இறுதிவரை போராடிய மானவீரன் பண்டாரவன்னியன், குரவிநாச்சியார் ஆகியோரின் தியாக வரலாற்றை நமது மக்கள் இன்னமும் போற்றிக்கொண்டே இருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009ல் இனவெறி சிங்கள அரசின் இராணுவத்தின் அரக்கத்தனமான விமானத் தாக்குதலாலும், நச்சுக் குண்டு வீச்சினாலும் லட்சக்கணக்கான நமது உறவுகளை ஒரே நாளில் பலிகொண்ட களப்பிரதேசமும் முல்லைத்தீவு மாவட்டம்தான். இந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய கிராமங்களுக்கு நடுவிலும், நந்திக்கடலைத் தனது அருகாமையிலும் கொண்டுள்ள ஊர்தான் வற்றாப்பளை. இங்குதான் இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த கண்ணகை அம்மன் ஆலயம் அமைந்திருக்கின்றது.

## அதிசயமும் ஆச்சரியமும்!

இவ் ஆலயத்தின் ஆச்சரியத்தக்கதோர் அதிசயம்! ஆலயத்தின் அருகில் உள்ள கடலினில் நீர் எடுத்துத்தான் ஆலய விளக்குகளையே எரியவிடுகின்றார்களாம்! அது மாத்திரமல்ல! பட்ட மரம் தளிர்த்தமை, தலையில் ஆயிரம் கண்களைக் காட்டியமை, புனிச்சையை ஆட்டுவித்து புனிச்சங்காயால் பறங்கித் துரைக்கு எறிந்தமை, ஆலயப் பொருட்களைக் களவு செய்தோரின் கண்களை மறைத்தமை என.... இன்னும் பல உண்டு. அதன் வரலாறு கீழே...

## ஆலயத்தின் வரலாறு..

கண்ணகி மதுரையை எரித்ததன் பின்பு இலங்கைக்கு வந்து பல இடங்களில் தங்கியதாகவும், அப்படியான ஒரு சமயத்தில் வற்றாப்பளையில் தங்கியதாகவும் 'சிலம்பு கூறல்' என்னும் கண்ணகி காப்பியம் கூறுகின்றது.

கண்ணகி அம்மன் வற்றாப்பளைக்கு வந்து இடைச் சிறுவர்களுக்கு காட்சி கொடுத்த நிகழ்ச்சியையும், அதற்கு முன்பாக முள்ளியவளைக்கு வந்ததையும் 'அம்மன் சிந்து' என்னும் பாடலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டி ருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முந்தித் தடங்கிரியலே பாண்டியன் தன் மதுரையை*
*முதுகனல் கொளுத்தியே ஒரு சிலம்பதனால்*
*பிந்திவந் தங்கொணாக்கடவை தனிலும்*
*பேரான முள்ளியவளையம்பதியில் வந்துறைந்தாய்.*
*தந்திமுகன் கோவிலில் வந்துமடை கண்டு*
*தார்கடல் உப்புத் தண்ணீர் விளக்கேற்றி*
*அந்திப் பொழுதினிலே நந்திக் கடற்கரையில்*
*வைகாசித் திங்களில் வந்தமர்ந்தாயே.*

*அடவிக் கடற்கரையில் விடுதிவிட வந்தாய்*
*அழகான மாட்டிடையர் கண்ணில் அகப்பட்டாய்*
*பாரப்பா என் தலையில் பேன் அதிகம் என்றாய்*
*அழகான தலையதனைப் பிளவாய் வகிர்ந்தாரங்கு*
*பாங்கான கண்களோராயிரமதைக் கண்டார்*

*எந்தனுக்குப் பசியதிகம் என்றாய்*
*பால்ப்புக்கை மீட்கப் பறந்திட்டாய் தாயே!*

இப்படிச் சுருக்கமாக அந்தப் பாடலில் கூறப்பட்டிருக்கின்றது. அதன் விபரமானது...

இடைச் சிறுவர்கள் மாடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது மூதாட்டி ஒருத்தி அவ்விடம் வந்து அமர்ந்தாள். சிறுவர்கள் மூதாட்டியை வரவேற்று உபசரித்தனர். 'எனக்குப் பசிக்கிறது' என மூதாட்டி சொல்ல, அவர்கள் பாற்புக்கை சமைத்துக் கொடுத்தனர். பொழுது சாய்ந்து விட்ட தனால் 'விளக்கேற்றுமாறு' மூதாட்டி கூற 'எண்ணெய் இல்லையென' சிறுவர்கள் கூறினார்கள். அதற்கு 'கடல்நீரை அள்ளிவந்து விளக் றேற்றுங்கள்' என மூதாட்டி கூறினாள். அதன்படி சிறுவர்கள் கடல்நீரை அள்ளி விளக்கேற்றினார்கள். தனது தலையில் பேன் அதிகமாக இருப்பதனால் பேன் பார்க்குமாறும் மூதாட்டி கேட்க, சிறுவர்கள் பேன் பார்க்க, தலை மயிரை விலத்தியபோது தலையில் ஆயிரம் கண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதனைக் கண்டு சிறுவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது திடீரென மூதாட்டி மறைந்துவிட்டாள்! அப்பொழுது வைகாசி மாதம் ஒரு திங்களில் வருவேன் என ஒரு அசரீரி கூறியதாக அந்தப் பாடல் கூறுகின்றது.

சிறுவர்கள் இந்தச் செய்தியை ஊருக்குள் வந்து முதியவர்களுக்குக் கூறியபோது யாரும் இதனை நம்பவில்லையாம். இருந்தும் பெரியவர்கள் அச் சுற்றாடல் முழுவதும் தேடியும் அம் மூதாட்டியைக் காணவில்லையாம். ஆனால் மூதாட்டி அங்கு இருந்த இடத்தில் பட்டுப்போய் நின்ற வேப்பமரம் ஒன்று தளிர்விட்டிருந்ததைக் காணமுடிந்ததாம்! அதன் பின்னர்தான்; அந்த இடத்தில் சிறு ஆலயம் ஒன்றினை அமைத்து வழிபடத் தொடங்கி னார்களாம்.

ஆரம்பத்தில் ஊர் மக்களே தமக்குத் தெரிந்த வகையில் பூசை முறைகளை நடத்தியதாகவும், பின்னர் தஞ்சாவூரில் இருந்து வந்த 'பக்தஞானி' என்னும் கண்ணகி பக்தர் கண்ணகி அம்மனுக்குச் செய்யப்படும் சில கிரிகை முறைகளை அறிமுகப்படுத்தி அதை ஏட்டிலும் எழுதி வைத்தாராம். அந்த ஏட்டு முறைப்படியே இன்றுவரையும் பூஜை வழிபாடும், பொங்கல் முறையும் நடைபெறுகின்றன.

இந்த வழிமுறைகளை ஏற்படுத்திய அந்த 'பக்தஞானி' என்னும் பக்தர் சிவபதம் அடைந்த பின்னர் அவர் வாழ்ந்து வந்த முள்ளியவளையில் உள்ள நாவற்காட்டில் அவரைத் தகனம் செய்தார்களாம்.. வற்றாப்பளை அம்மனின் பொங்கலிற்குப் பின்னர் வரும் வெள்ளிக் கிழமையில் முள்ளியவளையிலும் பக்தஞானிப் பொங்கலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

வற்றாப்பளை அம்மனின் பொங்கலை ஒட்டி நடைபெறும் இன்னுமொரு பொங்கல் முள்ளியவளையில் உள்ள காட்டுவிநாயகர் பொங்கலாகும். ஈழத்தமிழர் வரலாற்றின் மூலமாகத் திகழும் 'வையா' பாடலில் வரும் கதிரையப்பர் பள்ளு என்னும் பத்தியில் இதுபற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகையில் - வன்னிப் பிரதேசத்தில் உள்ள ஏழு வன்னிமைகளில் ஒன்றான முள்ளியவளை வன்னிமை எழுபது கிராமங்களை உள்ளடக்கி இருந்ததாகவும், அங்குள்ள காட்டு விநாயகர் ஆலயத்தில் வற்றாப்பளைப் பொங்கலுக்கு ஏழு நாட்களுக்கு முன்பாக இக் காட்டு விநாயகர் என அழைக்கப்படும் மூத்த விநாயகர் ஆலயத்தில் மடைகளும், பொங்கலும் இன்றுவரை நடைபெற்று வருவது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது

அந்த மூதாட்டி அங்கு வந்துபோன வைகாசி மாதத்துப் பூரணையை அண்டிய திங்கள் கிழமை பொங்கல் வைபவம் கொண்டாடப்படுகின்றது. ஆரம்பத்தில் ஊர் மக்களுடன் ஆரம்பித்த இப் பொங்கல் வைபவம், பின்பு அயல் கிராமத்தவர்களும் கலந்து கொள்ள, காலப்போக்கில் யாழ் குடாநாடு முழுவதும் இருந்து பக்தர்கள் வந்து இப் பொங்கல் வைபவத்தைச் சிறப்பிக்கின்றார்கள்.

அந்தக் காலத்தில் போக்குவரத்திற்கான பாதைகள் சீராக இல்லா திருந்தபோதும் கிராமிய தெய்வ வழிபாட்டில் ஆழமாகப் பற்று வைத்துள்ள யாழ்ப்பாணத்து மக்கள் கால் நடையாகவும், கடல் மூலம் வத்தையிலும் இவ் ஆலயத்திற்கு வருகைதரத் தொடங்கினர். ஈழத்தில் கண்ணகி அம்மனுக்கு முப்பதிற்கும் மேற்பட்ட கோவில்கள் இருந்தாலும் வற்றாப்பளையில் உள்ள இவ் ஆலயமே பிரசித்திபெற்ற ஆலயமாக விளங்குகின்றது.

சிலப்பதிகாரம் கூறும் கண்ணகியும், வற்றாப்பளை கண்ணகியும் ஒன்றா?

கண்ணகி மானிடப் பெண்ணாக இருந்த போதும் தனது கற்பின் வலிமையால் தெய்வ நிலையை எட்டியதாகச் சிலப்பதிகாரம் சொல்லுகின்றது. ஒரு மானிடப் பெண்ணைத் தெய்வமாக வழிபட சைவ சமய மரபில் இடமில்லை. ஆதலால் இந்தக் கண்ணகி, அந்தக் கண்ணகி இல்லை எனச் சொல்லுவோரும் உண்டு. அதே நேரம் வற்றாப்பளைக் கண்ணகி உமாதேவியாரின் ஒரு அவதாரம் எனவும், மதுரையில் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த உமாதேவியார் பாண்டிய மன்னனைப் பழிவாங்குவதற்காக மாநாகச் செட்டியின் மகளாகி வளர்ந்ததாக 'சிலம்பு கூறல்' என்னும் பாடலில் கூறப்பட்டிருக்கின்றது. இந்த இரண்டு கண்ணகியும் ஒன்றா அல்லது வெவ்வேறா என்ற விளக்கம் எந்த நூலிலும் காணப்படவில்லை!

ஆனாலும் இலங்கையில் தமிழ் மக்கள் மட்டுமல்ல; பௌத்த சிங்கள மக்களும் கண்ணகியைப் பத்தினித் தெய்வமாகவே கருதி வழிபடுகின் றார்கள். சிங்கள மக்களின் இக் கண்ணகி வழிபாட்டு நம்பிக்கை பற்றி 'ராஜவிய ராஜரத்நாகர' என்னும் சிங்கள வரலாற்று நூல் ஒன்றில் கூறப்பட்டிருக்கின்றது. அந் நூலில் கூறப்பட்டிருக்கும் இன்னுமொரு செய்தி, இலங்கையில் தற்போது புத்த பெருமானின் புனிதத் தந்தத்திற்கு எடுக்கப்படும் 'பெரகரா' என்னும் வைபவம் ஆரம்பத்தில் பத்தினித் தெய்வத்திற்கு எடுக்கப்பட்ட விழாவென்றே சொல்லப்பட்டிருக்கின்றது.

கண்ணகி கோபம் கொண்டு மதுரையை எரித்ததுபோல, இப்பொழுதும் தன்னைக் கோபப்பட வைப்பவர்களுக்கு பொக்களிப்பான், சின்னமுத்து, கண்நோய் போன்ற வருத்தங்களைக் கொடுத்து தனது சக்தியைக் காட்டுகின்றாள் எனவும் நம்பப்படுகின்றது.

கண்ணகி அம்மன் வழிபாட்டை ஈழத்தில் பத்தினித் தெய்வ வழிபாடாக அறிமுகம் செய்து வைத்தவர் கி.பி.இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கஜபாகு மன்னன் என்றே சிலப்பதிகாரம் கூறுகின்றது. சேர மன்னன் கண்ணகிக்கு விழா எடுத்தபோது கடல்சூழ் இலங்கை கஜபாகு மன்னனும் அவ் விழாவில் பங்கு கொண்டான் என்றும் அவனே ஈழத்தில் கண்ணகி வழிபாட்டை அறிமுகப்படுத்தினான் என்றும் கூறப்படுகின்றது.

இவ் ஆலயத்தைப்பற்றிய இன்னுமோர் செய்தி... வன்னிப் பிரதேசத்தை வன்னி மன்னர்கள் ஆட்சி செய்தபோது யாழ்ப்பாண மன்னர்கள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்றோருக்குக் கப்பம் செலுத்தி வந்துள்ளார்கள். ஆனாலும் இவர்களுக்குப் பின்னர் வருகை தந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர்களை எதிர்க்கும் அளவிற்கு இவர்கள் விளங்கியிருந்தார்கள். இத்தகைய வன்னி மன்னர்களால் பரிபாலிக்கப்பட்ட இவ் ஆலயத்தை போத்துக்கேயர் காலத்தில் போத்துக்கேயத் தளபதியான நெவில் என்பவன் அழிக்க முற்பட்டபோது ஆலயத்தில் நின்ற பன்னிச்சை மரம் தானாகவே மரத்தை உலுப்பித் தனது காய்களை வீசி ஆலயத்தை அழிக்கவிடாது தளபதி நெவிலை விரட்டியடித்ததாக இன்றும் படிக்கப்படும் 'பன்னிச்சை ஆடிய பாடற் சிந்து' மூலம் அறிய முடிகின்றது.

சைவ மக்கள் அனேகமான பெண் தெய்வங்களை அம்மன் என அடைமொழியிட்டு அழைப்பதையும் நாம் அறிய முடிகின்றது! உதாரணமாக காமாட்சி அம்மன், மீனாட்சி அம்மன், செல்வி அம்மன், துர்க்கை அம்மன், காளி அம்மன் இப்படியாக இன்னும் பல அம்மன்கள் இருக் கின்றன! அந்த வகையிலேயே கற்பரசி கண்ணகி தெய்வ நிலையை அடைந்த பின்னர் பத்தினித் தெய்வமான அவரை கண்ணகி அம்மன் என பெயரிட்டு அழைப்பதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடு கின்றார்கள்.

வற்றாப்பளை என்னும் பெயர் முல்லைத்தீவில் பற்றுப்பளை என அழைக்கப்பட்ட இவ்வூரில் கண்ணகி அம்மன் தோன்றிய பின்னர் மக்கள் அம்மன்மீது கொண்டுள்ள வற்றாத நம்பிக்கையின் காரணமாகவே இப் பிரதேசத்திற்கு வற்றாப்பளை என பெயர் வந்ததாகவும் ஒரு சாரரால் சொல்லப்படுகின்றது.

உள்நாட்டுப் பிரச்சனைகள் காரணமாக குண்டு வீச்சுத் தாக்குதல் களால் இவ் ஆலயம் பலமுறை சேதமாக்கப்பட்டபோதும் 2002ம் ஆண்டு சமாதான ஒப்பந்தத்திற்குப் பின்னர் மீண்டும் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதன் ராஜகோபுரமானது 2006ம் ஆண்டே நிறைவடைய இருந்த போதிலும் சீமெந்து தட்டுப்பாடு காரணமாக ராஜகோபுர வேலைகள் இன்னமும் முழுமையடையாமல் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை மண்ணை ஆளுகின்ற முடிதரித்த மன்னவளாம்
நந்திக் கடற்கரை தனிலே அன்னையவள் வீற்றிருப்பாள்.
கண்கள் பத்து நூறு, அவள் கருணையுமோ பேரானது!
எங்கும் குடியிருப்பாள், நம்புவோர் இல்லமெல்லாம் தேடி வருவாள்
எங்கள் பத்தினித் தெய்வம் கண்ணகி அம்மாவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# வல்லிபுரம் ஸ்ரீ ஆழ்வார் கோவில்

வல்லிபுரம் என்பது இலங்கையின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப்பகுதியில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒரு கிராமம். இதனைச் சுற்றி துன்னாலை, புலோலி, வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்கள் இருந்தாலும் வல்லிபுரத்திற்கு இருக்கின்ற சிறப்பு இங்குள்ள ஸ்ரீ ஆழ்வார் கோவில்தான்.

சுமார் முப்பது, முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் வட மாகணத்தில் உள்ள புகழ் பெற்ற ஆலயங்களின் வரிசையில் வல்லிபுரம் ஸ்ரீ ஆழ்வார் கோவிலும் ஒன்றாகவே இருந்தது. தற்பொழுது இங்கு மக்கள் தொகை குறைந்துள்ளது மட்டுமல்ல; கோவிலின் திருவிழாவின் சிறப்பும் குன்றியே காணப்படுகின்றது.

இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இன்றைய தலைமுறையினரில் பலருக்கு வல்லிபுரத்தில் இப்படியான பழமை வாய்ந்த ஆழ்வார் கோவில் ஒன்று இருக்கின்றதா என்பது தெரியுமா என்பது! (யாழ்ப்பாணத்திற்குள் வல்லிபுரம் என்னும் பெயரில் ஒரு கிராமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றதா என்று இன்றைய தலைமுறையினருக்குத் தெரியுமா என்பதே கேள்விக்குறியாக இருக்கின்றது!) மற்றது பழைய தலைமுறையினரில்கூட வல்லிபுரத்தில் உள்ள இந்த ஆலயத்தில் உள்ளது எந்தக் கடவுள்? என்பது!

ஆழ்வார் என்பது விஷ்ணுவின் இன்னொரு பெயராகும். அந்தக் காலங்களில் வைஷ்ணவ ஆலயங்களில் பிள்ளையாருக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது. இதனால் விநாயகருக்கு பூஜை செய்த பின்னரே ஆழ்வாருக்கு பூஜை செய்வது வழக்கமாகும். இதன் காரணமாக இக் கோவிலை பிள்ளையார் கோவில் என எண்ணி வழிபட்டவர்களே மிக அதிகம். கோவிலைக் குறிப்பிடும்போதுகூட வல்லிபுரக் கோவில் என்று சொல்லுவார்களே தவிர, வல்லிபுர ஆழ்வார் கோவில் என பேச்சுவழக்கில் யாரும் சொல்வதில்லை!

பலரும் அறிந்திராத ஒரு விடயம் வடமாகாணத்திலேயே விஷ்ணு விற்கு இரண்டு ஆலயங்கள் மட்டும்தான் இருக்கின்றன! ஒன்று வல்லிபுரத்தில் உள்ள இந்த ஆழ்வார் கோவில். மற்றொன்று பொன்னாலையில் உள்ள வரதராஜப்பெருமாள் ஆலயமாகும். யாழ்ப்பாண மாநகரசபையின் முதல்வராக இருந்த அல்பிரட் துரையப்பா இங்கு வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதின் பிற்பாடுதான் பலரும் பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவிலைப் பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருந்தது. ஆனால் வல்லிபுரக் கோவிலைப்பற்றி அறியாதவர்களே இருந்திருக்கமுடியாது என்றே கூறலாம்.

பருத்தித்துறையின் மையப்பகுதியில் இருந்து கிடடத்தட்ட 4 மைல் தொலைவில் இக்கோவில் உள்ளது. ஆர்ப்பரிக்கும் கடலோசை, வெள்ளை மணற்பரப்பு, பசுமையைக் கொடுக்கும் விருட்சங்கள் என்று இயற்கை அன்னை அரவணைக்கும் ஒரு கோவிலாகவே ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் விளங்குகின்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ் ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமையப் பெற்றதான புராதன தலமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லிபுரம் என்னும் பெயர் இக்கிராமத்திற்கு எப்படி ஏற்பட்டது என்பது பற்றி பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் கி.பி. 303ல் நாகர்களுடைய ஆட்சியும், கி.பி. 556ல் லம்பகர்ணர் ஆட்சியும் முடிவிற்கு வந்தது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். இந்தக் காலப்பகுதியில் குடியேறிய வட மறவர்கள் ஆட்சி செய்த இடம் வடமராட்சி என அழைக்கப்படலானது என்றும், வரலாற்று நூலாசிரியரான ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை அவர்களின் கருத்துப்படி தொண்டை நாட்டின் வடக்கில் வசித்த மக்களின் ஒரு பகுதியினர் இங்கு குடியேறியதாகவும், வடக்கில் இருந்து வந்த அவர்கள் குடியேறிய பிரதேசத்திற்கு வடமராட்சி என பெயரிட்டதாகவும் தெரிய வருகின்றது. அம் மக்களின் தலைவனாக வல்லியத்தேவன் என்பவன் இருந்ததாகவும் அவனின் பெயரைக் குறிக்குமுகமாக இக் கிராமத்திற்கு வல்லிபுரம் என பெயரிடப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

வல்லி என்னும் சொல்லுக்கு ஆயர்பாடி என்ற ஒரு கருத்தும், புரம் என்றால் கோவில் என்றும் பொருள் கொள்ள முடியும். எனவே வல்லிபுரம் என்பது ஆயர்பாடி கோவிலாகவும், கண்ணன் வளர்ந்த இடமாகவும் கருதப்படுகின்ற காரணங்களால் இவ்வாறு வல்லிபுரம் என பெயர் வரக் காரணமாக இருந்ததாகக் கருதப்படுகின்றது.

மேலும் ஆழ்வார் என்னும் சொல் திருமாலையும், ஆழ்வான் என்னும் சொல் சூரியனையும் குறித்து வருவதால் வேத காலத்தில் சூரியனோடு தொடர்புடைய தெய்வமாக விஸ்ணு போற்றப்படுகின்றார்! இந்தக் காரணத்தாலும் வல்லிபுரநாதரை வல்லிபுர ஆழ்வார் என்று வழிபட்டிருக்கலாம். இது மாத்திரமல்லாமல் இலங்கையின் வட பகுதியை நாகர்கள் ஆட்சி செய்தபோது அவர்கள் நாகம், சூரியன் ஆகியவற்றை வழிபட்டதாகவும் அவர்கள் வசித்த பிரதேசங்களில் ஒன்றாக வல்லிபுரம் இருந்ததாகவும் ஆராய்ச்சி நூல்களில் இருந்து அறிய முடிகின்றது.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலின் மூலஸ்தானத்தில் சக்கரம் வைத்தே பூஜை நடைபெறுவது வழமையாகும். அதே நேரம் சூரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டிலும் வழிபாட்டுச் சின்னமாக சக்கரமே இடம்பெறுகின்றது. இதே வழிபாட்டுச் சின்னம் பௌத்த மதம் ஆதிக்கம் பெற்ற காலத்தில் தர்மச் சக்கரமாகப் பேணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இப்படியான காரணங் களைப் பின்பற்றி திருமாலின் சக்தி வாய்ந்த சக்கர ஆயுதமாக இச்சக்கரம் பூஜிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தின் இராசதானியாக விளங்கிய 'சிங்கை நகர்' எது என்பதில் வரலாற்று ஆசிரியர்களுக்கிடையே பல முரண்பாடுகள் இருக்கின்றன! ஞானப்பிரகாச சுவாமிகளின் கருத்துப்படி வல்லிபுரப் பிரதேசமே இராசதானியாக விளங்கிய சிங்கை நகர் ஆகும். ஆனால் வேறு சில ஆராய்ச்சியாளர்கள் நல்லூர்தான் ராசதானியாக விளங்கியது என சொல்லி வைத்துள்ளார்கள்.

மேலும் வல்லிபுரக் கோவிலுக்குரிய நிலத்தின் பழைய கட்டிடத்தின் அழிபாடுகளுக்கிடையில் 1936ம் ஆண்டளவில் வல்லிபுரப் பொன்னேட்டுச் சாசனம் கண்டெடுக்கப்பட்டதாகவும் நாலு வரிகளைக் கொண்ட இச் சாசனம் பிராமி என்னும் எழுத்தில் எழுதப்பட்டிருந்ததாகவும் அதில் குறிப்பிட்டுள்ள 'பியகுக' என்னும் இடம் கடற்கரையை அண்டி புங்குடுதீவு வரை அடையாளம் காணப்படுதாகவும் சொல்லப்படுகின்றது! ஆக இவையெல்லாம் இன்னமும் ஆராய்ச்சிக்குரியதாகவே இருக்கின்றது.

வல்லிபுரக் கோவிலின் ஐதீக வரலாறு மிக அற்புதமானது! தற்போது இக் கோவிலின் தீர்த்த உற்சவம் நடைபெறும் வங்கக் கடல்ப் பகுதியிலே அதிசயமான மீன் ஒன்று துள்ளிக்குதித்து ஆரவாரம் செய்து மக்களை அதிசயத்தில் ஆழ்த்தியதாம். கற்கோவள கடலோடிகள் அந்த மீனைப் பிடிப்பதற்கு எடுத்த முயற்சிகள் கைகூடாமல் போனதாகவும், அதேநேரம் வராத்துப்பளையைச் சேர்ந்த நாகசாபம் பெற்ற 'லவல்லி' எனப்படும் வல்லி பயபக்தியுடன் தவமிருந்தபோது அவரது கனவில் தோன்றிய பகவான் மறுநாள் குறித்த இடத்திற்கு வருமாறு பணித்தாராம்! மறுநாள் காலையில் அங்கு சென்று கரையில் உட்கார்ந்து பகவானின் திருநாமங் களை உச்சரித்தபோது அந்த மீன் கடலில் இருந்து துள்ளிக்குதித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மடியில் விழுந்து அழகிய குழந்தையாக மாறியதாம்! 'கண்ணன் உதித்தான்' என ஆரவாரம் செய்த அடியவர்கள் அக் குழந்தையை பல்லக்கில் வைத்துத் தூக்கிச் செல்லுகையில் களைப்புற்ற மக்கள் ஓரிடத்தில் பல்லக்கை வைத்துவிட்டு இளைப்பாறியுள்ளனர். மீண்டும் பல்லக்கைத் தூக்க முயற்சித்தபோது பல்லக்கு மாயமாக மறைந்ததாகவும், பல்லக்கு இருந்த அதே இடத்தில் சக்கரம் ஒன்று தோன்றியதாம்! இந்த ஆச்சரியத்தை பயபக்தியுடன் நேரில் கண்ட மக்கள் அவ்விடத்தில் ஆலயம் ஒன்றினை அமைத்து அச் சக்கரத்தை வழிபடத் தொடங்கினார்களாம்! அந்த இடம்தான் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் இருக்கும் இடம் எனச் சொல்லப்படுகின்றது! இந்தக் கதை ஐதீகக் கதையாகக் காணப்படுவதால் அன்று தொட்டு இன்றுவரை செவி வழியாகவே பேசப்பட்டு வருகின்றது.

வல்லிபுர ஆழ்வார் கோவிலின் திருவிழாக்கள் புரட்டாதி மாத பூரணைத் திதியில் தீர்த்த உற்சவம் நிகழக்கூடிய வகையில் கணிக்கப்பட்டு 15 நாட்கள் திருவிழா நடைபெறும். 16ம் நாள் கடலாடு தீர்த்த உற்சவம் நடைபெறும். அதற்கடுத்த நாள் பட்டுத் தீர்த்தம் நடைபெறும். மேலும் இவ் ஆலயத்தில் ஆவணி மாதத்தில் கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடப்படும். நாராயணனின் நரகாசுர சம்காரம் தீபாவளி தினத்தன்றும், மார்கழி மாதம் முழுவதும் காலையில் விசேட பூசைகளும் நடைபெறும். ஞாயிற்றுக் கிழமையே ஆழ்வாருக்கு சிறப்பான நாள் என்பதனால் ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்புப் பூசைகள் இடம்பெறும்.

யாழ்ப்பாணத்தில் கடலில் தீர்த்தமாடும் கோவில்கள் வல்லிபுரக் கோவிலும், நயினை நாகபூசணி அம்மன் ஆலயமும் மட்டுமே. வல்லிபுர ஆழ்வார் தீர்த்தத் திருவிழாவைக் காண்பதற்காக வடமராட்சியில் இருந்தும், தென்மராட்சி, வலிகாமம் போன்ற ஏனைய யாழ் குடாநாட்டின் பகுதிகளிலிருந்தும் மக்கள் துன்னாலையை நோக்கி வந்துகொண்டே இருப்பார்கள்.

கோவிலில் இருந்து 3 கிலோ மீட்டர்கள் தூரத்தில் இருக்கும் கடலுக்குத் தீர்த்தமாடச் செல்லவேண்டும். முன்னர் மூன்று மணற்திட்டிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து செல்லவேண்டும். தற்போது மணல் அகழ்வுகளினால் ஒரேயொரு திட்டி மட்டுமே இருக்கின்றது. இந்தக் கடற்கரையைப் பற்றி சொல்வதானால் பருத்தித்துறை துறைமுகம்வரை முருகைக்கல் பாறையினால் அமைந்த இந்த கடற்கரையை ஆண் கடல் என்றே சொல்வார்கள். பருத்தித்துறை முனைப்பகுதியில் இருந்து மணல் சார்ந்த நெய்தல் கடலாக அழகாகவும் மிகவும் ஆபத்தானதாகவும் காட்சி தருகின்றது.

வருடத்திற்கு ஒரு தடவைதான் கடலுக்குத் தீர்த்தமாடச் செல்லும் பாதை பாவிக்கப்படும். போகும் வழியில் கடற்தாவரங்களான 'இராவணன் மீசை' போன்றவை கிடைக்கும். ஆழ்வார் தீர்த்தம் ஆடுவதற்கு முன்னர் கடலில் தீர்த்தம் ஆடுவதற்கு யாரையும் அனுமதிப்பதில்லை. ஆழ்வாரின் தீர்த்தமாடல் நிகழ்வு நிறைவு பெற்றதும் சிறுவர்கள், முதியவர்களென பலரும் வயது வித்தியாசம் இன்றி கடலில் நீச்சலடிப்பார்கள்.

இவ்வாறு இறைவன் ஒருவனே என்னும் கருத்தின் அடிநாதத்தை வெளிப்படுத்தும் வகையில் சிவனும், திருமாலும் ஒருவரே என்னும் உண்மையை வெளிப்படுத்தும் திருத்தலமாக இக்கோவில் விளங்கு கின்றது.

இவ் ஆலயத்தின் சிறப்புக்களையும், பெருமைகளையும் அறிந்த விஷ்ணு பக்தர்களும், சிவ பக்தர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டுமல்ல; யாழ்ப்பாணத்திற்கு வெளியில் இருந்தும்கூட வந்து தரிசித்துச் சென்ற வரலாறு உண்டு.

கால மாற்றத்தால் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் திருவிழாக்களின் சிறப்புகள் குறைந்தாலும் இவ் ஆலயத்தின் மகிமைக்கும், பெருமை களுக்கும் பக்தர்கள் மத்தியில் என்றும் குறைவிருந்ததில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம்

ஈழத்திருநாட்டின் வதனமென விளங்கும் யாழ்நகரின் மத்தியில் கம்பீரமாக விளங்குவது வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம். அத்தலத்தின் இனிய வாசனை அக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தையல்நாயகி யோடுறையும் வைத்தீஸ்வரப் பெருமானின் இனிய பெருங்கருணை. இப் பெருங்கருணையின் விளைவாகத் தமிழும் சைவமும் தழைத்தோங்க நிலைக்களனாக இக்கோவிலைச் சுற்றிக் குடியிருப்பவை நாவலர் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சைவ பரிபாலன சபை, சைவப்பிரகாச யந்திரசாலை, வைத்தீஸ்வர வித்தியாலயம், கடையிற் சுவாமி சமாதி கோவில், ஈழநாடு செய்தித்தாள் நிறுவனம் முதலிய பலவாகும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தமது முதற் பிரசங்கத்தை செய்ததும், தமது முதல் வித்தியாசாலையை ஸ்தாபித்ததும், கடையிற் சுவாமி அவர்கள் பலகாலம் நடமாடி பக்தர்களைச் சந்தித்ததும் சிவயோக சுவாமியின் திருவடி தரிசனம் பெற்ற பல அடியார்கள் சேர்ந்து தியானம் செய்வதும் இவ் வண்ணை நகரிலேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் நடுவே தாரகை நடுவண் தண்மதி போல் விளங்குவது தான் 'செட்டியார் சிவன் கோவில்' என்றும், 'பட்டணத்துச் சிவன்கோவில்' என்றும் அழைக்கப்படும் தையல்நாயகி உடனுறையும் வைத்தீஸ்வர சுவாமியின் பெருங்கோயிலாகும். இது ஈழநாட்டிலே உள்ள பிற்கால சிவாலயங்களுள்ளே சிறந்த ஒன்றாகும்.

## கோவிலின் வரலாறு

ஒல்லாந்தர் காலத்திலே தென் இந்தியாவில் பாடல் பெற்ற தலங்களில் சிறந்ததாக விளங்கும் திருவாரூரில் இருந்து கோபாலச் செட்டியார் என்னும் வணிகர் ஒருவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். கல்வி அறிவு ஒழுக்கம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய அவரை அக்காலத்தில் ஒல்லாந்த அரசிடத்தில் இரு மொழி வல்லுநராக (மொழிபெயர்ப்பாளராக) கடமையாற்றி வந்த கொச்சிணேசையர் என்னும் சீமான் தம்மோடு வேலைக்கு அமர்த்திக்கொண்டார். சில காலம் செல்ல செட்டியார் அவ் வேலையிலிருந்து விலகி வியாபாரம் செய்யத் தொடங்கினார். ஒல்லாந்த ஆட்சி இவருக்கு அனுசரணையாக இருந்ததால் அரச குத்தகை களையெல்லாம் ஏலம் எடுத்து தனது வளத்தைப் பெருக்கிக்கொண்டார்.

அக்காலத்தில் தமிழ்நாட்டில் உள்ளதுபோல ஈழநாட்டிலொரு கோவிலில்லாத பெருங்குறை செட்டியாரை வாட்டியது. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் சிவபெருமான் சாந்நித்தியமாய் எழுந்தருளித் தம்மை மெய்யன்போடு வணங்கும் அடியார்களுக்குத் திருவருள் பாலிக்க ஒரு கோவில் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் திருவருள் கூடிநிற்க, ஒல்லாந்தர் ஆட்சியும் இலங்கையில் ஊசலாடத்தொடங்கிய நேரமது. (போத்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் சைவக்கோவில்கள் இடிக்கப்பட்டு வந்தன)

1787ம் ஆண்டிலே தம் ஆசையை நிறைவேற்ற கூழங்கைத் தம்பிரான் நல்லோரையில் அதற்கான அடிக்கல்லை நாட்டினார். செட்டி யாரின் பிறப்பிடமாகிய திருவாரூருக்கண்மையில் புள்ளிருக்கு வேளூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் மூவர் பாடிய தலம் ஒன்றுள்ளது. அது வைத்தீஸ்வரன் கோவில் என முற்காலத்தில் வழங்கப்படுகின்றது. தம் குல முன்னோர் அதன்பால் பெரிதும் பக்தி கொண்டிருந்தனர் என்பதை உணர்ந்த செட்டியார் தாம் ஈழத்தில் அமைக்கவிருக்கும் கோவில் புள்ளிருக்கு வேளூர்க் கோவிலைப் போல அமையவேண்டுமென விரும்பினார். அங்ஙனம் நிர்மாணிக்கப்பட்ட கோவில் 1790 சாதாரண ஆண்டில் சித்திரைத் திங்கள் வளர்பிறை புனர்பூசத் திருநாளிலே திருப்பெரும் குடமுழுக்கு பெற்றது.

## கோவிலின் அமைப்பு

கூழங்கைத்தம்பிரான் முதலாய சான்றோர்கள் உடனிருந்து துணை யாற்றக் கட்டப்பட்டதால் இக்கோயில் ஆகம முறைப்படி அமையும் பெரும் சிறப்பைக் கொண்டிருக்கின்றது. எல்லாம் வல்லவரும் ஆன்ம கோடிகளின் இன்னல்களையெல்லாம் தீர்த்துவைக்கும் மகா வைத்திய நாதனுமாகிய வைத்தீஸ்வரப் பெருமானுக்கு கிழக்கு நோக்கிய கருவறையும், சிவசக்தியும், உலக மாதாவுமாகிய தையல் நாயகித் தாய்க்கு தெற்கு நோக்கிய கருவறையும், அழகிய சிற்பங்கள் நிறைந்த விமானங்களோடு விளங்குகின்றன.

இறைவனின் கருவறைகளிலே புறச்சுவர்களில் உள்ள கோட்ட மாடங்களில் தெற்கில் தென்முகக் கடவுளும், மேற்கில் இலிங்கோற்பவரும், வடக்கில் நான்முகக் கடவுளும் எழுந்தருளியுள்ளனர். கல்லாலின்புடை வலக்கையில் சின் முத்திரையோடு சனகன் முதலாய நால்வர் படைசூழ ஞானமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் தென்முகக் கடவுளுக்கு நான்கு தூண்கள் கொண்ட சிறு மண்டபமுண்டு.

மேற்கில் கோட்டமாடத்திலுள்ள இலிங்கோற்பவ மூர்த்தி சிற்ப நுட்பங்கள் பல செறிந்து விளங்குகின்றது. சிவராத்தி தினத்திலே அதற்கு சந்தனாங்கி சாத்தியிருக்கும்போது மேலே பறந்து செல்லும் அன்னப் புள்ளையும் கீழே குடைந்து செல்லும் பன்றியையும், இருவராலுங் காணமுடியாது. சோதிலிங்கமாக நிற்கும் சிவனையும் பக்தர்கள் கண்குளிரக் கண்டு களிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் இறைவியின் கருவறைகளோடு சேர்ந்துள்ள அர்த்த மண்டபங்களுக்கு முன் மகாமண்டபமும் அதையடுத்துக் கிழக்கே நிருத்த மண்டபமும் கொடிமண்டபமும் உள்ளன.

கிழக்கு நோக்கி சந்நிதியோடு அமைந்த இவ்வாலயம் மூன்று பிராகாரங்களைக் கொண்டிருக்கின்றது. இரண்டாம் பிரகாரத்தின் வடகிழக்குக் கோயிலடியில் அமைந்துள்ள வசந்த மண்டபத்தில் திருவிழாக் காலங்களில் இறைவன் இறைவியர் திருக்குமாரர்களோடும், சண்டேஸ் வரரோடும் எழுந்தருளி தம்மடியார்களுக்குக் காட்சி கொடுக்குமிடமாய் அமைந்துள்ளது.

புள்ளிருக்கு வேளூரிற் போலவே இங்கும் அம்மாள் சந்நிதியில் இரண்டாம் பிரகாரத்தின் வெளியே சித்தாமிர்த புட்கரணி என்னும் புண்ணிய தீர்த்தம் உண்டு. இக்கலியுகத்திலே சித்தர்கள் இறைவர் திருமுடியில் தேவாமிர்தத்தால் திருமுழுக்குச் செய்தபோது அவ்வமிர்தம் இதிற் கலந்தமையால் இது இப்பெயர் பெற்றது. இதனையடுத்து பெரிய திருநந்தவனம் உள்ளது. அது புட்பவிதியிற் கூறியபடி கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ ஆகிய நால்வகை மலர்களும் பச்சிலைகளும் பெறக்கூடியதாய் அமைந்துள்ளது.

கிழக்குச் சந்நிதியில் மூன்றாம் பிரகாரமாகிய தெருவீதியின் புறத்தே பதினாறுகால் மண்டபம் ஒன்று தமிழ்நாட்டுப் பாணியிலே கட்டப்பட்டு கோவிலுக்கும் நகரத்துக்கும் அழகு தந்துகொண்டிருக்கின்றது. (கோவிலுக்கும் மண்டபத்திற்கும் நடுவே காங்கேசன்துறை வீதி உள்ளது) இம்மண்டபத்திலேயே பூங்காவனத் திருவிழாவன்று பார்வதியம்மையார் பரமேஸ்வரனை நோக்கித் தவம் செய்ய எழுந்தருளுவார்.

இம்மண்டபத்திலிருந்து கிழக்கே சுமார் 150 யார் தூரத்தில் இத் திருக்கோவிலை நிர்மாணஞ் செய்ய கலைநாடாகிய காவிரி நாட்டிலிருந்து வந்திருந்த கைதேர்ந்த கலைவல்லுநராகிய விசுவகன்மா குலத்தினர் திருக்கோவிலின் திருப்பணிகளைச் செய்யும் காலத்தில் தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடுவதற்கெனத் தம் குலதெய்வமாகிய மகாகாளிக்கு அமைத்த திருக் கோவில் உள்ளது. இவ்விடம் கன்னாதிட்டி என அழைக்கப்படுகின்றது.

## சிறப்போடு பூஜைகள்

தினந்தோறும் திருவனந்தல் பூஜை காலை 5 மணிக்கும், கால சந்தி பூஜை காலை 6 மணிக்கும், உச்சிக்கால பூஜை நண்பகல் 12 மணிக்கும், சாயுங்காலப் பூஜை பிற்பகல் 5 மணிக்கும், இரண்டாங்காலப் பூஜை மாலை 6 மணிக்கும் அர்த்தசாமமப் பூஜை இரவு 7 மணிக்குமென கால பூஜைகள் ஒழுங்காக பக்தி சிரத்தையோடு நடைபெற்று வருகின்றன. வெள்ளிக்கிழமைகளில் இராஜஇராஜேஸ்வரி அம்மாள் இரண்டாங்காலப் பூஜையின் பின்னர் சிறப்புப் பூஜையினையேற்று அழகிய மஞ்சத்தில் அமர்ந்து உலாவீதி வரும்போது பக்தர்கள் சிவநாமம், தேவி ஸ்தோத்திர மோதி வணங்குவார்கள்.

பிரதோஷ தினங்களில் மாலை இடபதேவருக்கு விஷேட அபிசேபமாகி வெள்ளியிலான அங்கி சாத்தப்பட்டு வழிபாடு நடைபெறும். பின்னர் பிரதோஷ நாயகர் வெள்ளியிலான இடப வாகனத்திலிருந்து திருவீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். இக்கோயிலிலே ஒவ்வோராண்டும் நிகழும் திருவிழாக்கள் பங்குனித் திங்களிலே உத்தாரத் திருநாளிலே நடைபெறும். தீர்த்தத் திருவிழாவோடு முடிவடையும் மகோற்சவமாகிய சிவன் திருவிழாவும், ஆடி மாதத்தில் பூரநட்சத்திரத்திலே நிகழும் தீர்த்த விழாவோடு முடிவடையும். இவ்வாலயத்தில் சிவனுக்கொரு தடவையும், அம்மனுக்கொரு தடவையுமாக வருடத்தில் இரண்டு தடவைகள் திருவிழா நடைபெறும்.

சிவன் திருவிழாவின் ஒன்பதாம் திருவிழாவிலன்று தமது வலப் பாகத்திலே கருணாகடாட்சியாகிய அம்பாளைக் கொண்ட கலியாணசுந்தர் நால்வர்க்குக் காட்சி கொடுக்கும் நிகழ்ச்சி பக்தர்களை பரவசப்படுத்தும்.

ஆடித்திங்களில் நிகழும் அம்மன் திருவிழாக்காலத்தைச் சிறப்பாக மங்கையர்கள் தம்முடைய உபாசனா காலமாகக் கொண்டு அம்பிகையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி தமது குறைகள் நீங்கக் கடுமையான நோன்புகளை மேற்கொள்வார்கள். இத்திருவிழாவின் ஏழாம் திருநாளிலே அம்பிகை நாக வாகனத்தில் அமர்ந்து சிவனுக்கு பூஜை பண்ணும் காட்சி மிக அருமையானதாகும். தீர்த்தோவற்சவத்திற்கு அடுத்தநாள் நடைபெறும் திருவூஞ்சற் திருவிழா தவறாது பார்த்து மகிழவேண்டியதொன்றாகும். அப்போது பாடப்படும் தையல்நாயகி திருவூஞ்சல் பக்திச்சுவை மிக்கதாகும்.

இக்கோவிலிலே புரட்டாதி மாதத்தில் நிகழும் நவராத்திரியில் இராஜஇராஜேஸ்வரி அம்பாள் கொலுவீற்றிருந்து அருள்பாலிக்கும் செவ்வியைப் பார்த்துக்கொண்டு பக்தர்கள் மணித்தியாலக் கணக்கில் அமர்ந்திருப்பார்கள்.

மார்கழி மாதத்திலே சாயங்கால பூஜையின் பின்னர் மணிவாசகரை எழுந்தருளச் செய்து நடேசர் சந்நிதியில் திருவாதவூர்ப்புராணம் படித்து பயன் சொல்லுதலும் அதிகாலையில் பக்தர்கள் கூடித் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களை மெய்யன்போடு பஜனை செய்வதும் திருவாதித்திரை திருநாளன்று அபிசேக தரிசனத்தின் பின்னர் சிவனுக்கும் உமையம்மைக்குமிடையே ஊடல் நிகழ்ந்தாகவும், அதனைத் தீர்த்துவைக்க ஆலாலசுந்தர் தூது செல்வதாகவுமான வைபவம் நிகழும் போது திருவூடல் பாடப்படுவதும் குறிப்பிடப்பட்ட சிறப்பு நிகழ்ச்சிகளாகும்.

## சமயப்பணி

ஈழநாட்டிலே தமிழையும் சைவத்தையும் பாதுகாத்து வளர்த்து வந்த பெருமை இவ்வைத்தீஸ்வரர் ஆலயத்திற்கு உண்டு. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தமது முதற் பிரசங்கத்தை இக்கோவிலின் வசந்த மண்டபத்திலேயே செய்தார். அதனைத் தொடர்ந்து பல பிரச்சாரக் கூட்டங்களையும் சொற்பொழிவுகளையும் இங்கேயே நடாத்திவைத்தார். நாவலர் பெருமானின் மருமகரும், மாணாக்கரும், யாழ்ப்பாண சைவ பரிபாலன சபையின் முதற் தலைவருமாகிய வித்துவசிரோமணி ந.ச.பொன்னம்பலப்பிள்ளையவர்கள் தம்முடைய கம்பராமாயண,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராண, கந்தபுராண விரிவுரைகளை நடாத்திப் புகழடைந்ததும் இந்த மண்டபத்திலேயே. இவ்விரிவுரைகளைக் கேட்பதற்கு தமிழ்நாட்டில் இருந்தும் அறிஞர்கள் இங்கு வந்ததாக வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

திருஞானசம்பந்தரின் அடிச்சுவட்டில் நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஸ்ரீ சங்கரசுப்பிரமணிய சச்சிதானந்த ராஜயோகிகள் இங்கே தம்மரிய கானமழையைச் சொரிந்து தமிழையும் சைவத்தையும் வளர்த்தார். இவர் களின் வழியிலே இக்காலத்திலும் சில சைவத் தொண்டர்கள் இப்பணியை தொடர்ந்து வருகின்றார்கள்.

## நிர்வாகம்

இத்திருக்கோவிலை ஆதியிற் தொடக்கம் வைத்திலிங்கச் செட்டியாரின் மரபில் தோன்றியவர்களே அருளாட்சி செய்து வந்துள்ளனர். இந்நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து கந்தப்பச் செட்டியார் பின்னர் அவரின் மகன் பொன்னுச்சாமிச் செட்டியார் தொடர்ந்து அவர் தம்பி வைத்தியலிங்கச் செட்டியார் அவர் மனைவி கண்ணம்மையாச்சி முதலாயினோர் கோவிலை நடாத்தி வந்தபின்னர் இப்பொழுதும் அவர்களின் வம்சாவழியினரும் கோவிலின் தலைமைப் பூசாரியும் இணைந்து நிர்வாகம் செய்வதாக அறிய முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம்

இந்து சமயத்தில் வழிபாட்டிற்குரிய தெய்வங்களின் எண்ணிக்கைக்குப் பஞ்சமே இல்லை என்று சொல்லலாம்! இதில் முருகனுக்கும், அம்மனுக்கும் மட்டும் வெவ்வேறு பெயர்களில் பல ஆலயங்கள் இருக்கின்றன!

காமாட்சி அம்மன், மீனாட்சி அம்மன், காளி அம்மன், கண்ணகி அமத்மன், சோலை அம்மன், வாகாளி அம்மன், பத்திரகாளி அம்மன், மாரி அம்மன், ராஜேஸ்வரி அம்மன், புக்கைதின்னி அம்மன், கருமாரி அம்மன், சிவகாமி அம்மன், முத்துமாரி அம்மன் - இப்படியாக ஊருக்கு ஊர் இன்னும் பல பெயர்களில் அம்மன் அவதாரம் எடுத்திருந்தாலும் மட்டுவிலில் வெறும் அம்மனாக பக்தர்களால் வழிபடப்பட்ட அம்மன் பன்றித்தலைச்சி அம்மனாக பெயர் பெற்றமைக்கு சுவாரசியமான வரலாற்றுப் பின்னணி இருக்கின்றது.

இவ் அம்மன் ஆலயம் 1750-ஆம் ஆண்டில் திருநாகர். கதிர்காமர் என்பவரால் முற்றிலும் வெள்ளை நிறமுடைய கற்களைக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டதாக ஆலயத்தின் மூலஸ்தானத்தின் பின்புறமாக பித்தளையால் பொறிக்கப்பட்ட கல்வெட்டு சாட்சியாக இருக்கின்றது.

இப்பொழுது ஆலயங்களிலெல்லாம் பூசை நேரங்களில் நாதஸ்வரம் நட்டுவ மேளம் மங்களகரமாக வாசிப்பது போல அன்றைய நாட்களில் எல்லாக் கோவில்களிலும் இந்த வாத்தியங்கள் வாசிக்கப்படுவதில்லை! ஆலய நிர்வாகத்தின் வசதிக்கேற்ப அவர்களால் ஏற்பாடு செய்யப்படும் வாத்தியங்கள் வாசிக்கப்படும்! அந்த வகையில் மட்டுவிலில் அமைந்திருந்த இந்த அம்மன் ஆலயத்தில் அந்த நாட்களில் பறை மேளம்தான் வாசிக்கப் பட்டது! (இன்றும்கூட கிராமப்புறங்களில் உள்ள சில அம்மன், வைரவர், அண்ணமார் போன்ற ஆலயங்களில் பொங்கல் பொங்கி படையல் வைக்கப் படும்போது பறைமேளம் வாசிப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.)

இந்த அம்மன் ஆலயத்தில் பூசை நேரங்களில் வழமையாக பறையடித்து வந்த புலைய இனத்தைச் சேர்ந்த அம்மனின் பக்தனொருவன் ஆலயத்தில் பறையடிப்பதைத் தவிர தனது குலத்தொழிலான மிருகங்களை வேட்டையாடி அவைகளுடைய இறைச்சியை விற்பனை செய்து வாழ்க்கையை நடத்துவதையும் வழமையாகக் கொண்டிருந்தான். அன்றைய நாட்களில் பல ஆலயங்களில் வேள்வி என்னும் பெயரில் ஆலயங்களிலேயே ஆடு, கோழி போன்றவற்றைப் பலி கொடுப்பது வழமையாக இருந்தாலும் மாடுகளைக் கொல்வதோ, அல்லது மாட்டிறைச்சியை உண்பதோ படு பாதகமான தெய்வ குற்றமாகக் கணிக்கப்பட்டது!

இப்படியான நேரத்தில்தான் வேட்டையாடச் சென்ற இந்தப் புலையன் எறிந்த கூர்மையான ஆயுதம் இலக்குத் தவறியோ அல்லது வேறு மிருகமென நினைத்து எறிந்தானோ தெரியவில்லை; அது பசு ஒன்றின்மீது பட்டு அந்தப் பசு அந்த இடத்திலேயே துடிதுடித்து இறந்துவிட்டது! பசுவை சிவனின் வாகனமாக மட்டுமல்லாது பசு அம்மனின் மறு அவதாரம் என எண்ணி வழிபடுபவர்கள் சைவ மக்கள். இதனை உணர்ந்த அந்தப் புலையன் தான் மகா பாதகமான செயலைச் செய்துவிட்டதாக எண்ணி அம்மன் சன்னிதானத்திற்குச் சென்று அழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பினான். பின்னர் அம்பாள் தனக்குத் துணையிருப்பாள் என மனதைத் தேற்றிக்கொண்டு அந்தப் பசுவை ஆலயத்தின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு வயலில் யாருக்கும் தெரியாமல் புதைத்துவிட்டான்.

தனது மாட்டைக் காணவில்லையென தேடி அலைந்த அந்த மாட்டின் சொந்தக்காரன் நடந்த சம்பவத்தை எப்படியோ அறிந்து ஊர்ப் பஞ்சாயத்திடம் நீதி கோரி நின்றான். பசுக்கொலை என்பது சாதாரணக் குற்றம் அல்ல! அந்தக் கொலையைச் செய்த புலையனுக்கு மரண தண்டனைகூடக் கிடைக்கலாம் என்பதனால் குற்றச்சாட்டிற்குப் பயந்த அந்த அம்மையின் பக்தனான புலையன் தான் தெரியாமல் செய்த குற்றத்திற்காக தன்னைத் தண்டிக்கப்போகின்றார்கள்! நீதான் எனக்கு அபயம் அளிக்கவேண்டுமென அம்பாளிடம் மன்றாடியபடியே இருந்தான்.

பஞ்சாயத்து விசாரணைக்கு முதல்நாள் இரவு அந்தப் பக்தனின் கனவினில் முதிய விதவைக்கோலத்தில் காட்சியளித்த அம்பாள் 'பக்தா நீ எதற்கும் கவலைப்படாதே! நாளைய தினம் நடக்கும் விசாரணையில் நீயோ 'நான் கொன்றது பசுவல்ல! பன்றிதான். அதனுடைய எச்சங்களைத் தான் அங்கு புதைத்தேன்" என்று சொல்' எனக்கூறிவிட்டு மறைந்து விட்டாள்!

மறுநாள் புலையனும் பஞ்சாயத்தில் அப்படியே சொல்ல, அவன் பொய் சொல்வதாக பசுவின் சொந்தக்காரன் வாதாடினான். உண்மையை அறிவதற்காக பசுச் சொந்தக்காரனின் வேண்டுநோளுக்கு இணங்க பசு புதைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட அந்த இடம் தோண்டப்பட்டது. என்ன அதிசயம்! பசு புதைக்கப்பட்ட அந்த இடத்தில் பன்றித்தலைதான் காணப் பட்டது! அதைக்கண்ட பசுவின் சொந்தக்காரன் ஆச்சரியத்துடன் நிற்க, பசுவைப் புதைத்த அந்தப் புலையன் அம்பாளின் மகிமையை எண்ணி மெய்சிலிர்த்து கண்ணீர் மல்கி வாய் குழறியபடி மெதுவாக 'பன்றித்தலை காட்டிய அம்பாள்... பன்றிதலைச்சி அம்பாள்' எனச் சொல்லிக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலையன்தான் பசுவைக் கொன்றான் என பசுவின் சொந்தக் காரனுக்கு மட்டுமல்ல; ஊருக்கும் பஞ்சாயத்திற்கும் நம்பிக்கையாகத் தெரிந்திருந்தாலும் பசு புதைக்கப்பட்ட இடத்தில் பன்றித்தலை கிடைத்தது அம்பாளின் அருள்தான் என அனைவரும் நம்பியதால் அந்தப் புலையனின் வாயில் இருந்து வந்த வார்த்தைகளே எல்லோரது வாய்களும் முணுமுணுக்க, அன்று முதல் அவ் ஆலயம் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் என்றே அனைவராலும் அழைக்கப்படலாயிற்று.

வெறும் அம்மன் ஆலயமாக இருந்த இவ் ஆலயம் பன்றித்தலைச்சி அம்மன் என பெயர் பெற்றது எந்த ஆண்டு என எந்த வரலாற்றுக் குறிப்புகளும் இல்லை!

ஆனாலும் 1946ம் ஆண்டிலேயே முதன் முதலாக இவ் ஆலயத்திற்கு முறைப்படி கும்பாபிசேகம் செய்யப்பட்டதுடன் அதையடுத்து வந்த மார்கழித் திருவெம்பாவையில் கொடியேற்றத்துடன் திருவிழாவும் முதன்முதலாக இடம்பெற்றதாகவும். 1952ம் ஆண்டில் இருந்தே அம்பாளுக்கு ஆறு கால நித்திய பூசை நடைபெற ஆரம்பித்ததாகவே வரலாற்றுக் குறிப்புகள் சொல்லுகின்றன.

இவ் ஆலயத்தின் திருவிழா மார்கழித் திருவெம்பாவையொட்டி நடைபெற்றாலும் பங்குனி மாதத்தில் வருகின்ற அனைத்துத் திங்கட் கிழமைகளும் திருவிழா நாட்களைவிட மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன! பங்குனித் திங்கள்களிலே யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற சைவ மக்கள் ஆலயத்திற்குச் சென்று ஆலயத்திற்கு அருகில் உள்ள கேணியில் தீர்த்தமாடி பின் பொங்கலிட்டு அம்பாளுக்கு படையல் வைத்து தாங்களே நிவேதித்து வணங்குவார்கள்!

ஏராளமான மக்கள் பொங்கல் வைக்க வருவதனால் ஆலய முன்றலில் இடம் போதாமையாக இருக்கும். அதனால் ஆலயத்தைச் சுற்றியுள்ள இடங்களில் எல்லாம் பக்தர்கள் பொங்கலிடும் காட்சி பங்குனித் திங்கள்களில் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். (சில சமயங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அதிகமாக வருகை தந்தால் அருகில் உள்ள வயல்களில்கூட பொங்கல் நடைபெறுவதைக் காணலாம்.)

அனேகமான ஆலயங்களில் அந்தந்த ஊர் மக்கள் ஒன்றுகூடி பொங்கல் வைப்பதே வழமையாக இருக்கும்! ஆனால் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் மட்டும்தான் சகல ஊர்களில் இருந்தும் பக்தர்கள் வந்து ஒன்றுகூடி பொங்கல் வைப்பது இவ் ஆலயத்திற்குரிய மிகப்பெரிய சிறப்பாகும்.

தனது பக்தனுக்கு முதுமையான கிழவியின் கோலத்தில் கனவினில் காட்சி கொடுத்த காரணத்தால் இவ் ஆலய அம்மனைப்பற்றி இவ் ஊர் மக்கள் பேசும்போது கிழவி எனக் குறிப்பிட்டுப் பேசுகின்ற வழமை இன்றும் மட்டுவிலில் வாழ்கின்ற முதியவர்களிடம் காணப்படுகின்றது.

பொங்கற் தலமாகவும், தீர்த்தச் சிறப்பும், மூர்த்திப் பெருமையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பெருமை இவ் ஆலயத்திற்கு உண்டு என்பதனால் ஊர் கடந்து யாழ் மாவட்டத்தில் உள்ள சிறப்பான பெரிய ஆலயங்களின் வரிசையில் இவ் ஆலயத்தின் பெயரும் இடம்பெறுகின்றது.

சில ஊர்களின் பெயர்கள் அங்குள்ள ஆலயங்களினால் புகழடைந் திருப்பதைப் போலவே பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தினால் புகழடைந்த மட்டுவில் சாவகச்சேரியில் இருந்து புத்தூர் வீதிவழியாக சுமார் மூன்று மைல்கள் தொலைவில் இருக்கின்றது.

உ ஃ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# கீரிமலை (நகுலேஸ்வரம்) சிவன் கோவில்

கீரிமலை என்றதும் எம்மவர்களில் அனேகமானவர்களுக்கு கீரிமலைக் கேணியிலும், கடலிலும் குளித்துக் கும்மாளமடித்த நாட்களே நினைவிற்கு வரும். புனிதம் மிகுந்த நகுலேஸ்வரர் குடியிருக்கும் இப் பகுதி நல்லூர் ஆலய சுற்றாடலைப் போல புனிதமாக பராமரிக்கப் படாமையும் இதற்குக் காரணமாக அமைகின்றது. இங்கு மகிழ்ச்சியாக குளிப்பதற்காக வரும் இளைஞர்கள் மது, மாமிசம் போன்றவற்றையும் கொண்டுவந்து தாரளமாக உண்டு மகிழ்வதும் உண்டு. ஆனால் இங்குள்ள நகுலேஸ்வரர் ஆலயத்தின் சிறப்புக்கள் பழமையான சைவ மக்களுக்கு மட்டுமே தெரிந்தவையாகும் இன்றைய தலைமுறையினருக்காக அதன் பெருமைகளைக் கீழே தருகின்றோம்.

## கீரிமலைத் தீர்த்தத்தின் சிறப்பும் நகுலேஸ்வரம் ஆலயத்தின் தொன்மையும்

கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை ஆகிய மூன்று ஊர்களும் உள்ளடங்கிய பிரதேசங்களை 'கோயிற் கடவை' என அழைக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூமி என்னும் தவயோகி திருமூல நாயனாரால் அழைக்கப்பட்ட ஈழமணித் திருநாட்டின் வடக்கே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் ஒருங்கே அமைக்கப்பெற்ற சிறப்புமிக்க திருத்தலமாக நகுலேஸ்வரம் திகழ்கின்றது.

புராதன காலத்தில் இவ்வாலயம் திருதம்பலேஸ்வரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. நகுலேஸ்வரம் அமைந்துள்ள கீரிமலைத் தீர்த்தம், சாகர சங்கம தீர்த்தம், கண்டகி தீர்த்தம், கங்கா சமுத்திர சங்கமம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. நகுலகிரிக்கு மேற்குப் பக்கத்திலே தெற்கிலூறுகின்ற சுத்தமான நீரும், வடக்கிலுள்ள உப்பு நீரும் கலந்து கிழக்கு நோக்கிய சிவ ரூபமும், சக்தி ரூபமும் ஆக இருக்கின்ற இருப்பினாலே கங்கா சமுத்திர சங்கமம் என்றும், கண்டகி தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகின்றது.

கீரிமலையை நகுலகிரி என்றும் கூறுவர். நகுலமுனிவர் அங்கு தவம் செய்து தமது கீரி முகம் மாறப் பெற்றமையினால் கீரிமலைக்கு நகுலமலை என்ற பெயரும், இறைவனுக்கு நகுலேஸ்வரர் என்ற நாமமும், இறைவிக்கு நகுலாம்பிகை என்ற நாமமும் ஏற்படலாயிற்று. யாழ்ப்பாணக் குடாநாட்டில் எழுச்சி பெற்ற சிவாலயங்களில் கீரிமலைச் சிவன் கோவில் மிகவும் தொன்மை வாய்ந்த ஆலயமாகும்.

கீரிமலைக் கடற்கரைப் பிரதேசத்தில் மற்றும் வேளாண்மை போன்ற தொழில்களும் வர்த்தகமும் ஆரம்பமாகிய காலம் முதலாகவே நகுலேஸ்வர ஆலயம் சிறப்பிடம் பெற்று வந்துள்ளது என்ற குறிப்பினை 'தக்ஷணே கைலாச புராணம்' என்னும் நூலில் காணமுடிகின்றது.

## வரலாறு

சோழ இளவரசியாகிய மாருதப்புரவீகவல்லி குதிரை முகத்துடனும், குன்மவலி நோயுடனும் இருந்து அவஸ்தைப்பட்டாள். சன்யாசி ஒருவரால் வழிப்படுத்தப்பட்ட மாருதப்புரவீகவல்லி கீரிமலைச் சாரலில் வந்திறங்கி நகுல முனிவரிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கீரிமலைத் தலத்தின் விஷேசத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும், தீர்த்தத்தின் மகிமையையும் முனிவர் வாயிலாக அறிந்து கொண்டாள். கீரிமலைப் புனித தீர்த்தத்தில் நீராடி சிவாலய தரிசனமும் செய்து வந்த மாருதப்புரவீகவல்லியின் குன்ம வலியும் தீர்ந்து குதிரை முகமும் மாறியது.

பின்பு மாருதப்புரவீகவல்லி எழில்மிகு இளமை வடிவத்தை மீண்டும் பெற்றுக் கொண்டாள். மகளின் குதிரை முகம் மாறப் பெற்றமையினால் மகிழ்ச்சி அடைந்த சோழ அரசனால் கட்டப்பட்டதே மாவிட்புரம் கந்தசாமி கோவில் ஆலயமாகும். மாவிட்புரத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட முருகப்பெருமானின் விக்கிரகங்கள் வந்து இறங்கிய இடத்திற்கு காங்கேயன்துறை என்ற பெயர் ஏற்பட்டது.

இலங்கையை ஆட்சி செய்த முதல் சிங்கள அரசனாகிய விஜயன் இந்து சமயத்தவன் என்றே வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன! இவன் தனது நாட்டையும், ஆட்சியையும் பாதுகாப்பதற்காக இலங்கையின் நான்கு எல்லைகளிலும் நான்கு ஈஸ்வரங்களைக் கட்டுவித்தான் என்றும் இவனால் வடக்கே கீரிமலையில் கட்டப்பட்ட ஆலயம்தான் திருத்தம்பலேஸ்வரம் என்றும் யாழ்ப்பாண வைபவ மாலை என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கீரிமலைக்கு காந்தருவநகர், வீணாகானபுரம் என்ற பெயர்களும் வழங்கப்பட்டிருந்ததாக யாழ்ப்பாண வைபவ கௌமுகி என்ற நூலில் கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நகுலேஸ்வரம் ஆலயத்தின் வரலாறு பற்றி ஆலயத்தின் பிரதம குரு அவர்கள் அவருடைய பவளவிழா மலருக்கு வழங்கிய செவ்வியில்...

நகுலேஸ்வரத்தின் மிக ஆதியான முதற் கோயில் கடலில் அமிழ்ந்துவிட்டது! இரண்டாவது கோயில் போர்ததுக்கேயரால் தரைமட்டமாக்கப்பட்டது! மூன்றாவது கோவில் ஈழப்போரில் சிதைவடைந்தது இதுவே புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்கோயில் கடற்கரையில் உள்ள மலையின் மீதிருந்தது. கடற்கோள் ஒன்று ஏற்பட்டபோது அக்கோயில் கடலில் அமிழ்ந்துவிட்டது. அதன் கரையில் எஞ்சியிருந்த மலையின்மேல் பிற்காலத்தில் வைத்து வணங்கப்பட்ட சிவலிங்கம் இப்போதும் இருக்கின்றது. இப்போதைய கேணிக்குப் பக்கத்திலேயே சடையம்மா மடப்பக்கத்தில் அச்சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ளது. அதன் அருகே நன்னீர்ச் சுனை ஒன்றும் இருக்கின்றது.

இரண்டாவது கோவில் கி.பி 1621ம் ஆண்டு அளவில் போர்த்துக் கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது சைவாலயங்கள் அனைத்தையும் தரைமட்டமாக அழித்தவேளை நகுலேஷ்வரர் ஆலயமும் அழிந்தது. அதன் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி 1878ம் ஆண்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் வழிகாட்டலால் எம்மவர்கள் அவ்வாலயத்தை மீண்டும் கட்டி எழுப்பினார்கள்.

மூன்றாவது கோயில் 1990ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் திகதி கோதார கௌரி விரத விழாவின்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கௌரிநூல் பெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் கோவிலின்மேல் பல விமானக் குண்டுகள் வீசப்பட்டதனால் கோயில் அழிவிற்குள்ளானது.

யாழ்ப்பாணத்திலே மாவிட்புரத்திற்கு வடமேற்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ள கீரிமலையில் ஆதியில் ஒரு பெரிய சிவன் கோயில் இருந்தது. அது போத்துக்கிசரால் இடிக்கப்பட்டது. கீரிமலையின் அடியில் இன்றும் கந்தசலம் ஊற்றெடுத்து அது கடலினில் கலக்கப்படுவதாக சொல்லப்படுகின்றது. அந்த சங்கமத்தில் கிடைக்கின்ற நீரே புண்ணிய தீர்த்தமாகும். யாழ்ப்பாணம் எங்கும் வாழ்கின்ற சைவ சமய மக்கள் விசேஷ தினங்களில் அங்கு சென்று தீர்த்தமாடுகின்றார்கள். அனேகமான மக்கள் அந்தியேஸ்டி, மற்றும் ஆடி அமாவாசை போன்ற சிரார்த்த தினங்களில் கிரிகைகளை அங்கு சென்று செய்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட நகுலேசர் ஆலயம்...

போர்த்துக்கீசரால் இடிக்கப்பட்ட நகுலேசர் ஆலயம் மூன்று பிரகாரங்களும் ஐந்து கோபுரங்களும் உடைய பெரிய ஆலயமாக இருந்தது. கி.பி 1621ல் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் கீரிமலை நகுலேச்சரம ஆலயம், நல்லூர் கந்தசாமி கோவில், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் முதலிய ஆலயங்களை இடித்தழித்தனர். பரராசசிங்க முதலி இறந்த பின்னர் பறங்கிக்காரர் தாங்கள் இடிக்காமல் விட்டிருந்த மீதமுள்ள ஆலயங்களையும் இடிப்பித்தார்கள்! அப்பொழுது பரசுபாணி ஐயரென்னும் பிராமணர் கீரிமலைச் சாரலிலுள்ள ஆலயங்களின் விக்கிரகங்களைக் கிணறுகளில் போட்டு மூடி வைத்ததாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது.

## திருத்தி அமைக்கப்பட்ட நகுலேஸ்வரர் ஆலயத்தின் வளர்ச்சி..

சிவஸ்ரீ கா.தியாகராஜக் குருக்கள் அவர்களால் 1882ம் ஆண்டு சித்திரபானு வருடம் ஐப்பசி மாதம் அச்சிட்டு வெளியிட்ட பிரசுரத்தில் கீரிமலைச் சிவன் கோயிலின் புனருத்தாரணம் பற்றி நாவலர் பெருமான் மேற்கொண்ட முயற்சிகளை விவரித்துள்ளார். அதன் பிற்பாடு திருப்பணி வேலைகள் நிறைவேறி 1895ம் ஆண்டு மன்மத வருடம் ஆனி மாதம் மகா கும்பாபிஷேகம் நிறைவேறியது.

1918ம் ஆண்டு கோயிலில் தற்செயலாகத் தீப்பற்றியது! இதனைத் தொடர்ந்து பல்வேறு காலங்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன. 1953ம் ஆண்டு இந்தியாவில் இருந்து வரவழைக்கப் பட்ட சிவாகம விற்பனர்களாகிய சிவாச்சாரியார்கள் கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்தினார்கள். 1955ம் ஆண்டுமுதல் வருடாந்தர மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது. சிவராத்திரி தினத்தையொட்டிய மாசி மகோற்சவமும் பதினைந்து நாட்களுக்கு நடைபெற்று வந்தது. இதுபோல அம்மனுக்குரிய மகோற்சவமும் பங்குனி மாதத்தில் தொடங்கி சித்திரை வருடப்பிறப்பன்று தேர்த் திருவிழாவும் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாகம சிற்ப சாஸ்த்திர விதிமுறைக்கமைய ஆலயத்தின் சகல அம்சங்களும் அமைக்கப்பட்டன. இச்சிவாலயம் கர்ப்பகிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், கோபுரவாயில், பரிவார தெய்வங்களின் கோவில்கள், திருச்சுற்று ஆகிய அமைப்புக்களுடன் சிறப்புற நிர்மாணிக்கப்பட்டது. கோயிலின் அடித்தளத் தூண்கள் அனைத்தும் வெள்ளைக் கற்களாலேயே அமைக்கப்பட்டன. தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், ஆகிய விக்கிரகங்கள் சிறப்பாக அமைக்கப் பெற்றுள்ளன. விநாயகர், ஷண்முகர், சோமஸ்கந்தர், மகாவிஷ்ணு, மகாலட்சுமி, பஞ்ச லிங்கங்கள், ஆகிய பரிவார தெய்வங்களுக்கு சிறு சிறு கோயில்கள் உள்ளன. நிருத்த மண்டபத்தில் நடராஜருக்கு கோயில் உள்ளது. சிவனின் திருவிளையாடல்கள் அனைத்தும் கோயில் சுவர்களில் அழகான சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன.

## உள்நாட்டு யுத்தத்தினால் ஆலயத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்கள்...

ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் விமானத்தில் இருந்து குண்டுகள் வீசப்பட்டதால் மூலஸ்தானம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் 1990ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ஆம் திகதி கேதார கௌரி விரத விழாவின்போது; யாவும் பெரும் அழிவிற்குள்ளாகியது. அதன் பின் எட்டு வருட இடைவெளிக்குப் பின்னர் 1998ஆம் ஆண்டு மகாசிவராத்திரி தினத்தன்று இங்கு மீண்டும் வழிபாடுகள் இடம்பெற்றன. இச்சிவராத்திரி வழிபாட்டில் நாலாயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டதாக அன்றைய காலகட்டப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதுபோல அதேயாண்டில் நடைபெற்ற ஆடி அமாவாசை தினத்தன்றும் பத்தாயிரத்திற்கும் அதிகமான பக்த கோடிகள் கலந்து கொண்டதாகச் சொல்லப்படுகின்றது. இவையெல்லாம் இவ்விசேஷ தினங்களுக்காக பாதுகாப்புப் படையினரின் விசேஷ அனுமதியுடனேயே நடைபெற்றன.

அவசரகாலநிலை இருந்த காலத்தில் இங்கு இருந்த பல விக்கிர கங்கள் உடைக்கப்பட்டும் களவாடப்பட்டும் விட்டன. பூசைப்பொருட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபவிளக்குகள் ஆகிய எவையுமே இல்லாதிருந்தன. சில விக்கிரகங்கள் பற்றைக்குள் வீசப்பட்ட நிலையில் காணப்பட்டன. மூல மூர்த்தியைத் தவிர வேறு விக்கிரகங்கள் எதுவுமே இருக்கவில்லை. நீண்ட காலத்தின் பின்னர் அரசாங்கத்தின் உதவியுடனும், அடியார்களின் உதவியுடனும் ஆலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

நகுலேஸ்வரப் பெருமானின் பெருஞ்சாந்தி விழா (மகா கும்பாபிஷேகம்) சிறப்பாக நடைபெற்று நமது மக்கள் அனைவரும் சாந்தியும் சமாதானமுமாக வாழ நாம் அனைவரும் இறையருளைப் பிரார்த்திப்போமாக.

## நகுலேஸ்வரர் திருப்பதிகம்

*சீர்பெறும் தென்பொதிய மலையிருந் தருள்செய்யும்*
*தெய்வமுனி தந்த தமிழும்*
*தேவாதி தேவனொரு வன்னவன் சிவனெனச்*
*செப்பிடும் சைவ நெறியும்*
*ஊர்தோறும் பண்டையி லொன்றாகி வளர்தலி*
*னோங்குயாழ்ப் பாணத்தேய*
*துத்தரத் தோமென்ன ஒலிசெயுங் கடல்மருங்*
*குற்றநகு லாசத்தில்*
*ஆர்வமோ டாடுவார் அகவுடற் பிணியெல்லாம்*
*அகல்விக்கு மருவியின்பால்*
*அடிதொழும் அன்பருக் கவரவர் நிலையறிந்*
*தருளவுமை அம்மையோடும்*
*சேர்புகோ யில்கொண்ட தெய்வமே எமதுவினை*
*தரநீ யருளவேண்டும்*
*திங்களணி செஞ்சடில மங்கையுமை பங்கிலுறை*
*தேவயகு லேசுவரனே*

இலக்கண வித்தகர்
பண்டிதர் இ.நவசிவாயதேசிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகுலேஸ்வரம் பற்றி வெளிவந்த நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாண வைபவமாலை | - | மயில்வாகனப் புலவர் |
| 2. | நகுலாசல புராணம் | - | அப்பாசாமி ஐயர் |
| 3. | நகுலேஸ்வர மான்மியம் | - | நீர்வேலிப் பண்டிதர்... |
| | (சமஸ்கிருதம்) | - | ச.சிவப்பிரகாசம் |
| | தமிழில் | - | குமாரசாமிப் புலவர் |
| 4. | நகுலமலைக் குறிஞ்சி | - | அராலி விசுவநாத சிவாச்சாரியார் |
| 5. | நகுலேசர் ஊஞ்சல் | - | குமாரசாமிப் புலவர் |
| 6. | நகுலேசர் சதகம் | - | பண்டிதர் நமசிவாயம் |
| 7. | நகுலேஸ்வரர் வினோத | - | |
| | - விசித்திர கவிங்கொத்து | - | மயில்வாகனப் புலவர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

## இலங்கையில் புகழ்பெற்ற ஐந்து சிவத்தலங்களில் ஒன்றான

# சிலாபம் முன்னேஸ்வரம்

இலங்கையின் புகழ் பெற்ற தொன்மை வாய்ந்த ஐந்து சிவத் தலங்களில் ஒன்றான முன்னேஸ்வரம் சிவாலயம் வடமேற்கு மாகாணத்தைச் சேர்ந்த புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் என்னும் நகரில் நீர்வளம் நிலவளத்துடன் இயற்கை எழில்மிக்கதொரு இடத்தில் அமைந்துள்ளது.

இதற்கு அருகே மாயவன் ஆறு எனப்படும் தெதுறு ஓயா ஆறு பாய்கின்றது. இலங்கையிலுள்ள ஐந்து புராதன சிவத்தலங்கள் கடற்கரையோரமாக அதனையடுத்த பிரதேசத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னேஸ்வரத்திலும் இதற்கு வடக்கே சில மைல்கள் தொலைவில் உள்ள பொம்பரிப்பு, தம்பபண்ணி முதலிய இடங்களிலும் தமிழர்கள் வாழ்ந்ததாக பொம்பரிப்பு முதலிய இடங்களிலே நடைபெற்ற அகழ்வாராய்ச்சி சான்றில் கூறப்பட்டிருக்கின்றது. இலங்கையில் பல்வேறு சமயத்தினரும் போற்றும் புனித ஸ்தலமான கதிர்காமம் போல இத்தலமும் பிரபல்யமாகத் திகழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிகாச, புராண மரபுகளின்படி வியாசர், இராமர் போன்றோர் வழிபட்ட தலமாக இது போற்றப்படுகின்றது. இங்கு முனிவர்கள் சிவபிரானை வழிபட்டதால் இது முனீஸ்வரம் என அழைக்கப்பட்டதாகவும் இங்கு வழிபடுவோருக்கு விரும்பியவற்றைத் தருவதெனவும், இறைவனை நினைப்பவர்களின் பாவங்களை அழித்து அறிவன், முக்தி ஆகியன வற்றைத் தருபவரெனவும் கூறப்படுகின்றது.

இத்தலமானது முன் - காலம் தொட்டு நிலவும் ஈஸ்வரன் ஆலயம் என்பதனால் முன்னேஸ்வரம் என அழைக்கப்படுகின்றது. அத்துடன் அதன் தொன்மைக்கு ஏற்ப இறைவன் பெயர் முன்னைநாதசுவாமி எனவும் அழைக்கப்படுகின்றது. இங்குள்ள அம்மாள் தலைசிறந்த அழகியாக வடிவாம்பிகை என அழைக்கப்படுகின்றாள். 51 சக்திபீடங்களில் இது மிகச்சிறந்த ஒன்றாகப் போற்றப்படுகின்றது. எனினும் வடிவாம்பிக ஸமேத முன்னைநாதசுவாமி என மூலமூர்த்தி போற்றப்படுகின்றார்.

திருக்கோணேஸ்வர ஆலயத்திற்கு திருப்பணிகள் செய்ததனைப் போல் இவ் ஆலயத்திற்கும் குளக்கோட்ட மன்னன் திருப்பணிகளுக்காக ஏராளமான பொருளுதவிகளைச் செய்திருக்கின்றான். பிற்பட்டகால முன்னேஸ்வர மான்மியத்திலும் சில ஏட்டுப்பிரதிகளிலும் இவன் செய்த திருப்பணிகள் விபரிக்கப்பட்டிருக்கின்றது. இவ் அரசனுடைய கட்டளைப்படி முன்னேஸ்வரத்தினைச் சேர்ந்த நிலங்கள் 64 கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் அவ்விடங்களில் வாழும் தொழிலாளர்களின் தொழில் களுக்கேற்ப பெயரிடப்பட்டன! எடுத்துக்காட்டாக அந்தணர் வாழ்ந்த இடம் 'பிராமணயாகம்' என்றழைக்கப்பட்டது. கோவிலுக்குத் தேவையான தேர், சகடை, வாகனம், கதவு முதலியன் செய்வோர் வாழுமிடம் 'வங்காதனி' கிராமம் என்றழைக்கப்பட்டது.

இதேவேளை கி.பி 15ம், 16ம் நூற்றாண்டுகளில் சமகால இலங்கை யிலே கோட்டையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் சிலர் இவ்வாலயத்திற்கு பல நன்கொடைகளை வழங்கி வழிபாடுகளும் செய்துள்ளனர். குறிப்பாக கோட்டை அரசனான ஆறாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக்கிரமபாகு பௌத்த சமயத்தைச் சேர்ந்தவராயினும் இந்து சமயத்திலும் ஈடுபாடு கொண்டு இம் முன்னேஸ்வரம் ஆலயத்துடன் நெருங்கிய தொடர்புகள் கொண்டிருந்ததாக அறியமுடிகின்றது.

இம்மன்னனுடைய காலத்தில் தமிழ்க் கல்வெட்டொன்று கோவிலின் கர்ப்பகிருகச் சுவரிலே பொரிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு மூலமாக சமகால கோட்டை அரச சபைக்கும் இவ்வாலயத்திற்கும் இடையில் நிலவிய நெருங்கிய தொடர்புகள் தெளிவாகும். இக்கல்வெட்டின்படி நீலகண்டர் என்பவர் இக்கோவிலின் பிரதான சிவாச்சாரியாராக விளங்கினார் எனவும், அவரின் சகோதரர் ஒருவர் கோவிலின் பரிபாலனத்தைக் கவனித்தார் எனவும் அறியப்படுகின்றது.

அடுத்தபடியாக கலிகால சர்வக்ஞ பண்டிதன் எனும் விருதுப் பெயருடைய ஒன்பதாம் பராக்கிரமபாகு (கி.பி 1509 - 1528) இவ்வாலயத்திற்கு வந்து வழிபாடு செய்து கோவிலுக்குப் பல கிராமங்களை 1517லேயே சர்வ மானியமாகத் தாமிர சாசனம் செய்துள்ளான். இவ்வாறு வழங்கப்பட்ட நிலப்பரப்பின் எல்லைகள் வரையறுக்கப்பட்டிருந்தன. கி.பி 16ம் நூற்றாண்டிலே இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலே போர்த்துக்கேசர்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. அவர்கள் பிற மதங்களைச் சேர்ந்த வழிபாட்டுத் தலங்களை அழித்து வந்தனர். அந்தவகையில் கி.பி. 1578-ல் முன்னேஸ்வரம் ஆலயம் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டது.

இவ்வாறாக ஆலயம் முற்றாக அழிக்கப்பட்ட போதிலும் வடிவாம்பிகா சமேத முன்னைநாதர் திருவருளால் மீண்டும் அது புதுப்பொலிவும் சிறப்பும் பெற வாய்ப்பு ஏற்பட்டது. கண்டியரசனும் நாயக்க வம்சத்தவனுமாகிய கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் (கி.பி.1747 - 1782) போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட இவ் ஆலயத்தை மீள அமைக்கும் முகமாக இந்தியாவில் இருந்து சிற்பாச்சாரியார்களை வரவழைத்து திருப்பணிகளை ஓரளவு நிறைவேற்றி 1757லே கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்துவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோவிலின் கடந்த இரண்டு நூற்றாண்டுகால வரலாற்றினை சோழ நாட்டினைச் சேர்ந்த சிவநேச குமாரசுவாமிக் குருக்கள் என்பவர் முறையாகப் பதிவு செய்து வைத்துள்ளார். இவரின் குறிப்புப்படியே இக்கோவிலின் கர்ப்பக் கிரகம், மகாமண்டபம், அர்த்தமண்டபம் ஆகியவனவற்றை சீர்திருத்தப்பட்டு 1875ம் ஆண்டு மகாகும்பாபிசேகம் சிறப்பாக நடைபெற்றதாகவும் அறியக்கூடியதாக உள்ளது.

இவர் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின் முற்பகுதியில் வாழ்ந்தவராவார். இவரின் காலத்திற்கு முன் இக்கோவில் குருமார்கள் முன்பிருந்ததைப் போன்று நிலவருவாய் கிடைக்காததால் அவர்கள் 1804ம் ஆண்டு இலங்கைத் தேசாதிபதிக்கு விண்ணப்பிக்க, அக்கோவிலுக்கருகில் சில நிலங்களை வழங்கியதாகவும் தகவல்கள் உண்டு.

மூன்று வீதிகளைக் கொண்ட இக்கோவிலின் முன்புறமாக உள்ள அரசமரம் ஸ்தல விருட்சமாகப் போற்றப்படுகின்றது. மேலும் இங்குள்ள ஆலமரமும் தலவிருட்சமாகக் கருதப்படுகின்றது. ஏனைய சிவத்தலங்களைப் போலவே இவ்வாலயத்திற்கும் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புகள் உள்ளன.

சுற்றுமதிலைக்கொண்ட பிரதான கட்டிடம் சுமார் 120 அடி நீளமும் 110 அடி அகலமும் கொண்டதாகும். பிரதான கோவில் கர்ப்பக் கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவனவற்றைக் கொண்டுள்ளது. கல்லினால் அமைக்கப்பட்ட கர்ப்பகிரகமும் ஸ்தூபியும் இலங்கையில் உள்ள கோவில்களிலேயே மிகப் பெரியவையாகும். இங்குள்ள விமானம் 46 அடி உயரமுள்ள செங்கல்லினால் அமைக்கப்பட்டது. மூன்று தளங்களைக்கொண்ட இவ் விமானம் கண்டியரசர் காலத்தில் அமைக்கப்பட்டது.

இங்குள்ள பெரிய கர்ப்ப கிரகத்திலே சுயம்புலிங்க வடிவிலே மூலமூர்த்தியாகிய முன்னைநாதரும் அருகினிலே அவரின் சக்தியாகிய வடிவாம்பிகையும் நன்கு விளங்குகின்றனர். பிள்ளையார் சுப்பிரமணியசுவாமி சந்நிதானங்களிலே இன்றும் கற்குத்து விளக்குகள் நாள்தோறும் ஏற்றப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தில் பூசிக்கப்படும் விநாயகர், சுப்பிரமணியர், ஆறுமுகர், நடராஜர் முதலிய கலையழகு மிக்க விக்கிரகங்கள் இங்கிருந்ததொரு பழைய தூர்ந்துபோன கிணற்றில் இருந்து பன்னெடுங்காலத்திற்கு முன்பாக கண்டெடுக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. சிறப்பாக இருந்த இவ் ஆலயம் பிறநாட்டவரின் தாக்குதல்களுக்கு இலக்காகியது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் கொழும்பு தொல்பொருட் காட்சியகத்தில் உள்ள கோயிற் பொருட்கள் சான்று பகிர்கின்றன.

சைவசமய மரபிற்கேற்ப கோவிலில் நடைபெறவேண்டிய பூசைகள், கிரிகைகள், உற்சவங்கள் அனைத்தும் பெருமளவு இங்கு ஒழுங்காகவே நடைபெற்று வருகின்றன. நாள்தோறும் ஆறுகாலப் பூசைகளுடன் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தன்று நடைபெறும் விசேட ஸ்ரீ சக்கரபூசை பர்வயந்திர பூசை எனப்படும்.

சிவசக்தி ஐக்கிய ரூபமாக உள்ள ஸ்ரீ சக்கரத்தினை (மேரு யந்திரத்தினை) இலங்கையிலேயே முதன்முதலாக வழிபாடு செய்யும் முறையினைத் தொடங்கிய தனிச்சிறப்பு இத்திருத்தலத்திற்குரியதாகும்! இது தொடர்ந்தும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இக்கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் பெருந்திருவிழா (மகோற்சவம்) 28 நாட்கள் நடைபெற்று ஆவணி பௌர்ணமி அன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும். இத்திருவிழாக்களிலே கடைசி தினமான பக்தோற்சவம் பிடனோற்சவம் நடராஜ உற்சவம் வேட்டைத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா ஆகிய திருவிழாக்காள் வெகு சிறப்பாக நடைபெறும்.

திருவிழாவின்போது நாள்தோறும் விநாயகர், சுப்பிரமணியர், ஆறுமுகர், சோமஸ்கந்தர் ஆகியோருடைய திருஉலாக்காட்சி தினமும் இடம்பெறும். பக்தோற்சவ தினத்தன்று 63 நாயன்மார்களுடைய திருவுருவங்கள் வழக்கமாக இடம்பெறும் தெய்வத் திருவுருவங்களுடன் ஒன்றுசேர்ந்து வலம் வரும் திருவுலாக்காட்சி தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதோஷம், வெள்ளிக்கிழமை, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, பங்குனி உத்திரம், சித்திரை வருசம், நடேசருக்குரிய ஆறு அபிஷேகங்கள், நவராத்திரிகள், கந்தசஷ்டி, தீபாவளி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை முதலியவற்றுக்காக விசேஷ பூசைகள், அபிசேகங்கள் ஆனைத்தும் ஏனைய சிவாலயங்களில் நடைபெறுவதைப் போலவே சிறப்பாக நடைபெறும்.

இக்கோவிலின் மகிமையைப்பற்றி பல பிரசுரங்கள் வெளிவந்துள்ளன. அவையாவன: ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம், ஸ்ரீ முன்னைநாதசுவாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல் மணிமாலை, முனிஸ்வரஞ்சல், முன்னை நாதேஸ்வரர் திருவூஞ்சல், முனிஸ்வரந்தாதி, முனீஸ்வரர் வடிவழகி பதிகம், முனிஸ்வரன் கப்பல், முனிஸ்வரக்கும்மி, முனிஸ்வரம் வடிவழகி அம்பாள் திருவிருத்தம், ஸ்ரீ வடிவாம்பிகை பஞ்சரத்தினம் ஆகியனவற்றுடன் முன்னேஸ்வரம் கும்பாபிசேக மலர் (1963) போன்றவையும் குறிப்பிடத்தக்கன.

இவ் ஆலயத்தின் வரலாற்றினைப் பார்க்கும்போது சமயம், சமூகம், இனம், அந்தஸ்து முதலியவற்றிலான வேறுபாடுகளைப் பேணாது அனைத்து மக்களையும் தன்பால் ஈர்க்கும் தன்மையுடையதாக விளங்கியுள்ளது. கதிர்காமம் போல இலங்கையில் பிரபலமான இவ் ஆலயம் போர்த்துக்கீசரின் ஆதிக்க காலத்தில் சிறிது காலம் நன்கு பாதிக்கப்பட்டாலும் இவ் ஆலய சுற்றாடலில் உள்ள மக்கள் மட்டுமின்றி தொலைவில் உள்ள மக்கள், மற்றும் வணிகர்கள், பிரமுகர்கள், வழிப் போக்கர்கள் இப்படியாக பலரின் உதவியுடன் மீண்டும் பழைய சிறப்பினை அடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

# அவிசாவெல
# சிவன் கோவில்

போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டு பௌத்தர்களால் சூறையாடப் பட்டு இன்று பரிதாபகரமாகக் காட்சியளிக்கும் ஒரு இந்து ஆலயத்தின் கதை!

தென் ஆசியாவிலேயே மனித நாகரிக வாழ்வு முறையின் ஆரம்பம் எந்த அளவிற்குப் பழமை வாய்ந்ததாக விளங்குகின்றதோ அதே கால எல்லை வரைக்கும் தலங்களின் தோற்றமும் மிகப் பழமை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. தென் ஆசியாவின் தென் அந்தத்திலே இந்து சமுத்திரத்திலே ஒரு மிதி கல்லாக விளங்குகின்ற இலங்கைத் தீவின் நாகரிகத்தைப் பொறுத்த வரையில்கூட வைதீக மரபினைச் சேர்ந்த மதங்களின் தோற்றமானது அத்தீவினது வரலாற்றின் முன்னுரையாக அமைந்துள்ளமையைக் காண முடிகின்றது. இதனை நன்கு அவதானித்த போல் இ. பீரிஸ் என்ற சிங்கள ஆய்வாளர்கூட விஜயனது வருகைக்கு முன்பிருந்த இலங்கையில் ஐந்து ஈஸ்வரன் ஆலயங்கள் இருந்து வந்தன எனவும் இந்த சிவாலயங்களுக்கு இந்தியாவில் இருந்தும் மக்கள் வந்து சென்றனர் எனவும் குறிப்பிட்டுவிட்டு அந்த ஐந்து ஈஸ்வரங்களின் பெயர்ப் பட்டியலை பின்வருமாறு கொடுத்துள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1:- மகா தீர்த்தத்திற்கு (மாதோட்டம்) அருகிலுள்ள திருக்கேதீஸ்வரம்

2:- முன்னேஸ்வரம்

3:- தொண்டேஸ்வரம்

4:- திருக்கோணேஸ்வரம்

5:- நகுலேஸ்வரம் - (கீரிமலை) என்பனவையே ஆகும்.

இவ்வகையிலே இலங்கைத் தீவினது நாகரிக வாழ்வுக் கட்டுமானப் பணியிலே இச் சிவ ஈஸ்வரக் கலாச்சாரம் முன்னுரையாகவும் ஆதாரமாகவும் அமைந்திருந்தபோது இந்தியாவிலே பௌத்த மதத்தினது தோற்றத்துடன் அது உப கண்டத்திற்கு வெளியே தென்னாசிய தென்கிழக்காசிய தூர கிழக்காசிய நாடுகளுக்கும் பரவி அம்மதமானது வெளிநாட்டு ஆட்சியாளர்களையும் கவர்ந்து கொள்ளக்கூடிய ஒரு சமகால சர்வதேச மதமாகவும் மாற்றம் கொண்டது. அதன் விளைவாக அவ்வப் பிரதேசங்களிலே மக்களுடைய வாழ்வு முறைகளில் கலந்து அவர்களை நாகரிகப் படுத்தும் ஒரு நிறுவனமாகவும் தொழிற்பட்டுக்கொண்டிருந்த நேரத்திலே இலங்கையில் இந்து ஈஸ்வரக் கலாச்சார மையங்கள் மக்களுடன் நெருங்கக்கூடிய பிணைப்புகளையெல்லாம் மெல்ல மெல்ல இழந்து கால ஓட்டத்திலே பௌத்த மதத்தின் செல்வாக்கின் பின்னணியிலே தமது சிறப்புக்களையெல்லாம் மறைத்த நிகழ்வினைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு இடம்பெற்ற கோவில்களின் வரலாறுகள் பல உண்டு! அவற்றில் ஒன்றாக சீதாவாக்கை அவிஸ்சாவலையில் உள்ள இந்த சிவன் கோவிலையும் காணமுடிகின்றது.

கொழும்பில் இருந்து இரத்தினபுரி வீதியில் சுமார் 48 கி.மீ. தொலைவில் அவிஸ்சாவெல நகரம் அமைந்துள்ளது. இங்கிருந்து பிரிந்து செல்லும் நுவெரெலியா வீதியில் சுமார் ஒரு கி.மி. தூரத்தில் உள்ள சீதாவாக்கை ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டதே சீதாவாக்கை சிவன் கோவிலாகும். இன்று இந்தக் கோவில் போர்த்துக்கீசரின் அக்கிரமத்தாலும் பௌத்த மதத்தின் ஆதிக்கத்தாலும் அழிந்து சிதைந்த நிலையில் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை இராச்சியத்தின் மன்னனான 6ஆம் விஜயபாகுவைக் கொன்று இவ் இராச்சியத்தை மூன்றாகப் பிரித்து ஆட்சிசெய்த விஜயபாகுவின் மகன்மார்கள் மூவரில் மாயதுன்ன என்பவனால் அமைக்கப்பட்ட இராசதானியே சீதாவாக்கை என்று அழைக்கப்பட்டது.

கி.பி. 1551-ஆம் ஆண்டு முதல் 1593-ஆம் ஆண்டுவரை தலைநகராக விளங்கிய சீதாவாக்கையின் மன்னனான மாயதுன்னன் 1581-ல் தனது 80-ஆவது வயதில் இறந்துபோகவே அவனது மகனான டிக்கிரி பண்டார முதலாம் ராஜசிங்கன் என்ற பெயரில் தனக்குத்தானே முடிசூட்டிக் கொண்டான். (இராச்சியத்திற்காகன பதவி மோகத்தில் மகன்களே தந்தையைக் கொன்றார்கள்) பௌத்த சமயத்தவனாகிய இம் மன்னன் இந்து சமயத்திலும் பற்றுக்கொண்டவனாக விளங்கியதோடு காலப்போக்கில் சைவ சமயத்தவனாக மாறினான்.

போர்த்துக்கேயப் படைகளை எதிர்த்து முல்லேரியாவில் நடத்தப்பட்ட போரில் வெற்றிகொண்ட வீரனாகத் திகழ்ந்தான் இராஜசிங்கள். சிவ பக்தனான இவனால் கி.பி. 1554 - 1593 காலப்பகுதியில் கடடப்பட்டதே சீதாவாக்கை சிவன் கோவிலாகும். சீதாவாக்கை நதியின் அருகில் கட்டப்பட்ட இக் கோவில் தனிக் கருங்கல்லிலான கோவிலாகும். அரிட்டகாவேந்து பெருமாள் என்னும் பிரசித்தி பெற்ற இந்து சுவாமி ஒருவரின் திட்டப்படி இவ் ஆலயம் அமைக்கப்பட்டது.

இவரின் போதனைகளையும், அறிவுரைகளையும் பின்பற்றிய இராஜசிங்கன் இந்து மதத்தின் மகிமையை உணர்ந்தவனாய் பௌத்த மதத்தில் இருந்து சைவ சமயத்திற்கு மாறினான். பெருமாள் சுவாமிகளின் வேண்டுகோளிற்கிணங்க அவரின் திட்டப்படி இவ் ஆலயம் அமைக்கப் பட்டது. தனது தந்தையைக் கொன்ற பாவக் கருமத்திற்குப் பிராயச்சித்தம் தேடும் வகையிலேதான் சைவ சமயத்திற்கு மாறி இவ் ஆலயத்தைக் கட்டியதாகவும் தெரிய வருகின்றது.

இவ் ஆலயக் கட்டுமானப் பணிகளுக்காக தென் இந்தியாவில் இருந்து சிற்பிகளை வரவளைத்து ஆகம முறைப்படி விஜய நகரக் கட்டிடக் கலைப்பாணியில் இவ் ஆலயம் அமைக்கப்பட்டது. வடக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலுடன் கட்டப்பட்ட இக் கோவிலைச் சுற்றி அகழியும் வெட்டப்பட்டது. கோவிலின் வலது பக்கத்திலும் (மேற்கு) பின் பக்கத்திலும் (தெற்கு) சீதாவாக்கை ஆறு இயற்கை அரணாக உள்ளது. கோவிலின் முன் பக்கமாகவும் (வடக்கு) இடது பக்கமாகவும் (கிழக்கு) அகழி வெட்டப்பட்டது. 14 அடி நீளமும் 4 அடி அகலமும் 2 அடி பருமனும் கொண்ட பாரிய கற் பாளங்களைக் கொண்டு இவ் அகழி அமைக்கப்பட்டது. கோவிலுக்குச் செல்வதற்கு வடக்கே மட்டும் அகழிக்குக் குறுக்கே கற்பாலம் அமைக்கப் பட்டது.

மூன்று தளங்களைக் கொண்டதாக இவ் ஆலயம் அமைக்கப்பட்டது. 280 அடி நீளமும் 60 அடி அகலமும் கொண்ட கீழ்த்தளத்தின் உயரம் 15 அடியாகும். இரண்டாவது தளம் 180 அடி நீளமும் 45 அடி அகலமும் 8 அடி உயரமும் கொண்டதாகும். சுற்றிவரக் கருங்கல்லினால் மதில் அமைக்கப்பட்டதோடு நான்கு பக்கமும் வாசற்கதவுகள் உள்ளன. மூன்றாவது தளத்தின் மீது அதிஸ்டானம் அமைந்துள்ளது. இது 5அடி உயரத்தில் அடுத்தடுத்து 5 வரிசைகள் உள்ள அதிஸ்ட்டானமாக உள்ளது.

கதவு நிலைகள் கருங்கல்லினால் அமைக்கப்பட்ட தூண்களாக உள்ளன. மேற்குப் பக்கத்தில் உள்ள வாசற்படிகள் மட்டும் இயற்கையாகவே அமைந்திருந்த பாறைகளில் செதுக்கப்பட்டவை.

இக் கோயிலின் மேற்குப் பகுதியில் ஆற்றுக்கு அடுத்த பக்கத்தில் சீதாவாக்கை அரச மாளிகையும் சிறிய கோட்டையும் அமைந்திருந்தது. அடிக்கடி போர்த்துக்கேயருடன் போரிட்டு வந்த ராஜசிங்கனின் கோட்டையை திடீரென முற்றுகையிட்ட போர்த்துக்கேயர் கோட்டையையும் மாளிகையையும் அழித்ததோடு ஆற்றின் மறுபக்கத்தில் இருந்த கோவிலையும் இடித்தழித்தனர். அழகிய சிற்பங்களுடன் விளங்கிய இவ் ஆலயத்தின் கீழ்த்தளங்கள் சிற்பிகளால் மேலும் அழகுற அமைக்கப்பட்ட காலத்திலேயே போர்த்துக்கேயத் தளபதி நொறன்ஹாவால் இவ் ஆலயமும் அரச மாளிகையும் கொள்ளையடிக்கப்பட்டு பின் இடிக்கப்பட்டது.

இவ் ஆலயத்தை அழிப்பதற்கு முன்பு இதனைக் கண்ட போர்த்துக்கீசப் பாதிரியாரான குவைரோஸ் என்பவர் இவ் ஆலயம் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது குறிப்பில் இவ்வாறு எழுதியுள்ளார் '20 ஆண்டுகள்... 2000 சிற்பிகள் இரவு பகலாக வேலை செய்தாலும் கட்டிமுடிக்க முடியாத மிகச்சிறந்த அலங்கார வேலைப்பாடுகள் உள்ள ஆலயமிது' என்று.

இவ்வளவு சிறப்பாகக் கட்டப்பட்ட இவ் ஆலயம் இப்பொழுது கோபுர விமானமோ.. மண்டபத்தின் கூரையோ.. எதுவுமில்லாமல் அத்திவாரமும் சில தூண்களும் மட்டுமே காணப்படுகின்றது. கருவறையைச் சுற்றி செதுக்கப்பட்ட தாமரைப்பூச் சிற்பங்களும் மகரச் சிற்பங்களும் இப்பொழுதும் காணக்கூடியதாக உள்ளது. சந்திரவட்டக் கற்களும் வாசற் கைப்பிடிக் கற்களும் கோவிலைச் சுற்றியுள்ள தேயிலைச் செடிகளுக்கடியில் புதைந்தும் புதையாமலும் கிடக்கின்றன.

இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட செய்திகளுக்கு ஆதாரமாக இக் கோவிலில் அமைக்கப்பட்டிருந்த அழகிய வேலைப்பாடு களுடனான தூண்கள் வேறு சில வழிபாட்டுத் தலங்கள் கட்டுவதற்காக எடுத்துச் செல்லப்பட்டதாக அறியப்படுகின்றது. அவற்றில் தாமரைப்பூ சிற்பம் செதுக்கப்பட்ட அழகிய சிங்க பீடத்துடன் கூடிய 12 தூண்கள் மெதகொட என்னும் தேவாலயத்திலும் - ஏனையவை மானியம் விகாரை யில் சில தூண்களும்.. ருவன்வெல விகாரையில் சில தூண்களும்.. தல்துவ விகாரையில் சில தூண்களும் காணப்படுகின்றன.

போர்த்துக்கீசர்கள் இந்துக் கோவில்களை அழித்துத் தேவாலயங் களைக் கட்ட... போர்த்துக்கேயருக்குப் பின்னால் வந்த பௌத்தர்கள் போர்த்துக்கேயரைப்போல் இல்லாவிட்டாலும் தங்கள் பகுதிகளில் இந்து சமய மக்கள் குறைவாக வாழ்ந்த பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வந்தமைக்கு சாட்சியாக இருப்பது அவிஸ்சாவலை சிவன் கோவிலாகும்.

பௌத்தர்களின் தொடர்ச்சியான இப்படியான இந்து ஆலயங்களின் அழிப்பு இன்றளவும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

## கொழும்பு கொச்சிக்கடை

# ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்

கொழும்பு மாநகரில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாகத் திகழ்வது ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயமாகும். இது கொச்சிக்கடைப் பகுதியில் அமைந்துள்ள சிவத்தலமாகும். தென்னிந்தியாவில் உள்ள பிரமாண்டமான கருங்கல் ஆலயங்கள் யாவும் மூவேந்தர்களாலும், நாயக்க பல்லவ மன்னர்களாலுமே கட்டப்பட்டவை. அதேமாதிரியான அமைப்பில் இலங்கையில் முற்றிலும் கருங்கற்களினால் பொளிந்த சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த இந்த அழகிய கலைக்கோவிலை தமது சொந்தப் பணத்திலேயே கட்டிய பெருமை ஸ்ரீமான் பொன்னம்பல முதலியார் குடும்பத்தையே சாரும். இத்தகைய ஆலயம் இலங்கையில் இதுவே ஒன்றெனக் கூறினால் அது மிகையாகாது.

இவ்வாலயம் மானிப்பாயில் பிறந்து கொழும்பு செட்டியார் தெருவில் வசித்து வந்த கொடை வள்ளலும் தேசாபிமானியுமான ஸ்ரீமான் அருணாச்சலம் பொன்னம்பலம் முதலியார் என்ற சைவப் பெரியாரால் 1856ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் வாழ்ந்த கொழும்புவாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமக்கள் தங்களது வழிபாட்டிற்காக சிறு சிறு தெய்வங்களுக்கு தெருமுனைகளில் கோவில்கள் அமைத்து வழிபட்டு வந்தனர். இதனை அவதானித்த பொன்னம்பல முதலியார் மனம் வருந்தி சிவாகம முறைப்படி பூசித்து வழிபடக்கூடிய ஓர் சிவாலயத்தை நிர்மாணிக்க முடிவு செய்து அதற்காக கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் ஐந்து ஏக்கர் காணியை கப்ரின் ஜோன் பவுல் ஸ்ரோன் என்ற ஆங்கிலேயரிடம் விலைக்கு வாங்கித் தென்னிந்தியாவில் இருந்து கோவிற் கட்டடக் கலைஞர்களை வரவழைத்து இரண்டு வருடங்கள் இரவு பகலாக உழைத்து திருப்பணி வேலைகளை நிறைவு செய்து 1857ம் ஆண்டு மார்கழி மாதம் மகா கும்பாபிசேகத்தை சிறப்பாக நடாத்தினார். (இவ் ஆலயம் கட்டப்படும் பொழுது செங்கற்களால் சுண்ணாம்புச் சாந்து பூசியே கட்டப்பட்டது.)

மூல மூர்த்தியாக 22 அங்குல உயரம் கொண்ட சிவலிங்கத்தையும் போகசக்தியையும் மூலஸ்தானத்தில் பிரதிஷ்ட்டை செய்வித்தார். தனது வீட்டில் வைத்துப் பூசித்து வந்த பால யந்திரத்தை 32 அங்குல உயரம் கொண்ட சிவகாமி அம்மாளின் பீடத்திற்கு அடியில் வைத்தும் சக்கரத்தை அதன் அருகில் வைத்தும் பிரதிஷ்ட்டை செய்வித்து பொதுமக்கள் வழிபடுவதற்காக வழி சமைத்தார். இத் திருத்தலத்தைக் காலாகாலமாகப் பராமரித்து நித்திய நைமித்திய பூசைகளையும், விழாக்களையும் எவ்விதத் தடங்கலுமின்றித் தொடர்ந்து சிறப்புடன் தனது தனது சந்ததியினர் நடாத்துவதற்கு ஏற்ற முறையில் நாத்தாண்டியாவில் ஆயிரம் ஏக்கர் தென்னந் தோட்டத்தையும் கொழும்பு மாநகரில் தொடர் கடைகளையும் கட்டி ஆலயப் பராமரிப்புக்கு அவற்றின் மூலம் பணம் பெறுவதற்கான வழிகளை வகுத்தார்.

இந்தியாவில் இருந்து வருகை தரும் யாத்திரிகளும், உணவுண்டு தங்குவதற்கு ஏற்ற முறையில் ஒரு அன்னதான மடத்தையும் கட்டினார்! தினமும் அங்கு வரும் ஏழைகளுக்கும் யாத்திரிகளுக்கும் உணவும் உடையும் வழங்கினார். வறுமை காரணமாக விவாகம் ஆகாத கன்னிப் பெண்களுக்கு தனது செலவிலேயே திருமணங்களைச் செய்து வைத்தார். அக்காலத்தில் இந்துக்களின் பூதவுடலைத் தகனம் செய்ய அதற்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயானம் இல்லாமையால் மண்ணிலேயே புதைத்து வந்தனர். அவர்களின் இவ்வவலநிலையில் இருந்து மீட்கும் வகையில் ஒரு காணியை விலைக்கு வாங்கி தகனம் செய்வதற்குரிய மயானத்தையும், மடத்தையும் நிறுவி அந்திமக் கிரிகைகளை பிராமணர் 'மூலம் தமது செலவில் செய்வித்து உடலை விட்டுப் பிரிந்த ஆத்மாக்கள் சாந்தியடைவதற்கும் வழி செய்தார். இவ்விதமான கைங்காரியங்களைத் தொடர்ந்து நடாத்துவதற்கு தனது சந்ததியில் வரும் மூத்த ஆண் வம்சத்திற்கு அதிகாரத்தைச் சாசனம் மூலமாக வழங்கியிருந்தார்.

1887ம் ஆண்டு இவர் சிவபதமடைந்ததும் இவரின் மூத்த மகன் பொன் குமாரசாமி 1905ம் ஆண்டுவரை ஆலயத்தை நிர்வாகித்து வந்தார். அவர் காலமானதும் இரண்டாவது மகனான சேர்.பொன் இராமநாதன் அவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். தந்தையரால் கல்லாலும், செங்கட்டியாலும், சுண்ணாம்புச் சாந்தாலும் கட்டிய கோவிலுக்குப் பதிலாக தற்போது உள்ள நிலையில் இருக்கும் கருங்கற் கோவிலைப் புதிதாகக் கட்ட 1907ம் ஆண்டு ஆரம்பித்தார். இதற்காக ஸ்தபதியையும், சிற்பிகளையும் தென் இந்தியாவில் இருந்து வரவழைத்தார். வியாங்கொடையிலிருந்து கருங்கற்களை வருவித்தார். ஆலயத் திருப்பணி வேலைகளைத் தாமே நேரில் நின்று மேற்பார்வை செய்து சிற்பிகளுக்கு அருகில் சென்று சிவதோத்திரங்களைப் பண்ணிசையுடன் மனமுருகப் பாடி அவர்களுக்குத் தெய்வீக உணர்வை ஊட்டி அழகும் எழிலும் தெய்வீகமும் நிறைந்த திருவுருவங்களை வடிவமைக்க உந்து சக்தியாக இருந்தார். இச் செயல் தஞ்சைப் பெரிய கோவில் திருப்பணி வேலைகள் நடைபெறும் காலத்தில் இராஜ இராஜ சோழ மன்னன் தலைமைச் சிற்பிக்கு அருகில் நின்று அவருக்குத் துப்பற்படிகம் ஏந்திய செயலுக்கு ஒப்பாகும்.

சகல திருப்பணி வேலைகளும் நிறைவு செய்து 21-11-1912ம் ஆண்டு முதற் கும்பாபிசேகத்தை வெகு விமரிசையாக நடாத்தினார். சேர்.பொன். இராமநாதன் அவர்களுக்கு இத் திருப்பணி வேலைகளைச் செய்ய அக்காலத்தில் இருபது லட்சம் ரூபா செலவாகியதாம்! தற்சமயப் பெறுமதி இருநூறு கோடிக்கு மேல் இருக்கும் என மதிப்பிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆலயத்தில் கர்ப்பக் கிரகத்தில் சிவலிங்கப் பெருமானும் போக சக்தியும் தென்முகமாக சிவகாமி அம்மாளும் இருந்து அருள் பாலிக்கின்றனர். மகா மண்டபத்தில் மிக அழகிய 30 அங்குல உயரம் கொண்ட நடராஜப் பெருமானும் 28 அங்குல உயரம் கொண்ட சிவகாமி அம்மாளும் உள்ளனர். முதற் பிரகாரத்தில் கோஷ்ட்ட தெய்வங்களாக நர்த்தன விநாயகர், சனீஸ்வரர், சந்தான கோபாலர், தட்சணாமூர்த்தி, நாகதம்பிரான், இலிங்கோற்பவர், பிரம்மதேவருடன் துர்க்கை அம்மாளும் அமைந்துள்ளனர்.

இரண்டாம் பிரகாரத்தில் பரியார மூர்த்திகளாக விநாயகர், சேர்க்கந்தர் (செம்பு), பஞ்சலிங்கங்கள், மகாவிஷ்ணு, வள்ளி தேவசேனா சுப்பிரமணியர், வள்ளி தேவசேனா ஆறுமுகர் (செம்பு), பிள்ளையார், இராஜ இராஜேஸ்வரி, அஸ்த்திர தேவர், சந்திரசேகரர், காத்தவராயர் (செம்பு), மஹாவிஸ்ணு, இராமர், சீதை, இலக்குமணனார்,ஆஞ்சநேயர் (செம்பு), நால்வர் (செம்பு), ஞானபைரவர், சுவர்ண பைரவர், நவக்கிரக நாயகர்கள், சந்திரர், சூரியர் ஆகியோர் அவரவர் சந்நிதியில் அமைந்துள்ள னர். இங்குள்ள லிங்கோற்பவ மூர்த்தி தென்னிந்திய கலைக்கோவிற் சிற்பங்களை விஞ்சுமளவிற்கு அழகும், எழிலும், கம்பீரமும் நிறைந்த திருவுருமாகும்.

மூன்றாம் வீதியில் (வெளிவீதி) காரியாலயம், சிவாச்சாரியார்கள் விடுதி, பூ மண்டபம், ஆஞ்சநேயர், மாரியம்மாள், முனியாண்டி சுவாமி, கோசாலை, தேர்முட்டி, சொர்ண புஸ்பகரணி தீர்த்தத் தடாகம், அரசடிப் பிள்ளையார் போன்றவை அமைந்துள்ளன.

ஆலயக் கிழக்கு வாசலில் 65 அடி உயரங்கொண்ட அழகிய தெய்வச் சிற்பங்கள் ஐந்து தளங்களைக் கொண்ட இராச கோபுரமும். அம்பாளின் தெற்கு வாசலில் 35 அடி உயரங்கொண்ட மூன்று தளங் களுடைய கோபுரமும் ஆலய வளாகத்தின் கிழக்கு மேற்கு நுழை வாசல்களில் இரு சிறிய கோபுரங்களும் அமைந்துள்ளன. உள் மண்டப கற்தூண்களிலும், சுவர்களிலும் கண்ணப்ப நாயனார் தன் இடது கண்ணைத் தோண்டி இலிங்கத்தில் அப்ப ஆயுத்தமாகும் காட்சி, அத்துடன் சிவனின் ஊர்த்தவ தாண்டம், அம்பாளின் தாண்டம், இடது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் உமையும், சிவனும், அர்த்த நாரிஸ்வரார், பைரவர், பழனி ஆண்டவர், இலக்குமி, பிருங்கி முனிவர், சமய குருவர், பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர், பிச்சாடனர், நான்முகன், தட்சிணாமூர்த்தி, நந்திதேவர், மத்தளத்துடன் நாரதர், இருதலை ஒரு உடல் உள்ள மிருகம், பசு இலிங்கத்திற்குப் பால் சுரத்தல், பாயும் சிங்கம், அன்னப்பறவைகள், கலைமான், ஐந்து தலை நாகம், யானை மரத்தை முறித்துக் குழை தின்னுதல், எருது மரத்தை எட்டிக் குழை தின்னுதல், மந்தி, யானையின் காலடியில் மனிதன், மீனை விழுங்கும் கொக்கு, இரட்டைத்தலையுடைய கிளி, இரட்டைத் தலையுடைய மயில், யானைமேற் பாயும் சிங்கம், ஆடும் மயில், இரு தலை ஒரு உடற் சிங்கம், மூன்று தலை ஒரு உடற் கழுகு, போன்ற சிற்பங்கள் மிகவும் கலை நுணுக்கத்துடன் தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளன!

தரிசன மண்டபத்தின் மேற்புறத்தில் 12 ராசிகளும் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. நவக்கிரகத்திற்கு தென்மேற்கில் உள்ள கற் தூணில் சேர். பொன் இராமநாதன் அவர்களதும் அவரது துணைவியார் அவர்களது உருவங்களும் இரு வட்ட வடிவத்திற்குள் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. நவக்கிரகத்தின் தென் மேற்கில் உள்ள கற் தூணில் 18 தமிழ் எழுத்துக்களைக் கொண்ட சிற்பக்கவி சக்கர வடிவத்திற்குள் அமைந் துள்ளது.

நித்திய, நைமித்திய பூசைகளும், ஆறுகாலப் பூசைகளும், விரதங்களும், அபிஷேகங்களும், பொங்கல்களும், குளிர்ச்சி போன்றவை களும் சிவாகம முறைப்படி நடைபெற்று வருகின்றன. ஆலய வருடாந்தர மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பத்தாம்நாள் பங்குனி உத்தரத்தன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும். தேர்த்திருவிழா அன்று சோமஸ்கந்தர், அம்மாள், சண்டேஸ்வரார் ஆகியோர் தத்தமது அழகிய சிற்பத் தேர்களிலும், விநாயகர், முருகர் ஆகியோர் தங்களது வாகனங்களிலும் ஆரோகணித்து வீதி வலம் வருவர். அம்பாளின் தேரைப் பெண்களே வடம் பிடித்து இழுப்பது வழக்கமாகும். சுவாமி வெளி வீதி வரும் பொழுதில் நவசந்தித் திருமுறைகள் ஓதப்படுகின்றன. அதிகாலை திருப்பள்ளியெழுச்சிப் பாராயணத்துடன் பூசைகள் ஆரம்பமாகின்றன. தினமும் சுவாமி பள்ளியறையில் இருந்து பல்லக்கில் புறப்பட்டுத் திரும்புவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாகும். காலையில் கோமாதாவுக்கும் பூசை நடைபெறும். காலை ஏழு மணிக்கும், மாலை ஏழு மணிக்கும் நடைபெறும் பூசையில் நித்தியாக் கினி வளர்க்கப்படும். ஆலயத்தின் கோசாலையில் உண்ள பசுக்களில் இருந்து பால், தயிர், நெய், கோசலம், கோமயம், போன்றவை அபிசேகங்களுக்குப் பாவிக்கப் படுகின்றன.

ஸ்ரீ சிவதர்ம சம்வர்தன பாடசாலையும், அறநெறிப் பாடசாலையும் ஆலய நிர்வாக மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன. பன்னிரு திருமறைகளோதல் ஆலய மண்டபத்துள் வருடா வருடம் நடைபெற்று வருகின்றது. இவ் ஆலயத்தில் ஒரு முகாமையாளரும், ஆறு சிவாச் சாரியார்களும், நான்கு உதவி ஐயர்களும், ஒரு மடப்பள்ளி ஐயரும், ஒரு ஓதுவார் மூர்த்தியும், மூன்று மாலை கட்டும் பண்டாரங்களும், மேள வாத்தியக்காரர்களும், சுவாமி காவுவோர்களும், கோசாலைப் பராமரிப்பாளர்களும், மூன்று பாதுகாப்பாளர்களும், பல சிற்றூழியர்களும் உள்ளனர்.

இவ் ஆலயம் சிற்ப சாத்திரக் கட்டிடக் கலையமைந்த அமைப்பையும், சிவாகம விதிகளுக்கமைந்த கிரியை நெறிகளையும் கொண்ட சைவக் கலைக் களஞ்சியமாகத் திகழ்வது சைவ மதத்திற்கு பெருமை தரும் விடயமாகும்.

பிரதம சிவாச்சாரியாராக சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள் 1949ஆம் ஆண்டிலிருந்து 2006ஆம் ஆண்டு தை மாதம்வரை சிவப்பணி புரிந்து இறையடி சேர்ந்தார். அவரைத் தொடர்ந்து சிவஸ்ரீ வை. பாலசுந்தரக் குருக்கள் பிரதம சிவாச்சாரியாராக சிவப்பணி ஆற்றுகின்றார். தற்பொழுது ஸ்ரீமான் அ.பொன்னம்பல முதலியார் வம்சத்தின் வழிவந்த முகாமத்தவத் தர்மகத்தா ஸ்ரீமான் தே.ம.சுவாமிநாதன் தலைமையில் ஐந்து பேர் கொண்ட உறுப்பினர்களால் ஆலயம் திறம்பட பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது. ஆலயப் பராமரிப்புச் செலவிற்காக உண்டியல் பணத்தை எதிர்பாராத ஆலயம் இது ஒன்றே எனக் கூறலாம்.

உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

# செல்வச் சந்நிதி முருகன் ஆலயம்

'ஊரானோர் தேவகுலம்' என்று ஆன்றோர் கூறுவர்! ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வோர் ஆலயம் என்பது இதன் பொருளாகும். இந்துக்களுக்கு பல கடவுள்கள் இருக்கின்றார்கள். ஆனாலும் ஈழமணித் திருநாட்டில் முருகக்கடவுளின் ஆலயங்களே பல இடங்களிலும் பிரசித்தி பெற்றவையாக இருப்பதை நாம் காண முடிகின்றது. கதிர்காமம், நல்லூர், மாவிட்டபுரம், சந்நிதி போன்ற ஆலயங்கள் இலங்கையையும் கடந்து இந்தியாவில் உள்ள பக்தர்களாலும் வணங்கப்படுகின்ற ஆலயங்களாகும்.

இலங்கையில் இருக்கும் அறுபடை வீடுகளில் கதிர்காமத்திற்கு அடுத்ததாக அற்புதங்களிலும், திருவிளையாடல்களிலும் சிறந்து விளங்கும் ஓர் அற்புதத் தலம்தான் 'ஸ்ரீ செல்வச் சந்நிதி' ஆலயம். ஒவ்வொரு படை வீட்டிலும் ஒவ்வொரு குணக்குன்றாகக் காட்சிதரும் கந்தவேள் இந்த ஸ்தலத்திலே மூலவர் வேற்படையாகவும் எழுந்தருளி அன்பர்கள் தினமும் படைக்கும் அன்னமலைகளின் மீதேறி, குன்றேறி, விளையாடும் குமரனாகி அன்னதானக் கந்தன், ஆற்றங்கரையான், கல்லோடைக் கந்தன், சந்நிதியான், செல்வச் சந்நிதியான், என்னும் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமங்களுக்கு நாயகனாக விளங்கி நினைத்தாலே மோட்சம் தரும் அண்ணாமலைக்கிணையாகி அன்னமலைக் கந்தனாகி அருள் புரிந்து வருகின்றான்.

ஒவ்வொரு இடத்திலும் முருகனை ஒவ்வொரு பெயர் கொண்டு அழைப்பார்கள்! கதிர்காமத்தில் திகதிக் கந்தனாகவும், அன்புக் கந்தனாகவும், நல்லூரில் அலங்காரக் கந்தனாகவும், மாவிட்டபுரத்தில் அபிசேகக் கந்தனாகவும் ஆடல்கள் காட்டும் ஆறுமுகவேலன் சந்நிதித் தீரத்தில் அடியவர் குறை தீர்க்கும் அன்னதானக் கந்தனாகி காட்சியளிக்கின்றான்.

## வரலாறு

சந்நிதிக் கந்தனின் வரலாற்றை அறிவதற்கு நாம் கந்தபுராண வரலாற்றில் இருந்து சில தகவல்களை இங்கு தருகின்றோம்.

சிகண்டி என்ற ஓர் தவ சிரேஸ்ட்டர் கதிர்காமம் செல்லுகையில் காட்டு வழியினைக் கடக்கும்போது ஓர் யானை மதம் கொண்ட நிலையில் தன்னை நோக்கி வருவதனை அறிந்து அதை எதிர்ப்பதற்கு எந்தவிதமான வழியும் இல்லாத சமயத்தில் தன்னிடம் இருந்த ஒரு வெற்றிலையை எடுத்து மந்திரம் செபித்து அதை அம்புபோல பாவித்து யானைமீது ஏவினார். அந்த வெற்றிலை அம்பு யானையை வேல் போலச் சென்று தாக்கியது! அந்தக் கணமே அங்கு யானை மறைந்து ஐராவசு என்னும் ஓர் கந்தர்வன் நின்றான்! அந்தக் கந்தர்வன் சிகண்டி முனிவரை வணங்கி தனக்கு சாபம் மூலமாக யானை உரு வந்த வரலாற்றைக்கூற அங்கு காட்சி தந்த முருகன் சிகண்டி முருகனை கதிர்காமம் வரும்படியும், ஐராவசுவை நோக்கி 'வட கரையில் ஸ்ரீ செல்வச் சந்நிதி' என்றோர் ஸ்தலம் இருக்கின்றது. தேவர்கள் எல்லாம் தினமும் பூஜை செய்யும் இந்த ஸ்தலத்திலே எனக்கு மனிதர்கள் மௌன பூஜை செய்கின்றார்கள்! அங்கு நடக்கும் பூஜையின் சிறப்பை நீ உணர்ந்தபின் அங்கு நீ சமாதி நிலை கொண்டு எனது பொன்னடியை வந்தடைவாய்' என்று ஆசிகூற அன்னவனாம் ஐவராசு முருகநாகர் என்னும் பெயரில் மனித உருவிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு பல காலம் வாழ்ந்து பூஜையின் சிறப்பறிந்து சமாதி நிலை எய்ய, அந்த சமாதிமேல் ஒரு பூவரச மரத்தைத் தோற்றுவித்து அதன் அருகினிலேயே தனக்கு ஓர் ஆலயத்தை அமைத்து அருளாட்சி புரிகின்றான் அந்தக் கலியுக வரதன்.

## ஸ்ரீ செல்வச் சந்நிதி என்ற பெயர் எப்படி வந்தது?

இங்கும் நாம் கந்தபுராணத்தில் இருந்தே ஆதாரங்களைத் தேடவேண்டி இருக்கின்றது. சூரபத்மன், ஏமகூடம் என்று அழைக்கப்பட்டு இன்று கதிர்காமமாக மிளிரும் இடத்திலே போர் செய்ய வந்த முருகனின் தளபதியான வீரபாகுத்தேவர் செந்தூரில் படைத்தளம் அமைத்த பின்னர் தூது செல்லும் வழியில் இந்த இடத்தில் சந்திகாலப் பூஜை செய்தார். பின்பு மீண்டும் படைகளெல்லாம் போருக்குச் செல்லும் வழியிலும் இதே இடத்தில் தேவர்களெல்லாம் முருகனை வேண்டி பூஜை செய்தபோது அங்கு முருகன் காட்சி தந்து 'உங்கள் துயரெல்லாம் துடைப்பேன் அசுரரை அழிப்பேன்" என்று உறுதிமொழி கூறி அபயம் அளித்த இடம் இதுவே!

'இந்த இடத்திற்கு ஸ்ரீ செல்வச் சந்நிதி என்று பெயரிடுங்கள். இந்த இடம் தேவர்களும், மனிதர்களும் என்னை சேவிக்கும் ஓர் சிறந்த இடம்' என்று அதற்கு அத்தாட்சியாக தனது சேவடியை அங்கு பதித்து 'இங்கு என்னை வந்து வணங்கும் அடியவர்களின் குறைகளையெல்லாம் நான் தீர்த்து வைப்பேன்' என்று உறுதிமொழி பகர்ந்தான். ஸ்ரீ என்றால் செல்வம். பின் ஏன் இந்த இடத்திற்கு ஸ்ரீ செல்வச் சந்நிதி என்ற பெயர் என்ற கேள்வி பலருக்கும் தோன்றலாம்! எண்ணக் கணக்கில்லாத எல்லாச் செல்வங்களையும் கொடுப்பேன் என்பதனை வலியுறுத்தவே ஸ்ரீ செல்வச் சந்நிதி என்னும் பெயரை தானே சூட்டிய பெருமை மிக்க ஸ்தலமே இன்று சந்நிதி என்று அழைக்கப்படும் இந்த மாபெரும் திவ்விய சேஸ்த்திரமாகும். அன்று முருகன் உறுதிமொழி கூறிவைத்த காலடியை இங்கே உள்ள கல்லோடைக் கரையினிலே இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைப்பு

சந்நிதியின் தோற்றம், அமைப்பு, வழிபாட்டுமுறை எல்லாம் சற்று வித்தியாசமானவை! இங்கு வானளவு எழுந்த கோபுரங்களோ, தூபிகளோ இல்லை! ஆலய முன்றில் நந்தியும் சுற்றிவர உள்ள அன்னதான மடங் களும், மருதமரக் காடும், தொண்டமான் ஆறும் சந்நிதிக்கு மெருகூட்டுவதாக உள்ளன.

ஆலயத்தை எத்திசையில் இருந்து பார்த்தாலும் முருகனையும், அங்கு காட்டப்படும் தீபாராதனையும் மட்டும்தான் பார்க்க முடியும்! முருகனின் கையிலுள்ள வேலையே வழிபடும் முறை தொன்று தொட்டு காலம் காலமாக நடைபெற்று வருகின்றது. இவ் ஆலயத்திலே முருகப் பெருமான் வேல் வடிவினிலே மூல மூர்த்தியாக காட்சி கொடுக்கின்றார்.

திருவிழாக் காலங்களிலும் வேல் உருவினிலேயே எழுந்தருளிக் காட்சி கொடுக்கின்றார். இவ் வேலில் சிகண்டி முனிவர் தன்னைத் தாக்க வந்த யானைக்கு வெற்றிலையைக் கிள்ளி வீச, அது வேலாக மரியாதை குறிக்கும் முகமாக வெற்றிலையின் நுனி பதிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். அதுமாத்திரமல்ல! கதிர்காமத்தைப் போலவே வாய் கட்டி பூஜை செய்யும் முறையே இங்கும் காணப்படுகின்றது.

## தொண்டமானாறு உருவாகிய வரலாறு

12ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் குலோத்துங்கன் என்னும் சோழ அரசனின் ஆட்சியில் கருணாகரத் தொண்டமான் என்னும் சிற்றரசனால் இந்த வரலாற்றுப் புகழ்மிக்க தொண்டமானாறு கட்டப்பட்டது! தொண்ட மானால் வெட்டப்பட்ட இந்த ஆறு வல்லி நதியுடன் இணைந்த பகுதியாகும். இந்த வல்லி நதியின் தொடு வாயிலையே கருணாகரத் தொண்டமான் வெட்டி ஆழப்படுத்தி கடலுடன் இணைத்ததால் அது தொண்டமானாறு என அழைக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தின் வரலாறு

16-ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயராலும், அதன் பின்பு ஒல்லாந்தராலும் அழிக்கப்பட்ட இந்த ஆலயம் ஒல்லாந்தர்கால பிற்பகுதியில் மருதர் கதிர்காமர் என்ற ஏழை முருக பக்தரால் மீண்டும் சிறிதானதொரு வணக்கத்தலமாக ஆரம்பிக்கப்பட்டது. தன்மீது அளவு கடந்த பக்திகொண்டு பூஜைகள் செய்து வழிபடும் மருதர் கதிர்காமரிடமே தனக்கு பூஜை செய்யும் உரிமையைக் கொடுக்க விரும்பினார் முருகப்பெருமான்.

தொண்டமானாறு ஆற்றங்கரையினிலே மீன் பிடித்துக் காலத்தைக் கடத்திவந்த கதிர்காமர் அன்றும் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அவரை நோக்கி ஒரு குரல் 'கதிர்காமா! இக்கரைக்கு வா' என்றது! ஆச்சரியத்துடன் அக்கரைக்குச் சென்ற கதிர்காமரிடம் சந்நிதி முருகன் ஒரு சிறுவனாகக் காட்சி கொடுத்தார். அந்தச் சிறுவன் கதிர்காமரை நோக்கி 'இந்த தொண்டைமான் ஆற்றங்கரையிலே இருக்கின்ற பூவரச மரத்தடியில் எனக்கு ஒரு ஆலயம் அமைத்து வழிபடுக" என்று பணித்தான்.

கதிர்காமரோ 'நானோ கடற் தொழில் செய்பவன்! எனக்கு பூஜை முறைகளெல்லாம் தெரியாது' என பணிவுடன் கூற, சிறுவனாக நின்ற முருகனோ 'நான் மந்திர பூஜையை உவந்தாலும் அன்பால் நீ செய்யும் மௌனப் பூஜையையே விரும்புகின்றேன் என்று சொல்ல, 'அதுகூட முறையாக எனக்குத் தெரியாது' என கதிர்காமர் சொல்ல, சிறுவன் கதிர்காமரைக் கண்ணை மூடுமாறுப் பணித்து கதிர்காமம் அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பூஜை முறைகளைக் காண்பித்து வழிபாட்டுக்கு வேல் ஒன்றையும் வழங்கியதாக புராண நூல்கள் கூறுகின்றன.

அன்று தொடக்கம் முரக ஆசார சீலராக மரிய கதிர்காமர் தொண்டமானாற்றங்கரையில் செழிப்புற்று வளர்ந்திருந்த பூவரச மரத்தடியில் வேலை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னதானக் கந்தன்

இவ்வாறு பூஜைகள் செய்து வந்த கதிர்காமர் மனதில் முருகனுக்கு நைவேத்தியம் படைக்கத் தெரியாதே என ஒரு வருத்தம் இருந்தது. அப்படியிருக்கையில் ஒரு நாள் முதியவர் ஒருவர் கதிர்காமரை நோக்கி 'நான் களைப்பாக இருக்கின்றேன். எனக்கு ஆலம் இலையில் கொஞ்சம் பச்சரிசிப் பொங்கலும் பயிற்றங்கறியும் உணவாகத் தந்தால் போதும்! உன்னால் முடியுமா?' என வினவ, பூரிப்படைந்த கதிர்காமர் விரைவாக பொங்கல் பொங்கி, பயிற்றங்காய்க் குழம்பையும் ஊற்றி ஆலம் இலையில் கொடுக்க, முதியவர் 'அற்புதமான பொங்கல்' எனப் பெருமிதமடைந்து 'அங்கே அறுபத்திமூன்று பேர் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் உனக்கும் சேர்த்து அறுபத்தைந்து ஆலம் இலைகளிலே அமுது தரவேண்டும்' என்று சொல்ல, கதிர்காமர் அமுதை அள்ள அள்ள அமுதம் குறையாமல் பெருக, அவற்றை அறுபத்தைந்து ஆலம் இலையில் படைத்து வைத்ததும், படைத்த பின்பு அத்தனை இலைகளும் மாயமாக மறைந்ததும் அதன்பின்பு அந்த முதியவர் முருகனாகக் காட்சி கொடுத்தார். இதனால்தான் இன்றும் செல்வச் சந்நிதியில் பூஜை நேரங்களில் அறுபத்தைந்து ஆலம் இலைகளில் அமுது படைக்கும் மரபு காணப்படுகின்றது.

## 47 அன்னதான மடங்கள்

இலங்கையிலேயே அனேக அன்னதான மடங்களைக் கொண்ட ஆலயமும் சந்நிதி முருகன் ஆலயம்தான்! இங்கு 47 அன்னதான மடங்கள் இருக்கின்றன. இந்த மடங்களில் ஆதரவற்றவர்கள், வயதான காலத்தில் நிம்மதி தேடி வந்தவர்கள், மற்றும் முருக பக்தர்கள் என ஏராளமானவர்கள் தங்கியிருந்து இங்கு வழங்கப்படும் அன்னதானங்கள் மூலமாகவே தங்கள் பசியைப் போக்கிக் கொள்வார்கள். இவை தவிர தினமும் ஆலயத்திற்கு வரும் பக்தர்களும் ஒரு நேர்த்தியாக இந்த மடங்களில் பசியாறிச் செல்வதுமுண்டு! இதனால்தான் சந்நிதி முருகனை அன்னதானக் கந்தன் என அழைக்கின்றார்கள். போர்ச் சூழலில் சிக்கிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மடங்கள் சிதையுண்டு இப்பொழுது பாழடைந்த மண்டபமாக காட்சி தருவது வேதனைக்குரியதாகும்.

## திருவிழா

சந்நிதி முருகப்பெருமானுக்கு ஆவணி மாதத்தில் வரும் பூரணையில் தீர்த்த உற்சவம் ஆண்டு தோறும் நடைபெறும். கோவில் கிணற்றுக்கு அருகே வள்ளிக்கொடி முளைக்கும்போது கொடியேறி திருவிழா பதினைந்து நாட்கள் நடைபெறும். இந்த ஆலயத்திற்கான தேர் வடம் கூட கடலிலேயே வந்து சேர்ந்ததாக வரலாறுகள் கூறுகின்றன! தேர், தீர்த்தத் திருவிழாக் களின்போது முருகனுக்கு முன்பாக காவடி, தூக்குக் காவடி, பாற்காவடி, கரகாட்டம், கற்பூரச்சட்டி, என்றும் தேரின் பின்னால் அங்கப்பிரதட்சணை செய்யும் அடியார்களும், அவற்றின் பின்னால் வரும் பஜனைக் குழுக்களும், உருக்கொண்டு ஆடும் பக்தர்களென அனைத்தும் பக்திப் பரவசமாகவே இருக்கும்.

## பூஜைகள்

இவ் ஆலயத்தில் பூஜைகளும், கிரிகைகளும் வேதாகம முறைப்படி நடப்பதில்லை. பூஜைகள் தனித்துவமான சைவ ஆசார முறையில் நடைபெறுகின்றன. பூஜையின்போது மந்திரங்கள் சொல்லப்படுவதில்லை! முருகனுக்கு நிவேதனமாக 65 ஆலம் இலைகளில் பச்சையரிசிப் பொங்கல் பயிற்றங்காய் கறியுடன் படைப்பார்கள்.

திருவிழாக் காலங்களில் பூக்காரர்களின் தொண்டு மகத்தானது. இப்பூக்காரர்கள் மருதர் கதிர்காமரின் பரம்பரையில் வந்த தொண்டர்களே. உற்சவத்தின்போது சுவாமியை மலர் மாலைகளினால் அலங்காரம் செய்வதும் இத்தொண்டர்களே. இவர்கள் திருவிழாக் காலங்களில் ஆலயத்தில் வழங்கப்படும் உணவுகளைவிட வேறெந்த உணவுகளையும் உண்ணமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயமணி

செல்லச் சந்நிதியின் ஆலயமணியின் கோபுரம் 54 அடி உயரமுள்ளது. உலகில் உள்ள இந்து ஆலயங்களில் சந்நிதியானின் ஆலயகோபுரமே அதிக உயரமான கோபுரம் எனக்கூறப்படுகின்றது! இந்த ஆலய மணியினைச் செய்து கொடுத்தவர் மானிப்பாயைச் சேர்ந்த செல்லமுத்து எனபவரின் மகன் சோமசுந்தரம் ஆவார். இந்த மணியின் நாத ஓசை சந்நிதி ஆலயத்தில் இருந்து மானிப்பாய் வரை கேட்பதாக சொல்லப்படுகின்றது.

யுத்த சூழலால் 1986ம் ஆண்டு எறிகணை பட்டு கோபுரமும், மணியும் சேதமடைந்தன. சில காலங்களின் பின்னர் வெளிநாடுகளில் வாழ்கின்ற முருக அன்பர்களின் விடா முயற்சியால் லண்டனில் மாமணி செய்யப்பட்டு 2002ம் ஆண்டு ஆவணி மாதம் மீண்டும் பொருத்தப்பட்டது. இந்த புதிய மாமணியின் எடை 1250 கிலோ கிராம் எனக் கூறப் படுகின்றது.

## சித்திரதத்தேர்

பல சிறப்புக்களைக் கொண்ட சந்நிதி முருகனின் அழகிய பெரிய தோற்றத்தைக் கொண்ட சித்திரத் தேர் 1986-ஆம் ஆண்டு போரில் அழிவுற்று மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்திற்கான தேர் வடம்கூட கடலிலேயே மிதந்து வந்து சேர்ந்த அற்புதம் இன்றும் அடியார்கள் மனதிலே ஆழப்பதிந்த அதிசயமாகும்!

## கிரிபால சுவாமியார்

மேலை நாடுகளில் வாழ்கின்ற ஏராளமானவர்கள் இந்து சமயத்தின் மீதும் இந்துக் கடவுள்களின் மீதும் ஈர்க்கப்பட்டு அப்படியே துறவிகளாகிப் போன ஏராளமான சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன! அதேபோல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதி முருகனால் ஈர்க்கப்பட்ட ஜெர்மனியைச் சேர்ந்த கிரிபாலா என்பவர் இங்கு சில காலம் பக்தராக இருந்து முருகனுக்குப் பணிவிடைகள் செய்து, பின்னர் சுவாமியாக மாறி முருகனுக்குப் பூஜைகளும் செய்து சன்னதியிலேயே முக்தியடைந்ததும் வரலாற்றுப் பதிவு. (அவருடைய புகைப்படம் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ளது)

கால ஓட்டத்தில் கோலங்கள் மாறுவது போல அன்றிருந்த முருக வழிபாட்டு முறைகளில் சில மாறுதல்கள் ஏற்பட்டு இப்பொழுது உள்ள கோவிலில் உள்ள பூஜை முறைகளிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் கந்தபுராணத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புடன் முருகப்பெருமான் சந்நிதியில் குடியிருப்பதும் இன்றும் அதே நம்பிக்கையுடன் மக்கள் முருகனை வழிபடுவதும் கடவுள்மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையின் அடையாளமே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# அச்சுவேலி இடைக்காடு அருள்மிகு காசி விசுவநாதர் ஆலயம் (முன்னீஸ்வரர் ஆலயம்)

பத்தொன்பதாம் நுற்றாண்டின் பிற்பகுதியில் வல்லிபுரம் அருணாசலம் என்னும் சைவப் பெரியாரால் காசியில் இருந்து பெறப்பட்ட ஒரு சிவலிங்கம் ஒன்றை ஓலைக் கொட்டில் ஒன்றில் வைத்து வழிபட்டு வந்தார். இவ் அருணாசலப் பெரியார் சோதிடம், குறி, கை, ரேகை, அருள்வாக்குக் கூறுவதில் வல்வராக இருந்தார். இதனால் அவர் பெயர் அக்காலத்தில் யாழ் குடா நாடெங்கும் பிரபலமாக இருந்தது. இவர் ஊர் ஊராகச் சென்று இத் தெய்வீகச் சேவையை எதுவித பிரதிபலனும் கருதாமல் செய்து வந்தார்.

இவர் ஒருமுறை மல்லாகம், அளவெட்டி ஆகிய கிராமங்களுக்குச் சென்றபோது இவரின் தெய்வீகத் தன்மையையும், அருள்வாக்கையும் அறிந்த ஒரு கிறிஸ்தவச் செல்வந்தர் இவரைத் தன் இல்லத்திற்கு அழைத்து அவரின் திருப்பாதங்களில் விழுந்து வணங்கி 'தமக்கு விவாகமாகி பத்து வருடங்கள் ஆகியும் பிள்ளைச் செல்வம் கிடைக்கவில்லை' என்றும் 'பிரபல வைத்திய நிபுணர்களிடம் வைத்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தும் எந்தவித பலனும் ஏற்படவில்லை' என்றும் கூறி 'தமக்கு பிள்ளைப்பலன் உண்டா?' என்று அவரிடம் வினயமாக வினாவினார். அருணாச்சலம் அவர்கள் இவரின் முகத்தை சற்று உற்று நோக்கிய பின்னர் 'உமது தந்தையார் ஒரு இந்து அல்லவா? நீர் அரச உத்தியோகத் திற்காகவே கிறிஸ்தவ மதத்திற்கு மாறினீர்!' என்றதும் அந்தச் செல்வந்தர்; வேர் அறுந்த மரம்போல அவரின் திருப்பாதங்களில் விழுந்து வணங்கி 'நீங்கள் கூறியவை அத்தனையும் உண்மை!' எனக்கூறி கைகட்டியபடி கண்ணீர் மல்க நின்றார். உடனே அருணாச்சலப் பெரியார் இவரின் மனைவியையும் வரவழைத்து தன்னிடம் இருந்த விபூதியை எடுத்து இவர்களின் கரங்களில் கொடுத்தும் உச்சந்தலையில் சொறிந்தும் அவர் பரவசநிலை அடைந்து 'உங்கள் இருவருக்கும் இன்றில் இருந்து ஒரு வருடத்திற்குள் காசி விசுவநாதர் அருளால் ஓர் ஆண் குழந்தை பிறக்கும்' என அருள்வாக்கு கூறினார்.

இந் நிகழ்ச்சி நடந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் அக் கிறிஸ்தவ செல்வந்தர் இடைக்காட்டு காசி விசுவநாதர் ஆலயத்திற்கு மாட்டு வண்டியில் யாத்திரை செய்து அருணாசலப் பெரியாரை வணங்கி 'தனக்கு சுவாமியின் அருள்வாக்கின்படி ஒரு ஆண் மகன் பிறந்துள்ளதாகவும், தான் தற்சமயம் தனது தந்தை வழியான சைவ மதத்திற்கு மாறி விட்டதாகவும்' மிக மகிழ்ச்சியோடு கூறி விசுவநாதர் ஆலயத் திருப்பணிக் காக ஒரு பெருந் தொகையையும் கொடுத்தார். அப்பணத்தைப் பெற்ற அருணாசலப் பெரியார் உடனடியாக அப்பணத்தில் கல்லாலும், சுண்ணாம்பாலும் ஆன கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் உள்ளடங்கிய ஆலயத்தை நிர்மாணித்து அதில் மூலவராக காசி விசுவநாதப் பெருமானை ஒரு பெரிய ஆவுடையாரில் பிரதிஷ்டை செய்து வெகு விமர்சையாக மகா கும்பாபிசேகத்தையும் நடத்தினார்.

இச் சைவப் பெரியார் தமது எண்பதாவது வயதில் இறையடி சேர்ந்ததும் அவரது மகனான அ.வல்லிபுரம் அவர்கள் இத் திருத்தலத்தை நிர்வகித்தும் பூசித்தும் வந்தார். அவரொரு அரசாங்க ஊழியராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தமையால் இடமாற்றலாகச் செல்லவேண்டிய கட்டத்தில் அந்தணர் ஒருவர் மூலமாக பூசை வழிபாடுகள் நடந்து வந்தன.

இராணுவத்தினரின் அத்து மீறல்கள் நடந்த காலகட்டத்தில் கிராமமக்கள் இடம் பெயர்ந்தபோது சில ஆண்டுகள் இவ் ஆலயம் பூசைகள் எதுவுமின்றி பராமரிப்பு எதுவுமின்றி பாழடைந்து கிடந்தது. பின் மக்கள் மீள் குடியேறிய பின்னர் அம்மக்களாலும் சைவ அடியார்களாலும் மீண்டும் புனரமைக்கப்பட்டடு பராமரித்தும் பூசித்தும் வருகின்றனர். அச்சுவேலியில் உள்ள இடைக்காடு கோவில் புற்றில் இதுவே முதற் புராதனமான சிவன் ஆலயமாகும்! இத்தலத்தில் வடபால் அமைந்துள்ள நன்னீரூற்றுக் குளமும், ஆவுரிஞ்சிக் கல்லும், சுமை தாங்கியும், அரச மரங்களும் புராதனமானவையாகும்.

திருவெம்பாவைப் பூசையும் ஆனி உத்தர விழாவும் இத் தலத்தில் வெகு விமரிசையாக நடந்து வருகின்றன. இவ் ஆலயத்தின் வடகிழக்கு மூலையில் ஓர் நன்னீர் ஊற்றுக் கிணறு 1980ம் ஆண்டு ஓர் சிவனடி யாரால் வெட்டிக் கட்டப்பட்டது. 1985ம் ஆண்டு கட்டப்பட்ட நிருத்து மண்டபம் இராணுவத்தினரின் தாக்குதலால் சூறையாடப்பட்டது. இன்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன்னர் சுண்ணாம்பால் கட்டப்பட்ட இவ் ஆலயம் இன்று அதே நிலையில் உள்ளது பரிதாபத்திற்குரியதாகும்.

காசி என்னும் புனிதஸ்தலம் இந்தாயாவில் இருப்பதாலோ என்னவோ நம் ஊர்களில் ஊருக்கு ஊர் முருகனுக்கும், பிள்ளையாருக்கும் கோவில்கள் இருப்பதைப்போல விசுவநாதருக்கு அதிகமான கோவில்கள் இல்லை! இப் பெயரில் இன்னும் இரண்டு ஆலயங்கள் இருப்பதாக அறிய முடிகின்றது. ஒன்று பொன்னாலையிலிருந்து கடற்கரையோரமாக பருத்தித்துறை செல்லும் வீதியில் கீரிமலைக் கேணியடியில் இருந்து ஒன்றரைக் கிலோமீற்றர் கிழக்கே நகுலகிரி என்னும் இடத்தில் அமைந்துள்ளது. மற்றொன்று வேலணையில் உள்ள தீவுப்பகுதி செயலாளர் பிரிவு தெற்கில் அமைந்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகுலகிரியில் உள்ள திருத்தலத்தை ஸதாபித்தவர் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த பிரபலமான கடல் கப்பல் கட்டும் தொழிலையும், கடல் வாணிபத்தையும் நடாத்திவந்த உயர்திரு. வள்ளல். வடிவேலு மேஸ்திரியார் எனவும். அவர் காலத்திற்குப் பின்னர் ஸ்ரீமதி சடையம்மா சுவாமிகளின் பிரதம் சிஷ்யன் உயர்திரு. திரு.அகோரசிவதேசிகன் நமசிவாயம் குருநாத சுவாமிகளால் நித்திய பூசைகள் செய்து பராமரிக்கப் பட்டதாக அறிய முடிகின்றது.

வேலணை பெருங்குளத்தில் இன்னொரு காசி சுவாமிநாதர் ஆலயத்தை பெருங்குளம் அம்மன கோவில் என்றும், நால்வர் மடம் என்றும் அழைப்பார்கள். வேலணை மேற்கைச் சேர்ந்த செல்லப்பா என்பவர் 'நால்வர் மடம்' என்னும் பெயரில் மடாலயக் கோவிலாக அமைத்து அதில் அம்மனையும் காசி விசுவநாதரான சிவனையும் மூலவர்களாக வைத்து வணங்கப்பட்டதாகவும் அறிய முடிகின்றது.

சிவனுக்குப் பல பெயர்களில் உள்ள ஆலயங்களில் காசி விசுவ நாதரும் பிரபலமானவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

# மாமாங்கேதீச்சரம் (மட்டக்களப்பு)

ஆடி அமாவாசை என்றால் யாழ்ப்பாணத்து மக்கள் எப்படி கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று அமரத்துவம் அடைந்த தங்களது தகப்பனின் நற்சாந்திக்காக விரதமிருந்து தெற்பை போட்டுக் கிருபைகள் செய்து தங்கள் நற்கடமைகளை செய்து கொள்வார்களோ! அப்படித்தான் மட்டக்களப்பு வாழ் தமிழ் மக்களும் மாமாங்கேத்தீச்சரத் திருத்தலத்தையே நாடுவார்கள். அவ்வளவு தூரம் ஆடி அமாவாசை தீர்த்தச் சிறப்பிற்கு பேர்போன திருத்தலமாக விளங்குவது இப்பகுதியில் விளங்கும் பெருமை இவ் ஆலயத்திற்கு உண்டு.

இந்த ஆலயம், பெயரிலும், ஆலய உள் கட்டமைப்பிலும் சில மாறுபாடுகளைக் கொண்டதாகவே விளங்குகின்றது! ஈஸ்வரம் அல்லது ஈச்சரம் என்று வழங்கும் பெயர் கொண்ட மாமாங்கக் கோவில் சிவன் கோவிலாகவே கருதப்பட்டாலும் மாமாங்கப் பிள்ளையார் கோவிலாகவே மட்டக்களப்பு மக்களால் அழைக்கப்படுகின்றது! அதற்கு முக்கிய காரணம் ஆலய மூலதனத்தில் உள்ள சிவலிங்கமானது பெரும்பாலும் விநாயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கியுடனேயே காட்சியளிப்பதால் விநாயகரே மூலஸ்தனத்தில் எழுந்தருளியிருக்கின்றார் என பக்தர்கள் கருதிக்கொள்கின்றார்கள்.

இத்திருத்தலத்தின் மூர்த்தியைப் பற்றியும் தீர்த்தம் பற்றியும் தொன்று தொட்டு வரும் ஐதீகமான கதைகள் பல இங்கிருக்கின்றன. இவை இரண்டும் இராமாயண காலத்துடன் சம்பந்தப் படுத்தப்பட்டுப் பேசப்படுகின்றன. அத்துடன் காசியில் இருந்து வந்த ஒரு முனிவர் தம் மண்டலத்தில் கொண்டு வந்த கங்கை, ஐமுனை, சரஸ்வதி, கோதாவரி, துங்கபத்திரை, பவானி, காவேரி, தாமிரபரணி, சேது முதலான ஒன்பது மங்கை (பெண்களின் பெயராலமைந்த) தீர்த்தங்களையும் இங்கு அமைந்துள்ள குளத்தில் கலந்து நீராடி இராமலிங்கத்தை வழிபட்டு பெரும் பெயர் பெற்றார் என்றும் அது எல்லா மங்கை நதிகளினதும் தீர்த்தம் கலக்கப்பெற்ற திருக்குளமாதலால் மாமாங்கத் தீர்த்தம் என இது பெயர் பெற்றதென்றும் தீர்த்தப் பெயர்க் காரணமும் ஐதீகமாக வழங்குகின்றது.

மாங்கேச்சுரர் கோவில் இருக்கும் எல்லைக்குட்பட்ட பகுதி 'மாமாங்கம்' என்னும் பெயருடைய ஊராகவே அழைக்கப்படுகின்றது. எனினும் மாமாங்கம் சார்ந்த மக்கள் குடியிருப்பு ஊர்ப்பகுதியின் பெயர் அமிர்தகழி என்பதே ஆகும்.

பிள்ளையாரும் சிவபெருமானும் இருவேறு தெய்வங்கள் அல்லர் 'ஓம்' எனப்படும் பிரணவமே மூல ஒலி என்றும் விநாயகப் பெருமான் அப்பிரணவமே வடிவானவர் என்றும் கூறுவர். எனவே அனைத்துக்கும் மூலமான பரம்பொருளாகிய சிவமும் பிரணவமும் வேறு வேறானவையல்ல என்ற தத்துவத்தைப் போதிப்பதே விநாயகர் அங்கியுடன் சிவபெருமான் அளிக்கும் ஒளி வடிவின் உட்பொருளாகும் என்று ஆன்றோர் கூறுவர்.

இத் தலத்தில் ஆடி அமாவாசைக்குப் பத்து நாட்களுக்கு முன்னரே கொடியேற்றமும் பின் ஒன்பது நாளும் திருவிழாவும் நடந்து அமாவாசைத் தீர்த்தத்துடன் நிறைவுறுதல் ஆண்டுதோறும் இத்தலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சியாகும். இங்கு நடைபெறும் அடுத்த பெருவிழா விநாயக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஷ்டி விரதமும் கயமுகாசூரன் போர் நிகழ்ச்சியுமாகும். கந்தசஷ்டி விரதம் அதற்கான கந்தபுராணப் படிப்பு என்பனவும் இங்கு நடைபெறும் சிறப்பான நிகழ்ச்சிகளாகும். எனினும் தைப்பூசத்தன்று நவக்கிரகக் கோவிலில் நவக்கிரகங்களுக்கு தனித்தனி அபிஷேகமும் செய்து விசேட பூசையன்று நடப்பது மற்றய கோவில்களில் நடைபெறாதவொரு தனி நிகழ்ச்சியாகும். கோவிற் பூசைகளை பிராமணக் குருக்களே வேதாகம முறைப்படி தினம் மூன்று வேளைகளும் ஆற்றி வருகின்றார்.

எமக்குக் கிடைத்துள்ள குறிப்புக்களின்படி 1880ம் ஆண்டில்தான் தற்போதுள்ள அமைப்பினை மாமாங்கக் கோவில் பெற்று முதலாவது கும்பாபிஷேகமும் நடைபெற்றிருக்கின்றது. அக்காலம் முதல் கொடியேற்றத்தினை அடுத்து ஐந்து திருவிழாக்களும் தீர்த்தமும் நடைபெற்று ஒழுங்காக இருந்துள்ளது. அப்போது நடைபெற்ற கோவில் கட்டிட வேலைகளுக்கு வேண்டிய செங்கற்களையும் சிரமதான வேலையினையும் அவ்வாறு வேலை செய்வோருக்கான உணவு வசதிகள் முதலியனவற்றையும் கொத்தியாவலை, கன்னங்குடா, ஊறணி, செங்கலடி முதலான கிராமங்களில் வாழ்ந்த மக்கள் மனமுவந்தளித்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

திருவிழாக்களை மேலும் நடாத்துவதற்குச் சேர்ந்தோரின் தொகை முதலானவற்றை ஒட்டி திருவிழாக்கள் பத்தாக அதிகரிக்கப் பெற்றுள்ளன. எனினும் இந்த மாற்றம் எப்போதிருந்து இடம்பெற்றது என்பது பற்றி தெளிவாகத் தெரியவில்லை! 1963-ஆம் ஆண்டு கோவிலில் சில புனரத்தான வேலைகளும் தொடர்ந்து மகா கும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தலத்தின் பெரும் சிறப்பு நோக்கி திரு. ராஜன் செல்வநாயகம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அரசாங்கத்தைக் கொண்டு பெரும் பணச் செலவில் தூர்ந்து போயிருந்த இவ் ஆலயத்தின் திருக்குழத்தை மேலும் ஆகர்ந்து குளத்தைச் சுற்றிப் படிக்கட்டுகளும் அமைத்து மின்சார விளக்குகளால் அழகுபடுத்தி திருவீதிகளையும் அகலமாக்கித் திருக்குளத்தின் புனிதத்தையும் மேலும் வளப்படுத்தியுள்ளார். தற்பொழுது இவ் ஆலயத்தை மட்டக்களப்பு இந்துக்களின் புனிதத்தலமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகடனப்படுத்தல் வேண்டும் என்ற கோரிக்கையும் பொதுமக்களிடையே வலுப்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு வளர்ந்து கொண்டே வரும் மாமாங்கேச்சுரத்தின் மீது முன்பிருந்தே புலவர்கள் பல பாடல்களை அருளியுள்ளனர். வித்துவான் சரவணமுத்து அவர்களால் 'மாமாங்கேச்சுரர் கீர்த்தனை' என்னும் நூலும் 'மாமாங்கர் பதிகம்' என்ற நூலும் பாடப்பெற்றுள்ளன. இயல் இசை நாடகம் என்ற மூன்றிலும் வல்லவரான திருமிகு சரவணமுத்தனாரது இசைவளம் இழையோடிய பாடல்களமைந்த இந்நூற் பாடல்கள் படிப்போரது கல் மனங்களையும் பக்தியில் கரைத்துவிட வல்லன. 'மாமாங்கர் ஊஞ்சல்" 'மாமாங்கர் காவடிச் சிந்து' என்ற வேறு இரு நூல்களும் இத்தலத்தின் மீது பாடப்பட்டுள்ளன.

மாமாங்கரர்மீது பித்துக்கொண்டவர் போன்ற பெரும் பக்தரான காலஞ்சென்ற பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்கள் அவர்கள் 'மாங்கேசுரர் பதிகம்' என்ற பக்தி நலம் சொட்டும் விருத்தம், விருத்தப்பாக்களால் அமைந்த ஒரு நூலைப் பாடியுள்ளார். புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்கள் அளித்துள்ள 'மாங்கேசுரப் பதிகமும்' மண்டூர் பூ. சின்னையா ஆசிரியர் அவர்கள் யாத்துள்ள 'மாமாங்கப் பிள்ளையார் விருத்தம்' என்னும் பக்திப் பதிக நூலும் மாங்கேசுரப் பெருமானது திருவருட் பெருக்கினை நன்கு விளக்குவனவாகும்.

இந் நூல்கள் எவையும் தற்போது புழக்கத்தில் உள்ளதாக தெரிய வில்லை. ஆனாலும் இப் பாடல்களின மூலச் சுவடிகள் ஆலய நிர்வாகத் தினரால் பாதுகாக்கப் படுகின்றதாக அறியப் படுகின்றது. இவை அனைத்தும் மீண்டும் வெளிக்கொணருதல் இத் திருத்தல வளத்துக்கு மட்டுமின்றித் தமிழ் மொழியினதும் தமிழ் இலக்கியப் புலமையினதும் வளத்திற்குச் சான்றாகிப் பெரும் பயன் தர வல்லதாகும் என ஆலய நிர்வாகம் நம்புவதாகக் கருதப்படுகின்றது.

*உசாத்துணை - மட்டக்களப்பு மாங்கேசுரர் ஆலய நிர்வாகம்*
*15-மேலமாடித் தெரு மட்டக்களப்பு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

# அருள்மிகு மாத்தளை முத்துமாரியம்மன்

நந்தினி

இந்து சமயம் சார்ந்த மக்கள் வழிபடுவதற்கென இருக்கின்ற தெய்வங்களில் அதிகமான எண்ணிக்கையுடைய தெய்வம் அம்மன்தான். அம்மனை ஒவ்வொரு ஊர்களிலும் வெவ்வேறு பெயர்களில் கூறி ஆலயம் அமைத்து வழிபட்டு வருகின்றார்கள். அந்த வரிசையில் மிகவும் புகழ்பெற்ற அம்மன் ஆலயங்களில் ஒன்றாக விளங்குவது மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயமாகும்

மலையகத்தின் தலைவாசலாக விளங்கும் மாத்தளை மாநகரில் வீற்றிருந்து அருள் சுரக்கின்றது ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில். கொழும்பில் இருந்து 90 மைல் தொலை தூரத்திலும், கண்டியில் இருந்து 16 மைல் தொலை தூரத்திலும் உள்ள அருவிகள் கொட்டும் அழகு மலைக் குன்றுகளுக்கு கிழக்கேயும் மகாவலி கங்கையின் தீர்த்தக் கரைக்கு மேற்கிலுமாக இத் திருத்தலம் அமைந்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வரலாறு...

அடர்ந்த காட்டுக்கு மத்தியில் பண்ணக்காமம் என்று அழைக்கப் பட்ட இடத்தில் சிறிய மடம் ஒன்று இருந்தது. நெடுந்தூரம் கால் நடையாக வருபவர்களும், மாட்டு வண்டியில் பயணித்துக் கொள்பவர்களும் இம்மடத்தில் தங்கி சமைத்து உணவருந்தி மாடுகளுக்கும் உணவு, தண்ணீர் போன்றவற்றைக் கொடுத்து ஓய்வெடுத்துச் செல்வது வழக்கம்.

ஒருநாள் இங்கு ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சிகை அலங்காரம் செய்யும் தொழிலாளி ஒருவரின் கனவில் அன்னை பராசக்தியான முத்துமாரியம்மன் தோன்றி தனது உருவத்தை வெளிப்படுத்தி அருகில் உள்ள வில்வ மரத்தடியில் தன்னை பூசிக்குமாறு வேண்டிக் கொண்டதற் கிணங்க அன்றில் இருந்து அம் மரத்தடியில் முத்துமாரியம்மன் சிலையை வைத்து விளக்கேற்றி அன்னையை தரிசிக்கத் தொடங்கினார்கள்.

மடத்தில் தங்கியிருந்த விஸ்வபிரம்ம குலத்தைச் சேர்ந்த ஆச்சாரியார் ஒருவர் நிரந்தரமாக மடத்தில் தங்கியிருந்து வழிபாடுகளை நடாத்தி வந்ததுடன் மடத்தில் தங்கிச் செல்லும் பயணிகளுக்கு உதவிகளும் செய்து வந்தார்.

சிவகங்கையைச் சேர்ந்த கருப்பண்ணசாமி என்பவர் அன்னையின் சிலைக்குமேல் கூரையமைத்து சிறிய கொட்டிலாக ஆலயத்தை அமைத்தார். அம்மனிடம் தாங்கள் வைக்கும் வேண்டுதல்கள் பலிப்பதை உணர்ந்த பக்தர்கள் அம்மனுக்கு தாராளமாக காணிக்கைகள், நன்கொடைகளை வழங்க சிறிதாக இருந்த ஆலயத்தைப் பெருப்பித்தார்கள். 1850களில் சிறு குடிலாக இருந்த இந்த ஆலயம் இன்று 108 அடி உயரமான கோபுரத்துடன் பஞ்ச தேர்களையும் கொண்டு உலகப்பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

1958-ஆம் ஆண்டில் இவ் ஆலயத்தின் மிகப் பழமையான கட்டிடங்கள் அனைத்தும் அகற்றப்பட்டு ஆலயம் விஸ்தரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960-ஆம் ஆண்டு மூலஸ்தான கோபுரம் அமைக்கப்பட்டதுடன் கொடிக்கம்பமும் நிர்மாணிக்கப்பட்டுக் குடமுழுக்கும் செய்யப்பட்டது. பின்னர் 1971-ஆம் ஆண்டில் நடராஜர் சபைக் கோவில் கட்டப்பட்டு கும்பாபிசேகமும் செய்யப்பட்டது. 1973ல் மேற்குத் திசைப்பக்கமாக இருக்கும் இராஜ கோபுரம் தமிழ்நாடு ராமநாதபுரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் என்னும் ஸ்தபதியின் கைவண்ணத்தினால் நிர்மாணிக்கப்பட்டு, கும்பாபிசேகமும் செய்யப்பட்டது. இதே ஆண்டில் மேற்கு வாசலில் மணிக்கோபுரமும் அமைக்கப்பட்டு அதற்கும் கும்பாபிசேகம் செய்யப்பட்டது. அதன் பின்னர் 1992-ஆம் ஆண்டில் வசந்த மண்டபம் திருத்தியமைக்கப்பட்டு புதிய விமான மண்டபம் கட்டப் பட்டதுடன் தீர்த்தக் கேணியும் அமைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இருந்த பயணிகள் தங்கிச் செல்லும் மடம் 1947-ஆம் ஆண்டில் மகாவலி கங்கையில் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கத்தால் மடத்தின் பெரும் பகுதி அழிந்துபோனது. ஆச்சாரியார் மடம் என்று அழைக்கப்பட்ட இம் மடத்தடியில் ரதங்களுக்கு பூஜை செய்யப்படும் (அதாவது ரதங்கள் ஆலயத்தில் இருந்து பிரதான வீதிக்கு வரும்போது ஆலய வெளிவாசலில் பட்டுச்சாத்தி பூஜைகள் செய்யப்படுவது) இந்த வழக்கம் இப்பொழுதும் பின்பற்றப் படுகின்றது.

தேர் வெளிவீதி வருவதற்கு முன்பாக விஸ்வ பிரம்ம குலத்தவர்கள் பட்டுச் சாத்தி வழிபாடு செய்வதுடன் தேர்களுக்கு கட்டை கொடுத்து நெறிப்படுத்துவார்கள். இதற்காக விஸ்வ பிரம்ம குலத்தவர்களுக்குத் தனியாக அழைப்பு விடுத்து காளாஞ்சி பிரசாதம் கொடுத்துவரும் சம்பிரதாயம் அன்றில் இருந்து இன்றுவரை நடந்துகொண்டே இருக்கின்றது.

மேலும் கருப்பண்ணசாமி வைகாசி விசாகத் திருவிழாவை அதிவிசேட திருவிழாவாக நடாத்தி வருகின்றார்கள். இந்தத் திருவிழா இப்பொழுதும் அவர்களது குடும்ப உபயமாகவே நடத்தப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் வழிபாடு தொடக்கப்பட்ட வில்வமரம் தல விருட்சமாகத் திகழ்ந்தது. தற்போது இந்த மரத்தைச் சுற்றி கம்பி வேலி அமைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு குடிலாக இருந்த இக்கோவிலைப் பெருப்பிக்கப்படுவதற்காக சுப்பாப்பிள்ளை என்பவர் திருப்பணி புரிந்ததுடன் அருகில் உள்ள நிலங்களையும் வாங்கி 1852-ல் மானியம் செய்து வைத்துள்ளார். இக்காலப்பகுதியில் பூசாரிகளே ஆலயத்தில் பூஜைகளை செய்து வந்துள்ளனர். பின்னர்தான் பிராமணர்கள் அமர்த்தப்பட்டு பூஜை வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

1956-ஆம் ஆண்டுக்கு முன்னர் மாமாங்கத் தீர்த்தம் (12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வருவது) ஆலயத்தில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள கடுகங்கை என்ற இடத்தில் மகாவலி கங்கையின் கரையிலேயே நடைபெற்று வந்தது. இப்பொழுது ஆலய வளாகத்திலேயே பெரிய தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டுத் தீர்த்தோற்சவம் சிறப்பாகவே நடைபெற்று வருகின்றது.

ஆரம்பகாலத்தில் இவ்வாலயத்தில் உயிர்ப்பலி கொடுப்பதும் நடைபெற்றுள்ளது! மகோற்சவத்தின்போது ரதம் வெளிவீதி செல்வதற்கு முன்பாக உயிர்ப்பலி கொடுக்கப்பட்டு பூஜைகள் நடைபெறும். காலப்போக்கில் இந்த நடைமுறை மாற்றியமைக்கப்பட்டு சாம்பல் பூசணி வெட்டி பலிபூஜை நடத்தப்பட்டு வருகின்றது.

1963-ஆம் ஆண்டளவில் வேதமுறைப்படி விஸ்தரிக்கப்பட்ட ஆலயத்தின் பிரகாரத்தில் பரிவார மூர்த்திகள் பிரதிஸ்ட்டை செய்யப்பட்டதுடன் மூலஸ்தானமும் விஸ்தரிக்கப்பட்டு அர்த்த மண்டபம், மஹா மண்டபம், தரிசன மண்டபம் என பல மண்டபங்களும் அமைக்கப்பட்டன.

ஆரம்பத்தில் வருடாந்த திருவிழாக்கள் மிக எளிமையாகவே நடைபெற்றன. காலப்போக்கில் சாதாரண உள்வீதித் திருவிழாக்களைக்கூட சப்பரம் கட்டி சுவாமிகளை அலங்கரித்து நடாத்தி வருகின்றார்கள். 1934-ஆம் ஆண்டளவில் கட்டுத்தேர்கள் கட்டி அலங்கரித்து விநாயகர் தேர், சிவனம்பாள் தேர், முருகன் தேர் என முத்தேர்களின் பவனி நடைபெற்றது. 1977-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்தபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பித்துரை என்பவரது கைவண்ணத்தால் நிர்மாணிக்கப்பட்ட பஞ்ச ரதங்கள் மாத்தளை மாநகரில் வெள்ளோட்டம் விடப்பட்டன. இந்த ரதங்கள் அனைத்தும் 1983-ஆம் ஆண்டு நடைபெற்ற யூலைக் கலவரத்தில் மத வெறியர்களாலும், இன வெறியர்களாலும் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.

பஞ்சரதங்களுடன் சேர்த்து ஆலய அலுவலகம், கல்யாண மண்டபம் உட்பட ஏனைய கட்டிடங்கள் தளபாடங்கள், ஆலயத்திற்குச் சொந்தமான வீடுகள் என அனைத்தும் எரித்து அழிக்கப்பட்டது. பின்னர் 1992-ஆம் ஆண்டு மீண்டும் பஞ்சரதப் பணிகள் ஆரம்பிக்கப்ட்டு 1993-ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐந்தாம் திகதி வெள்ளோட்டப் பெருவிழா நடைபெற்றது.

## வழிபாட்டுமுறை..

ஆரம்ப காலம் முதல் இன, மத வேறுபாடின்றி சகல மக்களையும் வரவேற்கும் பண்பு கால காலமாக இத் தேவாலயத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இதனால் பிற மதத்தவர்களும் தாங்கள் விரும்பியவாறு அன்னையைத் தரிசித்துச் செல்வதையும் காணமுடிகின்றது. அத்தோடு ஆலயத்தில் காலநேரம் தவறாது ஐந்துகாலப் பூஜைகளும், நித்திய கிரிகைகளும் நடாத்தப்படுகின்றது. எவருடைய வருகைகளையும் எதிர்பாராது குறித்த நேரத்தில் பூஜைகளை ஆரம்பித்து சிறப்பாகச் செய்து முடிப்பது ஒரு மரபாகப் பேணப்பட்டு வருகின்றது.

பஞ்சாங்கத்தின்படி இவ் ஆலயத்தில் பன்னிரண்டு மாதங்களும் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. மாதம்தோறும் பௌர்ணமி தினத்தன்று சக்ராயந்திர பூஜையும், சுமங்கலி தீப பூஜையும் நடைபெறு கின்றது. இத்துடன் மகத்துவமும், சிறப்பும் மிக்கதாக மாசி மகோற்சவம் நடத்தப்பட்டு வருகின்றது.

கொடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டு 26 நாட்கள் தொடர்ந்து திருவிழாக் கள் நடைபெறும். இக்காலத்தில் தினமும் பகலும் இரவும் உள்வீதித் திருவிழாக்களும், அம்பிகைக்கு 108 சங்காபிசேகமும், 108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்டோத்திரமும் பகலில் அன்னதானமும் நடாத்தப்படுகின்றது. இறுதி நாளன்று பஞ்சரதப் பவனி பக்திப் பரவசத்துடன் நடாத்தப்படுகின்றது. இத் தேர்த் திருவிழாவைக் கண்டு களிக்க நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வருவார்கள். பஞ்சரதத் திருவிழாவிற்கு முதல்நாள் சப்பரத்திருவிழாவும் சிறப்பாக நடைபெறும். அத்தோடு தீர்த்தோற்சவம், பூங்காவனம் ஆகிய திருவிழாக்களும் சிறப்பாகவே நடைபெறும்.

உற்சவ காலங்களில் நித்திய பூசைகள், கிரிகைகள் போன்றவை அடியார்களது நன்மை கருதி முன்கூட்டியே அறிவிக்கப்படுவதால் எவரும் சிரமமின்றி அம்பாளின் அருளாசியைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பாக உள்ளது. இவ்வாறு செயலாற்றுவது இவ் ஆலயத்தின் முக்கிய செயல்பாடாகும்.

## இராஜ கோபுரத் திருப்பணி..

இத்தேவஸ்தானத்தில் நீண்டகாலமாக அறங்காவலர் பதவியை வகித்த அமரர் குமாரசாமி அவர்களும், அமரர் மாரிமுத்துச் செட்டியார் அவர்களும் இவ் ஆலயத்தை சிறந்த முறையில் நிர்வாகித்த பெருமைக்கு உரியவர்கள்.

மாரிமுத்துச் செட்டியார் காலத்தில்தான் ராஜகோபுரத் திருப்பணி நடைபெற்றது. கோபுரம் இல்லாத ஊருக்கு மகத்துவம் இல்லை என்னும் பெரியோர் வாக்குப்படியும், மாத்தளையின் எல்லைக்குள் வரும்போது அம்பாளின் தரிசனம் அனைவருக்கும் கிடைக்கவேண்டும் என்ற நீண்ட காலக் கனவின் பிரதிபலிப்போடு இலங்கையில் அதிகூடிய உயரமான 108 அடி நவதள நவகலசங்கள் உடைய ராஜ கோபுரம் அமைக்கப்பட்டது.

1979-ஆம் ஆண்டளவில் அப்போதைய நிர்வாகத்தால் வடக்கு வீதிப்பக்க வாசல் திறக்கப்பட்டு சிறிய அளவில் கோபுரம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்படடது. ஆனால் அது நிறைவேறவில்லை. அந்தப் பகுதி பாரிய பள்ளமும், நீரோடையும் கொண்டிருந்ததால் அப்பகுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ கோபுரம் அமையும் என்றோ, வெளிவீதி அமைக்க முடியும் என்றோ எவராலும் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. ஆனால் அந்தப் பள்ளம் அனைத்தும் மண் நிரப்பி சமப்படுத்தப்பட்டு வெளிவீதி அமைக்கப் பட்டதுடன் 108 அடி உயரமான ராஜ கோபுரமும் அமைக்கப்பட்டது. கோபுர கும்பாபிசேகம் 11-12-2005-ல் நடாத்தப்பட்டது.

1960-ஆம் ஆண்டில் முதலாவது மஹா கும்பாபிசேகமும், 1974-ஆம் ஆண்டில் இரண்டாவது மஹா கும்பாபிசேகமும், 1989-ஆம் ஆணடில் மூன்றாவது மஹா கும்பாபிசேகமும், 2002-ஆம் ஆண்டில் நான்காவது மஹா கும்பாபிசேகமும் நடைபெற்றன.

அத்துடன் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தின் ஊடாக சமய வழிபாட்டுடன் கல்விப் பணிகளையும், கலைகளையும் பேணிப் பாதுகாத்து வளர்த்து வந்தார்கள். அதில் முக்கியமாக காமன் கூத்து என்னும் கலையை மிகப் பயபக்தியோடு வளர்த்து வந்தார்கள். காமன் கூத்து அம்பிகையின் பதியில் வருடந்தோறும் முன்பு நடாத்தப்பட்டு வந்ததாக நாங்கள் தேடிய தரவுகள் மூலமாக அறிய முடிகின்றது. (இப்பொழுது கூத்து நடை பெறுவதில்லை)

இந்து ஆலயங்களில் அறநெறிப் பாடசாலைகள் உருவாவதற்கு வழிகாட்டியாக இருந்து முத்துமாரியம்மன் ஆலயம் திகழ்ந்திருக்கின்றது.

இந்து சமயத்தவர்களுக்குப் பெருமை சேர்க்கும் இந்த அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம் மாத்தளைக்கும் பெருமை சேர்க்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

# வட்டுக்கோட்டை
# அருள்மிகு வீரபத்திர சிவன் கோவில்

*குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்*
*குமிண் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம்போல் மேனியில்*
*பால்வெண் ணீறும்*
*இனித்த முடைய எடுத்த பொற்பாதமுங்*
*காணப் பெற்றால்*
*மனிதப் பிறவியும் வேண்டுவதே*
*இந்த மானிலத்தே*

*(திருச்சிற்றம்பலம்)*

இந்துமாக் கடலில் மறைந்த குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியாக விளங்குவது எங்கள் ஈழ மணித்திருநாடு. இதன் நான்கு புறங்களிலும் நான்கு சிவாலயங்கள் அமைந்திருந்தன! அவற்றுள் கிழக்கே திருக்கோணேஸ்வரமும், மேற்கே மன்னாரை அடுத்து திருக்கேதீஸ்வரமும், மட்டுமே இன்று இருக்கின்றன. இவை தேவாரப் பாடல்கள் பெற்றவை! திருமூலதேவர் இந்த நாட்டினைச் சிவபூமி எனச் செப்பினர் என்று சொல்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திருநாட்டின் சிகரமென கற்றோர் புகழும் யாழ்ப்பாணம் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது. இதன் மேல் பகுதியில் வளமெல்லாம் நிறைந்த வட்டுக்கோட்டையூர் அமைந்துள்ளது. அங்கு கம்பீரமாக வீற்றிருப்பவர் வீரபத்திரர்.

*ஆத்தியணி வேணியர்தம் அருளாணை*
*வழிவந்த அமல போற்றி*
*தீத்தொழில் செய் சிறுவிதிதன் வேள்வியொடு*
*தீமையுள் சிதைத்தாய் போற்றி*

*ஏத்திநிற்கும் அடியவர்தம் இடர்குலமும்*
*வினைமாகும் இல்லை யாக்கில்*
*காத்தருளும் வீரபத்திர வட்டூராய்*
*கடிமலர்த்தாள் போற்றி போற்றி*

வட்டுக்கோட்டையூரில் பண்டுதொட்டே செந்தமிழ்த் தொல்குடிகள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுள் ஒரு பாலர் குளம் தொட்டு வளம் பெருக்கி மேழிச் செல்வத்தைப் பாதுகாத்து வருகின்றனர். மற்றும் ஒரு பாலர் வங்கமூர்ந்து திரைகடலோடித் திரவியம் சேர்க்கின்றனர். வேறுசிலர் செழுங்கலை பயின்று ஏனையோர்க்கு இன்சுவை நல்கின்றனர். மேலும் சிலர் சித்த மருத்துவத்தில் தேர்ந்து சேவை ஆற்றுகின்றனர். சுருங்கக் கூறின் வட்டுக்கோட்டையை வானவர் நாடு எனக் கூறலாம்.

ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்னர் மேலைப்புல மாந்தரான போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் இலங்கையைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். வியாபாரத்திற்காக வந்த இவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தங்களது மொழி, கலாச்சாரம் ஆகியவனவற்றைப் பரப்பும் பணிகளில் ஈடுபட்டனர். இவர்கள் வட்டுக்கோட்டையூருக்கு 1811ம் ஆண்டிலேயே கால் பதித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் கலாச்சாரப் பரப்பல் காரணமாக நம்மவர்களில் பெரும்பான்மையானவர்கள் சைவ நெறியை விட்டு கிறிஸ்துவ நெறியில் செல்ல ஆரம்பித்தனர். அவர்களை மீண்டும் சைவ நெறிக்கு அழைத்துவர நமது பெரியோர்கள் பலர் அயராது உழைத்தனர்! இன்றும்கூட வட்டுக்கோடடையில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் கல்லூரியும், பெரிய கிறிஸ்தவத் தேவாலயமும் அவர்களையே நினைவூட்டுகின்றன.

வட்டுக்கோட்டையில் நெடுங்காலமாக ஒரு வீரபத்திரர் கோவில் இருந்ததாம். அது ஓலைக் குடிசையில் இருந்து பின்னர் வைரக் கற்களால் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக பேசப்படுகின்றது. அங்குள்ள பழையகாலச் சிலைகள் பஞ்ச லோகங்களால் உருவாக்கப்பட்டன. இக்கோவிலில் பத்திரனும் பத்திரையும் உற்சவ வேளைகளில் திரு உலா வருவது வழக்கம்.

வட்டுக்கோட்டையில் சிறப்பு மிக்க குடிகளில் வீரமாகாளர் குடியும் ஒன்று. வீரபத்திரர் சுவாமியை குலதெய்வமாகக் கொண்டுள்ள இவர் சித்த வைத்தியத் துறையில் உள்ள மூன்று துறைகளிலும் வல்லவர் நல்லவர் எனப் பெயர் பெற்றவர். வீரமாகாளியாருக்கு கணபதியார் என்னும் புதல்வர் இருந்தார். கணபதியாருக்கு அப்பா, சின்னப்பா, கார்த்திகேயர் என மூன்று புதல்வர்கள் இருந்தனர். இவர்களை முதலி என்றும் அழைப்பதுண்டு. இதில் அப்பாமுதலி சைவ சித்தாந்த நூல்களையும் திருமறைகளையும் இனிது கற்றவர். சித்த வைத்தியத்தில் இவரை ஊரும் நாடும் போற்றி வந்தது. விசுவேசர் புராணம் இவரை

*வேண்டு சித்த மருத்துவநூல் அளக்கருண்டு*
*மேவினர்தம் அருநோய்கள் தீர்த்த மேலோன்*
*ஆண்டொரு நூற்றிவ் வவனி வைகி*
*அரியதவ ஒழுக்கங்காத் துயர்ந்த தோன்றல்*
*நீண்டசிவ தளிநி றுவி நிபத்தம் எல்லாம்*
*நிமலவிக வேசருக்கி யற்று நேயன்*
*காண்டகுசீர் சிவவப்பா முதலி என்னும்*
*காவலரை உளதிருத்திக் கருதல் செய்வாம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசித்தர் அப்பர்முதலி ஓலைக்குடிசையில் இருந்த வீரபத்திர சுவாமியை விரிவாக்கி உறுதியான கற்சுவரினால் கட்ட எண்ணியபோது அவ்விடத்தில் சிவலிங்கப் பெருமானை வைப்பதே சாலச் சிறந்ததாக இருக்கும் என எண்ணி நிலத்தை வெட்டியபோது அவ்விடத்தில் பெரிய பெரிய கற்பாளங்கள் இருந்தன! அவை முன்பே அவ்விடத்தில் அரியதோர் ஆலயம் இருந்து மறைந்த செய்தியை உறுதியாக்கியது.

வட்டுக்கோட்டையில் ஒரு சிவாலயத்தை அமைப்பதற்காக வட்டுக் கோட்டைக்கு அருகே உள்ள தொல்புரத்தில் வசித்து வந்த கோணமலை என்னும் பெரியாரின் உதவியால் காசியம்பதியில் இருந்து சிவலிங்கம் ஒன்றை வருவித்தனர். அது சிவாகம விதிப்படி பிரதிட்டை செய்யப்பட்டது. இவருடன் அங்கு விசாலாட்சி சமேத விசுவேசர் ஆகியோரும் அருள் பாலித்து வருகின்றார்கள்.

ஆலயத்தின் வடிவமைப்பு இப்படியாக அமைந்துள்ளது. முதலில் கொடிக் கம்பத்தைக் காண்கின்றோம். இதனை தூலலிங்கம் என்பார்கள். அடுத்து பலிபீடத்தோடு திருநந்திதேவர் உள்ளார். கொடிக்கம்பத்தின் அடியில் தம்ப வினாயகரும், சூரியன், அக்கினி, சந்திரன் ஆகியோரும் காட்சி தருகின்றனர். அடுத்து சிதம்பரேசர் சிவகாமி அம்மையுடன் வீற்றிருக்கின்றார். கருவறை மாடத்தின் தென்பால் நடன கணபதியும், தட்சணாமூர்த்தியும் காணப்படுகின்றனர். மேற்கில் லிங்கோற்பவர் உள்ளார். வடபால் பிரம்ம தேவரும் சிவ துர்க்கையும் இருக்கின்றனர்.

இனி பரவசமூர்த்திகளைப் பார்ப்போம். தேவியர் புடை நிற்க பாம்பணையில் பள்ளி கொள்கின்றார் திருமால். அடுத்து சந்தான கோபாலனும், தொடர்ந்து கணபதி கோட்டமும் மற்றும் வீரபத்திரர் பத்திரையுடன் நின்றவண்ணம் மிகப்பெரிய சிலா விக்கிரமாகக் காட்சி தருகின்றார். பின்புறத்தில் பஞ்சலிங்கம் காணப்படுகின்றது. இதையடுத்து முருகப்பெருமான் தேவசேனா வள்ளிநாயகி உடன் வீற்றிருக்கின்றார். இவரை அடுத்து சனீஸ்வரர் தெற்கு நோக்கியுள்ளார். கருவறையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமுகைக்கு எதிரே உள்ள கோவிலில் சண்டியம் பெருமான் காட்சி தருகின்றார். மேலுஞ் சென்றால் நவக்கிரகங்களின் கோவில் உண்டு. அவர்களைத் தாண்டினால் உற்சவ மூர்த்திகளைக் காணலாம். இறுதியாக பைரவர் கோட்டம் உண்டு. இதற்கு வடபுலத்தில் யாகசாலை அமைந்திருக் கின்றது. ஆலயத்தின் வெளிப்புறத்து ஈசான மூலையில் சிவஅப்பா முதலியாரின் நினைவாலயமும் (இலிங்கம்) தீர்த்தக் கிணறும் அருகில் தண்டபாணி திருவுருவமும் அமைந்துள்ளது.

இங்கு நித்திய பூசை காலை மாலை இருவேளைகளிலும் நடைபெற்று வருகின்றது. நைமித்திய பூசை விசேட பூசையாகும். திங்கள், வெள்ளி, மற்றும் பிரதோசம், மாதப்பிறப்பு, கார்த்திகை சதுர்த்தி, பூரணை, நடேசர் அபிசேகம், கந்தசட்டி என்பனவும் நடைபெறுகின்றது.

நித்திய கிருத்தியம், நாளாந்த பூசையிலும் மகாபஞ்ச கிருத்தியம் மற்றும் கொடியேற்ற விழாக்களிலும் நடைபெறுகின்றது. கிருத்தியம் என்பது தொழில் அதாவது படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல், என்பனவாகும்.

அந்தணக் குருமாரே வீரபத்திரருக்கு பூசை செய்வார்கள். நிர்வாகத்தை சிவ அப்பா முதலியும், அவர்பின் கந்தையா முதலியும் அதையடுத்து இராச வைத்தியர் அ.க.குமாரசாமி அவர்களும் அவரது தம்பி வைத்தியசிகாமணி அ.க.காசிப்பிள்ளையும் பரிபாலித்து வந்தார்கள். தற்பொழுது வைத்தியக் கலாநிதி கா.சுமந்திரன் அவர்கள் பரிபாலித்து வருகின்றார்.

இவ் வீரபத்திரர் கோவிலின் கோபுர வேலைகள் நிதிப்பற்றாமை காரணமாக பாதியிலேயே நின்றுவிட்டது. தற்பொழுது அதனைத் தொடர்வதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வள்ளலே அமலா போற்றி*
*வந்திடும் அல்லல் எல்லாம்*
*பொள்ளென விடியப் போந்த*
*பொற்கதிர் பரிதி போற்றி*
*விள்ளுசீர் விசானை அன்னை*
*மேவுசெம் பொருளே போற்றி*
*வள்ளியார் வதியும் வட்டூர்*
*விசுவேச அடிகாள் போற்றி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் 3

# ஊர் மணம்

மண்ணில் எங்களோடு வாழ்ந்த சில உயிரினங்கள் - மற்றும் மரங்கள் - என மறக்கமுடியாத சில பதிவுகள் - என் நினைவுகளில் வந்தவை மட்டும்.

## 1

## நாய் எங்கள் தோழன்

மாதா மாதம் மண் வாசனையில் நம் மண்ணின் பல வாசங்களை முகர்ந்துகொண்டிருக்கும் நாங்கள் இந்த மாதம் நாம் வாழ்ந்த மண்ணில் நம்மோடு இணைந்து நமது செல்லப் பிள்ளைகளாக... நமது நண்பர்களாக... நமது இல்லங்களில் நம்மோடு தாமும் எங்கள் உறவுகளாக வாழ்ந்து வந்த நாய் என்னும் அந்த நன்றியுள்ள தோழனைப் பதிவு செய்து கொள்கின்றோம்.

'நாய்' இப்படிச் சொல்லும்போதே இது ஒரு இழிவான சொல்லாகவே கருதப்படுகின்றது! சில கெட்ட பழக்கவழக்கமுடைய மனிதர்களைப் பார்த்து 'இவன் நாய்ப்பிறவி' என்று சொல்வதைப் பார்த்திருக்கின்றோம்! அப்படி என்னதான் நாய் கெட்ட பழக்கங்களைச் செய்கின்றது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டு மரியாதை இல்லாமல் காணுகின்ற மரத்தடியில் எல்லாம் காலைத்தூக்கி மூத்திரம் பெய்யும், பெட்டை நாயைக் கண்டால் பின்னால் ஓடுவதும், பொது இடங்களில் காமலீலை சேட்டைகள் புரிவதும்தான் நாயிடம் உள்ள கெட்ட பழக்கங்கள் ஆகும். ஆனால் பொதுவாகவே நாய் நன்றியுள்ள மிருகம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனால் நன்றி விசுவாசம் உள்ள மனிதர்களை யாரும் நாய்ப்பிறவி எனச் சொல்லுவதில்லை! அதை எவரும் விரும்புவதுமில்லை.

வெள்ளைக்காரர்களின் இல்லங்களில் நாயாக வாழ்வதற்கு ஒரு கொடுப்பனவு வேண்டும்! பெற்ற பிள்ளைகளுக்கு இல்லாத மரியாதையோடு வாழ்பவை அவர்களின் செல்லப்பிராணிகளில் ஒன்றான இந்த நாய்! முதலில் நாம் எங்கள் சொந்த மண்ணுக்குச் செல்வோம்.

அனேகமாக ஆசியாவிலே இன மத பேதமின்றி அனைத்து இல்லங்களிலும் வீட்டில் உள்ளவர்களோடு சேர்த்து நாயும் ஒரு குடும்ப அங்கத்தவராக இருப்பது தவிர்க்கமுடியாததாக இருக்கும்! குடும்பத்தில் உள்ளவர்களுக்குரிய அடையாள அட்டைபோல நாய்களுக்கு இருக்காது அவ்வளவுதான் வித்தியாசம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அனேகமானவர்களின் வீடுகளில் ஆண் நாய்தான் வளர்க்கப்படும்! காரணம் பெண் நாய் வளர்த்தால் ஆண் நாய்கள் தேடி வந்து தொல்லை கொடுக்கும் என்ற காரணத்தாலும், பெண் நாய்கள் குட்டி போட்டால் அவைகளைப் பராமரிப்பது பெரும் பொறுப்பாகிவிடும் என்பதனாலும் யாரும் பெண் நாய் வளர்ப்பதை விரும்புவதில்லை.

ஆண் நாய்களை வளர்க்கும் சிலர் அவைகளுக்கு ஆண்மை அகற்றும் கொடுமைகளையும் செய்வதுண்டு! இதற்கு 'நலம் எடுப்பது" எனச் சொல்வார்கள். அதாவது அவைகளின் நலன்களில் ஒன்றை இவர்கள் எடுத்துவிடுவதுதான்! இந்த ஆண்மை அகற்றும் வேலையை மிருக வைத்தியர்கள் யாரும் வந்து செய்வதில்லை! ஊருக்கு ஊர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கென சில வயதானவர்கள் இருப்பார்கள்!. (அனுபவசாலிகளாம்!) அப்படி ஆண்மை அகற்றப்பட்ட நாய்கள் திறமையாக வீட்டைக் காவல் செய்யும் என்பது இவர்களின் இன்னொரு வாதம்! (ஆண்மை அகற்றப்பட்டதால் அவைகளுக்கு காதல், குடும்ப வாழ்க்கையெல்லாம் இல்லாமல் போய்விடுகின்றது! பின் என்ன செய்வது? சாப்பிடுவதும், சாப்பாடு போட்டவர்களுக்கு விசுவாசமாக அவர்களின் வீடுகளைக் காவல் காப்பதும்தானே வேலையாக இருக்கும்.)

வசதி படைத்த சிலர் அல்சேசியன் இன நாய்களை வளர்பதுண்டு. இது தங்கள் வசதியைக் காட்டவும், நாய் வளர்ப்பதில்கூட தாங்கள் உயர்ந்தவர்கள் என்று பெருமைப் பட்டுக்கொள்வதற்காகவுமே! இப்படியான வர்களின் இல்லங்களில் வாழ்கின்ற நாய்களுக்கு ஐரோப்பாவில் வாழ்கின்ற நாய்களுக்கு வழங்கப்படும் உணவு வகைகளைப்போல் கொடுக்கப்படாவிட்டாலும் ஓரளவு அதற்கு நிகரான உணவுகளை வழங்குவார்கள். இவர்கள் நமது ஊர் நாய்களை பறை நாய்கள் என கேவலமாக சொல்லி தங்கள் நாய்களை உயர்வாக சொல்வதுபோல தங்களை உயர்த்திக் கொள்வார்கள்!

நடுத்தர வீடுகளில் வளர்கின்ற நாய்கள் அனைத்தும் சாப்பாட்டு விசயத்தில் வீட்டில் உள்ளவர்கள் சாப்பிடுகின்ற சாப்பாடுதான் இவைகளுக்கும். இவைகள் வீட்டில் உள்ளவர்களுக்கு மிக விசுவாசமாகவும் அதே நேரத்தில் முகம் தெரியாதவர்கள் யாரையும் வீட்டிற்குள் அனுமதிக்காத வகையிலும் பழக்கப்படடிருக்கும்.

ஏழைகளின் வீடுகளில் இருக்கும் நாய்களுக்கு வீட்டில் உள்ளவர்கள் சாப்பிட்டு ஏதாவது மீதம் இருந்தால்தான் இவர்களுக்கு சாப்பாடு! இல்லாவிட்டால் பட்டினிதான்! இதனால் இப்படியான நாய்கள் அயலவர்களின் வீடுகளில் சாப்பாட்டுக்காக களவுகளிலும் ஈடுபட்டுக்கொள்வதுண்டு! (இவர்கள் சாப்பாடு கொடுக்காமல் விட்டதனால்தான் அந்த நாய் களவுக்கு செல்கின்றது. பின்பு அதனை நாயின் கெட்ட பழக்கத்தில் சேர்த்து விடுகின்றார்கள்!)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளெல்லாம் நமது ஊர்களில் வளர்க்கப்படும் நாய்களின் பொதுவான மதிப்பீடே! இந்தக் கணிப்பீட்டுக்கு எதிராக சில வறியவர்களின் வீடுகளில் பட்டினியாக இருந்தாலும் விசுவாசத்திலும், பழக்க வழக்கங்களிலும் உயர்வான குணங்களையுடைய நாய்களும் இருக்கின்றன! இவை நூற்றில் ஒன்றாக.. எங்காவது அருமையாகவே காணமுடியும்.

இவை தவிர நம் ஊர் நாய்களைத் திறமையான வேட்டை நாய்களாகப் பழக்கி வைத்திருப்பவர்களும் உண்டு! இவை போலீஸ் மோப்ப நாய்களைவிட திறமையாக தங்கள் எஜமான்களுக்கு காட்டு மிருகங்களை மோப்பம் பிடித்துக் கொடுத்துவிடும்!

ஐரோப்பிய நாடுகளில் உள்ளதுபோல நமது ஊர்களில் கட்டுப்பாடுகள் இல்லாததால் வீதிகளில் எல்லாம் மிகச் சாதாரணமாக நாய்கள் நடமாடித் திரியும். வீதியில் நடமாடும் நாய்களைக் கட்டுப்படுத்த உள்ளாட்சி மன்றங்கள் இதற்காக நாய்பிடிகாரர்களை வேலைக்கு அமர்த்தி நாய்களைப் பிடித்துக் கொல்வதும் உண்டு! ஆனாலும் வீதியில் திரியும் நாய்களுக்கு குறைவிருப்பதில்லை. (நகரசபை, மாநகரசபை பிரதேசங்களில் நாய் வளர்ப்பதற்கு அனுமதிப் பத்திரம் எடுக்கவேண்டும் எனச் சட்டம் இருக்கின்றது. ஆனால் யாரும் அந்தச் சட்டத்தைக் கண்டுகொள்வதில்லை.)

மனிதர்களைப்போல நாய்களும் ‘இது எங்கள் வீடு, இது எங்கள் அயல்’ என்ற இறுமாப்பெல்லாம் இருக்கின்றது! மிருக ஆராய்ச்சியாளர் அசரியா - செல்வராஜ் அவர்கள் எழுதிய 'உடலசைவு மொழிகள்' என்னும் நூலில் நாய்களைப்பற்றி நாம் அறிந்திராத சில செய்திகளைச் சொல்லி வைத்திருக்கின்றார்.

வீதியில் திரிகின்ற நாய்கள் தாங்கள் வசிக்கின்ற தெருக்களைத் தங்களுடையது போலவே சொந்தம் கொண்டாடிக் கொள்கின்றனவாம்! ஒரு தெருவில் நான்கு நாய்கள் வசித்து வந்தால் இவை பகலில் எங்கு சென்றாலும் இரவில் கண்டிப்பாகத் தாங்கள் வசிக்கும் தெருவுக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிவிடுமாம். அது மாத்திரமல்ல! இரவு நேரத்தில் தப்பித்தவறிக்கூட வேறு தெருக்களில் வசிக்கும் ஒரு நாய் இவை வசிக்கின்ற தெருவுக்குள் நுழைந்துவிட்டால் அவ்வளவுதான்! இந்த நான்கு நாய்களும் ஒன்று சேர்ந்து குரைத்து உறுமித் தமது எதிர்ப்பைக் காட்ட ஆரம்பித்து விடுமாம்! அத்துமீறி நுழைந்த நாயானது அந்தத் தெருவைவிட்டுச் செல்லும்வரை இவை குரைத்துக்கொண்டே இருக்குமாம்! அதாவது இந்தத்தெரு தம்முடையது என்பது அவைகளுடைய எண்ணமாம்!

உலகப்புகழ் பெற்ற ஹிப்னாடிச மேதையும் மிருக ஆராய்ச்சி யாளருமான திரு. ரூசிகுமார் பாண்டியா அவர்கள் ஒரு கட்டுரையில் 'நாய்கள் மட்டுமல்ல; எல்லா மிருகங்களுமே தங்களைச்சுற்றி ஒரு கற்பனைக் கோட்டையை, அல்லது ஒரு கற்பனை எல்லையை உருவாக்கி வைத்துக்கொள்கின்றன. உதாரணமாக நாய் ஒன்று போக்குவரத்து நெரிசல் இல்லாத சாலை ஒன்றிலோ, அல்லது வெட்டவெளி ஒன்றிலோ படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளும்போது அந்த நாய் தன்னை அறியாமலேயே தன்னைச்சுற்றி ஒரு பத்து அடிகள் சுற்றளவு கொண்டதொரு வட்டத்தை தனது கற்பனையில் உருவாக்கிக்கொண்டு அந்த வட்டத்திற்குள் இருக்கும் நிலப்பரப்பைத் தனது ஆளுகைக்குள் வைத்துக்கொள்கின்றது!

தன்னைச்சுற்றியுள்ள எல்லைக்கோட்டுக்கு வெளியே எவர் நடந்து சென்றாலும் படுத்துக்கொண்டிருக்கும் நாய் அதைப் பொருட்படுத்து வதில்லை. எல்லையைத் தாண்டி யாராவது உள்ளே நுழைந்துவிட்டால் அச்செயலானது அந்த நாயைப் பொறுத்தவரையில் அது அத்துமீறல் ஆகிவிடுகின்றது! உடனே அந்த நாயிடம் இருந்து வழக்கத்துக்கு மாறான ஒரு வகையான உறுமல் சத்தம் வருகின்றது. 'நீ எல்லையைக் கடந்து எனது ஆளுகைக்குள் வந்துவிட்டாய், மரியாதையாக இங்கிருந்து போய்விடு' என்பது அந்த உறுமலின் அர்த்தமாக இருக்கும். அந்த உறுமலையும் மீறி உள்ளே நுழைந்தவர் முன்னேறினால் உறுமல் குரைத்தலாக மாறி சில சமயங்களில் கடிக்கவும் செய்கின்றதாம்! இது தான் மூன்று வருடங்களுக்கு மேலாக பல ஊர்களில், பல தெருக்களில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளமான நாய்களை அருகிருந்து கவனித்து ஆராய்ச்சி செய்தவை எனக் குறிப்பிட்டிருக்கின்றார் ரூசிக்குமார் - பாண்டியா அவர்கள்.

எங்கள் ஊர்களில் உள்ள நாய்களின் இனங்கள் ஒரு பத்துக்கும் மேல் தேறாது! உலகத்தில் எத்தனை இன நாய்கள் இருக்கின்றன என்பதனை அறிய கூகுள் இணையத்தளத்திற்குள் தேடியபோது தங்களுக்குக் கிடைத்த தகவல்களின்படி உலகெங்கும் 342 இனவகை நாய்கள் இருப்பதாகவும் இவை சரியான கணக்கு அல்ல இன்னும் நூறு வகையான நாய்கள் இருக்க வாய்ப்பிருப்பதாகவும் குறிப்பிட்டி ருக்கின்றார்கள்.

இவைகளில் மிக அழகானதும், சிறிய வகையிலான நாய்களின் பிறப்பிடம் சீனாதானாம்! Cani Che என்னும் நாயே உலகத்திலேயே மிகச் சிறிய நாய் எனச் சொல்லப்படுகின்றது. இதன் உயரம் 25 சென்ரிமீற்றருக்கு உள்ளும் நீளம் 40... அல்லது 50 சென்றி மீற்றருக் குள்ளும் இருக்கும் எனக் குறிப்பிட்டிருக்கின்றார்கள் இதே இனத்தில் பல முகத்தோற்றங்களையுடைய சிறியவகை நாய்கள் சீன நாட்டில் இருந்துதான் வேறு நாடுகளுக்குக் குடிபெயர்ந்தாக கூகுள் மூலமாக அறிய முடிகின்றது.

உலகத்திலேயே மிகப் பெரிய நாயாகக் கருதப்படுவது சீனாவிற்கு மிக அண்டைய நாடான திபெத்திற்குச் சொந்தமான Mastiff Ttibetain என்ற நாயாகும். இது பார்ப்பதற்கு சிங்கத்தைப்போலவே இருக்கும்! இதன் எடை 90ல் இருந்து 100... 110வரை இருக்குமாம்! சிங்கத்தின் தோற்றத்தைப்போல இருக்கும் இதன் இனப்பெருக்கமும் சிங்கத்தைப்போல மிக மிக குறைவானதே! கூகுளின் உள்ள தகவலின்படி பெல்ஜியத்தில் வாழ்கின்ற ஒருவர் கூறியிருந்தார் 'நான் இந்த நாயை வளர்ப்பதற்கு இரண்டு வேலையாட்களை அமர்த்தியிருந்தேன். அப்படியிருந்தும் என்னால் அதைச் சமாளிக்கமுடியாமல் அண்மையில் விற்றுவிட்டேன்' எனக் கூறியிருந்தார். விற்கப்பட்ட அந்த நாயின் விலை என்ன தெரியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூகுளில் படித்ததை எழுதுகின்றேன், நம்பினால் நம்புங்கள், ஒரு லட்சத்து நாற்பதாயிரம் டாலர்களாம்!

உலகத்தில் உயரமான இனத்தைச் சேர்ந்த மற்றுமொரு நாய் Voici Hulik என்னும் இனத்தைச் சேர்ந்தது. இது பார்ப்பதற்கு பயங்கரமாக இருக்கும்! இதன் வாய் சப்பட்டையாக இருக்கும். உயரம் ஒன்றரை மீற்றர்வரை இருக்குமாம்! எடை 80ல் இருந்து 100க்கு மேல்தானாம்! திருடர்கள் அல்லது வேண்டாதவர்கள் யாராவது வீட்டுக்குள் நுழைந்தால் அவர்களைக் கழுத்தில்தான் இது கௌவ்விப் பிடிக்குமாம்!

ஐரோப்பாவில் பிள்ளைகளைப்போல நாய்களையும் அரசாங்கத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என சட்டம் அமுலில் இருந்தாலும் இந்த இன நாய் வளர்ப்பவர்கள் மட்டும் கண்டிப்பாக அருகினில் உள்ள பொலீஸ் நிலையத்திலும் பதிந்துகொள்ள வேண்டும் என்று பிரான்ஸில் சட்டம் இருக்கின்றது. இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது 1999-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ஆம் திகதியாகும்.

American Staffodshire Teraper என்ற இனமுடைய அமெரிக்காவைச் சேர்ந்த நாய்தான் உளவு பார்ப்பதிலும், காவல் செய்வதிலும் கெட்டிக்காரனாம்! உலகெங்கும் பொலீஸ் திணைக் களங்களிலும், காவலாளிகளும் கூடுதலாக இந்த இன நாய்களைத்தான் பயன்படுத்துகின்றார்களாம்.

இப்படியாக இந்த 342 வகையான நாய்களைப்பற்றியும் ஏராளமான தகவல்கள் கூகுளில் பதியப்பட்டிருக்கின்றன. அதில் அமெரிக்காவில் உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடும் நாய்கள் பற்றியும், அதில் அதிக கோல்களை அடித்து கின்னஸ் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கும் நாய் பற்றியதோடு சந்திரமண்டலத்திற்கு மனிதர்களுக்கு முன்பாகவே ருஷ்யா அனுப்பிய லைக்கா என்ற நாய் சென்று வந்ததையும் விசேட செய்தியாக பதிவாக்கியிருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைதவிர பார்வையற்றவர்களின் துணைக்கென தனியான ஒரு இன நாய் இருக்கின்றதாம்! இது தேவையில்லாமல் குரைக்காது, யாரையும் கடிக்க முனையாது. தான் யாருக்குத் துணையாக வந்ததோ அவரின் கட்டளைக்கு மட்டும் அடிபணிந்து செயல்ப்படும் திறமை கொண்டதாம். பார்வை அற்றவர்கள் குறைந்தது இரண்டு வாரங்கள் தாம் வழமையாக சென்றுவரும் பாதைகள், மற்றும் கடைகள் போன்றவற்றிற்கு சென்றுவரப் பழக்கப்படுத்திவிட்டால் போதுமாம் பின்பு வாழ்நாள் பூராவும் அவர்களுக்கு விசுவாசமாக இருக்குமாம்!

எங்கள் ஊர் நாய்களைப்பற்றிய பதிவுகள் எதுவுமே கூகுளில் இல்லை என்பது ஒரு குறைதான்! ஆனாலும் எங்கள் ஒவ்வொருவரது இல்லங்களிலும் எங்கள் நண்பர்களைப்போல வாழ்ந்த அந்த நாய் என்னும் தோழனும் எங்கள் மண் வாசனையில் நறுமணம் வீசிக்கொண்டே இருப்பான்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

## உப்பு! உப்பு! உப்பு...!
# நன்றியின் மறுபெயர் உப்பு!

எந்தப்பொருள் மிக மலிவாக விற்கப்படுகின்றதோ அந்தப்பொருள் அனைவராலும் மலிவாகவே பார்க்கப்படும்! நாம் நம் வீட்டுத்தேவைக்காக வாங்கும் பொருட்களில் உப்புத்தான் மிக மலிவானது! ஆனாலும் உப்பை யாருமே தரக்குறைவாக எண்ணுவதில்லை! உப்பு இல்லாத வீடே உலகத்தில் இல்லை என்பதை உணரும்போதுதான் உப்பின் பெறுமதியை நாம் தெரிந்து கொள்ளமுடியும்.

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பார்கள்! ஆம்! நாம் எவ்வளவுதான் விலை உயர்ந்த உணவைத் தயாரித்தாலும் அந்த உணவிற்கு உப்பு இல்லையென்றால் அதை யாருமே சாப்பிடமாட்டார்கள்! உணவின் உயிர் உப்புத்தான்!

புதுமனை குடிபுகுபவர்கள் வீட்டுக்காக முதலில் வாங்கும் பொருள் உப்புத்தான்! அதேபோல அட்சயதிதிப் பெருநாளில் உப்பும் அரிசியும்தான் வீட்டிற்கு முதலில் வாங்கிவருவார்கள்! வெள்ளிக்கிழமைகளில் உப்பு வாங்கினால் வீட்டில் செல்வம் பெருகும் என்பது நமது முன்னோர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐதீகம்! இப்பொழுதும் நமது வீடுகளில் மாலையில் வீட்டில் விளக் கேற்றியவுடன் யாருக்கும் உப்பு கடன் கொடுக்கமாட்டார்கள்! கொடுத்தால் வீட்டில் உள்ள செல்வமும் போய்விடும் என்பதும் நம்மவர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை!

உப்பு இல்லாத உணவை சப்பென்று இருப்பதாக சொல்வோம் அல்லவா? அதேபோல குடும்பத்தில் ஒரு பிடிப்பே இல்லாமல் வாழ்பவர்கள் 'ஒரு உப்புச்சப்பு இல்லாத வாழ்க்கை வாழ்கின்றேன்' என்பார்கள். சிலர் சம்மந்தமே இல்லாமல் கதைக்கும்போது 'இவர் என்ன உப்புச்சப்பில்லாத கதை கதைத்துக்கொண்டிருக்கின்றார்' என்று சொல்வதும் உண்டு! அதாவது வாழ்க்கையிலும்சரி, வாதத்திலும் சரி; உப்பு உயர்ந்த இடத்தில்தான் இருக்கின்றது.

சிலர் சாப்பிடும்போது 'அந்தச் சாப்பாட்டில் உப்பு இருக்கின்றதா? இல்லையா? என்பதுபற்றி அலட்டிக்கொள்வதே இல்லை! அதற்குக் காரணம் அவர்களுடைய நாக்கில் சொரணையே இல்லை, நாக்கு செத்துப்போச்சு என காரணம் சொல்வார்கள்! அதுபோல எது சொன்னாலும் அதை அக்கறையுடன் செவிமடுக்காதவர்களை 'சொரணை இல்லாதவன்' என்று சொல்வதும் உண்டு!

சாப்பாட்டில் மட்டுமல்ல; ஞானிகளின் உடலை எரிக்காமல், அப்படியே சமாதி நிலையில் நல்லடக்கம் செய்யும்போது உப்பினால்தான் அவர்களது உடலை மூடுவார்கள்! காரணம் உப்பின் தன்மை அந்த உடலைப் பழுதடைய வைக்காமல் நீண்ட காலத்திற்குப் பாதுகாத்துக் கொள்ளுமாம்.

நன்றியின் மறுபெயர் உப்பு என்றுகூடச் சொல்லாம் அதற்கு ஒரு உதாரணம் 'நான் உங்கள் வீட்டு உப்பைத்தின்றவன்' என்று சொல்பவர்கள் தங்களது நன்றியைத்தான் அப்படிச் சொல்கின்றார்கள்! அதுபோல 'உப்பிட்டவரை உள்ளவும் நினை" என்று சொல்வார்கள். இங்கேயும் உப்பு உயர்ந்த இடத்தில்தான் இருக்கின்றது!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்பை ஆங்கிலத்தில் 'சால்ட்' என்போம். சம்பளம் என்பதை ஆங்கிலத்தில் 'சலரி' என்றும் சொல்வோம். உப்பு வாழ்க்கைக்கு கண்டிப்பாகத் தேவையான ஒரு பொருள்! அதேபோல சம்பளமும் அனைவருக்கும் முக்கியமானது! உப்பின் முக்கியத்தை உணர்த்து வதற்காகவே 'சால்ட்' என்ற சொல்லை அடிப்படையாக வைத்து 'சலரி' என்ற சொல் வந்தாகவும், அதேபோலவே போர்த்துக்கேய மொழியில் உப்பை 'சால்ஜோ" என்பார்களாம்! இராணுவ வீரர்களை 'சோல்ஜர்' என அழைக்கும் வார்த்தை போர்த்துக்கேச வார்த்தை என்பதும், வீட்டிற்கு உப்பு முக்கியமானதைப்போல நாட்டுக்கு ராணுவம் முக்கியம் என்பதை குறிக்கும் வார்த்தைகள் அவையென்றும் சில அறிஞர்கள் இந்த சொற் களுக்கு விளக்கவுரை கொடுத்திருக்கின்றார்கள்.

உப்பு நம்பிக்கைக்குரிய ஒரு பொருளாகும் என்பதற்கு இன்னொரு உதாரணம். உப்பு எங்கும் களவு போவதில்லை! பெரிய சமையல்கள் நடைபெறும் இடங்களில் வெங்காயம், கிழங்கு, தூள் என பல பொருட்கள் களவு போவதுண்டு. ஆனால் எங்கும் உப்பு களவு போவதில்லை! பெரிய வர்த்தக நிலையங்களில் சில சமயங்களில் கடைக்குள் வைக்க இடமில்லாத சமயங்களில் உப்பு மூட்டைகளை வெளியில் அடுக்கிவிட்டுச் செல்வார்கள். அவ்வளவு நம்பிக்கைக்குரிய பொருள் உப்பு!

அய்யன் வள்ளுவன் எழுதிய 1330 குறள்களில் 'ஊடல் உவமை' என்னும் பகுதியில் 1322வது குறளாக எழுதுகின்றார்

*'ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி*
*வாடினும் பாடுபெறும்'...* என்று

ஐயனின் குறள்களுக்கு பலரும் பலவிதமான முறையில் விளக்கவுரை எழுதியிருக்கின்றார்கள். இக்குறளின் பொதுவான பொருள் 'ஊடலின்போது உண்டாகும் சிறு கோபம் காதலில் காட்டும் அன்பைச் சற்று தடை செய்தாலும் பின்னர் பேரின்பத்தைத் தரும்' என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் வாழுகின்ற தமிழறிஞர் நெல்லைகண்ணன் அவர்கள் சொல்கின்றார் 'கணவன் மனைவிக்கிடையே ஏற்படும் சிறு சிறு கோப தாபங்கள் உணவில் உப்பு சிறிது குறைந்திருப்பதைப் போன்றது! இது உணவின் ருசியை சற்று குறைந்திருந்தாலும் சரிசெய்துவிட்டால் பின்பு பேரின்பத்தைத் தரும்' என்கின்றார்! அய்யன் வள்ளுவன் உப்பைப் பொருட்படுத்தியா இந்தக் குறளை எழுதியிருப்பான்? ஆனாலும் உப்பு எதற்கெல்லாம் பயன்படுகின்றது பாருங்கள்!

இன்னுமொரு வாழ்க்கையின் பெரிய தத்துவம் இந்த உப்பில் அடங்கியிருக்கின்றது! அது, மனிதர்கள் மண்ணிலே பிறந்து மண்ணிலேயே மடிகின்றார்கள் என்ற தத்துவத்தைப்போல உப்பும் தண்ணீரிலேயே விளைந்து, தண்ணீரிலேயே கரைந்துவிடுகின்றது.

அடடா! சாதாரண உப்புக்குள் இவ்வளவு பொருளடக்கமா?

மண்வாசனையில் இதுவரை நாம் பிறந்த மண்ணின் சுகந்தங் களையே இரைமீட்டுக்கொண்டிருந்தோம். இந்தக் கட்டுரையும் அந்த நோக்கிலேயே எழுதப்பட்டது. ஆனாலும் எழுதி முடித்ததும் வாசித்துப் பார்த்தால்தான் தெரிகின்றது உப்பு எல்லா நாட்டிற்கும் உரியதொரு தேசியச் சொத்து என்று. இதில் ஆச்சரியம் என்னவென்றால் உப்பு விளையாத நாடுகளும் இருக்கின்றனவாம்! ஆனால் அப்படியான நாடுகளிலும் ஒவ்வொரு இல்லங்களின் சமையல் அறைகளிலும் உப்பு தனி இராட்சியம் செய்வதை மறுக்கமுடியாது

எங்கள் தாய் மண்ணில் உப்பு என்றதும் எங்கள் மனங்களில் மலர்வது ஆனையிறவு உப்பளம் பகுதியைத்தான். ஒரு நாட்டிற்கே உப்பிட்ட மண் அல்லவா அந்த மண்.

௨௰

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

## மாம்பழங்களின் இளவரசி

# யாழ்ப்பாணத்து கறுத்தக் கொழும்பான்

எங்கள் மண்வாசனையில் நம் மண்ணில் விளையும் பழவகைகளில் நம் எல்லோரது மனங்களிலும் இன்னமும் நிறைந்திருப்பதும், அதனை நினைத்தவுடனேயே எங்கள் நாக்கினில் நீர் சுரக்க வைப்பதிலும் முன்னணியில் நிற்பதிலும் மாம்பழம் முதன்மையானதாகவே இருக்கின்றது.

மா மரங்களின் தாய்வீடு இந்தியா என்றுதான் சொல்லப்படுகின்றது. இப்பொழுது ஆப்பிரிக்க நாடுகளில் இருந்துகூட ஐரோப்பிய நாடுகளுக்கு மாம்பழங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன! ஆனாலும் எங்கள் யாழ்ப்பாணத்து கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தின் சுவையை உலகின் எந்த நாட்டில் உற்பத்தியாகும் மாம்பழங்களிலும் காணமுடியாது என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

யாழ்ப்பாணத்தில் மாந்தோட்டம் என்று பெரிய அளவில் தோட்டமாக மாமரங்கள் வளர்க்கப்படுவதில்லை. (இணுவில், மருதனாமடம் பகுதிகளில் சிறிய அளவில் ஒருசில மாந்தோட்டங்கள் இருக்கின்றன) இந்தியாவிலோ தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் மிகப்பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில் மாந்தோட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவைகளை தோட்டங்கள் என்று சொல்வதைவிட மாங்காடுகள் என்றுகூட சொல்லலாம்! ஆனால் யாழ்ப்பாணத்தில் வீடுகளில் வளர்க்கப்படும் மாமரங்களில் இருந்து கிடைக்கும் பழங்களின் சுவையை எந்த நாட்டு மாம்பழங்களும் கிட்டக்கூட நெருங்க முடியாது. அதிலும் யாழ்ப்பாணத்து கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தின் சுவைக்கு நிகர் இன்னொரு கறுத்தக் கொழும்பான் மாம்பழம்தான்.

ஏனைய இனங்களைப்போல மாமரங்களிலும் பல இனங்கள் உண்டு. கறுத்தக் கொழும்பான், வெள்ளைக் கொழும்பான், அம்பலவி, செம்பாட்டான், சேலம், பாண்டி, மல்கோவா, பிளாட், பச்சைதின்னி, கிளிமூக்கன் இப்படியான பெயர்களில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. இவைகளில் கறுத்தக் கொழும்பான்தான் மாம்பழங்களுக்கெல்லாம் இளவரசி என்று சொல்லுவார்கள்! காரணம் கறுத்தக்கொழும்பான் மாம்பழத்தின் சுவையின் மகிமை அப்படியானது.

சுவைப்பதற்கு மட்டுமல்ல; பார்ப்பதற்கும் கறுத்தக் கொழும்பான் தனி அழகுதான்! ஆப்பிரிக்க நாட்டவர்கள் இப்பொழுது ஐரோப்பிய நாடுகளில் பரந்து வாழ்கின்றார்கள். அவர்களில் வெள்ளைக்காரப் பெண்களைவிட அழகான... கவர்ச்சியான பெண்களெல்லாம் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது! அதுபோலத்தான் மாம்பழச் சந்தையில் குவியலாகக் கொட்டப்படடிருக்கும் பல இன மாம்பழங்களில் இந்தக் கறுப்பழகி பழங்களுக்கெல்லாம் இளவரசிபோல் காட்சியளிப்பாள்.

மாம்பழங்களில் சேலம், பாண்டி போன்ற பெயர்கள் தமிழ்நாட்டில் உள்ள சில ஊர்களின் பெயர்களாகும். அந்தந்த ஊர்களில் இந்த வகையான மாமரங்கள் அதிகமாக உற்பத்தியாகியிருப்பதனால் அந்தந்த ஊர்களின் பெயர்களே இந்த மாமரங்களுக்கும் வைக்கப்பட்டிருக்கலாம். ஆனாலும் காய்களில் கிடைக்கும் சுவை இந்தவகையான மாம்பழங்களில் கிடைப்பதில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லாவகையான மா மரங்களின் காய்களும், பழங்களும் சுவையானதாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாம்பழக் காலத்தில் அணில்கள் குருவிகளின் அட்டகாசம் அதிகமாகவே இருக்கும்! காய்கள் முற்றி கனியும் காலத்தில் பழங்களை மோப்பம் பிடித்து முதலில் சுவை பார்ப்பவை அவைகள்தான். கொந்தல் மாங்காய்களின் சுவையே தனியானது. பழங்களை அணில், குருவிகள் கொந்தாமல் இருப்பதற்காக நம்மவர்கள் ஒரு புதுமையான உக்தியைக் கையாள்வார்கள். ஒரு பெரிய தகர டப்பாவிற்குள் கல்லைக் கட்டி மாமரத்தில் தொங்கவிடுவார்கள். அந்த தகரடப்பாவில் இருந்து நீளமான கயிறைப் பிணைத்து கீழே விட்டுவிடுவார்கள் மரத்தில் அணில், குருவிகளின் ஆரவாரம் கேட்டதும் கீழே உள்ள கயித்தைப்பிடித்து பலமாக ஆட்ட தகர டப்பாவில் இருந்து மணியடிப்பதுபோல பலமான சத்தம் ஒலிக்க மாம்பழத்தைக் கொந்தவந்த அணில், குருவிகள் எல்லாம் கலைந்து ஓடிவிடும். வெளிநாடுகளில் என்றால் மரத்தில் அலாரத்தை வைத்துவிட்டு றிமோட் கொன்றோல் மூலம் கீழிருந்து இயக்கி ஒலிக்க வைத்திருப்பார்கள்! யாழ்ப்பாணத்தில் ஒரு தகரடப்பாவும் கயிற்றுடனும் காரியத்தை சாதித்துவிட்டார்கள்.

மற்றய இனங்களைப்போல மா,மரங்களில் எத்தனை வகைகள் இருந்தாலும் அந்தந்த இன மரங்களில் இருந்து கிடைக்கும் விதைகளில் இருந்து உருவாகும் மரக்கன்றுகள் அந்த இனமாகவே உருவாகுவதில்லை!. உதாரணத்திற்கு கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தின் கொட்டையில் இருந்து முளைக்கும் மாங்கன்று பெரிதாக வளர்ந்தால் கறுத்தக் கொழும்பான் மா மரமாகவே வராது! அதில் இருந்து காய்க்கின்ற காய்கள் புளி மாங்காய் ஆகவே இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் ஒட்டு மாங்கன்று முறைதான் நடைமுறையில் இருக்கின்றது. (தற்பொழுது எப்படி என்று தெரியவில்லை) முதலில் எந்த இன மாங்கன்றின் விதையானாலும் மண்ணில் புதைத்து முளைக்க வைப்பார்கள். அவை முளைவிட்டு ஓரளவு வளர்ந்ததும் அவைகளைத் தனித்தனியாக தகரப் பேணிகளுக்குள் இடம்மாற்றி மேலும் சில மாதங்கள் வளரவிடுவார்கள். இப்படித் தகரப் பேணிகளுக்கு வளரவிடுவதன் காரணம் வேறு இன மாங்கன்றுகளுடன் ஒட்டுவதற்கு வசதியாகத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகரக் குடுவைகளில் வளர்ந்த இந்த புளி மாங்கன்றுகளை பின்னர் நல்ல இன மாமரத்தின் செழிப்பான கொப்பின் நடுப் பகுதியை நல்ல கூரிய கத்தியினால் சீவுவார்கள். அதுபோன்று இக்கன்றின் ஒரு பகுதியையும் சீவி இரண்டினையும் சேர்த்து இறுகச் சுத்திக் கட்டி விடுவார்கள். சுமார் பதினைந்து இருபது நாட்களுக்குப் பின்னர் ஒட்டப்பட்ட மரக் கிளைப்பகுதியை வெட்டி, தகரக் குவளையுடன் உள்ள மாங்கன்றைப் பிரித்து எடுத்து விடுவார்கள். அதன்பின்னர் அது எந்த இன மாமரத்துடன் ஒட்டப்பட்டதோ அது அந்த இன மாங்கன்றாக மாறிவிடும்.

இரண்டு மரக்கிளைகளை சீவி பின்னர் ஒன்றாக சேர்த்து கட்டி வைத்தால் ஒட்டு மாங்கன்று வந்துவிடும் என சாதாரணமாக எண்ணிவிடக்கூடாது! மாங்கன்று ஒட்டுவது என்பது சத்திரசிகிச்சை செய்வதைப்போல! கிளைகளைச் சீவுவது கூரிய கத்தியாக இருக்கவேண்டும். சீவும்போது கிளையை விறாண்டக்கூடாது. சீவிய பின்னர் கிளையில் வடியும் பால் வற்றுவதற்குள் அதாவது ஒரு குறிப்பிட்ட நிமிடத்துக்குள் இரண்டையும் இணைத்துக் கட்டிவிடவேண்டும். இவையெல்லாம் நன்கு அனுபவம் உள்ளவர்களால் மட்டுமே முடியும்.

மாம்பழங்களில் கறுத்தக் கொழும்பானை இளவரசி என்று சொல்வதற்கு மற்றுமொரு காரணம் மற்றய எல்லா மாம்பழங்களையும்விட கறுத்தக்கொழும்பான் உருவத்திலும் பெரிதாக இருப்பதுடன் பார்ப்பதற்கு கவர்ச்சியாகவும் இருக்கும். உண்மையில் கறுத்தக்கொழும்பான் மாம்பழத்தின் நிறம் கறுப்பே அல்ல! கரும்பச்சைதான் அதனுடைய உண்மையான நிறம். காய் நன்றாக முற்றும்பொழுது அதன் தோல்பகுதியில் சாம்பல் பூத்திருக்கும். கரும்பச்சையான அதன் நிறத்தில் இந்த சாம்பல் நிறமும் சேரும்போது பார்ப்பதற்கு கறுப்பாகவே காட்சியளிப்பதால் கறுத்தக்கொழும்பான் என்ற பெயர் அதற்குச் சொந்தமாகிவிட்டது.

இன்று வெளிநாடுகளில் நம்மவர்கள் பரந்துபட்டு வாழ்வதைப்போல சுமார் ஐம்பது, அறுபது வருடங்களுக்கு முந்திய காலகட்டங்களில் கொழும்பில் நம்மவர்கள் அதிகமாக வாழ்ந்த காலமது. அரசாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகம் பார்த்தவர்களில் யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் அதிகமாகவே இருந்தார்கள். இவர்களில் குடும்பமாக வாழ்ந்தவர்களும் தனித்து வாழ்ந்துகொண்டு வாரா வாரம் வந்து போகிறவர்களும், மாதமொருமுறை வந்து போகிறவர்களுமென பலதரப்பட்டவர்களும் அடக்கம். சம்பளம் கிடைத்த அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருபவர்கள் கொழும்பில் இருந்து வரும்போது தாங்கள் கொழும்புவாசிகள் என்பதை அயலில் உள்ளவர் களுக்குப் பெருமைப்படுத்திக் காட்டுவதற்காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுக் கொழும்பில் விற்கப்படும் ஆப்பிள், திராட்சை போன்ற பழங்களை வாங்கி வருவார்கள். பின்னர் அவர்கள் கொழும்பு திரும்பும்போது தங்களது நண்பர்களுக்கும், உயரதிகாரிகளுக்கும் அன்பளிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து கறுத்தக்கொழும்பான் மாம்பழங்களைத்தான் வாங்கிச் செல்வார்கள். ஆமாம்! வெளிநாட்டுப் பழங்களுக்கு இணையாக மதிக்கப்பட்டது யாழ்ப்பாணத்துக் கறுத்தக் கொழும்பான் மாம்பழம்தான்.

எங்கள் அயலில் நல்லம்மா என்றொரு மாம்பழ வியாபாரி இருந்தார். மாங்காய்க்கார நல்லம்மா என்றுதான் இவரை எல்லோரும் அழைப்பார்கள். யாழ்ப்பாணத்தில் எந்தெந்த வீடுகளில் என்னென்ன மாமரம் இருக்கின்றது என்பது இவருக்கு அத்துப்படி! மா,மரம் பூத்துப் பிஞ்சு பிடிக்கும் காலத்திலேயே இவர் மரத்தோடு சேர்த்து விலைபேசி மொத்தமாக வாங்கிவிடுவார். சிலர் தங்களுக்கு ஐம்பது பழம் அல்லது நூறு பழம் தரவேண்டும் மீதிதான் விற்பனைக்கு என்று சொல்லி விற்பவர்களும் உண்டு. மொத்தமாகவே விற்பவர்களும் உண்டு. இதில் விந்தை என்னவென்றால் மா, மரத்தோடு மொத்தமாக விற்றவர்கள் பின்னர் இவரிடமே வந்து மாம்பழம் வாங்கிய சம்பவங்களும் உண்டு

மாங்காய்களில் கறுத்தக்கொழும்பான் மாங்காயை மட்டும் வெளியில் நின்று பார்த்து கணக்கிட்டுவிட முடியாது. காரணம் இலையும் கரும் பச்சை, காயும் கரும்பச்சையாக இருப்பதால்தான். ஆனாலும் மாங்காய்க்கார நல்லம்மா ஒருமுறை மரத்தை சுத்திப் பார்த்துவிட்டு இதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு காய் பறிக்கலாம் என்பதைத் துல்லியமாகக் கணக்கிட்டுவிடுவார். இதெல்லாம் அவரின் அனுபவத்தின் முதிர்ச்சி!

இவரின் வீட்டு அறைகளெல்லாம் வருசம் முன்னூற்று அறுபத்தைந்து நாட்களும் மாம்பழங்களே குவிந்து கிடக்கும். பொங்கல் போன்ற விசேஷ நாட்களுக்கு ஒருவாரத்திற்கு முன்பாகவே வீடு நிறைய பழங்களை மூட்டை மூட்டையாகக் கட்டி வைத்திருப்பதால் அவரின் வீடு உள்ள வீதியால் சென்றாலே மாம்பழ வாசனையாகவே இருக்கும்

யாழ்ப்பாணம் முட்டாசுக்கடைச் சந்தியையொட்டி அருகினில் உள்ள பழச் சந்தையில் இவர் பெரிய மாம்பழ வியாபாரியாவார். கைதேர்ந்த அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் வாக்குக் கேட்கப் போகும்போது வீட்டில் உள்ளவர்களைப் பெயர் சொல்லி அழைத்து அசத்துவதுபோல யாழ்ப்பாணத்துப் பழச்சந்தையில் முதல்முறை இவரிடம் பழம் வாங்கச் செல்பவர்களிடம் தனது சொந்தங்களுடன் உரையாடுவதுபோல உரையாடி அவர்களின் பெயர் விபரங்களையெல்லாம் அறிந்து வைத்துக்கொள்வார். மறுமுறை அவரை தூரத்தில் கண்டாலும் உரிமையோடு பெயர் சொல்லி அழைத்து அவர்களின் கவனத்தை தனது பக்கம் இழுத்துவிடுவார்! அவர்கள் வேறு அலுவலுக்காக அந்தப் பக்கமாக வந்திருந்தாலும் இவருடைய பேச்சில் கவரப்பட்டு இரண்டு மாம்பழங்களாவது வாங்காமல் செல்லமாட்டார்கள்.

நல்லம்மாவின் வாடிக்கையாளர்கள் சந்தையில் மட்டுமன்றி வீட்டிலும் வந்து வாங்குபவர்களும் உண்டு. மாலை நேரங்களில் அரச காரியாலயங்களுக்கு காரில் வந்து போவோர் போல இவர் வீட்டு வாசலிலும் கார்கள் வரிசையாக நிற்பதும் உண்டு. எல்லாம் கொழும்புக்கு கொண்டு செல்வதற்காக மாம்பழம் வாங்க வந்திருப்பவர்களின் கார்கள்தான். இன்று அந்த மாங்காய்க்கார நல்லம்மா உயிரோடு இல்லை. பிள்ளைகள் எல்லாம் வெளிநாடுகளில் வாழ்கின்றார்கள். ஆனாலும் அந்த வீட்டைக் கடந்து போகிறவர்கள் 'இது மாங்காய்கார நல்லம்மாவின் வீடு' என்றே சொல்லிக்கொண்டு போவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் ஜேர்மனில் இருந்து பிரான்ஸ் வந்திருந்த மாங்கனாய்கார நல்லம்மாவின் மகன் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. பல விடயங்களையும் அவருடன் கதைத்தபின்னர் மாம்பழத்தின் மீது எங்கள் கதை திரும்பியது. பிறந்ததில் இருந்து இளமைக்காலம் வரைக்கும் மாம்பழத்துடனேயே வாழ்ந்த அவர் இன்று ஐரோப்பாவில் விற்பனையாகும் பழங்கள் பற்றியும், அதன் தரங்கள் பற்றியும் கவலையுடன் உரையாடியதோடு கறுத்தக்கொழும்பான் மாம்பழம் உண்பதற்காகவே அண்மையில் ஊருக்குச் சென்றுவந்தாக கூறினார்.

ஏத்தனையோ நாடுகளில் இருந்து, எத்தனையோ இன மாம்பழங்கள் இன்று ஐரோப்பாவில் வந்து குவிந்தாலும் எங்கள் யாழ்ப்பாணத்து கறுத்தக் கொழும்பான்தான் நம்மவர்களுக்கு மாம்பழங்களின் இளவரசி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரங்கள்

நாம் பிறந்த மண்ணின் வாசனைகளை முகர்ந்து கொள்ளும்போது மண்ணின் பிள்ளைகளில் ஒன்றான மரங்களை நாம் மறந்துவிடமுடியுமா? அம் மரங்களின் மகத்துவங்கள் நம்மில் பலர் அறிந்திராதவை! மரங்களில் இரண்டுவகை உண்டு. ஒன்று நாம் நீரூற்றி வளர்ப்பது. மற்றொன்று நாம் விதைபோட்டு பயிரிடாமல், அதற்காக நீரூற்றி வளர்க்காமல் தானாகவே வளர்வது!

மக்கட் பண்பு இல்லாதவர்களை மரங்கள் என்கின்றார் வள்ளுவர். ஏன்? எது நடந்தாலும் அவை சும்மாவே நின்று கொண்டிருக்கும்! அதனால் இருக்கலாம். துரியோதனன் அரசசபையில் பாஞ்சாலி துகிலுரிந்து மானபங்கப்படுத்தும் காட்சியைக் கண்டும் பாண்டவர்கள் செயலற்று நின்ற செயலை பாரதி 'நெட்டை மரங்கள் என நின்றனர்' என்றுதானே சொல்கின்றார்! மரங்கள் ஒரே இடத்தில் நிற்பதனால்தான் இப்படியெல்லாம் சொல்லுகின்றார்கள். இதனால் எல்லாம் மரங்களின் மகிமை மங்கி விடப்போவதில்லை. மரங்கள் மனித வாழ்வில் இரண்டறக் கலந்தவை! எல்லா நிலைகளிலும் நம்மோடு இணைந்தே இருப்பவை! பலசாலியான மரங்கள் மட்டுமல்ல! பலம் குறைந்த... மற்றும் செடி கொடி வகைகளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவைகளும் ஏதோ ஒரு வகையில் நமக்கு பயன் தந்துகொண்டே இருக்கின்றன.

நாம் சிறு குழந்தையாய் இருந்ந்து தத்தித் தத்தி நடக்கும்போது நடை வண்டியாகத் தொடங்கி கடைசியில் நம் வாழ்க்கைப் பயணம் முடியும்போது சவப்பெட்டியாக, பாடையாக எம்மோடு கூட வருவதுவரை மரங்களின் உதவி நமக்குத் தேவைப்படுகின்றன. நகரத்து வாழ்க்கையில் வீடுகளுக்கும், அலுவலகங்களுக்குமான கட்டிடங்களிற்கே நிலம் போதாமையாக இருப்பதனால் மரங்கள் வளர்க்கப்படுவது இல்லையென்பது மட்டுமல்ல; அழிக்கப்பட்டும் வருகின்றது. ஆனால் இப்பொழுதும் பாருங்கள் கிராமப்புறங்களில் வளர்ந்த மரங்கள் பரி விழுந்தாலே கண்கலங்கி ஒப்பாரி வைத்துவிடுவார்கள்! கிராமத்து மக்கள் மரங்களின் பெருமைகளை அறிந்தவர்கள். அதனால்தான் தாங்கள் பெற்ற பிள்ளைகளைப்போல மரங்களின் மீதும் பாசமும், நேசமும் வைத்திருப்பார்கள்.

தென்னை மரத்தை சிறிதாக இருக்கும்போது தென்னம்பிள்ளை என்றும், கமுகு மரத்தை கமுகம்பிள்ளை என்றும்தான் சொல்வார்கள். அதுபோல மாங்கன்று, வேப்பங்கன்று, புளியங்கன்று, ஆலங்கன்று நாவல்கன்று என்றுதான் அவை சிறியவையாக இருக்கும்போது அழைக்கப்படுகின்றன. தென்னை மரத்தைப்பற்றி அவ்வை அவர்கள் நன்றி பற்றிய தனது பாடலொன்றில் கூறும்போது...

*நன்றி ஒருவருக்கு செய்தக்கால் - அந்நன்றி*
*என்று தருங்கொல் என வேண்டா - நின்று*
*தளரா வளர் தெங்கு தானுண்ட நீரைத்*
*தலையாலே தான் தருதலால்.*

என்கின்றார். அதாவது நமது வீடுகளில் எளிதாக வளர்க்கப்படும் தென்னை மரங்கள் தம் காலில் விழுகின்ற அழுக்கு நீரை உணவாக்கி பின்னர் தனது தலையால் எப்படி இனிப்பாக மாற்றித் தருகின்றதோ அப்படி மனிதர்கள் பாதியாவது மாறவேண்டாமா என்னும் செய்தியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னையை உதாரணம் வைத்து இந்தப் பாடல் மூலமாகச் சொல்லியிருக்கின்றார் அவ்வைப்பாட்டி.

நம் இல்லங்களில் நல்ல காரியங்கள் எது நடந்தாலும் வாழை மரங்கள் வீட்டு வாசலில் வந்து நின்றுவிடுகின்றன. ஏன் வாழை மரங்களைக் கட்டுகின்றோம்? 'வாழையடி வாழையென இவர் குடும்பமும் வாழ்வாங்கு வாழவேண்டும்' என்னும் பொருளில்தான். சரி! சாவு வீட்டிலும் வாழை மரங்கள் கட்டுகின்றார்கள்தானே என பலரும் முணுமுணுப்பதும் எமக்குக் கேட்கின்றது. சாவு வீடுகளில் கட்டுவதற்கான காரணம் 'இவர் வாழ்வாங்கு வாழ்ந்தவர். இவருக்குப் பின்னாலும் இந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் வாழையைப்போல வாழவேண்டும்' என்பதைக் குறிக்குமாம்.

ஓரறிவு படைத்த இந்த மரங்கள் இலையாக, காயாக, பழமாகவும், ஓராயிரம்பேர் தங்கிச் செல்வதற்கு நிழல் கொடுப்பவையாகவும் இருக்கின்றன. ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் இவற்றுக்கு என்ன மரியாதை செய்கின்றோம்? இவை பற்றிச் சிந்திப்பதற்காகவே இந்தக் கட்டுரைத் தொடரின் நோக்கமாகும். அந்த வகையில் நான் முதலில் எடுத்துக்கொண்டது கறிமுருங்கை மரம்.

இனிப்பான பழங்களை அள்ளித்தரும்
மரங்களின் வேர்கள் கசப்பாகத்தான் இருக்கும்!

*சீனத்துப் பழமொழி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறி முருங்கை மரம்

நாம் தண்ணீர் ஊற்றி வளர்க்கவேண்டும் என்னும் அவசியமில்லாமல் யாழ்ப்பாணத்தில் நமது வீடுகளில் எல்லாம் வளர்கின்ற ஒரு தாவரச்செடி கறி முருங்கை மரமாகும். பிள்ளையை அடித்து வள, முருங்கையை முறித்து வள என்பது நீண்டகாலமாக ஊரினில் வழங்கிவரும் ஒரு பழமொழியாகும். இது ஒன்றும் திரைப்படங்களில் வருவது போன்ற 'பஞ்ச்' வசனம் இல்லை! ஆனால் இதில் முற்பகுதி அந்தக்காலத்திற்கு வேண்டுமானால் பொருத்தமானதாக இருக்கலாம். இந்தக்காலத்தில் இங்கு மாத்திரமல்ல; எங்கும் நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்றாகும். ஆனால் பிற்பகுதியில் விசயம் இருக்கின்றது.

முருங்கையில் பச்சைப்பசேல் இருக்கும் கிளைகளில்தான் பூக்கள் பூக்கும். முருங்கை பூக்கும் காலத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக கிளைகளை முறித்துவிட்டால் அதிலிருந்து பல கிளைகள் முளைக்க ஆரம்பித்துவிடும். ஒவ்வொரு புதிய கிளைகளிலும் பூக்கள் பூக்கும்போது அதிகமான காய்கள் காய்க்கும் என்பதால் அனுபவசாலிகள் இந்த பழமொழியை உருவாக்கியிருக்கலாம்.

முருங்கையில்கூட இரண்டு மூன்று வகையானவை இருக்கின்றன. உடுவில், சுண்ணாகம் போன்ற பகுதிகளில் உள்ள முருங்கை மரங்களின் காய் கட்டையாகவே இருக்கும். அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் வளர்கின்ற முருங்கையின் காய்கள் நீளமானதாக இருக்கும். சாவகச்சேரி, கொடிகாமம் பகுதியில் வளர்கின்ற முருங்கைக் காய்களும் நீளமானதாகவே இருக்கும். அதே நேரத்தில் அதன் சதைகள் களித்தன்மை உடையவை யாகவும் இருக்கும்.

ஊரில் முருங்கைக்காயின் காலத்தில் நடுத்தரமான குடும்பங்களில் எல்லாம் அனேகமாக தினமும் முருங்கைக்காய்க்கறி பிரதானமானதாக இருக்கும். கறியின் வடிவங்கள் மட்டும் நாளுக்கு நாள் மாறுபட்டதாக இருக்கும்! ஒருநாள் முருங்கைக்காயை பொரித்து வதக்கி வெந்தயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் சேர்த்து சமைப்பார்கள். மறுநாள் தூள் போடாமல் அவியல் கறியாக இருக்கும். அடுத்தநாள் முருங்கைக்காயுடன் இறால் சேர்த்து சமைப்பார்கள். இப்படியாக சமையலின் விதம் மாறுபட்டிருந்தாலும் முருங்கைக்காய்தான் அங்கு கதாநாயகனாக இருப்பார். முருங்கையிலை வறுவல் தினமும் இருக்கும். எங்கள் வீட்டில் பல முருங்கை மரங்கள் இருந்ததால் அந்த அனுபவத்தைக்கொண்டு இதனை எழுதுகின்றேன்.

முருங்கையின் பயன்பாடுகள்பற்றி அந்த நாட்களில் நம்மில் பலர் அறிந்திருக்கவில்லை! இன்று வெளிநாடுகளில் வாழ்கின்றவர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் முருங்கைக்காய், முருங்கையிலையைத் தேடித்தேடி வாங்குகின்றார்கள். காரணம் அத்தனைபேரும் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள்!

பெரிய விருந்து வைபவங்களுக்கு அனேகமாக முருங்கைக்காயை சமைப்பதில்லை! காரணம் முருங்கைக்காயை சூப்பிச் சாப்பிடுவது சபையில் அநாகரிகமாக இருக்கும் எனக் கருதுவதால். ஆனால் முருங்கைக்காயை சூப்பியபின் அதன் தோலை நன்றாக சப்பிச் சாப்பிடும்போது கிடைக்கும் சுவையோ தனியானது. கொழும்பில் உள்ள தமிழ் உணவகங்களில் நம்மவர்கள் இப்படியாக முருங்கைக்காயை சூப்பிச் சாப்பிடுவதைப் பார்க்கும் சிங்களவர்கள் 'பனங்கொட்டை சூப்பிகள்' எனக் கேலி செய்வார்களாம். இந்தக் கேலிப்பேச்சுக்களை தவிர்ப்பதற்காகவே கொழும்பில் வாழ்கின்ற சிலர் உணவகங்களில் முருங்கைக்காய் சாப்பிடுவதில்லையாம்.

திருமணமானவர்களுக்கு தினமும் முருங்கைக்காய்க்கறி சாப்பாட்டில் இருக்குமாம்! ஏனென்றால் அந்த விசயத்திற்கு முருங்கைக்காய் கெட்டிக் காரனாம்! எந்த விஷயம் எனத் தெரியாமல் முழிப்பவர்கள் பாக்கியராஜின் 'முந்தானை முடிச்சு' படம் பார்த்து தெரிந்துகொள்ளலாம்!

அகத்திய முனிவர் தனது குணபாடம் என்னும் நூலில் இப்படியாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விழி குளிரும். பித்தம் போகும். வீறு ருசியேகும்*
*அழிவிந்துவும் புஷ்டியாகும். - எழிலார்*
*ஒருங்கையக லாக்கற புடைவாணை கையே*
*முருங்கையின் பூவை மொழி*

அழிவிந்து புஸ்டியாகும் என இலக்கணத்தில் சொல்லி வைத்திருக் கின்றார் அகஸ்தியர். அது மாத்திரமல்ல! வாத நோய் உள்ளவர்களுக்கு நாட்டு வைத்தியர்கள் முருங்கையிலை வறை அதிகம் சாப்பிடும்படி ஆலோசனை வழங்குகின்றார்கள்.

எங்கள் தந்தையார் ஐம்பது, அறுபது வருசங்களுக்கு முன்பாக கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு அருகில் ஒன்றுக்கும் உதவாத 20 பரப்பு மக்கிக் காணியை பரப்பு 10 ரூபா விலைக்கு வாங்கியிருந்தார் (இன்று அதன் பெறுமதி பரப்பு 15 லட்சத்திற்கும் மேல்) அப்பொழுதே சொந்தங்கள் உறவுகள் எல்லாம் அந்தக் காணி வெறும் மக்கிக் காணி அதை வாங்கவேண்டாம் எனத் தடுத்தார்களாம். அவர்களின் கருத்துக்களையெல்லாம் புறக்கணித்தே எனது தந்தையார் அந்தக் காணியை வாங்கினாராம். அந்த மக்கிக் காணிக்குள் நாம் பயிரிடாமல், தண்ணீர் ஊற்றாமல், மருத்துவக்குணம் நிறைந்த பலவகையான செடி கொடிகளும், மரங்களும் வளர்ந்திருந்தன. அப்படியாக வளர்ந்தவைகளான வல்லாரை, தூதுவளை, சுண்டங்கத்தரி வட்டுக்கத்தரி, கற்றாளை, பாவட்டை, வேம்பு, போன்றவற்றுடன் கறிமுருங்கை மரங்களும் ஏராளமாக இருந்தன.

இதை ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் மக்கிக்கல் நிறைந்த நிலத்தில் கறிமுருங்கை மரம் செழித்து வளருமாம்! அது மாத்திரமல்ல! அப்படியான நிலத்தில் வளர்ந்த முருங்கையின் காய்கள் களிப்பிடிப்பாகவும் சுவையானதாகவும் இருக்குமாம்! எங்களுடைய அந்த மக்கிக் காணியில் வளர்ந்திருந்த முருங்கை மரங்களின் காய்களும், இலைகளும் எங்கள் அயலில் உள்ளவர்களின் வீடுகளில் எல்லாம் தினமும் ஏதோவொரு விதமாக உணவாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கிக்கல் நிலம் மட்டுமல்ல; முருங்கை மரத்திற்கு சூரிய வெளிச்சமும் கண்டிப்பாக வேண்டும். வெய்யில் படாத மர நிழல்களின்கீழ் வளர்கின்ற முருங்கை மரங்களில் மசுக்குட்டி என நாம் பேச்சு வழக்கில் சொல்கின்ற மர்கொட்டிப் புழுக்கள் குடி கொண்டுவிடும். வெய்யில் அவைகளின் மேல் பட்டால் கயிற்றில் மனிதர்கள் இறங்குவதுபோல நூல் இழைகள் மூலமாக கீழே இறங்குவதைப் பார்க்கமுடியும்.

முருங்கை வளர்வதற்கு செழிப்பான மண் தேவையில்லை, அதிகம் தண்ணீர் தேவையில்லை, பசளை தேவையில்லை, பட்டுப்போனால் மரம் மட்டும் விறகிற்குக்கூட உதவுவதில்லை.

அன்று முருங்கையில் உள்ள மருத்துவக் குணங்களை அறியாமலே வேண்டா விருந்தாளியாக உணவாகிக் கொண்ட நாங்கள் இன்று ஒரு கிலோ முருங்கையிலையை ஐந்து யூறோ கொடுத்து வாங்கும்போது மனம் படும் வேதனை எழுத்தில் அடங்காதவை.

ஊரில் ஒரு பழமொழி சொல்வார்கள் 'உப்பு இல்லாவிட்டால்தான் உப்பின் அருமை தெரியும், அப்பன் இல்லாவிட்டால்தான் அப்பனின் அருமை தெரியும்' என்று. புலம் பெயர்ந்து வாழ்கின்ற நம்மவர் களுக்கெல்லாம் இப்பொழுதுதான் முருங்கையின் அருமை தெரிகின்றது.

## முள் முருங்கைதான்
# கல்யாண முருங்கை

அண்மையில் நண்பர் ஒருவரின் தங்கையின் திருமணம் தொடர்பான சடங்குகளில் கன்னிக்கால் நடும் சடங்கில் நடப்பட்ட முள்முருங்கை மரத்தின் இலைகளின் மஞ்சள் நரம்புகள் இருந்தன. அதுபற்றி விசாரித்த போது அதுதான் கல்யாண முருங்கை என்ற விபரம் கிடைத்தது. முள்முருங்கையைத்தான் கல்யாண முருங்கை என அழைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் திருமண நிகழ்வுக்கு முன்னரான பொன்னுருக்குதல் போன்ற நிகழ்வுகளில் முள்முருங்கைக் கதியாலை மாப்பிள்ளை வீட்டிலும் பெண் வீட்டிலும் வேலியோடு சேர்த்து நடுவர்.

திருமணச்சடங்குகளின் கலாச்சார அடையாளமாக இது பேணப்பட்டு வந்தது.

முருங்கைக்காய் தரும் முருங்கையை கறி முருங்கை என்றும் மற்றைய முருங்கையை முள்முருங்கை என்றும் அழைப்பார்கள்.

திருமணச் சடங்குகள் தொடர்பான சடங்குகளில் முள்முருங்கையைப் பயன்டுத்தியதால் அதற்கு கல்யாண முருங்கை என்றும் பெயர் வந்தது.

வெற்றிலைக் கொடியின் தண்டு வேர்கள் பற்றிப்படர்வதற்கு முள்முருங்கையையே நடுவார்கள்.

முள்முருங்கைக் குழைகளை ஆடு மாடுகள் விரும்பிச் சுவைத்துச் சாப்பிடும் முயலும். அப்படித்தான் நறுக் நறுக்கென்று ஒரு ஆடு சாப்பிடும் அளவு முருங்கைக் குழையை சாப்பிட்டு முடித்துவிடும்.

வேள்விக்கு ஆடு வளர்ப்பவர்கள் தாம் வளர்க்கும் ஆடுகளுக்கு முள்முருங்கை இலையைத் தீத்துவார்கள் . முள்முருங்கை சத்துள்ளது தசைகளை வளர்ப்பது. முள்முருங்கை இலை சாப்பிட்ட கிடாய் ஆடுகள் மதாலிச்சு பளபள என மினுங்கியபடி கம்பீரமான குதிரைக் கோலத்தில் நிற்கும்.

இது போக முள்முருங்கைக் குருத்தை வறுத்துச் சாப்பிடலாம். முள்முருங்கை மரம் ஒரு மூலிகை மரம். சித்த வைத்தியத்தில் இதற்கு பெரும் பங்குண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு விடயம் ஊரிலை கூழ் குடிப்பதற்கு பலா இலையைப் பயன்படுத்துவது போல பால்றொட்டி அரியதுரம் போன்ற பலகாரங்களை முள்முருங்கை மர இலையிலேயே தட்டி தாச்சிச் சட்டிக்குள் போட்டு எடுப்பார்கள்.

நமது முன்னோர்கள் எல்லாச் செய்கைக்கும் ஏதோவொரு மருத்துவக் காரணம் வைத்திருப்பார்கள். அவற்றை ஆராயாமல் கேலியும் கிண்டலும் செய்வதுதான் பலரின் வாடிக்கையாக இருந்தது.

அதை கூகுளிலும் விக்கிபீடியாவிலும் பார்த்தவுடன் Did you see.. என்று அவர்களால்தான் கண்டு பிடிச்சதுமாதிரி கொண்டாடுவோம்.

Super Market களில் பொலித்தீன் பைகளில் அடுக்கி வைத்த எமது இலைவகைச் செல்வங்களை அப்பொழுதுதான் அறிந்தவர் போல் நடிப்பவர்கள் நாம்.

கைக்கெட்டும் தூரத்தில் இவை இருந்தவை இருக்கின்றன.

## எம் தேசத்தின் அடையாளம்...
## பனை மரம்

பனங்கொட்டை சூப்பிகள் என சிங்களவர்களால் பரிகசிக்கப் பட்டவர்கள் நாம்! ஆனால் தை மாதம் பிறந்தால் பனங்கள்ளுக் குடிப்பதற் கென்றே யாழ்ப்பாணத்திற்கு ஓடிவரும் சிங்களவர்கள் ஏராளம்!

பனங் கொட்டைதான் யாழ்ப்பாணத்தானின் அடையாளம் என்று சிங்களவர்கள் பரிகசித்துவைக்க இன்று உலகம் முழுவதற்கும் யாழ்ப்பாணத்தின் அடையாளமாக நிற்பது பனை மரம்தான்.

பனைமரங்களின் பிறப்பிடமே யாழ்ப்பாணம்தான் என இன்று யாழ்ப்பாணத்தவர்கள் மார் தட்டிக்கொண்டு நின்றாலும் உண்மையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைமரத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் சம்மந்தமே இல்லையென்று சொல்கின்றார்கள் ஆராய்ச்சியாளர்கள்!

பனை மரத்தின் பூர்வீகம் ஆப்பிரிக்காதான் என்று ஆராய்ச்சியாளர்கள் சொன்னார்கள் என்று சொல்கின்றார்களே தவிர எந்த நாட்டு ஆராட்சியாளர்கள் எப்பொழுது சொன்னார்கள் என்று யாருமே சொல்லவில்லை. பொத்தம் பொதுவாக ஆராட்சியாளர்கள் சொன்னார்கள் என்று கூகிளும் சொல்கிறது. அதனால்த்தான் மேலே அப்படிச் சொன்னேன்.

அப்படியானால் இன்று யாழ்ப்பாணத்தின் அடையாளமாக ஏன் பனைமரத்தைக் குறிப்பிடுகின்றார்கள்? ஒருவேளை பனை மரத்தின் பயன்பாட்டை முற்றிலுமாக கண்டுபிடித்தவன் யாழ்ப்பாணத்தவனாக இருக்கலாமோ என்னவோ!

எனது தாயார் பிறந்த ஊர் வேலணை. இன்று வேலணை என்று நாகரிகமாகச் சொன்னாலும் அன்று வேலணைத்தீவு என்றுதான் சொல்வார்கள். எங்கள் அம்மாவுடன் சகஜமாகப் பழகுபவர்கள்கூட அவர் இல்லாத இடத்தில் அவரை அடையாளப்படுத்துவதற்கு தீவாள் என்றுதான் சொல்வார்கள்! (எங்கள் அயலில் வேறு எந்தத் தீவாளும் இல்லை!) இதற்காக அம்மா ஒன்றும் வெட்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை!. ஆனால் பிள்ளைகள் நாங்கள் வெட்கப்பட்டதுண்டு! அந்த சின்ன வயசிலேயே தீவு என்பது நாகரிகம் இல்லாத ஊர் என்று எங்களுக்கு யாரோ சொல்லிவைத்திருந்தார்கள்! ஆனால் நான் பிரான்ஸ் வந்த பின்பு ஜெர்மனியில் வசித்து வந்த எனது நண்பர் திரு.சிவனடியான் ஸ்ரீபதி அவர்கள் தான் எழுதுகின்ற படைப்புக்களை தீவான் என்ற பெயரிலேயே எழுதியதைப் பார்த்ததும் அவர் தான் பிறந்த மண் தீவுதான் என்பதை பெருமையாகச் சொல்வதைப் பார்த்து நான் பெருமைப்பட்டுக் கொண்டேன்.

அம்மாவிற்கு சீதனமாகக் கொடுத்த இருபது பரப்புக் காணி வேலணையில் இருக்கின்றது. அம்மா தனது காணியைப் பார்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்டில் தனது பெற்றோர்களையும் பார்ப்பதற்காக வேலணைக்குச் செல்லும்பட்சத்தில் நாங்களும் அம்மாவுடன் ஒட்டிக்கொள்வோம். எங்களுக்கு வேலணையில் பார்ப்பதற்கு ஒன்றுமே இல்லை. ஆனால் நீண்ட பயணம் செல்வதில் ஆனந்தம். அதுவும் முதலில் பஸ்சில் சென்று பின்னர் பண்ணையில் இருந்து வள்ளம் மூலமாக சிறிது தூரம் கடற் பயணம் (அப்பொழுது பண்ணை பாலம் அமைந்த வீதி போடப்படவில்லை) அதன் பின்பு இரண்டாவது தடவையாக பஸ்சில் சென்று வேலணையின் முக்கிய ஊரான வங்களாவடியில் இறங்கி பத்து நிமிடம் உள்ளுக்குள் நடந்து சென்றால் அம்மா பிறந்த வீட்டை அடைந்து விடலாம்.

வங்களாவடியைத் தாண்டி உள்ளுக்கு ஊருக்குள் செல்லும் வீதிகளின் பக்கம் எல்லாம் ஓலைக் குடிசைகள்தான். எங்காவது எட்டாத தூரத்தில் அதிசயமாக ஒரு கல் வீட்டைப் பார்க்க முடியும். எல்லாக் குடிசைகளும் பனை ஓலையால்தான் வேய்ந்திருப்பார்கள். வேலிகள் எல்லாம் பனை ஓலையால்தான் அடைக்கப்பட்டிருக்கும். அதிலும் ஒரு அழகிருக்கும். அது மாத்திரமல்ல! பனை மரத்தில் இருந்து கிடைக்கும் அனைத்துப் பொருட்களும் அவர்களின் அன்றாடப் பயன்பாட்டில் இருக்கும்.

நாங்கள் இங்கு கிணறுகளுக்கு துலாக்கொடியாக தென்னந்தும்பில் திரிக்கப்பட்ட கயிறுகளைக் கொடியாக பாவிப்போம். அங்கு பனம் நார் எடுத்து பின்னல் மாதிரிப் பின்னி கயிறாகப் பாவிப்பார்கள். தண்ணீர் அள்ளுவதற்கு பனை ஓலையால் வாளி மாதிரி வடிவமைத்திருப்பார்கள். அதனைப் பட்டை என்று சொல்வார்கள். இப்படி இப்படியாக பனை மரத்தின் பயன்பாட்டை முற்றிலுமாக அனுபவிப்பவர்கள் தீவுப் பகுதிகளில் வாழும் மக்கள்தான்.

யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் எங்களுக்கு தை மாசி மாதங்களில் நுங்கு தாராளமாகக் கிடைக்கும். அடுத்தடுத்த மாதங்களில் பனம் பழம். அதை நுங்கைப்போல அவ்வளவு விருப்பமாக சாப்பிடா விட்டாலும் அதன் ருசியும் மறக்கமுடியாதது! பனம் பழத்தில் இருந்து பனங்காய் பணியாரம், பனாட்டு போன்றவை தயாரிப்பார்கள் (இன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறைக்கு பனாட்டு என்றால் என்னவென்றே தெரியாது!) வைகாசி ஆனி மாதங்களில் சென்றால் பூரான் சாப்பிடலாம்! (பனங்கிழங்கிற்காக மண்ணில் மேடை கட்டி அதன்மேல் பனங்கொட்டைகளை விதை போட்டிருப்பார்கள். அவை முளைவிடும்போது பிடுங்கி எடுத்து வெட்டிப் பிளந்தால் உள்ளே இருப்பதுதான் பூரான்) மேடையில் விதைத்த பனங்கொட்டைகளை பிடுங்கி எடுக்க விடமாட்டார்கள். நாங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்வதனால் எங்களுக்கு தனிச் சலுகை வழங்கப்படும். அடுத்தடுத்த மாதங்களில் பனங்கிழங்கு. இப்படியாக வருடம் முழுவதும் பனையின் பயன்பாடு கிடைத்துக்கொண்டே இருக்கும்.

அம்மா வேலணையில் இருந்து கொண்டுவரும் முக்கியமானதொன்று பனங் குருத்து! தீவுப் பகுதியில் பிறந்த அனைவருக்கும் பாய் பெட்டி தயாரிப்பதற்கு யாரும் சொல்லிக்கொடுக்கத் தேவையில்லை! அம்மாவின் தனிச் சம்பாத்தியம் பாய் பெட்டி இழைத்து விற்பது. இதற்காக வேலணையில் இருந்து பனங் குருத்துக்களை கட்டிக் காவிக்கொண்டு வருவார்கள். பனங்கிழங்கு காலத்தில் அம்மா வேலணைக்குச் சென்று வந்தால் பக்கத்து வீடுகளுக்கு பனங்கிழங்கோடு ஒடியல், பனாட்டு என்று கொடுப்பது வழக்கம். 'கொடுக்கும்போது அன்பாக வாங்கிக் கொண்டு சாப்பிடும்போது 'தீவாள் தந்தது' என்று பரிகாசமாகத்தான் சொல்லிக்கொள்வார்கள். இதை எப்படியோ அறிந்த அம்மா பிற்பாடு அந்த இலவச வினியோகத்தை நிறுத்திவிட்டார்.

அது ஒன்றும் அவர்களுக்கு பெரிய பாதிப்பில்லைத் தான். ஆனாலும் கூழ் காய்ச்சுகின்ற நாட்களில் ஒடியல்மாவிற்கு அம்மாவிடம்தான் வந்து நிற்பார்கள். இப்பொழுதென்றால் கடையில் வாங்கலாம். அன்றைய நாட்களில் ஒடியல் மாவை காசுக்கு விற்பதெல்லாம் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க முடியாதது.

பனம் குருத்தை ஈக்குகள் விலத்தி ஒழுங்காக ஒரே அளவில் சீவி எடுத்து, தேவைக்கேற்ப சிவப்பு பச்சை நீல நிற வர்ணங்கள் தோய்த்து அதில் பாய் பெட்டி முதலியன தயாரித்து வைத்தால் எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலிற்குள்ளேயே விற்றுவிடும். அனேகமானவர்கள் கோவில் திருவிழா விற்கும் போனால் தங்களுக்கு தேவையான பாய் பெட்டி முதலியனவற்றை வாங்குவது வழமை. ஆனால் அம்மாவிடம் வாங்குவதில் வாங்குபவர் களுக்கு இரண்டு நன்மை! ஒன்று இது உறுதியானவை, இரண்டாவது அங்கு வாங்குவதைவிட ஐம்பது சதமாவது குறைவாக வாங்கலாம். இதனால் அம்மாவிற்கும் உடனடியாக கையில் பணம் கிடைக்கின்றது. வாங்குபவர்களும் திருப்தியுடன் வாங்குவார்கள்.

வார்ந்தெடுக்கப்படும் ஈக்குகள்கூட வீணாக்கப்படுவதில்லை. ஐம்பது அல்லது நூறு ஈக்குகள் அடங்கக்கூடியதாக கட்டிவைத்திருப்பார். தென்னோலையால் வீடு வேய்பவர்கள் தேடி வந்து அதையும் வாங்கிச் செல்வார்கள்.

இவையெல்லாம் நான் ஏன் இங்கு சொல்கின்றேன் என்றால் பனையில் இருந்து எந்தப் பொருளும் வீணாவதில்லை என்பதை சொல்வதற்கு மட்டுமில்லை; யாழ்ப்பாணத்தவர்களுக்குத்தான் பனையின் பெறுமதி தெரிந்திருக்கின்றது என்பதையும் சொல்வதற்காகவே.

பனைமரத்தில் இருந்து பெறப்படும் பொருட்களில் பனஞ்சாறு முக்கியமானது. இந்த பனஞ்சாற்றை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் ஒன்று பதநீர். இதைக் கருப்பநீர் என்றும் சொல்வார்கள். மற்றொன்று கள்ளு. பதநீரில் இருந்து பனம் வெல்லம், பனஞ் சீனி ஆகியவன தயாரிக்கப்படுகின்றன.

பனையில் மட்டும்தான் ஆண் பனை, பெண் பனை என இரண்டு வகை உண்டு! இதே இனத்தைச் சேர்ந்த கமுகு, தென்னை ஆகியன வற்றில் இந்தப் பாகுபாடு இல்லை! கமுகு மற்றும் தென்னை மரங்கள் வீடுகளில் எங்களால் நீர் ஊற்றி வளர்க்கப்படுவது. பனை அப்படியில்லை. அதற்கு நாம் நீர் ஊற்றவேண்டிய அவசியமே இல்லை! பனையின் வேர்களுக்கு நிலத்தடி நீரை உறிஞ்சி இழுக்கும் வல்லமை இயற்கையாகவே இருப்பதனால் அது எந்த வரண்ட நிலத்திலும் செழிப்பாக வளர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்குத் தம்மை அர்ப்பணிக்கின்றது! வஞ்சனை செய்ய பனை மரத்திற்குத் தெரியாது!. சிலர் உதாரணத்திற்குச் சொல்வார்கள் 'அது வேசி பெற்ற பிள்ளை மாதிரி தானாய் வளரும்' என்று!

தை, பிறந்தால் யாழ்ப்பாணத்துக் கள்ளுக் கொட்டில்கள் எல்லாம் கொடியேறி திருவிழாத் தொடங்கிவிடும்! இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக இங்கு வந்து செல்வார்கள். பனங்கள்ளுக்குப் பிரசித்தி பெற்ற இடங்களாக ஆனைக்கோட்டை, நல்லூர் அரசடி, நுணாவில், கூவில் (கீரிமலைக்கு அண்மையில்) போன்ற இடங்கள் பனங்கள்ளுப் பிரியர்களால் அடையாளம் காட்டப்பட்டாலும் உள்ளூர்வாசிகள் தங்களுக்குத் தெரிந்த கள் இறக்கு பவர்களின் வீடுகளிலேயே வாடிக்கையாக வாங்கிக் கொள்வார்கள்.

என்.எம்.பெரேரா நிதி அமைச்சராக வந்த பின்னர் கள் இறக்குவதை கூட்டுறவு முறையாக்கியதால் எவரும் வீடுகளில் வைத்து விற்கமுடியாது! அவரவர்கள் இறக்கும் கள்ளை கூட்டுறவுச் சங்கத்தால் நடாத்தப்படும் தவறணைகளுக்கே கொடுக்க வேண்டும் எனச் சட்டம் வந்ததனால் வீடுகளில் வாடிக்கைக் கள் குடிப்பவர்கள் தவறணையை நாடவேண்டிய நிலைமை ஆகிவிட்டது.

என்.எம். பெரோராவின் இந்த அரிய திட்டத்தால் கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த ஏராளமான நலிந்த தொழிலாளர்கள் பயனடைந்தார்கள் என்பது வரலாறு. அதற்கு முன்னர் அந்தத் தொழில் பற்றி எதுவுமே தெரியாதவர்கள் தாங்களே ஊருக்குள் பனை தென்னை முதலியவற்றைக் குத்தகை எடுத்து தொழிலாளர்களுக்கு குறைந்த ஊதியம் கொடுத்துக் கள் இறக்குவித்து தாங்கள் முதலாளியாக இருந்து பெரிய பெரிய கள்ளுக் கொட்டில்களை நடாத்தி வந்தார்கள். கூட்டுறவுத் தவறணை முறை வந்ததும் அவர்கள் பாடு பெரும் திண்டாட்டம் ஆனது தனிக் கதை.

தவறணை முறை வந்த பின்பு யாழ்ப்பாணம் தெங்கு பனம்பொருள்க் கூட்டுறவுச் சங்கம் பனங்கள்ளைப் போத்தலில் அடைத்து கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பெரு நகரங்களுக்கு அனுப்பியதும், பனங்கட்டி தயாரித்ததும், உண்டு. ஆனால் தீவுப்பகுதி மக்களின் கைத்தொழிலாக பனம் வடலி ஓலையில் விசிறி செய்வது, பனங்கட்டி ஊத்துவதற்கான பனங் குட்டான்கள் தயாரிப்பது, பணம் வைத்துப் பிழங்குவதற்காக அழகான அடுக்குப்பெட்டிகள் (இதனை கொட்டப்பெட்டி என்றும் சொல்வார்கள்) அடுப்படிக்குத் தேவையான சுளகு, உறி இப்படி இப்படியாக இன்று பாவனையில் இல்லாத ஏராளமான பொருட்களைத் தயாரிப்பதற்கு மூலதனமாக இருந்தது இந்தப் பனைமரம்தான்.

பனை மரத்தைப் பற்றி ஒரு சுவாரசியமான தகவல் யாழ்ப்பாணம் மகாஜனாக் கல்லூரியின் அதிபராக இருந்த அமரர் பொ. கனகசபாபதி அவர்கள் எழுதிய 'மண் மாந்தர் மிருகம்' என்ற புத்தகத்தில் 'தான் நைஜிரியாவிலும் பனை மரங்களைக் கண்டதாகவும் அனேகமாக எல்லா மரங்களும் இரண்டு அல்லது மூன்று கிளைகளையுடைதாகவே இருந்தன" என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். இதேபோல யாழ்ப்பாணத்திலும் பருத்தித்துறை என்னும் ஊரில் அதிசயமாக மூன்று கிளைகளுடன் உள்ள பனை மரம் ஒன்று உள்ளது. அந்த அதிசயத்தைப் பார்ப்பதற்கென்றே நான் நண்பர்களுடன் சைக்கிளில் பருத்தித்துறை போய் வந்தது இன்றும் ஞாபகத்தில் இருக்கின்றது.

இன்று ஏராளமான பனை மரங்கள் இராணுவத்தின் குண்டுத் தாக்குதல்களுக்கு இரையாகிப் போனாலும் பனை என்றதும் எமது நினைவிற்கு வருபவர் யாழ்ப்பாணம் மில்க் வைற் சோப் நிறுவனத்தின் அதிபர் திருவாளர் கனகராசா அவர்கள்தான்! பனையின் பெறுமதியை சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே நம்மவர்களுக்கு புரியவைத்து பனம் விதைகளை லாரி லாரியாக ஏற்றி வன்னிப் பிரதேசம் முழுவதும் 'பனை வளர்ப்போம் பயன் பெறுவோம்' என்ற கோசத்துடன் இலவசமாக வழங்கி இன்று ஓரளவாவது பனையின் சந்ததி அழியாமல் காத்த அந்தப் பெருமகனை மறக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5

# வாழையடி வாழை...

'தினம் ஒரு வாழை (பழம்) நல்லதாக்கும் அந்த நாளை!'

பழம் தருகின்ற மரங்களிலேயே வாழை மரம் மங்களகரமான மரம் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. என்னதான் மங்களகரமானதாக இருந்தாலும் அதன் ஆயுள் சொற்பமானதுதான்! வாழை ஒரு குலை போட்டதும் அதன் வாழ்வு முடிந்துவிடுகின்றது! ஆனாலும் தனது வம்சத்தை விருத்திசெய்ய பல குட்டிகளைப் போட்டு விட்டுத்தான் குலையே போடுகின்றது. வாழையின் வம்சம் அழியாமல் நீண்டுகொண்டே போவதனால்தான் வாழ்த்தும்போது 'வாழையடி வாழையைப்போல் உங்கள் வம்சம் நீடூழி வாழ்க' என பெரியவர்கள் வாழ்த்துவார்கள்.

மரங்களில் ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு ரகமாக இருக்கும். சில மரங்களில் காய் மட்டுமே பயன்படும்! சில மரங்களில் இலை மட்டுமே பயன்படும்! சில மரங்களின் பூ அழகு! சிலவற்றின் தண்டு உணவா கின்றது! ஆனால் வாழை மரத்தில் அதன் அத்தனை பாகங்களும் பயன் தருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் வாழைப்பழம் கிடைக்கின்றது. அதேநேரத்தில் சகல மக்களும் வாங்கிச் சாப்பிடக்கூடிய வகையில் மலிவாகக் கிடைப்பதும் வாழைப்பழம்தான்! மலிவாகக் கிடைக்கின்றது என்பதனால் வாழைப்பழத்தில் எந்தவிதமான சத்தும் இல்லை என நினைக்கக்கூடாது. வாழைப்பழத்தில் விற்றமின் ஏ, விற்றமின் பி, விற்றமின் சி, ஆகியனவற்றுடன் மக்னீசியம், பொட்டாசியம், இரும்புச்சத்து போன்ற சத்துப்பொருட்கள் அடங்கியிருப்பதால் அது பல்வேறு நோய்களுக்கு நிவாரணியாகவும் இருக்கின்றது.

வெப்பநிலை அதிகமாக உள்ள நாடுகளில் சாப்பாட்டிற்குப் பின்னர் அதன் துரித செமிபாட்டிற்காக ஒரு வாழைப்பழத்தைச் சாப்பிடுவது வழமையாகும். இலங்கை, இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் நகரங்களில் இருந்து கிராமங்கள்வரை உள்ள கடைகளில் எல்லாம் வாழைப்பழம் விற்பனையாவதைக் காணமுடியும்.

வாழையின் பழம் மட்டுமல்ல; வாழையின் நடுவில் உள்ள தண்டின் சாறு சிறுநீரகக் கற்களை நீக்குவதுடன் கல்லீரலின் செயற்பாட்டையும் அதிகரிக்க வைக்கும்! பொதுவாக அனைவரும் இதனை சமைத்துத்தான் சாப்பிடுவார்கள். ஆனால் இதனை பச்சையாக சாப்பிடுவதில்தான் அதிக பலன் கிடைக்கின்றது. பச்சையாக சாப்பிடும்போது ஏற்படும் கயர்ப்பை நீக்குவதற்கு சிறிது சிறிதான துண்டுகளாக வெட்டி அது கறுப்படையாமல் இருப்பதற்காக மோர் கலந்த நீரில் போடவேண்டும்.பின்னர் தயிருடன் கலந்து சாப்பிடுவதால் அதன் கயர்ப்பு நீங்கி உடலுக்கு வலு சேர்ப்பதுடன் ரத்தத்தை சுத்தப்படுத்தி இரத்த ஓட்டத்தை சீராக்குவது மட்டுமல்ல; இதில் இருக்கும் பொட்டாசியம் சத்து இரத்த அழுத்தத்தைக் கட்டுக்குள் வைக்க உதவுகின்றது. ஆனால் இதை மாதத்திற்கு இரண்டுதடவைகளுக்கு மேல் சாப்பிடக்கூடாது என சித்த வைத்தியர்கள் சொல்லி வைத்திருக்கின்றார்கள்.

நம்மில் பெரும்பாலானவர்கள் வாழைக் கிழங்கின் பயன்பாட்டைப்பற்றி அறிந்தே இருக்கமாட்டோம்! தமிழ்நாட்டில் உள்ள இயற்கை உணவு ஆராய்ச்சி மருத்துவர் கு.சிவராமன் அவர்கள் ஒரு கட்டுரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றார் ''வாழை மரத்தின் அடிப்பகுதியில் மண்ணுக்குள் புதையுண்டு இருக்கும் இக்கிழங்கானது அவியல், பொரியல், உருளைக்கிழங்குடன் சேர்த்து மசாலா செய்தல் என பலவிமான சமையலும் செய்யலாம். வாழைக் கிழங்கு மரத்தில் இருக்கும்போது மாலை நேரத்தில் மரத்தின் அடிப்பகுதி மண்ணை விலத்தி கிழங்கு தெரிந்தவுடன் அதில் சிறிது துளையிட்டு ஒரு சிறு கரண்டியை அதனுள் செருகி கரண்டியின் வாய்ப்பகுதியை ஒரு கிளாசிற்குள் இருக்கும்படி வைக்கவேண்டும். அந்தக் கிளாசிற்குள் சிறிது நற்சீரகத்தையும் போட்டு வைத்துவிட்டு மறுநாள் காலையில் வந்து பார்த்தால் கிழங்கில் இருந்து கொட்டிய சரில் சீரகத்தில் நன்கு ஊறியிருக்கும். அதை வெறும் வயிற்றில் அருந்தினால் சிறுநீரக கல் பிரச்சனை வெகுவாகக் குறையும்! இதயம் பலமாகும், இரத்தம் சுத்தமாகும்! உடம்பில் இருக்கும் நச்சுத்தன்மையைப் போக்கும்! மொத்தத்தில் இது உயர்தர மருந்துவகையைச் சேர்ந்தது!'' என கூறியிருக்கின்றார்.

''வாழைப்பூ துவர்ப்புச் சுவையுடைய நல்ல குளிர்ச்சியான உணவு. பெண்களுக்கு மாதவிடாய்க் காலங்களில் ஏற்படும் கடுமையான உடல் வலிக்கு வாழைப்பூவை சின்னச் சின்னதாக கொத்தி மிளகும் சின்ன வெங்காயமும் சேர்த்து வறுத்த வறை சிறந்த நிவாரணியாகும். அது மாத்திரமல்ல! இது குடலை வலுவாக்குவதுடன் குடல் புண்களை குணமடைய வைக்கின்றது! நீரழிவு நோய் உள்ளவர்களுக்கு இது மிகச் சிறந்த உணவாகும்!'' என சித்த மருத்துவர் ராஜமுருகன் அவர்கள் 'நல்ல சோறு சாப்பிடுவோம்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருக்கின்றார்

விருந்து என்றதுமே நமது நினைவிற்கு வருவது வாழையிலைதான். நம்மில் பலர் வாழையிலையில் சாப்பிடுவதற்கு மிகவும் பிரியப்படுவார்கள். பெரிய சபை விருந்துகளில் வாழையிலையில் உணவு பரிமாறுவதை நம்மவர்கள் தமிழர்களின் பண்பாடாகவே வைத்திருக்கின்றார்கள். விரத நாட்களில் வாழையிலையில் சாப்பிடுவது புண்ணியம் எனக் கருதுபவர்களும் உண்டு. (விரத நாட்களில் முன்னர் சாப்பிட்ட எச்சில் தட்டில் சாப்பிடாமல் சுத்தமாக சாப்பிடுவதற்காகவே வாழையிலையில் சாப்பிடுவது இந்துக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம்) சாப்பாட்டை சூட்டோடு வாழையிலையில் போட்டு பார்சலாக கட்டி சிறிது நேரத்திற்குப் பின்னர் அந்தச் சாப்பாட்டைச் சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருப்பது மட்டுமல்ல, நீண்ட தூரத்திற்கு கொண்டு செல்லும் பார்சல் சாப்பாடுகள் சூடான உணவினால் வாழையிலை வெந்து அதனில் உள்ள மருத்துவச் சத்துக்கள் உணவில் சேரும்போது நச்சுத் தன்மை ஏற்படாமலும் தடுக்கின்றது என ஆய்வுகள் மூலம் தெரிய வந்திருக்கின்றது.

காரணங்கள் எதுவாக இருந்தாலும் வாழையிலையில் சாப்பிடுவது சுத்தமானது மட்டுமல்ல, மருத்துவ ரீதியிலும் உடலுக்கு ஆரோக்கியமானது என்பதுதான் அடிப்படை உண்மையாகும்.

வாழை இலை மென்மையானது மட்டுமல்ல, குளுமையானதும்கூட. இலங்கை, இந்தியா போன்ற உஷ்ண வலய நாடுகளில் அம்மை நோய் கண்டவர்களை குளிர்ச்சிப்படுத்துவதற்காக வாழையிலையில் படுக்க வைப்பார்கள். தீயினில் வெந்தவர்களைக்கூட வாழையிலையில் படுக்க வைப்பதுண்டு.

பூக்கள், அல்லது பூ மாலைகளை தூர இடங்களுக்குக் கொண்டு செல்லவேண்டுமானால் இரண்டு மூன்று பச்சை வாழை மடல்களுக்கு நடுவில் இவைகளை வைத்து சுத்திக் கட்டிவிடுவார்கள். ஒரு குளிர்சாதனப் பெட்டிக்குள் இருப்பதுபோல குறைந்தது இரண்டு நாட்களுக்கு அவை உயிர்ப்புடனேயே இருக்கும்.

முன்பு சாப்பாட்டுக் கடைகளில் காயந்த வாழை மடல்களை ஒரு குறிப்பிட்ட அளவில் வெட்டி எடுத்து இரண்டு மடல்களை ஒன்றாக இணைத்து அதனை வாழையிலைக்குப் பதிலாக சாப்பாடு பரிமாறுவதற்குப் பயன்படுத்தினார்கள். இப்பொழுது அதே வாழை மடல்களை இயந்திரங்களின் உதவியுடன் அழகான சாப்பாட்டுப் பெட்டிகள் தயாரித்து நாகரிகமான முறையில் சாப்பாடு பார்சல் செய்து கொடுக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழை மடல்களில் இருந்து கிடைக்கும் நார்கள் நம் நாட்டில் பலவித தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. கயிறாகத் திரிப்பார்கள், மாலை கட்டப் பயன்படுத்துவார்கள். பெரிய அளவில் கொடி (பட்டடம்) கட்டி பறக்கவிடும்போது அந்தப் பட்டத்தில் நாதம் வரவைப்பதற்கு விண் கட்டுவதற்கும் வாழைநார்தான் பயன்படுத்துவார்கள்.

வாழை நாரில் நம்மவர்களின் பயன்பாடுகள் இந்த அளவோடுதான் இருக்கின்றது. ஆனால் யப்பானியர்கள் வாழைநாரில் இருந்து அழகான பட்டுத் துணிகளை நெய்கின்றார்கள்! வேறு சில நாடுகளில் காகிதமும் செய்கின்றார்கள் என அறிய முடிகின்றது. அது மாத்திரமல்ல, வாழையின் வேர்கள் மருத்துவத் தேவைகளுக்குக்கூட பயன்படுத்தப் படுகின்றது.

இந்தியாவில்தான் வாழை அதிகமாகப் பயிரிடப்படுகின்றது எனச் சொல்கின்றார்கள். அதேநேரம் ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளிலும் வாழை மரங்கள் அதிகமாகவே பயிரிடப்படுகின்றன. தென் அமெரிக்காவில் உள்ள கௌத்தமாலா என்ற ஊருக்கு 'வாழைப்பழ நாடு' என்றொரு காரணப் பெயரும் உண்டு.

குளிர்பிரதேச நாடுகளில் வாழைமரங்கள் உற்பத்தி செய்ய முடியாததால் அந்த நாடுகள் தமக்குத் தேவையான வாழைப்பழத்தை இறக்குமதி மூலமே பெற்றுக்கொள்கின்றன. இறக்குமதி செய்பவர்கள் குறிப்பிட்ட ஒருசில ரகங்களையே இறக்குமதி செய்வதனால் நம் நாடுகளில் உள்ளவர்கள் உண்பதுபோல எல்லாவிதமான வாழைப்பழங்களும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

நம் நாட்டில் கதலி, சீனிக்கதலி, கப்பல், இதரை, மொந்தன், யானை, செவ்வாழை, மருத்துவவாழை, இப்படியாக இன்னும் பல இனங்கள் இருக்கின்றன இந்தியாவில் ஏலக்கி, பூவன், பேயன், அடுக்குவாழை, மட்டி, பச்சை, மலைவாழை, கற்பூரவல்லி, ரஸ்த்தாளி, நேந்திரம், போன்ற வாழைகள் பிரபலமானவையாகும் . ஒவ்வொரு இன வாழையும் ஒவ்வொரு விதமான ருசியைக் கொடுப்பது மட்டுமல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெ;வேறு விதமான மருத்துவக் குணங்களும் அடங்கி இருக்கின்றன. ஊரில் ஒரு பழமொழி உண்டு. அது 'தினம் ஒரு வாழை நல்லதாக்கும் அந்த நாளை' என்பதாகும்

கதலி வாழையில் இரண்டு ரகம் இருப்பதுபோல மொந்தன் வாழையிலும் இரண்டு ரகம் இருக்கின்றது. அவற்றை பச்சை மொந்தன், சாம்பன் மொந்தன் என்று சொல்லுவார்கள். இந்த இரண்டு வகைகளையும் இலங்கையில் கறி சமைப்பதற்கே பயன்படுத்துவார்கள்.

வாழைப் பொத்திகளில் இதரை வாழைப் பொத்தியை சமையலுக்கு எடுப்பதில்லை. காரணம் அதில் அதிகமான கயர்ப்புத்தன்மை இருப்பதனால்.

இந்தியாவில் 'வலுத்தவனுக்கு வாழை, இளைத்தவனுக்கு எள்ளு' என்றொரு பழமொழி இருக்கின்றது. இப் பழமொழி உருவானதற்குக் காரணம் பண வசதியுடையவர்கள்தான் பெரிய அளவில் வாழைத் தோப்புக்களை உருவாக்கமுடியும்! வாழைமரம் பலமான மரம் அல்லாததால் குலை போட்ட வாழைகள் சின்னக் காத்துக்குக்கூட சாய்ந்துவிடும். ஆதலால் வாழை குலைபோடும் காலங்களில் அது சரிந்துவிடாமல் பாதுகாப்பதற்காக இரண்டு மூன்று கம்புகளைக்கொண்டு முட்டுக்கொடுக்க வேண்டும். அதற்கான செலவுகளைச் சமாளிக்க வலுத்த பணமுடையவர் களால்தான் முடியும். பணவசதி குறைந்தவர்கள் எள்ளைப் பயிரிட்டால் இப்படியான செலவுகள் ஏற்படாது என்பதனால் இந்தப் பழமொழி உருவாகியதாம்.

வாழை குலை போட்டதன் பின்னர் தான் மரணிக்கும்போது தனது இனம் அழியாமல் இருப்பதற்காக பல குட்டிகளைக் கொடுத்துவிட்டுச் சென்றாலும் வாழைத்தோப்பு வைத்திருப்பவர்கள் தொடர்ந்தும் அடி அடியாக அதே வாழைமரங்களைத் தோப்பில் வைத்திருப்பதில்லை! காரணம் இரண்டு மூன்று தலைமுறைக்குப் பின்னர் உருவாகிவரும் வாழை போடும் குட்டிகள் அனேகமாக குருக்குத்தி (இது வாழைக்கான ஒருவகை நோய்) அடைந்துவிட வாய்ப்பு இருக்கின்றது. ஒரு வாழை குருக்குத்தி அடைந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து வாழைகளுக்கும் அது தொற்றும் வாய்ப்பும் அதிகம் உண்டு என்பதனாலும் மண்ணையும் பசளையிட்டுப் புதுப்பிப்பதற்காகவும் இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை வாழைத்தோப்பையும் புதுப்பித்துக் கொண்டே இருப்பார்கள்.

வாழையடி வாழை என்பது வாழையை மட்டுமல்ல; ஒரு தொழில் அழிந்துவிடாமல் பரம்பரையாக செய்பவர்களை... ஒரு இனத்தின் கலாச்சாரத்தை, பண்பாட்டை, நாகரிகத்தை தொடர்ந்து காப்பாற்றி வருபவர் களை... தலைமுறை தலைமுறையாக ஒரு வீட்டில் கூட்டுக் குடும்பமாக வாழ்பவர்களை... இப்படியானவர்களையெல்லாம் வாழையடி வாழையாக வாழ்பவர்கள் என்றே சொல்வது நம் நாட்டு வழமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# ஒற்றைக் காலில் உச்சித்தவம் செய்யும் மரம்!

## (பொதுவானது)

நாம் மரங்களை வெகு சாதாரணமாக மரம் என்று கூறுகின்றோம்! இந்த மரங்கள் எங்கள் வாழ்க்கையோடு எவ்வளவு பின்னிப் பிணைந் திருக்கின்றன என்பதை நம்மில் எத்தனைபேர் அறிந்து வைத்திருக் கின்றோம்? மரத்தில் இருந்து பல சொற்கள் நமது அன்றாட வாழ்க்கையில் பேசப்படுகின்ற சொற்களாக இருக்கின்றன!

எமது உடலில் ஏதாவது ஒரு உறுப்பு உணர்ச்சியற்றுப் போய்விட்டால் அதை மரத்துப்போய்விட்டது என்று சொல்கின்றோம். சிலருக்கு எத்தனை தடவைகள் சொன்னாலும் அதை அவர்கள் அலட்சியப்படுத்தும் போதும் 'அவனுக்கு எல்லாம் மரத்துப்போய்விட்டது அல்லது மரமண்டையன்' என்றும் சொல்வதுண்டு!

மரங்களுக்கு சாதாரணமாகவே கிளைகள் இருக்கும். இந்த கிளை என்னும் சொல்லை நாம் எங்கெல்லாம் பாவிக்கின்றோம் எனப் பார்ப்போம். ஒரு நிறுவனத்திற்கு வேறு பல இடங்களில் அதன் இன்னொரு ஸ்தாபனம் இருந்தால் அதனை இந்த ஸ்தாபனத்தின் கிளை ஸ்தாபனம் என்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல! கூட்டம் கூட்டமாக செல்பவர்களை கிளைவிட்டுச் செல்கின்றார்கள் என்போம்.

கிளைகளில் உள்ள தளிர்களை மையப்படுத்தி இளம் பருவத்தினரை இளம் தளிர்கள் என்போம். தளிர்களின் நுனியில் இருக்கும் கொழுந்து களை அண்டிவந்த பெயர்தான் கொளுந்தனார் என்ற சொல்லென தமிழாய்வாளர்கள் சொல்கின்றார்கள் (கொளுந்தனார் என்னும் சொற்பதம் தமிழ்நாட்டுத் தமிழர்களிடம்தான் பேச்சு வழக்கில் இருக்கின்றது)

மரத்தின் கிளைகளை நாம் தடி என்றும் சொல்வதுண்டு. இந்த தடி என்னும் சொல்லை மையப்படுத்தி 'தடிமாடு மாதிரி வளர்ந்திருக்கிறாயே இதுகூடத் தெரியாதா?' என ஏசுவார்கள், ஒருவரின் பின்னாலேயே சதா நேரமும் இருப்பவரைப்பார்த்து 'இவர் அவரின் தைத்தடி என்பார்கள். அதேநேரம் அந்தத் தடிகளில் உள்ள சிறிய கிளைகளை குச்சி எனச் சொல்வோம். மிகவும் மெலிதானவர்களைப் பார்த்து ஒல்லிக்குச்சியாட்டம் இருக்கின்றார் என்போம்

ஆலமரத்தை கருணையுள்ள மரம் என்று சொல்வார்கள்! காரணம் வேறு எந்த மரங்களின் கீழேயும் நிம்மதியாகப் படுத்துறங்கி களைப்பாற முடியாது. மற்றய மரங்களின் காய்களோ, அல்லது அம்மரங்களின் வேறு பாகங்களோ கீழே களைப்பாறுபவரின் மேலே விழுந்தால் அதோகதிதான்! ஆனால் ஆலமரத்தில் இருந்து பழம் அல்லது இலை மட்டும்தான் விழும். ஆலம்பழம் மிகவும் மென்மையான பழம். எந்தவிதமான ஆபத்தையும் ஏற்படுத்தாது. ஆதலால்தான் அதனை கருணை மரம் என்று சொல்வார் கள். அத்தோடு ஆலம் விழுதுகளையும் கிளைகளுக்கு ஒப்பாகவே சொல்லிக் கொள்வார்கள்.

பூ! பூவையர்! பூ மென்மையானது. பெண்கள் மென்மையானவர்கள். ஆதலால்தான் பெண்களை பூவையர் என்கின்றோம். அதுமாத்திரமல்ல பூக்களில் ஒரு வசீகரம் இருக்கின்றது. பெண்களிடமும் ஒரு வசீகரம் இருக்கின்றது! ஆதலால் பூவையர் என்ற சொல் வருவதற்கு இதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காரணமாக இருக்கலாம். பூவின் வாசனையை மையப்படுத்தி கல்வியறிவு இல்லாதவர்களைப் பார்த்து 'இவன் படிப்பு வாசனையே இல்லாதவன்' என்று சொல்வார்கள். வாசம் என்பதை மணம் என்றும் சொல்வோம். திருமணம் என்பதில் வரும் மணம் வாழ்க்கை என்றென்றும் மணம் வீசவேண்டும் என்பதையே குறிக்கின்றது.

பெண்கள் பருவமடையும்போது 'அவள் ‘பூப்பெய்துவிட்டாள்’ என்று சொல்வதும், பூமியை பூமண்டலம், பூவுலகம் என்றெல்லாம் நாம் பாவிக்கும் சொற்கள்கூட இவையெல்லாம் பூவிற்கு மரியாதை செய்யும் சொற்களாகவே இருக்கின்றன. மேலும் பூவில் இருந்து வரும் இந்த வாசம் என்னும் சொல்லில் இருந்து தங்குவது, அதாவது வாசம் செய்தல் என்னும் பதமும் வருகின்றது. உதாரணமாக இவர் கொழும்புவாசி! இவர் மட்டக்களப்பு வாசி என்றெல்லாம் சொல்வார்கள். அதுபோல அந்த மரத்தில் பறவைகள் வாசம் செய்கின்றன என்றும் சொல்வது வழமையாகும். மரங்களைப்பற்றிக் குறிப்பிடும்போது பூ மட்டுமே எங்களால் அதிகம் பேசப்படுகின்றது!

மரங்களை வளரவிடாது கொழுந்திலேயே பறிக்கப்படுவது தேயிலை மரத்தில் இருந்து பறிக்கப்படும் கொழுந்துகளாகும். வளர்ந்த பெரிய மரங்களில் பட்டைகள் இருக்கும். இந்தச் சொல்லை மையப்படுத்தி ஒருவர் வெற்றிகளைக் குவிக்கும்போது 'அவன் பட்டையைக் கிளப்புறான்' என்று சொல்கின்றோம். வேம்பு, முதிரை, தேக்கு போன்ற மரங்கள் மிகவும் உறுதியான மரங்களாகும். அதேபோல பலசாலியான மனிதர்களை 'அது வைரம் பாய்ந்த கட்டை' என்று சொல்வோம்.

புளியமரத்தின் தடிகளை எளிதில் முறித்துவிடமுடியாது! அவ்வளவு உறுதியானது. வலுவான இடத்தில் உறவு வைத்துக்கொள்பவர்களை 'புடிச்சாலும் புளியங்கொம்பாத்தான் புடிச்சிருக்கிறாய்' என்றுதான் சொல்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களில் முள் மரங்களும் இருக்கின்றன. இந்த மரங்களிற்கு அருகாமையாக செல்கையில் எமது உடைகள் அதன் முட்கள் கிழித்து விடுவதுண்டு! அதேபோல சில மனிதர்களும் இருக்கின்றார்கள். அவர்களுக்கு அருகாமையால் நாம் செல்லும்போது தேவையில்லாமல் வம்பு பேசி சண்டைக்கிழுப்பார்கள். அவர்களைப்பார்த்து இவன் ஒரு முள்ளு எனச் சொல்வார்கள்! மரங்களை வாழவைப்பது வேர்கள்தான். அந்த வேர்களை வெட்டிவிட்டால் அவை பட்டுவிடும்! அதுபோல சொந்தங்கள் எவரும் இல்லாமல் தனித்து நிற்பவரைப் பார்த்து வேரறுந்த மரம்போல் ஆகிவிட்டானே என்பார்கள்

மரங்கள் பூ கொடுக்கும்! காய் கொடுக்கும்! பழம் கொடுக்கும்; ஆனால் தனது ரத்தத்தையே கொடுப்பவை றப்பர் மரங்கள்! றப்பர் மரங்களின் பால்தான் இன்று உலக நாடுகளின் வீதிகளில் எல்லாம் ஓடுகின்ற வாகனங்களின் சில்லுகளின் மேல் உள்ள டயர்களாக மாறி எமது பயணத்தை சொகுசாக்குகின்றன!

எங்களோடு இவ்வளவு நெருக்கமாக இருக்கும் மரங்களில் ஒரு மரத்தை மட்டும் தனியாகப் பாருங்கள். அந்த மரம் ஒற்றைக்காலில் தவம் செய்வது போலல்லவா இருக்கின்றது?

தவம் செய்வது வரத்திற்காக!
இந்த மரங்களெல்லாம் வரம்பெற்று வந்தவையோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7

# நாவல் மரம்

நாம் விதைபோட்டு முளைக்கவைத்து தண்ணீர் ஊற்றி வளர்க்காமல் தானாகவே வளர்ந்து நமக்கு சுவையான, புரதச் சத்துக்கள் நிறைந்த பழங்களைத் தருகின்ற மரங்களில் நாவல் மரமும் ஒன்றாகும்.

நாவல் பழம் என்றதும் அனேகமாக நம் எல்லோருக்கும் நினைவிற்கு வருகின்ற கதை அவ்வைப் பாட்டியிடம் முருகப்பெருமான் 'சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' எனக் கேட்டு நாவாடிய கதைதான்.

முருகனிடம் தான் அவமானப்பட்டதை தாங்கமுடியாத அவ்வைப் பாட்டி கருங்காலிக் கட்டைகளுக்கெல்லாம் அசையாத என்னை ஒரு கதலித் தண்டு சாய்த்துவிட்டதே என கதறியழுததாக ஒரு அவ்வையின் பாடல் இருக்கின்றது.

*'கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி*
*இருங் கதலித் தண்டுக்கு நாணும் - பெருங்கானில்*
*காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான் தோற்றேன்*
*ஈரிரவும் துஞ்சாதென் கண்'*

இதுதான் அந்தப் பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மாத்திரமல்ல! நாவல்பழம் பசியைப் போக்கும் என்றும் முன்னோர்கள் சொல்வார்கள்! பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்த இராமபிரான் அந்த பதினான்கு ஆண்டுகளும் நாவற் பழத்தையே உண்டு வாழ்ந்தார் என்று இராமாயணம் சொல்கின்றது. இதில் இருந்து நம் முன்னோர்கள் சொல்லியதில் உண்மை இருக்கலாம் என நம்ப முடிகின்றது. இல்லாவிட்டால் பதினான்கு ஆண்டு காலமும் இராமருக்குப் பசிக்காமலா இருந்திருக்கும்? இவையெல்லாம் நாவல் மரத்திற்கு சிறப்பூட்டும் செய்தி களாகும்.

யாழ்ப்பாணத்தில் பல ஊர்களில் நாவல்காடு என்னும் பெயரில் குறிச்சிகள் இருக்கின்றன. நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் நாவல் பழத்தின் பெருமைகளைத் தெரிந்து கொள்ளாமலேயே அதன் ருசிக்காக மட்டும் நாவல் பழங்களை மரங்களிலிருந்து பறித்தும், மரங்களில் இருந்து பழுத்து விழுந்த பழங்களைப் பொறுக்கியெடுத்து அவ்வைப் பாட்டியைப்போல மண்ணை ஊதி விலத்திச் சாப்பிட்டவை யெல்லாம் ஒரு விளையாட்டாகவே கழிந்துவிட்டது. நாவல்பழம் சாப்பிட்டால் நாக்கில் படிந்த அதன் நிறம் போவதற்கு ஒருநாளாவது ஆகும்! ஊரில் இப்பழத்தைப் பெரியவர்கள் சாப்பிடுவது அரிதாகவே இருக்கும்! அதுமாத்திரமல்ல! ஊரில் நாவற்பழம் விற்பனை செய்யப்பட்டதாக நான் அறிந்திருக்கவில்லை (சில வேளைகளில் எங்காவது இருந்திருக்கலாம்!) இன்று வெளிநாடுகளுக்கு வந்த நாம் மாற்றவே முடியாத சர்க்கரை நோயை உடம்பில் வரவழைத்துக் கொண்டதன் பின்னர்தான் நாவற் பழத்தை யூரோவில் விலை கொடுத்து வாங்கி உண்கின்றோம்!.

அண்மைக் காலமாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு நாவல் பழம் இறக்குமதி செய்யப் படுகின்றன! நல்ல பாதுகாப்பாக றெஜிபோம் பெட்டிகளுக்குள் பொலித்தீன் பைக்கெற்றுக்களுக்குள் வைத்து அடைக்கப்பட்டு அலுங்காமல், குலுங்காமல் விமானம் மூலம் வரவழைக்கப்பட்டு கிலோ ஏழு யூரோ, எட்டு யூரோ என தங்கம் விற்பனை செய்வதுபோல விற்பனை செய்ய நாமெல்லாம் முந்தியடித்துக்கொண்டு வாங்குகின்றோம். 'நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் நிக்கிற பஸ்சை விட்டுவிட்டு அதன் பின்னர் துரத்திச் சென்று ஏறுபவர்கள்தான்' என யாரோ சொன்னது இப்பொழுது நினைவிற்கு வருகின்றது.

மாம்பழம், பலாப்பழம் போல நாவற்பழம் அவ்வளவு இனிமையானது அல்ல. சிறிது துவர்ப்பாக இருந்தாலும் அதன் சுவையே அலாதியானது. நாவல்பழத்தின் கொட்டைகள் பெரிதாகவும், சதை குறைவாக இருந்தாலும் சதையில் சாறுகள் நிறையவே இருக்கும். நாவற் பழத்தில் மாச்சத்து, புரதச்சத்து, இரும்புச்சத்து என பலதும் இருப்பதாக இப்பொழுது மருத்துவர்கள் ஆராய்ச்சி செய்து தெரிவிக்கும்போதுதான் ஆச்சரியப் படுகின்றோம்.

நாவல் மரம் மிகவும் பலம் வாய்ந்த மரமாகும்! புகைவண்டித் தண்டவாளத்தின் சிலிப்பர் கட்டைகள் கூடுதலாக நாவல் மரத்தில் இருந்துதான் செய்யப்படுகின்றதாம். அதுபோல வண்டில் சில்லுகளும் நாவல் மரத்தில் இருந்துதான் செய்யப்படுகின்றனவாம். மரத்தைத் தவிர நாவலின் ஏனைய அனைத்து உறுப்புகளும் மருத்துவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதாக ஆயுர்வேத மருத்துவக் குறிப்புகள் தெரிவிக்கின்றன!

இதன் பழம் இரத்தத்தில் உள்ள சீனிச் சத்தைக் குறைப்பதுடன் சிறுவர்களுக்கு வயிற்றோட்டம் இருந்தால் அதனையும் கட்டுப்படுத்தும்

மரம் பெரிதாக வளர்ந்து அதன் அடிப்பாகம் முற்றிப் பலமடையும் காலத்தில் மரத்தின் மேல் உள்ள பட்டைகள் மரத்தினை விட்டு விலகியும் விலகாமலுமாக சுருண்டு மரத்துடனேயே ஒட்டிக்கொண்டு இருக்கும். அதனைத் தூளாக அரைத்து உடம்பில் வீக்கம் உள்ள பகுதிகளில் பூசினால் வீக்கம் குறையும்.

பழத்தைப்போல அதன் விதைகளிலும் இரத்தத்தில் உள்ள சீனிச் சத்தைப் போக்கும் தன்மை இருப்பதால் விதைகளைக் காயவைத்து பின்னர் மாவாக அரைத்துவைத்து தினமும் காலையில் வெறும் வயிற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேக்கரண்டியளவு எடுத்து குளிர்ந்த நீரில் கலக்கிக் குடித்தால் சர்க்கரை நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். (பழம் எல்லாக் காலத்திலும் கிடைக்காததால் இப்பொழுது நாவற்பழக் கொட்டைகளை அரைத்து பைக்கற் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள்.)

முரசு கரைந்து இரத்தம் கசிபவர்கள் நாவல் இலையைச் சப்பு வதாலோ, அல்லது இலையை அரைத்து முரசில் தடவிக்கொள்வதாலோ முரசு கரைவதைக் கட்டுப்படுத்த முடியும்.

பிள்ளை பெற்றெடுத்த தாய்மார்கள் உடல் நோவைப் போக்குவதற்காக வேப்பம்பட்டை, பாவட்டை, போன்றவற்றுடன் நாவல் இலையையும் சேர்த்து நீரில் கொதிக்கவைத்து அந்த நீரில் குளித்தால் உடம்பு நோய் குறையும். இவையெல்லாம் ஆயுள்வேத மருத்துவக் குறிப்பில் சொல்லப் பட்டிருக்கின்றது.

பிலிப்பையின்ஸ் நாட்டில் நாவல்பழத்தில் இருந்து வையின் தயாரிக்கின்றார்களாம். இப்படியாக மருத்துவ குணமும், மதுவகைத் தரமும் கொண்ட ஒரு நாவல் மரத்தின் ஆயுட்காலம் நூறு வருடங்களுக்கும் மேலானதாகுமாம்!

இத்தனை சிறப்புக்கள் கொண்ட நாவல் மரத்தை இன்றும்கூட நாத்து வைத்து உற்பத்தியாக்கும் முயற்சியில் ஆயுள்வேத வைத்திய நிலையங்கள்கூட ஈடுபட்டதாக அறிய முடியவில்லை. தற்போது இருக்கின்ற மரங்களையாவது அழியவிடாமல் பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதில் பட்டதும் பதிந்ததும்!

## 8

# தொலைந்துபோன சந்தோஷங்கள்!

காலைப்பொழுது என்பது உயிரினங்கள் அனைத்திற்கும் புத்துணர்ச்சி கொடுக்கும் உன்னதமான பொழுதாகும்! நேற்றைய களைப்புக்கள் அனைத்தையும் இரவுத் தூக்கத்தோடு துரத்திவிட்டு மீண்டும் புது மனிதர்களாக பிறந்ததுபோல புத்துணர்ச்சியுடன் செயல்படுவதற்கான இனிய பொழுதான் காலைப்பொழுது.

பனித்துளிகளால் இரவு முழுவதும் குளித்திருந்த புற்கள் தொடங்கி மரம், செடி, கொடிகளும்! காக்கை குருவிகளோடு எங்கள் இல்லங்களில் எங்களில் ஒருவராக வாழ்ந்துவரும் ஆடு, மாடு, நாய், பூனை, இப்படி இப்படியாக அனைத்து உயிர்களும் துயில் களைந்து, சோம்பல் முறித்து, அன்றாடம் பணிகளுக்காக தங்களைத் தயார்படுத்துவதற்கும், எமக்கு புத்துணர்ச்சி தருவதற்கும், இயற்கை எமக்குத்தந்த இனிய பொழுதுதான் காலைப்பொழுது!

நான் புலம் பெயர்ந்து பிரான்ஸிற்கு வந்து நாற்பது வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கின்றது! வெளிநாடொன்றில் நாற்பதுவருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தோம் என்பதில் எனக்குப் பெருமையோ அல்லது சந்தோசமோ எதுவுமே கிடையாது! ஆனால் இங்கு வாழ்ந்த காலங்கள் முழுவதும் அந்த இனிய காலைப்பொழுதின் இன்பமான உணர்வுகளையெல்லாம் தொலைத்துவிட்டு வாழ்கின்றேனே என்னும் கவலை எனக்குண்டு.

காலையில் எங்கள் தூக்கம் கலைவதற்கு முன்பதாகவே ஜன்னலின் கம்பிகளுக்கூடாக கதிரவனின் ஒளிக்கீற்றுக்கள் எங்கள் போர்வையையும் தாண்டி உடலைக் கிள்ள, எமக்கு முன்னதாகவே விழித்து தமது அன்றாடக் கடமைகளுக்காகப் புறப்பட்டுவிட்ட காக்கை குருவிகளின் கீச்சுக் குரல்களின் ஓசைகள் கவிதைகளைப்போல நம் காதுகளில் தேனாக ஒலிக்கும்.

விடிந்ததும் விடியாததுமாக திறந்துவிடப்படும் வாசற்கதவுகளும், அக்கம் பக்கமாக அடுத்தடுத்த வீடுகளில் நெருக்கமாக வாழும் எமது உறவுகளின் குழந்தைகளின் குதூகலச் சிரிப்பொலிகளும், பள்ளிக் கூடத்திற்குப் புறப்படத் தயாராகும் சிறுவர்களின் ஆர்ப்பாட்டங்களும்! 'ம்ம்மா' எனத் தாய்ப்பசு குரல்கொடுக்க நாலுகால் பாய்ச்சலில் துள்ளிக் குதித்துவந்து தாயின் முலையை முட்டி, முட்டி பால் குடிக்கும் கன்றுக்குட்டியின் ஆனந்தமும்! எமது கால்களையே சுற்றிச்சுற்றி வந்து தம்மை ஒரு தடவையாவது தடவிக் கொடுக்கமாட்டோமா என எமது முகத்தை அண்ணாந்து பார்த்தபடியே நிற்கும் எங்கள் வீட்டுச் செல்ல நாய்களும்! இன்னும் இன்னும் இத்தியாதி இத்தியாதிகள்... இவைகளை யெல்லாம் நான் தொலைத்து இருபத்தி ஐந்து வருடங்களாகப் போகின்றது!

இருபத்திநான்கு மணி நேரமும் கதவுகள் மூடப்பட்ட அறை களுக்குள் வாழ்கின்ற ஒரு அடிமைத்தனம் போன்ற இந்த புலம்பெயர் வாழ்க்கையில்......... நேற்றைய வேலைக் களைப்பின் உடல் வலி தீருமுன்னரே இன்றைய காலை விடிந்துவிட.... கடிகார அலாரம் அடித்தாலும் உடன் எழுந்துவிட முடியாத உடல் அலுப்பு! ஆனாலும் எழுந்தே ஆகவேண்டிய கட்டாயம்! ஏனெனில் இங்கெல்லாம் நாங்கள் எங்கள் அன்றாடக் கடமைகளை அந்தந்த நேரத்திற்குள் செய்து முடித்துவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்! காலைக் கடன்களைக் கழிப்பதில் இருந்து கோப்பியோ தேத்தண்ணீரோ குடிப்பதுகூட நேரக்கணக்கு வைத்தே செய்யவேண்டும்! ஒரு நிமிடம் பிந்தினாலும் நாழ் வழமையாகச் செல்லும் பேருந்து, தொடருந்து போன்றவற்றை தவற விட்டுவிட வேண்டியதாகிவிடும்!

வானமே இடிந்து விழுந்தாலும் வேலைக்கு குறித்த நேரத்திற்குச் செல்ல வேண்டும். ஒருநாள் இரண்டுநாள் தாமதத்திற்கான காரணத்தை பேருந்துகள் மீதும் சுமத்தலாம்! அந்தக் காரணத்தையே தொடர்ந்து கூறினால் வீட்டிலேயே நிரந்தரமாக இருக்கவேண்டியதுதான்! அதன்பின் மீண்டுமொரு வேலையைத் தேடிக்கொள்வதற்கு எத்தனை மாதங் களாகுமோ? எத்தனை வருடங்களாகுமோ? ஆதலால் நாங்கள் இங்கு நேரத்தை பொன்னைவிடப் பெரிதாக மதிக்கவேண்டியுள்ளது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முந்திய எனது தாயக வாழ்க்கையில் இப்படியான அவசரங்களும், பரபரப்புக்களும் ஒருபோதும் இருந்ததில்லை! ஆனால் புலம்பெயர்ந்த இந்த இருபத்தைந்து ஆண்டுகளும் இயந்திரத் தனமாகவே வாழ்ந்துகொண்டிருக்கின்றேன்!

மேலை நாடுகளில் பல வேலைகளை இயந்திரங்களே செய்கின்றன! அந்த இயந்திரங்களில்கூட அந்தந்த நேரங்களில் அந்தந்த வேலைகளைத் தானாக செய்யக்கூடிய உயர்தரமான இயந்திரங்களும் உண்டு! நாங்களும் அப்படித்தான் அந்த உயர்தரமான இயந்திரங்களுக்குச் சமமான மனித இயந்திரங்கள்!

இந்த வாழ்க்கையில் பணம், பொருள், வீடு, மனை என்று சொத்துக் கள் பலவற்றைச் சம்பாதித்திருக்கின்றோம். அதே நேரத்தில் பலவிதமான நோய்களையும் கூடவே சம்பாதித்து வைத்திருக்கின்றோம்!

இப்பொழுதுதான் தொலைந்துபோன அந்தக் காலைநேரச் சந்தோசங்களை நாங்கள் எல்லோருமே தேடிக்கொண்டிருக்கின்றோம்!

உஅ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# கூத்து... நாடகம்... சினிமா...

நம் மண்ணின் வாசங்களில் மறக்கமுடியாதவைகளில் வரிசையில் நாம் ரசித்து சுவைத்த கலை வாசங்களை இன்று இரைமீட்டு நினைவூட்டுகின்றோம்.

கலையின் வடிவங்கள் தெரியாத சின்ன வயதில் விடிய விடிய நடைபெறும் கூத்துக்கள் மறக்கமுடியாதவை. கூத்து ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே நித்திரையாகி பின்னர் காலையில் விழிக்கும்போது கூத்து முடிகின்ற கட்டத்தை நெருங்கியிருக்கும். அல்லது முடிந்திருக்கும்! இருந்தாலும் அன்றைய இரவை கூத்து மைதானத்தில் கழித்ததில் எங்களுக்குப் பெரும் மகிழ்ச்சி.

எங்கள் அயலில் காத்தான் கூத்துத்தான் பிரபல்யம். ஆனால் வட்டுக்கோட்டை, பாசையூர், நாவாந்துறை, குருநகர் இப்படியான கரையோரப் பகுதிகளில் எல்லாம் நாட்டுக் கூத்துக்கள்தான் பிரபல்யம். இதில் இரண்டுநாள் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற கூத்துக்களும் அடக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளுக்குப் பின்னர் எமது ரசனையைக் கவர்ந்தது இசை நாடகங்கள். இதில் நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களின் அரிச்சந்திரா நாடகத்தை எத்தனைமுறை பார்த்திருப்பேன் என்ற எண்ணிக்கை நினைவில் இல்லை. இந்த வரிசையில் 'ஏழுபிள்ளை நல்லதங்காள்', 'சத்தியவான் சாவித்திரி', 'அல்லி அர்ச்சுனன்' போன்ற நாடகங்களும் பிரபலமானவையாகும்.

எமது இள வயதுக் காலத்தில் எம்மைக் கவர்ந்தவை அமெச்சூர் நாடகங்கள். அதற்குக் காரணம் சினிமாவின் சாயல் நாடகங்களில் காணப்பட்டதனாலேயே. நாடகங்களில்கூட இரண்டுவகை இருந்தன. ஒன்று ஊருக்குள் மேடைகள் அமைத்து அரங்கேற்றப்படும் நாடகங்கள். மற்றது மண்டபங்களில் அரங்கேற்றப்படும் நாடகங்கள்.

என் நினைவறிய ரிக்கற் விற்பனை செய்து கூத்துக்கள் அரங்கேறியதே இல்லை. ஆனால் ஊருக்குள் முன்னதாகவே பணம் வசூலித்துத்தான் கூத்துப்போடுவார்கள். (இதுவும் ஒரு வகையில் ரிக்கற் விற்பது போலத்தான்) ஆனால் யாழ்ப்பாணத்தில் சினிமாவிற்கு ரிக்கற் எடுத்துப் படம் பார்ப்பதைப்போல மக்கள் பார்த்த நாடகங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

யாழ்ப்பாணத்தில் நாடகங்கள் அரங்கேற்றுவதற்காக இரண்டு மண்டபங்கள்தான் இருந்தன. ஒன்று வீரசிங்கம் மண்டபம், இரண்டாவது யாழ் நகரசபை மண்டபம். இதில் நகரசபை மண்டபம் பின்னர் றியோ சினிமா என்ற பெயரில் திரையரங்காக மாற, வீரசிங்கம் மண்டபம் மட்டுமே ஒரேயொரு நாடக அரங்காக இருந்தது. அனேகமாக இங்கு கொழும்பில் இருந்து வருகை தரும் நாடக மன்றங்களின் நாடகங்கள்தான் அரங்கேறும். நான் அறிய இங்கு மண்டபம் நிறைந்த மக்களுடன் அரங்கேறிய நாடகம் புழுகர் பொன்னம்பலம், கோமாளிகள் கும்மாளம், மற்றது இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி புகழ் பெற்ற நாடகமான தணியாத தாகம் கலைஞர்கள் பங்கேற்று நடாத்திய கதம்ப நிகழ்ச்சி மட்டும்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஊருக்குள் நடைபெறும் நாடகங்களில் எப்பொழுது போட்டாலும் மக்கள் திரளாக வந்து ரிக்கற் எடுத்துப் பார்த்த நாடகங்கள் பல உண்டு. அடங்காப்பிடாரி (ஆயிரம் தடவைகளுக்கு மேல் அரங்கேறிய நாடகம்) தம்பி கொழும்பிலே, வெளிக்கிடடி விசுவமடுவுக்கு போன்ற நகைச்சுவை நாடகங்களுடன் அலாவுதீன், வடக்கும் தெற்கும் போன்ற சரித்திர நாடகங்கள் இவற்றுள் அடக்கம். கொழும்பு நாடகங்களாக இருந்தாலும் சரி; யாழ்ப்பாணத்து நாடகங்களாக இருந்தாலும் சரி; யாழ்ப்பாணத்து நாடகங்களாக இருந்தாலும் சரி; சமூக நாடகங்களுக்கு மக்கள் இதுபோன்ற அமர்க்களமான வரவேற்பை கொடுத்ததே இல்லை.

ஆனால் சிறுவர்கள், இளையவர்கள், வயதானவர்களென வயது வித்தியாசம் இன்றி அனைத்து தரப்பினரையும் தன்பால் இழுத்து வரிசையில் நெரிபட்டு ரிக்கற் வாங்கவைத்தது சினிமாதான். சினிமாவின் மோகம் தியாகராஜ பாகதவர் காலத்தில் இருந்து இன்றுவரை தொடர்கின்றது. (தியாகராஜ பாகவதரின் சிந்தாமணி திரைப்படம் ஒரு வருடத்திற்கு மேலாக ஓடி சாதனை படைத்த திரைப்படமாகும்) எங்கள் காலத்தில் எம்.ஜி.ஆர், சிவாஜி ஆகியோர்களின் படங்களும், பின்னர் இன்றைய முன்னணி நடிகர்களின் படங்களும் ரசிகர்களின் வரவேற்புக்கு குறை வைக்கவில்லை.

இடையில் போர் நடைபெற்ற சில காலங்கள் மக்களின் சினிமா ஆர்வம் குறைந்திருந்தது என்றால் அதற்குக் காரணம் மக்களுக்கு சினிமா பார்ப்பதைவிட தங்களைப் பாதுகாப்பது முக்கியமாக இருந்தது! அந்த சிலகாலம் தங்கள் சினிமா மோகத்தை அடக்கிவைத்திருந்த மக்கள் போர் மேகம் விலகியபின்பு இன்று தங்கள் நாயகர்களின் கட்டவுட்டுகளுக்கு பாலாபிஷேகம் செய்யும் பணியைத் தொடங்கியிருப்பதைக் கண்கூடாகப் பார்க்கமுடிகின்றது. அந்தக் காலத்தில் மட்டுமல்ல; எந்தக் காலத்திலும் சினிமாவின் ஆதிக்கம் வலிமையானது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

யாழ்ப்பாணத்தில் மனோகரா தியேட்டரே மிக பழமையானதாகும். (இது ஆரம்பகாலத்தில் நாடக அரங்கமாக இருந்து பின்னர் திரையரங்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியது.) வின்சர், வெலிங்டன், ராணி, றீகல் ஆகியனவற்றிற்கும் நீண்டகால வரலாறுகள் இருக்கின்றன. ராஜி, ஸ்ரீதர், சாந்தி, ஹரன், லிடோ போன்ற திரையரங்கங்கள் எல்லாம் பிற்காலத்தில் கட்டப்பட்டவை. இதில் லிடோ தியேட்டர்தான் பழைய வின்சர் தியேட்டர் ஆகும். வின்சர் அருகினிலேயே புதிய கட்டத்தைக் கட்டி தனது இருப்பை நகர்த்த பழைய வின்சர் அரங்கம் லிடோ என்ற பெயரில் இயங்கத் தொடங்கியது. யாழ்ப்பாண நகர்ப்புறத்தை விலக்கி மானிப்பாயில் வெஸ்லி திரையரங்கம், இணுவிலில் ஸ்ரீ, காலிங்கள் திரையரங்கம் காங்கேசன்துறையில் பராசக்தி திரையரங்கம் ஊர்காவற்துறையில் ராஜேஸ்வரி திரையரங்கம் என்பனவும் சினிமா ரசிகர்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்துகொண்டே இருந்தன.

றீகல் திரையரங்கில் ஆங்கிலப் படங்கள் மட்டுமே திரையிடுவார்கள். அந்தக் காலத்தில் அடைப்புக்குறிக்குள் வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற வரிகளோடு திரையிடப்படும் படங்களைப் பார்க்க இளைஞர் கூட்டம் திரண்டு வரும். இந்த ஆங்கிலப் படங்களைப் பார்க்கவரும் தொண்ணூறு விதமான ரசிகர்களுக்கு சுத்தமாக ஆங்கிலம் தெரியாது! அவர்கள் பார்க்க வருவது அப்படியான படங்களில் ஒரு சில நிமிடங்கள் வரும் முத்தக் காட்சிகள், பெண்கள் அரைகுறை ஆடைகளுடன் மார்பைக் காட்டுவது, குளிப்பது போன்ற காட்சிகளைப் பார்ப்பதற்காகதான். இதில் வேடிக்கை என்னவென்றால் படத்தின் இடைவேளையில் அடுத்து வரவிருக்கும் படத்தின் அதுபோன்ற கவர்ச்சிக் காட்சிகளை இரண்டு நிமிட ரெயிலர் காட்சியாக காட்டுவார்கள் (அந்த இரண்டு நிமிடக் காட்சிதான் அந்தப் படத்தின் கவர்ச்சிக் காட்சியாக இருக்கும்) அதனைப் பார்ப்பதற்காகவும் ஒரு ரசிகர் கூட்டம் இருந்தது.

இவற்றிற்கும் மேலாக ஆங்கிலப் படம் பார்ப்பது நாகரிகம் எனக்கருதி படம் பார்ப்பவர்களும் இருக்கின்றார்கள். இவர்களில் சிலர் சிறந்த படங்களின் பெயர்கள், மற்றும் புகழ்பெற்ற ஆங்கில நடிகர்களது பெயர்களையெல்லாம் மனப்பாடம் செய்து வைத்து மற்றவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கும்போது இவற்றையெல்லாம் கூறி தங்களை மேதாவிகளாகக் காட்டுபவர்களும் உண்டு!

ஆங்கிலப் படங்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் ஓடுவது கிடையாது. ஜேம்ஸ்போண்ட் படங்கள் என்றால் ஒரு வாரம்வரை ஓடும். 'சீன்கொனரி' ஜேம்ஸ் போண்டாக நடித்த கோல்ட் பிங்கர், டொக்டர்நோ, போன்ற படங்கள் பத்து நாட்களுக்கு மேல் ஓடியிருக்கின்றது. ஆனால் மருந்துக்குக்கூட பெண்கள் றீகல் தியேட்டருக்கு வருவது கிடையாது. அவர்களுக்கு ஆங்கிலப் படங்கள் பார்க்க விருப்பம் இல்லையென்று சொல்ல முடியாது, அந்த நாட்களில் இருந்த சமூகக் கட்டுப்பாடு ஆங்கிலப் படங்கள் என்றால் ஆபாசப் படங்கள்தான் என்ற பொதுவான கருத்தும் அவர்களை றீகல் தியேட்டர் பக்கமாக செல்வதைத் தடுத்து வைத்திருந்தது. அங்கு ஓடிய தமிழ்ப்படங்களுக்குக்கூட பெண்களின் வருகை குறைவாகவே இருந்தது.

இன்றைய இளம் வயதினர் இப்படியான சமூகக் கட்டுப்பாடுகளுக் கெல்லாம் மதிப்பளிப்பார்கள் என்று சொல்லமுடியாது! உதாரணத்திற்கு 'போய்ஸ்" திரைப்படம் யாழ்ப்பாணத்தில் திரையிடுவதற்கு இயக்கம் தடைவிதித்திருந்த காலத்தில் இரண்டு பெண் பிள்ளைகள் வேலைக்கான இன்ரவி ஒன்றிற்கு செல்வதாக வீட்டில் பொய் சொல்லிவிட்டு கொழும்பு சென்று அந்தப் படத்தைப் பார்த்து வந்த செய்தி எம்மையெல்லாம் சிந்திக்க வைக்கின்றது.

திரைப்படங்கள் பற்றிய நினைவுகள் இல்லாத மனிதர்களே இருக்க முடியாது! புதுப் படங்கள் பார்ப்பதற்காக வரிசையில் காத்திருந்து ரிக்கற் கிடைக்காமல் ஏமாந்து போனது. தீபாவளி, பொங்கல் நாட்களில் கூட்டம் அலைமோத முதல் காட்சி பார்த்தது. வீட்டிற்குத் தெரியாமல் களவாக படம் பார்த்த நாட்கள். காதலியுடன் படம் பார்த்த நாட்கள். திருமணமாகி முதல் முதலாக மனைவியுடன் படம் பார்த்த நாள். எந்தப் படத்தை அதிக தடவை பார்த்திருக்கின்றோம் என ஒவ்வொருவர் மனதிலும் ஒரு பட்டியல் இருக்கின்றது. திருமணத்திற்குப் பிற்பாடு புதுமணத் தம்பதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் பார்க்கச் செல்வது என்பது தமிழர்களின் பண்பாடாக மாறியிருந்த காலமது.

படத்தின் பாட்டுப் புத்தகங்களை வாங்கி வந்து பாடல்களைப் பாடமாக்கி பாடி ரசித்தது. வானொலியில் ஒலிபரப்பாகும் ஒலிச்சித்திரத்தில் நாம் பார்த்த படங்களில் வரும் காட்சிகளின் வசனங்கள் ஒலிப்பதை மீண்டும் மீண்டும் கேட்பது. பேசும்படம், பொம்மை போன்ற சினிமா சஞ்சிகைகளை வாங்கி படம் திரைக்கு வருமுன்னரே அது பற்றிய செய்திகளை முந்திப் படிப்பது போன்றவை இன்றும் பலருக்கு அழியாத நினைவுகள்.

யோசித்துப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கின்றது. ஐம்பது வருடங்களுக்கு முன்னரே நாங்கள் எவ்வளவு சினிமாப் பைத்தியமாக இருந்திருக்கின்றோம்! (இன்றும் அப்படியானவர்கள் ஏராளம் இருக்கின் றார்கள்!) அன்று யாழ்ப்பாணத்தில் எம்.ஜி.ஆர் சிவாஜி ரசிகர்களின் ஆர்ப்பாட்டங்கள் அமர்க்ளமாக இருக்கும்! சிவாஜி ரசிகர்களால் 'சிம்மக்குரல்' என்னும் பத்திரிகையும் எம்.ஜி.ஆர் ரசிகர்களால் 'உதயசூரியன்' என்னும் வெளியிடப்பட்டு கருத்துக்களால் மோதிக்கொண்டது மட்டுமல்ல, தங்கள் நாயகரின் படம் அதிகமான ஹவுஸ்புல் காட்சிகளுடன் ஓடிக் கொண்டிருக்கின்றது என பெருமைப்பட்டுக் கொள்வதற்காக ஹவுஸ்புல் ஆவதற்காக அன்றைய காட்சியில் விற்காமல் இருக்கும் மீதி ரிக்கற்றுக்களை தாங்களே வாங்கி ஹவுஸ்புல் போர்டை மாட்டவைத்த வெறிபிடித்த சினிமா ரசிகர்களெல்லாம் இருந்திருக்கின்றார்கள்.

சிலர் சினிமா பார்ப்பது மட்டுமல்ல; தியேட்டர்களில் வேலை செய்பவர்களை நண்பர்களாக்கிக் கொள்வதிலும் பெருமைப்பட்டுக் கொள்வார்கள். எங்கள் வீட்டுக்குப் பக்கத்துவீட்டில் வசித்த சின்னத்துரை அண்ணன் மிகப்பெரிய சினிமாப் பைத்தியம். வின்சர் தியேட்டர், ராஜி தியேட்டர் போன்றவற்றில் வேலை செய்த சிலரை இவர் நண்பர்களாக்கிக் கொண்டார். புதுப்படங்கள் வெளிவந்தால் இவர் ரிக்கற்றுக்காக வரிசையில் எல்லாம் நிற்பதில்லை! இவர் பணத்தைக் கொடுத்துவிடுவார் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்கற்ரை இவருக்கு வெளியில் கொண்டுவந்து கொடுப்பார்கள். அதில் இவருக்கு பெருமையோ பெருமை. அந்தப் பெருமையை எங்களுக்கும் காட்டிக்கொள்வதற்காக தனது பணத்தில் எங்களுக்கும் ரிக்கற் வாங்கித் தந்த நாட்கள் பல உண்டு.

எனது இன்னொரு நண்பர் வெலிங்டன் தியேட்டருக்கு அருகில் உள்ள காராஜ்ஜில் வேலை செய்பவர். அதனால் தியேட்டர் ஆப்பரேட்டரில் இருந்து வேலை செய்பவர்களில் பலர் இவருக்குப் பழக்கமாக இருந்தார்கள். சில சமயங்களில் அறுந்து கிழிக்கப்பட்ட பிலிம் சுருள் துண்டுகளைக் கொண்டுவந்து எமக்கு காட்டும்போது எமக்கு ஆச்சரியம் தாங்கமுடியாது! அதிலும் அந்த பிலிம் துண்டுகளில் எம்ஜியாரோ அல்லது சிவாஜியோ இருந்தால் நாம் காசு கொடுத்து வாங்கியதும் உண்டு. ஒரு சிவராத்திரி தினத்தன்று இவருடன் சேர்ந்து நண்பர்கள் பலர் படம் பார்க்கச் சென்றோம். படம் வல்லவனுக்கு வல்லவன்.

சிவராத்திரி தினத்தன்று எந்தப் படம் ஓடினாலும் மூன்றாவது காட்சி யாழ்ப்பாணத்தில் உள்ள அத்தனை திரையரங்குகளிலும் ஹவுஸ்புல் காட்சியாகவே இருக்கும்! (ஏனெனில் சிவராத்திரிக்கு நித்திரை முழிக்கின்றார்களாம்!) அன்று நாங்களும் மூன்றாவது காட்சிக்குத்தான் சென்றிருந்தோம். எங்களால் ரிக்கற் எடுக்கும் வரிசைக்கு அருகில்கூட நெருங்கமுடியவில்லை. எங்கள் நண்பன் தியேட்டரில் வேலை செய்யும் தனது நண்பர்கள் மூலமாக முயன்றும் முடியவில்லை. 'தியேட்டரில் வேலை செய்பவர்கள் உனது நண்பர்கள் என்று சொன்னதெல்லாம் வெறும் பீலா தானா' என நாங்கள் கேலி செய்ய, நண்பனுக்கோ வெட்கம் ரோசமாக மாற, ஹவுஸ்புல் போட் மாட்டிய பின்னரும் தனது கடைசி ஆயுதமாக மானேஜரிடம் சென்று கெஞ்சிக் கூத்தாடி 'இருப்பதற்கு இடம் இல்லை நின்றுதான் பார்க்கவேண்டும்' என்ற நிபந்தனையோடு கலரிக்கு ரிக்கற் வாங்கித் தந்து பெருமைப்பட்டுக்கொண்டான். சினிமா ஆர்வத்தில் நித்திரைத் தூக்கத்தோடு நின்றபடி படம் பார்த்த அந்த நாளை மறக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாவை ஊர் ஊராக, கிராமம் கிராமமாக கொண்டு சென்று வீடீயோ மூலமாக சின்னத்திரையில் காட்டியபோதும் அதனைப் பார்ப்பதற்கு மக்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டே இருந்தது. சினிமா மாதிரித்தான் வீடியோவில் இருந்து ஒளி மூலமாகத்தான் வீடியோவில் படம் வருமென காத்திருக்க வீடியோவில் இருந்து தொலைக்காட்சிக்குத் தொடுக்கப்பட்ட ஒரு கேபிள் வழியாக வந்த படத்தைப் பார்த்து வியந்து நின்ற நாளை நினைத்தால் இன்று சிரிப்பாக வருகின்றது.

சினிமா பார்ப்பது வெறும் பொழுதுபோக்கிற்காக இருக்கலாம் ஆனால் அதைப் புரிந்து கொள்வதும் ஒரு கலையாகும்! சினிமாவின்மீது நாங்கள் மட்டும்தான் பைத்தியமாக இருக்கின்றோம் என்றெல்லாம் இல்லை!

உலகம் முழுவதும் இந்தப் பைத்தியங்கள் இருக்கின்றார்கள். சினிமாவுக்குள் அரசியல் இருக்கின்றது, பிரச்சாரம் இருக்கின்றது, கலை நுட்பங்கள் இருக்கின்றன. சில வரலாறுகளை சினிமா ஆவணப் படுத்துகின்றது. பண்பாடுகளை வலியுறுத்துகின்றது. பார்வையாளர்களை சிந்திக்க வைப்பது மட்டுமல்ல சிலமணிநேரம் சந்தோசப்படுத்துகின்றது. ஆம்! மதுவைவிட போதையானது இந்தச் சினிமா!

எங்கள் கூத்துக்களிலும் நாடகங்களிலும் நாடகங்களிலும் இந்தப் போதை இல்லை! அதனால் எங்கள் கலை வடிவங்கள் தேய்ந்து கொண்டே போகின்றது. இன்று எங்கள் மண்மீதும், கலைகள் மீதும் பற்றுக்கொண்ட சில முன்னோடிகள் தாயகத்திலும், புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் கூத்துக் கலைகளை நவீனப்படுத்தி நெறிப்படுத்தி வருகின்றார்கள். பாராட்டிற்குரியது. பாரம்பரியம் மிக்க எங்கள் மண்வாசனைக் கலைகளை நாங்கள் மீண்டும் வளர்த்தெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம் என்பதுதான் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

# யாழ்ப்பாணத்து (பெரும்)குடி மக்கள்...

ஊர் நினைவுகளில் இங்கு பதியப்பட இருப்பவை யாழ்ப்பாணத்தில் சட்டரீதியாகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் இயங்கிய மதுபான விற்பனை நிலையங்களும்! அந்த மதுபானச் சாலைகளை வளர்த்துக்கொண்டிருக்கும் பெரும் குடிமக்களைப் பற்றியும்தான்!

முதலில் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முந்தைய நினைவுகளை இரைமீட்போம்... அப்பொழுது சாராயம் மட்டும் குறிப்பிட்ட இடங்களில் தவறணைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டது. பனை, தென்னை மரங்களில் இருந்து பெறப்படும் கள்ளு விற்பனை அதனை உற்பத்தி செய்யும் தனி நபர்களிடமே விடப்பட்டிருந்தது. ஆனால் சாராயத்தை உற்பத்தி செய்யும் உரிமை அரசாங்கத்திடம் மட்டுமே இருந்தது.

யாழ்ப்பாணம் சாராயத்தவறணை யாழ்-முற்றவெளிக்கு மிக அண்மையில் இருந்தது. பல வருடங்களாக இந்த தவறணையை குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தவர் ஏரம்பு என்பவராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிமக்களில் அதிகமான பெருங்குடி மக்கள் கரையூர் என அழைக்கப்பட்ட குருநகர்ப் பகுதியில்தான் வசிக்கின்றார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்களின் வசதிக்காக (நல்ல நோக்கம்) அரசாங்கம் குருநகரிலும் ஒரு சாராயத் தவறணையை திறக்க அனுமதித் திருந்தது. இது சாராயத்தவறணைக்கு மட்டுமல்ல; 1974ல் கள்ளுக் கொட்டில் முறைகள் ஒழிக்கப்பட்டு கள்ளுத் தவறணை முறை வந்த பின்பு குருநகரிலும் இரண்டு கள்ளுத் தவறணைகள் திறக்க அனுமதித்திருந்தார்கள்! குருநகர் தவறணை - இலக்கம் - 1 என்னும் பெயரில் குருநகர் கஸ்ற்ரம்ஸ் அலுவலகத்திற்கு முன்னால் உள்ள ஜெற்றி என அழைக்கப்படும் துறைமுகத்திற்கு அருகினிலும், குருநகர் தவறணை இலக்கம்-2 என்னும் பெயரில் யாழ்ப்பாணம் கலால் திணைக்களத்திற்கு முன்னாலும் அமைத்திருந்தார்கள்.

அன்று கள்ளு விற்கும் இடங்களை கள்ளுக் கொட்டில் என்றுதான் கூறுவார்கள்! யாழ்ப்பாணத்தில் மற்றய ஊர்களைவிட அதிகமான கள்ளுக் கொட்டில்கள் இருந்த பிரதேசமும் குருநகரே! இதற்கு முக்கியக் காரணம் குருநகரில் 90 வீதமான மக்களின் பிரதான தொழில் கடற்தொழில்தான். அவர்கள் கடலுக்கள் தொழிலுக்குச் சென்று திரும்பும்போது கடற்காத்தைச் சுவாசித்ததால் ஏற்படும் தாகமும், இரவு முழுக்க நித்திரை முழிப்பதனால் ஏற்படும் ஒருவிதமான மனச்சோர்விற்கு மருந்தாகவும் அவர்கள் தொழிலால் வந்ததும் முதலில் செல்வது கள்ளுக் கொடில்களை நாடித்தான்.

யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளில் எல்லாம் கள்ளு இறக்கும் தொழிலில் ஈடுபடுபவர்கள் மட்டுமே அதை விற்பனை செய்வதற்காக ஒரு இடத்தில் கொட்டில் அமைத்து விற்பனை செய்வார்கள். ஆனால் குருநகரில் கள்ளுக்கொட்டில் வைத்திருக்கும் பலர் ஏனைய கடை முதலாளிகளைப்போல வெள்ளை வேட்டியும், மடிப்புக் கலையாத சட்டையும் போட்டு மைனர்களைப் போலவே காட்சியளிப்பார்கள்! அவர்களுக்கு கள் இறக்கும் தொழிலைப்பற்றி எதுவுமே தெரியாது! அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் கள் இறக்கும் தொழில் தடை செய்யப்பட்டிருந்ததனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு தொழில் செய்ய முடியாமல் இருந்த பலர் விசா இல்லாமல் (அவர்களுக்கு விசா எடுக்கும் முறை தெரியாது) கள்ளத்தோணி மூலமாக யாழ்ப்பாணம் வந்து இப்படியான தொழில் தெரியாத வெள்ளைவேட்டி முதலாளிகளுக்கு கள் இறக்கிக் கொடுப்பார்கள். இவர்கள் கதிரையில் இருந்து காசை வாங்கிக்கொண்டு கள்ளை அளந்து ஊத்துபவர்களாக இருப்பார்கள்! இதிலும் சிலர் அந்த கள்ளை அள்ளி ஊற்றும் வேலைக்குக்கூட ஒரு பெடியனை வேலைக்கு வைத்திருப்பார்கள்! இவர்கள் மேற்பார்வை செய்துகொண்டு முடிவில் காசைக் கணக்குப்பார்த்து எண்ணிக்கொண்டு போகிறவர்களாகவே இருப்பார்கள்!

இன்னொரு சுவாரசியமான செய்தி! யாழ்ப்பாணத்தில் அடுத்தடுத்து பல நகைக்கடைகள்! அதேபோல அடுத்தடுத்து பல புடவைக்கடைகள் இருப்பதைப்போல குருநகர் டேவிற் வீதி, ராஜேந்திரா வீதி போன்றவைகளில் அடுக்கடுக்காக கள்ளுக்கொட்டில்கள் வரிசையில் இருக்கும்! எல்லாக் கொட்டில்களிலும் குடிமக்களின் வரவு அதிகமாகவே இருக்கும்!

யாழ்ப்பாணத்தில் எல்லா ஊர்களிலும் கள்ளுக் கொட்டில்களும், களவாக சாராயம் விற்கும் மையங்களும் நிறையவே இருந்தன! இவை தவிர தாங்கள் இறக்கும் கள்ளை தங்களது வீடுகளில் வைத்தே விற்றுக் கொள்பவர்களும் நிறைய உண்டு. இதே நேரத்தில் அரசாங்கத்திற்குத் தெரியாமல் களவாகச் சாராயம் காய்ச்சி விற்பவர்களும் இருந்தார்கள்! அந்தச் சாராயத்திற்கு 'கள்ளச் சாராயம்' 'பட்டைச் சாராயம்' 'ஊறல்ச் சாராயம்' கசிப்பு என பலவிதமான பெயர்கள் உண்டு! அன்றைய நாளில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதில் உரும்பிராய்தான் பிரசித்தி பெற்ற ஊராக இருந்தது! அங்கு காய்ச்சும் சாராயத்தை உரும்பிராயச் சாராயம் என்றும் சொல்வார்கள்.

இப்படியாக களவாக உற்பத்தி செய்பவர்களையும், விற்பனை செய்பவர்களையும் பிடிப்பதற்கென்றே பொலிஸ் பிரிவைப்போல எக்சைஸ் என்னும் கலால் திணைக்களம் தனியாக இருந்தது. இந்த திணைக்களம் குருநகர் கடற்கரை வீதியில் பொலீஸ் நிலையத்திற்கு சற்று முன்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பழைய கட்டிடத்தில் இயங்கி வந்தது! இந்த கலால் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் நடைபெறும் விற்பனைக்கேற்ப ஒரு தொகையை மாதா மாதம் வாங்கிக்கொண்டு களவாக சாராயம் காய்ச்ச, விற்க அனுமதி கொடுத்துவிடுவார்கள். கலால்த்துறையினர் எங்காவது களவாக மது விற்பனை செய்தவர்களைப் பிடித்தார்களானால் பிடிபட்டவர்கள் இவர்கள் கேட்ட தொகையை லஞ்சமாக கொடுக்காதவர்களாகத்தான் இருப்பார்கள்!.

அன்று யாழ்ப்பாணத்தில் லஞ்சம் கொடுத்தால் எதுவும் செய்யலாம் என்ற திணைக்களமாக இருந்தது கலால் திணைக்களம்தான்! உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமானால் யாழ்ப்பாணம் கலால் திணைக்களத்திற்கு முன்னால் இருந்தது 2ம் இலக்க குருநகர் கள்ளுத் தவறணை. அதற்கு முன்னால் ஒரு ரேஸ்றகடையும் இருந்தது. தங்கள் இலாக்காவிற்கு முன்னாலேயே இருந்த ரேஸ்ற கடையிலேயே லஞ்சம் வாங்கிக்கொண்டு களவாக சாராயம் விக்க அனுமதித்தவர்கள் என்றால் உங்களால் நம்ப முடிகிறா? இன்னும் கொஞ்சம் கூடுதலாகப் பணம் கொடுத்தால் தங்கள் காரியாலயத்தில் வைத்தே சாராயம் விக்க அனுமதிப் பார்களோ என்னும் அளவிற்கு இருந்தது அன்றைய காலால் திணைக்களம்!

சாராயத்தை பகிரங்கமாகவே, களவாக விற்பவர்களின் விற்பனை முறையே மிக வினோதமானது! யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபலமான முட்டாசுக்கடைச் சந்தியில் (இது யாழ்ப்பாணம் சாராயத் தவறணைக்கு அண்மையிலேயே உள்ளது) சாமி என்பவர் மோர்க்கடை ஒன்றை நடாத்தி வந்தார். திருவாளர் சாமி அவர்கள் நெற்றியில் மூன்று கோடுகள் போட்ட திருநீற்றுப் பட்டை! பெரிய சந்தனப் பொட்டு! இப்படியாக பார்ப்பதற்கும் அசல் சாமி பக்தர் போலவே காட்சியளிப்பார்! ஆனால் அங்கு பார்வையாளர்களை ஏமாற்ற சும்மா ஒரு பார்வைக்காகத்தான் மோர் விற்கப்படுகின்றது என்பது பரம ரகசியம்!. அங்கு முக்கியமான வியாபாரமே சாராயம்தான்! அங்குள்ள கடைகளில் மூட்டை தூக்கும் தொழிலாளர்கள், மற்றும் வண்டில் இழுக்கும் தொழிலாளர்களென ஏராளமானவர்கள் சாமி மோர்க்கடையின் வாடிக்கையாளர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ராஜி தியேட்டருக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் அழகர்சாமி சாப்பாட்டுக்கடை சாராய வியாபாரத்திற்கு பெயர்பெற்ற மற்றுமொரு கடையாகும்! இங்கு தவறணையில் விற்பனையாவதைவிட கூடுதலான வியாபாரம் நடைபெறும்! குடிப்பதற்கு பக்கபலமாக இறைச்சி வகையிலான ரேஸ்ற் வகைகள், குடித்து முடிந்த பின்னர் சாப்பாட்டு வசதியென அனைத்தும் இருப்பதனால் லோங்ஸ் போட்ட படித்தவர்கள் முதல் யாழ்ப்பாணத்துச் சண்டியர்கள்வரை ஏராளமானவர்கள் அழகர்சாமி யின் வாடிக்கையாளர்கள்!

யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்திக்கு மிக அண்மையில் இருப்பது வைரமுத்து மாமாவின் சாராயக்கடை. யாழ்ப்பாணத்தில் வைரமுத்து மாமாவைத் தெரியாதவர்கள் குடிகாரர்களே அல்ல! அவ்வளவு பிரபலமானவர். மிகச் சாந்தமான முகம், யார் எந்த வெறியில் வந்தாலும் அன்பான வரவேற்பு! இவையெல்லாம் அவரின் வியாபாரத் தந்திரங்கள் என்று சொல்லாம்! மாலை ஐந்து மணிக்குத்தான் கடையைத் திறப்பார். மறுநாள் காலை ஒரு மணி, இரண்டு மணிவரை கடை திறந்திருக்கும்! சனி, ஞாயிறு, போயா தினம் போன்ற விடுமுறை நாட்களில் மட்டும் பகலிலும் திறப்பார்! இலங்கை அரசாங்கச் சட்டப்படி கடையில் எப்பொழுதும் இரண்டு போத்தல் சாரயம்தான் இருப்பில் இருக்கும். ஆனால் கடைக்கு வெளியே வீதியில் இவருடைய ஆட்களின் சைக்கிள்களில் உள்ள பைகளில் எப்பொழுதும் ஒவ்வொருவரிடமும் இரண்டு போத்தல் சாராயம் இருக்கும்! கடையில் சாராயம் முடிய முடிய ஒருவர்மாறி ஒருவராக தாங்கள் பதுக்கி வைத்திருக்கும் இடத்தில் இருந்து எடுத்து வந்துகொண்டே இருப்பார்கள்! எத்தனையோ இளம் பெடியளையெல்லாம் பெரும் குடிமகன்களாக உருவாக்கிவிட்ட வைரமுத்து மாமா தனது வாழ்நாளில் எப்பொழுதுமே சாராயத்தைக் குடித்தது கிடையாது!

உதாரணத்திற்காக மூன்று கள்ளச் சாராயக்கடைகளை இங்கு சொல்லி வைத்தேன். இதுபோல இன்னும் நூற்றுக்கணக்கான சாராயக் கடைகள் இருக்கின்றன! இனி கள்ளுக் கொட்டில்களையும், கள் குடிமக்களையும் பார்ப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளுக் குடிப்பவர்களில் இரண்டு வகையானவர்கள் இருக்கின்றார்கள்! வெறிக்காகக் குடிப்பவர்கள் ஒரு வகையினர்! குஷிக்காகக் குடிப்பவர்கள் இன்னொரு வகையினர்! வெறிக்காகக் குடிப்பவர்கள் தென்னங்கள்ளைத்தான் குடிப்பார்கள்! குஷிக்காகக் குடிப்பவர்களுடைய தெரிவு பனங்கள்ளுத்தான்! புதிய புதிய குடிமக்களை உருவாக்குவது இந்தப் பனங்கள்ளுத்தான்! வேலை நிமித்தமாக யாழ்ப்பாணத்தைவிட்டு கொழும்பு போன்ற தூர இடங்களுக்குச் சென்றவர்கள்கூட பனங்கள்ளு சீசன் வந்தவுடன் இதற்காகவே லீவு போட்டுவிட்டு யாழ்ப்பாணம் வந்துவிடுவார்கள்! பனங்கள்ளுக்கு அப்படியானதொரு மவுசு உண்டு!

இன்று பெரும் குடி மன்னர்களாக இருக்கும் பலருக்கு வழிகாட்டியே பனங்கள்ளுத்தான் என்றால் நம்புவீர்களா? உடம்பு மெலிவான பிள்ளைகளுக்கு ஒரு பனைக் கள்ளு கொடுத்தால் உடம்புக்கு நல்லதென்று தாங்களே வைத்தியர்களாக மாறி பிள்ளைகளுக்கு பனங்கள்ளு வாங்கிக் கொடுத்து அவர்களுக்கு கள்ளின் ருசியை ஏற்படுத்திய பெற்றோர்களும் உண்டு! பின்பு அவர்கள் நண்பர்களுடன் பனங்கள்ளு குடிக்க வெளிக்கிட்டு பின்பு பனங்கள்ளு கிடைக்காத காலத்தில் தென்னங்கள்ளு குடித்து, அதன்பின் சாராயத்திற்கு மாறி பெரும் குடிகாரர்களாக மாறியவர்களும் உண்டு! ஆரம்பத்தில் யாராவது பார்த்துவிடப் போகின்றார்களே என்ற பயத்தில் ஒரு போத்தல் கள்ளை ஒரே முடறாகக் குடிக்க ஆரம்பித்தவர்கள்தான் பிற்காலத்தில் ஒரு கிளாஸ் சாராயத்தை ஒரே முடறாகக் குடிக்கும் பெரும்குடி மன்னர்களாக மாறி பின்பு காலையில் நித்திரையால் எழுந்தவுடன் கை, நடுக்கம் ஏற்படுவதற்கு கண்டிப்பாக குடித்தே ஆகவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டவர்களும் உண்டு! இவையெல்லாம் குடிகாரர்கள் உருவாகிய விதங்களில் சில உதாரணங்கள்...!

யாழ்ப்பாணத்தில் பனங்கள்ளுக்கென பிரபலமான இடம் ஆனைக் கோட்டைதான்! தை மாதம் பிறந்தால் ஆனைக்கோட்டையில் உள்ள மாணிக்கம் என்பவரின் கள்ளுக்கடையில் நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழாப்போலவே குடிமக்களின் கூட்டம் நிரம்பி வழியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைக்கோட்டையில் மட்டும் பதினைந்துக்கும் மேலான பிரபலமான கள்ளுக்கடைகள் இருக்கின்றன! இவை தவிர அனேகமான வீடுகளிலும் கள் விற்பனை நடைபெறும்! ஆனாலும் மாணிக்கத்திடம்தான் வாடிக்கையாளர்கள் அதிகம்! அவரிடம் மட்டும் பத்திற்கும் மேற்பட்ட கள்ளிறக்கும் தொழிலாளர்கள் இருந்திருக்கின்றார்கள்!

கள் இறக்கும் தொழிலாளர்களில் அனேகமானவர்கள் படிப்பறிவு குறைந்தவர்களாகவே இருந்ததனால் அவர்களிடம் இலஞ்சம் வாங்குவதற்காக கலால் அதிகாரிகளின் தொல்லைகள் அதிகமாக இருக்கும்! இதை சமாளிப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டதுதான் 'வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கம்' இதன் தலைவராக இருந்தவர் இலங்கை கம்யூனிஸ்ற் கட்சியைச் சேர்ந்த எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள். இவர் பின்னாளில் இலங்கை கம்யூனிஸ்ற் கட்சியின் சார்பாக ஸ்ரீமாவே பண்டாரநாயக்க அரசாங்கத்தில் பாராளுமன்ற உறுப்பினராகவும் நியக்கப்பட்டிருந்தார். கள் இறக்கும் தொளிலாளர்களுக்காக சங்கம் உருவாக்கப்பட்ட பின்னர் அவர்கள் கள் இறக்குவதற்கும், கள் விற்பதற்குமான அனுமதிப் பத்திரங்கள் எடுக்கும் வழிமுறைகள் எயல்லாம் சுலபமாக்கப்பட்டதால் அதன் பின்னர் கலால் அதிகாரிகளின் கெடுபிடிகளும் குறைவாகவே இருந்தன.

நல்லூர் அரசடியில் குழந்தை என்பவரின் கள்ளுக்கடை பிரபலமானது! இவருக்கு வயதாகிவிட்டதால் சம்பளத்துக்கு ஆட்களை வைத்துத்தான் கள் இறக்கி வந்தார். அதில் அனேகமானவர்கள் இந்தியத் தமிழர்கள். இவர்களை அந்த நாட்களில் வடக்கத்தையார், கள்ளத்தோணி என்றுதான் அழைப்பார்கள்! இந்தியர்களை வேலைக்கு வைப்பதில் இவர்களுக்கு இன்னொருவகை லாபமும் உண்டு! அது அவர்களுக்குப் பாதிச் சம்பளம்தான் கொடுப்பார்கள்! (சில சமயங்களில் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய சம்பளப்பாக்கி பெரிய தொகையாக வந்துவிட்டால் 'இவன் விசா இல்லாமல் இருக்கின்ற கள்ளத்தோணி' என பொலிசாருக்குக் காட்டிக் கொடுத்துவிட்டு பொலீஸ் வந்து பிடித்த பின்னர் 'உன்ரை காசு என்னட்டை இருக்குத்தானே நான் நல்ல லோயரை வைத்து உன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாலை எடுக்கிறன்' என்று கூறி அவர்களை அப்படியே அந்தரத்தில் கைவிட்டவர்களும் உண்டு!) இதேநேரம் முறையாக விசா எடுத்து வரும் தொழிலாளர்களை பல முதலாளிகள் தங்களிடம் வேலைக்கு வைத்துக் கொள்வதில்லை.

குழந்தையரின் கள்ளுக்கடை காலை பத்துமணியளவில் திறக்கப் படும். அனேகமான வாடிக்கையாளர்கள் நேரத்துடனேயே வந்தாலும் கள்ளுக் குடிக்காமல் காவல் இருப்பார்கள்! காரணம் பதினொரு மணியளவில்தான் குழந்தையரின் ரேஸ்றகடை திறக்கப்படும்! குழந்தையரின் ரேஸ்றகடையில் குடல்க்கறி மிகப் பிரபலமானதாம்!

ரேஸ்றுக்குப் பிரபலமான இன்னொரு இடம் யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தில் உள்ள கந்தையா என்பவரின் கடைதான்! இங்கு குடிக்க வருபவர்கள் கந்தையாவின் ரேஸ்ற் சாப்பிடுவதற்காகத்தான்! அவித்த மரவெள்ளிக்கிழங்கு, நண்டு, இறால், மீன் பொரியல் இப்படி பலவிதமான கறிவகைளில் ரேஸ்ற் செய்து வைத்திருந்தாலும் இவரிடம் கணவாய்க்கறி சாப்பிடுவதற்கென்றே வரும் வாடிக்கையாளர்கள்தான் அதிகம்! கணவாய்க் கந்தையா என்றால்தான் அனேகமானவர்களுக்கு இவரைத் தெரியும்!

1974ம் ஆண்டு இலங்கையின் நிதி அமைச்சராக இருந்த டொக்டர் என்.எம். பெரேரா அவர்கள் கள் இறக்கும் தொழிலை கூட்டுறவு முறையில் கொண்டுவந்ததன் பின்னர் யாழ்ப்பாணத்தில் கள் விற்பதற்காக தவறணைகள் திறக்கப்பட்டன. இதனால் ஆனைக்கோட்டை மாணிக்கம், அரசடிக் குழந்தை உட்பட குருநகரில் கள்ளுக்கடைகள் வைத்திருந்த மிகப் பெரிய பெரிய முதலாளிகளெல்லாம் முடங்கிப் போனார்கள்!

அதன் பின்பு கள் இறக்குபவர்கள் கண்டிப்பாக கள் இறக்கும் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவராக இருக்க வேண்டும்! தாங்கள் இறக்கும் கள் அனைத்தையும் தவறணைக்குத்தான் கொடுக்கவேண்டும்! என சட்டங்கள் கொண்டுவரப்பட்டதால் வீடுகளில் கள் விற்பவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்துவிட்டார்கள்! இதனால் கள்ளுக்குடிக்கும் மக்கள் தரமான கள்ளுக் கிடைக்காமல் பரிதவித்துப் போனார்கள் என்றால் அது மிகையில்லை!

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கள் இறக்கும் தொழிலாளர்கள் குறைந்துவிட்டதால் பெரும்பாலான கள்ளுக்குடி மக்களெல்லாம் சாராயக்குடி மக்களாக மாறிவிட்டார்களாம்! அதனால் கசிப்புச் சாராயம் காய்ச்சுபவர்களின் தொகை அதிமாகிக்கொண்டே போகின்றதாம்!

அதேநேரத்தில் குடிமக்களின் தொகை குறைந்துவிடக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் அரசாங்கம் சந்திக்கு சந்தி (டீ)பார் என்று சொல்லப்படும் மதுபானக் கடைகள் திறக்க அனுமதி வழங்கியுள்ளதாம். அந்தக் கடைகளில் சாராயத்துடன் பியர், சருவுட் போன்ற நாகரிகக் குடிவகைகளும் தாராளமாக விற்கப்படுவதால் அனேகமான கள்ளுக்குடி மக்கள் பியர், சருவுட் குடி மக்களாக மாறிவிட்டார்களாம்!

குடிமக்களும், மதுபானக் கடைகளும் அதிகரிக்க, அதிகரிக்க கலால் அதிகாரிகளுக்குத்தான் வேலையும் அதிகம்! வருமானமும் அதிகம்!

யாழ்ப்பாணத்து குடிமக்கள் பெருங்குடி மக்களாகப் பெருகிக் கொண்டே போகின்றார்கள்!

உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே...

தாய் மண்ணை நேசிக்கும் எமது அன்பான உறவுகளே! எம்மில் புலம் பெயர்ந்து வந்து மிக நீண்ட வருடங்களைக் கடந்தவர்கள் ஏராளம்பேர் இருக்கின்றோம். எங்களில் பலருக்கு நாம் வாழ்ந்த மண்ணின் பழைய நினைவுகள் தாயின் தாலாட்டுப் பாடலைப்போல சில சமயங்களில் வந்து போய்க் கொண்டிருக்கலாம்... அந்த நினைவுகள் சோகங்களையும் சொல்லலாம், சந்தோஷங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்! இங்கு நான் சொல்லப்போவது இரண்டிற்கும் அப்பாற்பட்டது! ஆம்; நாம் அனுபவித்து மகிழ்ந்தனவற்றில் பல காணாமல் போய்விட்டன! அவைகளை மீண்டுமொருமுறை நினைத்துப் பார்க்கின்றேன்! அவ்வளவுதான்... இந்த நினைவுகள் இம்மாத மண்வாசனையாக மலர்கின்றது. இங்கு நான் சொல்வது சுமார் ஐம்பது வருடங்களுக்கு முந்தியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# மொக்கன் கடையும்... சொக்கன் கடையும்

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் அனேகமான யாழ்ப்பாணத்து மக்களிடம் மாட்டிறைச்சி என்பது அருவருப்பான, சாப்பிடக்கூடாத ஒரு உணவாகவே கருதப்பட்டது. சில வீடுகளில் மற்றவர்களுக்குத் தெரியாமல் இரகசியமாக வாங்கிச் சமைத்துச் சாப்பிடுபவர்களும் உண்டு! கொஞ்சக் காலம் செல்லச் செல்ல மாட்டிறைச்சி சாப்பிடும் பழக்கம் அனேகமான ஆண்களிடம் ஏற்படத் தொடங்கியது. அதற்குக் காரணம் யாழ்ப்பாணம் ஐந்து முச்சந்தியில் அமைந்திருந்த மொக்கன் கடைதான்!

மொக்கன் கடைக்கு அருகினிலேயே ஜனாப் மீராலெப்பை என்பவருக்குச் சொந்தமான 'பிளவுஸ்' என்னும் பெயரில் ஐஸ்கிரிம் தயாரிக்கும் நிறுவனம் இருந்ததனால் சிலர் மொக்கன் கடையையும் 'பிளவுஸ்' என்றும் அழைப்பார்கள். ஆனாலும் மொக்கன் கடை என்று அழைப்பவர்கள்தான் அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேகமாக படிப்பறிவு குறைந்தவர்களை, முரட்டுத்தனமானவர் களைத்தான் மொக்கன் எனச் சொல்வார்கள். ஆனால் இந்தக் கடைக்கு மொக்கன் கடை என்ற பெயர் எப்படி வந்தது என்று எனக்குத் தெரியாது! அங்கு தினமும் சாப்பிடும் ஒரு நண்பரிடம் இந்தப் பெயருக்கான காரணத்தைக் கேட்டதற்கு அவர் சொன்னது... 'அந்தக் கடையில் மாட்டிறைச்சியில் தயாரிக்கப்படும் றோஸ் என்னும் உணவு மிகவும் பிரபலமானது! அந்த றோஸின் அளவு நாம் சாதாரணமாக வீடுகளில் சமைப்பதற்காக வெட்டும் இறைச்சித்துண்டுகளின் அளவைவிட நான்கு, அல்லது ஐந்து மடங்கு அதிகமானதாக இருக்கும். அந்த பெரிய இறைச்சித்துண்டைச் சாப்பிடுவது கொஞ்சம் சிரமமாகவும் இருக்கும். அதனால் அந்த இறைச்சித்துண்டுக்கு ஆரம்பகாலங்களில் சிலர் மொக்கு இறைச்சித்துண்டு என்றும் சொல்வார்களாம்! மொக்கு இறைச்சி தின்னப் போவோம் என சொல்லி வந்தவர்கள் காலப்போக்கில் மொக்கன் கடைக்குப் போவோம் என சொல்லத் தொடங்கிவிட்டார்களாம்' இதுதான் மொக்கன் கடை என பெயர் வந்ததற்கான காரணமாம்.

மொக்கன் கடையின் உணவுகளில் பிரபலமானவை றோஸ், குறுமா, கொத்துறொட்டி, புட்டு, கிழங்குக்கறி போன்றவை. கடையின் முன்பகுதி யிலேயே றொட்டி தயாரிக்கும் இடம் அனைவரும் பார்க்கும்படியாக இருக்கும். மாலை ஐந்து மணிக்கே றொட்டி தயாரிப்பதற்காக ஒருவர் வந்து றொட்டிக்கான மாவை பதமாக எடுத்து உருண்டை உருண்டையாக உருட்டி அடுக்கிவைப்பார். ஆறு மணிக்கெல்லாம் றொட்டி மாஸ்ற்றர் வந்துவிடுவார். அவர் றொட்டி வீசும் அழகை ஒரு கலை என்றுதான் சொல்லவேண்டும்! றொட்டிக்காக மாவை வீசும்போது கண்ணாடி போல ஒருபக்கத்தில் இருந்து பார்த்தால் மற்றப் பக்கத்தில் இருப்பவரைப் பார்க்கலாம் ஆனால் அவர் வீசிக்கொண்டிருக்கும் மாவில் ஒரு சிறு ஓட்டைகூட இருக்காது! ஒரு விஞ்ஞானியைப்போல அவ்வளவு நுணுக்கமாக மா, உருண்டையை அழகாக விசுறுவார்.

இரவு எட்டுமணியானால் சாப்பாட்டுப் பிரியர்கள் கடையை மொய்க்கத் தொடங்கி விடுவார்கள். கறி வகைகள் ஏற்கனவே தயாரித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தாலும் றொட்டி உடனுக்குடன்தான் தயாரித்துக் கொடுப்பார்கள். ஒருவர் ரொட்டியை விசிறி பதப்படுத்திக் கொடுக்க மற்றவர் கொத்துறொட்டி தயாரிப்பார். அதுகூட பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கும்! றொட்டிகளைத் துண்டாக நறுக்கி, வெங்காயம், காய்மிளகாய் ஆகியவற்றை சிறிது வதங்கவைத்து அதில் முட்டையை உடைத்து ஊத்தி அது பொரிவதற்குள் துண்டாக்கப்பட்ட றொட்டியை பொரிகின்ற முட்டையோடு கலந்து அதன்பின் கொத்துறொட்டிக்காவே தயாரித்து வைத்திருந்த இறைச்சிக் கறியை அதற்குள் கொட்டியபின்னர் றொட்டியைக் கொத்துவதற்காகவே உருக்குத் தகடுகளினால் தயாரிக்கப்பட்ட கத்திகளால் இரண்டு கைகளாலும் படபடவென்று றொட்டியைக் கொத்தும் சத்தம்கூட பரவசமாக இருக்கும்!

கடை அதிகாலை இரண்டு மணிவரை திறந்திருந்தாலும் றொட்டி தயாரிப்பவர்கள் இரவு பதினொரு மணிவரையும் இயந்திரங்களைப்போலவே இருப்பார்கள்! சில நிமிடங்கள்கூட ஒய்வெடுப்பதற்கு நேரம் இருக்காது! பதினொரு மணிக்குப் பின்னர் கூட்டம் குறைவாக இருந்தாலும் றொட்டி கொத்தும் சத்தம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். பன்னிரண்டு மணிக்குப் பின்னர் இரண்டாம் காட்சி திரைப்படங்கள் பார்த்துவிட்டு சாப்பிட வருபவர்களின் வரவு ஆரம்பித்து அதிகாலை இரண்டு மணியளவில்தான் அங்கு வேலை செய்பவர்கள் தாங்கள் சாப்பிட்டுவிட்டு கடையைப் பூட்டுவார்கள்.

பிற்காலத்தில் மொக்கன் கடைக்குப் போட்டியாக இன்னொருவர் மொக்கன் கடைப் பாணியிலேயே புட்டுக்கடை ஒன்றை ஆரம்பித்தார். எப்பொழுதும் புதிய கடைகளில் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக விலை மலிவாக அல்லது சுவையில் கூடிய கவனம் செலுத்துவது, இப்படியான சமாச்சாரங்கள் நடைபெறுவது வழமையானதே. இப்படியான காரணங்களால் மொக்கன்கடை வாடிக்கைளர்கள் பலர் அந்த புதிய கடையை நாடத் தொடங்கியதால் மொக்கன்கடை முதலாளிக்கு புதிய புட்டுக்கடைமீது சரியான கோபம். போட்டிக்கடை வந்தபிற்பாடு மொக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைச் சாப்பாட்டிலும் சுவை கூடுதலாக இருந்ததாக வாடிக்கையாளர்கள் சொல்லிக்கொண்டார்கள்.

வெளிநாடுகளில் வாழ்கின்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு மொக்கன் கடையைப்பற்றி நாம் சொல்லத் தேவையில்லை. ஆனால் இவர்களுக்கெல்லாம் யாழ்ப்பாணத்தில் உள்ள இன்னொரு சாப்பாட்டுக்கடையான சொக்கன் கடையைத் தெரிந்திருக்குமோ என்றால் சந்தேகம்தான்!

யாழ்ப்பாணம் நல்லூருக்கு அண்மையில் உள்ள கைலாசப் பிள்ளையார் கோவிலுக்குப் பின்புறமாக இருக்கின்றது சொக்கன் கடை. மொக்கன் கடையைப்போல கட்டிடம் இல்லை! ஓலையால் வேயப்பட்ட கொட்டிலிலாலான ஒரு சிறிய கடைதான் சொக்கன் கடை! ஆனால் தினமும் காலை ஆறு மணியிலிருந்து இரவு பத்து மணிவரை மக்கள் கூட்டமாகவே இருக்கும்! காரணம் அங்கு அனைத்து சாப்பாட்டு வகைகளும் மலிவு! உதாரணத்திற்கு யாழ்ப்பாணத்தில் ஏனைய கடைகளில் எல்லாம் வடை ஐந்து சதம் விற்ற காலத்தில் மூன்று சதத்திற்கு வடை வித்தது சொக்கன் கடையில் மட்டும்தான்! அதேபோலவே அங்கு அனைத்துச் சாப்பாடுகளும் மலிவுதான்!

கடையில் மூன்று நீளமான மேசையும் அமருவதற்கு வாங்குள், இதுதான் சாப்பிடுபவர்களுக்கான வசதி. அதற்கு சற்று அருகினிலேயே ஒருவர் இருந்து ஆட்டுக்கல்லில் உளுந்து அரைத்துக்கொண்டிருப்பார். சொக்கன் கடையின் ஸ்பெசலே வடைதான். காலையில் இருந்து இரவுவரையும் உளுந்து அரைபட்டுக்கொண்டே இருக்கும்! உளுந்து அரைப்பதற்கென்றே இரண்டு பேர் இருக்கின்றார்கள். இருவரும் மாறி மாறி அரைப்பார்கள் ஆனால் ஆட்டுக்கல்லு தொடர்ந்து உளுந்தை அரைத்தபடியே இருக்கும். வடை பொரிப்பதும் நமது கண் முன்னேயே நடைபெறும்! அனைத்தும் மிகச் சுத்தமாகவே இருக்கும். வடைக்கு ஓடர் பண்ணினால் உடனே சுடச்சுடக் கொடுப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொக்கன் கடைக்கு தினமும் வந்து சாப்பிடும் வாடிக்கையாளர்கள் அதிகம்! அவர்களில் வயதானவர்களே அதிகம்! வேட்டி கட்டியவர்களும், சாரம் கட்டியவர்களும்தான் கடையில் அமர்ந்து சாப்பிடுபவர்கள்! கொஞ்சம் வசதிபடைத்த படித்த லோங்ஸ் போட்ட வாடிக்கையாளர்களும் சொக்கன் கடையின் வாடிக்கையாளர்களாக இருக்கின்றார்கள். அவர்களெல்லாம் பார்சலில் எடுத்துச்சென்று வீட்டில் வைத்து சாப்பிடுபவர்கள்.

மிக அண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்து பாரிஸ் வந்த எனது நண்பரொருவர் சொன்னார், மொக்கன் கடை இப்பொழுது இல்லையாம்! கலவர காலத்தில் கடை இடிந்து உருக்குலைந்து சிலகாலம் யாரும் கவனிப்பாரற்ற இடமாக இருந்ததாம். இப்பொழுது அந்த இடத்தில் வேறு ஒரு வியாபார நிலையம் இருக்கின்றதாம். ஆனால் சொக்கன் கடை அதே இடத்தில் சீமெண்ட கட்டிடமாகப் புதுப்பிக்கப்பட்டு இயங்கிக்கொண்டே இருக்கின்றதாம். இன்னொரு ஆச்சரியமான செய்தி என்வென்றால் இப்பொழுதும் சொக்கன் கடையில் யாழ்ப்பாணத்தில் உள்ள மற்றய கடைகளில் விற்கும் விலையைவிட மலிவாகத்தான் விற்கின்றார்களாம்!

எனது ஒன்றுவிட்ட அண்ணன் முறையானவர் இராசு எனப் பெயர். நாங்கள் இராசண்ணை என்றுதான் கூப்பிடுவோம். இவர் எந்த மாமிசமும் சாப்பிடுவதில்லை. மிகப்பெரும் முருக பக்தர். நாங்கள் மொக்கன் கடைக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வருகின்றோம் என அறிந்தாலே போதும் 'சவ்விழுத்துப்போட்டு வாறாங்கள்' எனச் சொல்லி வீட்டுக் குள்ளேயே அடுக்கமாட்டார்! ஆனால் அவர் வெள்ளிக் கிழமைகளில் நல்லூர் கந்தசாமி கோவிலுக்குப் போய்விட்டு வரும்போது சொக்கன் கடையில் வடை வாங்கிவருவது வழமையாக நடைபெறும். இப்படியாக தூர இடங்களில் இருந்து வந்து வடை வாங்கிச் செல்லும் வாடிக்கை யாளர்கள் சொக்கன் கடைக்கு நிறைய உண்டு!

யாழ்ப்பாணத்தில் அன்றிருந்த பல சாப்பாட்டுக்கடைகள் எல்லாம் நாங்கள் வீடுகளில் சாப்பிடுகின்ற சோறும், கறிகளையுமே தினமும் சமைப்பதனிலால் அந்தக் கடைகளைப்பற்றிய நினைவுகளை இரைமீட்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை! ஆனால் அவற்றிக்கு மாறான சாப்பாடுகளைத் தந்த இந்த மொக்கன் கடை, சொக்கன் கடைகளைப்போல யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்னால் இருந்த சிற்றி பேக்கரியும் நாங்கள் நினைவில் வைத்திருக்கக்கூடிய ஒரு உணவகம். அன்றைய நாட்களில் இருபத்தைந்து சதம் இருந்தால்ப் போதும் கிழங்குக் கறியுடன் அரை றாத்தல் பாணும் தருவார்கள். பாணும் மாஸ் சம்பலும், முப்பத்தைந்து சதம்தான்! இப்படி மலிவான விலையில் ஒரு நேரச் சாப்பாட்டை முடித்துவிடலாம் சிற்றி பேக்கரியில்.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் அரசியல் கூட்டங்கள், விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றால் சாப்பிட வருபவர்களால் சிற்றி பேக்கரி நிறைந்து வழிந்து கொண்டே இருக்கும். இந்தக் கடை சிங்கள இனத்தவர்களால் தான் நடத்தப்பட்டது. அதனால் 83ம் ஆண்டு இனக்கலவரம் நடைபெற்றதோடு கடையை மூடிவிட்டு அவர்கள் தங்கள் ஊர்களுக்குச் சென்றுவிட்டார்கள். ஆனால் சிற்றி பேக்கரியின் நினைவுகள் இப்பொழுதும் இரை மீட்கப்படக்கூடியதாக இருக்கின்றது.

மொக்கன் கடை இப்பொழுது இல்லாமல் போனாலும் மொக்கன் கடைக்கு நிகராக, ஏன் அதையும் மிஞ்சிய வசதிகளுடனும், சுவையான உணவு வகைகளுடனும் பல மொக்கன் கடைகள் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றன. இவைதவிர மேலை நாடுகளில் இருந்து செல்பவர்களின் வசதிற்கேற்ப பிற்சா, மற்றும் சன்விட்ச் கடைகள்கூட இருக்கின்றனவாம். ஆனால் நம் போன்றவர்களால் சொக்கன் கடையையும், மொக்கன் கடையையும் இப்பொழுதும் மறக்கமுடியவில்லையே!

நான் கடைசியாக இந்தக் கடைகளில் சாப்பிட்டு நாற்பது வருடங்களுக்கு மேல் இருக்கும்... இன்றும் எனது நினைவுகளில் சொக்கன் கடையின் தோற்றமும், அந்தக் கடையின் வடையின் ருசியும் அதேபோல மொக்கன் கடையின் றோஸ், கொத்துறொட்டி சிற்றி பேக்கரியின் மாஸ் சம்பல் இவைகளின் நினைவுகள் வரும்போதெல்லாம் எனது நாக்கு அந்த பழைய சுவைகளைத் தேடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

# காகம்

காகங்களைப்பற்றி நாம் என்ன தெரிந்து வைத்திருக்கின்றோம்? எவ்வளவு தெரிந்து வைத்திருக்கின்றோம்? பாடசாலையிலும் சரி, எம் பெற்றோர்களானாலும் சரி; சின்ன வயதில் இருந்தே நமக்கெல்லாம் காகத்தைப் பற்றிய தவறான செய்திகளை மட்டுமே சொல்லித் தந்திருக்கின்றார்கள்.

காகம் பாட்டியிடம் வடையைப் பறித்துச் சென்றது! சிறுவர்களிடமும் சாப்பாட்டைத் தட்டிப் பறித்துச் சாப்பிடும்! தந்திரம் நிறைந்தது! கண்டதையும் சாப்பிடும்! இப்படி இப்படியாக காக்கையைப்பற்றிய தப்பான செய்திகளை எங்கள் மனங்களில் பதியவைத்தவர்கள் காக்கையின் நல்ல குணங்கள் எதையுமே எமக்குச் சொல்லித் தரவில்லை.

மனிதர்களிடம் தந்திரப்புத்தி இல்லையா? அடுத்தவர்களின் சொத்துக்களை அபகரிக்கும் மனிதர்களைப் பார்த்திருக்கின்றோம்! அடுத்தவன் உழைப்பை உறிஞ்சித் தின்னும் மனிதர்களைப் பார்த்திருக் கின்றோம்! கண்டதையும் சாப்பிடுகின்ற மனிதர்களே இல்லையா? நாகரிகம் வளர்ச்சியடைந்த நாடுகளில்கூட பாம்பு, பூச்சி புழு, போன்ற உயிரினங் களைச் சாப்பிடுபவர்களை தொலைக்காட்சிகளில் பார்க்கின்றோம்! காக்கை தனது இனத்தை தானே கொலை செய்வதில்லை. ஆனால் மனிதர்களாகிய நாங்கள் எங்கள் இனத்தையே கொலை செய்கின்றோம்! இப்படிப்பட்ட நாங்கள், காகங்களைப் பற்றிய தவறான செய்திகளை மட்டுமே சொல்லி வருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களிடம் இல்லாத பல சிறந்த குணங்களெல்லாம் காகங்களிடம் இருக்கின்றன! அவைபற்றி இப்போது பார்ப்போம்.

அதிகாலையிலேயே தூக்கம் கலைந்து எழுகின்ற பழக்கம் காகங்களுக்கு உண்டு! அது உணவு தேடுவதற்காக காலையில் எழுந்து விடுகின்றது என்று யாரும் எழுந்தமானத்திற்கு சொல்லிவிடக்கூடாது. எல்லாப் பறவைகளுக்கும் உணவு தேடுவதுதான் அவர்களின் வேலையே. ஆனால் பறவைகளில் காகம் மட்டும் அதிகாலையிலேயே எழுந்துவிடும்.

பகிர்ந்துண்டு சாப்பிடுவதில் காகத்திற்கு நிகரானதாக வேறு எந்த உயிரினங்களும் இல்லை! மனிதர்கள் உட்பட மற்றைய உயிரினங்கள் அனைத்தும் தமது தேவைக்கு மீதமாக உணவு இருந்தால் அடுத்த நேரத்திற்கு, அல்லது அடுத்த நாளைக்கு என சேமித்துக்கொள்கின்றன. ஆனால் காகங்கள் மட்டும் கொஞ்சம் அதிகமாக உணவு கிடைத்து விட்டால் தமது உறவுகளையெல்லாம் அழைத்துப் பகிர்ந்துண்ணுகின்றது.

ஒரு மனிதன் வீதியில் விழுந்துகிடந்தாலே கவனிக்காமல் செல்லும் எத்தனையோ மனிதர்களைப் பார்த்திருக்கின்றோம். ஆனால் தமது உறவுகளில் ஒன்று இறந்துவிட்டால்கூட எவ்வளவு இடைஞ்சல்கள் இருந்தாலும் தங்கள் உறவுகளையெல்லாம் அழைத்து சோகத்தைப் பகிர்ந்துகொள்ளும் உயர்ந்த குணம் காகங்களிடம் மட்டுமே உண்டு!

மாலையிலே குளிக்கின்ற பழக்கம் காகங்களுக்குண்டு! எல்லாக் காகங்களுக்கும் முழுமையாக குளிக்கக்கூடிய வசதி கிடைக்காவிட்டால், ஓடைகளிலோ அல்லது வாய்க்கால்களிலோ கிடைக்கின்ற தண்ணீரில் தங்கள் உடம்பைக் கழுவிக்கொள்கின்ற காகங்களும் உண்டு. சில மனிதர்கள் அவசரம், அவசரமாக குளித்துவிட்டு வரும்போது காக்கைக் குளியல் குளித்துவிட்டு வருகின்றான் என்று சொல்வதுண்டு. உண்மையில் காகங்கள் தண்ணீர் கிடைக்காத பட்சத்திலேயே அப்படிச் செய்கின்றன. கடற்கரையோரங்களில் வசிக்கின்ற காகங்கள் மிக ஆறுதலாக நீண்டநேரம் தண்ணீரில் இருந்து தங்கள் உடம்பைக் கழுவிக்கொள்ளும். காகங்கள் குளிக்கின்ற அழகே தனி அழகுதான்!

காகங்கள் தினமும் ஒரு இடத்தில் தூங்குவதில்லை! சில மனிதர்கள்கூட கண்ட கண்ட இடங்களில் தூங்கிவிடுவார்கள். ஆனால் காகங்கள் இரைதேடுவதற்காக எவ்வளவு தூரம் பறந்து சென்றிருந்தாலும் இரவில் தாங்கள் வழமையாகத் தூங்கும் இடங்களில்தான் தூங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொரு விசேஷ குணம் காகங்களிடம் இருக்கின்றது! அது காகங்கள் யாரும் பார்க்கமுடியாத இடங்களில்தான் உடலுறவு வைத்துக் கொள்ளும்! மேலைநாடுகளில் மனிதர்கள் பொது இடங்களில் முத்துமிடுவதும், கட்டிப்பிடித்துக் கொண்டு செல்வதெல்லாம் சர்வ சாதாரணமானதாகிவிட்டது! ஏன் நம்மவர்களில்கூட சில காதலர்கள் கிள்ளுவது, தடவுவது போன்ற செயல்களில் ஈடுபடுவதுண்டு! காகங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் யாரும் பார்க்கும்படி சின்னச் சின்னச் சேட்டைகள்கூட செய்வதில்லை!

இப்படியாக மனிதர்களிடம்கூட இல்லாத எவ்வளவோ நல்ல குணங்கள் காகங்களிடம் இருக்கின்றன. ஆனால் மனிதர்களோ இன்னமும் காகம் பாட்டியிடம் வடை பறித்த கதையையே கீறல் விழுந்த றைக்கோட் மாதிரி சொல்லிக்கொண்டிருப்பதுடன் காகங்களை இழிவு படுத்துகின்ற வகையில் சில பழமொழிகளையும் சொல்லிவைத்திருக் கின்றார்கள்.

ஒருவர்மீது வீண் பழிகள் சுமத்தப்படும்போது சம்மந்தமே இல்லாமல் 'காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதைபோல' என காகத்தை உதாரணம் காட்டுகின்றார்கள். ஏன் அதை பருந்து இருக்கப் பனம்பழம் விழுந்ததைப் போல... கிளி இருக்கப் பனம்பழம் விழுந்ததைப்போல... என்றெல்லாம் சொல்லியிருக்கக்கூடாது.

'காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு' என்பார்கள்! இது கருப்பான பிள்ளைகளைப் பெற்ற தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளின் அழகை, செயல்களை, திறமைகளை, பெருமையாக சொல்லும்போது அதை பொறுக்க முடியாதவர்கள் காகத்துடன் உதாரணம் காட்டி காகத்தையும் கருப்பு நிறத்தையும் இழிவுபடுத்துகின்றார்கள்!

'மா பழுத்தால் கிளிக்கு! வேம்பு பழுத்தால் காகத்திற்கு' என்று சொல்லி ஏதோ மாம்பழம் கிளிக்கு மட்டும் என்பது மாதிரியும், வேப்பம்பழம் காகத்திற்கு மட்டும் என்பது மாதிரியும் இந்தப் பழமொழியைச் சொல்வார்கள். இதன் உட்பொருள் என்னவென்றால் மாம்பழத்தை மனிதர்கள் விரும்பி உண்பார்கள். கிளி போன்ற பறவைகளும் அதை விரும்பி உண்பதனால் மனிதர்கள் தங்களைப் பெருமைப்படுத்திக் காட்டுவதற்காக அப்படியொரு பழமொழியை உருவாக்கினார்கள்! ஏன் காகம் மாம்பழம் தின்பதே இல்லையா? வேப்பம்பழத்தை வேறு பறவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்பதில்லையா? அல்லது வேப்பம்பழம் என்ன அவ்வளவு இழிவான பழமா? இந்த பழமொழி உருவாகிய காலத்தில் வேம்பின் மருத்துவப் பெருமைகளை தெரியாத மனிதர்கள், வேம்பு கசப்பானதாகவே இருந்ததால் அப்பொழுது அவர்களுக்கு உதாரணத்திற்குக் கிடைத்தது காகம்தான்!

'முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா காகம்?', 'கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா' இந்த இரண்டு பழமொழிகளில் முதலாவது, மனிதர்கள் தங்களுக்குள் உள்ள நிற வேறுபாட்டைப் பிரித்துக்காட்டுவதற்கும், இரண்டாவது கங்கையில் குளித்தால் தாங்கள் செய்த பாவங்கள் எல்லாம் தீரும் என்பது மனிதர்களின் நம்பிக்கை; ஆனால் எல்லோராலும் கங்கைக்குப் போக முடியாது. பணவசதி உள்ளவர்களால் மட்டுமே அது சாத்தியமாகும். அப்படி வசதியில்லாதவர்களை காகத்தின் நிறத்தோடு ஒப்பிட்டு இதுபோன்ற பழமொழிகளை கூறிவைத்துள்ளார்கள்! இது மனிதர்கள் தங்களுக்குள் ஒரு பகுதியினரை தாங்களே இழிவு படுத்திக் கொள்வதற்கு மறைமுகமாக உருவாக்கிக்கொண்ட பழமொழியாகும் என்பதுதான் உண்மை! இதில் இன்னொன்றையும் நாம் கவனிக்கவேண்டும், பாவம் செய்த மனிதர்கள் அதைத் தீர்க்க கங்கைக்குப் போகின்றார்கள்! காகம் ஏன் போகவேண்டும்? இப்படியான பழமொழிகளைப் பேசும் மனிதர்கள் சிந்திக்க வேண்டும்!.

மேலும் இன்னொருவரிடம் இருந்து தமக்கு ஏதாவது உதவிகள் தேவைப்பட்டால் அவர்களுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்து காரியங்களைச் சாதிக்க நினைப்பவர்களை 'காக்காய் பிடிக்கின்றான்' என்பார்கள். மனிதர்களாகிய நாம் ஒரு உண்மைமையைத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த வார்த்தைக்கும் காகத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லவே இல்லை! காகம் தன்னுடைய தேவைக்காக இன்னொரு காகத்திற்குப் பின்னால் எப்பொழுதுமே செல்வதில்லை!

வீட்டிற்கு வந்தவர்களுக்கு ஒருவேளை சாப்பாடுகூடக் கொடுக்காத வர்களை, அவர்களின் கஞ்சத்தனத்தைச் சுட்டிக்காட்டுவதற்காக 'எச்சில் கையால் காகத்தைக்கூட விரட்டாதவன்' எனச் சொல்வதுண்டு! இதில் என்ன உண்மை இருக்கின்றது? குழந்தைகள் இனிப்புவகைகளை வாயால் கடித்துப் பிரித்துச் சாப்பிடுவதை 'காக்காய்க்கடி' கடித்துச் சாப்பிடுகின்றார்கள் என்று சொல்வோம். இது காகத்தின் பகிர்ந்துண்ணும் பழக்கத்தையல்லவா சொல்கின்றது! இப்படியாக காகங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்துண்ணும் குணத்தைப்பற்றி நன்கு தெரிந்திருந்தும் மனிதர்கள் ஏன்தான் காகங்களை இப்படியெல்லாம் வம்புக்கிழுக்கின்றார்களோ தெரியவில்லை?!

சில மனிதர்களுக்கு ஒருவிதமான இழுப்புவலி ஏற்படுவதுண்டு. அதை 'காக்காய் வலி' என்பார்கள். காக்கைகளுக்கு அப்படியானதொரு வலி வருவதே இல்லை! மனிதர்களுக்கு அந்த வலி வரும்போது காலையும், கையையும்தான் இழுத்து இழுத்து வலிப்பார்கள். அதில் இருந்து உருவான சொல்தான் காக்காய் வலிப்பு என்னும் சொல்! பின்நாளில் அந்த வருத்தத்திற்கே காக்காய் வலிப்பு என பெயராகிவிட்டது.

காகம் காலையில் வீட்டின்முன் வந்து கத்தினால் விருந்தினர் வருவதற்கான அறிகுறியென பெரியவர்கள் சொல்வது வழக்கம்! இதன் உண்மையான பொருள் காகங்களுக்கு கொஞ்சம் அதிகமான உணவு கிடைத்தால் அது அவைகளுக்கு விருந்துச் சாப்பாடுபோல! உடனே அந்த விருந்தில் பங்குகொள்ள தமது உறவுகளையும் அழைத்துக் கொள்ளும்! அதைக் காரணமாக வைத்து காகம் கரைந்தால் விருந்தாளிகள் வரப்போகின்றார்கள் எனச் சொல்வார்கள்! இது காகங்களில் உள்ள இந்த நல்ல குணத்தை மனிதர்கள் கௌரவிக்கின்றார்கள்.

விரத நாட்களில் காகங்களை வருந்தி அழைத்து முதல் சாப்பாட்டை அதற்கு வைத்து அச்சாப்பாட்டைக் காகங்கள் உண்ட பின்னரே தாம் உண்ணும் மனிதர்களின் செயல் தமது தேவையென்றால் விருந்தும் வைப்பார்கள், தேவையில்லையெனில் பழித்தும் உரைப்பார்கள் என்பதை அப்பட்டமாகக் காட்டுகின்றது!

தன்னிடம் குற்றமிருந்தால் அந்தக் குற்றத்தை மறைப்பதற்கு அடுத்தவர்களின் குற்றங்களைத் தேடிக்கண்டுபிடித்து தனது குற்றங்களை மறைக்க முயலும் மனிதர்கள்தான் காகங்களிடம் கண்டுபிடித்த குற்றங்களைப் பெரிதாக்கிவிட்டார்கள்.

காகம் தப்போ, தவறோ செய்யாத பறவையென்று எடுத்துரைப்பது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. மனிதர்கள் செய்யும் குற்றங்களைவிட பெரிய குற்றங்கள் எதனையும் காகங்கள் செய்யவில்லை என்றுதான் சொல்லுகின்றோம். அவ்வளவுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13

# பழஞ்சோறு!

ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற ஏராளமானவர்கள் இன்று மறந்துபோனதொரு தாயகச் சாப்பாடு பழஞ்சோறு! மறக்காமல் இருக்கும் சிலருக்கும்கூட இன்று இங்கு கிடைக்காமல் இருக்கும் சாப்பாடும் பழஞ்சோறுதான்!

அவசரமான இந்த ஐரோப்பிய வாழ்க்கையில், அவசரச் சாப்பாடுகளைத் தரும் மெக்டோனாலின் 'சிக்கன்-ரித், மற்றும் பிட்ஷா போன்ற உணவகங்களில் தயாரிக்கப்படும் உணவுகளை வாங்கிச்சாப்பிட்டு பெயர் தெரியாத புதிய, புதிய நோய்களையெல்லாம் பணம் கொடுத்து வாங்கிச் சேமித்துக்கொள்ளும் நாம், எம் தாயக உணவுகளை மறந்து ஆரோக்கியத்தைப் பேண முடியாதவர்களாகிவிட்டோம்!

இன்று ஐரோப்பாவில் வாழ்கின்ற தொண்ணூறு விதமான மக்கள் தாய் மண்ணில் நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்களே ஆவார்கள்! அங்கு வாழ்ந்த பாதி நாட்களில் அனேகமாக இவர்கள் எல்லோருடையது மான காலைச் சாப்பாடு பழஞ்சோறாகத்தான் இருந்திருக்கும்! இங்கு நாங்கள் இரவில் மீதமாகும் உணவுகளை ரிசிடரில் வைப்பதுபோல அங்கு இரவில் அனைவரும் சாப்பிட்ட பின்னர் மீதமாக உள்ள சோற்றுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீரை ஊத்தி மூடி வைத்துவிட்டால் அது கெட்டுப்போகாமல் இருப்பது மட்டுமல்ல; மறுநாள் அதற்கு தனியானதொரு ருசியும் உண்டாகிவிடும்!

பழஞ்சோறு சாப்பிடுவதில்கூட பலவகை இருக்கின்றது! இரவு சோற்றுடன் கறியும் அதிகமாக மிஞ்சியிருந்தால் காலையில் அனைவருக்கும் தட்டில் தனித்தனியாக சோற்றைப்போட்டு, அதற்குமேல் கறியையும் ஊத்தித் தருவார்கள். இதில் ஒன்றும் பெரிய விசேசம் இருக்காது! அதே நேரத்தில் கறி குறைவாக இருந்தால் அந்தக் கறிச்சட்டிக்குள் பழைய சோற்றைக் கொட்டிக் குழைத்து அம்மாவின் கைகளால் உருண்டைக் குழையலாக வாங்கிச் சாப்பிட்ட ருசியை நினைக்கும்போது இன்றும் நாக்கில் நீர் சுரக்கின்றது!

பழங்கறிகள் எதுவும் இல்லாத நாட்களில் அம்மியில் அரைத்த மாங்காய் சம்பலுடன் தொட்டுச் சாப்பிடுவதும் ஒரு தனி ருசிதான்! சாம்பலுக்கு மாங்காய்கூட இல்லாத நேரங்களில் பழஞ்சோற்றை அதற்குள் இருக்கும் தண்ணியுடன் கலக்கிக் கஞ்சியாக்கி சின்ன வெங்காயத்துடனும், காய் மிளகாயுடனும் கடித்துச் சாப்பிடுவது வேறுவிதமான ருசியாக இருக்கும்!

ஊரில் கலியாண வீடுகள், சாவு வீடுகளில் அண்டாக்கள், கிடாரங்களில வைத்து பெரிய சமையல்தான் நடைபெறும். அப்படியான நாட்களில் இரவு மீதமாகும் உணவுகளை மறுநாள்காலை ஒன்றாகக் கொட்டிப் பிரட்டி உறவுகள் எல்லாம் சுற்றியிருக்க ஒரு வயதான அம்மா அதைக் குழைத்துத் தருவார்கள். சில சமயங்களில் ஒரு புளித்த வாசனைகூட அந்தச் சோற்றுக்குழையலில் இருந்து வரும்! அந்த வாசனையும், ருசியும் இன்று எவ்வளவு பணம் கொடுத்தாலும் எங்கும் வாங்கமுடியாதவை!.

சோறு சமைப்பதற்கு வெள்ளைப்பச்சை அரிசி, மற்றும் குத்தரிசி போன்றவற்றைத்தான் பயன்படுத்துவார்கள். குத்தரிசியிலும் பூநகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொட்டைக்கறுப்பன் எனப்படும் குத்தரிசிச் சோற்றுக்கும் சுவையாக இருக்கும், பழஞ்சோற்றுக்கும் சுவையாகவே இருக்கும். ஆனால் இந்த குத்தரிசி பழஞ்சோற்றுக்கு கறி இல்லாவிட்டால் சுவை இருக்காது. வெள்ளைப்பச்சையரிசி பழஞ்சோற்றுக்கு வெங்காயம், மிளகாய், மாங்காய்ச்சம்பல், ஊறுகாய் எதுவானாலும் சுவையோ சுவைதான்.

ஊரில் கொஞ்சம் வசதிபடைத்த பணக்காரர்களில் அனேகமானவர்களுக்கு இந்தப் பழஞ்சோற்றின் ருசியெல்லாம் தெரியாது! அவர்களின் வீடுகளில் பழஞ்சோறு ஆடு மாடுகளுக்கான சாப்பாடாகத்தான் இருக்கும்! ஒருநாள் வைத்து உண்பதையே பழையது என பரிகசித்த இவர்கள்தான் இன்று ஐரோப்பிய நாடுகளுக்கு வந்து ரிசிடருக்குள் வாரக்கணக்காக, மாதக்கணக்காக இருக்கும் உணவுகளைப் பதப்படுத்திச் சாப்பிடுகின்றார்கள்!

அண்மையில் இந்தியத் தொலைக்காட்சி ஒன்றில் ஒரு பெரியவர் உரையாற்றும்போது குறிப்பிட்டார். தான் சாப்பிடுவதற்காக ஒரு உணவகத்திற்குச் சென்றாராம். அங்குள்ள விளம்பரப் பலகையில் 'இன்றைய விசேஷ சாப்பாடு' என்ற வரிசையில் 'குளிர் சாதம்' என்றும் எழுதியிருந்தார்களாம்! இப்பொழுதெல்லாம் காலையில் சூடான காப்பி குடித்த காலம்மரி ஐஸ்காப்பி குடிக்கின்ற நாகரிக மோகத்தைப்போல ஐஸ்சோறும் வந்துவிட்டதோ என எண்ணிய அவர் ஒரு குளிர்சாதத்திற்கு ஆடர் கொடுத்தாராம். அவருக்குக் கொடுக்கப்பட்டது அழகான கண்ணாடிப்பாத்திரத்தில் தண்ணீருடன் கலக்கப்பட்ட பழையசாதமும், (பழஞ்சோறு) அதனுடன் கொஞ்சம் ஊறுகாயுமாம்!

பழஞ்சோற்றை நகர்ப்புறங்களில் நாகரிகமாக 'குளிர்சாதம்' என்ற பெயர் சூட்டி அதற்கு புதுச்சாதத்திற்கு அறவிடும் பணத்தைவிட கூடுதலாக அறவிட்ட போதிலும் தான் கிராமத்தில் மண்சட்டியில் வெங்காயத்துடனும், காய் மிளகாயுடனும் சுவைத்துக் குடித்த அந்த பழஞ்சோத்துக் கஞ்சியின் ருசியை அங்கு காணவில்லையென்று அவர் புலம்பியதைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம்! எங்கள் ஊர் பழஞ்சோத்தின் ருசிக்கு மூல காரணமே மண் பானைச் சமையல்தான் என்பது மூல காரணமாகும். உணவகங்களில் 'இன்றைய ஸ்பெசல்' என அன்றைய சாப்பாட்டைப்பற்றி விளம்பரப் படுத்துவார்கள். அண்மையில் ஒருநாள் பாரிஸில் ஒரு உணவகத்தில் 'இன்றைய ஸ்பெசல் மண் பானை சட்டியில் சமைத்த உணவு' என விளம்பரப்படுத்தியிருந்தார்கள்! இப்பொழுது எங்கள் நாட்டிலேயே அனேகமான வீடுகளில் மண் பாத்திரங்கள் போய் பின்பு அலுமினியப் பாத்திரங்களும் மாறி சில்வர் பாத்திரத்திரத்திற்கு மாறிவிட்ட வேளையில் ஐரோப்பிய நாடொன்றின் உணவகத்தில் மண் பாத்திரத்தில் சமையல் செய்வதென்பது ஆச்சரியம்தானே!

ஊரில் ஒரு விருந்துச் சாப்பாடென்றால் அன்று வீட்டில் இறைச்சிக் கறிதான் விசேசமான சாப்பாடாக இருக்கும். இப்பொழுது வெளிநாடுகளில் கூழ் காய்ச்சுவதுதான் விசேசமான விருந்தாக இருக்கின்றது. பொதுவாகவே வெளிநாடுகளில் நாம் சாப்பிடுகின்ற அனேகமான சாப்பாடுகள் பழைய சாப்பாடுகள்தான்! ஆனால் இந்த பழையதிலும் எங்கள் ஊர் பழைய சாப்பாட்டின் சுவை துளிகூட வருவதில்லை.

அண்மையில் ஒருநாள் இந்தப் பழஞ்சோற்றின் சுவைபற்றி நான் நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த எனது மனைவி அன்றிரவு மிஞ்சிய சோற்றுக்குள் தண்ணியை ஊற்றிவைத்து மறுநாள் எனக்கு காலைச்சாப்பாடாக பழஞ்சோற்றைத் தந்தார். ஊர் ஞாபகமே வரமாட்டேன் என அடம்பிடித்தது!

புலம்பெயர்ந்த வாழ்வு நம் எல்லோருக்கும் பல்கலைக்கழகப் படிப்பைப் போன்றது என்றால் மிகையில்லை! நாம் இன்று தாய்மண்ணில் வாழ்ந்த அன்றைய வாழ்க்கையை நினைத்துப் பார்க்கையில் இந்த வாழ்வு வளமான வாழ்வுதான்! ஆனாலும் தாய்மண் வாழ்வில் நாம் அனுபவித்த பல சந்தோசங்கள் இன்று காணாமல் போய்விட்டது! அந்த காணாமல் போனவைகளில் இந்தப் பழஞ்சோறும் ஒன்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பார்த்துக்கொண்டே இருப்பேன்!

என் கடைசி நாளில்...
என்னை கட்டிலிலே படுக்க வைத்திருப்பார்கள்
என் உடன் பிறப்புகள் சிலர்
என் கன்னத்தை தடவி அழ முயற்சிப்பார்கள்!
என் மனைவியோ! கடைசி நிமிடம் வரையில்
என் அருகிலேயே இருக்க நினைக்கலாம்!
என் பிள்ளைகள் கடைசியாய்
என்னுடன் பேச முயற்சிக்கலாம்
என் பேரப்பிள்ளைகள் நான் தூங்குவதாய் நினைத்து
என்னை தட்டி எழுப்ப நினைக்கலாம்!
என் பழைய தோழி ஒருத்தி! கடைசியாய்...
என் முகம் பார்க்க வரலாம்!
என் கூடப் பழகிய நண்பர்கள் எனக்காக
கண்ணீர் அஞ்சலிகள் வெளியிடலாம்!
எட்ட நின்று பழகிய நண்பர்கள்கூட
எனது சாந்திக்காய் பிரார்த்திக்கலாம்!
உறவற்றஞ் பெயர் தெரியாத...
நன்றி மறவாத யாரோ சிலர்
என் பாதம் தொட விரும்பலாம்!
எல்லாவற்றையும் என் அகக்கண்
பார்த்துக் கொண்டே இருக்கும்
என் ஆத்மா அனைவருக்கும் நன்றி சொல்லும்

நன்றியுடன்

**வண்ணை தெய்வம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அணிந்துரைகளிலிருந்து...

வண்ணை தெய்வம் எழுதுகின்ற சிறுகதைகள் பண்புகளிலிருந்து வழுவாமல் வாசகர்களின் உள்ளங்களைக் கவருமாறு அமைந்திருப்பதை நாம் பார்த்திருக்கின்றோம். தான் பிறந்து வளர்ந்த யாழ்ப்பாணத்துப் பிரதேசத்தின் வாசனையையும் புலம் பெயர்ந்து நான்கு சகாப்த்தங்களாக கடந்து வாழ்விடமாகிவிட்ட பிரான்ஸ் நாட்டையும் மனதில் நிறுத்தி தனது அனுபவ தரிசனங்களை ஆக்கவிலக்கியம் ஆக்கி வருபவர் வண்ணை தெய்வம். இந்த நூலையும் அந்த வரிசையிலேயே படைத்துள்ளார்.

தவறவிட்ட ஆட்டுக்குட்டியை தேடித் தவிப்புறும் இடையனைப்போல இவரது மனமும் புரிதல்களும் ஏக்கங்களும் ஆசைகளும் இவருடைய தேடலின் பயனாக இந்த நூலினூடாகப் பிரிதிபலிக்கின்றன.

இவர் புகழ்பெற்ற கவிஞர் இளவாலை அமுது ஐயா, எழுத்தாளர் டாக்டர் க. இந்திரகுமார், எழுத்தாளர் அகஸ்த்தியர், இலங்கை வானொலியில் மண்வாசனைப் படைப்புக்களைத் தந்த கலைஞர் முகத்தார் யேசுறட்ணம், எழுத்தாளர் "மல்லகை" டொமினிக் ஜீவா ஆகியோருடனெல்லாம் தொடர்பு வைத்திருந்தவர். இவர்களில் பலர் இவரது இல்லத்தில் தங்கிச் செல்லுமளவிற்கு நீடித்த நட்பு அது.

இலக்கிய வாழ்வையும், தனி மனித வாழ்வையும், வேறுபடுத்தியறியாத வண்ணை தெய்வத்தை நல்ல மனிதாபிதவாதியாகப் பார்க்கின்றேன்.

இவரது இலக்கியப் பயணம் தொடர மனதார வாழ்த்துகின்றேன்.

எஸ். கே. காசிலிங்கம்
பத்திரிகையாளர்



கலைகள், கலைஞர்கள் சங்கமிக்கும் பிரான்ஸ் தேசத்தில் வாழ்ந்துகொண்டு அதிகநூல்களை வெளியிட்டு சாதனைபடைத்துள்ள வண்ணைதெய்வம் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

நாடகம், சிறுகதை, கவிதை, கட்டுரை, இதழியல் எனப் பலதுறை களில் தன் தடங்களைப் பதித்தவர். வானொலி, தொலைக்காட்சிகளில் கவிதை அரங்குகளையும் நடத்தியவர்.

மொழியைப்பேணுவதில், அவற்றைப் பாதுகாக்கவேண்டும் என்கிற கரிசனை ஒவ்வொரு படைப்பாளிக்கும் இருக்கவேண்டும். அதன் உந்துதலே அவரை எழுத வைத்துக்கொண்டிருகிறது.

பல்ரையும் போலவே வாழ்வியல்வலிகள், புலம்பெயர்சூழல், குடும்பம், பிரிவு, அந்நியமான உறவுகள், வேர்விட்ட இடத்திலிருந்து பிரித்தெடுத்து எறியப்பட்ட வாழ்க்கை எல்லாம் எழுத்தாகி உணர்வுகளுக்கு ஒத்தடம் கொடுத்தது போலநூல்களாய் கைகளை அடையும் போதும், அவை வாசகர்களைச் சென்றடையும் போதும் சற்று ஆறுதலடையவே செய்யும்.



வாழ்த்துக்களுடன்..
முல்லைஅமுதன்
[illegible].05.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org